
முல்லை

இலக்கியக் களஞ்சியம்



முல்லை

இலக்கியக் களஞ்சியம்

1946-1947இல் வெளிவந்த 'முல்லை'
இதழ்களின் முழுத் தொகுப்பு

பதிப்பும் தொகுப்பும்

முல்லை மு. பழநியப்பன், எம்.ஏ.

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
தொலைபேசி: 26163596,24715968

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Mullai Ilakkiya Kalangiam**
Editor	:	Mullai M. Palaniappan M.A.,
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	December 2003
Paper used	:	18.6 Kg. J. K. Maplitho
Number of Pages	:	448
Number of Copies	:	1200
DTP & Layout	:	Stanley Graphics, Chennai-61 Ph: 22323780 / 52018043
Printers	:	Zion Printers, Chennai-28
Binding	:	Hard Bound with Jacket
Price	:	**Rs. 175**
Subject	:	Compilation of writings from *Mullai*, Tamil literary journal, 1946-47
Publishers	:	**Mullai Pathipagam** 323/10, Kathiravan Colony Annanagar West,Chennai-40 Ph : 26163596 / 24715968 e-mail: mullaipathipagam@yahoo.com

❒ தோழர் முத்தையா 'முல்லை' வெளியிடப் போவதாகக் கூறினார். இதோ நறுமணத்துடன் என்னிடம் காட்டுகிறார்.

வளர்க முல்லை!

புரட்சிக் கவிஞர்

❒ 'முல்லை' வரப்பெற்றேன் அதில் தமிழ்த்தாய் முல்லை நகை புரிதல் கண்டேன் 'முல்லை'யின் முயற்சியால் நம் தாய் அரியாசனம் ஏறுவாள் என்று நம்புகிறேன்.

'முல்லை' வாழ்க !

திரு. வி. க.

❒ 'முல்லை ஒரு அழகான வெளியீடு. புத்தகம் முழுவதும் புது மணம் வீசிப் பொலிந்து விளங்குகின்றது. தங்கள் முயற்சி மேமேலும் சிறப்புறுவதாக'

கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை

❒ 'முல்லை' அழகும் சுவையும் நிறைந்திருக்கிறது.

அண்ணாதுரை

❒ 'முல்லை'யில் நம் கவிஞரைப்பற்றிய கருத்துக்கள் நிறையவரும். அனைவரும கவனமாகச் சேர்த்து வைத்துக் கொள்வார்கள்

புதுமைப்பித்தன்

❒ இன்று தோன்றும் இந்தப் புதிய 'முல்லை'யை ஆதரிக்கும் பாரிகள் பலர் தோன்றுவார்கள் என்பதிலும் இது சிறந்து வளர்ந்து அரும்பீன்று மணம் வீசி நின்று நிலவும் என்பதிலும் ஐயம் இல்லை

பரலி சு. நெல்லையப்பர்

❒ 'முல்லை' முல்லையைப்போல் மணமுடையதாய் இருக்கிறது.

நாரண. துரைக்கண்ணன்

[illegible]

BIBLIOGRAPHICAL DATA

Title [illegible]

Language [illegible]

Date of Publication [illegible]

[illegible]

Number of Pages 448

[illegible]

Binding Hard Bound with Jacket

[illegible]

பொருளடக்கம்

54-3

57-3

‘முல்லை’ ஒரு வரலாற்றுப் பதிவு

ஆ. இரா. வேங்கடாசலபதி

*1940*கள் தமிழ் இலக்கிய உலகிலும் பதிப்புலகிலும் முக்கியமான காலகட்டம். நவீனம் சார்ந்த இலக்கியம் நிலைபெற்று, நாவல், சிறுகதை, இலக்கியக் கட்டுரை ஆகிய வடிவங்களும் இக்காலகட்டத்தில் தமிழ் இலக்கிய உலகில் ஆழமாகக் காலூன்றின. ‘சிறுபத்திரிகைகள்’ என இன்று அடையாளப்படுத்தப்படும் இதழ்கள் ஏராளமாக வெளியாயின. இரண்டாம் உலகப் போரையடுத்து, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலான தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட நாட்டுக்கோட்டை செட்டியார்களின் மூலதனம் வேறு பல துறைகளில் இடப்பட்டது போலவே தமிழ்ப் பதிப்புலகிலும் முதலீடு செய்யப்பட்டது. தமிழ்ப் புத்தக வெளியீடு தொழில் முறையாகச் செயல்படத் தொடங்கிய தருணம் இது.

பரந்துபட்ட சமூகச் சூழலைப் பார்க்கும்பொழுது, இந்திய தேசிய இயக்கம் விடுதலையை மிக நெருங்கிவிட்டிருந்தது. சமூக விடுதலையை முன்னிறுத்திய திராவிட இயக்கம் இந்திய தேசிய இயக்கத்திற்கு ஒரு மாற்றாக வளர்ந்துவந்தது. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் (1938-39) தொடர்ந்து திராவிட இயக்கம் வெகுசனத் தன்மையினைப் பெறலாயிற்று. இதன் விளைவாகத் தமிழியக்கச் சிந்தனைகளும் உணர்வுகளும் பரவலாயின. பொதுவுடைமைக் கருத்தியல், இயக்கமாக வளரமுடியாவிட்டாலும் பல இளைஞர்களைச் சிந்தனை அளவிலேனும் கவர்ந்திருந்தது.

தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவம் காலூன்றி மெல்ல வளர்ந்துவந்த 1930கள், ‘40களில் ஒரு முக்கியச் சமூக முரண்பாடு இதிலும் தலைகாட்டியது. தமிழில் நவீன இலக்கியத்தை முன்னெடுத்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் பார்ப்பனர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர, பார்ப்பனரல்லாத மேல்சாதியினரும் (பெரிதும் வேளாளச் சாதிகள்) சிலர் நவீன இலக்கியத் துறையில் செயல்பட்டுவந்தனர். ‘மணிக்கொடி’ எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் ஒருவரே பார்ப்பனரல்லாத விதிவிலக்கு என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் சாதிகளிலிருந்து ஏறத்தாழ எவருமே இக்குழுக்களில் இல்லை என்பது அழுத்திச் சுட்டத்தக்கது.

இந்தப் பின்புலத்தில்தான் 'முல்லை' மலர்ந்தது. செட்டிநாட்டுத் தேவகோட்டையில் பிறந்த பழ. முத்தையா (1920-2000) என்ற பி.எல். முத்தையாவின் தாத்தா வித்துவான் நாகப்ப செட்டியார் ஒரு புலவர் ஆவார். ஏராளமான தனிப் பாடல்கள் பாடிய இவர்வழி முல்லை முத்தையாவுக்குத் தமிழார்வம் இளமையிலேயே ஏற்பட்டது. சில காலம் பர்மாவில் வட்டித் தொழில் நடத்திவந்தார் முல்லை முத்தையா. 1942இல் பர்மாவின்மீது ஜப்பானின் தாக்குதலோடு, இந்திய வணிகர்களின் சுரண்டலுக்கு உள்ளாகியிருந்த உள்ளூர் மக்களின் கிளர்ச்சியும் சேர்ந்துகொண்டபொழுது அங்கிருந்து தப்பிப் பிழைத்து வந்தவர்களில் இவரும் ஒருவர்.

1943ஆம் ஆண்டளவில் சென்னைக்குக் குடிபெயர்ந்த முல்லை முத்தையா, பதிப்புத் தொழிலில் ஈடுபடலானார். 1939இல் வை. கோவிந்தன் 'அன்பு நிலைய'த்தையும் 'சக்தி காரியாலய' வெளியீட்டகத்தையும் தொடங்கிவிட்டார். சின்ன அண்ணாமலையின் 'தமிழ்ப் பண்ணை'யும் செயல்படத் தொடங்கிய தருணம். எனினும், பதிப்புத் தொழிலில் நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு முல்லை முத்தையாவும் ஒரு முன்னோடி என்று சொல்லலாம். சக்தி வை. கோவிந்தன், சின்ன அண்ணாமலை, முல்லை முத்தையா ஆகியோரை 'செட்டிநாட்டுப் பதிப்புத்துறை முன்னோடிகள் மூவர்' என்றே சோமலே 'செட்டிநாடும் செந்தமிழும்' நூலில் சுட்டுகிறார். பாரி நிலையம் (1946), தமிழ்ப் புத்தகாலயம் (1946), இன்ப நிலையம் போன்ற பதிப்பகங்கள் பிறகே தோன்றின.[1]

தமிழார்வம் மிக்க முல்லை முத்தையாவிடம் தொடக்கத்தில் இந்திய தேசிய உணர்வு மேலோங்கியிருந்தது. 1943இன் இறுதியில் அவர் தொடங்கிய 'கமலா பிரசுராலயம்', நேருவின் மனைவியின் பெயரைக் கொண்டே அமைந்தது. கமலா பிரசுராலயத்தின் முதல் நூல், விவாதத்திற்குரியதாக அமைந்த டி.எஸ். சொக்கலிங்கத்தின் 'எனது ராஜிநாமா' ஆகும். தேசிய இயக்கப் பிரசார பீரங்கியாக விளங்கிய டி.எஸ். சொக்கலிங்கம் 'தினமணி' நிர்வாகத்தோடு கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக அதன் ஆசிரியப் பொறுப்பிலிருந்து வெளியேறினார். அவரோடு புதுமைப்பித்தன், எஸ்.எஸ். மாரிசாமி முதலான உதவியாசிரியர்கள் அனைவரும் ராஜிநாமா செய்தனர். (ஆ.நா. சிவராமன் மட்டும் கடைசி நிமிடத்தில், ராஜிநாமா செய்யாமல் 'தினமணி' ஆசிரியப் பொறுப்பைப் பரிசாகப் பெற்றார்.) ராஜிநாமா செய்ததற்கான காரணத்தை விளக்கி டி.எஸ். சொக்கலிங்கம் எழுதிய கட்டுரையோடு, வேறு இரண்டொரு கட்டுரைகளும் இணைந்ததே முல்லை முத்தையாவின் முதல் வெளியீடான 'எனது ராஜிநாமா'. (இதற்குப் பதிலாக 'தினமணி' நிர்வாகமும் 'ஸ்ரீ சொக்கலிங்கம் ராஜிநாமாவின் கதை' என்று ஒரு சிறு பிரசுரத்தை வெளியிட்டது.)

இதற்குப் பிறகு, கமலா பிரசுராலய வெளியீடாக ராஜாஜி எழுதிய 'கள் ஒழிக', Prohibition என்ற அதன் ஆங்கில வடிவம், ஏ.ஜி. வெங்கடாச்சாரியின் 'சோவியத் யூனியன்' ஆகிய சில நூல்கள் வெளியாயின. அச்சுக் கட்டை கொண்டு அச்சிடப்பட்ட வண்ண அட்டைகளோடு, நேர்த்தியான அச்சமைப்புடன் தமிழ் நூல்கள் வெளிவரத்தொடங்கிய காலம் அது. முல்லை முத்தையாவின் வெளியீடுகளும் இத்தன்மையில் அமைந்திருந்தன.

இந்தக் காலப் பகுதியில்தான் முல்லை முத்தையாவுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு தொடர்பு ஏற்பட்டது. பாரதிதாசன் கவிதைகள் இளைஞர் பலரைப் பெருமளவு கவர்ந்து, அவருடைய புகழ் உச்சத்திலிருந்த காலம் அது. 1938இல் 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி வெளிவந்ததையடுத்த சில ஆண்டுகளில் ஆர்வமிக்க இளைஞர்கள் அவரால் ஈர்க்கப்பட்டிருந்தனர். அவர் கவிதைகளைப் படித்தும் மனப்பாடம் செய்தும் மனக்கிறக்கத்தில் அவர்கள் திளைத்தனர். 23 வயதான முல்லை முத்தையா அவர்களுள் ஒருவர்.

பாரதி வழியில் 'கதர் ராட்டினப் பாட்டு', 'தொண்டர் வழிநடைப் பாட்டு' முதலான தேசியப் பாடல்களை எழுதிவந்த பாரதிதாசன் பெரியாரின் சுயமரியாதைக் கருத்தியலால் ஈர்க்கப்பட்டு, சமூக விடுதலைப் பாடல்களை 1930களில் திராவிட இயக்க இதழ்களான 'குடி அரசு'விலும் 'புதுவை முரசு'விலும் 'நகரதூத'னிலும் 'அறிவு'யிலும் எழுதிவந்த அதே வேளையில் 'மணிக்கொடி', 'சுதந்திரச் சங்கு', 'சூறாவளி' ஆகிய திராவிட இயக்க எதிர்ப்பு இதழ்களிலும் அவருடைய கவிதைகள் வெளிவந்துகொண்டிருந்தன. திருலோக சீதாராம், பி. எஸ். ராமையா, சங்கு சுப்பிரமணியன் போன்றோர்க்குப் பாரதிதாசன் பாடல்களில் பெரும் ஈடுபாடு.[2] எனினும், தேசிய இயக்கப் பார்ப்பன அறிவாளர்கள், பாரதிதாசன் கவிதைகளின் உள்ளடக்கத்தை வெறுக்கவும் அதே வேளையில் பாரதி வழிவந்த அவருடைய கவிதை வீச்சையும் ஆற்றலையும் புறக்கணிக்க முடியாமலும் ஊசலாடியிருப்பது தெளிவு. ('பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுப்புக்குக் கு. ப. ரா., பேராசிரியர் கி. சுவாமிநாதன் ஆகியோர் எழுதிய மதிப்புரைகளில் இந்த ஊசலாட்டத்தைப் பார்க்கலாம்.) 1940களில் இவ்வூசலாட்டம் முடிவுற்றது. அதன் பிறகு நவீன இலக்கியம் என்று அறியப்படும் மரபு பாரதிதாசனை முழுவதும் புறக்கணித்தது.

இந்த மரபுக்கு எதிரான பார்ப்பனரல்லாத இலக்கிய ஆர்வலர்களும் இளைஞர்களும் பாரதிதாசனை உயர்த்திப் பிடித்தனர். 'முல்லை' இதன் முதல் வரிசையில் அமைந்தது. 1944இல் 'முல்லைப் பதிப்பகம்' பிறந்தது. தமிழியக்கத்தின் வீச்சால் சங்க இலக்கியத் தொடர்கள் பரவலுற்ற காலம் அது. ('முல்லை'யிலேயே பல சங்கப் பாடல் விளக்கக் கட்டுரைகள் உள்ளதைக் காணலாம்.) முல்லை வெறும் மலர் அல்ல; தமிழ்ப் பண்பாட்டின் உருவகமான ஐந்திணையில் ஒன்று என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பாரதிதாசன் கவிதைகளில் சிறப்பிடம்

பெற்றது 'குலுக்கென்று சிரிக்கும் முல்லை'. இதனையே பதிப்பகப் பெயராகச் சூட்டிய முத்தையா, பின்பு முல்லை முத்தையா என்றே அறியப்படலானார். முல்லைப் பதிப்பகத்தின் முதல் வெளியீடாக 'அழகின் சிரிப்பு' வெளியானது. அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகளுக்குள், 'பாண்டியன் பரிசு'; 'அமைதி', 'நல்ல தீர்ப்பு', 'இருண்ட வீடு', 'எதிர்பாராத முத்தம்', 'காதல் நினைவுகள்', 'தமிழியக்கம்' ஆகிய பாரதிதாசன் நூல்கள் முல்லை வெளியீடுகளாக வெளிவந்தன. மேலும், அவருடைய 54ஆம் ஆண்டு நிறைவையொட்டிப் பல்வேறு எழுத்தாளர்களும் அறிஞர்களும் எழுதிய கட்டுரைகள் கொண்ட 'புரட்சிக் கவிஞர்' என்ற நூலும் வெளிவந்தது. 'கவிஞரின் கட்டுரைகளும் பேச்சுக்களும் நிறைந்த' 'எழுத்தும் பேச்சும்' வெளிவருமென விளம்பரப்படுத்தப்பட்டிருப்பினும் ('தமிழியக்கம்' நூலில்), அந்நூல் வெளிவரவில்லை.

இந்தக் காலப்பகுதியில் பாரதிதாசனை அன்றாடம் காணவும், கலந்துரையாடவும் முல்லை முத்தையாவுக்கு வாய்ப்பேற்பட்டது. புதுமைப்பித்தன் முதலான அன்பர்களும் அப்பொழுது உடன் இருந்திருக்கின்றனர். இப்பொழுது பாரி நிலையம் (சென்னை மண்ணடி) உள்ள இடத்தில் இச்சந்திப்புகள் நிகழ்ந்தன. பாரதிதாசனோடு மிக நெருக்கமாக இருந்த இந்தச் சூழ்நிலையில்தான் 'முல்லை' மாத இதழாகப் பிறந்தது.

இரண்டாம் உலகப்போர் முடிந்த (1945) காலம் அது. மிகக் கடுமையான காகிதத் தட்டுப்பாடு. 'கோட்டா' முறையிலேயே தாள் விநியோகம். புதிய இதழ்களைத் தொடங்க அரசு அனுமதியில்லை. ஏ. கே. செட்டியார் இதை மீற ஒரு வழியைக் கண்டுபிடித்தார். பத்திரிகையாகப் பதிவு செய்யாமல், ஒவ்வொரு மாதமும் ஒரு மலரைக் கொண்டுவருவது திட்டம். அவ்வாறு 1943இல் 'குமரி மலர்' வெளிவந்தது. (இதனைக் 'கிழவி நரை' என்று புதுமைப்பித்தன் கேலி செய்தது வேறு.) இந்த வழிமுறையைப் பின்பற்றி 'மங்கை', 'பாசரசு', 'கதிர்' எனப் பல மாத மலர்கள் தோன்றின. 'முல்லை'யும் அவ்வாறே 1946 ஜனவரியில் தொடங்கப்பட்டிருக்கிறது. 'முல்லை' என்ற தலைப்பின் கீழ் 'முதல் வெளியீடு' எனக் குறிக்கப்பட்டிருந்தது. கிரவுன் 1/8 அளவு. விலை நான்கணா. வெளியீட்டு முகவரி 59, பிராட்வே, சென்னை (இன்று பாரி நிலையம் உள்ளதற்கு அடுத்த அறை). கடைசி உள்பக்கத்தில் அச்சிடப்பட்ட சட்டபூர்வமான இம்பிரிண்டிலிருந்து 2000 பிரதிகள் அச்சிடப்பட்டது தெரிகிறது. 'முல்லை'யின் முதல் ஆறு இதழ்கள் ஜனவரி 1946இலிருந்து தொடர்ச்சியாக மாதம் தவறாமல் வெளிவந்ததாகத் தெரிகிறது. ('முல்லை' இதழ் எண்கள், அவை வெளிவந்த காலம் முதலான செய்திகளுக்கு இம்முன்னுரையின் இறுதியிலுள்ள குறிப்பையும் அட்டவணையையும் காண்க.)

முல்லைக்கு 'ஆதரவாளர்: கவியரசர் பாரதிதாசன் அவர்கள்' என்று முதல் பக்கத்திலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. ('போஷகர் என்ற

சொல்லுக்கு ஈடாகவே 'ஆதரவாளர்' என்ற சொல் ஆளப்பட்டிருக்கிறது. இன்றைய பொருளில் 'சிறப்பாசிரியர்' என்பது பொருந்தும்.) 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!' என்ற முழக்கம் தலைப்புப் பக்கத்தில். முதல் பக்கத்திலேயே 'மலர்ந்தது முல்லை' என்ற பாரதிதாசன் பாடல். 'எதிர்பாராத முத்த'த்தில் உள்ள 'ஐந்து முத்தம்' பற்றி முல்லை முத்தையா ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 'கவிஞர் வாழ்க்கையில்!' என்ற தொடர்ப் பகுதியில் பாரதிதாசன் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகளை முல்லை முத்தையா பகிர்ந்துகொண்டார். முதல் உள்ளட்டையில் இடம்பெற்ற டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகங்களுக்கான விளம்பரத்தில்கூட, "சீரிய நற்கொள்கையினை எடுத்துக்காட்ட சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்' இது நமது புரட்சிக் கவிஞர் வாக்கு. கவிஞரின் இக்கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, தொண்டாற்றி வருகிறார்கள்" என்று கொட்டை எழுத்தில் அச்சிடப்பட்டது. இதனால்தான் புதுமைப்பித்தனும், 'முல்லையில் நம் கவிஞரைப் பற்றிய கருத்துக்கள் நிறைய வரும். அனைவரும் கவனமாகச் சேர்த்துவைத்துக்கொள்வார்கள்' என்று எழுதினார். (பாரதிதாசனை அவர் 'நம் கவிஞர்' என்று உரிமையுடன் குறிப்பிடுவதை மனங்கொள்ள வேண்டும்.)

'முல்லை'யின் முதல் ஆறு இதழ்கள் ஒவ்வொன்றிலும் பாரதிதாசன் கவிதை இடம்பெற்றது. இது தவிர அவர் எழுதிய 'ஒரே முத்தம்' என்ற கதையும் ஐந்தாம் இதழில் வெளியானது. முதல் ஐந்து இதழ்களிலும் முல்லை முத்தையா தொகுத்த 'கவிஞர் வாழ்க்கையில்!' என்ற பகுதி இடம்பெற்றது. முன்பு குறிப்பிட்ட 'ஐந்து முத்தம்' கட்டுரையைத் தவிர, மு. அண்ணாமலை, மு. இராசகோபாலன், முருகு. சுப்பிரமணியன், நா. அறிவழகன், மெ. சுந்தரம் ஆகியோர் பாரதிதாசன் கவிதைகள் பற்றி எழுதிய கட்டுரைகளும் இடம்பெற்றன. இவ்வாறு முற்றிலும் பாரதிதாசனுக்கான சிறப்பிதழ்களாகவே 'முல்லை'யின் முதல் ஐந்து இதழ்களும் விளங்கின.

இந்தச் சமயத்தில்தான் (ஜூலை 1946) பாரதிதாசனுக்குப் பொற்கிழி வழங்கும் விழா நிகழ்ந்தது. அதற்கு முன்பும் பின்பும் ஒரு தமிழ்க் கவிஞனுக்கு இப்படிப்பட்ட சிறப்புச் செய்யப்பட்டதில்லை என்னுமளவுக்குத் தமிழ்ச் சமூகத்தின் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு ஒன்று அமைக்கப்பட்டு, நிதி திரட்டி, விழாவும் நடத்தப்பட்டது. அண்ணாவைப் பொருளாளராகக் கொண்ட இக்குழுவில் பெரியார், ஜீவா, முத்தையா முதலியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், வரா., டிஎஸ். சொக்கலிங்கம், ம.பொ.சி. முதலானோரோடு முல்லை முத்தையாவும் இடம்பெற்றிருந்தார்.

'கவிஞர் நிதி அளிப்பு விழா நாளில்' (26-6-1946 என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், உண்மையில் 28-7-1946இல்தான் விழா எடுக்கப்பட்டது) 'முல்லை'யின் அடுத்த இதழ் வெளிவரும் என்று ஐந்தாம்

இதழின் கடைசி உள்ளட்டையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் விழாவிற்குச் சிலநாள்களுக்கு முன்பே பாரதிதாசனுக்கும் முல்லை முத்தையாவுக்கும் மனவேறுபாடு ஏற்பட்டது. முல்லைப் பதிப்பகம் வெளியிட்ட பாரதிதாசன் நூல்களின் பதிப்புரிமை பற்றிய வழக்காக இவ்வேறுபாடு முற்றிவிட்டது. 'ஒருவர் மீது மற்றவர் வழக்குத் தொடரும் முன்னறிவிப்பு மடல்களும் வந்து சேர்ந்தன' என்கிறார் பாரதிதாசனின் மைந்தர் மன்னர்மன்னன்.[3]

இதன் உடனடியான விளைவு, 'முல்லை'யின் ஆறாம் இதழில் 'ஆதரவாளர்: கவியரசர் பாரதிதாசன் அவர்கள்' என்பது நீக்கப்பட்டது; பாரதிதாசனின் 'நிலவே!' என்ற கவிதையும், பாரதிதாசன் கவிதைகள் பற்றி மு. இராசகோபாலன், மு. அண்ணாமலை ஆகியோர் எழுதிய கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன என்றாலும் உறவு முறிவதற்கு முன்பே பத்திரிகையின் பக்கங்கள் அச்சிடப்பட்டிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது.

ஏழாம் இதழிலிருந்து பாரதிதாசன் பற்றிய எந்தக் குறிப்புக்கும் 'முல்லை'யில் இடமிருக்கவில்லை. 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற இலச்சினை முழக்கமும்கூட நீக்கப்பட்டது. அழுத்தமான தமிழியக்கச் சார்போடுகூடிய 'முல்லை'யின் முதற் கட்டம் பாரதிதாசனோடு ஏற்பட்ட முறிவுடன் நிறைவுற்றது.

II

'முல்லை'யும் பாரதிதாசனும் முதற்கட்டத்தில் ஒருபொருள் பன்மொழியாக விளங்கினர் என்றாலும் மற்றுமொரு பெரும் படைப்பாளுமையும் 'முல்லை'க்குத் தொடக்கம் முதலே கொழுகொம்பாக விளங்கியிருக்கிறார். நவீனத் தமிழிலக்கியத்துக்குப் புது வாய்க்கால் வகுத்த புதுமைப்பித்தன் 'முல்லை'யில் முதலிலிருந்து கடைசிவரை பங்களித்திருக்கிறார். இரண்டாம் கட்ட 'முல்லை'யின் போக்கைத் தீர்மானித்ததில் புதுமைப்பித்தனுக்குப் பெரும் பங்கு உண்டு.

பாரதிதாசனோடு பழக்கம் ஏற்பட்ட அதே காலத்தில் புதுமைப்பித்தனோடும் முல்லை முத்தையாவுக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. (புதுமைப்பித்தனின் கடைசி நூல்கள் சிலவற்றை வெளியிட்ட தமிழ்ப் புத்தகாலயம் கண. முத்தையா, புதுமைப்பித்தனைத் தமக்கு அறிமுகப்படுத்தியவர் முல்லை முத்தையாவே எனக் குறிப்பிட்டுள்ளார்.[4]) 1944இல், முல்லை வெளியீடாகப் 'புரட்சிக் கவிஞர்' நூல் வெளிவந்தபோது, அதில் இரண்டு கட்டுரைகளை எழுதியதோடு அமையாமல் நூல் உருவாக்கத்திலும் புதுமைப்பித்தன் துணை நின்றிருக்கிறார். நூலின் பதிப்புரையும், 'இந்த நூலை அச்சிடும்பொழுது

நமக்குத் துணையாயிருந்து திருத்தி உதவிபுரிந்த நம் அருமை நண்பர் புதுமைப்பித்தன் அவர்கட்கு 'நன்றி' என்று இதனைப் பதிவு செய்திருக்கிறது. மேலும், பாரதிதாசனைப் பற்றி 'பாரதியுகக் கவிஞர்' என ஒரு தனிநூலே கமலா பிரசுராலயத்தால் 1945இன் இறுதியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது (க. அன்பழகனின் 'கலையும் வாழ்வும்' நூலின் பின்பக்க உள்ளட்டை விளம்பரம்). இந்நூல் எழுதப்பெறாவிட்டாலும்கூடப் புதுமைப்பித்தனுக்குப் பாரதிதாசன் மீதிருந்த பெரும் ஈடுபாட்டுக்கு இது மேலும் ஒரு சான்று. இந்த ஈடுபாடு, அவரைப் பற்றிய தனிக் கட்டுரைகளில் மட்டுமல்லாமல், பல்வேறு இடங்களில் இடைப்பிறவரலாகவும் இலக்கியக் குறிப்புணர்த்தல்களாகவும் வெளிப்பட்டு நிற்கின்றன. மேலும், பொற்கிழி விழாவுக்கு முன்பு நிகழ்ந்த நிதி ஆதரவுக் கூட்டத்திலும் தாம் பங்குகொண்டதை, மீ.ப. சோமுவுக்கு எழுதிய நெடுங்கடிதத்தில் புதுமைப்பித்தன் எழுதியுள்ளார்.[5]


'முல்லை' வெளிவரத் தொடங்கியபொழுது புதுமைப்பித்தன் பத்திரிகைப் பணியில் இல்லை. 1943 செப்டம்பர் கடைசியில் 'தினமணி' யிலிருந்து விலகிய அவர், 1944இலிருந்து 1945இன் தொடக்கம்வரை ஏறத்தாழ ஓராண்டுக் காலம், 'தினமணி'யிலிருந்து தம்மோடு விலகிய உதவியாசிரியர்களோடு டி. எஸ். சொக்கலிங்கம் தொடங்கிய நாளேடான 'தின்சரி'யில் பணியாற்றினார். பின்பு அங்கிருந்தும் விலகித் திரைப்படத் துறையில் இறங்கினார். 'முல்லை'யின் முதல் இதழ்கள் வெளிவந்துகொண்டிருந்த காலத்தல் அவர் ஜெமினி கதை இலாகாவில் 'அவ்வை' திரைப்படத்திற்காகவும், 'காமவல்லி' என்ற வேறொரு படத்திற்காகவும் காட்சி, வசனங்களை எழுதிக்கொண்டிருந்தார். இந்தக் காலப்பகுதியில் அவருடைய படைப்பு எழுத்து மிகவும் குறைவு. 1946இன் கடைசிப் பகுதியில் சொந்தத் திரைப்படம் தயாரிக்கும் முயற்சியோடு அவருக்குப் பணமுடையும் சேர்ந்துகொண்டது. இதனால் அவர் படைப்பாக்கங்களை உருவாக்க முடியாத நிலை. இருப்பினும் புதுமைப்பித்தனின் எழுத்துகள் 'முல்லை'யின் பெரும்பாலான இதழ்களில் எப்படியோ வெளிவந்தன. புதுமைப்பித்தன் எழுத்துகளை வெளியிடுவதில் 'முல்லை'க்கு இருந்த தனி அக்கறையை இது வலுவாகப் புலப்படுத்துகிறது.

முதற்கட்ட 'முல்லை'யில் புதுமைப்பித்தனின் இரண்டு கட்டுரைகள் வெளிவந்தன. 'மதிப்புரை', 'இலக்கிய மரபு' இரண்டுமே புதிய கட்டுரைகள். (2002இல் 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்' நூலை நான் பதிப்பித்து வெளியிடும்வரை 'இலக்கிய மரபு' கட்டுரை புதுமைப்பித்தன் நூல் தொகுப்புகளில் இடம்பெறவில்லை.) இவை தவிர, மூன்றாம் இதழில் 'காலத்தேவா, அடிச்சுவிடு! - புதுமைப்பித்தன்' வெளிவரும் என்ற விளம்பர அறிவிப்பும் வெளிவந்துள்ளது. அப்பொழுது இலக்கிய விமர்சகர் க.நா. சுப்ரமண்யம், 'தினசரி'யிலும் 'சந்திரோதய'த்திலும்

‘காலதேவன் அடிச்சுவடு’ என்ற ஒரு தொடரை எழுதிவந்தார். அதில் அவர் தெரிவித்த திறனாய்வுக் கருத்துகளில் புதுமைப்பித்தனுக்கு உடன்பாடில்லை. ‘தினசரி’யில், இதே தொடரில் உபயோகமுள்ள இலக்கியத்தைப் பற்றிக் க.நா.சு. எழுதிய ‘போரும் அமைதியும்’ கட்டுரைக்கு ‘இந்தக் கோபம் இலக்கியச் சேவையா?’ என்ற மறுப்புரையைப் புதுமைப்பித்தன் எழுதியிருந்தார். ‘காலதேவன் அடிச்சுவடு’ என்ற க. நா. சு. வின் தொடரைச் சமத்காரமாகப் புதுமைப்பித்தன் ‘காலத்தேவா, அடிச்சுவிடு!’ என்று திருப்பியுள்ளார். ஆனால், இக்கட்டுரையினைப் புதுமைப்பித்தன் எழுதவுமில்லை; ‘முல்லை’யில் வெளிவரவுமில்லை.

புதுமைப்பித்தன் தொடர்ச்சியாக எழுத இயலாத சூழ்நிலையில், ஏற்கெனவே வெளியாகியிருந்த ‘புரட்சி மனப்பான்மை’, ‘விபரீத ஆசை’ ஆகிய கதைகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ‘ஜோதி’யில் வெளிவந்த பொழுது (1938-39) இக்கதைகள் பரவலான கவனம் பெறாததாலேயே இவை மறுபதிப்பிடப்பட்டன என்று தொ.மு.சி. ரகுநாதன் ஒரு நேர்காணலில் என்னிடம் குறிப்பிட்டார். புதுமைப்பித்தன் படைப்புகளை எப்படியேனும் வெளியிடவேண்டும் என்பதில் ‘முல்லை’ காட்டிய ஆர்வத்திற்கு இது சான்று. (இதே காலப்பகுதியில், முல்லை முத்தையாவின் நண்பர் வி. நூர்முகம்மது நடத்திய ‘கதிர்’ இதழில் (ஆகஸ்டு 1946) முதலில் ‘ஜோதி’யில் வெளியான ‘உபதேசம்’ கதை மறுபதிப்பானது. இதற்கும் முல்லை முத்தையாவே காரணம் என்பது ‘கதிர்’ நன்றியுரையிலிருந்து தெரிகிறது.) இந்த உரிமையின் அடிப்படையிலேயே புதுமைப்பித்தன் எழுதிய எட்டுக் கதைகள் அடங்கிய ‘விபரீத ஆசை’ முல்லை வெளியீடாக 1952இல் வெளியானது. (1955இல் இதன் மறுபதிப்பையும் முல்லை முத்தையா வெளியிட்டார். மேலும், புதுமைப்பித்தன் பற்றிப் பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளையும் மதிப்பீடுகளையும் சில சுவையான நிகழ்ச்சிகளோடு தொகுத்து ‘வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்’ என்ற நூலையும் முல்லை முத்தையா வெளியிட்டார். நவீன எழுத்தாளர்களுள் இதுபோன்ற ஒரு தொகுப்பு நூல் புதுமைப்பித்தனுக்கே முதலில் வெளிவந்தது.)

முதல் இதழிலிருந்தே ‘தொகுப்பாளர்: ப. முத்தையா’ என்று ‘முல்லை’ இதழ்கள் குறிப்பிட்டுவந்தாலும், பாரதிதாசனோடு ஏற்பட்ட உறவு முறிவுக்குப்பின் ‘முல்லை’க்கெனத் தனியே ஓர் ஆசிரியரை அமர்த்தும் முயற்சி நடைபெற்றது. புதுமைப்பித்தனையே ஆசிரியராக இருக்குமாறு முல்லை முத்தையா அழைத்தார் எனவும் தெரிகிறது. ஆனால் இது தமக்கு வசதிப்படாது என்றும், அப்பொழுது ‘தினமணி’ உதவியாசிரியர் வேலையிலிருந்து விலகியிருந்த தொ.மு. சி. ரகுநாதனே இதற்குப் பொருத்தமானவர் என்றும் புதுமைப்பித்தன் பரிந்துரைத்திருக்கிறார்.[6] ரகுநாதனுக்கு 18. 6. 1946இல் அவர் எழுதிய கடிதத்தில் இதற்கான சான்று உள்ளது.


திருநெல்வேலி
14.11.46

முல்லை முத்தையாவுக்குப் புதுமைப்பித்தன் எழுதிய கடிதம்

முத்தையா இன்று நாளை வரக்கூடும். அவன் 15 தேதிதான் பட்டணத்துக்கு திரும்புவான். பத்திரிகை விஷயம் என்னவோ ஏற்பாடு செய்த மாதிரிதான். இயலவில்லை என்றால் நான் இருக்கும்போது உனக்கு என்ன கவலை என்று கேட்கிறேன்.

இதற்கு ஒரு மாதம் கழித்து 17.7.1946இல் ரகுநாதனுக்கு எழுதிய கடிதத்திலும், 'முல்லை விவகாரம் நான் நினைத்தபடிதான். உனக்கு சவுகரியமாக இருக்கும். அழகிரியாரையும் அழைத்துக்கொள்ளலாம்,' என்று எழுதியுள்ளார். கு. அழகிரிசாமியையும் 'முல்லை'யில் சேர்த்துவிடும் எண்ணம் புதுமைப்பித்தனுக்கு இருந்ததை இக்கடிதம் காட்டுகிறது.[7]

30.8.1946இல் புதுமைப்பித்தனுக்கு முல்லை முத்தையா எழுதிய கடிதமும், ரகுநாதனை 'முல்லை'யில் சேர்ப்பது பற்றிச் சுட்டுகிறது. (இக்கடிதம் இதுவரை வெளிவந்ததில்லை. புதுமைப்பித்தனின் மகள் தினகரி சொக்கலிங்கம் அவர்களின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.)

அன்புமிக்க சொ. வி. அவர்கட்கு,

வணக்கம்.

நண்பர் செல்லப்பா இன்று ஊர் போயிருக்கிறார்.

நாளை காலையில் நான் போகிறேன். ஒரு வாரத்தில் திரும்பிவிடுவேன்.

'பாரதிதாசன் - பதிப்பக விஷயமாக'வே என் பிரயாணம். அதை முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்.

நாம் குறிப்பிட்டதை தயாரித்து வையுங்கள். வந்ததும் தொடங்கலாம்.

ரகுவுக்கு என் வணக்கம்.

முத்தையா

எதிர்பாராத பயணம்.

புதுமைப்பித்தனுக்கு 'முல்லை'யில் முழு உரிமை இருந்திருக்கிறது என்பது அவர் மீ. ப. சோமுவுக்கு 15. 8. 1946இல் எழுதிய கடிதத்தின் வழியும் தெரிகிறது: 'உன்னுடைய பாட்டுகள் சம்பந்தமாக முழு பரிசோதனை செய்வதற்கு லாயக்கான மேடை கிடைக்கவில்லை. மேடையும் கிடைக்காது. முத்தைய்யாவின் 'முல்லை'யில் இந்தக் கடுதாசி பிரசுரமாவதால் உனக்கு பிரயோஜனம் உண்டா என்பதுதான் கேள்வி. அதற்கு ஒரு இடம் தேடிக்கொடுத்தால் செய்கிறேன். 'சிவாஜி' ஒத்துவருமா? உனக்குப் பிடிக்கிறதா? திருலோகம் என்னுடைய பாட்டைப் போடுவார்; அது மாதிரி 'இளவேனி'லைப் பற்றி எழுதுவதற்கு இசைவாரா? தெரிந்தால் நலம்.'[8] கடைசியில், மீ.ப.சோமுவின் 'இளவேனில்' கவிதை நூலைப் பற்றிப் புதுமைப்பித்தன்

முல்லை

இலக்கிய வெளியீடு

59, பிராட்வே
சென்னை - 1
30.8.'46

அன்புமிக்க சொ.வி. அவர்கட்கு,

வணக்கம்

கம்பர் செல்லப்பா இன்று ஊர் போயிருக்கிறார்.

நா. சொக்கலிங்கம் தான் போகிறேன்.

ஒரு வாரத்தில் திரும்புவேன்.

"[illegible] - [illegible]" என்
என் பிரயாணம். இதை தொடர்ந்து
கொண்டு போகிறேன்.

நாம் [illegible]தை தயாரித்து
வைப்போம். [illegible] வந்ததும் தொடங்கலாம்.

இதுக்கு என் வணக்கம்

முத்தையா

[illegible] பிரயாணம்!

புதுமைப்பித்தனுக்கு முல்லை முத்தையா கடிதம்

எழுதிய கடிதம் 'முல்லை' எட்டாம் இதழில்தான் வெளிவந்தது. முழு உரிமையுடன் 'முல்லை'யில் எதையும் வெளியிடக்கூடிய அளவுக்குப் புதுமைப்பித்தனுக்கு நெருக்கம் இருந்தது இதிலிருந்து புலப்படுகிறது. (14.11.1946இல் எழுதிய கடிதத்தை 'அருமை முத்தையாவுக்கு' என்று விளித்து, 'உன்' என அவரை ஒருமையில் புதுமைப்பித்தன் சுட்டுவதிலும் இருவருக்கிடையிலான நெருக்கம் வெளிப்படுகின்றது.)

இந்தச் சூழலில் ஏழாம் இதழ் வெளிவந்திருக்கிறது. இளவழகனார், முருகு சுப்பிரமணியன், கோவை அய்யாமுத்து, கம்பதாசன், எஸ்.டி. சுந்தரம், கா.ஸ்ரீ.ஸ்ரீ. ஆகியோர் பங்களித்த இந்த இதழில் புதுமைப்பித்தனின் 'புரட்சி மனப்பான்மை' என்ற ஏற்கெனவே 1938இல் 'ஜோதி'யில் வெளியான கதையும் மறுபதிப்பாகியிருந்தது.

இதற்கடுத்து எட்டாம் இதழ் இரண்டு மாதம் கழித்தே வெளியானது. 'இலக்கிய வனத்தில் முல்லை புதுக்கொடி வீசி, இரண்டு மாதம் ஆகிறது' என்றும், 'இது வளர்ந்துவரும் முல்லையின் பருவ மாற்றம், புது மலர்ச்சி' என்றும் ஆசிரியவுரையில் முல்லை முத்தையா குறிப்பிட்டிருந்தார். 'முல்லை'யில் ரகுநாதனின் முதல் படைப்பாக 'கிரஹணம்' என்ற கதையும் இதில் வெளியானது.

ஒன்பதாம் இதழ்தான் 'ரகுநாதன், பதிப்பாசிரியர்' என்று அவர் கைப்பட எழுதியதை அச்சுக் கட்டை மூலம் அச்சிட்டு வெளிவந்தது. 'தினமணி'யில் அறுபத்தைந்து ரூபாய் சம்பளம் பெற்றுவந்த ரகுநாதனுக்கு 'முல்லை' நூற்றைம்பது ரூபாய் தந்தது.[9] இந்தச் சூழலில்தான் புதுமைப்பித்தன் 31.10.1946இல் ரகுநாதனுக்குப் பின் வருமாறு எழுதியிருக்க வேண்டும்; 'இப்பொழுது முல்லை நிலவரம் சீர்பட்டிருக்கும் என நம்புகிறேன். முத்தையா சுகமா?... பத்திரிகை வருவதற்கு தாமதமேன்?' மேலும் 'திறப்பு விழா எப்பொழுது?'[10] என்று அவர் கேட்டிருப்பதிலிருந்தும் புதிய ஏற்பாட்டில் முல்லை வருவதை ஒரு நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

எட்டாம் இதழ்வரை 59, பிராட்வே, சென்னை-1 என்ற முகவரியிலிருந்து வெளிவந்த 'முல்லை' அதற்குப் பிறகு மயிலைக்கு இடம் மாறி இருக்கிறது. ஒன்பதாம் இதழில் முழுவதும் ரகுநாதனின் கைவண்ணம் ஐயத்திற்கிடமின்றிப் புலப்படுகின்றது. 'கொழுந்தோடிப் பாயும் முல்லை' என்ற தலைப்பில் ரகுநாதன் எழுதிய நீண்ட ஆசிரியவுரையில், 'முல்லை'யின் மாற்றத்தை அழுத்தம் திருத்தமாகக் கோடிட்டுக்காட்டினார்.

> இனிவரும் முல்லை நேயர்களின் கழுத்தில் கைகொடுத்து, அவர்களைப் புறநானூற்றுக் காலத்துக்கோ, கடல்கொண்ட கபாடபுரத்தின் கோட்டை வாசலுக்கோ தள்ளிப்போக விரும்பவில்லை. அதேபோல் பழமையை மறந்து, தங்களோடுதான் தமிழிலக்கியமே மலர்ந்திருக்கிறது என்று நினைக்கும் சொப்பனவாதிகளின் மரபு வழுவிய தடத்துக்கும்


அழைத்துச் செல்லாது. 'மூத்த குடியாள் காலத்திலே' என்று பழம்பெருமை சாற்றும் மாஜிப் பெருங்காய டப்பாக்களின் குடுகுடுப்பைக்கும், இலக்கிய விமரிசனம் என்ற பேரில் சவ்வு மிட்டாய்த்தனம் பண்ணும் சரடுகளுக்கும் இடமில்லை.


முதற்கட்ட 'முல்லை'யில் பெருமளவு பங்காற்றிய திரு.வி.க., ச. சோமசுந்தர பாரதியார், மு.வ., காழி. சிவ. கண்ணுசாமி போன்றோருக்கு மட்டுமல்லாமல் 'மணிக்கொடி' வழி எழுத்தாளர்களுக்கும் 'முல்லை'யில் இடமில்லை என்பதை ரகுநாதன் அடித்துச்சொல்கிறார். இதற்கேற்பவே 'முல்லை'யின் ஒன்பதாம் இதழும் அதற்கடுத்த மூன்று இதழ்களும் வெளிவந்தன. (ரகுநாதன் அதிகார பூர்வமாகப் பொறுப்பேற்ற ஒன்பதாம் இதழிலேயே, 'வேடிக்கை மனிதர்' என்ற ரகுநாதன் கதைகளடங்கிய நூல் புதுமைப்பித்தனின் அணிந்துரையோடு முல்லை வெளியீடாக வரும் என விளம்பரம் வந்துவிட்டது. ஆனால், இந்த நூல் வெளிவரவுமில்லை; புதுமைப்பித்தன் அணிந்துரை எழுதவுமில்லை. புதுமைப்பித்தனிடம் அணிந்துரை பெற்ற பெருமை கா. ஸ்ரீ. ஸ்ரீ.க்கு மட்டுமே உரியதானது.)

ரகுநாதனின் மனங்கவர்ந்த கதாநாயகனான புதுமைப்பித்தனுக்கு முன்னிலும் கூடுதல் முதன்மை 'முல்லை'யில் கிடைத்தது. ரகுநாதன் பொறுப்பெடுத்த முதல் இதழிலேயே புதுமைப்பித்தனின் இரண்டு படைப்புகள் வெளியாயின. எட்டாம் இதழில் ரகுநாதன் எழுதிய பிணங்கிப் பின் முயங்கும் ஒரு தம்பதியினரைப் பற்றிய பாலியல் குறிப்புகள் மிகுந்த 'கிரஹணம்' கதை பலரை மனஞ்சுழிக்க வைத்திருந்தது. இதற்குப் பதிலாக, புதுமைப்பித்தன் 1942இல் 'கலைமக'ளில் எழுதிய 'என் கதைகளும் நானும்' என்ற கட்டுரையிலிருந்து 'எரிந்த கட்சி, எரியாத கட்சி' என்று தொடங்கும் பகுதியை 'வக்காலத்து' என்று தலைப்பிட்டு ரகுநாதன் வெளியிட்டார். இதை நேரிடையாக ஆசிரியவுரையில் குறிப்பிட்டதோடு, 'கருவைத் தடை செய்யலாம்; கருத்தைத் தடை செய்ய முடியாது' என்ற புதுமைப்பித்தனின் தொடரையும் பெயர் குறிப்பிடாது மேற்கோள் காட்டினார்.

எந்த அளவுக்குப் புதுமைப்பித்தனில் ரகுநாதன் சிந்தையைப் பறிகொடுத்திருந்தார் என்றால், ஒன்பதாம் இதழில் வெளியான இரண்டு படைப்புகளும் புதுமைப்பித்தன் என்ற பெயரிலேயே வெளியாகியிருக்க, இதழின் பொருளடக்கப் பட்டியலில் 'புதுமைப்பித்தன்' என்பதோடு 'சொ.வி.' யும் உள்ளது; ஆனால் 'சொ. வி.' என்ற பெயரில் எந்தப் படைப்பும் வெளிவரத்தானில்லை.

பத்தாம் இதழில், புதுமைப்பித்தனின் 'சிறுகதை: மறுமலர்ச்சிக் காலம்' என்ற கட்டுரை வெளியானது. இந்த கட்டுரையைத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி பற்றிய அழுத்தமான ஒரு பதிவு என்பதோடு, சிறுகதை பற்றிய புதுமைப்பித்தனுடைய பார்வையின் திரண்ட வடிவம் என்றும் சொல்லலாம். மௌனி தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என்ற புகழ்பெற்ற கருத்துத் தெறிப்பு இதில்தான் வெளியிடப்பட்டது.


Memo
MULLAI—MYLAPORE—MADRAS 4.



முல்லை முத்தையாவுக்குப் புதுமைப்பித்தன் கடிதம். ('முல்லை' அலுவலகத்தில் முல்லை முத்தையாவும் தொ. மு. சி. ரகுநாதனும் இல்லாத வேளையில் 'முல்லை' 'மெமோ பே'டிலேயே எழுதிவிட்டுச் சென்றது. காலம் ஏப்ரல் 1947 ஆக இருக்கலாம்.)

அனைத்திந்திய வானொலியில் ஆற்றிய உரையை நிலையத்தாரின் அனுமதி பெற்று வெளியிட்டதில் ரகுநாதனின் முனைப்பும் புலப்படுகின்றது.

ஜனவரியில் வெளிவரும் அடுத்த முல்லை 'பக்கங்கள் கூடும்; படங்கள் சேரும். அளவிலும், உருவிலும், அம்சங்களிலும் முல்லை புது வளர்ச்சி பெற்று வெளிவரும்' என்ற அறிவிப்பிற்கேற்பவே 1947 தை இதழ் வெளியானது. கிரவுன் 1/8 அளவு டெம்மி 1/8 அளவாக மாறியது. விலை நான்கணாவிலிருந்து எட்டணாவாகியது. வழவழப்பான தாள் அட்டை, கெட்டி அட்டையானது. அட்டையிலேயே 'ஆசிரியர்: ரகுநாதன்' என்ற பொறிப்பும் இடம்பெற்றது. ஆர். கிருஷ்ணன் என்பவர் எடுத்த குழந்தைப் படங்கள் இரண்டு செப்பியா வண்ணத்தில் இடம்பெற்றன. தாசானந்தா என்பவர் வரைந்த நிர்வாணப் பெண்ணோவியம் (நூற்றைம்பது ரூபாய்க்கு ஓர் ஓவியக் கண்காட்சியில் வாங்கியதென ரகுநாதன் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டார்.) பல வண்ண ஆப்டோன் அச்சுக்கட்டை கொண்டு அச்சிடப்பட்டிருந்தது. மாசி இதழிலும் இதே போல் இரண்டு கறுப்பு வெள்ளைப் படங்களும், ஒரு நிர்வாணப் பெண்ணின் பலவண்ண ஓவியமும் இடம்பெற்றன. படங்களை அச்சிடுவதற்கான புதிய தொழில்நுட்பம் தமிழ்ப் பதிப்புலகில் பரவலாக நுழைந்த தருணம் இது. (வெளிக்கு முகஞ்சுழித்தாலும், பலர் இப்பெண்ணோவியங்களைக் கமுக்கமாக ரசித்தார்களென்று சொல்லப்படுகின்றது. எப்படியிருப்பினும், 'முல்லை'யின் அந்நாள் வாசகர்கள் இன்றளவும் அவற்றை நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பது நேர்ப்பேச்சில் தெரிகின்றது. அந்நாளில், அதுவும் ஓர் இலக்கிய இதழில், இவை வெளிவருவதை நினைத்தும் பார்த்திருக்க முடியாது. இப்படங்களை வெளியிட்டதை என்னிடம் நினைவுகூர்ந்தபொழுது ரகுநாதனின் முகத்தில் வெளிப்பட்ட பெருமிதமும் உதட்டோரப் புன்சிரிப்பும் இன்றும் நினைவிலிருக்கின்றன.)

இதழில் பங்காற்றியவர்களை அறிமுகப்படுத்தும் 'குலமுறை' என்ற பகுதியில் ரகுநாதனின் கைவரிசை அழுத்தமாகவே உள்ளது. ('குலமுறை' என்பது கம்பனிலிருந்து பெற்ற தொடர்.) எதிர்மறையான, காட்டமான நூல் மதிப்புரைகளுக்கெனக் 'குற்ற பரம்பரை' என்ற தலைப்பையும் அவர் கையாண்டார். ஒவ்வொரு படைப்பின் தொடக்கத்திலும் அதனை அறிமுகப்படுத்திச் சில வரிகளை ரகுநாதன் எழுதினார். புதுமைப்பித்தனின் 'அவதாரம்' கதைக்கு எழுதிய வரிகள் இவை:

சிருஷ்டி எப்படி உண்டாகிறது?
மனத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பினாலா?
'துடிக்குதென் உதடும் நாவும் சொல்லு
சொல் என்றே இடிக்குது குறளி'
என்பதைப் போல் பொங்கி வரும்
உணர்ச்சியின் வெளியீட்டினாலா?
சிப்பிப் புழுவின் உடம்பில் பட்டு

உறுத்தி உறுத்தி வேதனை எழுப்பும்
மழைத்துளியைப் போல், மனசில்
விழுந்து உறுத்தும் விஷக் கறையினாலா?
மனசில் கறையின் உறுத்தல் இருந்தாலன்றி
சிருஷ்டி உண்டாகாதா?
கதையைப் படியுங்கள்.

'குலமுறை' பகுதியில் புதுமைப்பித்தனைப் பற்றிய குறிப்பிலும் ரகுநாதனுக்கு அவர்மீதிருந்த பற்றுதல் புலப்படுகின்றது.

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி.' மணிக்கொடிப் பத்திரிகையும் சீதக்காதி பரம்பரைதான். 'மணிக்கொடி' பத்திரிகை நமக்குத் தந்த மணிதான் புதுமைப்பித்தன். தமிழ்ச் சிறுகதை உலகிலே புதுமையையும், தனிமையையும் உண்டாக்கி, உலக இலக்கியங்களோடு வைத்து எண்ணத்தக்க கதைகளை எழுதியவர். புதுமைப்பித்தன் கதைகள், காஞ்சனை, ஆறு கதைகள் முதலிய நூல்களின் அசிரியர். தினசரிப் பத்திரிகைகளில் பலகாலம் உழைத்தவர். இன்று இவர் திரைக் கதைகள் எழுதுகிறார்.

ரகுநாதனின் புதுமைப்பித்தன் பித்து இம்மட்டோடு நிற்கவில்லை. இந்தியக் கலைச் செல்வங்கள் பற்றிய ஒரு நூலுக்கு நெடும் மதிப்புரை எழுதவந்த ரகுநாதன், திருவில்லிப்புத்தூர் கோபுரத்தை 'நல்ல வாட்ட சாட்டமான, சுண்டிவிட்ட பிரம்பு மாதிரி துவமும்' ஒரு பெண்ணோடு ஒப்பிடும் புதுமைப்பித்தனின் கடித வரிகளோடு, பொருத்தமாகவே, தொடங்குகிறார்.

மேலும், கு.ப.ரா. நல நிதி தொடர்பாகப் புதுமைப்பித்தன் எழுதிய இரண்டு கவிதைகளுக்கு எதிர்வினையாகக் கு. அழகிரிசாமி 'தார்க்கோல்' என்ற புனைபெயரில் எழுதிய 'தாக்கீது' என்ற கவிதையும் வெளிவந்திருக்கிறது. இதற்கு முகப்பில்,

'வெல்லு வெல்லு என்று குத்தும் வீறாப்புத் தார்க்குச்சி எத்தனை வேணும்?' என்று அறைகூவிய வேளூராரின் குரல் கேட்டெழுந்த தார்க்கோலின் தாக்கீது இது.

என்ற வாசகம் உள்ளது. (வேளூர் வெ. கந்தசாமி கவிராயர்/பிள்ளை என்பது கவிதை எழுதப் புதுமைப்பித்தன் கைக்கொண்ட புனைபெயர்.)

மேலும், புதுமைப்பித்தன் தயாரிக்கத் திட்டமிட்டிருந்த 'வசந்த வல்லி' என்ற திரைப்படத்திற்கான முழுப்பக்க விளம்பரமும் குறைந்தபட்சம் இரண்டு இதழ்களின் (10,11) பின்னட்டையில் வெளிவந்துள்ளது. (கிடைக்கப்பெறும் 'முல்லை' இதழ்கள் சிலவற்றுக்கு முகப்பட்டை இல்லாததால் அவற்றில் இடம்பெறும் விளம்பரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.) புதுமைப்பித்தன் தொடங்கிய 'பர்வதகுமாரி புரொடக்‌ஷன்ஸ்' பெயரில் வெளியாகியிருக்கும் விளம்பரங்களில்

அவரது பெயர் கதை, திரைக்கதை, வசனம் என்பவற்றுக்குப் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு முதற்கட்டத்தில் மட்டுமல்லாமல் இரண்டாம் கட்டத்திலும் புதுமைப்பித்தன் 'முல்லை'யில் முக்கிய இடம்பெற்றிருக்கிறார். எனவே, பாரதிதாசன் ஆய்வில் மட்டுமல்லாமல் புதுமைப்பித்தன் பற்றிய ஆய்விலும் 'முல்லை'க்கு முக்கிய இடம் தரவேண்டும். ஆனால், துரதிருஷ்டவசமாகப் புதுமைப்பித்தன் ஆய்வாளர் என்று தம்மைப் பறைசாற்றிக்கொள்ளும் சிலருடைய நூலில் 'முல்லை' பற்றிய குறிப்பே இல்லை. (2000இல் வெளியான 'புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள புதுமைப்பித்தன் கதைகள் காலவரிசைப் பட்டியலில் 'முல்லை'யில் மட்டுமே வெளியான 'அவதாரம்' கதை 'கலைமக'ளில் வெளியானதாகத் திரித்துக் கூறப்பட்டுள்ளது.)

ரகுநாதனின் முழுப் பொறுப்பில் வெளியான 'முல்லை'யின் நான்கு இதழ்களில் (9,10 மற்றும் 1947 தை, மாசி வெளியீடுகள்) அவருடைய தேர்வும் கைவண்ணமுமே முழுமையாகக் கோலோச்சுகின்றன. மன்னர்மன்னன் கூறுவதுபோல், முதற்கட்டத்து 'முல்லை'யோடு ஒப்பிட, இரண்டாம் கட்ட 'முல்லை' இதழ்கள் 'கொள்கை முரண்பாட்டு நெடியைப் பரப்புகின்றன'.[11]

புதுமைப்பித்தன்மீது கொண்ட பற்றுதலில் மட்டுமல்லாமல் பிறவற்றிலும் ரகுநாதனோடு இணைந்து செயல்பட்ட கு. அழகிரிசாமி, புதுமைப்பித்தன் திட்டமிட்டபடி 'முல்லை'யில் பணிக்கமரா விட்டாலும், 'சக்தி'யில் உதவியாசிரியராக இருந்துகொண்டே 'முல்லை'யில் கணிசமாக எழுதியிருக்கிறார். மாசி 1947 இதழில் மட்டும் தம் இயற்பெயரில் 'இலக்கியத்தில் ஆபாசம்' (இக்கட்டுரையைத் தமது எந்தக் கட்டுரைத் தொகுதியிலும் சேர்க்கக்கூடாது எனக்கு. அழகிரிசாமி குறித்து வைத்திருந்ததாக 'கு. அழகிரிசாமி கட்டுரைகள்' நூலின் பதிப்பாசிரியர் ச. முருகானந்தம் அடிக்குறிப்புத் தந்துள்ளார். ஆனால், இக்கட்டுரை 1946 பிப்ரவரியில் வந்தது என்று அவர் சுட்டுவது பிழை; பிப்ரவரி 1947 என்பதே சரி.) என்ற கட்டுரையும், 'தார்க்கோல்' என்ற புனைபெயரில் 'புத்திர பாக்கியம்' என்ற கதையினையும், 'இடைசைப் புலவன்' என்ற புனைபெயரில் பொ. திரிகூடசுந்தரம் பிள்ளையின் 'குழந்தை எப்படிப் பிறக்கிறது?' என்ற நூலுக்கு நெடும் விமரிசனமும் எழுதினார். அறுபது பக்கம் கொண்ட இதழில் (தொடர்ச்சியாக) முப்பது பக்கங்களைக் கு. அழகிரிசாமியே எழுதியிருக்கிறார்.

உற்ற நண்பர் கு. அழகிரிசாமியைத் தவிர நெல்லை இந்துக் கல்லூரியில் தம் ஆசிரியர்களாகயிருந்த அ. சீனிவாசராகவனுக்கும் ('நாணல்') ஆ. முத்துசிவனுக்கும் ரகுநாதன் இடம் அளித்திருக்கிறார்.

இக்காலகட்டத்திலேயே ரகுநாதன் பொதுவுடைமைக் கருத்தியலால் ஈர்க்கப்பட்டிருந்தாலும் அவருடைய கதைத் தேர்வில் இது

வெளிப்படவில்லை. லா. ச. ராமாமிர்தம், எம். வி. வெங்கட்ராம் ஆகியோர் கதைகளை அவர் விரும்பிக் கேட்டு வெளியிட்டிருக்கிறார். லா. ச. ரா. வின் தொடர்கதையினையும் ரகுநாதன் தொடங்கி வைத்துள்ளார். (ரகுநாதனின் இக்கால இலக்கியப் பார்வையை 1948இல் வெளியான அவருடைய 'இலக்கிய விமர்சனம்' நூலில் காணலாம். அந்நூலில் புதுமைப்பித்தனைத் தவிர, மௌனியையும் லா.ச.ரா.வையுமே அவர் சிறந்த சிறுகதை ஆசிரியர்களாகக் குறிப்பிடுகிறார்.)

மற்றபடி ரகுநாதனே கணிசமாக எழுதியிருக்கிறார். 'கிரஹணம்', 'வென்றிலன் என்றபோதும்' ஆகிய கதைகள், திருச்சிற்றம்பலக் கவிராயர் என்ற புனைபெயரில் ஒரு கவிதை, இரு கட்டுரைகள், இரு மொழிபெயர்ப்புக் கதைகள் ஆகியவற்றை அவர் எழுதியிருக்கிறார்.

மொத்தத்தில் 'அப்போது அவருடைய இலக்கிய நோக்கும் கொள்கைகளும் வேறாக இருந்தன. 'முல்லை'யில் வந்த கதைகளும் கட்டுரைகளும் புத்தக மதிப்புரைகளும் வர்ணச் சித்திரங்களும் ரகுநாதனின் முதல் காலகட்ட விருப்புவெறுப்புகளுக்கு ஏற்ப இருந்தன' என்ற வல்லிக்கண்ணனின் மதிப்பீடு மிகப் பொருத்தமானது.[12] ('முல்லை'யில் இடம்பெற்ற பெண்ணோவியங்களை அவர் மறவாமல் சுட்டுவது கவனிக்கத்தக்கது.)

இலக்கிய உலகில் பரபரப்பைக் கிளப்பும் ஆற்றலும் துடுக்கும் மிக்க இளைஞர் என்ற ரகுநாதனின் பிம்பத்தை உறுதிசெய்யும்வண்ணமே அவரது ஆசிரியப் பொறுப்பில் வந்த 'முல்லை' இதழ்கள் அமைந்தன. பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை, கம்பதாசன், சுரதா, இளவல் (வல்லிக்கண்ணன்) ஆகியோர் கவிதைகளிலிருந்து நகைப்புக்குரிய வரிகளை எடுத்துக் குதர்க்கமான தலைப்பிட்டு வெளியிடத் துணிவு வேண்டும்தானே?

1947 மாசி இதழுக்குப் பின் ரகுநாதன் பொறுப்பில் 'முல்லை' இதழ் வந்ததாகத் தெரியவில்லை. 1947 ஏப்ரலில் ஒரு முறை தம்மைக் காணப் புதுமைப்பித்தன் 'முல்லை ' அலுவலகம் வந்திருக்கலாம் என ரகுநாதன் குறிப்பிடுகிறார்.[13] ஆனால் இதுவரை மாசி 1947க்குப் பிந்திய இதழ் எதுவும் கிடைக்கவில்லை.

ஆகஸ்டு 1947இல் 'தொகுதி 1, மலர் 1' என்ற வரிசையில் 'ஆசிரியர்: ப. முத்தையா' என்ற அறிவிப்போடு 'முல்லை' மீண்டும் தொடங்கியிருக்கிறது. காண்டேகர், கொனஷ்டை, கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன் கதைகளும் வேறு சில கட்டுரைகளும் தனிப்பகுதிகளும் அமைந்த இந்த இதழோடு 'முல்லை' பட்டுவிட்டதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

III

பாரதிதாசன், புதுமைப்பித்தன் என்ற இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் பெரும் படைப்பாளுமைகளோடு நெருக்கமாகத் தொடர்புகொண்டிருந்த 'முல்லை' பின்னாளில் போதுமான அளவு வரலாற்றில் கணிக்கப் பெறவில்லை என்பது உண்மை. பாரதிதாசன் தொடர்பின் காரணமாக நவீன இலக்கியவாதிகள் 'முல்லை'யைக் கண்டுகொள்ளவில்லை. இவர்களின் திராவிட இயக்க எதிர்ப்புணர்வு, பார்ப்பனரல்லாதார் பற்றிய உதாசீனம் முதலானவை இதற்குப் பின்னணியில் இருந்தன. முற்போக்கு இயக்கத்தவராகப் பின்னாளில் வளர்ந்த ரகுநாதனின் இரண்டாம் கட்ட ஆசிரியப் பொறுப்பு, கம்யூனிச எதிர்ப்புணர்வுமிக்க நவீன இலக்கியவாதிகளின் புறக்கணிப்பை வலுப்படுத்தியது. ரகுநாதனேகூடத் தம் 'முல்லை' தொடர்பைப் பற்றிப் பின்னாளில் அதிகம் பேசவில்லை. தமது 'புதுமைப்பித்தன் வரலாற்'றில் கூட இரண்டொரு இடங்களிலேயே அவர் 'முல்லை'யைக் குறிப்பிடுகிறார். 1940களிலும் 1950களின் தொடக்கத்திலும் செயலூக்கத்தோடு வினையாற்றிய முல்லை முத்தையாவுக்கு ஏற்பட்ட வாழ்க்கை நெருக்கடிகளும் 'முல்லை'யின் பெயர் பரவாததற்கு ஒரு காரணம். இருபத்தைந்து வயதிற்குள் 'முல்லை'யை நடத்தி, பாரதிதாசனின் நூல்களையும் பிற சிறந்த நூல்களையும் வெளியிட்ட முல்லை முத்தையா பின்னாளில் சிறப்பாகச் செயல்பட இயலாமல் போனது துரதிருஷ்டமே. கடைசியில் அவருடைய பெயருக்கு முன்னொட்டு என்ற அளவிலேயே 'முல்லை' நின்றுவிட்டது.

காலப்போக்கில், இலக்கிய வரலாறுகளில் இடம்பெற்ற குறிப்புகள் குறையுடையனவாகவும் பிழையானதாகவும் அமைந்துவிட்டன.

'சிட்டி' சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம் எழுதிய 'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' நூற்குறிப்பை ஒரு சோற்றுப்பதமாகக் காண்போம்:

> .... முத்தையா என்பவர் 'முல்லை' என்ற பெயரிலேயே மாதம் ஒரு புத்தகம் என்ற வகையில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து, அதற்கு(த்) தொ. மு. சி. ரகுநாதனை ஆசிரியராக ஏற்பாடு செய்தார். ரகுநாதன் கையில் இந்தப் பத்திரிகை சலசலப்புடன் ஆரம்பித்ததாயினும் நெடுநாள் நீடிக்க முடியவில்லை.... ஆரம்பத்தில் ரகுநாதனின் நட்புரிமையில் புதுமைப்பித்தன், ராமாமிருதம் முதலியவர்கள் சில கதைகள் எழுதிக்கொடுத்தார்கள்.[14]

மூன்று வாக்கியங்களில் எத்தனை பிழைகள்! தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமான முல்லை முத்தையாவை 'என்பவர்' என்று சுட்டுவதிலுள்ள செருக்கு ஒரு புறம் இருக்கட்டும். ரகுநாதனை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டதல்ல 'முல்லை'. எட்டு/

ஒன்பதாம் இதழில்தான் அவர் இணைகிறார். புதுமைப்பித்தன் தொடக்கம் முதலே 'முல்லை'யில் எழுதிவந்தவர்; பாரதிதாசன், முல்லை முத்தையா - இருவருக்குமே அவர் நண்பர். எனவே, ரகுநாதனின் நட்புரிமையில் புதுமைப்பித்தன் 'முல்லை'க்கு எழுதலானார் என்பது பிழை. 'முல்லை' பற்றி எழுதும்போது பாரதிதாசனைக் குறிப்பிடாததும் பிழை.

இதே பிழையை வல்லிக்கண்ணனும் செய்திருக்கிறார். 'தமிழில் சிறு பத்திரிகைகள்' என்ற செய்திக் களஞ்சியமாக விளங்கும் நூலில், ரகுநாதனின் 'சாந்தி' பத்திரிகை பற்றிய இயலுக்கு முன்னோட்டமாகவே 'முல்லை' பற்றி ஒரு பக்கம் எழுதியிருக்கிறார். இதிலும் பாரதிதாசன் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.[15]

திராவிட இயக்க ஆய்வாளரான க. திருநாவுக்கரசு திராவிட இயக்க இதழ்கள் பற்றிய தம் சிறுநூல்கள் இரண்டிலும் 'முல்லை'யின் பெயரை பதிவு செய்துள்ளார். ஆனால் அவரும் பாரதிதாசன் 'முல்லை'யையும் 1956இல் கண்ணதாசன் அதே பெயரில் நடத்திய இதழையுமே குறிப்பிடுகிறார்; ரகுநாதனைக் குறிப்பிடவில்லை.[16] அ.மா. சாமியும் க.திருநாவுக்கரசை அடியொற்றியே எழுதியுள்ளார்.[17] க. திருநாவுக்கரசும் அ.மா. சாமியும் 'முல்லை'யைப் பெயரளவிலேனும் சுட்டியிருக்க, மா.சு. சம்பந்தம் அதைக்கூடச் செய்யவில்லை. நவீன இலக்கியத்தில் பார்ப்பனரல்லாத இயக்கப் போக்கை முன்னெடுத்த 'பொன்னி' இதழுக்கு 'முல்லை' ஒரு முன்னோடி என்பதை இவர்கள் சுட்டத் தவறியது வியப்புக்குரியது. 'பொன்னி'யைத் தோற்றுவித்த முருகு. சுப்பிரமணியன் 'முல்லை'யில் சில கட்டுரைகள் எழுதியுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டும். 'முல்லை'யில் எழுதிய கா. அப்பாத்துரை, மு. அண்ணாமலை முதலானோரும் 'பொன்னி'யில் முக்கியப் பங்காற்றியிருக்கின்றனர்.

புதுமைப்பித்தன் ஆய்வாளர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள் 'முல்லை' என்ற பெயரைக்கூட அறியாததனால் பல குளறுபடிகள். 'முல்லை'யில் வெளியான 'இலக்கிய மரபு' என்ற புதுமைப்பித்தனின் கட்டுரை எந்தத் தொகுப்பிலும் இடம்பெறாமல் போனது. 'அவதாரம்' கதையை வெளியிட்ட பெருமை தவறாகக் 'கலைமக'ளுக்குத் தாரை வார்க்கப்பட்டது. புதுமைப்பித்தனின் கடைசி கட்ட இலக்கிய வாழ்க்கை வெளிச்சமின்றி மங்கலாகத் தெரிந்தது.

ரகுநாதனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பொன்னீலனும் 'முல்லை'க்கு ஒரு பக்கத்திற்கு மேல் ஒதுக்காமல், குறையுடைய தகவல்களையே வழங்கியுள்ளார்.[18] ரகுநாதன் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே பொன்னீலன் இந்நூலை எழுதியிருப்பதால் அவருடைய மனப்போக்கே இதில் தொழிற்பட்டுள்ளதெனக் கொள்ளலாம்.

முல்லை முத்தையாவைப் பற்றியும் 'முல்லை' பற்றியும் ஓரளவிற்குத் தகவல்கள் தந்து பதிவுசெய்திருப்பவர் சோமலே மட்டுமே.[19] இவரை அடியொற்றி 'நகரத்தார் கலைக்களஞ்சியம்' நூற்குறிப்பு அமைந்துள்ளது. மா. ரா. அரசுவின் முயற்சியில் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய இதழியல் கருத்தரங்கில் முனைவர் மு. இளமுருகன் 'முல்லை'யைப் பற்றிக் கட்டுரை அளித்ததும் குறிப்பிடத்தக்கது.

1996இல் வண்ணாரப்பேட்டை தமிழ் இளைஞர் கழகத்தில் 'முல்லை' இதழ்கள் சிலவற்றை நான் கண்டெடுத்தேன். தொடக்கம் முதலே இக்கழகத்திலிருந்த 'முகம்' மாமணியும் கோ. சுந்தரேசன் அவர்களும் இதற்குத் துணைநின்றனர். திராவிட இயக்கச் சார்புடைய இக்கழகத்தில் 'முல்லை' இதழ்கள் கிடைத்தது பொருத்தமானது. 1998 இல் நான் வெளியிட்ட புதுமைப்பித்தனின் தொகுக்கப்படாத / அச்சிடப்படாத படைப்புகளின் தொகுப்பான 'அன்னை இட்ட தீ' மற்றும் அதற்குப் பிறகு என் பதிப்பில் வெளியான 'புதுமைப்பித்தன் கதைகள்' (2000), 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்' (2002) ஆகிய 'காலச்சுவடு' செம்பதிப்புகள் 'முல்லை' பற்றிய கவனத்தை ஆய்வுலகில் தூண்டிவிட்டன எனச் சொல்லலாம்.

தம் தந்தையின்மீது மிகுந்த அன்பும் பற்றும் கொண்ட முல்லை மு. பழநியப்பன் பெருமுயற்சி எடுத்து 'முல்லை' இதழ்களைத் தேடித் தொகுத்துள்ளார். முல்லை முத்தையாவின் கோப்பில் இருந்த சில இதழ்களையும், வண்ணை தமிழ் இளைஞர் கழக நூலக இதழ்களையும் தவிர, புதுக்கோட்டை பா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய நூலகத்திலும் இரண்டொரு இதழ்களை அவர் கண்டெடுத்துள்ளார். மறைந்த ரோஜா முத்தையா அவர்கள், புலவர் த. கோவேந்தன், திரு. பொன். கு. கோதண்டபாணி, மறைந்த புலவர் தமிழ்ப்பித்தன் ஆகியோரிடமிருந்தும் பிற இதழ்களைப் பெற்றுள்ளார். ('முல்லை'யின் முதல் இதழை எனக்குக் கொடுத்துதவியவர் திரு. பிரபஞ்சன்.) இவர்கள் அனைவரின் ஒத்துழைப்பினாலேயே இந்த முயற்சி வெற்றிபெற்றுள்ளது. 'முல்லை'யில் வெளிவந்த அனைத்தையும் மு. பழநியப்பன் இந்நூலில் அடக்கியுள்ளார். 'முல்லை'க்கு அணியாக விளங்கிய பாரதிதாசன், புதுமைப்பித்தன் படைப்புகளைத் தனிப் பிரிவுகளாகவும், பிறர் படைப்புகளைக் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் மற்றும் ஆசிரியவுரைகள் எனத் தனியாகவும் அமைத்துள்ள முறை மிகப் பொருத்தமானது. ஆய்வாளர்களுக்கு மட்டுமல்லாமல் இலக்கிய அன்பர்களுக்கும் இக்களஞ்சியம் பயன்படும்.

‘முல்லை’
காலக்குறிப்பு

‘முல்லை’ மொத்தம் பதின்மூன்று இதழ்கள் வெளிவந்தன. இரண்டாம் உலகப்போரையடுத்த காகிதக் கட்டுப்பாட்டின் காரணமாக, ‘முல்லை’ மாத இதழாகப் பதிவுபெறாமல் மாதம் ஒரு வெளியீடாகவே பிரசுரிக்கப்பட்டது. முதல் பத்து இதழ்களும் ‘முதல் வெளியீடு’, ‘இரண்டாவது வெளியீடு’ என்ற வரிசைக் குறிப்போடு வெளியிடப்பட்டது. 1946 ஜனவரி முதல் டிசம்பர்வரை பத்து இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. முதல் ஆறு வெளியீடுகளும் 1946 ஜூலை வரை, மாதம் ஒன்றாக வெளிவந்திருக்கின்றன. ஏழாம் இதழ் ஆகஸ்டு 1946 அளவில் வந்திருக்கக்கூடும். இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு, அக்டோபர் 1946 அளவில் எட்டாம் இதழ் வெளிவந்திருக்கிறது. ஒன்பது, பத்தாம் இதழ்கள் அடுத்தடுத்து நவம்பர், டிசம்பர் 1946இல் வெளியாகியுள்ளன.

1947 புத்தாண்டில், தை இதழ் என்ற குறிப்போடு ‘முல்லை’ புதிய வடிவில் வெளியானது. அதற்கடுத்து மாசி இதழ் வந்திருக்கிறது. இவை முறையே ‘முல்லை 11’, ‘முல்லை 12’ என இந்நூலுக்குள், படைப்புகளின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

‘முல்லை, தொகுதி 1, மலர் 1’ என ஆகஸ்டு 1947இல் வெளியான இதழ் ‘முல்லை 13’ என நூலுக்குள் குறிக்கப்படுகின்றது.

பத்து இதழ்கள் வரை கிரவுன் 1/8 அளவிலும் கடைசி மூன்று இதழ்கள் டெம்மி 1/8 அளவிலும் வெளியாகியுள்ளன.

எட்டாம் இதழ்வரை 59, பிராட்வே, சென்னை-1 என்ற முகவரியிலிருந்தும், அதன்பின் சென்னை மயிலாப்பூர், லஸ் முனையிலிருந்தும் ‘முல்லை’ வெளிந்துள்ளது.

இதழ் 11, 12 (தை, மாசி 1947) வெளியீடுகள் மட்டும், கடைசி பக்க ‘இம்பிரிண்’டில் ‘முல்லை’ தலைமையகம் புதுக்கோட்டை எனக் குறிப்பிடப்பட்டு, புதுக்கோட்டையிலேயே அச்சாகியும் உள்ளன. பிற இதழ்கள் அனைத்தும் சென்னையிலேயே அச்சாகியுள்ளன.

‘முல்லை’
கால அட்டவணை

இதழ் எண்	இதழில் உள்ள குறிப்பு	ஆதரவாளர்	தொகுப்பாளர்/ பதிப்பாசிரியர்	காலம்
1	முதல் வெளியீடு	பாரதிதாசன்	ப. முத்தையா	ஜனவரி 1946
2	இரண்டாவது வெளியீடு	பாரதிதாசன்	ப. முத்தையா	பிப்ரவரி 1946
3	மூன்றாவது வெளியீடு	பாரதிதாசன்	ப. முத்தையா	மார்ச் 1946
4	நான்காவது வெளியீடு	பாரதிதாசன்	ப. முத்தையா	ஏப்ரல் 1946
5.	ஐந்தாவது வெளியீடு	பாரதிதாசன்	ப. முத்தையா	மே 1946
6.	ஆறாவது வெளியீடு	-	ப. முத்தையா	ஜூலை 1946
7	ஏழாவது வெளியீடு	-	ப. முத்தையா	ஆகஸ்டு 1946
8	எட்டாவது வெளியீடு	-	ப. முத்தையா	அக்டோபர் 1946
9	9	-	ரகுநாதன்	நவம்பர் 1946
10	10	-	ரகுநாதன்	டிசம்பர் 1946
11	தை வெளியீடு	-	ரகுநாதன்	ஜனவரி 1947
12	மாசி வெளியீடு	-	ரகுநாதன்	பிப்ரவரி 1947
13	தொகுதி 1, மலர் 1	-	ப. முத்தையா	ஆகஸ்டு 1947

சான்றுக் குறிப்புகள்

1. தமிழ்ப் பதிப்புலகின் சமூக நோக்கிலான வரலாற்றை அறியக் காண்க: ஆ.இரா. வேங்கடாசலபதி, 'பஞ்சாங்கமும் ரயில்வே கைடும்: நவீனத் தமிழ்ப் பதிப்புலகம்', காலச்சுவடு 45, ஜனவரி-பிப்ரவரி 2003.
2. பி. எஸ். ராமையா, *மணிக்கொடி காலம்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1980, ப. 88.
3. மன்னர்மன்னன், *கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்*, முத்துப் பதிப்பகம், விழுப்புரம், 1985, ப. 415.
4. கண. முத்தையா, *முடிவுகளே தொடக்கமாய்*, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1997, ப. 22.
5. மீ.ப. சோமுவுக்கு 12.2.1946 கடிதம், ஆ. இரா. வேங்கடாசலபதி (ப-ர்), புதுமைப்பித்தன், *அன்னை இட்ட தீ*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 1998,ப. 209.
6. *அன்னை இட்ட தீ*, ப. 241.
7. *அன்னை இட்ட தீ*, ப. 243.
8. *அன்னை இட்ட தீ*, ப. 221.
9. ரகுநாதன் நேர்காணல், திருநெல்வேலி, 18 ஏப்ரல் 1998.
10. *அன்னை இட்ட தீ*, ப. 244.
11. மன்னர்மன்னன், *கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்*, ப. 415.
12. வல்லிக்கண்ணன், *தமிழில் சிறுபத்திரிகைகள்*, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1991, ப. 50.
13. *அன்னை இட்ட தீ* ப.249-50.
14. 'சிட்டி' சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம், *தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்*, க்ரியா, சென்னை, 1989, ப. 194.
15. வல்லிக்கண்ணன், *தமிழில் சிறுபத்திரிகைகள்*, ப. 50.
16. க. திருநாவுக்கரசு, *திராவிட இயக்க இதழ்கள்* , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993 மற்றும் *திராவிட இயக்க இதழ்கள்: ஒரு பார்வை*, நக்கீரன் பதிப்பகம், சென்னை, 1998.
17. அ.மா. சாமி, *திராவிட இயக்க இதழ்கள்*, நவமணி பதிப்பகம், சென்னை, 2002, ப.200-1.
18. பொன்னீலன் *தொ.மு.சி. ரகுநாதன் வாழ்வும் பணியும்*, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2002, ப. 43-44
19. சோமலே, *செட்டிநாடும் செந்தமிழும்*, வானதி பதிப்பகம், சென்னை, 1999.

பாரதிதாசன்

மலர்ந்தது முல்லை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

பச்சை பசுந்தழைக் காட்டினிலே ஒரு
பக்கத்தில் பூத்திட்ட முல்லையைப் பார்
அச்சடையாளம் நல் வான்குளத்தில் மின்னும்
ஆயிரம் மீனெனத் தோன்றுதடி!
அச்சில் அடித்திட்ட வெள்ளிப்பணம் கையில்
அள்ளி இறைத்தது போல் இருக்கும்!
இச்சை நறுமணத்தால் அழைக்கும் - முல்லை
ஏன் என்று பார்க்கையி லேசிரிக்கும்

முல்லை 1

தொழிலே எழில்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

இந்த வான், மண், கனல், ஏரி, வளி தோன்றா
அந்த நாள் எழுந்த ஓர் "அசைவி" னால் வானொடு
வெண்ணிலாவும் விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.
அணுத் தொறும் இயங்கும்அவ் வசைவியக்கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்.
அழியா தியங்கும்அவ் வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்,
ஆயினும் உன்னினும் அது சிறந்த தன்று
தாயினும் வேண்டுவது தந்திடுந் தொழிலே!

மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்கவாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அந்தோள் தழுவுவை;
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள் தோறும் கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!
பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றஓர்
அசைபிலா ஆவலும், அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர் உனைத்,தம் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!
தொழிலே காதுகொடு! சொல்வேன்! எங்கள்
அதிர்தோள், உன்றன் அழகிய மேனி
முழுதும் தழுவ முனைந்தனர் பார்நீ!
அழகிய நாட்டில் அந்நாள் இலாத

சாதியும் மதமும் தடைசெயும் வலிவிலே
மோதுதோள் அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்!
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே
வாராய் உணர்வே வாராய் திறலே!
அலுப்பிலோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்;
மலையெனச் செந்நெல் வழங்களம் தோளில்வா!
கரும் பாலைக்குக் கண்ணெலாம் நெய்யிட்
டிரும் பாலைக்கு வரும்பழு தகற்றினோம்
பண்டம் இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!

சூட்டிரும்பும் துளியும் போல எம்
தோட் கூட்டத்தில் தொழிலுன் வல்லமை
சேர்வது நாங்கள் விடுதலை சேர்வதாம்!
யாமும் நீயும் இரண்டறக் கலப்பின்
தூய்மை மிக்க தொழிலாளிகள் யாம்;
சுப்பல் முடைவோம் கப்பல் கட்டுவோம்
பூநாறு தித்திப்புத் தேனாறு சேர்ப்போம்
வானூர் தியாலிவ் வையம் ஆள்வோம்.

ஐயப் படாதே! அறிவு புகட்டும்
வையநூல் பலஎம் மனத்தில் அடுக்கினோம்
மாசு தவிர்ந்தோம்; மாசிலா மணியே
பேசு; நெருங்கு; பிணை தோளொடுதோள்;
இன்பம்! இன்பம்!! இதோபார் கிடந்த
துன்பம் தொலைந்தது! தொலைந்தது மிடிமை!
வாழிய தொழிலே, செந்தமிழ்
வாழிய! வாழிய வண்டமிழ் நாடே!

முல்லை 2

அவள் இல்லை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

'பழகுதற்குத் தோழருள்ளார்; கிளைஞர் உள்ளார்;
பல்பொருளும் இல்லத்தில் நிறையக் கொண்டாய்;

விழியினிலே ஒளியிழந்த தென்ன' என்று
விளம்பினைநீ உளம்ஒத்த தோழா கேளாய்

எழுதுகின்றேன் ஓடவில்லை இறகு! கண்கள்
எதிலேயும் பொருந்தவில்லை என் அகத்தை

அழகு செய்து நாளும்என்பால் அன்பு செய்வாள்
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

'புகழ்வந்து மலைமலையாக் குவிய, வாய்த்த
புதையலைப்போல் வருவாயும் கொட்ட, நீயேன்

இகழ் அடைந்த தமிழரசு போல நெஞ்சம்
இளைக்கின்றாய்' என்கின்றாய் தோழா கேளாய்

பகற் பணியும் சாயவில்லை. இரவில் தூக்கம்
பகையாகும்! என்உளமாம் கருங்கல் மேட்டை

அகழ்ந்ததிலே இன்பமென நிறைந் திருந்த
அவள்இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

'அடுக்களையில் எழும்புகையே அமுதாய் நாற
அண்டையிலே பணிசெய்வோர் உன்வாய் பார்த்து

நடுக்கமுறும் நிலையுடையாய் நலிவேன்' என்று
நவிலுகின்றாய் தோழனே புகலு கின்றேன்

கடைக்கேகக் காலினிலே ஓட்ட மில்லை
கண்ணுக்குள் மூடிவைத்துக் காத் திருந்த

அடிச்சிலம்பின் இசையாளைத் தாய் அழைத்தாள்
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

‘தென்றல்வரும் வழியினிலே அமைந்த வீடும்
செந்நெலினைக் குவிக்கின்ற நன்செய் தானும்

என்றைக்கும் உடையாய்நீ என்ன ஏக்கம்’
என்றுரைத்தாய் நன்றுரைப்பேன் கேளாய் தோழா

ஒன்றிலுமே பொருந்தவில்லை என்றன் காதும்
உயிர்போன்ற மங்கையினை அண்டை வந்தே

அன்றழைத்துச் சென்றாள்என் அருகில், வீட்டில்
அவள் இல்லை; என் நெஞ்சில் அமைதி இல்லை!

‘புருவம்நெறித் தால் உலகம் பொடியாய்ப் போகும்
போஎன்றால் செங்கதிரும் போக்கில் மாறும்

பெருமறவா ஏன் நலிந்தாய்’ எனக்கேட் கின்றாய்
பெறற்கரிய தோழனே இதைக்கேட் பாய்நீ

ஒருநினைவும் ஒருசெயலும் இலா தொழிந்தேன்
உயிர்வாழ்கின் றேன்இதுவும் புதுமையே ஆம்!

அருந்துறையை அன்னைவந்து கூட்டிச் சென்றாள்!
அவள் இல்லை; என்நெஞ்சில் அமைதி இல்லை!

முல்லை 3

தென்றல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

பொதிகை மலை விட்டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து, பூந் தாது வாரி,
நதி தழுவி அருவியின் தோள் உந்திக், தெற்கு
நன்முத்துக் கடல் அலையின் உச்சிதோறும்
சதிராடி, மூங்கிலிலே பண் எழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்றவைத்து
முதிர்தெங்கின் இளம்பாலை முகம் சுவைத்து,
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதிநோக்கி,

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை உடல் அணு ஒவ்வொன் றும் சிலிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்; அதன் பேர்தென்றற் காற்று!
வெந்தயத்துக் கலயத்தைப் பூனைதள்ளி
விட்டதென என் மனைவி அறைக்குப் போனாள்
அந்தியிலே கொல்லையில் நான் தனித்திருந்தேன்;
அங்கிருந்த விசுப்பலகை தனிற்படுத்தேன்

பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசிப் பழந்தமிழின்
சாற்றாலே காதல் சேர்த்து
மிக்க அவசரமாகச் சென்ற பெண்ணாள்
விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்.
அக்காலம் அறைக்கு வந்த பூனையின் மேல்
அடங்காத கோபமுற்றேன் பிற நேரத்தில்
பக்காப்பூ னைநூறு, பொருளை யெல்லாம்
பாழாக்கி னாலும் அதில் கவலை கொள்ளேன்

வாழ்க்கைமலர் சொரிகின்ற இன்பத் தேனை
மனிதனது தனிமையினால் அடைதல் இல்லை
சூழ்ந்ததுணை பிரிவதெனில் இரண்டு நெஞ்சும்
தொல்லையுறு வகைஇருத்தல் வேண்டும் அங்கே

வீழ்ந்துகிடந் திட்டஎனைத், "தனிமை", "அந்தி"
இவைஇரண்டும் விஷஉலகில் தூக்கித்தள்ளப்
பாழான அவளுடலின் குளிர்ச்சி, மென்மை,
மணம் இவற்றைப் பருகுவதே நினைவாயிற்று

தெரியாமல் பின் புறமாய் வந்த பெண்ணாள்!
சிலிர்க்கவே எனை நெருங்கிப் படுத்தாள்போலும்,
சரியாத குழல் சரிய லானாள் போலும்,
தடவினாள் போலும், எனைத் தன் கரத்தால்
புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்!
புரியட்டும் எனஇருந்தேன் எதிரில் ஓர் பெண்
பிரிவுக்கு வருந்தினே னென்றாள்ஓகோ!
பேசுமிவள் மனைவி;மற் றொருத்தி தென்றல்!

முல்லை 4

வாய்மை முரசு!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மனிதன் உண்போன்; மற்றவும் உண்பன!
மற்றவை உறங்கும்; மனிதனும் உறங்குவான்!
இன்புறும் பிறஉயிர்; இவனும் ஆங்ஙனே!
துன்புறுவான் இவன்; துன்புறும் பிறவும்!
மனிதன் அறிபவன்; மற்றவும் அறிவன.
மனித னுக்கு, மற்ற உயிர்கட்குக்,
குறிகள் உண்டு; நெறிகள் உண்டு!

மனிதன் ஏன்நிலத்தில் வாய்த்த உயிர்களில்
"இனியோன்" "சிறந்தோன்" எனப்படு கின்றான்?
முளைத்த விலங்கு முதற்,சுள் ளான்வரை-
உள்ள உயிர்கட் கில்லாத தென்ன?
மனித னிடத்தில் வாய்த்த சிறப்பெது?
கேளீர், அதனைக் கேளீர், கேளீரே,

"உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல்"
என்பது, மனித னிடத்தில் தானுண்டு!
பிற உயிர்களிடம் பிரசாரம் செய்யும்
தனி ஒரு மேன்மை சற்றும் இல்லை;
இம்மி கூட இல்லை என்றறிக!
உள்ளங் கண்டதை உலகுக் குரைத்தல்
மற்றவற் றினின்று மனிதனைப் பிரிப்பது;

மனித னுக்கு மாண்பு தருவது!
அஞ்சியோ பிறர்பால் ஆவது கருதியோ,
வயிறு தன்னை வளர்க்க எண்ணியோ,
பெற்றதன் கொள்கையைப் பிறர்க்கென மாற்றுவோன்
உற்ற துரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்,
தாழ்ந்த சுள்ளானில் தாழ்ந்தவ னாவான்,

மனித ருள்ளும் மனிதத் தன்மை
"கொள்கை' என்று கூறுவர் அறிஞர்.
கொள்கையை விலைக்குக் கொடுக்கும் மனிதன்
மனித னுள்வாய்த்த மனித விலங்கு!
நெஞ்சை ஒளித்துப் பேசுதல்
வஞ்ச மன்றோ மாநிலத் தீரே!

முல்லை - 5

நிலவே!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

நிலவே நீ முன்னடந்ததைக் கூறுவாய் மெய்யாய்க் கூறுவாய்
இலகுசெந் தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னைவளர்த்த திலையோ பாலூட்டி?

சங்க மேறித் தமிழ் உலகிருள் போக்கத்
தாவியெழில் வானமிசை நீ உலவத்
தமிழ் வாழ்த்தி உனை வாழ்த்தி, மக்கள் வாழ்வு
தொடங்கியதை மறந்தனையோ
குளிர்ந்த வெண் *(ணிலவே நீ)*

வடமொழிக் குதவி தமிழ்மொழி அன்றோ?
மறுமொழி கூறா திருப்பது நன்றோ?
கடல் சூழ்வையம் ஆண்டது தமிழோ?
கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ *(நிலவே நீ)*

ஆரியர் ஆட்சி வாய்ந்த பின்னை
அழகிய தமிழ் நூலாகிய பொன்னை
வேரொடு மாற்றிட வஞ்சம் என்னென்ன
விளைத்தார் அதைத்தான் கேட்டேன் உன்னை
(நிலவே நீ)

முல்லை 6

ஒரே முத்தம்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

கோடை நாளின் மின்னல்போல் அவள் நெஞ்சில் புதியதோர் எண்ணம் தோன்றிற்று. இடதுகைக் கடிவாளத்தை அசைத்தாள். குதிரை செங்குன்று நோக்கிப் பறந்தது. தோழிகளும் தம் குதிரைகளை அதே பாதை நோக்கித் துரத்தினார்கள்.

செல்வியும் தோழிமாரும் செங்குன்றை யடுத்துள்ள கண்ணிச் சோலையை அடைந்தார்கள். தமது குதிரைகளை நாவல் மரம் ஒன்றில் கட்டினார்கள். அழகாய் அமைந்த அச்சோலையில் நுழைந்தார்கள், மருளும் பார்வையுடைய மான்கள்போல.

உடுக்கள் நிரம்பிய நீலவானம்போல் பச்சைத் தழைகள் அளாவிய மரங்களில் மலர்கள் குலுங்கின. எங்கணும் கொடிப் பூக்கள், புதர்ப்பூக்கள் தரையில் அழகு கொழித்தன. பூஞ்செடிகளின் கால்களை நோக்கி மடைகோலிவிட்ட தண்ணீர் சாரை சாரையாய் ஓடிக்கொண்டிருந்தது. அமைதியில் ஊடுருவிப் பாய்ந்தது பறவைகளின் இன்னிசை. புதுப்பெண்கள் போல் ஒரு சாயலாக மயில்கள் ஒதுங்கி ஒதுங்கி நடந்தன.

இவை செல்வியின் உள்ளத்தைக் கவர்ந்தன. கவிதைக்குரிய அழகின் கூட்டத்தை அவளால் அளவிட முடியவில்லை. அவள் பேசுவாள், ஆயினும் ஊமையானாள். செக்கச் செவேலென்று பூத்திருந்த செங்காந்தள் மலர்களையும், அவைகளை அடுத்து உயரத்தில் தொங்கும் பொன்னிறமான சரக்கொன்றை மலர்களையும் தோழிகள் கண்டார்கள். அக்காட்சி ‘இரப்பவர் இல்லை என்று ஏந்திய கைகளில் கொடையாளிகள் பொற்காசுகளைச் சொரிவதாகும்’ என்ற கவிதை செய்துகொண்டிருந்தார்கள். அச்சமயம் புள்ளிமான் ஒன்று வேறொரு பக்கத்தில் செல்வியை அழைத்துக்கொண்டு போயிற்று.

கதிரவன் மேற்றிசையைத் தழுவும் நேரம் ஒரு பக்கம் பிரிந்துசென்ற செல்வி, சிறிது சோர்வால் அங்கிருந்த பளிங்கு மேடை ஒன்றில் அமர்ந்தாள். அவளுடைய நீலவிழிகள் உலவிய இடத்தில் காதல் விளைக்கும் ஆண் மயிலும் பெண் மயிலும் ஒன்றை ஒன்று கண்ணாற்

சுவைத்தபடி இருந்தன, அந்தக் காதல் வெள்ளம் இரண்டிற்கும் நடுவில் ஒரு விரற்கடைத் தூரந்தான் பாக்கி,

செல்வி தன் பார்வையைத் திடீரென்று மறுபுறம் திருப்பினாள். அவளுடைய 'தன்னந் தனிமை'யை அவளுக்கு நினைவை உண்டாக்கின, இணை மயில்கள் அவளுடைய இளமையின் இயற்கை அவளைக் கண்ணீர் விட வைத்தது, அவள் எழுந்தாள், தோழிமாரைத் தேடி நடந்தாள்.

மற்றொருபுறம் செங்குன்றூர் இளவரசர் மெருகேற்றிய கருங்கல்மேடை ஒன்றில் தூங்கிக்கொண்டிருந்தான். ஆயினும் அவனுடைய இளமையும், அழகும், ஒளியும் மாத்திரம் தூங்காமல் தம்மை நாடிவரும் உயிருக்கு மற்றோர் உயிரை அளிக்கக் காத்திருந்தன.

அவள் அவனைப் பார்த்தாள்; அவளுடைய கெண்டை விழிகள் ஆடாமல் அசையாமல் இருந்தன. அவள் இவ்வுலகை மறந்தாள்.

அவனது சிகை புறங்கழுத்தளவு கத்தரித்து விடப்பட்டிருந்தது. கதிர்விடும் விரிந்த நெற்றியில் மேலேறிய கறும்புருவம் ஒளி வீசிக் கிடந்தது. அவனுடைய இரண்டு உதடுகளின் கடைக் கூட்டில் உயிர்க் களை பின்னிக்கொண்டிருந்தது. அவனுடைய மார்பும், மார்பிற்கிடந்து ஒளி செய்யும் நவமணிப் பதக்கங்களும் உதயகிரியும் இளம்பரிதியுமாக விளங்கின.

அவள் கண்களில் புதியதோர் ஒளி உண்டாயிற்று. அவள் முகமண்டலம் நிறைய வியப்பு! நெஞ்சில் காதற் பெருக்கு! அவன் அழகு நிலவையும். கதிரையும் மின்னையும் பொன்னையும் கொண்டு வல்லமை ஆக்கிய சித்திரமோ என்று ஐயப்பட்டாள், அந்த ஆண்மையின் வடிவில் அறியப்படும் மற்றொரு வீர வடிவம், கேடயத்தோடு வைக்கப்பட்டிருக்கும் நீண்ட வாளாயுதம் என்று உவமித்தாள்.

அவன் தோற்றம் அவளை உயர்நிலையிற் சேர்த்தது. கண்ட மாத்திரத்தில் அளவற்ற இன்பத்தை உண்டாக்கும் அவனுடைய திருவுருவமானது கேட்ட மாத்திரத்தில் இன்பம் விளைக்கும் செந்தமிழ்க்குச் சமம்.

அவன் திடுக்கிட்டெழுந்தான். அவள் திகைத்தாள்.

இருவர் பார்வையும், இருவர் மனமும் அமைதி பெற்ற பின் அதிசயத்தோடு நீ யார் தனியாக என்று கேட்டான். 'நான் கொற்றவேல் மன்னன் மகள். என் பெயர் செல்வி' என்று கூறினாள். அவள் கொஞ்சம் நாணத்தால் உடை ஒதுக்கித் தலை குனிந்திருந்தாளாயினும், அந்தக் கட்டழகனின் நல்ல பதிலை எதிர்பார்த்தாளதலால் சற்று நிமிர்ந்து புன்சிரிப்புடன் அவனுடைய முகத்தை மற்றொரு முறை பார்த்தாள். அவனும் அவள் முகத்திற் சிந்தும் அழகைத் தன் பார்வையால் ஏந்தினான்.

அவள் வாடை யுயர்ந்த மங்கை! மிதமிஞ்சிய பருமனில்லாத மின்னற் சுரம்போன்ற மேனியுடையவள். மெல்லிய கருங்குழலின் பின்னல்,

பின்னால் நீண்டு தொங்கிற்று கருநாகம்போல்! நிலவுபோல் வெண்ணிறத்தையும், நிழல்போல் மேன்மையையும் உடைய அவளது ஆடையானது மேனியின் ஒளியை மறைத்துவிட முடியவில்லை. பிறைபோன்ற நெற்றி, கருவிழி, செவ்விதழ், முல்லைப்பல் ஆகிய இவைகள், வேண்டுமென்று சிரிப்பதன்றி இயற்கையாக நகைப்பைக் கொட்டிக் கொண்டிருந்தன.

ஆயினும் அவன் 'அவள் பகை அரசனின் மகள்" என்பதை எண்ணினான். தன் நெஞ்சையும் உயிரையும் அளாவிய அந்த அழகை வலிய வெளியே இழுத்துப் போட்டான்? வாய் நிறைந்த அமுதத்தை வேண்டுமென்றே கீழே உகுத்தான்; உடல் சிலிர்க்க வந்த தென்றலை விட்டு வெதுப்பும் அறையில் குடிபோக முயன்றான். அந்த அழகின் ஒளி புக வேண்டாம் என்று தன் கண்ணை இமையாமல் மூடினான். அவள் வாய் மலரின் செந்தமிழ்த்தேன் வந்து பாயாமல் தன் காதுக்குத் தாழிட்டான்.

என்னை நீங்கள் ஒப்புகிறீர்களா? என்று அவள் ஆற்ற முடியாத காதல் தூண்டக் கேட்டாள்.

செல்வியே, ஒன்றை ஒன்று தழுவும் நமது இரண்டு உள்ளத்தை, நம்மிரு நாட்டின் பழம் பகையானது பிரிக்கிறது. என் அன்னை நாட்டில் ஒருத்தி யிருக்கிறாள். அவள் உன்னினும் அழுகுடையவள் அல்ல எனினும் அவள் என் பகையரசனின் மகளல்ல.. என்று கூறி மறுத்தான்.

இதைக் கேட்ட செல்வி உள்ளந் துடித்தாள். பகையுள்ளத்தைத் தாண்டி அவனுடைய அன்பைத் தன்னிடம் ஓடிவரும்படி செய்ய அவளால் முடியாமற் போயிற்று.

'என் உள்ளத்தில் குடிபுகுந்தவரின் பெயர் என்ன? அதையாவது கூறலாமா?' என்று பரிதாபமாகக் கேட்டாள். இளவரசன் தன் பெயரைச் சொன்னான் 'வேல் மறவன்' என்று

உள்ளம் ஒடிந்த செல்வி தன் உயிரைச் சுமந்துகொண்டு தள்ளாடி நடந்தாள். செல்வி தன் தோழிமாருடன் தன் மாளிகை சென்றாள். அவனையே நினைத்திருந்தாள் மணித்துளிதோறும். ஒரு நாள் போவது அவளுக்கு ஓர் யுகம் போவதாயிருந்தது. இவ்வாறு கழிந்த நாட்கள் அவள் கணக்குபடி வருடங்கள் ஆயின. வேல்மறவன் தாய் நாடாகிய செங்குன்றூருக்கும் செல்வியின் தாயகமாகிய கேணிச்சுரையூருக்கும் சண்டை மூண்டது.

கேணிச்சுரையூரின் கோட்டை வாசலைக்கடந்து எதிர்ப்படை அரசமாளிகையை முற்றுகையிட்டு விட்டது. கேணிச்சுரையூரின் காக்கைக் கொடி பிடிபடும் என்று இரு பக்கத்தாறும் உறுதியாக்கலானார்கள். கேணிச்சுரையூரின் கவிஞர்கள் தமது தாய்நாட்டின் பெருமையைக் காக்க அந்நாட்டு இளைஞருக்கு எழுச்சியை - உணர்ச்சியைத் தூண்டினார்கள். ஆனால் அந்த நாட்டுப் பெண்கள் போரிற் கலந்துகொள்ளக் கூடாது

என்பது அந்நாட்டின் சட்டமாதலால் பெண்களின் எழுச்சி அடைந்த தோள்கள் அடக்கப்பட்டன. கேணிச் சுரையூரில் வயதுவந்த இளைஞர் அனைவரும் போர்க்கோலம் பூண்டார்கள். இனந் தெரியாத இளைஞன் ஒருவன் கேணிச்சுரையூரின் படைக்குத் தலைமை தாங்கலானான்.

அரச மாளிகையை முற்றுகை யிட்டிருந்த செங்குன்றூர்ப் படையில் இனந்தெரியாத அந்தச் சிங்க இளைஞன் சிறுபடை ஒன்றுடன் புகுந்தான்! செங்குன்றூர்ப் படை சிதறி ஒடிற்று! அது கோட்டை வாசலுக்கு வெகு தூரத்தில் அமைந்திருந்த தன் கூடாரத்தை நோக்கிப் பறந்தது.

கேணிச்சுரையூர் அரசன் மகிழ்ந்து, கூடாரத்தை நோக்கி ஓடிய எதிரிகட்குப் பெண்ணுடைகளைக் கழுதை மேல் அனுப்பினான். கோட்டை வாசல் கடந்து உள்நுழைந்த பகைவர் திருப்பியடிக்கப் பட்டால் அவர்கள் எதிரிகளால் தரப்படும் பெண்ணுடைகளை அணிந்துதான் மீண்டும் போர் செய்வேண்டும என்பது இரு நாட்டைப் பொறுத்த கட்டளை.

செங்குன்றூர்ப் படைக்குத் தலைமை வகித்திருந்த வேல் மறவன் கழுதை தூக்கிவந்த பெண்ணுடைகளை வெட்கத்தோடு உடுத்துக் கொண்டான்.

மீண்டும் போர்க்களத்தில் இரு பக்கத்துப் போர் முரசுகளும் போரை ஆரம்பித்தன. உறவென்பதில்லை. நண்பனென்பதில்லை. தம் தம் தாய்நாட்டின் வெற்றி ஒன்றே குறியாக் கொண்டு போர் செய்தார்கள். தலைகள் பனங்குலை சரிவது போல சரிந்தன. போர் வீரர்கள் ஒருவர்க்கொருவர் விழுக்காடு நின்று வாட்போர் நடத்தினார்கள்.

இனந் தெரியாத அந்தப் படை வீரனை நோக்கி 'அதோ நாணத்தால் முகம் மறையும்படி பெண்ணுடையால் மூடி நிற்கும் அந்த வீரன் தான் பகைப் படைக்குத் தலைவன்' என்று கூறினான் ஒரு வேவுகாரன். இனந் தெரியாத அப்படைத் தலைவன் அவன் மேற் பாய்ந்தான்! இரு தலைவர்க்கும் வாட்போர் மூண்டது. விரைந்து சுழலும் இரு வாள்களும் மின்னல் ஒளியை உண்டாக்கின. போர்க் கலையின் நுட்பத்தை, மற்ற வீரர்கள் உற்றுக் கவனிக்கலானார்கள். தம் தம் போர்த் தொழிலையும் மறந்து அவர்கள் தம் தலைவர்களின் வெற்றி தோல்வியை எதிர் பார்ப்பதையும் மறந்துபோனார்கள். போர்த் திறமை வெகுநேரம் நீடிப்பதால் கலை நுட்பம் தமக்குப் புரியும் என்று நினைத்தார்கள்.

முடிவில்,

வாட்போர் செய்திருந்த அந்த இருதலைவர்களின் இரு மார்பிலும் ஒத்தகாலத்தில் இரண்டு வாள் முனைகள் நுழைந்து வெளி வந்தன. அதனால் இருவர் தோள்களும் தாழ்ந்தன. இரு மார்புகள் குருதியை உகுந்தன. குடை சாய்ந்து விழும் இரு தேர்கள்போல் இரு தலைவரும் ஒரு முகமாகச் சாய்ந்தனர். இருவர் உடைகளும் இடம்விட்டு நகர்ந்தன.

இருவர் கண்களும் சந்தித்தன. கழுத்தளவு கத்தரித்து விட்ட சிகை, மேலேறிய நாகம்போன்ற பின்னல்!

என் அன்பே என்று பதைத்தது வீரன் உடல்! என் அன்பே என்று அதிர்ந்தது செல்வியின் மலர் உடல். இருவர் தோள்களும் தழுவின காதற் பதைப்பால்! போகும் உயிர்கள் பிடித்து நிறுத்தப்பட்டன சிறிதுநேரம்.

குருதி சிந்திய போர் நிலத்தில் - அந்த மலர் மஞ்சத்தில் - ஒரே நேரத்தில் - ஒரே கணத்தில் இரண்டு காரியங்கள் நிகழ்ந்தன.

அவை ஒரே ஒரு காதல் முத்தம், இரண்டு மரணம்!

முல்லை - 5

ஒற்றுமை

புரட்சிக் கவிஞர்

''வா''

''பூங்காவனக் குயிலே! நீ?''

''உணர்வு''

''ஈடிலாச் சுவையே! துணை என்ன தமிழர்க்குச் சொல்''

''தூய்தான ஒற்றுமைதான்!''

''இணையற்ற அந்நிலைதான் ஏற்படுங்கால், அந்த ஏற்பாட்டுக் கிடையூறும் ஏற்படுமோ?''

''தணல் குளிரும், இருள் ஒளி ஆம்,
தமிழர்கள் ஒன்றுசேர்ந்தால்!''

''முன்னேறுந் தமிழர்கள் மதத்துறையை நாடி மூழ்குதலும் வேண்டுமோ?

"முன்னேற்றம், மதஞ்சொன்னார் இதயப் பூஞ்சோலை மொழிகின்ற அம்மாதோ, அச்சோலை தன்னைத் தின்னவந்த காட்டுத் தீ!''

முல்லை - 5

கவிஞர் வாழ்க்கையில் !

ப. முத்தையா

1

இளமையில், புலமை வளம் பெற்றது கவிஞர் பாரதிதாசன் அவர்களிடத்தில். இதற்கு உதாரணம்: புதுச்சேரி அரசாங்கக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் தேர்வில் கவிஞர் தம் பதினெட்டாம் வயதில் புதுவையிலேயே முதன்மையாகத் தேறித் தம் புலமையைப் புலப்படுத்தினார்.

நம் கவிஞருக்கு உடனே ஆசிரியப்பதவி அளித்து முதன்முதலில் காரைக்காலுக்கு அடுத்துள்ள நெரவை என்ற கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் அமர்த்தினார்கள்.

முதல்நாள் கவிஞர் பள்ளிக்கூடத்திற்குச் செல்கிறார்! அந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் நம் 'கவிஞக்காளை'யைக் கண்டதும் "யார் இந்தப் புது மாணவன்?" என்று கவிஞரோடு சென்ற ஒரு நண்பரிடம் கேட்டனர்.

பள்ளியில் வகுப்பு ஆரம்பமாயிற்று

பள்ளித் தலைவர், நம் கவிஞரை வகுப்புக்கு அழைத்துவந்து, "இவர்தான் உங்கள் புது ஆசிரியர்!" என்று அறிமுகப்படுத்தினார். அவ்வளவுதான் மாணவர்களின் நாணத்தைப் பார்க்க முடியவில்லை! ஏன்? ஆசிரியருக்கு வயது பதினெட்டு; மாணவர்களுக்கோ, பத்தொன்பது இருபதுக்கு மேலிருந்தது.

முல்லை - 1

2

நம் கவிஞர் வாழ்க்கையிலே நிரம்ப நகைச்சுவை உண்டு. நகைச்சுவையான கருத்துக்களையும் இன்பமான கவிதைகளையும் ரசித்துக்கொண்டே வாழ்நாள் முழுதும் நாம் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

யாராயிருப்பினும், கவிதை எழுதும் தகுதியுடையவரோ அல்லாதவரோ, பாட்டு என்று எழுதிக்கொண்டு வந்து திருத்திக் கொடுக்கச் சொன்னால், நம் கவியரசர் சிறிதும் வெறுப்பின்றி, வந்தவர்களின் மனம் கோணாமல் திருத்திக் கொடுத்து விடுவார்.

சில தொணப்பர்களும், பழமைப் பித்தர்களும் எதையாவது எழுதிக்கொண்டு வந்து கொடுத்து தொந்தரவு செய்துகொண்டே இருப்பார்கள். இத்தகையோரிடத்தில் கவியரசர் தம்முடைய நகைச் சுவையைக் காட்டி விடுவார்.

ஒருவர், "காசியில் இறக்க முத்தி, கைலையில் பிறக்க முத்தி..." இப்படியாக மூன்று அடிகள் எழுதிக் கொண்டுவந்து, "கடைசிஅடி' தெரியவில்லை, இதை முடித்துக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். கவியரசர் பார்த்தார்; தனக்குள் சிரித்துக்கொண்டு... "...எனும் புராணக் கூற்றினைக் கொள்வாருண்டோ?" என்று எழுதி அதை முடித்துக்கொடுத்தனுப்பிவிட்டார்!

நகைச்சுவையிலும் கருத்து நிறைந்திருக்கிறது!

முல்லை - 2

3

நம் கவிஞர் பொழுது போக்குக்காக மாலை வேளையில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து அமைதி காண்பது வழக்கம்.

அப்போது சிறுவர்கள் 'காற்றாடி' விட்டு விளையாடுவார்கள். இதை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார் நம் கவிஞர்!

ஒரு பையனின் 'காற்றாடி'க்கு வால் போதவில்லை, உடனே அந்தப்பையன் தன் கோவணத்தைக் கிழித்து அந்தக் காற்றாடிக்கு வால் கட்டிப் பறக்கவிட்டான். காற்றாடி உயரப் பறந்துகொண்டிருக்கையில் பக்கத்தில் இருந்த கோவில் கோபுரத்தின் தங்கக் கலசத்தின் மேல் அந்தக் கோவணம் சுற்றிக் கொண்டது. உடனே அந்தச் சிறுவன் பக்கத்தில் உள்ள தன் தோழர்களிடம் "என் கோவணம் தங்கக் கலசத்தின் மேல்" என்று கூறிப் பெருமையடைந்தான். இதற்கு ஒரு உவமை கூறுகிறார் நம் கவிஞர்.

இது எதற்குத் தெரியுமா?

"சொந்தமான நூல்கள் எதுவும் எழுத வகையறியாத சிலர் வேண்டாதவற்றை மொழிபெயர்த்தும்-பழந்தமிழ் நூல்களான

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பெரிய நூல்களில் 'பதிப்பாசிரியர்' என்ற 'முத்திரை' போட்டு வருகிறார்களல்லவா? அதற்குத்தான் "எங்கோவணம் தங்கக் கலசத்தின் மேல்!" என்று கூறுகிறார்" நம் கவிஞர்.

எப்படி உவமை?

உவமையிலும் சிறந்த கருத்தை உணர்கிறோம்!

முல்லை - 3

4

நம் கவிஞருக்குப் பெரியம்மா ஒருவர் உண்டு. ஒரு சமயம் தான் வாங்கிவந்த வாழைப்பழச் சீப்பில், கவிஞர், கவிஞரின் சகோதரர் எல்லாருக்கும் ஆளுக்கொன்று கொடுத்துவிட்டு, மீந்த பழத்தைப் பழங்கல அறையில் ஒளித்துவைத்து. 'அதை எடுத்துத் தின்னும்படி' பெரிய பிள்ளைக்குச் சைகை காட்டினாள். எப்பொழுதுமே அவர்களுக்கு மூத்த பிள்ளையிடம் அதிக அன்பு (இளைய பிள்ளை நம் கவிஞர்). இந்த வஞ்சனையைக் கவிஞர் கவனித்துக்கொண்டார். பெரிய பிள்ளையோ பெரியம்மா சைகையைப் புரிந்துகொள்ளவில்லை.

பெரியம்மா தன் வேலை முடிந்ததென வேறு வேலையாகச் சென்றதுதான் தாமதம். கவிஞர், பழங்கல அறைக்குள் புகுந்து, பழங்களை ஒவ்வொன்றாகத் தின்று தீர்த்தார். தோல்களைப் பழம் இருந்த இடத்தில் வைத்துவிட்டு ஓடியே போய்விட்டார்.

பெரியம்மா, பெரிய பிள்ளையை மறுபடியும் கூப்பிடவே, அவர் வந்து அறையைத் தேடிப் பார்த்ததில் பழத் தோல்தான் கிடைத்தது. "அக்கா, அம்மா, சின்னப் பயல் (கவிஞர்) பழத்தையெல்லாம் தின்றுவிட்டுத் தோலை வைத்திருக்கான் பாரு" என்று பெரியம்மாவிடம் கண்ணீர்விட்டான். அப்பாவிடமும் குற்றம் பதிவு செய்யப்படுவதை அறிந்த கவிஞர் நடந்தவற்றை ஒரு பாடலாக அமைத்துஅவரிடம் கொடுத்தார். அப்பாவும் சின்னப் பயலின் நியாயத்தை ஒப்புக் கொண்டார். கவிஞருக்கு அப்போது வயது 13. பாடல் பின் வருமாறு:-

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத் தேடிப் பயல் களைத்தான்
கிழங்களைத் தான் உதைக்கவேண்டும்
கெடுநினைப்பே அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச் சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்பதென்ன?

முல்லை - 4

5

புதுவைக் கல்லூரியில் பலர் பயின்று வந்தனர். அவர்களுடன் நமது கவிஞரும் பயின்றுவந்தார். அவர்களில் இருவர் கவிஞருக்கு நெருங்கிய நண்பர்கள். ஒருவர் "பள்ளி" வகுப்பினர். மற்றொருவர் "இடையர்". பள்ளி வகுப்பினர் இசை பயில விரும்பினர். அவர் விரும்பியவண்ணம் மற்றொருவர் இடையர் இசை பயிற்றுவிக்க இசைந்தார்.

அவர் முதலில், அருணாசலக் கவியின் பாடலாகிய "ஏன் பள்ளி கொண்டீர் ஐயா?" என்ற பாடலைத் தொடங்கினார். கற்றுவந்தவருக்குச் சற்று வெறுப்புத் தட்டிவிட்டது. பாடல் மூலமாகத் தன்னை இழிவு படுத்துவதாக எண்ணி வருந்தினார். இதற்கு என்ன வழி என்பதையும் யோசித்து, நமது கவியரசரிடம் வந்து நடந்தவற்றைக் கூறினார்.

நடைமுறையிலே நகைச்சுவைக்காக நம் கவியரசர் நுட்பமாகவும் - கேலியாகவும் தோழர்களிடம் குறும்பு செய்வது வழக்கம். இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததும் கவிஞர். "எட ராமசாமி தூதுவனே" என்று அவர் முன் பாடுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்.

"அட ராமசாமி தூதுவனே' என்பது அருணாசலக் கவிபாடல். அதையே திருத்திப் பாடிப், பாடச்செய்தார். கற்பித்தவர் வெட்கி, மீண்டும் இசை பயிற்றுவிக்க முன்வரவில்லை. சிறிது நாணமும் அடைந்தார்.

இந்த வெற்றிக்குப் பின்னர் அந்தப் "பள்ளி' நண்பர் நம் கவியரசருக்கு மிக்க மதிப்புச் செலுத்தி வரலானார்.

முல்லை - 5

ஐந்து முத்தம்

ப. முத்தையா

பூங்கோதையும், பொன்முடியும் எதிர்பாராத வகையில் நேரிட்டுக் கொள்ளுகிறார்கள். உள்ளம் ஒன்றுபடுகிறது. 'கையிரண்டும் மெய்யிறுக இதழ் நிலத்தில் கன உதட்டை ஊன்றினான் விதைத்தான் முத்தம்.

அவன், முத்தம் என்ற இன்பவிதையை அவளின் இதழாகிய நிலத்தில் விதைத்தானாம். மற்றொரு முறை இவர்கள் நேர்படுங்கால் "பூங்கொடியை மார்போடணைத்து மணற் கிழங்காய்க் கன்னத்தில் வேரொடு முத்தம் பறித்தான்' என்று கன்னமாகிய நிலத்திலிருந்து முத்தமாகிய கிழங்கை வேரொடு பறித்ததாகக் கூறினார் கவிஞர்.

இனி மற்றொரு முத்தம் குறிக்கிறார்.

தலைவியின் தாய் காலையில் பால் கறக்கத் தொடங்கினாள். வீட்டு நடையில் முத்தம் தொடங்குகிறது. "மாமி அவள் பால் கறந்து முடிக்க இங்கு மருமகனும் இச்சென்று முடித்தான் முத்தம்" என்று கூறுகிறார்.

அவன் உணர்ச்சியின் மிகுதியால் அந்த முத்தத்தை எப்போது துவக்கி எப்போது முடிக்கிறான் என்பது நோக்கத்தக்கது. இனி, அம் முத்தம் எப்படிப்பட்ட அணி பெறுகிறது எனில், அவன் இதழ் அவள் கன்னத்தில் "தாமரை போய்ச் சந்தனத்தில் புதைந்ததுபோலும்" என்கிறார். எப்படிப்பட்ட கன்னம்? தமிழ்ச்சுவடிக்கன்னம். சுவடியாயின் உணர்வு செலுத்தப்பட வேண்டும். அவன் இதழாகிய உணர்வு செலுத்தப்படுகிறது. அவ்வுணர்வில் தட்டுப்படுகின்ற சுவையைக் கவிச்சுவையாக உருவகிக்கிறார்.

யாருக்கும் தெரியாமல் விரைவாக நடந்துவிடுகிறது ஒரு முத்தம். அதைக் கவிஞர் குறிப்பிடுகிறார்:

"மான் வந்தாற்போல் வந்து வாய்முத்தம் தந்து விட்டுப் போய்விட்டாள் வீட்டுக்குள் பூங்கோதை' மருண்டவிழியோடு அவள் தோன்றுவதைக் குறிக்க மான் வந்தாற்போல் என்றார்.

பிரிந்த தலைவி தலைவன் சந்திக்கிறார்கள். அவர்களைச் சாக்காடும் நிழல்போல் தொடர்கிறது. அவன் முகத்தை அவள் அணைக்கிறாள். முத்தம் பெறுகிறாள். முத்தத்தின் முடிவில் தன் கையில் தாங்கியுள்ள அவன் முகத்தைப் பார்க்கிறாள். ஆனால் அவனுடைய உடலைக் காணவில்லை.

“கடிதோடினாள் அத்தான் என்று அழைத்தே! நேர்ந்தோடும் இருமுகமும் நெருங்கும்போது நெடுமரத்தின் மறைவினின்று நீள் வாள் ஒன்று பாய்ந்ததுமேல்! அவன் முகத்தை அணைத்தாள் தாவி! பளிரென்று முத்தமொன்று பெற்றாள்! சேயின், சாந்தமுகந்தனைக் கண்டாள். உடலைக் காணாள்! தலைசுமந்த கையோடு நிலத்தில் சாய்ந்தாள். தீந்தமிழர் உயர்வினுக்குச் செத்தான். அன்பன் செத்தற்குச் செத்தாள் அத்தென்னாட்டன்னம்.’ இதோடு ஐந்து முத்தங்கள் மொத்தம்.

முல்லை - 1

அவனே சேர மன்னன்!

மு. அண்ணாமலை

வண்டிக்காரன் என்றால் அவனுடைய வற்றி வரண்ட மாடுகளும். ஆடி அசைந்து பாட்டுப் பாடிக்கொண்டு செல்லும் கூட்டு வண்டியும்தான் நினைவிற்கு வரும். அவர்கள் வாழ்வு, போக்கு வரவு சாதனங்கள் முன்னேறி நாகரீகம் அடைந்ததால் சுவையற்றதாக மாறத் தொடங்கியது.

இத்தகைய வறட்சியான வண்டிக்கார வாழ்விலே ஒரு தனி இன்பத்தைக் கண்டான் ஒரு இளைஞன். அதனையே தன் தொழிலாகவும் மேற்கொண்டான். தலையில் துப்பட்டியை வரிந்து கட்டிக்கொண்டு. 'தய்' 'தய்' என்று மாடுகளை அதட்டி ஒட்டுவதில் அவனுக்கு அத்துணை அளவு கடந்த மகிழ்ச்சி! அவன் இந்த எளிமையான வாழ்வைக் கைக்கொண்ட போதிலும், அவனிடத்திலே தன் உயிரையே அடகு வைக்க ஆயத்தமாய் இருந்தாள் ஒரு பெண். நாளடைவிலே அவர்களின் மாசு மருவற்ற காதல் தளிர்த்தோங்கி, அதன் பயனாய் தலைவன் தலைவியராய் ஆயினர். அந்த உளம் ஒத்த வாழ்விலே, காதல் ஒளிவிட்டு வீசி நின்றது. அவள் அவனையே தான் பெற்ற பெரும் பேறாக எண்ணிப் போற்றினாள். அது போலவே அவனும் அவளுக்குக் கைமாறு செய்தான். 'போனகம் என்பது தானுழந்துண்டல்' என்பதை இலக்கியமாகப் போற்றினர் அப்பெருமக்கள்.

இத்தகைய நல்லாளுக்கு ஒரு தோழி உண்டு. அவள் இத்துணை நாட்களாகத் தன் தலைவனோடு வேற்றூரில் வாழ்ந்து த்ன் நகர் திரும்பினாள். அவளுக்குத் தன் தோழி ஒரு வண்டிக்காரனை மணந்து, இல்லறத்திலே ஈடுபட்டு, துணைவனின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்ந்து வருகிறாள் என்பது தெரியாது. இருவரும் ஒருவரை யொருவர் சந்திக்கின்றனர். பல்லார் நலமும், பண்புறு யாவும் இருவர்களாலும் வழங்கிக் கொள்ளப்பட்டது. தலைவி, வந்த தோழிக்குத் தலைவனைக் காட்டவேண்டுமென நினைத்தாள். ஆனால், அவள் தலைவனோ அப்பொழுதுதான் அவனுடைய முதலாளிக்கு வண்டி யோட்டுவதற்குச் சென்றிருந்தான். ஆயினும் அவ்வண்டி தன் வீட்டுக் கருகாமையிலுள்ள வழியிலேதான் செல்லவேண்டும் என்று கருதி அமைவுற்றாள்.

வண்டியும் முதலாளியை ஏற்றிக்கொண்டு சென்றது. தலைவி தோழியை விளித்து 'அதோ பாரடி!' என்று சுட்டித் தன் கணவனைக் காண்பித்தாள். பின்னர் அவள் தோழியை நோக்கி.

"அதோ பாரடி! அவரே என் கணவர்!
புது மாட்டு வண்டி யோட்டிப்
போகின்றார் என்னை வாட்டி!"

என்று வாடு முகத்தான் பிரிவாற்றாமையைத் தெரிவிக்கிறாள். பாரா முகமாய் நின்ற தோழி, வண்டிக்குள் வீற்றிருந்த முதலாளிதான் அவள் தலைவரோ என்று நினைத்தாள். ஆனால் தலைவி 'புது மாட்டு வண்டியோட்டி' என்றவுடனே அவளுக்கு ஐயம் குடிகொள்ளத் தொடங்கியது. ஐயம் அறிந்த அறிவுடைத் தலைவி (ஐயம் திரிபற)

'உள்ளே இருப்பவர் முதலாளி செட்டி
ஏறுகால் மேல்தான் என் சர்க்கரைக் கட்டி!

என்று தெளிவுற எடுத்தோதி விளக்குகிறாள். ஈண்டு தோழிக்கு ஐயம் ஒழிந்து விடுகிறது. ஆனால் ஒரு பக்கம் இரக்கமும், மறுபக்கம் வியப்பும் வந்து குடிகொண்டது. 'சாவிலும் வாழ்வு' என்பது போல் இந்த ஏழ்மையான - எளிமையான - வாழ்விலும் தலைவிக்கு இவ்வளவு மகிழ்ச்சி என்றவுடனே வியப்பும், இவளது அழகுக்கும், செல்வத்திற்கும், பண்பிற்கும் இந்த ஏழை வண்டிக்காரன்தானா கிடைக்கவேண்டும், என்று எண்ணியவுடனே இரக்கமும் தோன்றின. இவ்வாறு தோழியின் நெஞ்சம் அலைமோதிக்கொண்டிருக்க, அவள் எப்படி தலைவி சொல்லுகின்றவைகட்கு 'ஆம்' என்றோ, தெரிந்த தென்றோ கூற முடியும்? எதுவும் விடையாக வெளிவராதது கண்ட தலைவி, மனம் பொறாதவளாய்,

'தெரிய வில்லை யோடி!

அதோ பார் தெரிகிறது! அரசர்களின் முடிபோன்று துலக்க முறுகிறதே,

'தலையில் துப்பட்டி!'

என்று சினம் தொனிக்கப் பெருமை கொள்ளுகிறாள். ஆனால் இவ்வளவு கூறியும் தன் தோழியின் முகம் மலர்ச்சி பெறாமை கண்டு வருத்த முற்றாள் தலைவி. 'எவ்வளவு குறுகிய மனப்பான்மை! அவளுக்கிருந்த பெருந்தன்மை யெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்தன. காதலுக்கு விரிந்த நெஞ்சம் வேண்டும் என்பதை எண்ணிலளே, இன்னும் உயர்ச்சியே கருதுகின்றாளே" என்று மனமுடைந்தாள் மாண்புடைத் தலைவி. ஆயினும் ஏதோ அறிந்தாள்போல, 'உயர்ச்சிதானே வேண்டும்? என்னாருயிர்த் தலைவன் எதிற்றான் குறைந்தது போனான்? ஏன் அவன் எனக்குச் சேரன்" என்று மனதுளே கூறிய வண்ணம்,

"சேரனே அவர் என்றால் அதில் என்ன அட்டி?"

என்று தன்னையறியாமலேயே ஓங்கிய குரலில் உரைத்தாள். எதிரில் இருந்த தோழி தலைவியின் உரைகேட்டுத் திடுக்கிட்டாள். ஆனால் அவள் அப்போதே எல்லாம் உணர்ந்தவளானாள். உள்ளம் புணர்ந்தியாத்த உயரிய காதலுக்கு இதுதான் எல்லை என்ற வரையறை இல்லை. ஏழை

பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வில்லை. அழகு தான் வேண்டும் என்ற அவசியமும் இல்லை. நெஞ்சத்திலே மாசு மருவற்ற அன்பு நின்று நிலவிக் காதலாக மாறுமானால் அதுவே புகழாகவும், உயர்வாகவும் ஏற்கப்படும் என்பதை அத்தோழியால் அன்றுதான் அறிய முடிந்தது. அக மலர்ச்சியால் முகம் மலர்ச்சிகொள்ள அணையிலா மகிழ்ச்சி வெள்ளத்தில் அவள் நீந்தினாள்.

தலைவிக்கோ, அது காண்டலும் இன்னும் தன் தலைவனின் பண்பு நலம் உரைக்கத் தோன்றியது. காலையில் தலைவன் தன்னிடத்தில் விடைபெற்றுச் சென்ற காட்சி நினைவுக்கு வந்தது. சொல்லுகிறாள்:

'ஐந்து பணத்தினை என்னிடம் தந்தார்
அடி சாயு முன்னே வரவு மிசைந்தார்!
அந்தி வரா விட்டாற் பெண்ணே! 'இந்தா
ஆசை முத்தம்" என்று தந்து நடந்தார்"

இருவரின் ஒரு நாளையச் செலவு ஐந்து பணத்துக்குள் முடிந்து விடுகிறது. அச் செலவுத் தொகையை ஈந்துவிட்டுச் செல்கிறான். அடி சாயுமுன்னே வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டாள். அதற்கும் அவன் இசைந்து செல்கிறான். ஆனால் வண்டிக்காரப் பிழைப்பு அப்படிப்பட்டதல்லவே? முதலாளியின் விருப்பம் எவ்வாறோ, அவ்வாறுதானே அந்த வண்டிக்காரனின் விருப்பமும் இருக்கவேண்டும்? ஆகவே அவன் விருப்பம் நிறைவேறுமென்று எப்படி நிச்சயமாக உரைக்கமுடியும் ? எனவே தான்,

"அந்தி (நான்) வராவிட்டால், பெண்ணே!
இந்தா ஆசை முத்தம்"

என்று தந்துவிட்டுத் தலைவன் செல்கிறான். கவிதையை மற்றொரு முறை நினைத்துப்பாருங்கள்.

இக்கவிதை, கவியரசர் பாரதிதாசன் அவர்களால் இயற்றப்பட்டது. அரங்கியலிசை முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நடிப்பதற்கு ஏற்றது. நாடகப் பண்பு இக் கவிதையில் பெருஞ் சிறப்புடன் மிளிர்கின்றமை போற்றத்தக்கது.

'சேரனே அவன் என்றால்' என்று தலைவி பெருமிதத்துடன் கூறுகின்ற கட்டம் ஊன்றுதற்குரியதொரு பகுதியாம். சேரன் மலை நாட்டு வேந்தன். பரந்த வெளிகளில் வாழ்கின்ற மக்களைக் காட்டிலும் மலைநாட்டு மக்கள் தங்கள் உணவைப் பெரிதும் உழைத்தும், முயன்றும் அடைகிறார்கள். பொதுவாக மலைநாட்டு மக்கள் மற்ற மக்களைக் காட்டிலும் உழைப்பாளிகளாக இருக்கின்றார்கள் என்பது கண்கண்ட உண்மை! எனவே, உழைப்பாளிகளின் வேந்தனாகிய சேரனே தன் தலைவனோடு நிற்கத் தகுதியானவன் என்று எண்ணி,

"சேரனே அவர் என்றால்
அதிலென்ன அட்டி?"

என்று தலைவி கூறுகின்றமை போற்றற் பாலதாம்.

முல்லை - 2

பூக்காரி

நா. அறிவழகன்

நாட்டிலே மிகுதியாக நாம் வியாபாரத்தைக் காணலாம். சிறப்பாகப் பட்டணங்களிலே பெண்கள்தான் அதிகமாகச் செய்வார்கள் - ஏன்? - செய்கிறார்கள். கண்டாரை மயக்குந்தன்மை அவர்களுக்கே உரியது. விலைபோகாத சரக்கையுங்கூட சிரித்துப்பேசி விலையாக்கிவிடுவார்கள். அது அவர்களின் இயல்பு அல்ல, சமுதாயம் அவர்களை வைத்திருக்கும் இயல்பு அது.

தெருத் தெருவாக - வீடு வீடாகத் 'தயிரோ தயிர்' - 'பூவோ பூ' என்று கூவி விற்கும் மாதர்களும் பட்டணங்களிலே உண்டு. இவர்கள் பெரும்பாலும் ஏழ்மைக் குடிகளைச் சார்ந்தவர்களாகத்தானிருப்பார்கள். இதில் சிறப்பானவள் பூ விற்பனை செய்பவள்; பூக்காரி. இவர்களிடத்து இடறி ஆண்கள் அகப்பட்டுக் கொண்டால் மீள்வது அரிது.

'இந்தா! இது என்ன விலை?'

'முழம் காலணாவுங்க!'

'அரையணாவுக்கு மூன்று முழம் தரமுடியுமா?'

'இல்லைங்க'

'அப்போ காலணாவுக்குக் கொடு' என்ற இந்த மாதிரியான உரையாடல்களைத்தான் நாம் காணலாம். ஆனால், இதை ஒரு கவிஞனோ, ஓவியனோ கண்டால் அது புதுமையாக - அழகாக - உருவாகும். ஓவியன் அப்படியே வரைந்துவிடுவான். கவிஞன் புதுமையாக - நயமாக - இலக்கியப் பண்போடு - கவிச் சுவையோடு உருவாக்கி விடுவான். நம் கண் வேறு. கவிஞர் கண் வேறு. இதை யாரும் மறுக்க முடியாது.

பூ வாங்க வந்தான் ஒரு ஆடவன். பூவைப் பார்வையிட்டான். அவ்வளவுதான்! - பூவை இழுத்துவிட்டாள் தன் பக்கம். காதல் மலர்ந்தது. அந்த நிலையிலே அவர்களிடையே நிகழும் உரையாடல்களுங்கூட காதற் சுவை பயக்கின்றன. பயந்துதானே தீரும்.

"அம்மா! இம் முல்லை மாலை எனக்கு வேண்டும். தருகிறாயா?"

அதற்கு விடையாக அவள் அதரங்கள் நெளித்துக் கீற்றோடி விளையாடின.

'இத் தாமரை மலர் என்னவிலை?'
'என் முகத் தாமரையையே...'
'முழுதும் வேண்டாம் ஒரு இதழ்'
'தேனொழுகும் என் இதழையே...'
'அன்பே! இப் பூவின் பெயர்?'
'பூவை'

'ஓ ! பூவையா ! பூவையின் மணம் முழுதும் தேவை?' 'இந்தாருங்கள்' என்று கட்டித் தழுவி நின்றாள்.

இது பூக்காரி - பூவாங்குபவர் ஆகிய இருவர்களிடையே நிகழ்ந்த உரையாடல். பூ வாங்க வந்து பூவையின் மையலிலே விழுந்து பூவையை அடைந்து விடுகின்றான் தலைவன். ஈருடல்-ஒருயிர் ஆக ஆகிவிட்டன. இதையே நம் கவிஞர் பாரதிதாசன் அழகாக நயம்படக் கவிதையாக உருவாக்கி இருக்கிறார். பாட்டைப் பாருங்கள்:

"சேர்த்துக் கட்டிய முல்லைவேண்டும் என்றேன்-நல்ல
சேயிழை அவள் சிரிப்பு முல்லை தந்தாள்
பார்த்துப் பறித்த தாமரைப்பூத்
தீர்த்து விலைக்குக் கொடடி என்றேன்
பூத்தமுகத் தாமரையால்
புதுமை காட்டி மயக்கி நின்றாள்-சேர்த்து...
தேவையடி தாமரை இதழ்என்றேன்-அவள்
தேனொழுகும் வாயிதழ் மலர்கின்றாள்-ஒரு
பூவைக் காட்டிப் பேர்சொல் என்றேன்
பூவை 'என்பேர் பூவை' என்றாள்
ஆவல் அற்றவன் போல் நடந்தேன்
அவள் விழிதனில் அலரி கண்டேன்-சேர்த்து...
காவல் மீறிக் கடைக்கு வந்து விழுந்து - பலர்
கண்பட்டதால் வாடிய மருக்கொழுந்து
மேவாதடி என்று சொன்னேன்
வேங்கையில் ஈ மொய்க்கா தென்றாள்
தேவைக்கு மணம் வேண்டும் என்றேன்
திருமணம் என்று தழுவி நின்றாள் - சேர்த்து...

எதையும் காணும்போது நாம் ஒரு கருத்துப்படக் காண்போம். கவிஞர்கள் அப்படியே கண்டதை உளத்தே அமைத்து பிறகு அமைதியுற்ற நேரத்திலே அதைப் புதுமையொடு வெளியாக்குவார்கள். இப்பாடலும் கருத்தொடு - பண்பாடொடு-சுவையொடு-பல மலர்களின் பெயர்களைக் கொண்ட சிலேடை நயத்தொடு அமைந்திருக்கிறது.

முல்லை - 3

கட்டி வெல்லம்

முருகு. சுப்பிரமணியன்

அந்திநேரம். மந்தையாக மாடுகள் ஊருக்குள் வந்துகொண்டிருந்தன. சுண்ணாம்பிடிக்கும் பெண்கள் கூட்டத்தில் உற்சாகமாக வேலை நடந்து கொண்டிருக்கிறது. அவர்களில் ஒருத்தி, மாடுகள் திரும்பி வருவதைக் கண்டாள்; தன் மாமனும் இந்நேரம் வேலை முடிந்து திரும்பி யிருப்பான் என்று எண்ணிக் கொண்டாள். அந் நினைவிலே அவள் தோழிகளை மறந்தாள்! அவர்களுக்கிடையில் இருப்பதாகவே அவளுக்கு நினைவில்லை. அவர்களிடம் சொல்லிக்கொள்ளாமலே வீட்டுக்குப் புறப்பட்டாள். வீட்டைத் திறந்தாள்; அதற்குள் மாமனும் வந்து விட்டான். அவன் அவள் கையிலே வெல்லம் தந்தான். கன்னத்திலொரு முத்தம் தந்தான்.

“வெல்லம் இனித்ததா? என்றான் “இல்லை. கட்டிவெல்லம் கசந்தது. சொல்ல வெட்கமாயிருக்கிறது. கட்டாணி முத்தம் தந்தீர்களே-அதுதான் இனித்தது” என்று அவள் பதிலளித்தாள்.

தொட்டியிலே குளிர்ந்த நீரை நிரப்பினாள். மாமா, குளிக்கலாம் என்றாள்; உதவியாக அவன் தோளைத் தேய்த்து நின்றாள், நீராடும்போதும் உரையாடல் நிகழ்ந்தது.

“கோடையின் கொடுமை போக்குமாறு ஓடைநீர் குளிர்ந்திருக்கிறதா?” என்றாள். “இல்லை, அப்பப்பா நீர் ஏன் இப்படிக் கொதிக்கின்றது? ஆனால்.. நீ தொட்ட விடமெல்லாம் சிலிர்க்கிறது இன்னும்?” என்று அவன் பதிலளித்தான்.

வெல்லம் இனிப்புப் பொருள்! அதுமட்டுமா, மற்றப் பொருள்களில் இனிப்புண்டாக்கச் சேர்க்கப்படுவது. அதன் இயற்கை இயல்பு இனிப்பதுதான். உலகத்திலுள்ள எல்லாருக்குமே அது இனிக்கும். ஆனால் அது கசக்கிறது அவளுக்கு!

தண்ணீரின் இயல்பு குளிர்ச்சி. அதுவும் கோடை நாளில் ஓடை நீர் குளிர்ச்சியா யிருப்பதற்குக் கேட்கவா வேண்டும்? அதுவும் அந்தி நேரத்தில். அது கொதிக்கிறது அவனுக்கு.

அவனும் அவளும் இயற்கைக்கு மாறாக எண்ணுகிறார்கள்; உணர்கிறார்கள்; கூறுகிறார்கள். அவர்கள் கூற்று உலக இயல்புக்கு மாறுபட்டாலும் காதல் நெறியிலே சரி யென்றே கருதப்படும்.

அவன் வந்தவுடன் அவளிடம் தந்தவை இரண்டு. ஒன்று கட்டி வெல்லம்; மற்றொன்று கட்டாணி முத்தம். வெல்லக்கட்டி மட்டும் தந்திருந்தால் அவள் 'அது இனித்தது' என்றே இயம்பியிருப்பாள். அவனோ கட்டாணி முத்தத்தையும் கூடச் சேர்த்துக் கொடுத்தானே! இரு பொருளையும் ஒப்பி நோக்குகிறது அவள் உள்ளம். முத்தத்தின் இனிப்பை நோக்கக் கட்டிவெல்லம் கசப்பதாகவே படுகிறது அவளுக்கு! அது இயற்கைதானே.

அவள் தொட்டியில் நீரை நிரப்பினாள்; குளிக்கச் சொன்னாள். அதோடு விட்டாளில்லை. அருகே வந்து உடம்பு தேய்த்து நின்றாள். கொட்டிய நீரில் குளிக்கச் சொல்லிமட்டும் அவனை அவள் விடுத்திருந்தால் "நீர் குளிர்ந்திருந்தது' என்றே சொல்லியிருப்பான். அவளே, அவன் 'பொன்னுடல் சூழ்ந்து முன்னின்று உதவினாள்'. இரண்டையும் ஒருசேர நோக்கினான் அவன். அவள் தொடும்போது உணர்ந்த குளிர்ச்சியை நோக்க, தண்ணீர் கொதிப்பதாகவே அவனுக்குப்பட்டது. காதலனுக்கு அது இயற்கையே.

> "எண்ணும் பொழுதி லெல்லாம்-அவன் கை
> இட்டவிடத் தினிலே
> தண்ணென் றிருந் ததடி

என்று பாரதியார் கூறகிறார். நாம் மேலே பார்த்த கருத்துக்கள் கவியரசர் பாரதிதாசனின் பாடலில் காணுபவை. 'தண்ணென்றிருந்ததடி' என்று மட்டும் காதலி கூறுவதாகப் பாரதியார் கூறுகிறார். பாரதிதாசனோ கொட்டிய நீரும் கொதித்தது; அவள் தொட்ட இடம் மட்டும் சிலிர்த்தது என்கிறார்.

ஒரு பொருள் இன்ன சிறப்புடையது என்றுமட்டும் கூறுவது முதற்படி. அது இதைக் காட்டிலும் சிறந்தது என்று ஒன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது அடுத்தபடி. ஒப்பிட்ட பொருள் தன்னியல்புக்கே மாறுபட்டதாகத் தோன்றிற்று, அதன் சிறப்பை நோக்கக் கூறுவது மூன்றாவது படி. அந்த நிலையில் வைத்துத்தான் இந்தப் பாடல் எழுப்பப் பட்டுள்ளது. அதாவது ''கட்டிவெல்லமும் கசந்தது முத்தத்தின் இனிமையோடு போட்டிபோட இயலாமல்" என்று கவியரசர் கூறுகிறார். மேலும் இப்பாடலில் தலைவன் தலைவி இருவரது உள்ளமும் ஒன்றுபட்டிருப்பதும் காட்டப்படுகிறது. இருவரும் ஒரே கருத்தினராய் இருப்பது சுவைபடச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. வெல்லத்தின் கசப்பையும் முத்தத்தின் இனிமையால்தான் அவள் தாங்கிக் கொள்ளுகிறாள். அவன் கோடையின் கொடுமை, கொட்டிய நீரின் கொதிப்பு இரண்டையும் அவள் தேய்த்து நின்ற ஒன்றினாலேயே தாங்கி நின்றான் என்பதும் தெளிவு. 'எண்ணும் பொழுதிலெல்லாம் தண்ணென்

றிருந்ததாகப் பாரதியார் கூறும் கருத்தும், "தொட்டவிடத்தில் சிலிர்க்குதென்றான்" என்பதால் நமக்கு விளங்குகிறது.

இத்தகைய எண்ண எண்ண இனிக்கும் கருத்துக்களைத் தன்னுட் கொண்ட பாட்டு பின்வருகிறது. கட்டி வெல்லத்தைப் பற்றி அது கூறினாலும் படிப்பவருக்கெல்லாம் அது கட்டி வெல்லமே! காதலிக்கோ அது தலைவன் தந்த கட்டாணி முத்தம்.

மந்தையின் மாடு திரும்பையிலே - அவள்
மாமன் வரும் அந்தி நேரத்திலே
குந்தி இருந்தவள் வீடு சென்றாள் - அவள்
கூட இருந்தாரையும் மறந்தாள்
தொந்தி மறைந்திட வேட்டிகட்டி - அவன்
தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி,
இந்தா எனக் கொடுத்திட்டாண்டி - அவன்
எட்டி ஒரே முத்தம் இட்டாண்டி
கட்டி வெல்லத்தைக் கசக்குதென்றாள்-அவள்
கட்டாணி முத்தம் இனிக்குதென்றாள்
தொட்டியின் நீரில் குளிக்கச் சொல்லி - அவன்
தோளை அவள் வந்து தேய்த்து நின்றாள்
கொட்டிய நீரில் குளிர்ச்சியுண்டோ -இந்தக்
கோடைபடுத்திடும் நாளில் என்றாள்
தொட்டியின் தண்ணீர் கொதிக்குதென்றான் -அவள்
தொட்ட இடத்தில் சிலிர்க்குதென்றான்

முல்லை - 4

யார் கவிஞர்?

மு. இராசகோபாலன்

"உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால்" என்ற திருவள்ளுவர் கூற்றின்படி கவி பாடியவர் எல்லாம் கவிஞரல்லர். கவிஞர் எனில் அவர்தம் வாழ்க்கையில் நிலைபெற்ற குறிக்கோள், அவரது கவிகளில் எளிதில் பரவவல்ல அறிவிற் சிறந்த உயர்ந்த கொள்கைகள், பயன்தரு கருத்துக்கள் ஆகியவைகள் வேண்டும்.

கற்பனா சக்தியும், கவின் பெறு சொல்லணிகளும், இசைமலிந்த எதுகை மோனைகளும், உயர்வான உவமைகளும் கவியின் போக்கை ஆற்றுநீர் ஓட்டம்போல் படிக்கப் படிக்க அழகு படுத்திப் போனாலும் கற்போர் உள்ளத்தில் கருத்துக்கள் ஒன்றும் வேரூன்றாது போயின் பயன் என்ன? இத்தகைய கவிகளை ஆங்கிலப் புலவர் மெதியோ ஆர்னல்ட் (Mathew Arnold) பொருளற்ற பொலிவு (Style without substance) என்றழைக்கிறார்.

சிற்சில கவிஞர் ஒன்றை நினைத்துக் கவி புனையின் நினைத்தவாறு ஆயினும் ஆகும். இல்லையேல் மற்றொன்றாயினும் ஆகும். இத்தகை யோரைக் கண்டு,

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்ற வெண்பாவைப் பாடுவது அல்லாது வேறு என்ன செய்வது?

இழுக்கொன்றுமிலாது கழுத்தை அழுத்தும் யமகம், அந்தாதி, நாகபந்தம் முதலிய கோளாறுகள் நீக்கி, உயர்ந்த கருத்துக்கள், பளிங்கு போன்ற சொற்கள், இனிய ஓசை, மதுரச் சுவை, கள்ளமற்ற உள்ளொளி, இயற்கையின் உவமைகள் நிறைந்து-உயர்ந்து மிளிர்வது நமது பாரதி தாசன் அவர்களின் தமிழ்க் கவிகள். இது என் தாய்நாடு, இவர் என் தோழர், இது என் தாய்மொழி என மனங்கொள உரைப்போர், மன்னுயிர்யாவும் நன்னிலை வாழ்வுறப் பாடுவோர், 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவிலா ஊக்கம் உடையான் உழை" என்னும் பொன்மொழியை

உளங்கொள எடுத்துரைப்போர், உயரிய ஒழுக்கமும், வண்மையும், பொறையும், வளர்போர் அன்பும், ஒற்றுமை-உணர்ச்சி-உலகியல் அறிவும், பெற்றிமை-வீரம்-பெருமை உரிமை ஆகியவை பிறவும் அடைந்து இவ்வுலகில் தூய இன்பம் துய்க்கச் செய்வோர் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆவார்கள்.

நான் தமிழன். என் கொள்கை "நாயினுங் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதை நான் கண்டும், ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி உழைத்திட நான் தவறேன்", "தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என் நாடு தமிழ் நாடு அது "கோடுயர் வேங்கடக் குன்ற முதல் குமரி மட்டும் தமிழ்க் கோலங்கொண்டது" என்று துணிந்து மொழிகிறான் தமிழன் இந்நாளில். காரணம் ஆண்மை மிக்க நம் கவிஞர் பாரதிதாசனின் மாண்பு மிக்க கவிகளைக் கற்றதனால்.

அன்னார்பால் தமிழன் என்றென்றும் நன்றி மறவாதிருப்பானாக!

முல்லை - 6

பள்ளிப் பிள்ளைகள்

மு. அண்ணாமலை

மாலை நேரம் கவிஞனுக்கு இன்பமான பொழுது! அவன் தனியாகச் செல்வான். தனியாகத் திரிவான். இயற்கையன்னையுடன் தனிமையாகக் கூடிக் குலவுவதிலே அவனுக்கு அவ்வளவு விருப்பம்! இயற்கையன்னையின் மினுமினுப்புள்ள மேனி. அதை அணைக்க ஆசைகொள்ளும் அவன் உள்ளம். அவன் உள்ளத்து வெற்றியிலே கவிதையன்னை உருக்கொள்ளுதல் இயல்பு.

ஒருநாள் கவிஞன் வீட்டைவிட்டு வழக்கம்போல் புறப்பட்டான். ஏதேதோ சிந்தனை. அமைதியாக நடந்து கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் அப்பொழுதுதான் விட்டார்கள். சிறு பிள்ளைகள் துள்ளிக் குதித்துக்கொண்டு ஆரவாரமாக வீட்டை நோக்கிச் சென்றனர். வீதியெங்கும் ஒரே கலகலப்பு. கவிஞன் அவர்களைக் கூர்மையாகக் கவனித்தான். அந்தச் சிறு பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் விட்டதிலே, அடடா! எவ்வளவு மகிழ்ச்சி! அளவு கடந்தது, என்று எண்ணிக் கொண்டான். இதற்கு அது உவமை; அதற்கு இது உவமை என்று ஒன்றை யொன்று பிணைத்து ஒப்பிட்டுக் கூறுவதிலே சிறிதும் சலிப்படையாத அவன் உள்ளம், அந்தப் பிள்ளைகளின் அளவிலா மகிழ்ச்சியை எண்ணி எண்ணி வியந்துகொண்டே வந்தது.

அவனும் பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறான்; தாய் தந்தையர்களின் உறுத்தலுக்குப் பயந்து! அப்பொழுது அவன் ஆசிரியர், பள்ளிக்கூடம் முதலியவைகளைப்பற்றிக் கற்பனைசெய்து கொண்டு பார்ப்பது வழக்கம். ஆசிரியர்தான் அரசர். அவர் வகுப்புப் பிள்ளைகள்தான் குடிமக்கள். தலைமை யாசிரியர் இருக்கிறாரே, அவர் தான் மன்னாதி மன்னன்- அரசர்தம் குடிகளுக்கு உரிமை எள்ளளவும் கொடுப்பதில்லை; கொடுக்க நினைப்பதுவுமில்லை. பிள்ளைகள் 'எழுந்திரு' என்றால் எழுந்திருக்க வேண்டும்; 'உட்கார்' என்றால் உட்காரவேண்டும். தண்ணீர் குடித்துவிட்டு வர வேண்டுமென்றாலும் ஆசிரியரின் உரிமை வேண்டும். தவறிக் கேட்காமல் போய்விட்டால் அடக்குமுறை 'அந்த' அரசியலிலே தோன்றிவிடுதல் மிக இயல்பு. அந்நாட்டின் அடக்குமுறைக் கருவி ஆசிரிய அரசரின் கைப் பிரம்பு. இப்படியெல்லாம் அவன் எண்ணியதோடு

மட்டும் நின்றதில்லை. சில சமயம் வாய்விட்டுக் கூறியுமிருக்கிறான். இதற்காக அவன் பெற்ற தண்டனைகள் கணக்கில்லை. இம்மாதிரிக் கருத்துக்களைப் பேச்சுரிமை இல்லாத அரசியலில் வெளியிடுவது தவறுதானே. வெளியிட்டதின் பயன் ‘தறுதலை’ என்ற பட்டத்தை அடைந்ததாகத்தான் இருக்கமுடியும்!

அவன் கருத்தை இன்று அந்தக் குழந்தைகளின் ஆரவாரம் அறைகூவிப் பறைசாற்றுகிறது. மேலும் நடந்துகொண்டிருந்தான். பிள்ளைகளைப் பின்பற்றியவாறே அவன் கால்கள் சென்றன. கவிதை அவன் உள்ளத்திலே உருவாகிக்கொண்டு இருந்தது. இதோ அவன் உதடுகள் அசைகின்றன. ஆம் கவிதைதான் வெளிவருகிறது:

குழந்தைகள் பள்ளி விட்டு-
வந்தார்கள்; குருவிக் கூட்டம்
இழந்தநல் லுரிமை தன்னை
-எய்தியே மகிழ்வ தைப்போல்!

குருவிகளைக் கூட்டமாகச் சிறை படுத்திவிட்டான் வேடுவன். அவைகள் தன்னுரிமை இழந்து தவிக்கின்றன. கண்டான் வேடுவன் கருணைக் கண்களால்! கொண்டான் இரக்கம்! கொடுத்தான் உரிமை! எங்கே! இப்பொழுது நினைத்துப் பாருங்கள். அந்தக் குருவிக் கூட்டம் எப்படி மகிழ்ந்திருக்கும் என்று. ஒருவாறு ஊகித்துக் கொண்டீர்களா? அதே மகிழ் நிலையைத்தான், பிள்ளைகள் பள்ளிவிட்டு வந்ததிற்குப் பொருத்தமான உவமையாகக் கொடுக்கின்றான். அதுமட்டுமா? பள்ளிக்கூடம் ஒரு சிறைக் கூடம் என்று சொல்லாமல் சொல்லி விட்டானே. தன் பழைய வஞ்சத்தை ஒரே அடியில் சமயங் கிடைத்தபோது சாதித்துக் கொண்டான். தெரியாமலா சொல்லுகிறார்கள்? கவிஞர்களைப் பொல்லாதவர்கள் என்று.

மேலே செல்கிறான். குழந்தைகள் வீட்டிற்குச் செல்கின்றன. தாய்மார்கள் வரவேற்கின்றனர். நாள் முழுதும் பிரிந்திருந்து மாலையிலே ஆவலோடு வருகின்ற குழந்தைகளை வரவேற்கின்ற தாயின் மேம்பாடு காண்கின்றான் கவிஞன். காலையில் அந்தத் தாய் தன் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிய காட்சியையும் பார்த்திருந்தான். தன் இரண்டு குழந்தைகளுக்கும் தூய்மையான உடையணிவித்து, புன்னை இலைபோல் புதையடிச் செருப்புக்களைக் காலிற் செருகி, கையிற் குடைதந்து, தானும் தெருவரை கடந்து ‘செல்க’ எனப் பள்ளிக்கு அனுப்புகின்றாள். உடனே அவள் வீட்டுக்குள் போய்விடவில்லை. தன் குழந்தைகள் நடப்பதைக் கண்டு சிறிதுநேரம் மகிழ்ந்தவாறே நிற்கின்றாள். அதைத்தான் கவிஞன்,

பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும்
பிள்ளைகள் பின்னழகு வெள்ளம் பருகி

என்று குறிப்பிடுகின்றான். தள்ளாடி நடந்தன பிள்ளைகள். அதைக் காணுகின்றாள் தாய். அதிலே ஓர் இன்பத்தைப் பருகுகின்றாள். தாய்மை

உள்ளம் உண்மையிலே மிக உயர்ந்தது; ஒப்புயர்வற்றது. தாய்க்கும் சேய்க்கும் உள்ள அன்பின் பிணைப்பிற்கு அது ஓர் எடுத்துக்காட்டாகும். கவிஞன் இப்பொழுது அதே தாய் வரவேற்கும் காட்சியையும் காணுகின்றான். அப்படியே அதில் திளைத்துப்போய் விடுகின்றான்.

ஆற்று வெள்ளம் கரைபுரண்டு வருகிறது. இத்துணை நாட்களும் ஆறு பெருக்கற்று வற்றிவரண்டு கிடந்ததாகவே தெரியவில்லை. புது வெள்ளத்தைக் கண்டவுடன் உழவர்கள் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்தனர். தாங்கள் இத்துணைநாள் நீரின்றி இடர்ப்பாடுற்றமையும் எண்ணிலர். விரைந்துவந்து வாய்க்காலைச் செப்பனிட்டு வரவேற்றுத் தத்தம் நிலத்திற்குக் கொண்டு செல்கின்றனர். இந்தக் காட்சியை தாய் குழந்தைகளை வரவேற்ற நிலைக்கு ஒப்பிட்டுப் பார்க்கிறது கவிஞன் உள்ளம். மிகப் பொருத்தம்!

வழிந்தோடும் புதுவெள் ளத்தை
வரவேற்கும் உழவ ரைப்போல்
எழுந்தோடி மக்கள் தம்மை
ஏந்தினாள் இருகை யாலும்!

இப்பாடல் கவியரசர் பாரதிதாசன் பாடிய 'குடும்ப விளக்கு' என்னும் கவிதை ஓவியத்திலே காணக் கிடப்பதாம். 'எழுந்தோடி ஏந்தினாள்' என்பதனால் தாய் தம் சிறார்களை வரவேற்பதில் கொண்டிருந்த மகிழ்ச்சியும், விரைவும், தாய்க்கும் சேய்க்கும் இன்னதென உரைக்க வொண்ணா அன்பும் தெள்ளிய முறையிலே விளக்கப்பட்டது.. இது சிந்திப்பார் உளத்திற்கு ஓர் செவ்விய விருந்தாம்.

முல்லை - 6

காதற் சுவை

மெ. சுந்தரம்

பிற மொழிகளினும் தமிழ்மொழி பீடுற்று விளங்குவது. அதனிடைப் பிறங்கும் பொருள் இலக்கணம் பற்றியே என்பது உலகறிந்த உண்மை. பழந்தமிழ் மாந்தர் வளம் மிகுந்த வாழ்க்கை முறைகளை அகநூல்கள் எடுத்துரைக்கும். தலைவன் தலைவியராய் மனைவாழ்வு மேற்கொண்டு சிறத்தலை அகம் நுதலுங்காலை, அவ் அறத்தமிழர் மறச் சிறப்பை புறம் புலப்படுத்தும். பழந்தமிழ் அகப்பொருட் செய்யுட்கள் இக்காலத் துள்ளார்க்கு விந்தை மிகுந்து தோன்றுவதோடு அல்லாமல் சிந்தையையும் கிளர்விப்பதாகும். எளிதிற் படித்து இன்புறும் வண்ணம் யாக்கப் பெறவில்லை எனுங் குற்றம் சுமத்தப்பெற்று வெளிப்போ தருதற்கு நற்றவம் உஞற்றுங்காலை, அவை தம்மை, உலகோர் இன்புறும் வண்ணம் எளிய - இனிய சுவை தரு பாக்கள் சுவையிலாவான் இயன்ற அகம் நுதலும் மிகு புகழ்ப் பனுவல் ஒன்றைக் "காதல் நினைவுகள்" எனும் பெயர்சூட்டித் தமிழகத்திற்கு ஈந்து சிறப்புறும் செந்தமிழ்க் கவிஞர் பாரதிதாசனார்க்குத் தமிழ் நாட்டார் என்றென்றும் நன்றி செலுத்துதற்கு உரியர். அந்நூலினின்றும் ஒரு சில காண்பாம்.

"காதல் நினைவுகள்" எனும் இந்நூல் காதற்சுவை கெழும யாத்த பாக்களான் இயன்று நடப்பது. பலதுறைச் செய்யுள்களுக்கும் உறைவிடமாய் இலங்கும் இந்நூல், காதற் கடிதங்களையும் பெற்றுக் கவினுறுகின்றது. தலைவன் தலைவியர் கடிதங்கள், உளத்தெழு உண்மைக் காதலையும், அது காழ்ப்பேறியக்கால் உளதாகும் கட்டுக்கடங்கா உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகின்றன.

நெடிதுநாள் காதலியைப் பிரிந்துறையும் தலைமகன் ஆற்றாமைமிக்கு, அவளுக்கு ஒரு திருமுகம் விடுக்கின்றான்.

"மயிலே,
உன் உடலான மலர்மாலை
பிரிந்த தென் மார்பகந்தான்.
ஆதலின் என் ஐம்பொறிக்கும் செயலில்லை;
மீதமுள்ள ஆவி ஒன்றே

அவதியினாற் விறுகூண்டிற் பெரும்பறவை
ஆயிற்றே! "அன்பு செய்தோன்
சாதல் அடைந்தான்" என்னும் ஓர் இலக்கியத்தை
உலகுக்குத் தந்திடாதே!
சடுதியில்வா! பறந்துவா! தகதகென
முகம் காட்டும் தையலாளே!"

என்பது காதற் கடிதத்தில் பொறிக்கப்பெற்ற கவிகளில் ஒன்று.

இதன்கண், முதல் மூன்றடிகள், "உன் உடலான... ஐம்பொறிக்கும் செயலில்லை" என்பன தலைவியின் பிரிவால் தலைவன் தன் வயமிழந்த நிலையைப் புலப்படுத்துகின்றான். அடுத்துவரும் "மீதமுள்ள ஆவி ஒன்றே... பெரும் பறவை ஆயிற்றே" என்னும் அடிகள், தலைவன் அதுகாரணமாக, முடிந்த துன்பத்தின் எல்லை நின்று ஒடிந்த உள்ளத்தனாய் உரைத்தலைக் கூறும். இடையிநின்ற "அன்புசெய்தோன்.. உலகுக்குத் தந்திடாதே" என்பதுகாறும் வரும் அடிகள் காதல் ஒழுக்கத்திற்கு ஏதம் வாராமைப் போற்றும் தீதுதீர் தலைவன் திறமையை அறையும். இறுதியில் நிற்கும் "சடுதியில் வா! .. தையலாளே!" எனும் இரண்டடிகளும் தலைவனின் வேட்கை மிகுதியை விளக்கும்.

பெண் மயிலைப் பிரிந்த அண்ணல். தன் நெடிதுநிகழ் ஒழுக்கம் நினைந்து, பின்னர் அது இடையீடுபட்ட துணருங்காலை, நிலைகுலையப் பெறுதலான். பொறி வயமிலவாதல் இயற்கையே நிகழ்தொன்று. பிரிந்த நிலையில் எய்தும் கையறனில் முதற்கண் நிகழ்வது வயமிழத்தலாகலின், இதனைமுதற் கண் வைத்தார். வயமிழத்தல், வண்மை நிறைந்த அவர் தம் தண்ணிய காதலை விளக்கும்; வயமிழந்து, பின்னர் பாங்கனால் தெற்றப் பெற்ற வள்ளியோன் புலம்புதற்குரியன், தன் நிலையை நினைந்து, இதனால் ஆற்றாமை குறைவுபடுமாம். ஆதலான் இதனை இரண்டாவதாக அமைத்தார். காமநோய் நன்கெழுந்து நனிகாழ்க் கொள்வதாயின், அக்கால், மாவென்றுரைத்து மடலேறுவர் மன்றுதோறும், பூவென்று எருக்கின் இணர் சூடுவர் புன்மைகொண்டு. இத்தலைவன் காமம் முற்றியவிடத்துத் தலைவியின் பால் வேண்டுகோள் விடுத்துத் தணிக்க முயல்கின்றான்; மடல் ஏறினானல்லள். 'காதல் காரணமாகத் தலைவன் விந்தொழிதல் அகப்பொருளுக்கு இழுக்குப் பயப்பது இவ்வழக்கு தமிழ் ஒழுக்கத்திற்கு ஒவ்வாது; ஏதம் தருதல் ஒரு தலையாய் ஒழிப்பாய்! மாதே!' என்பான், 'ஓர் இலக்கியத்தை உலகிற்குத் தந்திடாதே' என்றான். கற்றறி பாங்கனால், கற்றைக் குரல்பாற் புலம்புதல் ஒழிந்த தலைவன் 'இலக்கியம் ஈயாதே" என்பதால் விரைவில் வந்தணைதல் விளக்கி, பருவரற் பரவை புக்க தன் நெஞ்சினை எடுத்து நிறுத்துகின்றான் ஆகலின், உளத்தொடு கிளத்தலில் பின், இது வைக்கப் பெறுவதாயிற்று. 'உலகிற்கு இலக்கியம் தராதிருக்க வேண்டின், தையலே! என் மையல் அகற்ற ஒல்லையில் என் எல்லை வா' என்பது தேற்றும் "சடுதியில் வா! பறந்துவா!" என்பவைகளை, நிறுத்திய நெஞ்சிற்கு விருப்பம் மிக்குஎழ விளம்புகின்றான் ஆகலின் இறுதியிற் பெய்தார். 'சடுதியில் வா!' என்றே

ஒழியாது, 'பறந்து வா!' என்று மிகுத்துக் கூறியதனால், தலைவனின் விஞ்சிய வேட்கைத் திறம் புலப்பட்டவாறாம்.

துன்பத்தின் முற்றிய எல்லை நின்று, தன்நிலை கிளக்கும் தலைவன், தன் நிலைமைக்கு எடுத்தாளும் உவமை, கற்றோர்க்குக் கழிபேருவகை பயப்பதாகும். அவ்வுவமை, மீதமுள்ள ஆவி ஒன்றே, 'அவதியினாற் சிறுகூண்டிற் பெரும்பறவை' ஆயிற்றே' என்பதாகும். இதனொடு ஒக்கும் குறுந்தொகை அடிகளையும் ஈண்டுக் காண்போம்.

தமிழின் பொருள் வகைகளாகிய அகம், புறம் என்னும் இரண்டனுள், அகம் கூறும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை, கடைச்சங்க காலத்தது.

இதன் கண்,
"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி!
யாரஃ தறிந்திசி னோரே. சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

என்னும் பாட்டு தலைவியினது தாங்கற்கரிய காமத்தைத் தலைவன் பாற் புலப்படுத்தித் தலைவியை விரைந்து வரைந்துகொள்ள வேண்டும் எனத் தோழி கூறுவதாக அமைந்துள்ளது. இதில் தலைவியினது காமம் அவளால் தாங்குதற்கு அரியது என்பது குறிப்பாள், 'சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கு' என்னும் உவமையை எடுத்ததாளுகிறாள். பாதுகாப்பு இலதாகித் தன்னை தாங்குதற்குரிய கொம்பும் சிறியதாகித் தானும் பெரியதாய் இருக்கும் பழம், கனிந்து கொம்பினின்று விழும். அன்றி, பிறரால் கொள்ளவும்படும். அதுபோலத் தன்னை வேற்று வரைவினின்றும் பாதுகாப்பார் இளாகி, உயிரும் சிறியனாகிய இவளிடத்துக் காமம் பின்னும் கனியின், இவள் உயிர் விடுதலும் நேரும். அன்றிப் பிறர் வரைந்து கொள்ளவும் முயல்வர் என்று உவமையை விரித்துக் கொள்ளல் வேண்டும்.

இங்கே எடுத்தாண்டிருக்கும் 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு' என்பதனை நிகர்ப்பதே, 'காதல் நினைவில்' வரும் 'சிறு கூண்டிற் பெரும்பறவை ஆயிற்றே' எனும் உவமையும்.

சிறிய கொம்பிலே பெரியபழம் தூங்குகின்றது; அது போல, சிறிய கூண்டிற் பெரும்பறவை அவதியுறுகின்றது. பறவை உருவிற் பெரியது; அடைக்கப்பட்டிருக்கும் கூண்டோ மிகச்சிறியது. அளவிற்கேற்ற கூண்டின்மையால் வரும் உடல் வருத்தமும், அடைபட்டுக்கிடத்தலால் எய்தலாகும் உளவருத்தமும் இதனின்றும் பெறப்பட்டன. தலைவன் உயிர், மிகச் சிறியது; ஆனால் தலைவியின்பாற் கொண்ட காமமோ, மிகப் பெரியது. சிறு கூண்டினை நிகர்த்தது உயிர், பெரும் பறவையினை நிகர்த்தது, கன்னியின்மீது கொண்ட காதல். உயிரின் எல்லைக்குள் காமம் நில்லாது ஒழிந்ததுபோல், பறவையின் உருவிற்கு ஏற்பக் கூண்டு

அமையாது ஒழிந்தது. கூண்டினுள் அகப்பட்ட புள்ளின் நிலையை நிகர்ப்பதே ஆண்டகை உள்ளத்தின் துடிப்பும்; பறந்துசெல்லும் வேட்கை மிகமிக, பின் அது கைகூடாமையால், இறந்துபடுதலும் செயும், பறவை. பாவை பாற் போக்கிய உள்ளத்தை மீட்கமுடியாது, கையறவு எய்திய ஐயன் ஆற்றாமையின் எல்லைகண்டு அழுங்குவனாயின், ஏதம் பயக்கும் வீதலும் எய்துவன். களியினைத் தாங்க இயலாது கோடு முறிதல்போலக் காமத்தைத் தாங்க இயலாது உயிர் பறிந்துபோதும், சிறிய பொருளாகிய உயிர் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதோ, தன்னிலும் பெரிய ஒரு பொருளை-காமத்தை. இதனாற் பயனோ தனக்கே இறுதி வருவது. கூண்டோ நனி சிறியது; உள்ளிடோநனி பெரிது. கூண்டு, சிறிது பெரிதாயினும் எய்தும் துன்பம் இரண்டினும் ஒன்றே என்றாலும் ஏற்புடைத்தாம்.

காமம் இத்துணைப் பெரிதென்பதனைப் பிற இடங்களிலும் காணலாம். ‘வான்றோய் வற்றே காமம்’ காதறானுங் கடலினும் பெரிதே’ “பெரிதே காமமென் உயிர்தவச் சிறிதே’ என்று சங்க நூல்களும் சாற்றும்.

இங்ஙன், நங்கை காரணமாக நனிநீடு உழந்த நம்பி, நங்கையின் திருமுகங் கண்டு தேறும்; நற்றவம் நிறை பாங்கனின்நல்லுரை கொண்டு, மெல்லிய நினைந்து ஆறும்; பின்னர் வெல்லுஞ் சொல்லும், கொல்லும் கண்ணும் உடைய தலைவியைக் கண்டவழி இன்பமெய்தி அவள்பால் அன்பு ஊறும் இந்நனி நாகரிகராய் விளங்கிய நந்தமிழ்ச் செல்வர்களின் இன்ப வாழ்வு ! இதற்கிலை ஈடு!

இங்ஙனமெல்லாம், காதற்சுவை கனிந்துருகக் ‘காதல் நினை’வினைத் தமிழக மேற்கொண்ட தணவாக் காதலால், தமிழுக்கீந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், பாரறியப் பரந்த பைந்தமிழ்ச் செல்வம்! தாம் உளதாங் காலத்து நாட்டு மக்கள் உணர்ச்சியைப் பாட்டுமொழியில் உருவாக்கும் தமிழக’ “ஷெல்லி’! அகப் பொருட்சுவை மலியப் பைந்தமிழ் அன்னைக்குப் பாமாலைசூட்டும் சங்கப் புலவன்! வாழ்க அவன் கண்ணி!

முல்லை - 5

புரட்சிக் கவிஞர் இசைப்போட்டி

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனவர்கள் தமிழ் நாட்டின் தனிப்பெருஞ் செல்வம். மொழி, கலை, வாழ்க்கை, ஆட்சி ஆகிய அனைத்திலும் பிறவற்றிற்கு அடிமையாகித் தம் நிலைமறந்து வாழும் தமிழர், இன்று புரட்சிக் கவிஞரையும் மறந்து வாழுகின்றனர். ஆயினும் கவியரசர் அவர்களின் புரட்சி மணக்கும் பொன்னுரை மலிந்த புத்துயிர் தருங் கருத்துக்கள் தமிழர் மனத்தில் வேரூன்றிப் பதிய வேண்டுமென விழைகின்றோம். தமிழிசையுணர்ச்சி வழியும் இந்நாளில் அவ்விழைவினாலேயே எங்கள் மன்றத்தின் சார்பாக இப்போட்டியினை ஏற்படுத்த முன்வந்தோம்.

இப்போட்டி 24-2-46ம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை மணி 4 அளவில், சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளி நடுமன்றத்தின்கண் நிகழும். தமிழறிவும் இசையறிவும் மிக்க மூவர் தலைமையேற்று நடத்துவர். இவர்களின் தீர்ப்பே முடிவானதாகும். சிறுவர் சிறுமியரும் இப்போட்டியிற் கலந்துகொள்ளுதல் தக்கதாதலால், இப் போட்டி இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று முன்னணி; மற்றொன்று பின்னணி. இப் போட்டிகளில் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி எவரும் கலந்து கொள்ளலாம். முன்னணிப் போட்டி முதற் பரிசு ரூ20; இரண்டாவது பரிசு ரூ.10 பின்னணிப் போட்டி முதற்பரிசு ரூ10; இரண்டாவது பரிசு ரூ5. பெரும் உற்சாகத்தோடு தமிழையும் கலையையும் பெருமைப் படுத்தும் வகையில் பலர் கலந்து கொள்வார்கள். பிற விபரம் அறிய விரும்புவோர்: திருநா. மு. மாணிக்கம், தமிழாசிரியர், சிதம்பரம். போட்டி நடத்துவோர்: ஆடூர். ஆர். நடராசன் இளங்கோ மன்றத் தலைவர், சிதம்பரம்.

முல்லை - 2

புதுமைப்பித்தன்

கட்டுரைகள்

மீ. ப. சோமு கவிதைகள்

மதிப்புரை

இலக்கிய மரபு

வக்காலத்து

சிறுகதை

கதைகள்

புரட்சி மனப்பான்மை

விபரீத ஆசை

அவதாரம்

(பலர் கடிதம் எழுதுகிறார்கள். நீண்ட கடிதங்களே எழுதுகிறார்கள். ஆனால் சிலருடைய கடிதங்கள்தாம் இலக்கியமாக அமைகின்றன. அத்தகைய அருமையான கடிதம் இது; கவிதை என்றால் 'ஆஹா' என்று கூச்சலிடுவது மட்டுந்தான் என்ற அபிப்பிராயம் பலரிடையே இருந்து வருகிறது. இலக்கியத்தில், முக்கியமாக, கவிதையில் அமைதியும் உருவமும் அற்புதமான அம்சமாகும். 'இளவேனில்' என்னும் கவிதை நூலைக் குறித்து 'சொ. வி.' எழுதிய இக்கடிதத்தை அனுமதி பெற்று மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம்.)

170, ராயப்பேட்டை ஹைரோடு, *3-7-46*
ராயப்பேட்டை

அருமைச் சோமையாவுக்கு,

இன்று மத்தியானந்தான் இளவேனில் பருவத்தைக் கூட பார்ஸல் செய்யக்கூடிய கெட்டிக்காரர்கள் திருச்சியில் உண்டு என்பதை அறிந்தேன். Surprise Packet கிடைத்ததும், மத்யானம் முழுவதும் ஸினிமாத் தொழிலுக்கு கல்தா கொடுத்துவிட்டு உட்கார்ந்து விட்டேன். ''வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்'' என்ற வரியை நினைப்பூட்டும் படியான தலைப்பு. அந்தப் பாட்டின் இனப் பிரிவுகளின் விரிவான காட்சிகள் இந்தச் சிறு கனவுக்குவியல் என்று முதல் வாசிப்பில் பட்டது. 'என்ன ஸோமு ஸார், பாட்டு நேர்த்தியாக இருக்கே' என்ற ரகமான அபிப்பிராயம் உன்னை' insult செய்வதற்கு ஒரு வழி. அந்த வழியை விட்டு ருத்திரசன்மனாக உட்கார்ந்து கொண்டு பார்ப்போம் என்றால்–

வண்ண மதுக்கிண்ணம்
வார்த்த கவிதையெலாம்
எண்ணக் குகையினிலே
எதிரொலித்து விம்முதடா

என்றுதான் சொல்ல வேண்டும். வசனத்தில் அமையவில்லை.

முடியாதது என நான் நினைத்திருந்த ஒரு கலவை இது. பொதியை, மதுக்கிண்ணம், சிக்கந்தர், சின்ன குயிலி, மாரணம், மன்மதன், எத்தனை எத்தனை படங்கள்.

"In Xandadu did kublaikhan"

என்று தொடங்கும் அடிகளை நினைத்துப் பார்.

Caverns measureless to Men...
Where Damsel with a dulcimer...

எண்ணக் கனவுகளை வாரிச் சொரியும் பாட்டுக் குவியல் இது.

பாட்டுகள் முச்சூடும் ஒரே அமைதியில் மனசின் ஆழத்தில் உள்ள ஏக்கத்தின் எதிரொலியாக அமைந்திருப்பது, நினைவின் கோடியிலே மறைந்தும் மறையாது நின்றிருக்கும் துயரத்தின் பிரதிப்பலிப்பாகத் தென்படுகிறது.

உனக்கு இந்த மாதிரி ஏக்கம் வரக் காரணம் என்ன? வெறும் Artist's Pose என்று சொல்லுவார்களே அதுவா என யோசித்தேன். அதுவல்ல; சூழ நிற்கும் வரட்டுத் தவளைக் கவிதைகள் மனசை நிலைதடுமாறச் செய்வது இயல்புதானே.

இது நன்றாக இருக்கிறது என ஒன்றை மட்டிலும் சுட்டுக் காட்ட எனக்குத் தெரியவில்லை. பொருளைக் கரைக்கும் பொதியைக்கும் இழுத்துச் செல்லும் இந்தப் பாட்டுகள் கவிதையிலே ஒரு புதிய துறையை இயற்றுகின்றன. இதுவரை சரிவர புரிந்து கொள்ளாமல் பாரதியின் எதிரொலிச்சான் கோவில்களாக, அல்லது Frustration Complexஐ பரிபூர்ணமாக கசப்புக் குன்றாமல் சொல்லக்கூடிய திறனில்லாத 'கவிஞர்' கூட்டங்கள், யாப்பு என்ற வாணலி (இருப்புச் சட்டியில்) வார்த்தைகளைப் போட்டு வறுத்து கருக்கி எடுத்து வைப்பதைத்தான் பார்த்திருக்கிறேன். ஒரு Personalityஐ Reveal செய்யும் பாட்டுகள் கோவையாக ஒரு புதிய துறையை இலக்கியத்தில் ஏற்படுத்துகிறது என்றால் அது நம் அதிர்ஷ்டந்தான். தமிழ் வழக்கொழிந்த மொழி யாகிவிடுமோ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுத விரும்பிய எனக்கு கொடி துளிர்க்கிறது என்பதைக் காண உற்சாக மிருக்கத்தானே செய்யும். அதற்காக மன்னிப்பு.

நிற்க, கைலங்கிரியில் நடந்த கதையை என்ன அழகாக ஜோடித்து விட்டாய். சிதம்பரச் செய்யுட் கோலையிலே பிரபஞ்ச உற்பவமும் ஒடுக்கமும், ஈசன் - பார்வதி விளையாட்டாக, அம்மை சிற்றில் கட்டுவதும் ஈசன் அழிப்பதுமாக ஒரு கற்பனை. அது ஒரே பாட்டு. ஆனால் இங்கே நிஜமான அநாயசமான விளையாட்டு. குழந்தைகள் விளையாட்டல்ல. காதல் விளையாட்டு. கண்ணைப் பொத்தவும் காரிருள் படர்ந்த கதை பயமாக பிறகு விளையாட்டாக அமைந்திருப்பது நயமாக இருக்கிறது.

இந்தப் பாட்டுகள் எல்லாவற்றிலும் அமைந்த ஏக்கமும் அழகும் ஒரு விசித்திரமான கலவை. தமிழுக்குப் புதிது. எந்த விதத்தில் என்றால், அழகோடு ஆனந்தம் வரும். இருளோடு துயரத்தின் சாகை வரும்; தனித்தனியாக அமைவதைவிட்டு, இரண்டும் தாமரை இலையில் உருளும் தண்ணீர் போல அழகை வாரி வீசுகிறது.

இப்படிக்கு உனது
சொ. வி.

முல்லை - 8

மதிப்புரை

புதுமைப்பித்தன்

மதிப்பு என்ற வார்த்தைக்குப் பெருமானம் அல்லது தகுதி என்ற பொருள் உண்டு. அதனடியாக உயர்வான தகுதிக்கு உரிய என்ற பொருளும் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்தின் மூலம் இதைச் சற்று தெளிவாக்கிக் கொள்ளுவோம் 'இந்த வீட்டுக்கு என்ன மதிப்புப்போடுகிறாய்?" 'இன்றைக்கு ராமன் வந்திருந்தபோது மதிப்பாக நடந்துகொண்டான்" இவ்விரண்டு வாக்கியங்களிலும் மதிப்பு தனித் தனி தொனிப்புப் பெறுவது போல, புத்தக உலகத்திலும் ஒரு பொருள் கொடுக்கப்படுகிறது. மதிப்பு என்ற வார்த்தை மதிப்புரை என்ற தொடலில் அமைந்து பத்திரிகைகளில் புதிது புதிதாக வெளிவரும் புத்தகங்களை வாசித்து பிறகு இவற்றைக் குறிப்பிட்டு இவற்றினடியில் எழுதப்படும் சில வாக்கியங்களுக்குத் தலைப்பாகக் கொடுக்கப்படுகிறது, புத்தகத்தைப் பொறுத்தவரை பத்திரிகைகளைத் தவிர அதனுடன் சம்பந்தப் படுகிறவர் மூவர். அவர்கள் முறையே, அதை எழுதுகிறவர், அச்சடிப்பவர், வாசிப்பவர் என்ற விலாசத்துக்குள் அடங்குகிறவர்களாகும். புத்தகத்தை எழுதுகிறவருக்கு மதிப்புரை என்றால் அதன் தகுதியை நிர்ணயமாகச் சொல்லும் ஒரு அங்கமாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கும். புத்தகத்தை அச்சடிப்பவர் அது அப்புத்கத்தை வாசிக்கிறவன் என்றிருக்கிறானே அந்த ஜந்து தனது பார்வையைத் திறக்கும் படி செய்விக்கும் சாதனமாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார். மூன்றாவதான வாசகன் இருக்கிறானே, அவன் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பு; அப்புத்தகத்தைப் பற்றி எழுதப் படும் வாக்கியங்கள் வாசிக்கத் தகுந்தவையாக இருக்கவேண்டும் என எதிர்ப்பார்ப்பது இயல்பு; ஆனால் முக்கியமாக அவன் எதிர்ப்பார்ப்பது ஒன்றுதான்; மதிப்புரை எழுதியவன் அப்புத்தகத்தைப் பற்றித் தான் கண்டுள்ள அபிப்பிராயத்தை வகிக்கிறானா, அல்லவா என்பதுதான். சார்பான அபிப்பிராயம் எழுதியவனாக இருந்தால், மதிப்புரை எழுதியவன் புலி; சிங்கக் குட்டி என்று முதலில் தட்டிக்கொடுப்பான்; இல்லாவிட்டால், "அவனுக்கென்னடா தெரியும்? என்னமோ பேத்தறான்" என்று சொல்லி விட்டு விலகுவான். பத்திரிகையில் தொடர்பு கொண்டு புத்தகத்தைப் பற்றி எழுதுகிறவனுக்கோ, அது தனது பார்வைக்கு வந்துகொண்டிருக்கும்

கோடானு கோடி 'கழுத்தறுப்புகளில்' ஒன்று; அவற்றின் விதியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவன் தானே என்பது தீர்மானம்.

தமிழில் இருக்கும் நிலையைக் கவனித்தாலோ, எழுதுகிறவர்களைக் கேட்டால், நம்முடைய இன்றைய சாதனையை மேல் நாட்டு இலக்கியங்களுடன் தைரியமாக ஒப்பிடலாம் என மார்தட்டுவார்கள். ஏன் மேல் நாட்டுடன் அது ஒப்பிடவேண்டிய காரியமோ தெரியவில்லை. நம்மூர் நாயர் ஓட்டல் இட்லியையும் பரம சிவம் பிள்ளை ஓட்டல் தோசையும் ஹட்லின் பாமர்ஸ் பிஸ்கோத்துடன் வெற்றிகரமாக ஒப்பிட்டு வெளிவரும் கருத்துக்களைக் காணப்பெறும் பாக்கியம் எனக்கு இதுவரை சித்திக்கவில்லை-இலக்கியத்துக்குள் தான் இக்கோளாறு- புத்தகத்தின் முன்னுரை ஆசிரியரை தமிழ்நாட்டு பெர்னார்ட்ஷா என்று பறைசாற்றும். புத்தகத்தை அச்சடித்தவர் மதிப்புரைக்காகப் புத்தகங்களை அனுப்பிவிட்டு "தமிழ்நாட்டில் இலக்கியம் ஆரம்ப நிலையில் இருக்கிறது; கொஞ்சம் பார்த்துச் செய்யுங்கோ" என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு காரியாலயமாக ஏறி இறங்குவார்; இது தவறினால், சில பத்திரிகைகளிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு 'மதிப்புரை' என்ற சில வாக்கியங்களையும் கொண்டுபோய் அனுப்பிப் பிரசுரிக்கச் செய்வார். இவ்வளவு நெளிவு சுளுவுகள் தெரியாத பிரசுரகர்த்தரானால், விதியின் பேரிலும் விளம்பரத்தின் பேரிலும் பாரத்தைப் போடுவார். இவைதான் இன்று மதிப்புரை என்ற வார்த்தையைச் சூழ்ந்து நிற்கும் ரசாபாசமான வாழ்த்துக்கள். ஆனால் உண்மையில் மதிப்புரை தான் என்ன? அது பொதுவாக இலக்கிய விசாரமான ஆராய்ச்சி அல்ல; ஒரு புதுப் புத்தகம் வந்திருக்கிறது, இது என்ன விஷயத்தைப் பற்றியது; இன்னமாதிரி எழுதப்பட்டிருக்கிறது என்பது கண்டிருந்தால் போதும். ஆனால் இன்று வெளிவரும் புத்தகங்களில் சித்தவைத்தியம், சோதிடம், சிற்றின்பம் பற்றியவை தவிர மற்றவெல்லாம், தம்மை ஒரு இலக்கிய மைல்கல் என மார்தட்டிக்கொண்டு வருகின்றன. இப்படிப்பட்ட தொரு மயக்க நிலையைப் போக்கச் சற்று காரமான கருத்துக்கள் வெளியிடப்படுவது குற்றமல்ல. நல்ல இலக்கியமென்றால், எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத்துக் கொண்டாலும், இவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும். பனைமரத்தில் ஊசியைச் சொருகிக்கொண்டு சுமந்து நடந்த பரமார்த்த குருவின் சீடர்கள் போல, எத்தனைபேர் சுமந்து வந்தாலும் பரங்கிக்காய் குதிரை முட்டையாகி விடாது. மதிப்புரை எழுதுகிறவனிடம் எதிர்பார்க்க வேண்டியது ஒன்றுதான். நல்ல இலக்கியத்தைக் காணும் பொழுது அதைத் தெரிந்து கொள்ளவும், பரிச்சியம் செய்து வைக்கவும் அவனிடம் திராணி வேண்டும்; அப்படியே போலியைக் காணும்போது, யார் வந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் அது போலி என்று சொல்லுவதற்கு நெஞ்சு அழுத்தம் கொண்டிருக்க வேண்டும். இது போதும்.

முல்லை - 1

இலக்கிய மரபு

புதுமைப்பித்தன்

வாழ்வுக்கு வழிகாட்டியாக - வாழ்வுப் பாதையின் கட்டுக் கோப்பு உலைந்துவிடா திருப்பதற்காக நாம் சில கற்பனைகளை-நினைப்புகளை-ஏன்?-பிரமைகளையுங் கூட ஒப்புக்கொண்டு, அதன்பின் ஒண்டி நடந்து செல்லுகிறோம். இம்மாதிரி 'மனுஷ சாரைகள்' ஊர்ந்து ஊர்ந்து தேய்ந்துபோன பாதைகள்தான் வழக்காறு-சம்பிரதாயம் சட்டம் என நாம் குறிப்பிடுவது. வரம்பு -பரப்பு இரண்டுந் தெரிந்துகொண்டு காட்டுக்குள் காலடி வைத்தவுடன் 'தடந்' தெரியாமல் திகைப்பவர்களாகிய நாம், பின்னால் என்ன வரும்-என்னவாகும் என்பதற்கு வெறும் கற்பனை ஒன்றையே ஊன்றுகோலாக வைத்திருப்பதால் நியதி-சம்பிரதாயம் என்ற இவற்றில் சற்று பிசகு ஏற்படுமோ என்ற பயம் அடிக்கடி தோன்றுவது இயல்பு. வரம்புக்கு உட்படுத்தப்பட்ட சிந்தனைகளினால்தான் இலக்கிய மரபுகள், சமூகத்தின் நிலையான தன்மைக்கு அனுசரணையாக இருந்து வருகின்றன; இவ்வாறு இருந்து நம்மை 'மகிழ்விக்க' வேண்டியதாயிற்று.

சமூகம் அடிமாண்டுபோக, போன இடம் புல் முளைத்து, தடந்தெரியாது மறைந்து விடாதிருக்க ஏற்றிவைக்கப்பட் சிந்தனை விளக்குகளில் ஒன்று இலக்கியம் என்பதற்காக ஒரு வார்தைக்கு இடங்கொடுத்து அதற்கு வணங்கி வழிபட்டு வருகிறோம். அதற்கு நாம் இட்ட பெயர் மரபு என்பது. இலக்கியத்தின் மரபு என்றால் அதில் இன்னின்ன விஷயங்களைத்தான் சொல்லவேண்டும் என ஒரு கோட்பாடு வகுப்பதாகும். சாதி சமூகங்கள் யாவும் அதிகார மோக சமுதாயங்கள். அவை மனிதனுடைய ஆதி பருவத்தில் அவன் மனதைப் பக்குவப் படுத்தின. இன்று அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட சமூதாயப் பரிசிலனைகூட கல்விக்கு நிர்பந்தத்தைச் சாதனமாக வைத்திருக்கிறது. அதேமாதிரிதான் இலக்கியமும் மனிதநலத்திற்குத் 'தொண்டு' புரியவேண்டும் என்ற நியதி மரபின் அடியாக, இலக்கியத்தில் சில காரியங்களைத்தான் சொல்லலாம்-சொல்லவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆதி காலத்து இலக்கிய 'செய்வினைஞர்கள்' "காலத்தேவதையின்" முன்பு நாம் நமது எண்ணங்களை-வேட்கைகளைப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். ஆகையால் அவை மாசு மறுவற்றிருக்கவேண்டும்" என நினைத்தார்கள். அதாவது சமூகத்தின்

உயிர்த் தெம்புக்கு பலக்குறைவு தரக்கூடியது எனச் சிறு ஐயத்திற்கு இடங் கொடுக்கக்கூடிய கருத்தாக இருந்தாலும் அவை ஒதுக்கப்படவேண்டியது என கருதப்பட்டது.

அக்காலத்தில் சமூகத்தின் தேவைகள் சொற்பம்; வசதிகள் அதைவிடச் சொற்பம். அதனால் மனிதனுடைய வேட்கைகளானது அவனிட்ட வரம்புகளுக்குள்ளாகவே கிடக்கக்கூடிய தன்மை வாய்ந்திருந்தது. அந்த எளிதான அமைப்பு, எளிதில் குலைந்து விடாமல் கட்டப்பட்ட வேலி மதிலாக மாறி, இன்று மலையாகச் சூழ்ந்து மனித சிந்தனையை அமுக்க ஆரம்பித்துவிட்டது.

தெரியாத அபாயத்தைவிட தெரிந்துள்ள தொந்தரவு சகித்துக் கொள்ளக்கூடியது என நினைப்பது மனித இயல்பு.

ஆதியில் மனிதன் விளையாட்டுப் பொம்மையாக வைத்து விளையாடிவந்த அறிவு என்ற ஒன்று இன்று ஒரு கோர சத்தியாக உருவெடுத்து அவனையே ஆட்படுத்தி அவனது பற்றுக்கோல் இற்று ஒடிந்துபோகும்படி செய்துவந்தது. அந்தப் பற்றுக்கோலை அனுசரித்து ஒழுகிவந்த இலக்கிய மரபுகள் அதனுடன் குடியோடிப் போயிற்று. கடவுளர்கள் எப்படி மண்தொடர்பு அற்று மனிதத் தோழமையை இழந்தார்களோ, அதே மாதிரி இலக்கிய மரபும் ஏகாங்கியாயிற்று. இன்று வாழ்வு சொல்லுகிற கோரக்கதியிலே பற்றுக்கோலை ஒட்டிச் செல்வதற்கு நேரமில்லை. ஆனால், வாழ்வின் வரம்பும் அடிப்பீடமும் நமக்கு உறுதிபெற்றுவிட்டதால் சொல்வது வலுவுள்ளதாக மட்டும் இருந்தாற்போதும்; கோர உண்மையாக இருந்தாலும் அவை மண் தொடர்பு பூண்டு-மனிதத் தோழமையைப் பூண்டு அங்கேயும் உலாவுகின்றன. ஜீவித்திருக்கின்றன. நமக்கு நாமறிந்த பொருள்கள் காட்டுகின்றன. ஆகையாற்றான், இன்று இலக்கிய மரபு மனித சகவாசத்தை அவனுடைய பலவீனங்களால் விரும்பித்தோழமை கொள்ளுகிறது. அந்தரத்து வானதேவர்களைத் தேடித்திரிந்து கால் சலித்த இலக்கியம் இன்று வாழ்வின் பாதையில் மனிதனுடன் சமமாக- அவனோ டவனாகப் பொருந்திச் செல்கிறது.

முல்லை - 3

வக்காலத்து

புதுமைப்பித்தன்

என் கதைகளின் தராதரத்தைப் பற்றி 'எரிந்த கட்சி', "எரியாத கட்சி' ஆடுகிறார்கள். அதற்குக் காரணம், பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்லவேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல; சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர் நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களறியையும், மனக் குருபங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப் போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப்போகிறதா? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே. நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரம நாயகம்-இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்திரிக்காய் பண்ணிக் கொண்டிருப்பதுபோன்ற, அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப்பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.

நீளமாகத் தலை கத்தரித்து விட்டுக்கொண்டு, அடையாறு ஜிப்பா போட்டுக்கொண்டு, பங்கியடித்த மாதிரி கண்களை ஏறச்சொருக வைத்துக் கொண்டிருக்கும் படங்கள், அவை போன்ற கதைகள், நாசூக்கான கட்டம் வரை, அதாவது உடை குலையாத கட்டம் வரை எழுதிக்கொண்டிருப்பதே கலையல்ல; அவைகளே, 'அப்புறம்' என்ற நினைப்பைத் தட்டிவிட்டு ஆபாச வேட்கைகளைக் கிளப்புகின்றன. இலக்கியத்தில் கலையம்சம் என்பது ஜீவத் துடிதுடிப்பில்தான் இருக்கிறது. ராமாயணத்தில் விபசாரம் இல்லையா? தற்காலப் புஸ்தகத் தணிக்கை போர்ட்டார், இப்பொழுது எழுதினால் 'ஆபாசம்' என்ற தலைப்பில் தடை விதிக்கக்கூடிய வேறு

விவகாரங்கள் இல்லையா? ஒரு பெரிய மாளிகை மாதிரி, ராமாயணம் அகண்டாகாரமாக இருப்பதால், அவை பலர் கண்களுக்குத் தென்படுவதில்லை. கோவில் கோபுரச் சிற்பங்கள் போல என் கதைகள் அப்படிப்பட்டவையென்று நாமகரணம் சூட்டப்பட்டிருப்பதாக நான் தாக்குப் பிடித்துப் பேசவில்லை. என்னுடைய கதைகளில் அப்படிப் பட்டவை விலக்கு அல்ல என்று கூறுதல் பொருந்தும். ஏனென்றால் என் கதைகளில் ஒவ்வொன்றும் ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால், என் கதைகளின் பொதுத் தன்மை நம்பிக்கை வறட்சி, "எதிர்மறையான குணங்கள் இலக்கியத்துக்கு வலுக்கொடுக்குமா?" என்று கேட்கலாம். அது ஏற்பவர்களின் மனப்பக்குவத்தைப் பொறுத்ததே யொழிய, எதிர்மறை பாவத்தின் 'விஷ'த்தன்மையைப் பற்றியதல்ல.

முல்லை - 9

சிறு கதை

புதுமைப்பித்தன்

மறுமலர்ச்சிக் காலம்

சமீபத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் ரசமான சம்பவம் ஒன்றைச் சொன்னார். அது நம்மவரிடைக் கதையைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயம் இருக்கிறது என்பதைக் காட்டுவதுடன், கதையின் தத்துவத்தையே விளக்குகிறது. என்னுடைய நண்பரின் நண்பர் ஒரு இலக்கிய ரசிகர். பாவம், பண்பாடு, மரபு முதலிய சொல்லடுக்குகளைக் கொண்டு அம்மானை யாடுபவர். "நாங்கள் வெளியிட இருக்கும் விசேஷ மலருக்கு ஒரு அரிய கட்டுரையாவது, கதையாவது அனுப்பித் தரவேண்டும் எனக் கோருகிறோம்" என அவருக்கு வந்திருந்த கடுதாசியைக் காண்பித்து, "கட்டுரை எழுதுவதென்றால் சிந்திப்பதற்கு அவகாசமே இல்லை. ஒரு கதையாவது எழுதி யனுப்பிவிடலாமா என்று நினைக்கிறேன்" எனத் தமது சங்கடத்தை என்னுடைய நண்பரிடம் பகிர்ந்து கொண்டார். எனது நண்பரும் சிரித்துக் கொண்டே, 'அப்படியானால் இராத்திரியே ஒன்றை எழுதி நாளைத் தபாலில் அனுப்பிவிடுங்கள்" என்று யோசனை சொல்லிவிட்டுப் போனார். மறுநாள் காலையிலும் அந்த ரசிகரின் கண்ணில் படவேண்டியேற்பட்டது, என் நண்பருக்கு. 'என்ன சார் கதை எழுதி அனுப்பி விட்டீர்களா?" என்று மரியாதைக்காக கேட்டார். அந்த ரசிகர் பொதுவாக நல்ல மனுஷர்; மனசில் உள்ளதை ஒளிக்கமாட்டார். "ஒட்டிப் புளுகுவதற்கு எவனுக்கு வருகிறது சார்? நேற்று ராத்திரி 'ராமசாமி எழுந்து நின்று அந்தச் சன்னலையே பார்த்துக்கொண்டிருந்தான்' என்று ஆரம்பித்து, முதல் வாக்கியத்தை எழுதினேன். ராத்திரி இரண்டு மணியடிக்கிறவரைக்கும் ராமசாமி சன்னலையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். இன்னும் அப்படித்தான் திண்டாடிக் கொண்டிருக்கிறான். மேலே கதை ஓடவில்லை" என்று சொன்னார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு ரசமான ஆழ்ந்த உண்மையிருக்கிறது. கதை நன்றாக, வாய்ப்பாக, கவர்ச்சியாக அமைந்திருந்தால், நம்மாலும் எழுத முடியாதா என்ற மயக்க உணர்ச்சி தோன்றும்படி. அவ்வளவு சுளுவாகத்

தென்படும். தரை தெரியும்படியாக அவ்வளவு சுத்தமாக ஆழம் புலப்படாதல்லவா? அதுமாதிரிதான் இந்த கலைவிவகாரம் எல்லாம். “பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப்போல வரும் வெண்ணிலாவே இந்த வேக முனக்காகாதே!” “விதியே கொடியாய் விளையாடுதியோ?” என்று வரும் அடிகளில் லகுவாக அமைந்திருக்கும் இயல்பு நம்மையும் பாட்டெழுத வைத்து, கேலிக்கு இடமாக்குகிறதல்லவா? இதுதான் கலையின் இயல்பு. வலிந்து கட்டிப் பேசுவது மாதிரி இருக்காது. சொல்லப்படும் விஷயம் எதுவாக இருந்தாலும், நம்மை அதில் ஒன்றவைப்பதுடன், நாமும் செய்திருக்கலாமே என்ற மயக்க வுணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பயன் கருதாது, தன் மயமாகி, லயித்து, ஒட்டிப் புளுகுவதுதான் கதை.

இந்தக் கதை விவகாரத்திலே, சமீப காலமாக சிறு கதை என்ற சொல்லாட்சி ஒன்று அடிபட்டு வருகிறது. அந்தப் பதச் சேர்க்கையே நமக்கு புதிது. விக்கிரமாதித்தனின் அறுபத்தி நாலு பதுமைகள் சொல்லிய சின்னக் கதைகளும், கதைகள் தான்; ராமாயணமும் கதைதான். சிறுகதை என்பது நம்மைப் பொறுத்தவரை அளவைத்தான் குறிப்பிட்டுக் காட்டி வந்தது. இப்பொழுது கொடுக்கும் விசேஷ அர்த்தத்தை அல்ல. இந்தப் பதச் சேர்க்கை வெளிநாட்டுச் சரக்கு. நமக்கு இந்தப் பதம் இங்கிலீஷிலிருந்து கிடைத்தது. இங்கிலீஷில் Short Story என்ற பதத்திற்கு வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்புத்தான் சிறுகதை என்றவார்த்தையும். இங்கிலீஷிலும் அந்தப் பதச்சேர்க்கை சமீப கால விவகாரந்தான். அளவைப் பிரதானமாகக் கொள்ளாது, அங்கும் அதற்கு விசேஷார்த்தம் கற்பிக்கப் படுகிறது. அவர்கள் வலிந்து அப்பதச் சேர்க்கைமீது ஏற்றியுள்ள அர்த்தத்தைத்தான் நாமும் சிறு கதை என்ற பதத்திற்கு கொடுத்து வருகிறோம். இலக்கியத்தில் இது ஒரு துறை. இந்த முயற்சி வெளி நாட்டுச் சரக்காக இருப்பதனால்தான், சாதாரணமான ரசிகர்கள் இது புரியாது என்று சொல்லி, மரபுக்குப் பொருந்தாது என முடிவு கட்டுகிறார்கள். மரபை ஒட்டிய கதைகளை மட்டுமே படித்தவர்கள், இதென்ன இடையிலே எங்கோ ஆரம்பித்து எங்கோ முடிக்கிறான், எனக்குப் புரியவில்லையே எனச் சொல்வது இயல்பு. ஆனால் அகப் பொருள் துறைகளிலும், புறப்பொருள் துறைகளிலும் பல்வேறு மன அவசங்களைக் காட்டி ஒரு காட்சியை, ஒரு கதையைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் அற்புதமான பாட்டுகளை நுகர்ந்தவர்கள் கூட, இது புரியவில்லை என்று சொல்லும்போதுதான் விசித்திரமாக இருக்கிறது. சிறந்த சிறு கதைகளுக்கு இலக்கணமாக யாப்பில் எத்தனையோ உண்டு; வசனத்தில் தோன்றியுள்ள இன்றைய சிறு கதைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் பழைய காவிய நுகர்ச்சியிலும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.

தமிழில் சிறுகதை என்பது சுமார் ஐம்பது வருஷத்து விவகாரந்தான். செல்வகேசவராய முதலியார் எழுதியுள்ள அபிநவக் கதைகள் என்று சிறு

தொகுதியை ஆரம்பமாக வைத்துக்கொண்டு கவனித்தால், இன்று நம்முடைய சாதனை பெருமைப் பட்டுக்கொள்ளக்கூடியது தான்.

சிறுகதைகள் பிறந்து வளர்ந்த காலத்தை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். செல்வகேசவராய முதலியாரிலிருந்து வ.வெ.சு. ஐயர் காலம்வரை ஒரு பகுதி. இதை வெறும் சோதனைக் காலம் என்று சொல்லவேண்டும். குறிப்பிடத்தக்க கதைகள் எதுவும் கிடையாது என்று பொதுவாகச் சொல்லலாம் . இக்காலத்தில் பிறநாட்டுக் கதைகள், வாய்மொழியாக உலாவி வந்தவைகள், எழுத்தில் அமைந்தன. அவற்றில் பெரும்பான்மையாக ஒரு கதையிருக்கும்; அவற்றில் நடமாடும் பாத்திரங்கள் உயிர்பெற்று இயங்காது. ஆசிரியர் அவற்றை இயக்குவதற்காக, சூத்திரக் கயிறைப் பிடித்து இழுப்பதுங்கூட நமக்குத் தெரியும்.

இதற்கடுத்தபடியாக வ. வெ. சு. ஐயர் யுகம் என்று சொல்லவேண்டும். தமிழில் சிறு கதைக்கு உருவும் உயிரும் கொடுத்தவர் அவர்தான். ஒரு விதத்தில் இவரை 'சிறு கதையின் பிதா' என்று ஆங்கில மரபையொட்டி குறிப்பிடலாம். இவரது கதைத் தொகுதியான 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்பதிலும் அவர் நடத்திய பாலபாரதி என்ற பத்திரிகையில் எழுதிய ராஜ கோபாலன் கடிதங்கள் என்பவற்றிலும் அபூர்வமான கதைகள் பல உண்டு. குளத்தங்கரை அரசமரத்தை யார்த்தான் மறக்க முடியும்? அவருடைய கதைகளில் பாலையின் வெக்கை நம்மைப் பொசுக்கும். முகலாய அந்தப் புரத்து நந்தவனங்களின் வைபவம் நம்மை களிப்பூட்டும். கிரேக்க தேசத்துக் கடவுளர் நம்முடன் உறவாடுவர்; பிரெஞ்சு போர்க்கள ரத்தபயங்கரம் நம்மை மிரட்டும். பிறநாட்டு மரபுகளையும் பெயர்களையும் நம்மால் ரசிக்க முடியாது என இன்றைய விமர்சகர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதற்குத் தகுந்த பதில் அவரது கதைகள். இவர் காலத்தில், மாதவையா, சுப்பிரமணிய பாரதியார், ராமாநுஜலு நாயுடு ஆகியோர்கள் கதைகள் எழுதி வந்தார்கள். மாதவையா, உலகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனேயே பார்த்ததனால், அவர் விரும்பும் கருத்துக்களை வற்புறுத்துவதற்கு சவுக்கியமாக அமைந்த சாதனங்களாகவே கொண்டதால், கதைகள் உயிர்த் தத்துவம் இழந்த வெறும் உபாக்கியானங்களாக அமைந்துவிட்டன. அவர் பதிப்பித்த பஞ்சாமிருதம் என்ற பத்திரிகையில் சில சிறந்த சிறு கதைகள் வெளி வந்துள்ளன. "மூன்றில் எது?" என்று வெளிவந்தது இன்றும் ஞாபகமிருக்கிறது. டாக்டர் சிகிச்சை, நாட்டு வைத்தியம், கோயில் பிரசாதம் இம்மூன்றில் எது சாகக் கிடந்த குழந்தையைப் பிழைக்க வைத்தது என்பதுதான் கதையின் ஆதாரக் கேள்வி. அதிலே ஒரு தாயின் பரிதவிப்பு வெகு அழகாக விழுந்திருக்கிறது. எழுதியவரின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. ஸ்ரீ மாதவையா திடீரென்று காலமானார். கடைசியாக அவர் பதிப்பித்த இதழில் 'கண்ணன் பெருந்தூது' என்ற கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது-உருவவாய்ப்புக்குச் சிறந்த உதாரணமாக அதைத்தான் சொல்லவேண்டும். கதைப் பாத்திரங்களின் குண

விஸ்தாரமும் கதையின் போக்கும் பிரமாதம். அதில் எழுதியவர் யார் என்று குறிப்பிடப் படவில்லை. நடையைக் கவனித்தால் மாதவையாவே எழுதி இருக்கக் கூடும் என ஊகிக்க இடமிருக்கிறது. ஸ்ரீராமநுஜலு நாயுடு கதை சொல்லுவதில் சமர்த்தர். பாத்திரங்கள் உயிர்த் தன்மையுடன் இயங்குபவை. பெண்களைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கள் விபரீதமானவை. கலையைப் பற்றியும் பெண்மையைப் பற்றியும் டால்ஸ்டாய் விசித்திரமான அபிப்பிராயங்களைத்தான் கொண்டிருந்தார். அதற்காக அவர் சிறந்த கலைஞன் என்பதை நாம் மறந்து விடுகிறோமா? அம்மாதிரியே ராமாநுஜலு நாயுடுவை நாம் பாவிக்க வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக 1930ம் வருஷத்துக்குப் பின் உப்பு சத்தியாக்கிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புதுவேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது. அதாவது எதையும் சிரிக்கச் சிரிக்க எழுதவேண்டும் என்று ஒரு பாணியை வகுத்து அந்தத் துறையில் சிலர் இறங்கித் திறமைகளை காட்ட முயன்றார்கள். இவர்களுள் பிரதானஸ்தர் கல்கி. இவர்களுக்குச் சிரிப்பு மூட்டக்கூடிய தன்மையில் எழுதவேண்டும் என்பதே பிரதான லட்சியம். ஹாஸ்யச் சுவை என்பது இயல்பாக அமைய வேண்டிய விவகாரமாதலால், வலிந்து கட்டிக்கொண்டு சிரிக்கவைக்க முயலுவது போட்டோவுக்காக சிரித்த மாதிரியாகத்தான் அமையும். கல்கியும், பிறரும் மேல்நாட்டு ஹாஸ்ய சாம்ராட்டுகளை மொழி பெயர்த்துத் தந்தார்கள். அவற்றை அனுசரித்தும் ஒட்டியும் பெயர்த்தும் எழுதினார்கள். கல்கி பிராபல்யத்துக்கு வந்தது அவர் சிரிக்கச் சிரிக்க எழுதுவார் என்பதிலிருந்துதான். ஆனால் பிற்காலத்தில் அவர் சிறு கதைத் துறையில் இறங்கிய பொழுது அவரது எழுத்துக்களில் மருந்துக்குக் கூட சிரிப்பு இல்லாமல் போனதற்கு காரணம், ஹாஸ்யம் இவருக்கு இயல்பான குணம் அல்ல என்பதுதான். ஆனால் ஹாஸ்யமாக கதை எழுதக் கூடியவர்கள் தமிழில் உண்டு. அவர்களிருவர்: எஸ்.வி. வியும் கொனஷ்டையும். எஸ்.வி. வியைவிட கொனஷ்டையில் கலையம்சம் ரொம்பவும் நயமாக இருக்கும்; கதைப் பாணி புதிதாக இருக்கும். இந்த ஹாஸ்ய யுகத்தின் வேகம் ஒடுங்கும் நிலையில்தான் இன்னும் ஒரு பேரலை எழுந்தது அதில்தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்ல வேண்டும். இக்காலத்தில்தான் சிறு கதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. பி.எஸ். ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் முதலியவர்களும் நானும் கதைகள் எழுத ஆரம்பித்தோம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதான் கலை. சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பித்தது. 'பரமசிவன் வந்து வந்து வரங்கொடுத்துப் போவார், பதிவிரதைக் கின்னல் வரும் பழைபடி தீரும்' என்றிருந்த நிலைமை மாறி நிலாவும், காதலும் கதாநாயகனுமாக சோபித்த சிறுகதைகள் வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க ஆரம்பித்தன.

தமிழ் மரபுக்கும் போக்கக்கும் புதிதாகவும் சிறப்பாகவும் வழி வகுத்தவர் ஒருவரைச் சொல்லவேண்டும் என்றால், 'மௌனி' என்ற

புனைபெயரில் எழுதி வருபவரைத்தான் குறிப்பிட வேண்டும். அவரைத் தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என்று சொல்ல வேண்டும். அவர் மொத்தத்தில் இதுவரை பத்துக் கதைகள்தான் எழுதியிருப்பார். கற்பனையின் எல்லைக் கோட்டில் நின்று வார்த்தைக்குள் அடைபட மறுக்கும் கருத்துக்களையும் மடக்கிக்கொண்டு வரக்கூடியவர் அவர் ஒருவரே. தமிழிலே நட்சத்திரக் குழந்தைகள், சிவசைலம், எங்கிருந்தோ வந்தான், கடவுளும் கந்தசாமி பிள்ளையும் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கதைகள் ஒப்புயர் வற்றவை. இன்று சிறு கதைகள் வளர்ந்துவரும் லட்சியம். அதன் வரம்புக்களையும், சாதனைகளையும் நிர்ணயிப்பது கடினம். இன்று கதைக்கெனவே தமிழில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணியைப் பின்பற்றி அற்புதமான பயன்களை அளித்து வருகின்றன. இவற்றில் சிறப்பாக கலைமகளைக் குறிப்பிட வேண்டும். பிரதானமானவை என சொல்லத் தக்கவை பல அதில் தான் வெளி வந்துள்ளன. இவை தவிர சாதனையை அளவிட்டுக் காட்டுவதுபோல, கோவையாக சிறு கதைகள் ஏராளமாக வெளி வந்துள்ளன. அவை இன்றைய நிலைமையை ஓரளவு தெளிவாகப் பிரதி பலிக்கும்.

முல்லை - 10

புரட்சி மனப்பான்மை

புதுமைப்பித்தன்

அன்று என் நண்பரின் பத்திரிகை ஆபீஸிற்குப் போயிருந்தேன். அங்கே ஓர் புரட்சிக்காரர், - அசல், 'அப்படமானவர்' கொஞ்சம் கூட கலப்புக் கிடையாது.. நண்பருடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் மாஜி-ஏதோ ஓர்-சதிக்கைதி.

என் நண்பர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். 'நம் போன்றவர்கள் எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டியவராக்கும்' என்றார் என் நண்பர். புரட்சிக்காரர், 'ஓய்-உமக்கு-வெள்ளையனைச் சுடத் தெரியுமாங்காணும்' என்ற ஒரு பார்வை பார்த்தார்.

சரி, இதுதான் ஸ்ரீமான் புரட்சியா என்று நிர்ணயித்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். புரட்சிக் காரர் அணியவேண்டிய அசல் விதேசிச்சரக்கு, யாரையும் எடுத்தெரிந்து பேசும் தன்மை.. சர்வ லக்ஷணமும் பொருந்தியிருந்தது. சாட்சாத் புரட்சிக்காரர் தரிசனத்திற்காக, என் முன்னோர்கள் வழிபட்டுவந்த கடவுளை நான் கும்பிட்டுக் கொண்டேன்.

பாட்லிவாலா, பண்டார சன்னிதி, கங்காரு, 1939 மாடல் மோட்டார் கார், இரட்டைப் பெண்கள், சினிமா ஸ்டார் காந்தாமணிபாய், உயர்திரு. தேசபக்தர், இத்தியாதி இத்தியாதி ரகத்தைப்பார்க்க மனுஷருக்கு சுபாவமாக உள்ள ஆசையை என் விஷயத்தில் திருத்தி செய்து வைத்த அந்த ஸ்ரீமான் இன்குவிலாப் ஜிந்தாபாத்துக்கு என் மனமார்ந்த வந்தனம்.

என் நண்பரும் சிறை சென்ற தேச பக்தர். கார்ல் மார்க்ஸ் பாராயணமும் கொஞ்சம் உண்டு. கருங்கச் சொல்லுகிறேன்- வெகு தீவிரம்.

குசலப் பிரச்னங்களுடன், பரஸ்பர போலீஸ் காவல், சிறையில் கசையடி, இடைமறிக்கப்பட்ட கடிதங்கள், சமீபத்தில் வெளியான விக்டர் கோலான்சின் தீவிரவாத கிரந்தம் - எங்க அதிகாரிகள் கண்ணில் பிஸ்கோத்து டின் மாதிரி இந்தியாவுக்குள் நுழைந்தது. எல்லாம் சேர்த்து அந்தச் சமயத்தில் ஸ்ரீமான் எழுத்தாளரைச் சென்ற வருஷத்துப் பஞ்சாங்கமாக, அதாவது சமயா சமயங்களில் திருப்பிப் பார்க்க வேண்டிய விஷயமாக ஆக்கியது.

வேண்டாத இடங்களில், வெற்றிலை பாக்கு-புகையிலை என்ற அழுத்தமான வாய்ப்பூட்டை - (144 உத்திரவைவிடக் கடுமையானது) பிரயோகித்துக் கொள்ள எனக்குத் தெரியும் என்பது அவருக்குத் தெரியாது.

எனது நண்பரை, இப்படிப் புரட்சி சக்தி அமுக்கி விடும் என நான் எதிர்ப்பாக்கவில்லை. லாட்டியடி முதல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோபம்பவரை, தாலுக்கா டிவிஷன்களில் ஏற்றுத் தாங்கியவர். அவர் தாலுக்கா பிராந்தியம் என்று நான் விசேஷமாகக் குறிப்பிடுவதின் காரணம், அங்குள்ள மலையாளத் துரிசேர்வ் போலீஸ்காரர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் சொந்தப் பாங்கியிலிருக்கும் கரண்ட் - டிபாசிட்டாகக் கருதி அதில் அத்துமீறித் தலையிடுகிறவர்களைத் தங்கள் சொந்தக் கேஸ் ஆவேசத்துக்கு ஆளாக்குகின்றனர். பட்டணத்துப் போலீஸ்காரன் என்றால் கொஞ்சம் தாராள புத்தியுண்டு. இப்படியெல்லாம் அனுபவமுள்ள ஒரு மனிதன், சர்வ சூன்யமாகத் தன்னை இகழ்ந்து கொள்ளுவார் என்று நான் நினைக்கவில்லை.

வெற்றிலையின் நரம்பைக்கிறி எறிந்தேன். அது பினாமி (காரமில்லாத மெட்ராஸ்) வெற்றிலை. வெறுப்புடன் சுண்ணாம்பைத் தடவினேன். சுவரில் சுரண்டியெடுத்தது போல, உருண்டு உருண்டு வெற்றிலையை ஒட்டைபோட்டது, இந்த சம்பிரமத்தில் களிப்பாக்கு, அதற்கு மேலாக முகப்பவுடர், செண்டு இவைகளில் நம்பிக்கை வைத்து ஆட்களை மயக்கிவரும் விபசாரிக்கு உதாரணம் போன்ற புகையிலை.

இவை போதாதென்பது போல, ஸ்ரீமான் வெங்கு ராவைத் தெரியுமா, கவர்னர் ஸ்பெஷல் வெடிகுண்டு வழக்குக் கைதி; பெல்லாரி ஜெயிலிலே, தனி வார்டில் போட்டு அடித்தார்களே. ஓகோ, அப்பொழுது உங்களை திருச்சி ஜெயிலுக்கு மாற்றிவிட்டார்களோ,-வீரன்னா வீரன்தான் சார் - என்ன வேலைகளெல்லாம் பண்ணியிருக்கான் தெரியுமோ...'

அவரைப் பார்க்க உங்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்குமே? பாவிப்பயல்கள் என்னை மாத்திப் போட்டானே! என்று பரிதவித்தார் புரட்சி மோகன லாகிரியில் சிக்கிய என் நண்பர்...

மூவ்மெண்ட் டயம்லே என்ன செய்தார் தெரியுமா... செப்டம்பர் நடுராத்திரி ரூம்லே டார்ச்கூட இல்லை'.. வெளியிலே சடபுட என்று கதவு தட்ற சப்தம் கேட்டது,- என்ன செய்தார் தெரியுமா?' என்று ஒரு ஆணித்தரமான கேள்வி போட்டார்.. தெரியாது; அதற்கப்புறம்?; என்றேன் நான்.

அரிச்சந்திரன் மயான காண்டத்தில் ஊன்றிக் கொண்டு நிற்கவேண்டிய தடி சடக்கென்று ஒடிந்து விட்டால் எப்படியிருக்கும்? - 'பின் - அரிச்சந்திரன், அந்த சமயத்தில் சோகம் குலைய மிருதங்கக்காரனைப் பார்த்து உறுமுவது போலிருந்தது. என் நண்பரின் பார்வை.

ஸ்ரீமான் புரட்சியின் ரசனை கொஞ்சம் கட்டை போலும்: அவர் அசல் கோதுமை சப்பாத்திதான் சார். பஞ்சாபிக்காரன் மாதிரி சாப்பிடுவார் என்றார், பாவம் ஸ்ரீமான் புரட்சி.

சரி! நேரம் சரியில்லை என்று நினைத்துக்கொண்டு, "உம்மிடம் ரெண்டு ரூபாய் கடன் வாங்கவேண்டும் என்று வந்தேன்; நாளைக்கும் வருவேன். உம்மால் என்னை ஏமாற்றமுடியாது' என்று சொல்லிக்கொண்டு வெளியேறினேன்—

உப்பங்காற்று மட்டிலும் வீசும் சமுத்திரக் கரைக்குப் போகும் பொழுதுதான் விஷமத்தனமான என் கசப்பு என்னைவிட்டு அகன்றது.

அப்பொழுது அங்கு வந்தான் ஸ்ரீ பாலு. மெஸர்ஸ் பீபரிவாலாஹுக்கும் சந்த் அண் சன்ஸ் கம்பெனியின் பல்ஜோமி குமாஸ்தா. கம்பெனியின் காப்பிக்கொட்டைக் கேஸ்களுக்கு ஆணி அடித்து விலாசம் ஒட்டுவது முதல் வரவு சிலவு கணக்குத் தயாரிப்பது, சேட்ஜி மகள் ஸோனியாவுக்கு வர்ணப்பென்சில் வாங்கிக் கொடுப்பது வரை உள்ள வேலைகள் எல்லாவற்றையும் விரக்தியுடன் செய்யும் அபேதவாதி அவன்.

என்ன சார் இப்படி உட்கார்ந்திருக்கேள்! ஹி ஹி! போனவாரம் நீங்க எழுதின கதை ரொம்ப ஜோர் சார் - 'வாழ்க்கையின் நுணுக்கங்களை, அப்படியே எழுத்தோவியமாப் பண்ணியிருக்கேள் சார் ஹி...ஹி!' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அவன் அடிக்கடி என் கதைகளைப் படிப்பான் அதைவிட என் விமரிசனங்களைப் படிப்பான் முக்கால் வாசி என் கைச்சரக்கே என் தலைமேல் தூக்கிப் போட்டு உடைக்கப்படும்.

என்ன இருந்தாலும் புகழல்லவா சார்? யாருக்குத் தான் இழக்க மனசுவரும். வர்ணக் கடிதாசி யொட்டிய ஜப்பான் விளக்கு மாதிரியான சுடாத புகழ் வெளிச்சத்தில் உடம்பை கொஞ்சம் காயவைத்துக் கொண்டேன்.

'......' என்ற பத்திரிகையைக் குறிப்பிட்டு 'போன வருஷம் மே மாதப் பிரதியைப் பார்த்தியாள' என்றான்

'எதற்கு' என்றேன்.

'அதிலே ஒரு ஆழ்ந்த உண்மையிருக்கு; பார்த்தேன் சார் நேற்று இப்படி மூர்மார்க்கெட்டுக்கும் போனேன். இதை அடுக்கி இருந்தான். அட்டைப் படமெல்லாம் கிழிஞ்சுபோச்சு; காலணாவுக்கு ரெண்டுன்னான்; ஏன் சார் நமக்கு விஷயந்தானே வேணும்; அப்படியே ஒரு ரெண்டணாக்கு ஒரு கத்தை வாங்கினேன். நம்ம வீட்டுக் காரி இருக்காளே, அவளுக்குக் காகிதக் கூடை பண்ணனுமாம், - அப்படியே குடுத்துடுங்கன்னு வாதாடினாள். அதிலே ரொம்ப விஷயங்களிருக்கு. படிச்சுட்டுதான் தருவேன் என்றேன்; எப்படிப் பார்த்தாலும் இந்தத் தொந்தரவுதான் சார். நல்ல கோட் சார், - மூணு வருஷந்தான் வாங்கினது கை ஓரத்திலேதான் கொஞ்சம் கிளிசல்-அதைக்குடுத்து ஒரு கண்ணாடி

ஜாடி வாங்கிப் பிட்டாள் - என்ன பண்ணச் சொல்றேள் - என்னெ? என்று ஒரு மூச்சுப் பேசிமுடித்தார்.

நான் எப்பொழுது ஓயப்போகிறதோ என்று கேட்டுக்கொண்டே இருந்தேன்.

'ஏன் சும்மா ஒரு மாதிரி இருக்கேள்? கொஞ்சம் வெத்திலே போடுங்களேன்' என்று விதேசி டப்பி நாசூக்கு வெற்றிலைச் செல்லத்தை என்னிடம் நீட்டிவிட்டு, நீங்கள் என்ன நினைக்கிறேள்,- எண்ணே தேச்சு குளிச்சால் 'உடம்புக்கு நல்லதா சார்?' என்றான்.

'எனக்கெப்படித் தெரியும்? நான் தேச்சுக்காமே இருந்ததில்லையே' என்றான்.

சும்மாத்தான் கேட்டேன். அதிலே போட்டிருக்கான். எண்ணெ தேய்ச்சுண்டாக் கெடுதல்னு கெடுதல் எப்படீன்னா ஜன்னி வந்திடுமாம் பாம்பு கீம்பு கடிச்சா, விஷத்தோடே ரோஷம் (உக்கிரம்: மெட்ராஸ் வார்த்தை) ரொம்ப ஜாஸ்தியாம். இந்தக் கெடுதல்களெல்லாம் எதற்கு? அவன் ஒரு மருந்து சொல்றான், அதிலே எனக்கு அவ்வளவு நம்பிகையில்லை - வெலை ஜாஸ்தி - அதுமட்டுமா (காதோடு காதாக) .... சுக ஜன்னி வந்துடுமாம்! இன்னிக்கு ஒரு காரியம் செய்யறதுன்னு தீர்மானம் பண்ணிப்புட்டேன். இனிமே எண்ணெயே தேச்சுக்கிரதில்லேன்னு வீட்டிலே ஏக ரகளை, இன்னிக்கு என்ன கிழமை தெரியுமா-புதன்! ஒரேபாட்டா முடியாதின்னுப் புட்டேன் தலையிலேகூட எண்ணையைக் கொண்டுவந்து வச்சுப்பட்டா; நான் தீரமா உதறித்தள்ளிப்பிட்டு ஆபீஸுக்கு வந்துட்டேன்.

இன்னும் வீட்டுக்குப் போகல்லே. இப்படியே பீச்சுக்கு வந்துட்டு பூ வாங்கிக்கிண்டு போகலாம்னு வந்தேன்...

'ஏன் ஓய் உம்மவீட்டு மூலக்கிரகத்துக்கு சமாச்சாரத்தை வெளியில் போட்டு உடைக்கிறீர்?- என்ன சமரசக் கமிட்டி ஏற்படுத்தணுமா என்றேன்.'

போமையா! உங்களைப் பார்த்ததும், ரொம்ப நாளாச்சே; வீட்டுக்கு வாருங்களேன் காபி சாப்பிட்டுப் போகலாம் என்று கூப்பிடலாம்னு வந்தேன்?' என்றான் பாலு.

"வீட்டிலே காப்பி சாப்பிடாதிருக்கட்டும்; என்கூட ஹோட்டல்லே காப்பி சாப்பிடுமே!" என்றேன்.

'ஹூ ஹூம்! வீட்டிலே காப்பிப் பாழாப் போச்சேன்னு கத்துவா; வாருங்கள் போகலாம் என்றான் பாலு'

'பாலு நீ பார்த்திருக்கிறாயா என்றான்'

'புரட்சிக் கைதி!... அவரையா, நான் எப்படிப் பார்த்திருக்க முடியும்?'

'ஆசையா! மனசு அப்படியே துடி துடிக்கிறது.'

ஆமாம் புரட்சிக்காரரா? எப்படியிருப்பார்? ரொம்பத் தீவிரமாக இருப்பாரோ?

'பார்க்கணும்னு கூட்டிண்டு போரேன்!' என்று புதிய சிஷ்யன் சேர்த்துக்கொடுக்கும் சேவையில் இறக்க முயன்றேன்.

'இல்லே; வீட்டிலே காப்பி ஆறிப்பாயிடும்? சுருக்க போவோம் வாருங்க? இல்லாட்டா ஒரே தொல்லைதான்' என்று எட்டி நடந்தான் பாலு.

இரண்டு தெய்வங்கட்கு ஒரே சமயத்தில் சிஷ்யனாகும் திண்டாட்டத்தை பாலுவுக்கு ஏற்படுத்தக்கூடாது என்ற ஜீவகாருண்ய சேவையில் ஈடுபட்டேன்.

முல்லை - 7

விபரீத ஆசை

புதுமைப்பித்தன்

தாந்தோன்றித் தனமாக இசையில் படியாமல் குழம்பும் பாண்டு மேவும் வாத்யங்கள், ரோஜாப்பூ, ஊதுவத்தி, எருமுட்டை கலந்த வாசனை, தூரத்துப் பாடை எல்லாம் மெட்ராஸ் பிண 'வாசனை நாற்றம்' கலந்த காட்சியை என் புலனறிவில் இடித்து சிந்தனையையும் தாக்கியது.

நான் இப்பொழுது நிற்பது என் வீட்டு மொட்டை மாடி.

மனிதனுக்குப் பிணத்தைப் பார்க்கும் ஆசை, எல்லா ஆசைகளையும் விடப் பெரிது. பயத்தில் பிறந்த ஆசையோ என்னவோ?

அது ஒரு பணக்காரப் பிணம். அதாவது மாஜி பணக்காரனாக இருந்த பிணம்.

உடன் வருகிறவர்கள் ஜாஸ்தி. கொள்ளி வைப்பவனுக்கு கைத்தாங்கல் சம்பிரமம் எல்லாம்.

பிணம், பட்டு அணிந்திருந்தாலும் வாயைத் திறந்திருந்தது. திறந்த வாயை சந்தனம் அப்பி மூடியிருந்தார்கள். அப்பொழுதுதான் குளித்து எழுந்தவர் மாதிரி வாரிவிடாத நரைத்த கிராப்புத் தலை.

என் கண்கள் இந்த நுணுக்கமான விவரங்களை உயரவிருந்து இரண்டொரு நிமிஷ காலத்தில் கவனித்த தென்றாலும் என் மனம் வேறெங்கோ சென்றுவிட்டது.

நேரத்தையும் தூரத்தையும் தாண்டிச் செல்லும் யந்திரவிசை சிந்தனை யிடந்தானே இருக்கிறது.

புனரபி மரணம், புனரபி ஜனனம்....

"இதிலென்ன புதுசு... சவத்தை விட்டுத்தள்ளு" என்கிறது விவகார அறிவு. ஆனால் பற்றுதல் விட்டால் தானே.

புனரபி மரணம்... இத்யாதி... இத்தியாதி.

இதைக் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு நிர்விசாரமாகச் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

கலியாணமாகாத வயசுவந்த கன்னிப் பெண்ணை வைத்துக் கொண்டு, காக்க முயலும் மாஜி சுமங்கலி அவ்வாறு நிர்விசாரமாக இருப்பாளா? அதுதான் போகட்டும்; நாளைக்கு அடுப்பு மூட்ட வேண்டுமே!

வாழ்வென்ற குளத்தில் நிரந்தரக் கடன் என்ற பாசியை ஏதோ இரண்டொரு நாளாவது விலக்கும் முப்பது ரூபாயை இனி யார் வந்து போடுவார்கள்? ஜட்கா வண்டிக் குதிரை மாதிரி ஓடி ஓடி உழைத்தவருக்கு நாலு பேர் சவாரி சௌகரியமாக இருக்கும். ஆனால் அவரை விட்டால் கதியில்லை என்பவருக்கு—

அந்தக் காலத்தில் ரங்கசாமி நண்பன்தான். ரொம்ப நல்லவன். சாது. அத்தோடு அவன் மனைவியும் ரொம்ப நல்லவள். சாது. அதுமட்டுமா? விவரம் தெரியாத அழகி.

நான் அப்பொழுது அவர்கள் வீட்டுக்குப் போவேன்— அடிக்கடி

என் குழந்தையின் வியாஜமாக நான் அங்கு செல்லுவேன்.... என் குழந்தைக்கு அவர்கள்பேரில் ரொம்பப்பிரியம்..... அவர்களுக்கும் அப்படித்தான்.

நான் என் நண்பனைப் பார்க்கப் போவேன். என் எண்ணம் அத்துடன் நின்றுவிடவில்லை. அது அவர்கள் இரண்டு பேருக்கும் தெரியாது. என் மனமும் விழுந்து விட ஆரம்பித்தது. இப்பொழுது எனக்கு அவள் பேர் கூட ஞாபகமில்லை. அவ்வளவு காலமாகி விட்டது—

ரங்கசாமி வாழவேண்டிய இடம் சர்க்கார் ஆஸ்பத்திரி. என்னவோ தவறிப்போய் மேடைத் தெரு 9ம் நம்பர் வீட்டில் குடித்தனம் நடத்தினான். அவனும் நானும் ஒரே ஆபீஸில்தான் வேலை பார்த்து வந்தோம். அவனுக்கு முப்பது ரூபாய் சம்பளம்; எனக்கு ஐம்பது ரூபாய் சம்பளம். எனக்கு கால் தடுக்கினால் எங்கப்பா வைத்துவிட்டுப் போன வயல் வரப்பின் மேலாவது விழலாம்; அவன் கடன்காரன் காலடியில்தான் விழவேண்டும். அவ்ன் எத்தனையோ தடவை கடன்காரன் காலடியில் விழுந்திருக்கிறான்; கடன்காரனுக்குப் பின்னால் டாக்டர் எப்பொழுதும் நிற்பார்.

நான் அப்பொழுது என் குடும்பத்தை வீட்டுக்கு ஊருக்கு அனுப்பிவிட்டிருந்தேன். என் கைச் சமையல் கசந்தால், ரங்கசாமி வீட்டுச் சாப்பாடு அல்லது அட்டுப் பிடித்த ஐயன் கிளப் உண்ணாவிரதம்.

இந்த சமயத்தில்தான் நான் ரொம்ப நெருங்கி ரங்கசாமி வீட்டில் பழக நேர்ந்தது. டாக்டர் ஏதோ லத்தீன் பெயருள்ள காய்ச்சல் என்று சொன்னார். அவனது நோய் மறுநாள் என்று எல்லையில்லாமல் நீண்டுகொண்டே போயிற்று. கிடப்பில் விழுந்து விட்டான். மனைவி பிரசவத்திற்காகத் தாடி வளர்க்கும் ஹோட்டல் ஐயன் மாதிரி முகம், வர வரக் குழிந்து பிரேதக்களை காட்ட ஆரம்பித்தது விட்டது. மூன்று மாதம் அவளும் ஓயாது ஒழியாது உழைத்தாள்.

உத்தியோகமோ தனிப்பட்ட ஸ்தாபனத்தில், எத்தனை நாளைக்குத்தான் ரங்கசாமிக்காகக் காத்துக்கொண்டிருப்பான் எஜமானன்? வேலையும் போய் விட்டது. சுமை முழுவதும் என் மேல் விழுந்தது....

முதலில் எனது உதவியை சந்தோஷத்துடன் ஏற்றாள். பிறகு 'அண்ணா! அண்ணா!' என்று கூப்பிட்டு மனசைத் திருப்தி செய்து கொண்டாள்.

டாக்டர் வருவார்; மருந்து எழுதிக் கொடுப்பார், உணவு எழுதிக் கொடுப்பார்; உயிரை உடலுடன் ஒட்ட வைக்க அவரும் என்னென்னவோ வித்தை எல்லாம் செய்துதான் பார்த்து வந்தார்.

ரங்கசாமியைத் தூக்குவது, கிடத்துவது, அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்வது எல்லாம் நானும் அவளும்தான். அந்தத் தனியான வீட்டில் நானும் அவளுந்தான்.. இதே நினைப்புத்தான், எப்பொழுதும், என் மனசில் . உதவி செய்யும் பொழுது எங்கள் உடலும் தொட்டுக்கொள்ளும். எனக்கு சுரீர் என்று விஷமேறும். அவளுக்கு எப்படியோ?

இராத்திரியில் வென்னீர் ஏதாவது போட வேண்டுமென்றால், நான் அடுக்களைக்குச் செல்லுவேன்; அவள் உடனிருந்து பார்த்துக் கொள்ளுவாள்.

'அண்ணா' என்னவோ போல் பார்க்கிறாரே! என்ற ஓலம்கேட்கும். அடுப்பில் போட்டது போட்டபடி அங்கு ஓடுவேன். அவள் கணப்புச் சட்டியில் தவிட்டை வறுப்பாள் நான் வாங்கி வாங்கி ஒத்தடம் இடுவேன். நான் அவனையே பார்த்துக்கொண்டு பின்புறம் கை நீட்டும் பொழுது சில சமயம் என் கை அவள் கை வளையலில் படும்; அல்லது ஸ்தன்யங்களில் பட்டு விடும். அந்த ஒரு நிமிஷம் எனக்கு நரகவேதனைதான். அவளுடைய இளமையில் என் மனம் லயித்து நிற்குமே ஒழிய, அவளது சங்கடமோ, அவளது ஊசலோ எனக்குப்படாது. அச்சமயங்களில் நான் அவளைத் திரும்பிப் பார்த்ததில்லை. அவள் அதில் பட படப்பைக் காட்டிக் கலவரத்தை உண்டு பண்ணிவிட வில்லை. பின் பல முறைவேண்டுமென்றே தனியாக நாங்கள் நிற்கும்பொழுது அவள்மீது நான் பரீட்சை நடத்தியதுண்டு. ஆனால் பிரதிபலன், எதிர்பிரதிபலிப்பற்ற பார்வை தான்.

நாலைந்து நாள் கழித்து நான் ஆபீசுக்குப் போகப் புறப்படும்பொழுது ரங்கசாமியைப் பார்க்க அவன் வீட்டுக்குள் போனேன். விடியற் காலையில் அவர்கள் வீட்டிலிருந்து தான் என் ரூமுக்குத் திரும்பியிருந்தேன்.

முந்திய நாள் ராத்திரி ஒரு கண்டம். நடுநிசியில் டாக்டர் வந்தார். மருந்து கொடுத்திருந்தார்; தூங்கினால் விழிக்க வைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டுச் சென்றிருந்தார். காலை வரையில் ரங்கசாமி தூங்கவேயில்லை.

பார்லி கஞ்சியைப் போட்டு வைத்திருக்கும்படி சொல்லி விட்டு நான் என் ரூமுக்குச் சென்றிருந்தேன்.

திரும்பி வந்து பார்க்கும்பொழுது அவள் ரங்கசாமி பக்கத்தில் அலங்கோலமான உடையில் நின்று கொண்டிருந்தாள். தலையில் ஈரம் சொட்டுகிறது. இடையில் ஒரு துண்டுதான். மஞ்சள் இட்ட மாங்கல்யம் துல்யமாகப் பிரகரசித்துத் தொங்கிக் கொண்டிருந்தது. துண்டு அவளது ஈரம் காயர்த அங்க லட்சணங்களை எடுத்துக் காண்பித்தது.

என்னைக் கண்டவுடன்,- அவள் தன் உடை அலங்கோலத்தை நினைக்கவில்லை-என்னை பார்த்துத் தழு தழுத்த குரலில், 'வந்து பாருங்களேன், என்னமோ மாதிரி இருக்கே' என்றாள்.

நான் அருகில் சென்று ரங்கசாமியைத் தொட்டுப் பார்த்தேன்; நாடியைப் பார்த்னே; நாசியைப் பார்த்தேன்; அங்கிருந்தது மாஜி ரங்கசாமிதான்......

இவ்வளவும் என் புலனறிவுக்குத் தெரிந்ததே ஒழிய என் மனம், அவள் கட்டியிருந்த துண்டின் இடைவெளியிலேயே லயித்தது. மனசில் குமுறல்; பேய்க்கூத்து!

'ஒன்றுமில்லை, அயர்ந்த தூக்கம், இப்படிப் பயப்படலாமா? வாருங்கள் இந்தப் பக்கம்' - என்னவோ அன்று தைரியமாக அவள் கையைப் பிடித்தேன். எதிர்ப்பின்றி உடன் வந்தாள்.

'அந்த புடைவையை உடுத்துங்கள்' என்று கொடியிலிருந்து அதை எடுத்தேன்; அவளிடம் கொடுக்கவில்லை அவள் துண்டு நெகிழ்ந்தது; நான் மிருகமானேன்; அவள் பிணமானாள்!

நான் அன்று ஆபீஸுக்குப் போகவில்லை. ரங்கசாமியின் சடலத்தைப் பின்தொடர்ந்தவர்கள் நாங்கள் இருவர்தான் அவள் தீச்சட்டி எடுத்துக்கொண்டு நடந்தாள். திரும்பி வரும்பொழுது, அவளைப் பார்ப்பதற்கு எனக்குப் பரிதாபமாக இருந்தது. அவளை ஊருக்கு அனுப்பும்வரை நான் மீண்டும் அதைப்பற்றி நினைக்கவில்லை; அதனால் ஏற்பட்ட வெறுப்பையோ பாசத்தையோ அவள் காட்டிக்கொள்ளவில்லை.

அது எங்களுக்குள் ஓர் மறந்த சம்பவமாகியது என் மனம் நிம்மதியடைந்தது.

இப்பொழுது என் மகள் லக்ஷ்மிக்கு, அவர்கள் இருவரும் பிரியம் வைத்த சுண்டான், இப்பொழுது பருவமடைந்து விட்டாள்; எனக்கும் கொஞ்சம் கடன் இருக்கிறது; அதோடு பிராவிடன்ட் நிதியிலிருந்து, இன்ஷுர் தொகை கொஞ்சமும் அவளுக்கும் அவள் தாயாருக்கும் கிடைக்கும். கவலையில்லை; ஆனாலும் பிணத்தைப் பார்க்கும்போதெல்லாம் என் மனசில், ரங்கசாமி வீட்டில் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. அதேமாதிரி மிருக இச்சை தோன்றுகிறது.....

பார்க்காமல் ஓட முயலுகிறேன். முடியவில்லையே. கீழ்ப்பாக்கத்திற்கு என்னைக் கொண்டு போகும்முன், நாலுபேர் சவாரி கிடைத்தால் தேவலை என்று தோன்றுகிறது.

எல்லாம் ரங்கசாமியால் வந்த வினை. அவன் ஏன் இப்படி நோஞ்சானாகக் குடும்பம் நடத்த முயலவேண்டும்?

பிரேதத்தைப் பார்க்கும்போதெல்லாம் ஏன் இந்தக் கற்பனை? ரங்கசாமியும் அவனது மனைவியும் வந்து இந்த நாடகமாடிவிட்டுப் போகவேண்டும்?

எ-ன-க்-கு-ப் ப-ய-ம-ா இருக்-கே!"

முல்லை - 9

அவதாரம்

புதுமைப்பித்தன்

சிருஷ்டி எப்படி உண்டாகிறது?

மனத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பினாலே?

"துடிக்குதென் உதடும் நாவும் சொல்லு சொல் என்றே இடிக்குது குறளி" என்பதைப் போல், பொங்கி வரும் உணர்ச்சியின் வெளியீட்டினாலா?

சிப்பிப் புழுவின் உடம்பில் பட்டு உறுத்தி உறுத்தி வேதனை எழுப்பும் மழைத்துளியைப்போல். மனசில் விழுந்து உறுத்தும் விஷக் கறையினாலா?

மனசில் கறையின் உறுத்தல் இருந்தாலன்றி சிருஷ்டி உண்டாகாதா? கதையைப் படியுங்கள்.

பாளையங்கால் ஓரத்திலே, வயற் பரப்புக்கு வரம்பு கட்டியவை போன்ற பனைவிளைகளுக்கு அருகே குல மாணிக்கபுரம் எனச் சொல்லப்பட்ட குலவாணிகபுரம் இருக்கிறது இந்தச் சிற்றூரில் யாதவர்களும் கொடிக்கால் 'வாணியர்' களுமே ஜாஸ்தி. மருந்துக்கு என்று வேளாண்குடிகளும் கிராமப் பரிவாரங்களான குடிமகன், வண்ணான், முதலிய பட்டினிப் பட்டாளங்களுக்கும் குறை கிடையாது, ஊரில் செயலுள்ளவர்கள், யாதவர்களே.

கிருஷ்ணக்கோனார் என்ற கிருஷ்ணசாமிதாஸ் யாதவர்களுக்குள் யோக்கியர் என்ற பெயர் வாங்கியவர். யோக்கியர் என்றால் அயோக்கியத் தன்மையில் இறங்காதவர் என்றே அர்த்தம். சந்தர்ப்ப வசதி இல்லாததினாலோ என்னவோ நல்லவராகவே பெயரெடுத்து வந்திருக்கிறார்.

ஆனால் விதி, உடம்பை வளைத்து வேலை செய்ய முடியாத வரை காத்திருந்துவிட்டு, அவருக்கு ஒரு குழந்தையை - ஆண் பிள்ளையை - மட்டும் கொடுத்து மனைவியை அகற்றி அவருடைய நடமாடும் சொத்துக்களான கால் நடைகளிடையே கோமாரியைப் பரப்பி விளையாடியது.

வெகு சீக்கிரத்தில் கஷ்டங்களை அறியலானார். சாப்பாட்டுக்கும் கஷ்டம் வந்தது. குழந்தையை வைத்துக் கொண்டு பராமரிப்பது தலைக்கட்டு நிர்வாகத்தை விடத் தோன்றியது கிழவனாருக்கு.

பையனுக்கு இசக்கிமுத்து எனப் பெயரிட்டு, இசக்கியின் அருள்விட்ட வழி என ஏக்கத்திலும், ஏமாற்றத்திலும் ஏற்படும் நிராதரவில் பிறக்கும் திருப்தியை பெற்றார்.

குழந்தையும் நாளொரு ஏமாற்றமும் பொழுதொரு கஷ்டமும் அனுபவித்து வளர்ந்து வந்தது. விதியின் கொடுமையைக் கண்டு சிற்றமடைந்தோ என்னவோ, இயற்கை அவனுக்குத் தன் பரிபூரண கிருபையை வருஷித்தது. உடலும் மனமும் வறுமையின் கூர்மையிலே திட்சண்யப்பட்டு வளர்ந்தது.

இசக்கிமுத்துவைப் பார்த்தால், மனம் அவன் காலடியில் விழுந்து கெஞ்சும். ஆனால் அதே மனம் அவனுக்காக கண்ணீர் வடிக்கும். அவனது முகச் சோபை அப்படி. குழந்தையின் துடிவைக்கண்டு கோனார் அவனுக்கு 'நாலெழுத்து படிச்சுக்கொடுத்து உத்தியோகம் பார்க்கும் படி செய்விக்கவேணும்' என அசைப்பட்டு, திண்ணைப் பள்ளியில் சேர்த்துவிட்டார்.

புது விஷயங்களைக் கிரகிக்க இசக்கியிடம் இருந்த ஆவலுக்கு ஏற்றபடி திண்ணை வாத்தியாரின் அறிவுப் பொக்கிஷம் விசாலமாக இல்லை. அதன் விளைவாக கல்வியரங்கம் மாறியது.

கோனார் மறுபடியும் குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு பாளையங்கோட்டை சாமியார் பள்ளிக்கூடத்திற்குப் பிரயாணமானார், எம்மதத்தவரானாலும் துறவிகளாக வருகிறவர்களுக்கு நம்மவர் செலுத்தும் மரியாதை சிற்சில இடங்களில் தவறான மதிப்பும் அந்தஸ்தும் கொடுத்து விடுகிறது. இத்துடன் ஓரளவு தர்மச் செலவு செய்யும் சேவையும் சேர்ந்துகொண்டால் அந்தஸ்து வளர்ச்சிக்கு அளவே கிடையாது. ஏகாதிபத்தியத்திற்கே பிரத்யேகமான வர்ணம் என்ற வெள்ளைத் தோலும் சேர்ந்துகொண்டாலோ கேட்கவேண்டியதே இல்லை. இந்த மூன்று அந்தஸ்தும் கொண்ட பிறமத மிஷனரிப் பள்ளிக்கூடங்கள் தர்மம் செய்யும் ஏகாதிபத்தியமாக, ஏகாதிபத்தியம் செய்யும் தர்மஸ்தாபனமாக இரண்டு நோக்கங்களையும் கதம்பமாக்கி இரண்டையும் ஒருங்கே குலைத்து வருகிறது.

இப்படிப்பட்ட ஸ்தாபனம் ஒன்றின் ஸ்தல சர்வாதிகாரி அர்ச்ஞானானந்தச் சாமியார். இவர் ஸ்தல கிருஸ்துவர்களின் ஒரு வகுப்பாருக்கு மோட்சத்தில் இடம் போட்டுக்கொடுக்கும் வேலையுள்ள ஸ்தல ஹைஸ்கூலின் தலைமை நிர்வாகத்தை ஏற்று இங்கிலீஷும் சரித்திரமும் போதித்து வருகிறார்.

இவர் வசம் கோனார் தம் குழந்தையை ஒப்புக்கொடுத்தார். சாமியார் இலவசப் படிப்பும் அவன் வாழ்வுக்கு என்று மாசம் நான்கு ரூபாய்

சம்பாவனையும் கொடுப்பதாக வாக்களித்ததில் கோனாருக்கு மகிழ்ச்சி கங்கு கரையில்லாமல் பிறந்தது. "பிள்ளையை எப்படியும் நாலெழுத்து வரும்படி செய்விக்கவேண்டும்" எனக் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு வீடுவந்து சேர்ந்தார். குழந்தையும் சோற்று மூட்டையுடன் புஸ்தகச் சுமையையும் தாங்கி பாளையங்கால் கரை மேலாக கல்வி யாத்திரை செய்துவந்தான். படிப்பு ஏழாவது வரை வந்தது.

பையனுக்கும் சாமியாருக்கும் திடீர்ப் புயலாக லடாய் ஏற்பட்டு கிழவரின் நிதானத்தைக் குலைத்தது. இந்தக் காலமும் சாமியார் செய்த பிறமதப் பிரசாரத்தைப் பிரமாதமாகப் பொருட்படுத்தவில்லை. கிருஸ்துவின் பரித்தியாகம் இவன் மனசைச் சிறிது கவர்ந்தது என்றாலும் கிருஸ்து முனியின் தத்துவம் பூண்டிருந்தும், அமல் மிகுந்த சேவை அவனுக்கு அவரது தத்துவத்தின் மேல் வெறுப்பையே ஊட்டியது மேலும் புண்ணைக் காட்டி பிச்சை வாங்குவதற்கும் கிருஸ்துவின் புண்கள் வழியாக அவர்களும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை நம்பும்படி தன் வயிற்றுப் பசியை உபயோகிப்பதற்கும் பிரமாத வித்தியாசம் ஒன்றுமில்லை என்றே இவன்நினைத்து வந்தான். அதனால் அவன் இந்த முயற்சிகளைச் சட்டை செய்யவில்லை. ஆனால் இது மட்டும் இந்த மதஸ்தாபனத்தில் இல்லை. ஈராயிர வருஷங்களாக மதப்பிரசாரமும் செய்து பழுத்து முதிர்ந்து போன ஒரு ஸ்தாபனத்தின் ஒரு லட்சியமோ கொள்கையோ இல்லாதவர்களும், அல்லது லட்சியத்திலோ கொள்கையிலோ நம்பிக்கையில்லாதவர்களும் பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டிக்க முயலுவதும், அனுஷ்டிக்கும்படி கட்டயப்படுத்தப்படுவதும் ரொம்ப அபாயகரமான விஷயம். தீயுடன் விளையாடுவதாகும். இது மன விகாரங்களில் புகுத்தும் சுழிப்புக்கள் அந்த மனிதனுக்கு ஆபத்தை விளைவிப்பதுடன் நின்றுவிடாமல் ஸ்தாபன பலத்திற்கே உலைவைத்து விடுகின்றன.

இசக்கிமுத்துக்கு ஏழாவது வகுப்பில் ஏற்பட்ட உபாத்தியாயர் அர்ச்.பெர்னான்ட்ஸ் சாமியார் விபரீத ஆசையைக் கொண்டவர். பையனுடைய அழகு அவருடைய நேர்மையற்ற காம விகாரத்திற்கு இலக்காகியது. பையன் திடுக்கிட்டான். தலைமைச் சாமியாரிடம் ஓடித் தெரிவித்தும் நிவாரணமோ ஆறுதலோ கிடைக்க வழியில்லாமல் போக, சிறு குழந்தைத் தனத்தில் அனுபவ சாத்தியமற்ற முறைகளைக் கையாண்டு பள்ளிக் கூடத்திலிருந்து விரட்டப்பட்டான்.

தகப்பனுக்கும் மகனுக்கும், இருவரும் அன்னியோன்னியப் பரிவுகள் நடந்துகொள்ள வசதியளிக்கும் நிர்க்கதியானநிலைமையிலிருந்தும் மனம் ஒன்றாமல், அந்தஸ்து கொடுத்து வாங்கும் தூரத்தைக் குறைக்காமலே நடந்து வந்ததால், பள்ளிக்கு முழுக்கு போட ஏற்பட்ட காரணத்தைக் கூற என்னால் முடியவில்லை. 'மதம் மாறச் சொன்னார்' முடியாது என்றதால் விரட்டப்பட்டதாக அறிவித்துவிட்டான். தெய்வமாகப் பாவித்து வந்த சாமியாரின் ஆசையைப் பூர்த்திசெய்துவிட்டால்தான் என்ன எந்த மதத்து மோட்சமானால் என்ன என்றே கிழவருக்குப்பட்டது. மேலும் ஹிந்து

தர்மம், தாழ்ந்த வகுப்புக்கள் 'பொட்டுக்கட்டி' தன் விசேஷ பரிவைக் காட்டிவரும் சில வகுப்பின் ஆசாரங்கள் மாமிச உணவை விலக்கி வைக்காதிருப்பதால், இவ்வகுப்புக்களிலிருந்து பிற மதங்களுக்குப் போகிறவர்களுக்கும் அவர்களுக்குமிடையில் தொடர்பு அவ்வளவாக அறுந்துவிடுவதில்லை. அதனால் கோனாருக்குப் பையன் செய்தவேலை பிடிக்கவுமில்லை; புரியவுமில்லை. இருந்தாலும் அவனைக் கண்டிக்க வில்லை. வேறு பள்ளியில் சேர்க்க முயலவுமில்லை.

இந்த நிலையிலே இசக்கிமுத்தின் மனவுலகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அதாவது அவன் தன்னை அறிந்து கொண்டான். ஒரு நாள் ஏனோ தானோ என்று வில்லுப்பாட்டின் ஆவேசத்திற்கு இணங்க அவன் கக்கிய வார்த்தைகள் இத்தனை நாட்களாக ஊமைக் கவிஞனாக அனுபவித்து வந்த இன்பங்களை எல்லாம் இசையில் கொட்டினான். சில சமயங்களில் பிரமிக்கும் இசைக் கனவுகளை எழுப்பியது; ஆனால் பல வார்த்தைப் படாடோப இடிமுழக்கங்கள், கனவைக் சிதைக்கும் கரகரப்புகளுடன் பிறந்தன வென்றாலும் பொதுவாக முறையாகத் தமிழ் படிப்பது என்ற சம்பிரதாயத்தால் ருசி கெட்டுப்போகாததினால் பாட்டில் உண்மையும் தெளிவும் தொனித்தது. ஆனால் புராதனச் செல்வங்களில் தொடர்பும் பரிச்சயமும் இல்லாததினால் நெஞ்சுக் கொடியைத் தோளில் தூக்கிப்போட்டுக்கொண்டு பிறந்தவுடன் தெருவழியாக கோஷமிட்டுக்கொண்டு ஓடும் குழந்தையின் அசாதாரணத் தன்மையைப் பெற்றிருந்தது. ஆனால் இசக்கிமுத்தின் பாட்டு, இசக்கிமுத்தின் 'வெளிவராத ரகசியமாக' இருந்து வந்தது.

இப்படியாக மனக்கனவுகளைப் பாடுவதும் கிறுக்குவதும் கிழிப்பதுமாகக் காலங்கழித்தான் இசக்கிமுத்து.

2

ரூபமற்ற, நாமமற்ற, அனாதியான, பொருளற்ற, பொருளுக்கு அப்பாற்பட்ட அந்த வஸ்து அதாவது, வஸ்து என்ற வரம்புக்கு மீறியதும், வரம்பே இடிந்ததுமான ஏதோ ஒன்று என்ற ஒன்றல்லாத, பலவும் அல்லாத அந்த 'அது' சிந்திக்க ஆரம்பித்தது; தன்னை உணர ஆரம்பித்தது; தன்னை உணர்ந்து தன்னையே உணரவும் அஞ்ச ஆரம்பித்தது. பூர்த்தியாகாத ஆசைவித்துக்கள் மாதிரி கொடுமையின் குரூரத்தின் தன்மைகள் தன் சித்த சாகரத்தின் அடியில் அமுங்கியும் குமிழிவிட்டு பிரபஞ்சம் என்ற தன்னையே கண்டு அஞ்சியது. தன்னையே நோக்கியது. தானான மனிதர்கள் தன்னுள் ஆன மனிதர்கள், தன்னைக் கையெடுத்து வணங்கி தன்மீதே இலட்சியங்களைச் சுமத்தி, நன்மை நலம் மோட்சம் என்ற கோவில்களைக் கட்டுவது கண்டு கண்ணீர்விட்டது. அவர்கள் நம்புவதுதான் அல்ல என்று அவர்களிடம் அறிவிக்க விரும்பியது, துடிதுடித்தது.

3

கிருஷ்ணக்கோனார் அந்திமதசை யென்னும் அஸ்தமனக்கிரணங்கள் தன்மீது விழுவதைக் கண்டுவிட்டார். அர்த்தமற்ற புதிராக இருந்துவரும் பெரிய மாறுதலின் காலம் அணுகுவதை உணர்ந்துவிட்டார். இனி எப்படியோ? இதுவரை நடந்துவந்த வாழ்வுப்பாதை பிறப்பு என்ற சித்தவான் வளையத்தைத் தொடும் அந்த மங்கிய எல்லையிலிருந்து அன்றுவரை ஏற்பட்ட மாற்றங்கள், கொந்தளிப்புக்கள், சுழல்கள் எல்லாவற்றையும் சமநோக்குடன் பார்க்கும் அப்பொழுது ஆட்டிய அதிர்ச்சிகள் அற்றுநோக்கும் தன்மையைப் பெற்றார். இன்னும் ஒரு ஆசை மட்டும் பூர்த்தியாகவில்லை.

அவனுக்கு கலியாணத்தைச் செய்துவிட்டால், தன் கடமை பரிபூரணமாக நிறைவேறியதாகவே அவர் தீர்மானித்தார்.

லெட்சுமி என்ற பெண் இசக்கிமுத்துக்கு உடலதிர்ச்சிகளில் இருக்கும் இன்பத்தைக் காட்ட அவ்வூர்ப் பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டாள். புதுக்குடித்தனம் என்னும் பதினெட்டாம் பெருக்கு களிபுரண்டு கொந்தளித்துச் சுழித்து ஓடியது மனக்கனவுகள் என்ற தெப்பம் இசக்கி முத்துக்கு நிலை தடுமாறி குதித்து முழங்கிச் சென்றது. கனவுகள் புதுவடிவம், நிஜவடிவம் பெற்றன. அவன் பாட்டை எழுதுவதை நிறுத்திவிட்டான். நேரில் நிறைவுபெற்ற மனம் பாட்டில் துள்ளிப் பொங்கவில்லை அவன் கனவுகள் நாதவடிவம் பெறாமல் நாள் மணிக்கணக்கில் நிஜ 'தரிசனத்தில்' ஒடுங்கியது.

4

எல்லாம் தானாகவும், தன்னில் வேறாகவும் வேறு என்ற பேதமற்றும் இருக்கும். அது தன் தொழிலில், தன் நியதியில், தன் இயற்கைத் தன்மையில் சந்தேகம் கொண்டது. பயம் கொண்டது. தன் தொழிலை தானே நிறுத்த இயலாமல் தவித்தது. தனக்குத் தன் தொழில் தெரியவில்லை எனக் குமைந்தது. சிருஷ்டித் தொழில் கலையின் நியதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் கண்டது தான் நிலையாமல் தன் பூர்த்தியாகா ஆசைகள் தன் தொழிலில் விழுவது கண்டு தனக்குத் தன் பயிற்சியில்லை, கலையில்லை அதாவது சிருஷ்டித் தன்மைக்குத் தான் லாயக்கில்லை என நினைத்தது.

வருஷம் முழுவதும் பதினெட்டாம் பெருக்காக இருக்க முடியுமா? வெவ்வேறு நிலையில் உள்ள உணர்ச்சி, பிரவாகம்போல ஒன்றையொன்று மோதி பொதுநிலையடையும் வரை கொந்தளிப்பும் சுழற்சியும் இருக்கும். நிலைமை சமப்பட்டவுடன் வேகம் குறையாது போனாலும் மேலுக்குத் தெரியாமல் இருக்கும். இசக்கிமுத்தின் மனத்துடிப்பு இந்த நிலையை அடைந்ததின் பயனாக, அதன் நிதானத்தைத் தப்பிதமாகக் கருதும்படி லெட்சுமிக்கு மனப் பண்பு இருந்ததால், அவனுக்குத் தப்பிதம் செய்து

விட்டாள். நிதானப்போக்கை அசட்டை என்று நினைத்ததின் விளைவாக சந்தர்ப்ப விசேஷத்திற்கிணங்க விபரீதம் விளைந்துவிட்டது. விளைந்ததும் இசக்கிமுத்துக்குத் தெரிந்தது.

நாதப்பிசகு ஏற்படாமல் ஒலிக்கும் படி செய்துவந்த அவனது மனவீணையின் நரம்புகள் அறுந்து தொங்கும்படி உணர்ச்சி வாசித்து விளையாடிவிட்டன. உன் மத்தன் ஆனான். பூர்வஜன்மம் என்ற வசதி இருக்கிறதோ என்னவோ மனித ஜீவனுக்கு உள்ள விசேஷ வசதிகளையும் சக்திகளையும் நம்மால் அறிய முடியாது.

இசக்கிமுத்து அவளை மன்னிக்கும் மனப்பண்பு படைத்திருந்தான்; நபும்சகத்தால் விளையும் சகிப்புத் தன்மையல்ல பரிபூரண மன்னிப்பு ஆனால் மனம் அறுந்து தொங்கியது. கொழுந்து விடாவிட்டாலும் கங்கு அவியவில்லை. சில சமயம் சித்தம் அளந்து கட்ட முடியாத விபரீத அளவுக்கு மனம் பேயுருக் கொண்டு குமுறியது. தன்னையே தின்று தணிந்தது.

மனசின் குதியாட்டத்தைக் கண்டு அஞ்சிய இசக்கி முத்து அதன் கடிவாளம் தன் கைக்குச் சிக்கும்படி பண்படுத்த லயக்குறைவு இல்லாததால் இசை எழுப்ப விரும்பினான். பாட்டு உண்மையில் துடிதுடிப்புடன் பொங்கியது. வார்ப்பில் பரிபூரண அழகு முன்போல அனாயாசமாக விழவில்லை. கற்பனையில் கைப்பு தட்டியது. கனவை ஏமாற்றம் ஏந்தி நின்றது.

நிராகரித்தான்.

கலைவாணியின் வழி சிருஷ்டியின் வழி என்பதை உணர்ந்து அறிந்தவன்; அறிந்து உணர முயன்றவன் அல்ல. மனப்பண்புதான் கவிதையின் மார்க்கம் எனக் கண்டான். மனிதனுடைய பரிபூரண லட்சியமாக தெய்வக் கனவில் மனசை லயிக்கவிட்டால்தான் பாட்டில் பண்பு பிறக்கும் என நினைத்தான்.

லட்சுமியை விட்டுப் புறப்பட்டான். சமூகத்தை மறந்து வெளிப்பட்டான்.

மன லட்சியத்தின் பூத உருவமான ஹிமயத்தை நோக்கினான்.

நடந்தான்.

5

அந்த அது மனித உருவம்கொண்டு, மனிதன் நினைக்கும் தான், தானல்ல என மனிதனிடம் பறையடித்து அறிவித்து, தன் சுமையை இறங்கிக்கொள்ள விரும்பியது.

மனித உருக்கொண்டது.

தாடியும் மீசையும் நரைத்துப் பழுத்த கிழவனாராக உருவெடுத்தது.

ஹிமயத்தில் காலடி வைத்தது.

நடந்தது.

ரூபத்திலே தெளிவு இருப்பதை உணர்ந்தது. தன்மீது சுமை இல்லையோ எனக்கூட சந்தேகித்தது. ஆனால் பொறுப்பை மறந்துவிடவில்லை. ஏனென்றால் அதனால் அதை மறக்க முடியவில்லை.

நடந்தது......

நடந்து வந்தது.

இசக்கிமுத்தும் நடந்து வருகிறான். அவன் முகத்தை தாடியும் சிகையும் மறைத்தது. ஆனால் மனக்கொதிப்பின் புகை மண்டலம்போல் முகத்தைச் சுற்றிச் சிதறிப் பறந்தது

6

இருவரும் சந்தித்தனர்.
அது அவனைச் சந்தித்தது;
அவன் அதைச் சந்தித்தான்.
"நான், நானில்லை" என்றது அது.
"நான் நானில்லை" என்றான் அவன்.
'யோகத்தில் அமருவோம்" என்றான் அவன்.
இருவராக அமர்ந்தனர்: ஒருவராக இருந்தனர்.
அது அவனில் தன்னைக் கண்டது.
அவன் அதில் தன்னைக் கண்டான்.

முல்லை - 11

கவிதைகள்

மக்கட்கு அன்பன்	-	டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
அக்காள்	-	கோவை அ. அய்யாமுத்து
உண்டு இல்லை	-	கம்பதாசன்
முல்லை சிரிக்க முழங்கிய சங்கம்	-	வ. உ. சி. சுப்பிரமணியம்
வெற்றிச் சங்கு	-	வ. உ. சி. சுப்பிரமணியம்
முல்லையின் பெருமிதம்	-	சொக்கு
கவிக்கனல்	-	பெ. தூரன்
நெற்பயிர்	-	சி.து. கன்னிசாமி
ஏய்த்துவிட்டார்	-	கு. அழகிரிசாமி
எது வாழ்க்கை?	-	நாணல்
தாக்கீது	-	தார்க்கோல்
தற்சிறப்பு	-	திருச்சிற்றம்பலக் கவிராயர்

மக்கட்கு அன்பன்

அ. சிதம்பரநாதச் செட்டியார்

அன்றொருநாள் அயலூரில் அரங்கன் கண்டான்
அறையினிலே ஒருருவம் எழுதுங் காட்சி;
நின்றபடி நின்றிட்டான், நிலாவும் வீசும்;
நிழலுருவம் போற்றிகழும் நீடுருவம் எழுதும்;
குன்றனைய குணவுயரக் குமரன் நடந்தான்,
குறுகியவண் அவ்வுருவைக் "கூறிடுக" என்றான்;

பொன்றாத அவ்வுருவும் "போற்றிக் கேட்க
புங்கவன்பால் அன்புள்ள பேரின் பேரை"
எனக்கூற, ஆங்கவனும் "என்பேர் உண்டோ
எடுத்துரைக்க" எனக்கேட்க உருவம்பேசும்;
"உன்பேர்தான் ஈங்கில்லை என்செய் வேன்யான்;
உளமுடைந்துந் தளராதே அரங்கன் உரைப்பான்:

"நனவோதான் கனவோதான் என்றாலும் எழுது
நானிங்கே இனத்தார்க்கு மக்கட்கு அன்பன்"
என, ஆங்கே அவ்வண்ணம் எழுதியே சென்ற
எழிலுருவம் அவன் பெயரை முன்வைத்த தாமே.

முல்லை - 1

இது லே ஹண்டு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய "அபோ பென் ஆடெம்" என்ற கவியைத் தழுவியது.

அக்காள்

கோவை – அ. அய்யாமுத்து

அக்காளென் வீட்டினிலே
எக்காரணத்தாலும்
தக்கார் பலபேர்கள்
திக்கேயிலதவள்போல்
தக்காதுபோவெனநான்
எக்காளமேயோதி
பக்காத்திருடன் பொய்ப்
அக்காளின் பக்கலிலே

அதிகாரஞ் செய்வதையான்
இனிப்பொறுத்திருப்பேனோ?
தாரணியிலேயிரக்கத்
தேடியென்றன் வீடிருத்தல்
தடவைபலவேயுரைத்தும்
எதிர்வாதஞ் செய்வாளப்
பஞ்சாங்கப் பார்ப்பானும்
ஆதாரங் காட்டுகிறான்!

பச்சைப் பசேலென்ற
பார்த்தாலே பசியாறும்
மாவும், பரியினமும்
யாவுங் குறைவின்றி
மிட்டாதாரென் மச்சான்
பட்டம் பதவிகளும்
பட்டத்துத் தேவியரும்
பாரிலவன் போலே

பரந்தவயல் தோப்புகளும்
பற்பலவாம் காய்கனியும்
மாடுமறி ஆடுகளும்
யாண்டும் புகர்பரப்பி
மிகச் சொகுசாய் வாழுகிறான்
பறந்தவனைத் தேடிவரும்
பரிந்தவனை வரவேற்பார்
பணம்படைத்தார்யாருமில்லை

அண்ண னொருவனுமே
ஆலை பல பூட்டி
பெருகிடுஞ் செல்வமுடன்
தருமத்தின் சத்துருவாய்த்
வானிற் பறக்கின்றான்
சூழற் சகுனியெனத்
நம்பிகட்டுஞ் சீசாவைக்
கணக்கின்றியே யுடைத்துக்

லாகாசந் தொட்டுநிற்கும்
ஆட்கள் பலபேருழைக்கப்
பேசரிய போகமுடன்
தாரணியில் வாழுகிறான்
வாகனங்க ளேறுகிறான்
தோணுகிறான் வல்லவனாய்
காலையிலும் மாலையிலும்
களித்துலகில் வாழுகின்றான்.

மாமனொருவனவன் மன்னவரும் வியப்படையு
மாறுவர்த்தகத்தில் மன்னனென விளங்குகிறான்
காமவெறிகொண்டு கணத்திற்கொரு பெண்ணாய்
காமனுமதிசயிக்கக் கலந்து தினந் தழுவுகிறான்
அள்ளிக் கொடுக்கின்றான் ஆயிரம் பரத்தையர்க்கு
துள்ளிக் குதித்துலகம் சுற்றிவலம் வருகின்றான்
சகல னொருவனுயர் சம்பளம் பத்தாயிரத்தில்
சகல வதிகாரமுடன் சர்க்காரி லிருக்கின்றான்.

தாயாதி யொருவன் சீர் தனவணிக னென்றுசொல்லி
தட்டிப் பறித்திடு பல் வட்டிக் கடைகள் வைத்து
வயிரமுத்துப் பொன்னோடு வயல்தோப்பு மச்சுகளும்
வாங்கிக் கணக்கின்றி வாழுகிறானிந்திரன்போல்
நங்கையர் பலபேர்கள் நாடக சங்கீதமுடன்
நாட்டியமு மாடுகின்றார் நாடியவன் மலைசேர்ந்தே
அங்கெல்லா மென்னக்காள் அடியெடுத்தும் வைக்காமல்
என்மனையிலே யிருந்தே ஏனோ பழி வாங்குகிறாள்?

பாலை வனமலைந்து பாழ்ங்கிண றுகண்டதுபோல்
ஏழை, மிகவுழைத்து எச்சுகமு மறியேனென்
குடிலோ மிகச்சிறிது குழந்தைகளோ மிகவதிகம்
குடிப்பதற்கோ கஞ்சியலால் கொழுத்த வுணவாதியில்லை
உடுத்துமுடை சுருக்கம் உடல்நலனோதினம் மயக்கம்
கடன்சுமையோ குறைவதில்லை கட்சிகளும் விடுவதில்லை
இந்நிலையிலக்காளும் இருக்கின்றா ளென்குடியில்!
இனியவளை யொருகணமும் இருக்கவிடல் சரியாமோ?

முல்லை - 6

உண்டு – இல்லை

கம்பதாசன்

புல்சிரிக்கு தென்றால் யான் - அவன்
புரளும் பனித்துளி என்பான்!
கல்லைரிஷி என்றால் யான் - அவன்
கல்லுக்குயிர் இல்லை என்பான்!
நல்லமுத்து என்றால் யான் - அவன்
நாலும்வாய்ப் பல் என்பான்!
வில்லின் நுதலென்றால் யான் - அவன்
வேர்வை வழிதோ லென்பான்!

இருட்கண்ணீர் என்றால் யான் - அவன்
எரி நட்சத்திர மென்பான்!
பொறுமைவடி வென்றால் யான் - அவன்
பொதிதாங்கு கழுதை என்பான்!
குருத்து நிற மேனியென்றால் யான் - அவன்
குமரி தன் கொழுப் பென்பான்!
வருத்தம் தந்தா யென்றால் யான் - அவன்
வருத்தம் தந்தாய்நீ என்பான்!

ஒன்றானோம் வருத்தத்தால் - இந்த
உலகினில் நானவனும்!
என்றும் இல்லா வருத்தந்தான் - எமை
இணை பிரியச் செய்திடாதோ?
உண்மையும் பொய்மையும் - இங்கே
ஒன்று கலந்து விட்டால்
அன்புக்கு ஆட்சியுண்டு - இன்றேல்
ஆவிக்கும் வேலையில்லை !

முல்லை - 7

முல்லை சிரிக்க முழங்கிய சங்கம்

வ.உ.சி. சுப்பிரமணியம்

"முல்லை" சிரித்ததடா - தம்பி மொட்டு மலர்ந்ததடா
அல்லல் தொலைந்ததடா - தம்பி அறிவு மணந்ததடா
எல்லையில் பேரொளியே - தம்பி எங்கும் நிறைந்ததடா
ஒல்லை தரும் துன்பம் - தம்பி ஓடிஒளித்ததுவே!

தென்றலும் வந்துவீச - தம்பி தீந்தமிழ் ஒலித்ததடா
அன்றே ஒழிந்ததடா - தம்பி அச்ச மழிந்ததடா
ஆண்மை வளர்ந்ததடா - தம்பி ஆளுகை பெற்றோமடா
பெண்மை உயர்ந்ததடா - தம்பி பேதமை மாய்ந்ததுவே!

வெற்றிச் சங்கு

நித்தமும் தமிழ் மணக்க நீணிலம் தமிழ் முழங்க
சத்தமெலாம் தனித்தமிழே தாரணியே ஒலிக்க
வெற்றியும் கண்டோம்; இனி வீணாகத் தானுழையோம்
பெற்றியிதே என்றிங் கூதேடா வெண்சங்கம்!

முல்லையின் பெருமிதம் – *சொக்கு*

பால் நிலவைப் பரிகசித்த வெண்மை சேர்த்தேன்
பனி நீரைக் குளிர்வித்த தண்மை பெற்றேன்

கால் நிலவும் என்னிலத்து மக்கள் கையில்
காணுகின்ற போர்ப்படைகள் மீது சேர்வேன்

சேல் குலவும் விழியுடைய மங்கை மாரின்
சிறந்த சிரிப்பாக என்றும் திகழு கின்றேன்

நூல் உலவும் உளமுடைய கவிஞர் தம்மின்
நுண்ணிய பாக்களி லென்னை வாழ்த்துகின்றார்

முல்லை - 7

கவிக் கனல்

பெ. தூரன்

வில்லெனும் சிறைக் கட்டினை - நீங்கி
வேகங் கொண்டுபாய் அம்பு போல்
சொல்லையுங் கடந்தேகுமோர் - உள்ளத்
துடிப்பிலே கவி சொல்லுவேன்

மின்னல் ஜோதிகைக் கொண்டவன் - வெறும்
மேகக் குப்பையைத் தீண்டுமோ
கன்னல் தேனினை உண்டவன் - அந்தக்
கசட்டுச் சக்கையை நாடுமோ

வானப் பூக்களைக் காட்டியே - நல்ல
வையப் பூக்களைக் கூட்டியே
கானத் தீஞ் சுவை ஊட்டியே - வீசுங்
காற்றின் மூச்சினை நாட்டியே

சீறு நாகத் திரையினில் - கடல்
சேரும் நீலப் பரப்பினில்
ஆறு பாய்ந்திடும் ஓசையில் - மலையின்
அசைவிலாத கம்பீ ரத்தில்

கானப் பைம்மரப் பேச்சினில் - இளங்
கன்னிப் பேரெழில் வீச்சினில்
மோனப் பேரொலி தன்னிலே - நன்கு
மூட்டுவேன் கவிக் கனலே

முல்லை - 8

நெற்பயிர்

சி.து. கன்னிசாமி

வாழிய நெல்லெனும் பேரினாய் - பெரு
    வையம் புகழ்ந்திடு சீரினாய் - புகழ்
ஊழி யளவினும் தேக்கினாய் - நிலம்
    உற்ற பெருந்துயர் போக்கினாய்

நீரகம் கொண்ட வயலிலே - இனம்
    நீடு முழவர் செயலிலே - விளை
ஏர்அகம் வாய்க்கும் இணையிலாய் - சொலும்
    ஈடு மெடுப்புஞ் சிறிதிலாய்

'சொல்' எனும் ஒண்பெயர் சூடுவாய் - பசுந்
    தோற்றம் பெறமகிழ்ந் தாடுவாய் - நிறம்
அல்லெனும் சேற்றினில் கூடினாய் - அவண்
    அன்புறு மக்களை நாடினாய்

தூநிற வெண்முளை தோற்றியே - பசுந்
    தோற்ற முறுந்தளிர் நீட்டியே - வயல்
மேனி கவின்கொள ஆக்குவாய் - நில
    மேவுந்த துயரினைப் போக்குவாய்

காலை யுழவர் கருதியே-வரு
    காலை மகிழ்வு பெருகியே - இளம்
காலில் தலையசைந் தாடுவாய் - மக்கள்
    கண்மணி யாம்நிலை தேடுவாய்.

வாழை யிளஞ்சுருள் மானவே - ஒரு
    வாழு பசுஞ் சுருள் ஈனுவாய் - நிறஞ்
சூழு பசுங் கதிர் தோற்றுவாய் - கவின்
    தோன்றப் பணைவள மாற்றுவாய்

இவ்வண நாட்பல ஏறவே - கதிர்
எய்திய வந்நிற மாறவே - பொலஞ்
செவ்வண மாகித் திகழ்ந்திடும் - இனஞ்
சேரப் பணைத்துச் செழித்திடும்.

கற்பின் மடந்தையர் காட்சிபோல் - கலை
காணு மறிவினர் மாட்சிபோல் - கதிர்
முற்றி வணங்கினை ஓங்குவாய் - அவண்
மொய்த்திடு பொன்னிறந் தாங்குவாய்

மேதக வாய்ந்த விளைவினால் - மகிழ்
மேவு முழவர் செயலினால் - மலை
ஈதென நின்னை இயற்றுவார் - சக
டேற்றித் தம்இல்லம் நிரப்புவார்

நின்னரு ளாற்பசி நீங்குவார் - சுற்றம்
நீடிய மக்களைத் தாங்குவார் - நல
மன்னும் அறம்பல வாற்றுவார் - உழு
மாட்சிமை யையுல கேற்றுவார்

மண்மகள் வாய்த்திடு செல்வியே - வயல்
மன்னி யொசியுநெற் செல்வியே - பெரு
வண்மை பெருக்குவை வாழியே - பசி
வாட்டம் சுருக்குவை வாழியே!

முல்லை - 8

ஏய்த்து விட்டார்

கு. அழகிரிசாமி

வந்தேன் ஒரு நாள் ; என்னை 'வா' வென்றார் யாருமில்லை.
அந்தோ! எனை இங்கு அனுப்பியதும் ஆரேயோ?
நொந்து தவமியற்றி, நோன்பின் முறை யொழுகி
இந்தப் பிறவிக்காய் - எவனும்
ஏங்கியதும் இல்லையடா. 1

நான் வருமுன் இவ்விடத்தே நண்பர் எவருமில்லை.
'ஏன் வந்தாய்? யாவன் நீ?' என்றாரும் யாருமில்லை.
நான் வந்தேன் என்று நானறியாப் போதினிலே
ஊன் தொடர்பால் அன்னை - இந்த
உடலை வளர்த்து விட்டாள். 2

துன்பமின்றி வந்து துணையாய் உதவிடவோ,
இன்ப முறின் ஆங்கே என்னைக் கலந்திடவோ,
அன்பர்தமை நோக்காமல், அழுதும் சிரித்திட்டும்
என்பாரம் தாங்குகையில் - சுற்றுள்ளார்
ஏதேதோ சொல்லி வைத்தார் 3

சொல்லை உணர்ந்தேன்; எந்தன் சுய வுருவை நான் இழந்தேன்.
கல்வியென்று சொல்லிபலக் கற்பித்து விட்டிடவே
இல்லை யெனப் போன யான், ஆராரோ செய்துவிட்ட,
தொல்லைப் பழஉருவில்-ஆடும்
சூத்திரப் பொய்ப் பாவையடா. 4

தனியே இருந்திடவும் சகித்திடார் இம்மனிதர்;
எனையோர் உருவாக்கி, இஷ்டத்துக் காளாக்கி
மனசை வசப்படுத்தி மகிழ்ந்திட்டார்; நானங்கே
இனிப் பேதோ உணர்ந்தேன் - அன்றே
என்னை இழந்து விட்டேன். 5

வையத்தார் சேர்க்கையினால் வரம்பு வழி கற்றதினால்
மெய்யை வளைத்திந்த மேதினிக் கொப்பாய் நடந்து

செய்தேன் பல செயல்கள்; செயலெல்லாம் மாட்சிபெற
மெய்போல் எனைப் புகழ்ந்தார் - அதனை
மெய்யென்றுடல் சிலிர்த்தேன். 6

மாளப் பிறவாத மானிடன் போல், நானிருந்து
நீளப்பரந்த உலகோரின் நெஞ்செல்லாம்
ஆளப் பெருமைபெற்ற, அறிவிற் கரசாகி
காளைப் பருவத்தை - முன்னாள்
கடந்து நடந்தேனே. 7

மேதினியோர் சூழ்ந்து, வினைசெய்தெனை மயக்கி
ஆதியில் என்னுள்ளே ஆக்கியதோர் மாறுதலை
ஏதோ ஒரு உருவம் பெற்றிட்ட என் நிலையைச்
சூதறியா வாலிபத்தில் - அந்தச்
சுகத்தில் மறந்து விட்டேன். 8

புது உருவம்; என்னைப் பூண்டோடு கொன்று விட்டுச்
சதி மறைத்து என்னைத் தழுவிவரும் பொய்யுருவம்
இதுகால் வரைக்கும் எனைப்பிரிந்த நாளில்லை!
அதுவேநான் ஆகியின்றும் - ஐயோ!
ஆண்டுபல சென்றதடா! 9

வையநெடு வீதியிலே வழிநடந்து வந்திடும்யான்
ஐயோ! எடுத்திட்ட அவதாரம் எத்தனை காண்!
மெய்சோர, எந்தன்வினை யொடுங்க, இன்றெந்தன்
பொய்யுருவம் பெற்று வந்த - அந்தப்
புகழே துணையானேன். 10

உடல்பிரியும்; சொல்லும் உயிரும் பிரிந்துவிடும்;
உடன் வந்தெனைத் தொடர்ந்த உருவும் பிரிந்துவிடும்
இடம்பரவும் பூவுலகோர் இன்பமுடன் அளித்த
உடல் சிலிர்த்த பொய்ப்புகழும் - அந்த
உருவோடொன் றாகி விடும். 11

தனியானேன்; இந்தத் தாரணியில் வந்ததற்கு
எனது செயலென்றிடுவீர்! யாது செய்தேன்? ஆராரோ
மனசுவக்க யான்பிறந்தேன், மனசுவக்க, நான் நடந்தேன்
அநியாயமாய், விழலாய், - வாழ்வும்
அவமே கழிந்ததடா! 12

போகின்ற நாளில் வைத்துப் போவதற்கு ஏதுண்டு?
ஏகும் தனி வழிக்கோ என் துணைக்குயாருண்டு?
வேகுதடா உள்ளம்! வெற்றியென்றே தோற்றுவிட்டு
நோகின்ற நெஞ்சோடு - உலகை
நோக்கி உழலுகின்றேன். 13

என்னை அரங்கேற்றி, இன்றுவரை வாழவொரு
சின்ன உருப் பெற்று, செயல்கள் பல செய்து
என்னையே நான் ஒதுக்கி, 'நானை' 'அவனா'க்கி
அந்நியமாம் இந்நாட்டில் - ஐயோ!
ஆண்டெத்தனை கழித்தேன்! *14*

மாய்கின்றேன் என்னுமிது என்ன மதிமயக்கம்
தாய் வயிற்றில் என்றோ தங்கவந்த நாளன்றே
மாய்ந்துவிட்டேன் எந்தன் மரணத்தை வாழ்வென்று
ஏய்த்துவிட்டார் இம்மனிதர் - இனிச்சாவு
எங்கிருக்கும் கொல்வதற்கே? *15*

முல்லை - 9

எது வாழ்க்கை?

நாணல்

யாரோ ஒருவன் பேசினான்:

"ஒரு பிடி சோறு. உறங்க வோர் மூலை.
ஒரு துளி இன்பம். ஒரு கடல் துன்பம்.
ஒவ்வொரு சிரிப்பிலும் ஓராயிரங் கண்ணீர்.
வெயிலும் நிலவும் படைத்த வெறியினில்
உணர்விலா தாடுமுன் உயிரிலா தோய்தல்,
இதுவே வாழ்க்கை"

இதுவா வாழ்க்கை?

அன்பும், அருளும், அச்சந் தவிர்க்கும்
ஆண்மையும், உழைப்பும், அழகினை வடித்து
அமுத மாக்கும் அற்புதத் திறனும்,
சின்னஞ்சிறிய அறிவொளி கொண்டு
அண்ட சர்சரம் அனைத்தையும் ஆட்டும்
விதியின் விசித்திரம் இதுவென வரைந்து
அப்பாலுக் கப்பாலும் செல்லும்
ஞானியின் ஆற்றலும், நன்மையைத் தெளிந்து
நாளு மதனைத் தொடரும் வீரமும்
பொருளே யில்லாப் பொய்களா? நல்லது !
பொல்லா வயிறும் பொன்றுதல் ஒன்றும்,
இவைதாம் உண்மையா?...
யாரடா, பேதை, வயிற்றுப் புழுவாய்
வாய்க்கு வந்ததைப் பேசினான்? கேளடா,
சாவது சரதம்; ஆனால் சாகுமுன்
சாகாத் தருமமும், ஞானமும், கலையும்,
நிலையாமை யெனும் கால அரங்கில்
நிலைபெற நிறுத்திப் பின்னர் நீ சொல்லும்
சாவையும் ஏற்றுச் சந்ததம் வாழ்வோம்
இதுவே வாழ்க்கை.

சோற்றினை எண்ணிச் சோகையில் வீழோம்.
துன்பக் கடலா? அதனுள் மூழ்கி
இன்பத் திரளெனுந் தரளம் கொணர்வோம்.
சிரிப்பிலே துயரா? திரிபுரம் எரித்த
தெய்வச் சிரிப்புச் சிரித்து, துயரின்
நெடுமதில் பொய்யை நிமிடத் தழிப்போம்
நிலவையும், வெயிலையும், நிமிர் சுடர் வானப்
பரப்பையும், பசுமை துடிக்குமிம் மண்ணையும்
அமுதென மாந்துவோம். பின்னர்
நீ சொலும் சாவுதான் வரட்டுமே! வந்தால்
அதனையும் ஏற்போம். அமரராய் வாழ்வோம்.
இதுவே வாழ்க்கை!

முல்லை - 10

தாக்கீது

தார்க்கோல்

சோதாவாய் காலத்தைச்
சுற்றிக் கழிக்கின்ற
மேதாவி நண்பீர், நும்
மீசை முறுக்கேற்றி
சாதாத் தமிழினிலே
சட்டங்கள் பேசுகின்ற
தாதாத்தனமெல்லாம்
தடைகட்டி வையுங் காண்!

இழுத்து நிறுத்துவதாய்
எடை போட்டால் தாங்குவதாய்
பழுத்த அநுபவங்கள்
பாய்ந்துவரும் சொல்லாறு
எழுத்துக்கு மின்னல்
இல்லாத கற்பனைகள்
அழுத்தம், கலைத்தெளிவு
அத்தனையும் வேண்டுமென்றால்

மளிகைக் கடைதேடி
மன்றாடி நின்றாலும்
குளிகை கிடைக்காது
கும்பிட்டால் வாராது
தளிகைத் தொழில்நீத்துத்
தமிழுக்கு வந்துவிட்டோம்
சுளிவாய்க் குழைவீசிச்
சுண்டிவிடும் வேலையல்ல!

வேதாந்தக் குட்டை
விழுங்கும், விளக்காது
பாதாள மட்டும்
பாய்ந்தாலும், பொற்காசு
சூதாட ஆகும்;
சொல்வித்தைக் காகாது.
போதாகிப் போச்சு
புறப்பட்டு வந்திடுவீர்!

சங்கத் தமிழென்றோம்;
சரக்கு நயமென்றோம்;
முங்கிக் குளித்தெடுத்த
முத்துத் திரளென்றோம்.
பொங்கிப் புகழ்ந்ததெலாம்
புரையேறப் போகுது, வோய்!
வெங்காயத் தோலாகி
வினைவந்து மூண்டதுவே!

மடியாப் புழுதியிலே
மடைபாயும் கண்ணீரை
விடியாத கும்மிருட்டில்
விம்முகிற தீச்சுடரை
படியாத நாவினிலே
பம்மும் இறைமொழியைப்
பிடியாது நின்றீர்
பிழைசிறிதென் றெண்ணாதீர்!

பக்கத்துப் பார்வை
பற்றாதோ? கண்ணிரண்டும்
சொக்கிச் சுழிப்புற்றுத்
தூரத்து வீச்சினிலே
யக்க மகளிரொடு
யாழேந்திப் பாடுகின்ற
பொக்கைக் கனவுகளைப்
பொருளென்று கண்டீரோ?

தந்துபியைப் போற்றித்
துதிப்பாடல் போதுங்காண்!
வெந்த கரித்தழலில்
விலையில்லா வாழ்வதனைத்
தந்தும் வெளியேறித்
தகைமை கரியாதோன்
சிந்தைச் சுடரன்றோ
செக்கரொளி காட்டுவது!

சுற்றிப் படருவது
சொக்கப் பனையல்ல;
நெற்றி விழிகக்கும்
நெருப்பு: வடவைத்தீ!
புற்றை வளர்க்காதீர்!
பூப்பாடி நில்லாதீர்!
உற்றுச் செவிசாயும்
உடப் பிறந்தேன்
சொன்னேன்காண்!

அம்மிக் குழவியின்று
அசையாமல் நின்றிடுமோ?
பம்மிக் கிடந்துள்ளே
பருக்கின்ற கேள்வி இது.
சும்மாடை விட்டெறிந்தால்
சொர்க்கம் கிடைக்குமென
நம்மாழ்வார் சொல்லவில்லை.
நமனன்றோ பேசுகின்றான்!

முற்றாத வெற்றிலையை
முனை, காம்பு கிள்ளிவிட்டு
குற்றாலம் பாக்கோடு
குதப்பிச் சுகமாகி
சிற்றாடை தொட்டு
சீமைச் சிறுமைவரை
வற்றாத பேச்சில்
வடிந்ததுகாண் வாழ்வெல்லாம்!

எச்சில் இலைக்கும்
இருநூறுபேர் உரிமை!
பிச்சைச் சிறுமையிதைப்
பேசிடவும் கூசிடுவார்
மிச்சம் பிறிதில்லை
மினுக்கிக் கவிபாட
பச்சைமசி தொட்டாலும்
பசுமை பிறந்திடுமோ?

மடிப்புக் கலையாமல்
மண்கையிற் பற்றாமல்
படிப்புக் கடைமுடியப்
பாழ்பட்ட காசுகளால்
துடிப்புத் தடைபட்டு
தூங்கிவிட்ட நாட்களுக்கு
நடிப்புக் கழிவிரக்கம்
நடவாது: மூண்டெழுவீர்!

பட்டெரியும் உண்மைக்குப்
பட்டாடை போர்த்தியிங்கு
விட்டெறியும் கைக்கு
விலங்கே பரிசென்போம்
தொட்டெழுதும் மைக்கு
துரோகம் அதுவென்போம்
திட்டமிது தான்கெலிக்கத்
தெய்வம் அருள்செய்யட்டும்!

முல்லை - 11

எப்போதெப்போது அதருமத்தின் கையோங்கி, தருமத்தின் கை சளைக்கிறதோ அப்போதெல்லாம் பகவான் பூமியில் அவதாரம் செய்கிறான் - இது கீதை. திருச்சிற்றம்பலத்தான் பாடலும் அப்படித்தான். ஆனால், இந்தப் பாடலில் அவர் தமது அவதார மகிமையை மட்டும் சாற்றுகிறார்.

தற்சிறப்பு

திருச்சிற்றம்பலக் கவிராயர்

1

கேளும், ஓய்!

ஆரென்று கேட்டுவிட்டீர்.
அறைகின்றேன், செவிசாயும்!

ஆராரோ ஓரிரவில்
ஆசைக்குள் மாலாகிச்
சோராக் கலவியிலே
சுகங்காண நானுருவாய்
பாரினிலே வந்துவிழப்
பார்த்துப் பயப்பட்டுக்
கம்பத்துக் காலடியில்
கைகடக்க விட்டுவிடக்
கவியாய்க் கரைந்தழுதக்
கருவிலே திருவுடையக்
கவிராசன் நானல்ல.

ஈசன் அடியெடுக்க
ஈற்றடியை நான்முடிக்கும்
ஆசிபெற்ற ராசியிலே
அவதரித்தோன் நானல்ல.

தம்பலத்தின் சாறுண்டு
தமிழ்க்கவியைத் துப்பிவிட்ட
அம்பலக் கவிராய
ஆசுகவி நானல்ல.

கம்சனுக்குக் கலைவிலக்கும்
கணிகையரின் பஞ்சணையில்
நிமிசங்கள் தவறாது
நேமநிட்டை செய்தவத்தால்
சுக்கானப் பொக்குவுடல்
சுருங்கத் தாதுவிழ

மெய்க்காதல் எல்லாம்
'மேலோன் ஒருவன்' மேல்
வைக்கக் கவிதைவர
வாடாத காமத்தைக்
கக்கித் தொலைக்கின்ற
கவிமகனும் நானல்ல - நானல்ல.

2

நிதிவேட்டு நிதியேற்று
நீதம் மறந்துவிட்டு
மதுக் குடித்து, போதையிலே
மண்டியெழும் புதுக்கவியை
பிதுக்கி வெளித்தள்ளும்
பெரும்புலமைத் தனமெல்லாம்
எனக்குத் தெரியாது.

3

உம்மைப்போல்-
உள்ளிக்கும் உப்புக்கும்
ஒருவேளை வெற்றிலைக்கும்
அள்ளிப் பருகியுண
அரைவயிற்றுக் கஞ்சிக்கும்
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத
மானிடன்தான்.

4

ஆனாலும்,
வேட்டை கிடைத்ததென்று
வேற்றுவரின் கூற்றுகளை
மூட்டோடு பேர்த்தெடுத்து
முதன்மூலம் என்றுசொலி
ரோட்டுத் தவறாமல்
ரோந்து சுற்றி, தமுக்கடிச்சிப்
பாட்டென்று சாதிக்கும்
பகற்கொள்ளைக் கூட்டத்தை-

சொத்தைக் கருத்துகளைச்
சொல்லில் திறனற்றுப்
பொத்திப் பொதிந்துப்
பொட்டணமாய் கட்டிவச்சிப்
பத்திரிகைச் சந்தையிலே
பரப்பி, விலைகூவும்
பாசாங்குக் காரப்
பகல்வேடக் கூட்டத்தை-

கற்பனையின் ஊற்றென்றும்
கவியரசின் கூற்றென்றும்
பற்பிடித்துப் பார்த்துப்
பதம்பார்க்கும் ரசிகரென
விற்பன்ன வேடம்
விளைகின்ற கும்பலினை-

திண்டுமிண்டு பண்ணாமல்
தீமையின்னு மிழைக்காமல்
ஒண்டிவாலொடுக்க
ஊளைகளைத்தான் நிறுத்த,
கண்டதுண்டமாக்கித்
கழுகுக் கிரையாக்கத்
தண்டெடுத்த மறக்குலத்து
தமிழன் நான்.

5

வஞ்சனைகள் மாய்மாலம்
வகைத்தப்பு, வாயளப்பு
மிஞ்சிடினும் அன்னவரை
மேலோகம் தானேற்ற
நெஞ்சில் உரமுண்டு
நினைப்பில் திறமுண்டு

ஆரென்று கேட்டதற்கு
அறைந்தேன். மறக்காதீர்!
பேர்படைத்து, ஊற்றுப்
பேனாவும் கை படைத்துச்
சீர்படைத்து உம்போன்றார்
சிரங்கொய்துச் சிதையேற்றி
நீர்தெளிக்கும் கவியெழுத
நிலத்தில் உதித்தவன் காண்.

நெஞ்சில் இதை நிறுத்தும்!

முல்லை - 12

கதைகள்

நீர் குற்றவாளியா?	-	கோவை அ. அய்யாமுத்து
கிரஹணம்	-	ரகுநாதன்
உரிமை	-	மேரா
நம்பிக்கை	-	க. கணபதி
"வென்றிலன் என்றபோதும்"	-	ரகுநாதன்
அரவான்	-	லா. ச. ராமாமிர்தம்
அரை மனிதன்	-	எம்வி. வெங்கட்ராம்
புத்திர பாக்கியம்	-	'தார்க்கோல்'
வீணா	-	லா. ச. ராமாமிர்தம்
பரோபகாரம்	-	வல்லிக் கண்ணன்
ரச விகாரம்	-	கு. அழகிரிசாமி
ஜாதக விசேஷம்	-	கொனஷ்டை

நீர் குற்றவாளியா?

கோவை அ. அய்யாமுத்து

"நீர் குற்றவாளியா அல்லவா?" என்று அழுத்தந் திருத்தமாக அவன் என்னைக் கேட்டான். அப்போது எனக்கு ஆண்டுகள் ஐம்பது நிறைந்திருந்தன. அவனோ இருபதுக்கு மேல் ஒன்றிரண்டு கடந்த இளைஞன்.

நான் சட்டப் புத்தகங்களை யெல்லாம் கரைத்துக் குடித்திருந்தேன். அவனோ எழுத்தறியாதவன். நான் செல்வத்தில் திளைத்திருந்தேன். அவன் வறுமையில் முளைத்திருந்தான்.

நான் குற்றம் விசாரித்துத் தண்டிக்கும் நீதிபதியாக வீற்றிருந்தேன். அவனோ குற்றஞ்சாட்டப்பட்டு என் முன் கைதிக் கூண்டில் நின்றிருந்தான்.

அவன் சாமான்யக் குடியானவன். அவனை நான் கண்டபின் ஆண்டுகள் இருபது பறந்தோடிவிட்டன. ஆனால் அவன் என் மனக்கண் முன் இன்றும் காட்சியளித்தவண்ணமாய் நிற்கிறான். அவன் கடாவிய சொற்கள் என்னிரு செவிகளை இன்றும் குடைந்துகொண்டிருக்கின்றன.

நான் முப்பதாண்டுகள் நீதிபதியின் இடத்தை அலங்கரித் திருக்கிறேன். மூவாயிரம் வழக்குகளை விசாரித்து நீதி செலுத்தி யிருக்கிறேன். முப்பதினாயிரம் குற்றவாளிகள் என்முன் கைகட்டி, வாய் பொத்தி நின்றிருக்கின்றார்கள். நீ குற்றவாளியா? நீ குற்றவாளிதானே? என்று அத்தனை பேர்களையும் நான் கேட்டதுண்டு. பலர் இல்லை என்பார்கள். சிலர் ஆம் என்பார்கள். அவ்னைத் தவிர வேறெவனும் என்மீது குற்றஞ்சாட்டி "நீர் குற்றவாளியா - அல்லவா" என்று என்னைக் கேட்டதில்லை. உலகில் என்போன்று லட்சக்கணக்கான நீதிபதிகள் இருந்திருக்கிறார்கள், இன்றும் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான குற்றவாளிகளை அவர்கள் விசாரித்திருப்பார்கள். ஆனால் எனக்கேற்பட்ட அநுபவம் அவர்களில் ஒருவருக்கேனும் ஏற்பட்டிராது.

நீண்டு கருத்த முடியை அவன் வாரிக்கட்டியிருந்தான். கட்டிலடங்காத சில ரோமங்கள் காற்றில் அசைந்துகொண்டிருந்தன. ஆனால் அவன் அசையாது நின்றிருந்தான். அவன் நெற்றி அகன்றிருந்தது.

புருவங்கள் அடர்ந்திருந்தன. ஒளி நிறைந்த இரு கண்களால் அவன் இமை கொட்டாது என் முகத்தைப் பார்த்தான். அவனுடைய உயர்ந்த தோள்களையும் அகன்ற மார்பையும் என்னால் மறக்கமுடியவில்லை. அவன் உடலில் சட்டை அணியாமலிருந்தான். அவன் மனதிலும், அவன் என்னையோ, அன்று கச்சேரி முழுதும் குழுமியிருந்த ஜனத்திரளையோ சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

"302வது பிரிவின்படி நீ கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய். நீ குற்றவாளியா அல்லவா" என்று நான் கேட்டேன்.

நான் கேட்டதுதான் தாமதம். அவன் தோளை அசைத்து, மார்பை உயர்த்தி, விரிந்த கண்களோடு என்னைப் பார்த்தான். அவனது மீசைகளிரண்டும் துள்ளிக் கூத்தாடின.

அவன் கூறியதைக் கேளுங்கள்:

"நான் கருப்ப கவுண்டனைக் கொலை செய்தேன் என்பது உண்மைதான். ஆனால் நான் குற்றவாளியாக மாட்டேன். பத்துப் படிகாட்டை நான் எருவிட்டு உழுது, விதைத்து, கவலை இறைத்து, களைகளைப் பிடுங்கிக் காத்து, வளர்த்து, அறுத்து அடித்துச் சேர்த்துக் குவித்தவுடன் கருப்ப கவுண்டன் எம கிங்கரன்போல் வந்து நிற்பான். ஆண்டுதோறும் அவனுக்கு நான் ஐநூறு ரூபாய் கொடுத்தாக வேண்டும். நான் உழுதுவந்த காடு அவனுக்குச் சொந்தமாம். எனக்கு முன் என் தந்தை அக்காட்டை உழுது வந்தான். என் தந்தைக்கு முன் என் பாட்டன் முப்பாட்டன் ஆகியோர் அதை உழுதுவந்திருக்கிறார்கள். எனவே தலைமுறை தலைமுறையாக.நானும் என் மூதாதையரும் உழைத்து உழைத்து கருப்பக் கவுண்டனுக்கு ஆண்டுதோறும் ரூபாய் ஐநூறு செலுத்தி வந்திருக்கிறோம்."

"என் தந்தை எனக்கு வைத்துவிட்டுப்போன சொத்து எனது உடலும், கருப்பக் கவுண்டன் சொந்தங் கொண்டாடும் பத்துப்படி காடும்தான். என் தந்தை இறந்த மறுதினமே அவர் வைத்துழைத்த எருதுகளிரண்டும் எமபுரம் சேர்ந்தன. நான் கருப்ப கவுண்டரை அணுகிக் காளைகள் இரண்டு தந்துதவுமாறு கேட்டேன். 'காட்டைக் காலி செய்து விட்டுப்போடா' என்று அடைமொழிகள் பலவோடு அலங்கரித்துக் கூறினான்.

"கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை போலானதென்று நான் மௌனமாக என் மனைவியிடம் சென்று தெரிவித்தேன். அவள் பத்தினி. தன் கழுத்திலிருந்த மாங்கல்யச்சரடு நீங்கலாக, மற்ற நகைகளையெல்லாம் கழட்டி என் கையில் கொடுத்தாள். அவளுக்கு நான் என் முகநகை தவிர வேறு எந்நகையும் பூட்டியதில்லை.

"எல்லாம் அவளுடைய அப்பன் பூட்டியவை. அவ்வணிகளை வாங்க என் மனம் மறுத்தது. கைகள் கூசின. ஆனால் அவள் அவற்றை

வற்புறுத்திக் கொடுத்தாள். அவற்றை விற்று இரண்டு காளைகள் வாங்கினேன்.

"சென்ற ஆண்டு வானம் பொய்த்தது. கிணற்றில் தண்ணீர் வற்றிப் போய்விட்டது. என்னால் இயன்ற அளவு சுரண்டிச் சுரண்டிப் பாய்ச்சியும், பயிர்கள் பிழைக்கவில்லை. எல்லாம் கரிந்துபோயின. என் அருமைக் காளைகட்கும் தீவனம் தட்டிற்று.

"இந்நிலையில் கருப்பக் கவுண்டர் வந்தார். காட்டுக் குத்தகை கேட்டார். அடுத்தபோகம் விளையட்டும், தருகிறேன் என்றேன். அவர் இணங்கவில்லை. கடுகடுத்துக் கண்டபடி பேசினார். என் மனைவி மானமுள்ளவள். தன் கழுத்திலிருந்த தாலிச் சரட்டைக் கழட்டி என் கையில் வைத்தாள். அது தங்கச் சரடு.

"இதை விற்று, இவர் கடனை முதலில் கட்டுங்கள் என்றாள்" கடைக்காரச் செட்டி அதனை எடையிட்டு மதித்து இருநூறு ரூபாய்கள் கொடுத்தான். அப்பணத்தை அப்படியே கருப்ப கவுண்டனிடம் சேர்ப்பித்தேன்.

"பணத்தை எண்ணி எடுத்துக்கொண்டு பாக்கிப்பணம் எங்கே என்றான். பொறுத்துக்கொள்ளுங்கள் விளைந்தவுடன் தருகிறேன் என்றேன்.

"விளையாவிட்டாலோ" என்று வேட்டு எழுப்பினான். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றேன்.

"யாரடா அங்கே" என்று அதட்டினான். அவனுடைய கையாள் ஒருவன் வந்தான். இவன் காளைகளைச் சென்று பிடித்துவா என்று கட்டளையிட்டான். என் காளைகளிரண்டும் பிடித்துவரப்பட்டன.

"அவற்றை அங்கே மைதானத்தில் கட்டடா" என்று கர்ஜித்தான் கவுண்டன். ஐயோ பாவம், வெய்யில் மண்டை வெடிக்கிறது. மரத்தடியிலாவது கட்டச் சொல்லுங்கள் என்றேன்.

"முடியாது - காளைகள்மீது கருசணையிருந்தால் (கருணையிருந்தால்) என் கடனைக் கொடுத்துவிட்டு, உன் காளைகளைப் பிடித்துப்போ' என்று பதில் கூறினான்.

காளைகள் கட்டப்பட்ட இடத்திலேயே நான் அன்று மாலைவரை நின்றிருந்தேன். அன்று என் மனைவி பிரசவித்த ஏழாம் நாள். என் வயிறு கடித்தது. காளைகள் வயிறும் குழிந்தது.

அவற்றிற்கேனும் கொஞ்சம் புல்லும் தண்ணீரும் கொண்டுவரச் சென்றேன். கொண்டும் வந்தேன். புல்லை உதறிப்போட்டுத் தண்ணீரையும் அருகில் வைத்தேன்

கருப்பக் கவுண்டன் ஓடோடியும் வந்தான். தண்ணீரைக் கீழே கவிழ்த்தான். புல்லை வாரித் தூரத்தில் எறிந்தான். உன் காளைமேல் உனக்குள்ள 'கருணை' என் பணத்தின் மேல் உனக்கு இல்லையல்லவா என்று என் முகத்தைப் பார்த்துக் கூறினான்.

நீங்கள் செய்வது நீதியல்லவே. வாயற்றவனை வதைப்பது நேர்மையல்லவே, என்று அவனோடு வாதாடினேன். அவன் என்னை வைதான். தன் வலது காலால் என் வயிற்றின்மேல் எட்டி உதைத்தான்.

நீதி இல்லையா - என்று என் ஆவிதுடிக்கக் கூவினேன். கண்ணீர்விட்டு கதறினேன். கைகள் கூப்பிக் கெஞ்சினேன். கல்நெஞ்சம் படைத்த கருப்பன் இரங்கவில்லை. அவனை இரங்கச் செய்ய மற்றெவரும் அங்கு அணுகவில்லை.

அதிகாரிகள் இருப்பிடந்தேடி ஓடினேன். அஞ்சலி செய்து வணங்கினேன். அழுதேன். விழுந்தேன், புரண்டேன். புலம்பினேன் என் குறையை அவர்கள் தீர்க்க வில்லை

மீண்டும் என் காளைகள் இருக்குமிடம் ஓடினேன். அவைகளின் கட்டை அவிழ்த்தேன். கருப்பக்கவுண்டன் ஓடிவந்து தடுத்தான். அப்புறம் நடந்ததை ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன். அவன் பிணமாக வீழ்ந்தான். நான் கம்பீரத்தோடு என் காளைகளைப் பிடித்துக் கொண்டு என் குடிசைக்கு வந்தேன்.

ஆண்டவன் படைத்தது இவ்வுலகம்; நான் உழுதுவந்த பத்துப்படி காடும் ஆண்டவனால் படைக்கப்பட்டது. அதில் உழைப்போனாகிய எனக்கில்லாத சொந்தம் கருப்பக் கவுண்டனுக் கெப்படி வந்தது?

என் உழைப்பை அவன் திருடினான். நீங்கள் அவனைத் தண்டனைக்கு உள்ளாக்கவில்லை. என்னையும் என் மூதாதையர் களையும் அவனும் அவனது மூதாதையரும் இம்சித்து, வஞ்சித்துப் பணம் பிடுங்கி வந்தனர். நீங்கள் அதனைத் தடுத்து நிறுத்தவில்லை. இறுதியில் நான் அவனைக் கொலை செய்யும் நிலைமை ஏற்பட்டதற்கு நீங்களும், உங்கள் பொய்யான சட்டமும் அதிகாரமும் காரணங்களாய் நின்றன.

இந்நிலையில் நீங்கள்தான் குற்றவாளியென நான் உங்கள்மீது குற்றம் சாட்டுகிறேன். நீங்கள் குற்றவாளியா அல்லவா சொல்லுங்கள்!

அவன் கூறிய காரணங்களையும், என்மீது சாட்டிய குற்றத்தையும் என்னால் மறுக்க முடியவில்லை. எல்லோரும் உழைத்து உண்ண வேண்டும் என்பதே ஆண்டவனின் சட்டம். ஆனால் அச்சட்டத்தை நிறைவேற்ற நான் நீதிபதியாய் அமர்ந்திருக்கவில்லையே.

மாட்சிமைதங்கிய மன்னனின் சட்டப்படி நான் அவனைக் கழுவிலேற்றிக் கொல்லும்படி தீர்ப்புக் கூறினேன்.

தீர்ப்பெழுதிய பேனாவைத் தீயிலிட்டுக் கொளுத்தினேன். அதைத் தொட்டெழுதிய என் விரல்களைத் தண்ணீர் விட்டுக் கழுவினேன்.

ஆனால் என் மனதைக் கழுவ என்னால் முடியவில்லை. அவன் என் மீது சாட்டிய குற்றம் உண்மையே என்று என் மனம் கூறுகிறது.

முல்லை -7

கிரஹணம்

ரகுநாதன்

பூமி - சூரியன் - சந்திரன்
தாய் - தந்தை - குழந்தை

பக்கிரிசாமி ஒரு கொத்தனார்;
பாப்பாத்தி அவர் சம்சாரம்.
இசக்கியம்மா க்ஷ இருவருக்கும் பிள்ளை;
ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண்.

* * *

அன்று விடியற்காலையில் பாப்பாத்தி படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது முகத்தில் அருளே இல்லை. இரவு எப்படியும் வந்து விடுவார் என்ற நம்பிக்கையோடு, மாலையில் வெளுத்த புடவைகூடக் கட்டிக்கொண்டாள். அன்றைய மஞ்சள் குளிப்பு வீணாகாது என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அவர் வரவில்லை, ஏற்கெனவே தூக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்த அவளுடைய விரகதாபத்துக்கு, மூட்டைப் பூச்சியும், சிகாரைப்பாயின் சிலம்பல்களும் தூபமிட்டன. அவருக்கு என்று பிழிந்து எடுத்து வைத்திருந்த வெந்நீர்ப் பழையதில், புழக்கடைக் கொசுக்கள்தான் செத்துக் கிடந்தன.

பழையதை எடுத்துக் கழனிப் பானையில் கொட்டிவிட்டு 'இந்த வேலையை இவுக விட்டுத்தொலைச்சாலும் தேவலெ. இருந்தாலும் இப்படியா பள்ளி பறைச்சின்னு இல்லாமே இந்த இசக்கி மூதி எங்கே போய்த் தொலைஞ்சிதோ. மூதிக்கு எந்திரிச்சவுடனேயே விளையாட்டுத் தானோ?" என்று முணகிவிட்டு, அடுப்பில் தோசைக் கல்லைப் போட்டாள். முந்திய நாள் மிஞ்சிப்போன தோசைமாவின் புளிப்பை மாற்றுவதற்காக, சோடா உப்பைத் தேடி, பரணில் துழாவினாள். எப்படியும் காலையில் அவர் வந்துவிடுவார் என்று அவளுக்குத் தெரியும். சோடா உப்பைத் தோசையில் கலந்து பிசைந்து விட்டு, கல் காய்ந்தவிட்டதா என்று நீர் தெளிக்கப் போனாள்.

அதற்குள், 'இந்தா. நான் பழயபடியும் போவணும், இப்பவே சோத்தை வடிச்சிரு'' என்று குரல் அடுப்பங்கரைச் சுவரில் மோதி பாப்பாத்தி காதில் விழுந்தது.

காய்ந்த கல்லில் தண்ணீர் சுரீர் என்றது. பாப்பாத்தி நிமிர்ந்தாள். பதில் சொல்லாமல், தோசைக்கல்லை எடுத்து சுவரில் சாய்த்தாள்.

களைத்துப்போய் வந்திருந்த பக்கிரிசாமி கையில் கொண்டுவந்த போசன பாத்திரத்தையும், தச்சுமுழம், கொத்துக் கரண்டி, ரஸமட்டம் முதலிய கருவிகளையும் பரணில் வைத்துவிட்டு, கிணற்றங்கரை பக்கம் போனார். போகும்போது பாப்பாத்தியைப் பார்த்தார்; அவள் பார்வை விறைத்திருந்தது.

நேற்று இரவு வராததுதான் இதற்குக் காரணம் என்பதை உணர்ந்து கொள்ள முடியாத அவ்வளவு நபுஞ்சகன் அல்ல, பக்கிரி. எல்லாம் இருட்டுகிற வரைக்குந்தான் என்று அறிந்தவர். சிரித்துக்கொண்டே, கிணற்றில் பட்டையைப் போட்டார். 'செல்லாயி நயம் சரக்குதான்; சரியான நாட்டுக் கட்டை!' என்று எண்ணியவர் முந்திய இரவு அடிவாணந் தோண்டிய பள்ளத்தில் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் நடந்துகொண்ட திருவிளையாடலை நினைத்தார். அவருக்கே சிரிப்புப் பொங்கியது. உடலில் இன்பம் கிளுகிளுத்தது.

குளித்துவிட்டு வந்தவர் அடுப்பங்கரையைப் பார்த்து, 'இசக்கியை எங்கே? கடைக்கி கிடைக்கிப் போயிருக்குதா?'' என்று கேட்டார்.

பதில் இல்லை; வெறும் தூண்டில்தான் வந்தது. மீன் சிக்கவில்லை.

சிரிப்பு அவருக்கு உடன் பிறந்தது. சிரித்தார். கூடத்துக்கு நடந்தார். கூடத்துக்கு வந்தபோது, தெருவிலிருந்து பெண் இசக்கியம்மா - எட்டு வயதுச் சிறுமி - சிணுங்கிக்கொண்டே ஓடிவந்தாள்.

திண்ணையில் துண்டைப் போட்ட கொத்தனார், "ஏ புள்ளே! ஏன் அழுதுக்கிட்டே வாரே" என்று கேட்டார். அந்தப் பிள்ளையோ பதில் சொல்லாமல் நேரே அடுக்களைக்குப் போயிற்று.

பாப்பாத்திக்கோ பக்கிரிமீதுள்ள கோபத்தை யார்மீது காட்டலாம் என்ற துடிப்பு. இசக்கியம்மா வரவும், "ஏ அழுகுணி மூதி. ஏன் கண்ணைக் கசக்குதே?'' என்று கேட்டாள்.

முதலில் வெறும் சிணுங்கல்தான் பதில். சிணுங்கலோடு சிணுங்கலாய். 'இங்கெ பாரு அம்மா எதிர்த்த வீட்டுச் சுடலை என்னெப் பார்த்து, கெட்டவார்த்தை செய்யக் கூப்பிடுதாம்மா' என்ற வார்த்தைகள் பிறந்தன.

இந்த அதீதமான புகார் பாப்பாத்தி மனதில் அந்த வேளையில் என்னவோ போலத் தைத்தது. "மூதிமூதி' அந்தப் பயலோடே சேராதென்னு உனக்கு எத்தனைதரம் மாரடிக்கது?'' என்று கத்திக் கொண்டே, முதுகில் ஒரு அறை வைத்தாள்.

இசக்கி கதறினாள். அடிகள் தொடர்ந்தன. வெளித் திண்ணையிலிருந்த பக்கிரிசாமி இத்தனையும் கேட்டுக்கொண்டு தானிருந்தார்.

"இந்தா பாரு புள்ளெயை ஏன் போட்டு அடிக்கிறே. அதட்டினால் போறாதா?"என்று மீண்டும் தூண்டிலை எட்டி வீசினார். மீண்டும் தோல்விதான்.

பாப்பாத்தியம்மா அடிப்பதை நிறுத்திவிட்டு "பெத்துப் போட்ட அப்பனுக்கே விதரணை இல்லெ. இவளை அடிச்சித்தான் என்ன ஆவுது" என்று சலித்துக் கொண்டே, பக்கிரியை முதுகில் குத்தினாள்.

கொத்தனார்வாளுக்கு தன்னைத் தன் சம்சாரம் குத்தாமல் குத்துவதைத் தாங்க முடியவில்லை "இந்தா வந்தவுடனேயே சண்டைக்கி வரிஞ்சி கட்டியே' என்றார்.

'பின்னே என்னா? நான் ஒருத்தி இருக்கேனே என்ற லட்சை கூட இல்லாமெ-" என்று இழுத்தாள் பாப்பாத்தி.

"நீ இருக்கது தெரியாமலா இருக்கு. தொலைஞ்சா போயிட்டெ?" என்று எதிர்த்துத் தம்மைச் சமாளிக்க முயன்றார். ஆனால் வார்த்தைகள் தம்முள் விக்கின.

"தொலைஞ்சி போனாத்தான் அலுப்பு விட்டதே' என்று கத்திவிட்டு, "ஏம் மூதி. இன்னம் ஏன் அழுதுகிட்டிருக்கே" என்று பக்கத்தில் நின்ற இசக்கியை அடிக்க ஆரம்பித்தாள்.

"இந்தா பாரு புள்ளெயை அடிக்காதே' என்று ஆணையிட்டார் ஆண் சிங்கம்.

"ஐயோ! பொண்டாட்டி புள்ளெ மேலே எவ்வளவு கர்சனை!" என்று சிலுப்பிக்கொண்டே தாக்கினாள் பாப்பாத்தி.

தன்மீதுள்ள கோபம் முழுவதையும் அந்த அப்பாவிக் குழந்தை மீது செலுத்துவதை அவரால் தாங்க முடியவில்லை.

"சொல்லிக்கிட்டே இருக்கேன்" என்று சத்தமிட்டவாறே எழுந்து சென்று, பிள்ளையை உதறிப் பிடுங்கிவிட்டு, பாப்பாத்தியின் முதுகில் ஒரு அறை அறைந்தார். எதிர்பார்த்ததுக்கு விரோதமாக அடி உறைத்து விழுந்துவிட்டது.

ஒவென்று அலறிக் கொண்டே கீழே உட்கார்ந்து அழ ஆரம்பித்தாள் பாப்பாத்தி.

"எனக்குச் சோறும் வேணாம். ஒரு மண்ணும் வேணாம் நான் போறேன்" என்று கோபித்துக்கொண்டு, தச்சு முழம், கொத்துக் கரண்டி, ரஸமட்டம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு திண்ணையில் கிடந்த துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு நடந்தார் பக்கிரி.

அடிபட்ட முதுகைத் தடவிப் பார்த்துக்கொண்ட இசக்கி. கைவிரலில் தடம் தட்டுப்படும்போதெல்லாம் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தது. அதன் மனம் மட்டும் எதிர்த்த வீட்டுச் சுடலை சொன்ன கெட்டவார்த்தைப் பேச்சில் நின்றது.

பாப்பாத்தியும் அழுதாள்.

உலையில் சோறு கொதித்தது.

பூமி - சந்திரன் - சூரியன்

கிரஹணம் பிடித்தாய்விட்டது

* * *

பக்கிரிசாமி கொத்தப் பிள்ளைமார் குடியில் பிறந்துவிட்ட காரணத்தினால், சிறுவனாய் இருந்த காலம் முதற்கொண்டே, கரண்டி பிடிக்கும் கட்டிட வேலையில் ஈடுபட்டார். கலியாணமாகாமல் இருந்த காலத்திலும் கோகுலத்துக் கிருஷ்ணன் மாதிரிதான் வாழ்க்கை நடத்தினார். அந்தத் தொழிலில் வசதிகள் ஜாஸ்தி. அவர்களுடைய பறிக்க முடியாத உரிமை அது. கட்டிட வேலைக்கு செங்கல் சுண்ணாம்பு சுமக்க வரும்... சிறுமிகளோடு முறை செப்பி விளையாடும் உரிமையும் அவருக்கு உண்டு. ரவிக்கை அணியாத நாட்டுக் கட்டைகள் முந்தானைச் சேலையைச் சுருட்டி, தலையில் மணையாக வைத்துக்கொண்டு, செங்கல் கூடைகளைச் சுமந்து வரும்போது, அவர் தயிர்க்கலையம் கொண்டு வரும் கோபியரைக் கண்ட பரமாத்மாவே ஆய்விடுவார். அவர்களுடைய திமிறிய உடல் கட்டையும் அங்க அசைவுகளையும் பார்த்துக்கொண்டே வேலை செய்தால், கரண்டி தன்னையறியாமலே விறுவிறுப்புக் காட்டும். கன்னிகழியாச் சிறுமியரிடம் கைச்சரசமாடுவதிலிருந்து, வித்துக்கு விட்ட விரைச் சுரையான வத்தல் தார்வரை கைவைத்து அனுபோகவகை கண்டவர் "என்ன இருந்தாலும்... வருமா? பாப்பாத்தி சிவெப்பா மட்டும் இருந்தா போதுமா?" என்று அடித்துப் பேசும் திறமையுடையவர்.

எனினும் பாப்பாத்தியை ஊரறிய கைபிடித்த நாளையிலிருந்து அவளிடம் கசப்பைச் சம்பாதித்துக் கொண்டவரல்லர். இடையிடையே சிறுபூசல் வரத்தான் செய்யும். ஆனால் அதற்குரிய ஆயுசுகாலம் அவருக்குத் தெரியும். பக்கிரியின் நடவடிக்கையைப்பற்றி பாப்பாத்திக்கு மனசில் வெறுப்பு இருந்தாலும், பக்கிரியிடம் வெறுப்பு கிடையாது. மனைவியைத் தாஜா பண்ணுவதில் கைக்காரன். பாப்பாத்தி இதை வேறுவிதமாக நினைக்கமாட்டாள். இருவருக்கும் அத்தனை பிணைப்பு. அவ்வப்போது வரும் மூன்றே முக்கால் நாழிகைப் பூசல்களெல்லாம் எங்கு, எப்போது, எப்படித் தீரும் என்று நன்றாக அறிந்தவர்.

பாப்பாத்தியும் அப்படித்தான். புருஷனும் தானும் வீஞ்சிக் கொண்டால்கூட, உள்ளத்திலுள்ள அன்பு குறையாது. புருஷன் வீட்டோடு இருந்தால், ஆட்டுக்கறி வாங்கி வைப்பதிலெல்லாம் குறைச்சல் கிடையாது. பக்கத்து வீட்டுக்காரி, "நேத்து இப்படி முறைச்சிக்கிட்டு கிடந்திக. இன்னைக்கி புருஷனுக்கு அக்கறையா கறியெடுத்துப் போடுதியே. என்ன இருந்தாலும் புருஷன்கிறது தெரியாமலா இருக்கு?" என்று கிண்டலாகக் கேட்டாலும் "ஆமாத்தா" என்று சலிப்பதுபோல் காட்டி தன்னுள் சிரித்துக்கொள்ளும் சுபாவமுடையவள். பாப்பாத்தி தன் புருஷனைப் பற்றி அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை. எனினும் அன்று காலையில் பக்கிரிசாமி முறைத்துக் கொண்டு, சாப்பிடாமல் கொள்ளாமல் போனது என்னவோ போலிருந்தது. கொஞ்சம் கிராக்கி பண்ணலாமே என்று நினைத்தாள், ஆனால் வண்டி தடம் மாறிவிட்டது.

காலையில் கோபித்துக் கொண்டு போனவர் ராத்திரி வருவாரா என்ற சந்தேகம் அவளுக்கு. வந்தாலும் வராவிட்டாலும் சோற்றை ஆக்கி வைப்போம் என்று நினைத்தாள். இசக்கியிடம் கூட அன்று நல்லபடியாய் நடந்து கொள்ள முடியவில்லை. அவளால் பக்கிரிசாமி வந்தால் வாய் கொடுத்துப் பேசக்கூடாது என்று நினைத்தாள். பழைய குறும்பின் குறுகுறுப்பு.

மாலைக் கருக்கலில் சோற்றை வடித்து இறைக்கி விட்டு, நம்பிக்கையற்றுப்போய் வாசல் நடையில் வந்து நின்றாள். ஆனால், எதிர்பாராத விதமாக, தெரு மூலையில், கொத்தனார்வாள் கையில் உபகரணச் சுமையயோடு உலா வருவது தெரிந்தது. உடனே தன்னுடைய சுயமரியாதைக்குப் பங்கம் வந்துவிடக் கூடாதே என்ற சிந்தனை அவளை வீட்டுக்குள்ளே தள்ளிக் கொண்டுபோயிற்று. ஆனால், உயரமான சாரத்தில் ஏறிச் செல்லும் பெண்களின் லீலைகளையும் தீகாரண்யமாக அளந்து விடும் அவர் கண்கள் பாப்பாத்தி உள்ளே நுழைவதையும் கண்டு விட்டது. தன்னுள் சிரித்துக் கொண்டார்.

வீட்டுக்குள் வந்ததும் துண்டை உதறித் திண்ணையில் போட்டுவிட்டு, பரணில் தச்சுமுழம், ரஸமட்ட வகையறாக்களை வைத்துவிட்டு, ஒன்றும் பேசாமல், கிணற்றடிக்குப் போனார். கால்கழுவிவிட்டு வீட்டுக்குள் வந்தார். பாப்பாத்தியிடம் நேரடியாகப் பேச, நாக்கு வளையவில்லை. "ஏ, இசக்கி, சோறாக்கியிருந்தா போடச் சொல்லேன்." என்று கார்வார் பண்ணிவிட்டு, வெளித்திண்ணையில் வந்து உட்கார்ந்தார்.

கொஞ்ச நேரம் கழித்து, "போட்டாச்சின்னு சொல்லு மூதி' என்று இசக்கியை பாப்பாத்தி கார்வார் பண்ணுவது பக்கிரிசாமி காதில் விழுந்தது. பாவம் அந்த அப்பாவி இசக்கியை இழுத்தடிப்பதைவிட, தானே நேரில் போவது நல்லது என்று தடுக்கவில்லை. போய் இலையின் முன் உட்கார்ந்தார். வெறும் வெந்தயக் குழம்பும், காணத்துகையலுந்தான். சாப்பாடு ருசிக்கவில்லை.

“காலையிலெகூடச் சாப்பிடல்லென்னு தெரியுமே. வேறெ ஏதாச்சும் வச்சா என்னவாம்?” என்று இலையைப் பார்த்து முறைத்துக் கேட்டார். காலையில் வாங்கிய அடியை மறக்காத இசக்கியும் பக்கத்திருந்து அப்பாவையும் அம்மாவையும் திருகத்திருக விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தான் கேட்டதற்குப் பதில் வராததால் பக்கிரி சலித்து விடவில்லை. இலையைவிட்டு எழுந்திருக்கும்போது, “அடேயப்பா இன்னம் கோபம் ஆறினாப்பிலெ தெரியலியே, இன்னம் எத்தினி நேரத்துக்காம்’ என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

பாப்பாத்திக்கு களுக்கென்று சிரிப்பு வந்தது. பல்லைக் கடித்துக் கொண்டாள். கையைக் கழுவி முடிந்ததும், பக்கிரிசாமிக் கொத்தனார்வாள் திண்ணையில் வந்து படுத்துக் கொண்டார். ஆனால், தூக்கம் வரவில்லை. உள்ளே என்னென்ன நடக்கிறது என்பதை யெல்லாம் காதாலேயே உணர்ந்து கொண்டார்.

படுக்கை விரித்த சப்தம். இசக்கியை உறக்க மாட்டிய சப்தம், அலுத்துப் போய் உடம்பை முறித்துப் புரண்டு படுக்கும் சப்தம், இடையிடையே பாப்பாத்தி தூக்கத்தில் ஆழவில்லை என்பதற்கு அறிகுறியான பெருமூச்சுகள். பக்கிரிக்குச் சிரிப்பு வந்தது, புரண்டு படுத்தார்.

பூமி - சந்திரன் - சூரியன்

கிரஹணம் இன்னும் விடவில்லை

எப்போதடா உள்ளே போவது என்றிருந்த பக்கிரிக்கு திடீரென்று சிலசிலுத்த சாரல், காலத்தால் செய்த நன்றியாகத் தென்பட்டது. உடனே உதறியடித்து எழுந்திருந்து துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வீட்டுக்குள் நடந்தார். போகும்போது, “வெளியே படுக்கலாமின்னா மழை வேறே தூறுது’ என்று விட்டுக்கொடுக்காமல் வாய்விட்டுக் கூறிவிட்டு, பாப்பாத்தி படுத்திருந்த இடத்தைப் பார்த்தார்.

கலைந்து கிடந்த கூந்தல் தலைக்கு ஹிதம் கொடுக்க ஒருச்சாய்த்துக் கிடந்தாள் பாப்பாத்தி. பக்கத்தில் இசக்கி இதழ்க் கோணத்தில் உறைந்துபோன முறுவலோடு தூங்கிக்கொண்டிருந்தாள்.

கொத்தனார்வாள் தமக்குத்தாமே சிரித்துக் கொண்டார். இசக்கியம்மாளுக்கு அடுத்துப் பாயை விரித்துத் தலையைச் சாய்த்தார். இவர் படுத்ததும், பாப்பாத்தி எதிர்த்திசையில் முதுகு காட்டித் திரும்பி படுத்தது, அவள் தூங்கவில்லை என்பதைக் காட்டிக் கொடுத்தது.

மாடக்குழியில் தகர விளக்கு புகைமண்டி எரிந்து கொண்டிருந்தது.

பக்கிரிசாமி கொஞ்ச நேரம் மல்லாந்து படுத்து இரண்டு கைகளையும் தலைக்கு அண்டை கொடுத்துக் கிடந்தார்.

மூவரும் படுத்திருந்தனர்

சூரியன் - சந்திரன் - பூமி.

கடைசியில் பக்கிரிசாமி, "பாப்பாத்தி!" என்று மெதுவாகக் கூப்பிட்டார். குரல் கரகரத்திருந்தது. பதில் இல்லை. மீண்டும் சில நிமிஷம் மௌனம். பிறகு "பாப்பாத்தி" என்ற அதே கரகரப்பு. பதில் வந்தது. வெறும் முனகல். தூக்கக் கலக்கத்தில் நேர்ந்தது போன்ற ஒரு பாசாங்கு.

பக்கிரிசாமி வெற்றி கண்டார். பக்கத்தில் கிடந்த இசக்கியம்மாவைத் தூக்கித் தள்ளிபோட்டு விட்டு, மெதுவாக, பாப்பாத்தி பக்கம் உருண்டார். ஒட்டிப் படுத்தார். பாப்பாத்தியின் தோள் அவர் மார்பைப் பரிசித்தது.

"பாப்பாத்தி!" என்றார். தூங்கவில்லை என்று காட்டும் முனகல்.

'பாப்பாத்தி - புள்ளெயைப் போட்டு இப்படி அடிச்சா, எனக்குந்தான் கோபம் வராதா?" என்று அருமையாய்க் கேட்டார். அவர் கை அவள் தலைமயிரைக் கோதியது.

"அதுக்கு என்னை இப்படியா அடிக்கது?" என்று பாப்பாத்தி வாயைத் திறந்தாள்.

பக்கிரிக்கு உடல் குளுகுளுத்தது. "அடிக்கணும்னா - உறைச்சி விழுந்திட்டுது"

பாப்பாத்தி களுக்கென்று சிரித்தாள்.

"நேத்து ஏன் வரலே."

"அதுக்ஜென்ன இன்னைக்கித்தான் வந்திட்டெனே." தூக்கம் கலைந்து உசும்பிய இசக்கியின் காதுகளில் பேச்சுக் குரல் விழுந்தது. யார்? ஒருத்தருக்கொருத்தர் 'டு' போட்டுக் கொண்ட அம்மாவும் அப்பாவுமா பேசுகிறார்கள்? அதற்கே ஆச்சரியமாயிருந்தது. "நான் அம்மா பக்கமிலா படுத்திருந்தேன்!" இது அதன் நினைப்பு.

விழித்து பார்த்தது.

கிரஹங்கள் நிலைமாறியிருந்தன.

சந்திரன் - சூரியன் - பூமி.

கிரஹணம் விடுபட்டுக் கொண்டிருந்தது.

இசக்கி ஒன்றும் புரியாதவாறு உர்ரென்று பார்த்தாள். மாடக்குழித் தகர விளக்கு ஆடி அசைந்து ஒளி கொடுத்தது.

பாப்பாத்தியும் பக்கிரிசாமியும் பேசினார்கள். இசக்கியின் காதில் பேச்சு சரியாக விழவில்லை. அப்பாவும் அம்மாவும் என்னதான் செய்கிறார்கள்?

இச்சென்ற சப்தம். அம்மாவும் அப்பாவும் ஒரேபாயில் ஒருவரை யொருவர் அணைத்துப் படுத்துக்கிடந்தார்கள். அப்பா அம்மாவை முதத்தமிட்டார். அப்புறம்?...

இசக்கி உர்ரென்று பார்த்தாள்.

"சீ - கெட்ட வார்த்தை!"

"சுடலை கெட்ட வார்த்தை செய்யக் கூப்பிட்டப்போ மாத்திரம் அம்மா என்னை அடிச்சாளே! இப்போ!"

அதன் சிந்தனை அதிகதூரம் செல்லவில்லை. கொஞ்ச நேரத்தில் அசந்து தூங்கிப் போய்விட்டாள்.

கிரஹங்கள் அந்தப்படியே இருந்தன.

கிரஹணம் விடுபட்டது!

காலையில் எழுந்தவுடன் இசக்கி அம்மா அப்பாவையும் குர்ரென்று பார்த்தாள். பாப்பாத்தி இசக்கியிடம் வந்து "உடம்பு ரொம்ப வலிக்குதாடி, கண்ணு! என்று முதுகைத் தடவிப் பார்த்தாள். அணிலின் முதுகில் ராமரிட்ட தடம்போல, கைவிரல்களின் மச்சம் அதிலிருந்தது. அப்படியே குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

"பின்னெ பச்சைப் புள்ளெயே -" என்று உத்ஸாகத்தோடு பேச்சை ஆரம்பித்த பக்கிரிசாமி துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே போகத் தயாரானார்.

"அடிக்கிற கைதான் அணைக்கவும் செய்யும்" என்று சொல்லிவிட்டு, குழந்தையைத் தழுவினாள், பாப்பாத்தி. யார் கை? உங்கையா, என் கையா? என்று இடக்குப் பேசினார் பக்கிரி.

"நீங்கள் போங்க" என்று செல்லமாய்ச் சொன்னாள். பக்கிரி சிரித்துக்கொண்டே வெளிக்கிளம்பினார்.

வெளியே போய்விட்டு வரும்வழியில் கசாப்புக்கடை கண்ணில் பட்டது. "கால்சேர் கறி வாங்கிக்கிட்டுப் போனா என்ன?" என்ற யோசனை தட்டுப்பட்டது. வாங்கிக்கொண்டு வீட்டுக்கு நடந்தார்.

வீட்டுக்கு நுழைந்தவுடன், "இந்தா பாப்பாத்தி, கால் சேர் கறி வாங்கியாந்தேன். எடுத்துட்டுப்போ" என்று செல்லமாய் அழைத்தார்.

“இதை எதுக்குப்போட்டு வாங்கியாந்திய. நான்தான் எசக்கியைவிட்டு மீன் வாங்கி வச்சிறுக்கேனே” என்று பதிலளித்தாள் பாப்பாத்தி.

‘அதுக்கென்ன? ரெண்டையும் வய்யி’ என்று சொன்னார் பக்கிரி.

“அப்பாவும் அம்மாவும் இப்படி நேற்று சண்டையிட்டுவிட்டு, ராத்திரி கெட்ட வார்த்தை செய்துவிட்டு, இப்போது சிரிக்கிறார்களே, ஏன்? என்று யோசித்தாள் இசக்கி.

கெட்ட வார்த்தை!

“அப்போ-சுடலை சொன்னது? அம்மாவும்

அப்பாவுமே - அப்போ நான் -”

பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த இசக்கி எதையோ தீர்மானித்து முடிவு கட்டியதுபோல், எதிர்த்த வீட்டுச் சுடலையைத் தேடி ஓடினாள்.

“ஏ மூதேவி எங்கே ஓடுதே?” என்று கேட்டாள் பாப்பாத்தி.

“அது எங்கெயும் போவுது நீ இப்படி வா” என்று கையை நீட்டினார் பக்கிரிசாமி.

மீண்டும்,

பூமி - சூரியன் - சந்திரன்

தாய் - தந்தை - குழந்தை

முல்லை - 8

உரிமை

மோரா

முற்றத்திலே கட்டிப் போடப்பட்டிருந்த அந்தச் சடை நாய்கள் இரண்டும் ஒன்றையொன்று உறுத்துப் பார்த்தன; ஊளையிட்டன.

பக்கத்து வீட்டிலிருந்து வந்த பார்வதி கேட்டாள்; 'என்ன கமலா, இது ஏன் ரெண்டு மூணுநாளா இப்படிச் சத்தம் போடுது? புதுசா வேறெ ஒண்ணு கட்டிக் கிடக்கே. வாங்கிறிக்கியளா?"

"இல்லெ" என்று இழுத்தாள் கமலா,

"பின்னே?"

"அது ஒரு விஷயத்துக்கு வந்திருக்கு"

"அதென்னடி, விஷயம்?"

"அதுவா, அப்பா பட்டணம் போயிட்டு வரும்போது, ரெண்டு சடைக்குட்டி வாங்கியாந்தாங்க"

"என்னடி, புதுசா ஒண்ணு வந்திருக்கேன்னா, நீ என்னமோ சொல்லுதியே"

"கேளேன். அதைத்தானே சொல்லப்போறேன்"

"ம்"

"ரெண்டையும் வளர்த்தோம். அந்த ஆண் நாய்க்கு இடையிலே ரெண்டு மூணு நாளா, என்னமோ செய்தது. பிறகு, கடைசியிலே - பாவம் - செத்தே போச்சி"

"அப்புறம்?"

"வெகு நாளா பெண்நாய் குட்டியே போடலெ, ஒரு நாள் எங்க மாமா வந்தார். 'நல்ல ஜாதியா யிருக்கே, குட்டியே இல்லையா? எப்படியாவது ஒரு ஜோடி பாரேன்' அப்படின்னு அப்பாவிடம் சொன்னார்? அப்புறம் அப்பா சொல்லி, இந்த ஆண் நாயை எங்கிருந்தோ கொண்டு வந்து கட்டியிருக்கான், எங்க வேலைக்காரன்'.

பார்வதி பதில் பேசவில்லை.

நாய்கள் மட்டும் ஒன்றையொன்று உறுத்துப் பார்த்தன; ஊளையிட்டன.

பேசியவர்களில், கமலா கல்யாணமாகாத பதினாறு வயசுக் குமரி; பார்வதி வயிற்றில் பாரமேற்று அறியாத இருபது வயது ஹிந்து விதவை.

முல்லை - 10

நம்பிக்கை

க. கணபதி

"காதல் புனிதமானது என்று கதைப்பதெல்லாம் கவிகளின் கற்பனையில்தான்; அல்லது உணர்ச்சியின் உத்வேகம் தணிந்த பின்பு வாழ்க்கையின் அஸ்தமன காலத்தில் ஒரு வேளை ஏற்படலாம்.

"அம்மா! இதோ எங்க புது டீச்சர்!" - என்று எக்களிப்புடன் ஓடிவந்தாள், என் ஏழுவயதுப் பெண் மல்லிகா. அவள் மலர்ந்த முகத்தில் மனம் நிறைந்த மகிழ்ச்சி பிரதிபலித்தது. அன்பில் ஊறிய ஆர்வம் அவள் கண்களில் தெறித்தது. என் செல்வியின் உள்ளத்தைக் கவர்ந்ததோடு இவ்வின்பக் காட்சிக்கும் வித்தான அவ்வுத்தமியைக் காணும் உவகையோடு விரைந்து சென்று,- "வாருங்கள், வணக்கம்"என்றேன்.

மறுமொழி யொன்றுங் கூறாமல், பரவசத்துடன் என்னை இறுகத் தழுவிக் கொண்டாள் என் மகளின் டீச்சர்! திகைப்பினால் என் வாய் அடைத்துவிட்டது. அவள் அணைப்பிலிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டு ஏற இறங்கப் பார்த்தேன்.

"யார் - என் ரூபியா?"

பதில் சொல்லாமலே கலகலவென்று நகைத்த வண்ணம் மீண்டும் என்னைத் தழுவிக்கொண்டாள். ஆமாம்! ரூபிதான்! ஆனால், அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு அரை உடம்பாக மெலிந்து–

உணர்ச்சி மேலிட இருவர் கண்களிலும் கண்ணீர் ததும்பியது சற்று நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தோம்.

என் மனம் கடந்த காலத்திற்குத் தாவியது.

- அவள் ஒரு கிருஸ்தவப் பெண். அவளைக் கடைசியாகப் பார்த்தது என் திருமணத்தின்போது. அதுவரையில் அவளே என் உயிர்த்தோழி குழந்தைப் பருவம் முதல் ஒன்றாகப் படித்தோம் ஒன்றாக விளையாடினோம். வயது வந்த பின்னும் ஒன்றாகவே எங்கள் கனவுக் குதிரையைத் தட்டிவிட்டு, எட்டிய வரையில் பறந்தோம். என் திருமணம் எங்களைப் பிரித்தது. மக்கள் வாழ்க்கையைக் கல்யாணம் எவ்வளவு பாதித்து விடுகிறது! அதுவும் மகளிர் வாழ்வில்..!

மீண்டும் அவளைக் கவனித்தேன், நானறிந்த ரூபி...! அவ்வளவு வாளிப்பான உடலா இப்படி வதங்கிய புடலம் பிஞ்சுபோல... அவள் மின்வெட்டும் விழிகள் பகற்காலச் சந்திரனைப்போல ஒளியிழந்து கிடப்பானேன்! அவள் குழிவிழுந்த கன்னமும், உலர்ந்த உதடுகளும், பொலிவிழந்த முகமும், அவளுடைய கண்ணாடிக் கன்னத்தையோ எழில் வதனத்தையோ எவ்விதத்திலும் நினைவூட்டாது. காரணம்? இந்த வயசிலேயே ஒரு சோக நாடகத்தை நடித்து முடித்துவிட்டாளா? அதை அறிந்துகொள்ள என் ஆவல் கட்டுக்கடங்காமல் துள்ளியது ஆனால்... அது அவள் வேதனையைக் கிளறுவதாக இருந்தால்? இதற்குள் இருவருக்கும் சிற்றுண்டி வந்தது. சாப்பிட்டுக் கொண்டே, "நான் இங்கே வந்து ஒருமாதமாகிறது. நீயும் இந்த ஊரில் இருப்பது எனக்குத் தெரியாது. குழந்தை மல்லிகா உன்னைப்போலவே இருப்பதால் அவளைப் பார்த்தது முதல் உன் நினைவாகவே இருந்தது. ஒருசமயம் உன் மகளாயிருந்தால் உன்னைப் பார்க்கலாம் என்ற சபலத்துடன் தான் இங்கே வந்தேன்... அம்மா.. எவ்வளவு நாளாகிவிட்டது.. அந்தக் காலம் மீண்டும் வருமா?... என்று பெருமூச்சு விட்டாள்.

"நீ ஏன் இப்படி?... என்று எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று தெரியாமல் மழுமாறினேன்.

"....?...."

"உடல் வாடி ... மெலிந்து...இன்னும் கல்யாணம்...?"

"பெண்ணாய்ப் பிறந்தால் கல்யாணம் செய்து கொண்டால் தான்..."

"வாழ்க்கை பூரணமாகும். பெண்ணுக்கு மட்டுமல்ல, ஆணுக்கும் அப்படியே! நானறிந்த ரூபி பௌத்த பிக்ஷுணி யல்லவே!" என்று மெல்ல சிரித்தேன்.

"நீ சொல்லும் வாழ்க்கை வெறும் கானல் நீராக இருந்தால்...?

"கானல் நீரா? அது சுற்பகக் கா. அமுத ஊற்று..."

"...கசந்துவிட்டதே என் அனுபவத்தில்".

"கசந்தது வாழ்க்கையல்ல! உன் மனசின் மருட்சி உடலோ மனமோ பேதலித்தால் பாலும் கசப்பது இயல்பு தானே! வாய் கசத்தால் அது பாலின் குற்றமா?"

"அழகிய பிணத்தை மலர்க்குவை கொண்டு மூடி வைத்தாலும் மறைத்துவிட முடியாது. மனித இயல்பும் அப்படித்தான்.

"அப்படியானால் ..நீ..?"

"ம்.. உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன்?" என்று நீண்ட பெருமூச்சுவிட்டாள். பிறகு.

"உன் கல்யாணத்திற்கு சில தினங்களுக்கு முன்பு நமது பள்ளிக் கூடத்தில் ஒரு புது வாத்தியார் வந்தாரே- நினைவிருக்கிறதா?"

'யார்? விக்டரா?"

"ஆமாம்! விக்டர் ஜெயராஜ்தான்!"

என் நினைவுத் திரையில் ஒரு ஆணழகனின் கம்பீர உருவம் காட்சியளித்தது.

"... அவரைக் கண்டது முதல்... என் மனம் அவரையே நாடியது. நாளடைவில் பரஸ்பரக் காதலாக அரும்பியது. கதையை வளர்த்துவானேன். பெரியோர்களிடையே பேச்சு வார்த்தை நடந்து கல்யாணமும் நிச்சயமாயிற்று. அப்பா மலேயாவிலிருந்து அடுத்த மாதம் வந்ததும் கல்யாணத்தை நடத்துவதாய் ஏற்பாடாயிருந்தது இதற்கிடையில் கோடை விடுமுறை வரவும் அவர் குடும்பத்தினர் சொந்த ஊருக்குப் புறப்பட்டனர் அவரை மட்டும் எங்களுடன் தங்கும்படி வேண்டினேன். அம்மாவும் வற்புறுத்தவே அவரும் இணங்கினார்.

"நாலைந்து நாள் குஷாலாகக் கழிந்தது என்றாலும் என் வரையில் எனக்கு ஒரு குறைதான். எப்பொழுதும் அம்மாவும் எங்களுடனேயே இருப்பார்கள். பீச்சுக்குப் போனாலும் அப்படியே, எனக்குச்சங்கடமாகவும் ஆத்திரமாகவும் வரும்,- எனினும் இன்னும் எத்தனை நாளைக்கு? - கல்யாணம் ஆகும் வரையில் தானே? அதன் பிறகு?-- என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன் அதோடு நாள் முழுவதும் அவருடனேயே ஒரே வீட்டில் இருந்து கூட ஒரு நிமிஷமாவது தனிமையில் சந்திக்க முடியவில்லையே என்று எண்ணி ஏங்குவேன். அவர் எப்பொழுதாவது ஒரு வார்த்தை பேசிவிட்டால்.. அதையே நினைத்து நினைத்து இதயம் கிளுகிளுப்பேன்..

சற்று ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டாள் ரூபி. பிறகு மீண்டும் தொடர்ந்து, "ஒருநாள் இரவு அவர் என்னை நெருங்கினார். நான் சற்று பிகு பண்ணினேன்.. பிறகு என்னைத் தழுவி.. முத்தமிட்டார். கனவில்தான்! - திடுக்கிட்டு விழித்தேன். இன்ப உணர்வில் திளைத்த நினைவு மட்டும் அகலவில்லை. கேவலம் என் தலையணைதான் என் அணைப்பின் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. வெட்கமும், சிரிப்பும் ஏமாற்றமும் என்னைப் பற்றி உலுக்கின. தலையணையை வீசி யெறிந்துவிட்டு, என்னையறியாமல் கலகலவென்று சிரித்தேன். பிறகுதான் ... யாராவது விழித்துக்கொண்டிருந்தால்... என்று எண்ணியவளாய் தலைமாட்டிலிருந்த 'டார்ச்சை' எடுத்து மெதுவாகக் கவனித்தேன். என் தங்கையும் தம்பியும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அடுத்த படுக்கை... காலியாகயிருந்தது. அம்மா...? ஒரு சமயம் வெளியே போயிருக்கலாம்.. நல்ல வேளை? ஆனால். அவர் விழித்திருந்தால் விடிந்ததும் கிண்டல் செய்து என் மானத்தை வாங்கி விடுவாரே.. என்று அவர் இருந்த அறைப்புறமாக லேசாக டார்ச்சைத் திருப்பினேன் என் இதயம் படபடத்தது. கைகால் வெலவெலத்தது. உலகமே நழுவி எங்கேயோ உருளுவதுபோல இருந்தது. ஏதோ ஒருவிதமான பீதி ஏற்பட்டது. மனசில் வெறி ஏற்பட்டது. இன்னது செய்வதென்று தெரியமல்.. அலறி விட்டேன்."

இப்பொழுதும் அவள் கன்னங்களில் கண்ணீர் பொலபொல வென்று வழிந்தது. தொண்டை அடைத்துக் கொண்டது. மார்பு விம்மியது. எனக்கும் ஒன்றும் தோன்றாமல் அவளை இறுகத் தழுவிக்கொண்டு அவள் முகத்தையே ஆதரவோடு பார்த்தேன்.

நீ இன்னும் புரிந்துகொள்ளவில்லையா? என் அருமை அம்மா.... அவருடன்.' என்று விக்கி விக்கி அழுதாள்.

விஷயம் புரிந்துவிட்டது, ஆனால் அவளுக்கு ஆறுதல் சொல்லும் வகைதான் புரியவில்லை. சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தோம்.

அவள் வாழ்க்கை கசந்து வெறுப்புற்றதில் வியப்பொன்றுமில்லை. அவள் அம்மாவை எனக்குத் தெரியும், நல்ல அழகி, கட்டு விடாத தேக வனப்பு, தாயும் மகளும் வெளியே புறப்பட்டால் அக்கா-தங்கை என்றுதான் யாரும் நினைப்பார்கள். ரூபியின் தந்தையும் சில வருஷங்களாக மலேயாவில் தங்கிவிட்டார். ஆகவே-! என்னதான் இருந்தாலும்......

"இனி உன் வருங்கால வாழ்க்கை?" என்று ஆரம்பித்தேன்.

"வாழ்க்கை! அழகான வார்த்தை! லட்சியவாதிகள் கனவு காண்பதற்குத் தகுந்த பதம்தான். ஆனால், - நெருங்கிப் பார்த்தால்...

'உன் கடந்த கால கசந்த அனுபவத்தை நினைவிற்கொண்டு பிடிவாதமாக உன் இளம் பிராயத்து இன்ப அனுபவங்களை இழப்பது இயற்கைக்கே மாறானது, மேலும் இறுதியில் அதற்காக உன்னையே நொந்து கொள்ளவும் நேரிடும்.

"இன்பம் கனவில்தான். நனவில் அது நிதர்சனமாக நழுவிக் கொண்டிருப்பதைத்தான் நிதர்சனமாகக் காண்கிறேன். நீங்கள் "இன்பத்தில் வெடித்த அரும்புகள்" என்று குலவிவிட்டு பிறகு, 'சனியன் தொலையட்டும் பள்ளிக்கூடத்திற்கு. சற்று நேரமாவது அக்கடா வென்று இருப்போம்' என்று கருதுகிறீர்கள். உங்கள் "தொல்லையை' நான் முழு மனசுடன் வரவேற்று அவர்களிடையே வாழ்ந்து இன்பங்காண்கிறேன். அவர்களுடைய பிஞ்சு உள்ளத்தில் சூது வாது இல்லை. பொய்மையில்லை ஒளிவு மறைவு முகஸ்துதி ஏமாற்று எதுவுமே இல்லை. அவர்கள் மெல்லிய இதய மலர் விரிந்து மலர்ந்து, அங்கே மெய்யன்பு கனிவதைக் கண்டு களிக்கிறேன். மலர்களைப்போலவே...'

'வாஸ்தவந்தான்! இருந்தாலும்... அது இரவல் சுகந்தானே! அவை உன் குழந்தைகளாகவேயிருந்தால்?

'என் குழந்தைகள்!" என்று நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"ஆனால், உடலின்பம் மிருக உணர்ச்சிதானே! ஆகவே மனிதர்களும் உணர்ச்சியின் உத்வேகத்தில் மிருகமாகத்தான் நடந்து கொள்ளுகிறார்கள். அங்கே கேவலமானபோட்டியே நிரந்தரமாக நிலவுகிறது. தாயின் பாசம், தந்தையின் பரிவு, கணவரின் காதல் மக்களின் கடமை, நட்பின் நலம் -

எல்லாம் உணர்ச்சித் தீயில் பட்டு வெந்து சாம்பலாகி விடுகிறது. எஞ்சி நிற்பது சுயநலமும், ஆண்-பெண் என்ற இன உணர்வும்தான். அன்பு, ஈவு, இரக்கம், கடமை என்பது போன்ற மனித உணர்ச்சிகள் அங்கே ஊற்றெடுப்பதில்லை. காதல் புனிதமானது என்று 'கதைப்பதெல்லாம் கவிகளின் கற்பனையில் தான். அல்லது உணர்ச்சியின் உத்வேகம் தணிந்த பின்பு, - வாழ்க்கையின் அஸ்தமன காலத்தில் ஒருவேளை ஏற்படலாம். இதுவே என் அனுபவம் சொல்லிக் கொடுத்த பச்சை உண்மை. நிர்வாணமான உடலைப் பார்க்கக் கண் கூசுவதுபோல உண்மையையும் நிர்வாணமாகப் பார்க்க உள்ளம் கூசத்தான் செய்யும். அதற்காக அழகான வார்த்தைகளினால் மூடி அலங்கரித்து நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளத்தான் வேண்டுமா? இந்நிலையில் நான் யாரை நம்பி ஆற்றில் இறங்குவது?"

"மற்றவர்களை நம்பவேண்டாம், ஆனால் உன்னிடமே தளராத தன்னம்பிக்கை வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கை வேண்டும். மலரைக் கொண்டது விடுவார்களே என்பதற்காக அது மலராமலே இருக்க முடியுமா? காய்க்காமல், கனியாமல் இருப்பதுதான் சாத்தியமா? நரியும் புலியும் மலிந்த கிடந்தாலும் மானும் மயிலும் தத்தம் வாழ்க்கையை வாழத்தானே வேண்டும். அலை ஒய்ந்தபின் கடல் ஸ்நானம் செய்வதென்றால் முடியுமா?

"அப்படியானால்"...

"வாழ்வில் விருப்பம் வேண்டும். தீவிர பசி வேண்டும். தளராத தன்னம்பிக்கை வேண்டும்".

முல்லை - 11

“வென்றிலன் என்ற போதும்”

ரகுநாதன்

குருக்ஷேத்திரம் மண்ணின் கொதிப்பைக் கர்ணனின் பச்சை ரத்தம் தணித்தது.

கர்ணன் இறந்துவிட்டான். எனினும் எத்தனை குரல்கள்?

கர்ணன் என் காதலன்	-	திரௌபதி
கர்ணன் என் தலைமகன்	-	குந்தி
கர்ணன் என் அண்ணன்	-	தருமன் .
கர்ணன் என் சூத்திரக் கயிறு	-	கண்ணன்
கர்ணன் தியாகி	-	அர்ச்சுனன்.

1

பாடி வீட்டின் திட்டி வாசல் நிலை தட்டி வளைந்து நிமிர்ந்த வில்லின் நாண் வீறாப்புடன் நாத ஜங்காரம் செய்தது.

நாணொலி கேட்ட தருமன் திடுக்கிட்டுப் போனான். பயத்தின் பீதி கம்பீரத்தில் பதுங்க எண்ணித் தவித்தது. “யாரது? கர்ணனா?” என்று வாய் விட்டுக் கேட்டு விட்டான். எனினும் கேள்வியில் விந்து விழுந்துபோயிருந்தது. கர்ணனிடம் தோற்றோடி வந்ததால் ஏற்பட்ட பயமும் பேதலிப்பும் நாக்கைக் கட்டிப் போட்டிருந்தன.

“கர்ணன் இல்லை; அவன் காலன்’ என்று கூறிக் கொண்டே, தோளிலிருந்து நழுவிய காண்டீபத்தை இழுத்துப் போட்டுக் கொண்டான் அர்ஜுனன்.

“நீயா, அவசரத்தில்-” என்று இழுத்த தருமன் பட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டான். எனினும் முகத்தில் பேயறைந்தாற்போல் சவக்களை படர்ந்திருந்தது. நெஞ்சில் திமிறிய பீதியைப் புதைத்துவிட நினைத்த தருமன், “அர்ஜுனா, கர்ணன் தொலைந்தானா?” என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அண்ணனுடைய படபடப்பைக் கண்டு அர்ஜுனனின் உதடுகளில் புன்னகை வளைந்தது. "தொலையப்போகிறான். அதுவும் என் கையால்" என்று கம்பீரமாகக் கூறிவிட்டு, பக்கத்தில் கிடந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

எதிர்பார்த்த பதிலுக்கு எதிர்ப் பதில் கிடைத்ததும் தருமனுக்கு நிதானம் தவறியது. "கர்ணனைக் கொல்லுமுன் பாசறையில் உனக்கு என்ன வேலை?" என்று எரிந்து விழுந்தான்.. குரலில் கரகரப்பும் உக்கிரமான ஆங்காரமும் கலந்திருந்தன.

"வந்து-தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான்..." என்று இழுத்தான் அர்ஜுனன்.

"என்னை எதற்காகப் பார்க்கவேண்டும்? வில்லேந்தத் தெம்பில்லை என்று சொல்லேன். பேடி! பேடிக்கு யுத்த வளப்பம் எப்படித் தெரியும்? என்று சீறினான். அன்றைய தோல்வி அவன் நிதானத்தையும் மனத் தெளிவையும் மழுங்க அடித்திருந்தன.

அர்ஜுனனுக்குத் தமையனின் சுடுசொல் அஸ்திரம் போல் தைத்தது. போருக்குச் செல்லுமுன் தமையனின் ஆசீர்வாதம் பெற்றுச் செல்ல வந்தவனுக்கு அண்ணனின் அலட்சியத்தைத் தாங்க முடியவில்லை.

"நானா பேடி? தங்களைப்போல் களத்தைவிட்டு ஓடிவந்து, பாசறையில் பதுங்கிக் கிடக்கவில்லையே" என்றான் நிதானங் குலையாத குரலில்.

அர்ஜுனனின் பதில் தருமனின் மனநிலையைக் காலை வாரிவிட்டது: "கர்ணனும் உன்னைப்போல் வில்லைத் தானே ஏந்துகிறான். பெண் 'வேட்டைக்காரனுக்குப் போர் முறை என்ன தெரியும்?" "அண்ணா! கரும்புக்கு அர்ஜுனன் பணிந்து விடுவான். ஆனால், கர்ணன் கைவில்லுக்கு அர்ஜுனனும் பணியமாட்டான். காண்டீபமும் பணியாது!" என்று கத்தினான். அர்ஜுனன்.

"போடா, உன் காண்டீபமும், நீயும். அன்று துரியோதனன் சபையில் 'தனுவுண்டு காண்டீபம் அதன் பேர்!' என்று சொல்ல மட்டும் தெரிந்ததா? ஆண்மையற்றவனே!" என்று எதிர்த்தான் அண்ணன்.

"ஆம். அன்று பாஞ்சாலியைத் துகிலுரியும்போது கைகட்டிப் பார்த்துக்கொண்டிருந்தீர்களே. இன்று கர்ணனுடைய அம்புக்கு அஞ்சி, பாசறையில் வந்து பதுங்கிக் கிடக்கிறீர்களே உங்களுடைய தருமந்தான் இன்று எங்களைத் தட்டழிய விட்டிருக்கிறதே. இவை போதாதா?"

"திரௌபதியைப் பற்றிக் கிளறாதே. அவள் என் மனைவி - நம் மனைவி!"

"கட்டிய மனைவியைக் காப்பாற்ற முடியாதவருக்கு மனைவி வேறா?"

"அர்ஜுனா!" என்று முகத்தை நெரித்தான் தருமன்.

அர்ஜுனன் ஏறிட்டுப் பார்த்தான். அர்ஜுனன் கை தன்னையுமறியாமல் காண்டீபத்தை இறுகப் பற்றியது. பழைய நினைப்பில் நெஞ்சம் தயங்கியது; பதில் வரவில்லை.

தருமனும் அயர்ந்துவிட்டான். என்றைக்கோ செய்து விட்ட பாபத்தின் குறுகுறுப்பு நெஞ்சைக் குடைந்தது. 'பாண்டு வம்சமே நிர்மூலமாகட்டும். திரௌபதியை எத்தனை தடவையாயினும் பங்கப்படுத்தட்டும். கௌரவர் கூட்டமே ஆட்சி செலுத்தட்டும். பாண்டு மரபில் ஒரு பேடியும் வாழ்ந்தால்" என்று சலித்துப் போய் முனகினான் தருமன்.

அர்ஜுனன் நிதானத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "அண்ணா, இன்றைய தோல்வி தங்கள் நிதானத்தை நிலைகுலைத் திருக்கிறது. கர்ணன் மடிவது நிச்சயம். காண்டீபத்தின் சேவைக்கு கர்ணனின் ரத்தந்தான் கடைசி ஆகுதி" என்றான்.

"போதும் உன் பேச்சு" என்று சினந்துகெண்டு எழுந்தான் தருமன்

அர்ஜுனனின் நிதானத்தின் பிடி தளர்ந்துவிடும் போலிருந்தது. 'அண்ணா' என்று அழைக்க வாயெடுத்தான்.

"என்னை அண்ணன் என்று அழைக்காதே. இங்கிருந்து போகிறாயா. இல்லையா?" என்று சினந்து குமுறினான் தருமன்.

அர்ஜுனன் எழுந்தான். அவனைமறியாமல் அவன் கண்களில் நீர் நிரம்பியது. "போதும். காண்டீபமே தொலைந்து போகட்டும். தங்களுடைய உதாசீனக் கொதிப்பைவிட, கர்ணனின் பாணம் குளிர்ந்த தானிருக்கும்" என்று கூறிவிட்டு, காண்டீபத்தை எடுத்து முழங்காலில் கொடுத்து முறிக்கப் போனான்.

தருமன் அதைத் தடுக்கவில்லை. விறைப்புடன் நின்றான். மனசில் அத்தனை வெறி.

"அர்ஜுனா!"

அந்தக் குரல் காதில் விழுந்ததும் அர்ஜுனன் திடுக்கிட்டுப் போனான். நிமிர்ந்து பார்த்தான். வாசல் நடைகடந்து உள்ளே நுழைந்த கண்ணன் அர்ஜுனன் கையை எட்டிப் பிடித்தான்.

"உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்றான் சாவதானமாக.

'எனக்கு மட்டுமில்லை பாண்டவர்களுக்கே பைத்தியம் பிடித்துவிட்டது!" என்று கத்தினான் அர்ஜுனன்.

தருமனின் விறைப்பையும் அர்ஜுனனின் விரக்தியையும் கணத்தில் உணர்ந்துகொண்டான் கண்ணன்.

"தருமா, என்ன நடந்தது?" என்று தருமன் தோளைத் தடவிக்கொண்டே கேட்டான். தருமன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

அர்ஜுனனே பதில், சொன்னான்: "கண்ணா போதும். இந்த யுத்தம் பீமனுடைய சபதமும் திரௌபதியின் கூந்தலும் முடிக்கப் பெறாமலே போகட்டும். இத்தனை நிந்தனைக்குப் பிறகும் முடிக்க காண்டீபத்தைத் கைதொடவே கூசுகிறது" என்ற கூறிவிட்டு, காண்டீபத்தை விட்டெறிந்தான்.

தரையில் விழுந்த காண்டீபம் அடிபட்ட பாம்பைப் போலத் துள்ளி யெழுந்து படுத்தது.

"அர்ஜுனா என்ன இது?" என்று கூறிக்கொண்டே துவண்டு கிடந்த காண்டீபத்தைக் குனிந்து எடுத்தான் கண்ணன். பிறகு, 'தருமபுத்திரா, யுத்தத்துக்குச் செல்லு முன் உன்னிடம் ஆசி பெற்று வரும்படி அர்ஜுனனை நான்தான் அனுப்பினேன். ஆசிபெற வந்தவனிடம் இப்படியா நடந்துகொள்வது?" என்று நயமாய்ச் சொன்னான்.

"கண்ணா, உன் வியாக்கியானமே தேவையில்லை" என்று சுருக்கினான் தருமன். எனினும் குரலில் விறைப்பு குறைந்து தலையும் தொங்கிப் போய்விட்டது தருமனுக்கு.

"அர்ஜுனா, தருமனுக்குத் தோல்வி வெறி குலையவில்லை சரி. நாம் போகலாம். இந்தா பிடி வில்லை" என்று கூறினான்.

அர்ஜுனன் கைநீட்டவே மறுத்தான்.

'பிடி வில்லை!" என்று கடுமையாகச் சொன்னான் கண்ணன்.

"முடியாது. என் கை கூசுகிறது" என்றான் அர்ஜுனன்.

கண்ணனுக்கு அர்ஜுனனின் அலட்சியம் கோபத்தைக் கிளறியது. அர்ஜுனா, அன்று நான் போதித்ததை யெல்லாம் மறந்து விட்டாயா? இந்தா பிடி வில்லை. உன் குருவின் ஆக்ஞை. காண்டீபத்தைப் படி! என்று ஆணையிட்டான்.

"வில்லை ஏந்தக் கற்றுக்கொடுத்தவர்தான் விரோதியாய்விட்டாரே. இன்னும் என்ன இருக்கிறது?"

"துரோணருக்கும் மகத்தானவன் நான். நான் உன் ஆத்ம குரு, நீ என் அடிமை"

"கண்ணா, பகைவன் யாராயிருந்தாலும் பார்க்கக் கூடாது என்றாயே இன்று உடன் பிறந்த தமையனே என்னை விரோதிக்கும் போது?"

"கர்ணன்...." என்று எடுத்த வார்த்தையைக் கண்ணன் விழுங்கி விட்டான். பிறகு "அர்ஜுனா உனக்கு இன்னும் தெளிவே இல்லை. எல்லாவற்றிற்கும் காரண காரியம் நான். கடமையைச் செய்வதே உன் தொழில். அதன் பலனை அறிய உனக்கு அதிகாரம் கிடையாது,"

அர்ஜுனன் தயங்கினான்.

"என் கடமைதான் என்ன?" என்று சலித்துக் கேட்டான்.

“கர்ணனைக் கொல்வது” என்றான் கண்ணன். பிறகு அர்ஜுனனைத் தட்டிக்கொடுத்து “வா புறப்படு” என்று அழைத்தான்.

காண்டீபத்தை அவனையுமறியாமல் அவன் கை மீண்டும் பற்றிக்கொண்டது.

“தருமா!” என்றான் கண்ணன். தருமனோ திரும்பக் கூட இல்லை. “அர்ஜுனா உனக்கு நான்தான் சர்வமும். தருமனுக்கும் இன்னும் வெறி தணியவில்லை. வா, போகலாம்” என்று இழுத்தான்.

காண்டீபத்தின் கழன்றுபோன நாணை ஏற்றினான். நாணேற்றிய விசைப்பில் நரம்பு முறைத்துத் தொனித்தது.

கண்ணன் அர்ஜுனனை கைப்பிடியாக இழுத்துக்கொண்டே நடந்தான். வாசல் நடை கழிந்து வெளியில் செல்லவும் “அர்ஜுனா!” என்ற தருமனின் குரல் காதுகளில் விழுந்தது.

கண்ணன் சிரித்தான். அர்ஜுனன் கழுத்தைத் திருப்பக் கூட இல்லை.

2

திரௌபதி:

அரண்மனை மேன்மாட முன்றிலில் நின்று அர்த்தமற்ற வானைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மனசில் கவலைகள் மோதி மோதி நெஞ்சம் மரத்துப்போயிருந்தது. இறுகிப்போன இதயத்துக்குள்ளிருந்து குறுகுறுக்கும் நப்பாசையும், ஒதுக்கமுடியாத துயரத்தின் உறுத்தலும் என்னை நிலைகொள்ளவிடாமல் அலட்டின. எனினும் கண்ணீர் சிந்தவோ வாய்விட்டு அழுது நெஞ்சின் பளுவைக் குறைக்கவோ மனசில் தெம்பும் திறனும் இல்லை.

காரணம் அன்றைய போர். ஒரு புறம் கர்ணன், என் காதலன்; மறுபுறம் அர்ஜுனன், என் கணவன். இருவரும் போர்புரிகிறார்கள் இருவரில் யார் விழுவார்கள்? அவர்கள் வீழ்ச்சியைப் பொறுத்துத்தான் என் வாழ்க்கையும் இருக்கிறது-இப்படியெல்லாம் நெஞ்சக் குகையில் எண்ணங்கள் வெந்து கொண்டிருந்தன.

தூரத்தில் சங்கும் தாயையும் பயங்கரமாக ஒலித்தன. கிழிபட்டு வழிவிடும் காற்றில் வேகங்குறையாது ஹுங்காரிக்கும் அஸ்திரங்களின் ஓசையும் கேட்டது. எனினும் காது மரத்துவிடவில்லை.

திடீரென்று ‘அப்பா, மகனே’ என்று அலறும் சப்தம் காதில் விழுந்தது - அதுவும் எங்கள் அரண்மனையிலிருந்து!

மாடத்திலிருந்துக் கீழே குனிந்து பார்த்தேன் குந்தி தேவி தலைவிரிகோலமாய் ‘அப்பா மகனே, என்று கதறிக்கொண்டு ஓடினார். அந்த பரிதாபக் குரல் என் நெஞ்சில் பாய்ந்து அழுந்தியது. மகன்!- அர்ஜுன மகாராஜாதான் இறந்துவிட்டார் என்று மனசில் பட்டது. உடனேயே மனைவி என்ற பாந்தம் மனசைக் கொந்திற்று. குபீலென அழ

நினைத்தேன். ஆனால் திறனில்லை. ஒன்றும் புரியாமல் நின்றேன். கணத்துக்குள் மாடமே நிலைபெயர்ந்து தாழ்வதாக உணர்ந்தேன். அவ்வளவு மயக்கம். மாடத்தை விட்டு இறங்கிக் களத்தை நேரில் காண எண்ணினேன். இறங்கினேன். ஒடினேன். ஆனால் வழியில் எதிர்ப்பட்ட தாதி என்னைத் தடுத்து நிறுத்தினாள் "அம்மா, எங்கு ஓடுகிறீர்கள்?".

'களத்திற்கு" என்றேன் நிர்விசாரமாய்.

ஏனம்மா, அர்ஜுன ராஜா ஜெயித்துவிட்டார். கர்ணன் இறந்து பட்டார்!" என்று கூறினாள் அவள்.

மனசில் விழுந்திருந்த முடிவிற்கு மாற்றமுறைக்கக் கேட்டதும், எனனால் தாங்க முடியவில்லை. கர்ணன் இறந்து போனார், அர்ஜுனன் இறக்கவில்லை. எனினும் குந்திதேவி 'மகனே!' என்று ஓடியதன் அர்த்தம்? ஒருவேளை இருவருமே...

'இருவருமே' என்ற உணர்ச்சி மனசில் பட்டதும் தலை தெறித்துச் சிதறுவது போலிருந்தது.

களத்துக்கு வைத்த கால்கள் குளிர்ந்து விட்டன. மயக்கம் போட்டு விழுந்து விடுவேனோ என்ற பயம் நெஞ்சை வளைத்தது. அப்படியே அரண்மனைக்குள் ஓடிவந்து படுக்கையில் விழுந்தேன் விழுந்த வேகத்தில் நெஞ்சு திறந்துகொண்டதுபோல் இருந்தது. அழுவதைத் தடுக்க முடியவில்லை. அழுதேன். யாருக்காக, எதற்காக என்பதையெல்லாம் உணர மனசில் தெளிவு இல்லை.

கர்ணனின் மரணச் செய்தி மனசை ஊமையடியாய் அடித்துக் கிடத்திவிட்டது. அடி விழுந்த மனசில் நினைத்து நினைத்து எழும் வேதனையுணர்வில் பழைய கனவு நிலைவுகள் வடிவாகித் தேய்ந்தது கரைந்த உருமாறிக் கொண்டிருந்தன. பூர்வ நினைவுகளை மறந்து விடும் பாக்கியம் பெற்றுவிட்டால் இன்று சிந்தனை முடுக்கில் சுற்றிச் சுழலும் சூத்திரப் பாவையாயிருக்க வேண்டியிராதே...

இளமையில் அப்பா என்னிடம் வரும்போதெல்லாம் அர்ஜுனனைப் பற்றியே வருணித்துக்கொண்டிருப்பார். எனக்கு வயசு வரும் முன்னமே, அப்பா என்னிடம், "கிருஷ்ணை, நீ யாரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறாய், தெரியுமா? அர்ஜுனனைத்தான். அவனுக்கென்றே உன்னை நான் வளர்த்து வருகிறேன்' என்பார். ஆனால் அர்ஜுனனின் அழகைப் பற்றி நான் கற்பனை செய்து கொள்ளும் போதெல்லாம் உள்ளக்குள்ளே குறுகுறுப்பும் இன்பக் கிளுகிளுப்பும் ஏற்பட்டாலுங்கூட, அப்பாவை முறியடித்து வெற்றிகண்டவன் என்னும்போது என்னையறியாமல் அவர்மீது குரோத உணர்ச்சிதான் ஏற்படும்.

அண்ணன் திருஷ்டதும்யுனக்கோ அர்ஜுனன் என்றால் பிடிக்காது. அவனோ எப்போது பார்த்தாலும் துரியோதனின் பராக்கிரமத்தைப் பற்றியே சொல்லிக்கொண்டிருப்பான் அவனுக்கு ஒரே ஆசை, நான் அத்தினபுரி ராணியாகிவிட வேண்டு மென்று.

எனினும் அப்பா சிறுவயசிலிருந்தே விதைத்து வந்த அர்ஜுனனின் எண்ணம் மனசில் உறுத்திக்கொண்டே தானிருந்தது. ஆனால் பாண்டவர்கள் அனைவரும் அரக்கு மாளிகையில் வெந்து மடிந்தார்கள் என்ற செய்தி எட்டியதும், அப்பாவுக்கு இடி விழுந்தாற்போலாய்விட்டது. எனக்கோ அர்ஜுனரும் எரிந்து சாம்பலாய்ப் போனார் என்பதைக் கேட்கவே சகிக்க முடியவில்லை. அரக்கு மாளிகை தகனச் செய்தியோடு அர்ஜுனன்மீது எனக்கிருந்த குரோத உணர்ச்சியும் வெந்து மடிந்தது. அர்ஜுனனின் மரணம் எனக்கு ஒரு பேய்க் கனவாகப் பட்டது. ஆனால் அந்தச் செய்தி அர்ஜுனர் மறைந்தார் என்ற அழியாத உணர்ச்சி, மனசில் 'தனிமை' யைச் சிருஷ்டித்துவிட்டது. சுயம்வரம் என்று கேட்டபோது மனசில் மீண்டும் தெம்பு எழுந்தது. பிடிபற்று, தாவுவதற்குக் கொம்பற்றுத் தவிக்கும் எனக்கு சுயம்வரம் என்ற சாக்கில் ஒரு பற்றுக்கோடு கிடைத்ததால் - என்று தான் நினைத்தேன்.

சுயம்வர மண்டபத்தில் வந்து நின்றபோது, அதுவும் எனக்கும் மணமகனுக்கும் இடையே வில்லையிட்ட அப்பாவின் கிருத்திருமத்தை நினைக்கும்போது நான் கடைசிவரைக் கன்னியாகவே இருந்துவிட நேருமோ என்ற பயம் அலட்டியது. வில்லையும் லக்ஷ்யத்தையும் ஒதுக்கிவிட்டு என்னைக்கொண்டே சுயம்வரம் தேடச் சொல்லியிருந்தால், எனக்கிருந்த மனநிலையில் கர்ணனுக்குத்தான் மாலை யிட்டிருப்பேன்.

மேலும் அர்ஜுனனுக்குப் பின் கர்ணன் ஒருவரால் தான் அந்த லக்ஷ்யத்தை அடிக்க முடியும் என்று பலரும் கூறிவந்த சொல் மண்டபத்துக்கு வருமுன்னமே கர்ணனைப்பற்றி மானசீகமாகக் கற்பனை செய்யத் தூண்டியிருந்தது. என்னை அடைவதற்குரிய பந்தயத்தில் ஒருவரும் வெற்றியடைய மாட்டார்கள் என்றுதான் நினைத்தேன். வில்லை நாணேற்றவே திறனற்றவர்கள் மத்தியிலிருந்து கர்ணன் எழுந்து வந்து, வில்லை அநாயாசமாகத் தூக்கி நிறுத்தி நாணேற்றிய சாமர்த்தியம் இன்றும் என் கண் முன் நிற்கிறது. கர்ணன் ஒருவர்தான் வில்லை நாணேற்றினார். அப்போதே என் கைமாலையும் நானும் ஏனோ துடியாய்த் துடித்தோம்.

கர்ணன் வில்லையும் வளைத்தார். இன்னும் அரைக்கணத்தில் எனக்கு அவர் கணவராகி விடுவார் என்று எண்ணினேன். எல்லோரும் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும். ஆனால், அந்தப் பாழும் வில் துள்ளித் திமிறி கர்ணனைத் தட்டி வாரிவிட்டது. கர்ணனின் ஏற்றிய வில்லின் நாணும் கழன்றுவிழுந்து சுருண்டது. கர்ணனும் தோற்றார்.

அர்ஜுனனுக்குப் பின் கர்ணன் - அவருக்கும் இந்தக்கதி என் கதியும் இந்த வில்லோடு இணைந்து விட்டதா என்று உள்ளம் தடுமாறிற்று.

இந்த வேளையில்தான் பிராமண வேஷம் பூண்டிருந்த அர்ஜுனன் எழுந்து அண்ணனிடம் அனுமதி கேட்டார். அர்ஜுனன் எழுந்ததும் சபையே வாய்விட்டு நகைக்க ஆரம்பித்துவிட்டது.

வரிந்து கட்டிய பட்டத்தாரும், அரையில் இறக்கி முடிந்த துண்டுமாய் எழுந்து நின்ற அவர் வேஷத்தைக் கண்டு எனக்கும் சிரிப்பு வந்தது, கர்ணன் வளைக்காத வில்லை இந்தப் பிராமணனா வளைக்கப் போகிறான் என்று எண்ணியபோது மனம் குதித்தாலும், கர்ணனின் தோல்வியின் உறுத்தல் நிற்கவில்லை.

ஆனால் அர்ஜுனனோ எவ்வித சிரமமுமின்றி வில்லை நாணேற்றினார். வளைத்தார், நிபந்தனைப்படி குறித்த லக்ஷயத்தையும் அடித்துவிட்டார்!

வாய்விட்டுச் சிரித்துக்கொண்ட மண்டபம் முழுவதும் மௌனத்தில் சமாதி யடைந்தது. எனக்கு என்னை உணரச் சக்தியில்லை. பக்கத்தில் நின்ற திருஷ்டதம்யுனனை நிமிர்ந்து பார்த்தேன். அவன் தலை தொங்கிப் போயிருந்தது.

நான் அர்ஜுனனைப் பார்த்தேன். அவருடைய பிராமண வேஷம் என் கண்ணை மழுக்கியது.

அர்ஜுனன் சபையை ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு அண்ணனைப் பார்த்து, “துருபத குமாரா” என்று அருமையாக அழைத்தார்.

அண்ணன் குனிந்த தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தான். பிறகு வாய்திறந்து சொன்னான்: “கிருஷ்ணை, அவருக்கு மாலையிடு.”

கையிலுள்ள மாலை நடுங்கி பூக்கள் உதிர்ந்தன. எனினும் அவருக்கு மாலையிட்டேன். மாலையிட்டுவிட்டு கர்ணன் இருந்த பக்கம் திரும்பினேன். அங்கு அவரைக் காணவில்லை.

சபை கலைந்தது. நானும் அர்ஜுனருடன் நடந்தேன். சகோதரர் நால்வரும் பின் வந்தனர். குயவர் சேரி சென்றதும் புத்திரர் சொன்ன சொல்லுக்கு, ‘ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள்’ என்று குந்திதேவி கூறியதும் நான் மனமுடைந்தேன். குந்திதேவியின் அறியா வார்த்தை இது என்று நானும் அப்போது நம்பினேன். ஆனால், இன்று கர்ணனின் ஜென்ம ரகசியம் வெளியான இன்று குந்தி தேவியின் அச்சொல் மிகவும் நிறுத்துச் சொன்ன சொல்லாகவே தோன்றுகிறது.

ஐவருக்கும் என்றவுடன் என் நெஞ்சம் நடுங்கியது. அரண்மனைக்கு வந்தபின் அப்பா குந்தியின் முடிவைப் பலமாக எதிர்த்தார். தருமரோ தன் தாயின் நாவில் அதருமமே உதிக்காது என்று வாதித்தார். அப்பாவின் ஆக்ஷேபம் நிற்கவில்லை.

ஐவருக்கும் நான் பத்தினியானேன்.

எனக்கு வாய்த்த ஐந்து கணவர்களும் என்னிடம் நடந்து கொண்ட விதந்தான் என்னைக் கர்ணனைப் பற்றிய சிந்தனைக்கு மீண்டும் இழுத்துச் சென்றது. இந்த ஐவருக்கும் மேலாக கர்ணனிடம் தான் எனக்கு மனசு ஒட்டக்கூடிய பாசம் இருந்தது.

தருமபுத்திரன் ஒரு ரிஷிப்பிறவி. அவருக்கு மனைவி என்றால் சதி

என்ற தெய்வீகப் பொருள், அவர் பள்ளியறையில் வைத்துக் கொண்டுகூட திடீரென்று நீதி சாஸ்திரம் போதிக்க ஆரம்பித்து விடுவார். பீமரோ காதலுக்கோ சல்லாபத்துக்கோ ஏற்றவரில்லை. இடிம்பைதான் அவருக்குச் சரியான மனைவி. வில்லை முறித்து என்னை மணந்த அர்ஜுனருக்கு, நான் பலரில் ஒருத்தி. அவருக்குச் சமயத்தில் ஒருத்தி வேண்டும். அது திரெளபதியானாலும், சுபத்திரையானாலும் ஒன்றுதான். நகுல சகதேவர்கள் என் கண்ணுக்கு கணவர்களாகவே தோன்றவில்லை மதினியின் அன்பு அரவணைப்பில் ஒதுங்க என்னும் மைத்துனக் குஞ்சுகளாகத்தான் தோன்றினர்.

இதனால்தான் இந்த ஐவரில் எவர்மேலும் அன்பு செலுத்த முடியவில்லை. உலகமும், அவர்களுக்கு என் பரிவையும் பச்சாத்தாபத்தையும் எப்படி வேண்டுமானாலும் அர்த்தப்படுத்திக் கொள்ளட்டும். எனினும் எனக்கு கர்ணன் மேல்தான் நேர்மையான அன்பு படர்ந்திருந்தது. கர்ணன் நினைவுதான் என் இளமையைக்கூடக் கட்டுக்குலைக்காமல் காத்து வந்தது. இன்று கர்ணன் மடிந்தார். அப்படியானால் ஒட்டிக்கொண்டிந்த வாழ்க்கைக் கனவும் இன்றோடு உதிர்ந்தது என்றுதான் கொள்ள வேண்டுமா...

படுக்கையில் படுத்துக்கொண்டு விம்மி விம்மியழுது கொண்டிருந்தேன். சுற்றுப்புறச் சூழ்நிலையைப்பற்றிய நினைவுகூட இல்லாமல் அழுதேன். திறந்து வைத்த நெஞ்சின் வழியாய் கட்டிக்கிடந்த சோகமெல்லாம் பீறியடித்தது. அழுவதில் சுகமிருந்தது; அழுதேன்.

"அம்மா, அம்மா!" என்று தாதி அழைத்த குரல் கேட்டது.

கண்ணைத் துடைத்தவாறு எழுந்தேன். பக்கத்தில் தாதி நின்று கொண்டிருந்தாள். அவளிடம் என்னவென்று கேட்கக்கூடத் தெம்பில்லை; கழுத்தை மட்டும் நிமிர்த்தினேன், அவள் சொன்னாள்:

"அர்ஜுன மகாராஜா வந்திருக்கிறார்."

"அர்ஜுனரா" என்றேன்.

அதற்குள் அர்ஜுனரே வாசலில் வந்து நின்றார். வெற்றி விஜயனாக வந்த வெறியில் என்னை வந்து அணைத்து கொள்வார் என்றுதான் நினைத்தேன். நானும் அவரை உத்ஸாகத்தோடு வரவேற்பேன் என்றுதான் அவரும் எதிர்ப்பாத்திருப்பார்.

இரண்டும் நடக்கவில்லை. அர்ஜுனன் வாசலிலேயே நின்றார். முகத்தில் களை இல்லை; ஆளை மயக்கும் புன் சிரிப்பு இல்லை. கர்ணனைக் கொன்ற களிப்பு இல்லை. நின்றார் நெடுமரம்போல நின்றார். நான் அவர் பக்கம் சென்றேன்.

"திரெளபதி, நீயும் அழுதாயா?... நான்தான் பாபி!" என்றார் அவர்,

"பகையை முடிப்பது பாபமா?" என்றேன்.

“கண்ணன் களத்தில் உபதேசித்தது ஏன் என்று இப்போதுதான் புரிகிறது. கர்ணனைக் கொன்று விட்டேன். ஆனால் கர்ணன் என் அண்ணன்!”

“அண்ணனா?” என்று அலறிவிட்டேன் நான்.

“ஆம். குந்திதேவியின் தலைப்புத்திரன். பிருதைக்கு துர்வாச முனிவர் உபதேசித்த மந்திரத்தின் விஷப்பரீக்ஷையின் விளைவு கர்ணன், அவன் தேர்ப்பாகன் மகனல்ல; சூரிய புத்திரன். நான் கிடந்த கருப்பையில்தான் அவனும் கிடந்திருக்கின்றான். அவன் என் அண்ணன்! உடன் பிறந்த அண்ணன்!” என்று சொல்லிக்கொண்டே போனார் அர்ஜுனன்.

எனக்குத் தலை கிறங்கியது. “உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்றேன்.

எப்படியா? குந்திமாதா களத்தில் கர்ணனை மடிமேல் போட்டுக்கொண்டு ஊரறியக் கதறுகிறாளே. உனக்குத் தெரியுமா?” என்றார்.

“கர்ணன் குந்தி புத்திரன்- என்று முணுமுணுத்தது என் வாய்.

“கண்ணனுக்கும் இந்த ரகசியம் முன்னமேயே தெரியுமா?” என்று கேட்டேன், எனக்குத் துகிலளித்த கண்ணனுக்கு, கர்ணனை நான் விரும்புகிறேன் என்ற ரகசியமும் ஆதியிலிருந்தே தெரியும். குந்தியின் ரகசியமும் தெரிந்திருந்தால் - என்று உள்ளம் எண்ணிற்று.

“கண்ணனுக்கும் தெரியும். அதனால் தானே எனக்கு உபதேசித்திருக்கிறான்” என்றான் அர்ஜுனன்.

“பாவி!” என்று வாய்விட்டுக் கத்திவிட்டேன்: நான்.

“கண்ணன் மட்டுமல்ல. குந்தி, நான், எல்லோருமே பாவிகள்” என்றார் அர்ஜுனன்.

“பாவி!” - என் வாய் மீண்டும் புலம்பியது.

“திரௌபதி. நான் வருகிறேன்” என்று கிளம்பினார். அர்ஜுனன். நான் தடுக்கவில்லை.

என் உள்ளத்தில் இத்தனை நாளும் மூடிமூடிவைத்த பாவத்தின் உருவம் பிரம்மாண்டமாயிற்று; பயமுறுத்திற்று. ஐவருக்கும் மூத்தவர் கர்ணன்; பாண்டவர்களின் சகோதரர்; குந்தி புத்திரர். அப்படியானால், என் அதிர்ஷ்டம் ஒரு விரற்கடை தூரத்தில்தான் தவறிப்போயிருக்கிறது. கர்ணனை நானும் மணந்திருக்கக் கூடும்” சிந்தனையின் அலைமோதலை என்னால் தாங்க முடியவில்லை. அழுவதை என்னால் தடுக்க முடியவில்லை. மனசில் நினைத்து நினைத்து தலைதூக்கும் ஒரே எண்ணம்:

கர்ணன் மட்டும் இப்போது உயிர் பெற்றெழுந்து வந்துவிட்டால்? அப்போதுதான் எனக்குச் சாந்தி பிறக்கும்.

3

தருமன்:

"கர்ணனுடைய பராக்கிரமத்துக்கும், நேர்மைக்கும், வள்ளன்மைக்கும் அவன் எங்களில் ஒருவனாக இருந்தால் - என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு.

எனினும் அவன் என் விரோதி; இன்று எங்களை போர்முகத்தில் எதிர்த்து நிற்பவன்.

அர்ஜுனனை உதாசீனம் செய்தது தவறுதான். 'பேடி!' - கொஞ்சமும் யோசிக்காமல்தான் கூறிவிட்டேன். கண்ணன் மட்டும் வந்திராவிட்டால் குருக்ஷேத்திரமே வேறுவிதமாய் மாறியிருக்கும். அன்று கர்ணனிடம் தோற்றுவந்ததால் ஏற்பட்ட பீதியின் மூட்டத்தில் அறிவு மயக்கும் போட்டுவிட்டது இல்லாவிடில் அப்படி நடந்திருக்கவே மாட்டேன்.

கர்ணனும் மானுடன்தான். அவனை வெல்ல முடியவில்லையென்றால்? அன்று திரௌபதி சுயம்வரத்திலும் கர்ணன் விழுந்துவிட்டான். ஆனால் இன்றும் அர்ஜுனனுடைய காண்டீபத்துமுன் விழுந்து விடுவான் என்பது என்ன நிச்சயம்? ஆனால், கண்ணன் கை கொடுத்து உதவும்போது அர்ஜுனன் ஜெயித்தே தீருவான்! ஜெயித்து விடுவான்.

தூரத்தில் ஏங்கிக்கொண்டிருந்த சங்கின் ஒலி பயங்கரமாக விரிந்து ஹுங்காரமாகச் சிலிர்த்தது. சங்கநாதத்தின் முழக்கத்தோடு தாரைகளின் ஓசையும் முழங்கிச் சங்கமித்து உள்ளத்தை உலுப்பியது.

"பாஞ்ச சன்யமா முழங்குகிறது?" வெற்றி முழக்கமா?...

அர்ஜுனன் ஜெயித்துவிட்டானா?.. கர்ணன் விழுந்தானா? பாண்டவர்களின் கலி விழுந்ததா?

நான் திகைத்தேன்.

பயத்தின் அலைகள் தேய்ந்து இற்று ஆச்சர்யத்தில் வடிவாகிக் கரைந்தன. தூரத்திலே தெரியும் அந்திவான் மேகக்கூட்டத்தின் ரத்தக் கொழுப்பு உள்ளத்தில் ஆத்திரத்தையும் வெறியையும் ஊட்டிற்று எழுந்தேன்.

"அரசே!"

"யாரது?" என்று கேட்டுக்கொண்டே திரும்பினேன்.

வாயிலில் நின்றுகொண்டிருந்த வீரன் சொன்னான். "கர்ணன் விழுந்துபட்டார்!" - வார்த்தைகள் முக்கித் திணறிப் பிறந்தன. "கர்ணன் இறந்தானா?" என்று கேட்டேன். ரதத்திலேறிக் களத்துக்கு விரைந்தேன்.

களம் அமைதியாயிருந்தது. கர்ணன் விழுந்து பட்டான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டேன். கர்ணனைக் கண்டேன்.

கர்ணன் இன்னும் சாகவில்லை. தேர்க்காலின் அடியில் வர்மத்தில் பாய்ந்த வாளியைப் பிடித்தவாறு கிடந்தான். கர்ணனின் குனித்த வில் தேர்ப் பாதங்களில் சிக்கிக் கிடந்தது, மார்பில் புரண்ட மாலைகளை நனைத்து ரத்தம் பரவிப் பாய்ந்தது. முகம் வெளிறி, கண்களில் பூப்படர ஆரம்பித்திருக்கிறது, போர் வேகத்தில் சுவாச கோசங்கள் பெயர்ந்து மூக்கு வழியாக ரத்தம் வழிந்தோடிக்கொண்டிருந்தது. உலர்ந்த உதடுகளில் சாம்பல் படர்ந்து. நெளியும் மலைப்பாம்பைப்போல் திரளும் புஜக் கோளங்களும், சுவாசமும் தளர்ந்துகொண்டிருந்தன.

கண்கள் ஒளிமங்கி பூக்க ஆரம்பித்தபோதிலும், ஆழங்காணாத ஏக்கமும் வேதனையும் கண் கருப்பில் பிரதிபலித்தன.

அவனால் பேசமுடியவில்லை. திடீரென்று கூட்டத்தைப் பிளந்துகொண்டு ஓடி வந்தது ஒரு உயிர். வந்த வேகத்தில் விழுந்துகிடந்த கர்ணன்மேல் விழுந்தது, அந்த ஜீவன்.

"அம்மா! வந்துவிட்டாயா?" என்று வாய்திறந்து கூவினான், கர்ணன். வேதனை நெரிந்த உதடுகளில் புன்னகை குனித்தது.

"அப்பா மகனே!" என்று அலறினாள் அவள்.

"யாரது? கர்ணனின் தாயா? தேர்ப்பாகன்-" என்று சிந்திப்பதற்குள் அவளே நிமிர்ந்தாள். "கர்ணா. அன்று உனக்குத் தந்த வரத்தை மறந்துவிடவில்லை. இந்தா, என் நெஞ்சின் பாரமும் உன் ஆவலும் தணியட்டும்" என்று கூறிக்கொண்டே கர்ணனுக்கு ஸ்தன்யபானம் செய்தாள், அவள்.

நிமிர்ந்தவளைப் பார்த்தேன். அவள் என் தாய் குந்தி! என்தாய் குந்தி தேவிதானா, கர்ணனின் தாய்?"-

அர்ஜுனன், பீமன் தம்பியர் எல்லோருமே திகைத்தனர் நான் நடுங்கிவிட்டேன். கண்ணனும் நின்றான். சிலையாய் நின்றான்.

குந்திமாதா மனப்பாரம் குறையும் வரையிலும் பிரலாபித்தாள், அழுதாள், அலறினாள், விழுந்தாள், புரண்டாள்!

'கர்ணன் குந்தி புத்திரன்; சூரிய புத்திரன், என் அண்ணன்!'- இவ்வளவு புரிந்துவிட்டது.

"அண்ணா!" என்று கர்ணனின் காலடியில் விழுந்தேன். அதற்குள் கர்ணன் இறந்துவிட்டான். என் தலைக் கிரீடம் நழுவி உருண்டு அந்தச் சடலத்தின் காலடியில் புரண்டது.

கர்ணன் என் சகோதரன், குந்தியின் புதல்வன்-இந்த உண்மை என் மனசைப் பிய்த்துக் குடைந்தது.

கர்ணன் என் விரோதி, எனினும் என் அண்ணன்!

"கடைசியில் சகோதர ஹத்திதனா பாண்டவர்களைச் சூழவேண்டும்? கர்ணன் மட்டும் உயிரோடிருந்தால், இந்த ராஜ்யத்தையே அவன்

காலடியில் அர்ப்பணிப்பேனே!" என்று எண்ணினேன். பக்கத்தில் கண்ணன் நின்றான். நான் அவனைப் பார்த்தேன். அவன் சொன்னான்:

"தருமா, வருந்தாதே, கர்ணன் கதை முடிந்தது!"

கண்ணன்:

யார் கதை முடிந்தது?
என் கதைதான்.
மகாபாரதம் என் கதை.

கௌரவ பாண்டவ மரப்பாச்சிகளுக்கு நான்தான் சூத்திரதாரன். அவர்களை நான்தான் ஆட்டம் கண்டேன்; நானும் ஆடினேன். இந்திரன், விதுரன், குந்தி, தருமன், திரௌபதி துரியோதனன் எல்லோருமே என் கைப்பொம்மைகள்.

என் மன விகாசத்தின் பரந்த வெளிதான் குருக்ஷேத்திரம். அதில் இரு சக்திகள் மோதின அதற்கு பாரத வம்சம் எல்லாம் கருவிகள் - கர்ணன் மத்திய பாத்திரம்.

குந்தி இளமையில் செய்துவிட்ட பாபத்தைப் புதைத்துவிட எண்ணினாள். கர்மாவின் கழுத்தை நெரித்துவிட நினைத்தாள். ஆனால், இன்று அது மீண்டும் தலை நீட்டி, அவள் உள்ளத்தைப் பலி கொண்டது. ஜென்ம ஜென்மாந்திரத்துக்கு கர்மா தன்னைத் தொடரும் என்பதை அன்று, - பிருதையாக இருந்த அன்று - குந்தியால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

அர்ஜுனனின் மமதை கர்ணனின் மறைவோடு மடிந்தே தீரும். திரௌபதி - பாவம்! அவளும் கர்ணனை உள்ளத்தினுள்ளேயே, கொன்று விடவேண்டியதுதான்.

குந்தியின் பாவம், திரௌபதியின் காதல், அர்ஜுனனின் கர்வம், தருமனின் மடமை, துரியனின் கயமை எல்லாம் கர்ணன் மரணத்தோடு மாயவேண்டியதுதான்.

கீதை உபதேசத்தைப் பெற்றவன் அர்ஜுனன் தான் ஆனால் கீதா போதனையின் கண்கண்ட சாதனைச் சாட்சி இந்தக் குருக்ஷேத்திரம்!

குருக்ஷேத்திரத்தில் விளையாடியவர்கள் எல்லோரும் என்னுள் அடங்கியவர்கள். நானே ஆட்டுவித்தேன். நானே ஓடினேன்.

கொன்றவனும் நான், கொல்லப்பட்டவனும் நான் இதுதான் என் அலகிலா விளையாட்டு!

அர்ஜுனன்:

கர்ணன் என் அண்ணன்; என் எதிரி.

இந்த உணர்ச்சியை என்னால் லகுவில் ஒதுக்கிவிட முடியவில்லை. காரண காரியங்களுக்கு மூலமான கண்ணனின் விளையாட்டு என்று மானசிக பக்குவத்தோடு கர்ணனின் மரணத்தை விலக்கி விடவும் முடியவில்லை.

கர்ணன் என் எதிரி, இளமை முதல் அவனைப் பகைத்தே வந்திருக்கிறேன். இருவர் கையிலும் வில்லேறிய நாளிலிருந்து ஒருவருக்கொருவர் விரோதிதான்.

இன்று நான் கர்ணனைக் கொன்றுவிட்டேன். எனினும் அவனை நான் வென்றதாகவே எண்ண முடியவில்லை.

கர்ணனின் மரணத்துக்காக இந்திரனும் கண்ணனும் அவனிடம் பிச்சை ஏற்க வேண்டியிருந்தது. தான் பெற்ற பிள்ளையிடம் தாய்மை யுணர்ச்சியைக் காட்டி ஏமாற்றி, நாகாஸ்திரப் பிரயோகத்துக்கு, தடைவிதிக்க வேண்டியிருந்தது. கடோத்கஜனை இந்தச் சூதில் பணயம் வைத்து வெட்டுக்கொடுக்க வேண்டிவந்தது.

கர்ணனைக் கொன்றுவிட்டேன். எனினும் வெற்றி எனக்கல்ல ஆவைப் பறிகொடுத்த அந்தணன் சாபமும், குந்தியின் வரமும், இந்திரன் பிச்சையும், கடோத்கஜப் பணயமும் கர்ணனை நிராயுதனாக்கிவிட்டது.

நான் வெற்றி யடைந்தேனாம்.

பாரதம் முடிந்துவிட்டதாம்.

வளைந்து நிமிர்ந்து உயிர்களை வதைத்த காண்டீபம் கர்ணன் ரத்தத்துக்காகத் தவம் கிடந்தது, எனினும் காண்டீபத்துக்குப் புகழ் கர்ணன் புகழ்ந்தான்.

கர்ணன் இல்லாவிட்டால் காண்டீபம் ஏது? அர்ஜுனன் எங்கே? எனக்கு வில்லுக்கு விஜயன் என்ற பெயரும் ஏது? கர்ணன் புகழை இன்று நான் என் புகழாக்கிக் கொண்டேன். ஆனால், இதற்கு இத்தனை பேரின் உதவியா?

இன்று காண்டீபம் அயர்ந்து கிடக்கிறது. கர்ணனின் வாழ்வுதான் காண்டீபத்தின் வாழ்வு கர்ணன் இறந்தால், காண்டீபமும் தானாகவே இறந்துபடும். கர்ணன் போன்ற எதிர்க்குறி இல்லாவிட்டால்? காண்டீபத்தை வைத்துக்கொண்டு வேட்டையா ஆடுவது? கர்ணனின் மரணத்தோடு காண்டீபத்தின் நாணும் அறுந்தது: வாழ்வும் அறுந்தது.

காண்டீபம் வாழ வேண்டுமென்றால் கர்ணனும் வாழவேண்டும். கர்ணன் வாழ்ந்தால்தான் நானும் வாழ முடியும். இல்லையெனில், நான் வில்லும் சுமக்கப் பிறந்தவன்தான்.

6

குருக்ஷேத்திரக் களத்தின் ரத்தச்சேறு காய்ந்து கருகி, மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது. நரிகளும் கழுகுகளும் குகைகளிலும் வனங்களிலும் அடங்கிவிட்டன. கீறிப் பிளவுப்பட்ட பூமியில் அக்கினிக் கொதிப்பு அடங்கி, ஊற்றுக்கள் சுரந்தன, கலங்கிய ஆகாசத்தின் மூட்டம் தெளிந்து, வானம் நிர்மலமாயிற்று.

இன்று இந்திரப் பிரஸ்தத்தில் தருமன் ராஜ்யமேற்றுக் கொள்கிறான்.

பிதுர்க்களுக்குக் கடன் செய்துக் கண்ணீர் சிந்திய தருமனுடைய அதே கைகளில் இன்று மகுடாபிஷேக தீர்த்தம் வழிந்தோடியது. அன்று கர்ணன் காலடியில் உருண்டோடி மண்ணில் புரண்ட கிரீடம் இன்று தருமன் சிரசில் ஏறியிருந்தது.

தருமன் இன்று பாரதத்தின் அரசன். ஏக சக்கராதிபதி.

முடிசூடி அமர்ந்திருந்த தருமபுத்திரன் சந்நிதியில் குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும் தங்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். வைரங்கள், ரத்தினங்கள்' முத்துக்கள்,' பட்டு, தந்தம் - என்னவெல்லாமோ குவிந்து கொண்டே இருந்தன.

குந்தி புத்திரனை ஆசீர்வதித்தாள் கண்ணன் பாராட்டினான். தம்பியர் ஒவ்வொருவரும் அண்ணன் திருவடியில் வந்தனம் செலுத்தினர். கடைசியில் அர்ஜுனன் வந்தான். கையில் நாணவிழ்த்த காண்டீபமும் இருந்தது. வந்தவன் வணங்கவில்லை; நின்றான்.

"அர்ஜுனா, ஏன் வாடியிருக்கிறாய்?" என்று தருமராஜா கேட்டான்.

'அன்று பாசறையில் தாங்கள் பேசியது ஞாபகமிருக்கிறதா?"

'கர்ணன் கொலையை நினைக்கிறாயா?'

"ஆம். காண்டீபத்தின் சேவைக்குக் கடைசி ஆகுதி கர்ணன் என்றேனே. காண்டீபம் குனிந்து நிமர்ந்தது, கர்ணனும் மாண்டான்?" என்றான் அர்ஜுனன்.

"பழம் வினையை ஏன் நினைவுக்கிழுக்கிறாய்?"

"அண்ணா, உங்களுக்குத் தமையன் இறந்தானே என்ற வருத்தம், எனினும் தம்பியர் நாங்கள் இருக்கிறோம். குந்திமாதாவுக்கு தலைப் புத்திரன் மடிந்தானே என்ற துயரம். எனினும் ஐவர் இருக்கிறோம். ஆனால் எனக்கோ ஒரே எதிரி. அவன் போய் விட்டான், காண்டீபத்தின் வலிமைக்குப் பதில் சொல்லக் கூடியவன் கர்ணன் ஒரே ஒருவன்தான். அவன் போய் விட்டான். இன்று நான் தனியன்! தனியன்" என்று கதறினான் அர்ஜுனன்.

தருமன் திகைத்தான்.

தன்னைத் தேற்றிக்கொண்ட அர்ஜுனன் "யுதிஷ்டிரா தங்கள் முன்னிலையில் இதோ என் கைக் காண்டீபத்தை அர்ப்பணித்து விடுகிறேன்" என்றான்.

தருமன் சிந்தித்தான். அர்ஜுனன் இன்னும் தன் பகைமையுணர்ச்சியைக் கொல்லவில்லை என்று ஆத்திரப் பட்டான் அர்ஜுனனுடைய உண்மையான வீர உணர்ச்சியை அவனால் உணரமுடியவில்லை.

தருமன் தன் முன்வைத்த காண்டீபத்தை கோபத்தோடு எடுத்து விட்டெறிந்துவிட்டுச் சொன்னான்:

"தரும சாம்ராஜ்யத்தில், வில்லுக்கு வேலை ஏது?"

பக்கத்து மண்டபக்காலில் மோதிக் கீழே விழுந்தது காண்டீபம், அதில் நாணின் நாத ஜங்காரம் இல்லை; விறைப்பு இல்லை; வீரியம் இல்லை; உயிர்ப்பும் இல்லை.

பக்கத்தில் நின்ற கண்ணன் சிரித்தான்.

முல்லை - 11

அரவான்

லா.ச. ராமாமிர்தம்

குழந்தையின் வீறலைக் கேட்டு, கிணற்றின் பிடிச்சுவரின்மேல் தவலையுடன் தாம்புக்கயிற்றை அப்படியே போட்டுவிட்டு, உள்ளே ஓடிவந்து குழந்தையை வாரினான். பொங்கி வழியும் வியர்வை, மூலவர்மேல் பூசிய எண்ணெய்போல் அவன் கறுப்புடல்மேல் பளபளத்தது.

அவனுடைய பரந்த கைகளினிடையில், குழந்தை சின்ன மாவுப் பொம்மைபோல் தானிருந்தது. இழுத்துப் பழக்கமில்லாததால், தாம்புக்க்யிறு உள்ளங்கைகளை வீறுவீறாய் அறுத்திருந்தது.

அணைத்துக் குலுக்கி அதன் அழுகையை அடக்க முயன்றான். ஆசைப் பெருக்கில் அர்த்தமற்ற சப்தங்கள் அவன் வாயினின்று பிறந்தன. ஆயினும் குழந்தையைத் தேற்ற அவை வகையற்றுப் போயின. அதன் கத்தல் இன்னமும் அதிகரித்தது.

'என்ன தாயில்லாக் குளந்தையா?

அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏற்கெனவே உள்ளூர வேதனை பட்டுக்கொண்டிருக்கிறான்: "காலையில் வேலை பார்க்கப்போன பெண்பிள்ளை சூரியன் உச்சிக்குப் போயிட்டுது. இன்னமும் திரும்பியபாடில்லை. இந்தப் பட்டணத்திலே ஊருக்குப் புதுசு. ஆண் புள்ளைக்கே- இத்தனை மோட்டார் வண்டிக்கும் டிராம் வண்டிக்கும் சடுக்கா வண்டிக்கும் ரிக்ஷா வண்டிக்கும் நடுவிலே ஆளைப் பம்பரம் சுத்திவிட்டாற்போலே இருக்கிறது. அவளை எது வாரி வாயிலே போட்டுக்குதோ? யார் இந்த ஆள் அவ சகுனி மாதிரி?...

அந்த ஆள் எதிர்த் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டு ஒரு துண்டு பீடியைப் பிடித்துக்கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்து வயதையோ அந்தஸ்தையோ நிர்ணயிப்பதற்கில்லை.

கால்மேல் காலை மடித்துப்போட்டு உட்கார்ந்து கொண்டு வெகு ஆத்திரத்துடன் பீடியைக் குடித்துக் கொண்டிருந்தான்.

"இல்லே காலையிலே போனா - இன்னும் வரல்லே - குளந்தை வவுத்திலே ஒண்ணுமில்லே"

'யார் வவுத்திலே தானய்யா இப்போ என்ன இருக்குது? எரிச்சல்தானிருக்குது. ஊருக்குப் புதிசா? ஏதேனும் வேண்டுதலையா?"

'இல்லே பட்டணத்துக்குப் புளைக்க வந்தோம்"

அந்த ஆள் ஆத்திரத்துடன் பீடியை விசிறி எறிந்தான்.

"ஆமாய்யா, உள்ளூரிலே இருக்கறவன் புளைக்கறதுக்குப் பட்டணத்துக்கு வந்துடுங்க, பட்டணத்திலேயே இருக்கறவன் பட்டினிக்கிடக்கட்டும். ஊரிலே இருக்கிறவனுக்கு இடமில்லை வந்துடராங்க வரிஞ்சுகட்டிக்கினு புளைக்கறத்துக்கு"

மனுசனுக்கு மனுசன் ஏன் இப்படி இருக்குதுன்னு புரியல்லே. யார் யாருக்கு தீங்கு இழைச்சுட்டது என்ன? அவன் யாரோ நான் யாரோ, இவனுக்கு என் மேலே என்னத்துக்கு கோவம்? இந்த மாதிரி இடத்துலே தன்னந்தனியா மாட்டிக்கிட்டு எப்படிப் புளைக்கறது? ஊரிலே ஒரு மாதிரி கஷ்டம் என்னா, ஒண்டவந்த இடம் இப்படி இருக்கிறது. துணையுமில்லே துப்புமில்லே. ஒன்னும் புரியவும் மாட்டேன்னுதே...

அவன் படும் வேதனையும் குழந்தையின் ஓயாத அழுகையும் ஆத்திரத்தைத்தான் விளைவித்தது. 'அதன் ' களுத்தை முறிச்சுப்போட்டுடவா? ஒருவழியா ஒளிஞ்சுது ஒரு தொந்தரவு.

"போனா போனா காலையிலே போனா- புடிக்கப் போன வேலையை ,வேரோடு பிடிங்கிட்டு வந்துடறமாதிரி என்னடாது ஆண்புள்ளை கிட்டே குளந்தையை விட்டுட்டுப் போனோமே, வேளாவேளைக்கு அவன் என்ன பண்ணுவான் என்னு நெஞ்சிலே பயமிருக்கணும். ஊரைச் சுத்தனும்னா போதும் இந்த பொம்புளைங்கிளுக்கே...

அவன் பொருமிக்கொண்டிருக்கையிலே நிழல் வாசற்படியில் தட்டியது.

"வந்துட்டியா?"

'வராமே? சாக்கடைத் தண்ணிக்குப் போக்கிடம் ஏது? என்னா கொளந்தையே அளவிட்டுட்டியே. இதான் சாமர்த்தியமா? கொடு இப்படி."

கோபம் அவன் வாயை அடைத்துவிட்டது."ஆளைத் தூக்கி எறிஞ்சு பேசறத்துலே அவங்கிளுக்கு நிகர் அவங்கதான். ஒண்ணு முதுகிலே வெச்சா சரியாப்போயிடும். என்ன தைரியமா கேக்கறா பார்?- இருக்கட்டும். இப்போ கொளந்தைப் பசி அடங்கட்டும். அதான் இப்போ முக்கியம். அவளுக்குத்தான் அந்த எண்ணமில்லேன்னா நமக்குக்கூடவா இல்லே? நான் பெற்ற மகன்..."

அந்த 'ஆள்' அப்பவே போய்விட்டான். அவள் தின்ணையில் உட்கார்ந்து கொண்டு குழந்தையை எடுத்துவிட்டுக்கொண்டே:

“நீ எங்கேயாவது புளைப்புத் தேடினாயா? என்ன வாச்சு;

அவள் கேள்விக்குப் பதில், அவன் முகு வாட்டத்திலேயே கிடைத்துவிட்டது.

‘இன்னிக்கு கடைத்தெருவைச் சுத்தினேன்” சித்தாள் வேணுமான்னு கடைகடையா ஏறிக்கேட்டேன். ஒவ்வொத்தன் என்னென்ன சொல்றான்கறே?-ஏதோ வேலையில்லேன்னு சொல்லிக் கழிச்சால் போச்சு. இடக்காப் பேசறான்க.

‘சித்தாள் வேலையா இங்கே இருக்கிறவனே ஈ ஓட்டறான் யுத்தம் வந்தாலும் வந்தது, என்ன சாமான் இங்கே இருக்குது வியாபாரம் பண்ண? என்கிறான் ஒத்தன்.

“ஒரு கடைக்காரன் வேலையில்லேன்னு சொல்லிட்டு நான் படியிறங்கினப்புறம் என்னை மெனக்கெட்டு மறுபடியும் கூப்பிட்டு, நான்தான் கடைக்காரன்-நான் இங்கே என்னத்துக்கு குந்திக்கட்டு இருக்கேன் தெரியுமா?-ன்னு கேட்டான்.

“தெரியாதே! என்னேன். எனக்கெப்படித் தெரியும்?

‘சாமான் வாங்க வரவங்களுக்கெல்லாம் அது இல்லே, இது இல்லேன்னு சொல்லியனுப்பத்தான் குந்திக்கிட்டு இருக்கேன். இல்லை இல்லை என்று கத்திக் கத்தி தொண்டை வத்திப்போச்சு. இல்லைப்பாட்டுப் போடத்தான் இனிமேல் ஒரு ஆள் போட்டுக்கணும்போல் தோணுது. போப்பா! புளைக்கமாட்டாதவனே பொட்டலங் கட்டக்கூட காகிதமில்லாத காலமிது - அது யுத்தத்துக்கு வேணுமாம் - நீ கூடப் போறதுதானே!

‘இந்தப் பட்டணத்துப் பேச்சு நமக்குப் புரியமாட்டேன்னுது. எல்லாத்துக்கும் இடக்கா பேசறாங்க. சித்தே நேரத்துக்கே முன்னாலேதான் ஒரு ஆள் என்னை ஒரு காரணமுமில்லாமலே விரட்டிட்டுப் போனான். அத்தோடே கொளந்தையெத் தனியா விட்டுட்டு எவ்வளவு நேரம் வெளியிலே சுத்த முடியுது? உன் மாதிரியா? காலையிலேபோன பொம்புள்ளே, திரும்பி வர இத்தனை நேரமாச்சுதுன்னா என்னாத்தை சொல்றது?’

‘என்னாத்தை சொல்லப்போறே? யாராவது இஸ்த்க்கிட்டு ஓடிட்டாங்கன்னு பாத்தியா?”

அவன் மனம் சுருக்கென்றது. ‘வயிற்றுக்குக் கஷ்டம் வந்துட்டுதுன்னா, கொண்டவளுக்குக்கூட இவ்வளவு எளக்காரமாப் போயிடுமா?...’

குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்துவிட்டது. அவன் கண்கள் ஜ்வலிக்க ஆரம்பித்தன. ‘இன்னிக்கு அவன் மனம் நோவடிக் கறத்திலேயே அவளுக்கு சந்தோசமா?”

"ஏன் அதுக்குள்ளேயும் விலக்கிட்டே?"

"சரிதான் என் புளைப்பும் உன் புளைப்பும் அதிலே தானிருக்குது.

"என்ன அம்மே வந்ததே மொதக்கொண்டு ஒரு மாதிரியாயிருக்கே. புதிர் போட்டு பேசறே-என்ன? உடம்புக்கு பூசைக்காப்பு போடனுமா?"

அவள் குழந்தையை இடுப்பில் வைத்துக் குலுக்கிய வண்ணம் திண்ணையில் உலவியபடி, சமாதானப்படுத்த முயன்று கொண்டே:

"கொஞ்சம் அவசரப்படாமே நான் சொல்றதைக் கேளு-இன்னிக் காலையிலே இப்படிப் போனேனா-இந்த ரோட்டோடே போனேன்-அப்புறம் ஒரு சந்திலே நுளைஞ்சேன். ஆனால் அது சந்தில்லே. ஆள் நடமாட்டம் அதிகமாயில்லை. ரெண்டு பக்கமும் தனித்தனியா பங்களாவுங்க இருந்திச்சு. அப்புறம் அப்படி திரும்பினேன் இப்படி திரும்பினேன். எனக்கு வழி மறந்து போச்சு சுத்தும் முத்தும் பார்த்தா ஒத்தருமில்லே. எனக்கு ஒரே அளுகையா வந்துட்டுது. நான் ரோட்டோரமா நின்னுட்டு அளுதுகிட்டு இருந்தேன்.

"அப்போ ஒரு ஆள் அந்தப் பக்கமா வந்தான். என்னைத் தாண்டிப்போனான். அப்புறம் திரும்பிப் பார்த்தான். நின்னான் மேலே இன்னும் கொஞ்சம் நடந்து போனான். மறுபடியும் என்னை முழிச்சுப் பார்த்தான். அவன் பார்வை ஒரு மாதிரியா யிருந்துச்சு, என் முகத்தைப் பார்க்கல்லே களுத்துக்குக் கிளே இடுப்பு வரைக்கும் தான் கண்ணோட்டம் நின்னுது. அப்புறம் எண்ணத்தை என்னவோ திடம் பண்ணிக்கிட்டு திரும்பி நேரே வந்தான்.

"ஏன் அழுவரே? எந்த ஊர்?"

"ஐயா ஊருக்குப் புதிசு-நாட்டுப்புறம் வழிதப்பிப் போச்சு"-என்னேன் விக்கிக்கிட்டே.

"ஏன் வந்தே இந்த ஊருக்கு?"

"புளைக்க வந்தேனுங்க. எங்கேயாட்டும் பத்துப் பாத்திரம் துலக்கிப்போட்டு வாசற்கூட்டி வேலையகப்பட்டா போதுங்க."

"அந்த ஆள் என் களுத்தைப் பார்த்துகிட்டே 'கலியாணம் ஆயிட்டுதா'-ன்னு கேட்டான்.

"கையிலே ஒரு குழந்தை யிருக்குதுங்க-என் எசமானர்கிட்டே விட்டுட்டு வந்திருக்கேனுங்க"

"எத்தனை வயது?"

"இரண்டு மாதங்க-"

"சரி வா. உன்னதிர்ஷ்டம் இந்த பக்கமா நான் வந்தேன். உனக்கு வேலை வாங்கித்தரேன் என்னோடுவா" இன்னுட்டு நடந்தான். எனக்கு கொஞ்சம் பயமாய்த்தானிருந்தது. இருந்தாலும் ஆள் நடமாட்டமிருக்கிற

இடமா வந்து சேர்ந்துட்டா சமாளிச்சுக்கலாம்னு மனசைத் தைரியம் பண்ணிகிட்டுப் பின்னாலே போனேன்.

"நீ முழிக்காதே. அவன் ஒன்னும் தப்பா நடந்துக்கல்லே. ஒரு பங்களாக்குள்ளே நுளைஞ்சோம். பெரிய தோட்டம் பூவும் செடியும் பாத்தியும் பச்சையும் எங்கே பார்த்தாலும் ஒரே குளுமையாயிருந்தது. கன்னுக்குட்டி யாட்டமா ஒரு பெரிய நாய் என்னைப் பார்த்து ஓடிவந்தது. அந்த ஆள் அதை விரட்டிட்டு என்னை வாசல் தாழ்வாரத்திலே நிறுத்தி வச்சிட்டு உள்ளே போனான்.

சித்தே நேரம் பொறுத்து மூணு பொம்புள்ளேங்க உள்ளேருந்து வந்தாங்க. பாப்பாரு பணக்காரு. நகையும் நட்டும் நல்ல புடவையும் கட்டிக்கிட்டு இருந்தாங்க அவங்களுக்குள்ளே என்னவோ வெள்ளைக்காரன்.பாஷையிலே பேசிக்கிட்டாங்க. அவங்களுக்குள்ளே ஒரு பெரிய அம்மா இருந்தாங்க. அந்த ஆள் என்னை மொதமொதல்லே விசாரிச்சமாதிரியே, அவங்களும் விசாரிச்சாங்க. இன்னும் ஒன்னுரெண்டு பொம்புள்ளே விஷயங்கூட விசாரிச்சாங்க. அப்புறம் அங்கேயே குந்தவெச்சு ஆளுவந்து சோறுபோட்டா குளுகுளுன்னு பழஞ்சோறு. என் வயிறு குளுந்தது. ஒன்னெ நினைச்சுக்கிட்டேன்.

"கை களுவி, தண்ணி யேந்தி குடிச்சுட்டு, முந்தானைலே கையைத் தொடச்சிக்கிட்டேன். உடனே இங்கிலீசுலே என்னவோ பேசினாங்க. பொம்புள்ளேங்க ஆம்புள்ளே மாதிரி இங்கிலீஸு பேசி இன்னிக்குத்தான் நான் பார்த்தேன். 'உடனே ஒரு அம்மா உள்ளே போய் ஒரு குழந்தையை ஏந்தி வந்து என் மடியிலே வெச்சு பாலைக் கொடு இன்னாங்க.

'எப்படி மாட்டேன்றது? சோறு போட்டிருக்காங்களே 'உப்புந் தண்ணியும் உலந்த வயத்திலே ஊத்தியிருக்காங்களே!

"குளந்தையா அது? நம் ஊரிலே முருங்கை மரத்துலே இடையன் கொம்பு ஊறல்லே! அதுமாரி ஒரே குச்சியா. உயிர் தொண்டையிலே நூலாட்டமா ஓடிக்கிட்டிருக்குது. தொடவே அச்சமாயிருந்தது.

"தாய்ப்பாலில்லே, குழந்தைக்கு வேறு குத்தம் இல்லே, உனக்கு ரெண்டுவேளை சோறு-ரெண்டு வேளை தீனி மாஸம் எட்டு ரூபா கொடுக்கறேன். இங்கே இருந்து இந்தக் குழந்தையை நீ காப்பாற்றனும். வீட்டுக்கு ஒரே பிள்ளையிது. இருந்திருந்து பெற்ற மகன். நீ இருந்து காப்பாத்தனும்" இன்னாங்க அந்தப் பெரியம்மா.

"அம்மா!-என் குழந்தை?- நானறியாமலே அந்தக் கேள்வி என் வாயிலிருேந்து வந்துட்டுது.

"உன் குழந்தைக்கு மாவு கரைச்சுக்கொடு-மாவு நான் கொடுக்கறேன். இந்தக் குழந்தைக்கு வயிற்றிலே கட்டிவிழறது. உன் குழந்தை இதமாதிரி மோசமாயிருக்காது. என்ன சொல்றே சட்டுபுட்டுனு உன் புருஷன்கிட்டே சொல்லிட்டு வந்திடு. காலையிலே ஒரு வேளை சாயந்திரம் ஒருவேளை

ஒன் குழந்தையும் பார்த்துட்டுவா - நான் ஒன்றும் அப்படியாப்பட்ட பாவியில்லே - என்ன சொல்றே?

"நான் என்ன சொல்றது. எத்தனையோ விசயம் கவனிக்க வேண்டியிருக்குது நம்ப புளைக்க வந்துட்டோம்-உனக்கு சரியா புளைப்புக் கிட்டற வரைக்கும் வயத்தே ரெண்டு பேரும் கட்டிப் போட்டுக்கிட்டிருக்க முடியுமா? என் வயத்தே அவங்க வீட்டிலே களுவிட்டாலும் என் சம்பளம் உனக்கு மிச்சம்தானே. நான் ஒப்புக்கொண்டேன்."

மௌனம் இருவரிடையிலும் தேக்கியது. சத்திரத்தில் மூட்டையும் முடிச்சுமாய் இறங்குபவரும் வெளியே போவாருமாய் சண்டை போடுபவரும், கொட்டமடிப்பவருமாய் இரைச்சல் காதைப் பொழிந்தது. ஆயினும் இவ்விருவருக்கு மாத்திரம் அது தூரத்துச் சத்தமாய்த் தானிருந்தது.

"நீ ஒப்புக்கொண்டது தப்பு" என்றான்.

"அப்படியானால் நம்ப இங்கே வந்ததே தப்பு."

"நம்ப புளைக்க வந்ததே தப்பு. ஆனால், நம்ப ஊரிலே மொத மொதல்லே ஒருத்தரை யொருத்தர் சந்திச்சோமே அதுவே தப்பு-"

"இப்படி ஒருத்தரை யொருத்தர் கசந்துகிட்டுப் பேசினால் என்ன பிரயோசனம். புளைக்க வந்துட்டோம் புளைச்சு ஆகணும். இந்தா மூணு ரூபா முன்பணம் வாங்கி வந்திருக்கேன். செலவுக்கு வெச்சிக்கோ-"

"இதென்ன நீ எனக்கு சோறு போடனும்னா - நான் ஆண் புள்ளையா பிறந்துட்டு இருக்கேன்! - என்னான்னு நினைச்சுட்டே உன் மனசிலே என்னை?"

அவள் தொண்டை கம்மியது'

"நீ வேறே நான் வேறென்னு துட்டு வாங்கறப்போ என் நெனைப்புலே படல்லே!"

"ஆமா-அப்போ நம்ம ரெண்டுபேரும் கூடிப் பிறந்த கொளந்தே தான் வேறாப் போயிட்டது இல்லையா?"

கரையினின்று திரும்பும் அலைகள்போல் நினைவுகள் பின்னோக்கிச் சுருண்டன.

'நல்லபடியா நாலுபேர் பேசி முடிச்சுத் தாலி கட்டின கலியாணமாயிருந்தால் இத்தனை கஷ்டம் ஏன் படனும்? ஒரு இமைப் பொழுது வெறியிலே ஏமாந்துபோன தோஷத்துக்காக, ஊரைவிட்டு ஓடிவந்து இங்கே இருக்க இடமும் புளைக்க வழியுமில்லாமே அல்லாடறோம்.'

வாய்வழி புலப்படாத விதவிதமான கேள்விகள் அவரவர் மனசை இடித்தன.

-நம்ம ஊரே நல்ல ஊர்.

-நான் பாட்டுக்கு நிம்மதியா ஊருக்கு முதலாளி வெச்சிருக்கும் மளிகைக் கடையிலே வேலைசெஞ்சுகிட்டு வேளா வேளைக்கு அவர் வீட்டிலேயே சாப்பிட்டு வேட்டி யுடுத்திக்கிட்டு கைச்செலவுக்குத் தினம் கால்ரூபா கல்லாப் பெட்டியிலிருந்து எடுத்துக்கிட்டு ராசாமாதிரி யிருந்தேன்.

-எனக்கு மாத்திரம் என்ன கொறைச்சல்? வீட்டு வேலையை செஞ்சிக்கிட்டு அவங்க கொளந்தையை கொஞ்சிக்கிட்டு குசாலாய்த்தானே யிருந்தேன்! அப்பன் ஆயில்லேன்னு ஒரு நாளாவது நெனைச்சிருப்பேனா! அந்த வீட்டு அம்மா தான் எனக்கு எல்லாமா இருந்தாங்களே!-

-இருந்து என்ன பிரயோசனம்? உன்னை எங்கேயாவது கட்டிக்கொடுத்து ஒழிச்சிருக்கனும்.

-ஐயோ பண்ணையிலே ஒரு ஆளுக்குத்தான் என்னை முடிச்சுப்போட்டு வெச்சிருந்தாங்களே-அதுக்குள்ளே நீ தானே என்மேல் கண்ணேப்போட்டே!

-நீ மாத்திரம் சும்மாயிருந்தையா? அடிக்கடி கடைக்கு வந்து கட்டைப் புகையிலே கடிச்சுக்க ஒரு துண்டு கொடுன்னு என் கையை இடிச்சு இடிச்சு வாங்கிப் போனையே. மறந்துபோச்சா?

-ஒத்தரை யொத்தர் ஏன் குத்தம் சொல்லனும்? ஏமாந்து போனோம் அவ்வளவுதான்.

-எல்லாந்தான் போச்சு, அன்னிக்கு என்னவோ சீக்கிரமாகக் கடையைக் கட்டிக்கிட்டு அன்னிக்கின்னு ரயில் டேஷனுக்குப் போற வழியிலே நான் ஏன் வரனும்? நீ கடலைக்காய் கொல்லையிலே காவல் காத்துட்டு நான் வந்த வழியே, ஏன் வரனும்?

-காற்று மேட்டிலே வெக்கறத்துக்கு முத்திரையைக் கொடுத்துட்டு வந்தேன்.

-வந்ததுதான் வந்தையே சும்மாப் போனையா மடியிலிருந்து பிடி கடலைக்காய் எடுத்து இந்தான்னே. சிரிச்சுக்கிட்டே . நான் நினைவு மங்கிப்போய் உன் கையைப் புடிச்சேனே! கையை உதறி என் கன்னத்திலே ஏன் ஒண்ணு விடலெ, அப்படியே என் தோள் மேலே சாஞ்சூட்டே. அன்னிக்குன்னு நிலவு ஏன் அப்படி காயணும், ஆற்றோரத்துக்கப்பால் சினிமாக் கொட்டகையிலேருந்து அம்பிகாபதிப் பாட்டு காதண்டை மோதி ஆளை ஏன் அப்படி சொக்கடிக்கணும்.

-நான் என்னத்தை கண்டேன்! பிள்ளைப்பூச்சி உடனே கடிச்சுடும்னா கண்டேன்! இந்தப் புள்ளையைப் பற்றி அப்போ நெனைச்சோமா? வயித்தெ எத்தனை நாள் மறைச்சுவெக்க முடியும்?

-உடலும் மனசும் ஒண்ணுக் கொழஞ்சு நாம் ஆசையாப் பெற்ற குழந்தையே உலகத்துலே எல்லாரும் பெத்து வளக்கறமாதிரி வளக்க

முடியல்லே ‘கழுத்துலே மஞ்சள் கவுறு ஏறத்துக்கு முன்னாலே வயிற்றுலேருந்து இறங்கற குளந்தையை யார் மதிக்கிறாங்க? திருட்டுப் புள்ளைன்னு ஊரெல்லாம் சிரிக்க மானம் போய் உசிர் போகாமே ஊரை விட்டு ஓடி வந்துட்டோம் வந்து இங்கே மாட்டிக்கிட்டோம். -விதி -விதி.

மனதின் பேச்சுக்கு முடிவே கிடையாது.

2

அந்தக் குழந்தையின் பசியை ஆண்பிள்ளை அவனா எவ்வளவு தூரம் சமாளிக்க முடியும்? அவள் மாலையில் வந்து ஒரு வேளை ஊட்டுவாள், காலையில் மாவையும் தண்ணீரையும் கரைத்து புட்டியில் போட்டுவிட்டு அவள் போவாள். புட்டியை எந்தப் பக்கம் குழந்தையின் வாயில் வைப்பது என்றுகூட அவனுக்கு சரியாய்த் தெரியாது.

காலையில் வேலைக்கு அலையணும். கொளந்தையைத் தனியா விட்டுட்டு எத்தனை நேரம் வெளியிலே சுத்த முடியும்? மாலை வரது எப்போ? அவள் வருவது எப்போ? அந்தக் கொளந்தையே அவள் மார்மேலே அணைப்பது எப்போ? தொண்டையைக் கிழிச்சுக்கிட்டு ஓயாத அதன் அலறல் ஓய்வது எப்போ? ஒரே வேலையானாலும் பெரிய வேலை!

இன்று அவன் குழந்தை தலைமீது மேலாக்கைப் போட்டு மூடியும் அதன் கத்தல் ஓயவில்லை. அவனுக்கு வயிறு கொதித்தது.

"ஏன் ஏமாத்தறே? நீ வந்து ஊட்டறது ஒரு வேளை. அதிலே ஏன் வஞ்சனை பண்ணறே? பங்களா வீட்டுப் பையன் மாதிரியில்லையா நீ பெத்த மவன்?"

"ஏன் இப்படியெல்லாம் பேசறே? நான் என்ன பண்ணுவேன்? அந்தப் பையன் அட்டை மாதிரி உறிஞ்சிப் போடுதே. ஊறக்கூட நேரம் விடமாட்டேன்னுதே. மூக்காலே பாலு வந்தாலும் வெச்ச வாய்க்கடி விடமாட்டேன்னுதே!

‘இங்கேயும் இருக்குதேன்னு கொஞ்சம் வெச்சுக்கிட்டு வரது’

‘அவங்கத்தான் என் எதிரேயே உக்காந்து கவனிக்கறாங்களே’ மடியிலே பிள்ளையை விட்டுட்டு அந்தப் பெரியம்மா என் எதிரே சட்டமா குந்திக்கறாங்க ‘கொடுடீ; கொடுடீ குழந்தைக்குக் கொடுடீ இந்தப் பக்கம் வத்திப் போனா அந்தப் பக்கம் மாத்திப் போட்டுக்கோன்னு ஈவு இரக்கமில்லாமே பேசறாங்க."

சோத்திலே நெய்யைக் கைநிறைய அள்ளித்தானே விடறேன்! ஆப்பிள் பழமும் ஆரஞ்சிப் பழமுமா வாங்கி வாங்கிக் கொடுக்கல்லே. என் எதிரிலேயே! உறிச்சித் தின்னுடனும். என் குழந்தைக்கு ஊறும்பாலை என் குழந்தைதான் குடிக்கணும். என் வீட்டுக்கே ஒரு குழந்தையடீ."

"அவங்க விதவிதமாத் தீனி வாங்கிப்போடறாங்க சொகம் சேக்கராங்க ஆசை உனக்கு அங்கேதான் பொங்குதாக்கும்!"

"ஏன் இப்படி சொல்றே அங்கே தின்கறது விஷமாயிருக்கிறது போதாதுன்னு நீ வேறே இங்கே வந்தா விஷத்தைக் கக்கணுமா? என் வயத்திலே சுமந்த என் குளந்தையே நான் மறந்துட்டேன்னு நீ எனக்குப் போதிக்க வேணாம்-"

"அடிபோடீ பாவி-'

3

அவன் தெருவில் மனம்போனபடி போய்க்கொண்டிருந்தான்.

அந்த ஒருவாரத்துக்குள் அவனுக்கும் அவளுக்கும் பேச்சு பட்டென அறுந்துபோயிற்று. அவன் கண்ணெதிரே படிப்படியாய் அவன் குழந்தை தேய்ந்துபோகும் கோரம் காணக்காண அவனுக்குச் சகிக்க முடியவில்லை. அவள்மேல் குற்றமில்லை என்று அவன் மனம் புரியாமலே அறிந்தது. இருந்தும் அவள் தனக்காகச் செய்யும் தியாகம் அருவருப்பையும் பயங்கரத்தையும் தான் விளைவித்தது. அவ்விருவருக்காக அக்குழந்தை தியாகம்..

ஒரொரு சமயம் அவள் அவ்வீட்டில் எஞ்சிய ஆகாரங்களை அவன் சாப்பிடுவதற்காகக் கொண்டுவருவாள் அதைச் சீந்தக்கூட அவன் மனம் சிலிர்க்க ஆரம்பித்து விட்டது.

"சீ இதுவும் ஒரு புளைப்பா - இப்படி இந்த உசிரையும் உடலையும் ஒன்னாத்தான் வெச்சு வாழமே இருந்தால் தான் என்ன?"

- "டேய் நாட்டுப்புறம் எங்கே பாத்துக்கிட்டுப் போறே. வண்டியிலே மாட்டிக்கிட்டு சாவறத்துக்கா? சாவணும்னா சண்டயிலே போய் சாவறதுதானே!"

டாணாக்காரன் போட்ட அதட்டல் அவன் மனசில் அசரீரி மாதிரி பாய்ந்தது. "இந்த யோசனை எனக்கு ஏன் அப்பவே தோணல்லே? சம்பளத்தை அவள் பேருக்கு எழுதிவெச்சசோம்னா அவ அந்த வீட்டிலே போய் சாகவேணாம் சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அவ நிம்மதியாயிருப்பா. நம்ப மகனாவது புளைப்பான். திரும்பி வந்தா பார்ப்போமில்லையா?

-திரும்பி வாராட்டா?

-திரும்பி வராட்டாலும் நம்ப மகன் இருப்பான் இல்லையா!

அவன் மனசிலேயே ஒரு பெரும் கனம் குறைந்தது. சந்தோஷம் கூடப் பிறந்தது. அந்தப் போலீஸ்காரனை அணுகினேன்.

'சண்டையிலே சேக்கற ஆபீஸுக்கு வழி எந்தப் பக்கம்?"

4

அவன் திரும்பிவரும் வேளைக்குள் அஸ்தமித்து விட்டது கொளந்தையை நினைத்துக்கொண்டே அவன் ஓடோடி வந்தான். இன்றைக்கென்று அவள் அவனுக்கு முன்னாலேயே வந்திருந்தாள். அவனை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு முகம் மலர்ந்தது. ஆனால் அவள் முகம்மாறித் திகில் பிடித்துப் போயிருந்தது. ஐயோ கொளந்தையைப் பாரேன்!" என்றாள் கையைப் பிசைந்துகொண்டே. அவனுக்கு அடிவயிற்றில் சுரீலென்று ஜில்லிட்டது. உள்ளே ஓடினான். அதன் காதில் ஒரு நூல் ரத்தம் வழிந்திருந்தது. வயிறு உப்பி...

அதன் அருகே உட்கார்ந்தான் அவளும் குழந்தையின் அந்தண்டைப் பக்கம் உட்கார்ந்துகொண்டாள் ஆனால் அதை அவன் உணர்ந்தானேயொழிய காணவில்லை. அவன் பார்வை குழந்தையின்மேல் நிலை குத்திப்போயிருந்தது.

"என்ன சுருக்க வந்துட்டே?"

"எனக்கு இன்னிக்கு மனம் தாளல்லே. சண்டை போட்டுக்கிட்டு வந்துட்டேன்."

அவளும் சண்டை போட்டுக்கிட்டு வந்துட்டா. அவனும் சண்டையிலேபோய் சேர்ந்துட்டான். ஆனால் பிரயோசனம் என்ன? ஒண்ணுமில்லே குழந்தையே பார்த்தவுடனேயே அவனுக்குத் தெரிஞ்சுபோச்சு. அதுக்கு மூச்சு சத்தம்போட ஆரம்பிச்சுட்டுது "கொர்-கொர்ன்னு-" அவள் வயிற்றிலேயும் வாயிலேயும் அடித்துக் கொண்டு அழுகிறாள். ஆயினும் அவன் மனம் பளிங்கெனத் தெளிந்து சிந்திக்க ஆரம்பித்துவிட்டது.

"எல்லாம் பாரத யுத்தம் மாதிரிதான். ஊரிலே தருமராஜா கோவுல்லே காப்புக்கட்டி பாரதம் உபன்யாசம் வெச்சாங்களே-எல்லாரும் தோத்தாங்க எல்லாரும் ஜெயிச்சாங்க தோத்தவனும் கஷ்டப்பட்டான். ஜெயிச்சவனும் சுகப்படல்லே. என்னவோ காரியம் சாதிக்கறாப்பிலே, சண்டை போட்டதிலே கொறைச்சலில்லே, நாள் பாத்ததிலே கொறைச்சலில்லே-பலி போட்டதிலே கொறைச்சலில்லே - அரவான் பலி.

"-கொர்-கொர்-ர்"

"மொதல்லே புளைக்கிற வளியைக் கண்டுட்ட மாதிரி குளந்தையைப் பலிவெச்சோம். அப்புறம் அதுக்குமேலே ஒசத்திக்காரியம் பண்றாப்பிலே சண்டையிலே போய் சேர்ந்தாச்சு. இனிமேல் தப்ப முடியாது. கைநாட்டுக் கொடுத்தாச்சி. நாளை மத்தியான வண்டிக்குப் புறப்படணும் அப்புறம் அந்த வண்டியிலே எங்கேபோய் தள்ளறானோ போவாமே இருந்தோம்னா நாளைக்கு கைக்கு விலங்கோடே வந்துடுவான். பூட்டின்மேல் பூட்டு. புளைக்கற வழி என்ன சாவுர வழிதான்!

‘சண்டைக்குச் சேர்ந்த சமாசாரத்தை இவகிட்டே சொல்லல்லே. அது வேறுபாக்கியிருக்கு கொழந்தையைப் புதைச்சுட்டு வந்தப்புறம் இருக்குது அந்த ரகளை.

‘ஆனால் சண்டையிலேபோய்ச் சாவறத்துக்குன்னு ஒரு சாவுபாக்கியில்லே இப்போ நான் செத்துப்போயாச்சு. உசிரோடு இருக்கிறது உசிரில்லே, உடல்தான். இதுவும் மடியறது இன்னிக்கில்லாட்டா நாளைக்கு, நாளைக்கில்லாட்டா நாளன்னிக்கு, அன்னிக்கில்லாட்டா அதுக்கு மறுநாள்.”

விடியிருட்டில் தான் குழந்தையின் கொர் கொர் சத்தம் அடங்கியது. அவள் முகத்தை அவன் பார்க்க முடியவில்லை. அவள் கன்னத்தை ஒரு தடவை வருடினான். அவன் மனம் நெகிழ்ந்தது. குழந்தையை அதன் கந்தையில் சுற்றிக்கொண்டு கிளம்பினான்.

வெளியிலும் இருட்டு. ஒரு பீடிப்பொறி மாத்திரம் தெரிந்தது.

‘யாரய்யா?”

“நான்தான் பட்டணம்”- குரலிலிருந்து தன்மேல் சீறி வந்த ஆள் என அறிந்தான்.

“சுடுகாட்டுக்குப் போற வழி எது அய்யா”

அந்த நெருப்புப்பொறி எழுந்தது “நான் காண்பிக்கிறேன் வா-”

‘பட்டணம்’ காண்பித்த வழியூடே அவன் பின்பற்றிச் சென்றான்.

முல்லை - 11

அரை மனிதன்

எம்.வி. வெங்கட்ராம்

“எவ்வளவுதான் மேற்கத்தி மோஸ்தருக்குள் உடம்பைத் திணித்துக் கொண்டாலும் அசல் மேற்கத்தியானுக்கு உள்ள கம்பீரமோ நேர்த்தியோ உண்டாகப் போவதில்லை.

“ஆனால் பிறந்துவிட்டோம். இப்படி, இந்த நிறத்துடன் இந்த நாட்டில், எப்படியாவது வாழ்ந்து முடிக்க வேண்டியதுதான். குறைந்த பட்சம் மேற்கு முறையில் எங்களை உயர்த்திக்கொள்ள முயற்சி யாவது செய்யவேண்டியது பொறுப்பு, கடன்—

-இந்தச் சிறுமைப் பித்து அவன் ஒருவனுக்கு மட்டுந்தானா? நம் நெஞ்சில் நாமும் கைவைத்துப் பார்க்க வேண்டாமா?

மிதமான குடியால் உண்டான மிதமிஞ்சிய உற்சாகத்துடன் வெளிவந்தபோது, மழை முரட்டுத்தனமாய்க் கொட்டிக்கொண்டிருந்தது. நனையாமல் காத்துக்கொள்ள நான் மழைக்கோட்டும் கொண்டு வரவில்லை. எங்காவது தங்கி இரவைக் கழிக்கலாம் என்றால், துணையில்லாத் தூக்கத்தில் இனிமை ஏது? உடலையும் மூளையையும் ஒட்டிக்கொண்டிருந்த உற்சாகத்தைச் சேதமாக்காமல் அழகாக நனைந்துகொண்டே ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுவிடுவதே நலம் என்று நிச்சயித்து, கால் சட்டையை முழங்கால்கள் வரை மடித்துவிட்டுக்கொண்டு புறப்பட்டேன்.

மழையில் நனைந்துகொண்டே இரவில் தனியாக நடந்து செல்லுவதிலும் இன்பம் இருக்கிறதல்லவா? அந்த இன்பத்தை ‘சீட்டி அடித்து அனுபவித்துக்கொண்டே ஸ்டேஷனுக்கு விரைந்தேன். பிளாட்பாரத்தில் நின்றது ரயில்; புறப்படுவதற்கு இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்கள் தான் பாக்கி அவசர அவசரமாய் ‘செகன்ட்கிளாஸ்’ டிக்கட் ஒன்று வாங்கிக்கொண்டு சேற்றை வாரி இறைக்கும் பூட்கள் கால்வாரிவிடாதபடி ஓடி—

ஒரு ‘செகன்ட்கிளாஸ்’ வண்டி - நாலுபேர் படுக்கலாம் - ஒரே ஒரு வெள்ளைக்காரனைத் தவிர காலியாகக் கிடந்தது; அவனும் தூங்கிக்கொண்டிருந்தான். கதவைத் தள்ளினேன்; உள்பக்கம்

தாளிடப்பட்டிருந்தது. திறந்து கிடந்த ஜன்னல் வழியாக நான் உள்ளே ஏறிக் குதிக்கவும், ரயில் ஊதவும் சரியாக இருந்தது.

முதலில் என்னைக் கவனித்துக்கொண்டேன். ஈர உடைகளைப் பிழிந்தும், தொப்பியை உதறிக்கொண்டும் 'அப்பாடா', என்று அலுத்துக்கொண்டே படுத்திருந்த ஆளைக் கவனித்தேன். அவன் அசல் வெள்ளைக்காரன்; அசல் என்றால் அசல்தான், கருப்பு மனைவிக்கும் வெள்ளைக் கணவனுக்கும் பிறக்கும் 'அரை ஜாதி' அல்ல, நேராக எங்கோ மேற்கு நாட்டிலிருந்து வந்தவன். நல்ல வெள்ளை நிறத்தை நீளமாய்ப் பரப்பி நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தான். வெண்மை படுக்கையில்கூட அழகாகவே இருந்தது. அதிலும் ஆச்சரியம் என்னவெனில், அவன் தன் உடுப்பைக் கழற்றவே இல்லை. கால் சட்டை (பாண்ட்), கோட், பூட்கள், நெக்டை, ஏன், மூக்குக் கண்ணாடியைக்கூட அவன் கழற்றவே இல்லை. லேசாக மேலும் கீழும் போய்வரும் மார்பு - ரயிலின் ஆட்டத்தினால் அசையும் உடம்பு - அவனைப் பார்த்தால் ஒரு அழகான பொம்மையைப் படுக்கவைத்திருப்பது போலத் தோன்றியது.

நான் வருத்தத்துடன் நினைத்தேன்: 'எவ்வளவுதான் நாங்கள் - அதாவது, பனிக்கட்டி போன்ற நிறம் படைத்த அல்லது நிறத்துடன் படைக்கப்பட்ட நாங்கள் - எவ்வளவுதான் மேற்கு மோஸ்தருக்குள் உடம்பைத் திணித்துக்கொண்டாலும் அசல் மேற்கத்தியானுக்கு உள்ள கம்பீரமோ நேர்த்தியோ உண்டாகப் போவதில்லை. பிறவியுடன் வருபவை அவை; அவைகளை அடைபவர்கள் பாக்கியசாலிகள்!

"ஆனால், பிறந்துவிட்டோம் இப்படி, இந்த நிறத்துடன், இந்த நாட்டில், எப்படியாவது வாழ்ந்து முடிக்க வேண்டியதுதான். குறைந்த பட்சம் மேற்கு முறையில் எங்களை உயர்த்திக்கொள்ள முயற்சியாவது செய்ய வேண்டியது பொறுப்பு, கடன்...

நான் உட்காரவேண்டும். முடிந்தால் ஈரவுடையுடனேயே கொஞ்சம் கைகால்களை நீட்டிக்கொண்டு படுக்கவாவது வேண்டும். அவன் - கண் அயரும் என் மேற்கத்தித் தோழன்-ஒரு 'பெர்த்தில்' தூங்கிக் கொண்டிருந்தான்; கீழுள்ள மற்றொரு 'பெர்த்தி'லாவது படுக்கலாமா என்று பார்த்தேன்; அங்கே உடைக்காத பிராந்தி பாட்டில் ஒன்று, ஒரு காலி பாட்டில், சிகரெட் பெட்டி ஒன்று, ஒரு தீப்பெட்டி, ஒரு வாக்கிங் ஸ்டிக், எல்லாவற்றையும்விட பயப்படும்படியாக ஒரு கைத்துப்பாக்கி கிடந்தன. எல்லாவற்றையும் கீழே எடுத்து வைத்துவிட்டுப் படுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை.

'ஒருவேளை இந்த கம்பார்ட்மென்ட் முழுவதும் இவன் ரிஸர்வ் செய்திருப்பானோ?' என்று நினைத்தேன். அப்படியாயின் இந்த வண்டியில் ஏறியதே தப்பு. என் தூங்கும் தோழன் விழிப்பில் சாதுவாக இருந்தால் மன்னிப்பு கோரித் தப்பிவிடலாம். அதுவும் அவனுடைய உயர்ந்த பண்பாட்டிற்கு சிஷ்யனாகத் தோற்றம் அளிக்கும் நான் மன்னிப்பு கோரினால் அவன் அளித்துக் கொஞ்சநேரம் பேசவும் செய்யலாம்.

ஆனால் அவன் சாதுவாக இராமல் முரடனாக இருந்தால்? கைத் துப்பாக்கி...

அதைப் பார்த்தேன்; 'சட்டம் என்றால் சட்டம் தான்' என்று நினைத்து, சொல்லி செய்யும் வெள்ளைக்காரனின் முன் கோபத்திற்குப் பாத்திரம் ஆகிவிட்டால் அவன் என்னை நாயைப்போல் சுட்டுக் கூட தள்ளலாம்...

நான் அதற்காகப் பயந்து விடவில்லை. இன்னும் நான்கு மணி நேரத்திற்கு மேலாகும் ரயில் புனாவை அடைய. அதுவரையில் மேல் 'பெர்த்தில் சந்தடி செய்யாமல் படுத்திருக்கலாம் என்று முடிவு கட்டி, மற்றொரு முறை அந்த அழகான வெள்ளைப் பொம்மையைப் பார்த்து பெருமூச்சு விடுத்து, மேலே ஏறி, ஈரவுடலைத் தளர்த்தினேன்.

ஈர நாய் உதறிக்கொள்வதுபோல் ரயில் இடமும் வலமும் புரண்டு நின்றது. கீழே படுத்துள்ள தோழன் விழித்துக்கொண்டு என்னைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக மூக்கைக் கையால் பிடித்துக்கொண்டு மூச்சை வெளியில் விட்டேன். வீண் கலாட்டா எதற்கு, அதுவும் ஒரு வெள்ளைக்காரனுடன் என்பதுதான் என் அடக்கத்திற்குக் காரணம்; பயம் அல்ல, இல்லவே இல்லை

கீழே ஜன்னலிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள் "ஜான்!"

படுத்திருந்தவன் பதில் அளித்தான்: "ஓ, இருக்கிறேன்".

பிறகு கீழிருந்த ஆள் ஜன்னலுக்கு நடந்து செல்வது தெளிவாய்க் கேட்டது. சாதாரணமாகவே வெள்ளையர் நடக்கும்போது, நல்ல குதிரை மலைமீது ஓடுவதுபோல் சத்தம் கேட்கும்.

கீழே குரல்கள் பேசின; மறந்துவிட்டேன், படுத்திருந்த ஆளின் குரல் கிளாரிநெட் வாசிப்பதுபோல் நொய்ங் என்றிருந்தது.

வெளிக்குரல்: "உடம்பு எப்படி இருக்கிறது"

உள்குரல்: "நல்ல தூக்கம்".

"மார்வலி இல்லையே? அந்த டோஸ் எடுத்துக்கொண்டாயா?"

"ஓ! மார்வலி இல்லை?"

"பிராந்தி இருக்கிறதா?"

"இருக்கிறது... ஆனால் உடம்புதான் ரொம்ப கனக்கிறது; புனாவுக்குப் போக இன்னும் நாலுமணி நேரமாவது ஆகும். நான் உடம்பை லேசாக்கிக் கொள்ளட்டுமா?"

"செய். ஆனால் ஜன்னலை நன்றாக மூடிவிடு, வெளியிலிருந்து யாரும் பார்க்க முடியாதபடி"

"ஓகே!"

ரயிலின் குரல் அவர்களைப் பிரித்தது; வெளிக்குரல், "அடுத்த ஸ்டேஷனில் பார்க்கிறேன்," என்று விட்டு ஓடியது.

அந்த சம்பாஷணை எனக்கு அதிசயமாக இருந்தது. உடல் கனத்தைக் குறைக்க நண்பனின் அனுமதியை ஏன் கேட்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை; ஆடைகளைக் கழற்றுவதனால் யாரும் பார்க்காதபடியாய் ஜன்னலைக் கெட்டியாக மூடும்படி நண்பன் ஏன் யோசனை கூறவேண்டும்? ஒருவேளை - ஒருவேளை - முழுக்க முழுக்க உடையின் கனத்தைக் குறைக்க..

சே, வெள்ளையர் காட்டு மிராண்டிகள் அல்ல, சூரியன் எப்படிக் கொதித்தாலும் அவர்கள் உடை குறைக்கமாட்டார்களே...

அவர்கள் பேசியதன் பொருள் என்னவென்று புரியவில்லை...

ஜன்னலை கண்ணாடி உள்பட-இறுக மூடிவிட்டு... பிறகு 'கடபுட' வென்று சிறிது நேரம் கீழே ஏதேதோ சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் அசையவே இல்லை. இன்னும் சிறிது கழிந்து, கீழே மௌனம் நிலவியது.

அவன் என்னதான் செய்கிறான் என்று பார்க்கத் தோன்றியது; ஒருபுறம் கூச்சமாகவும் இருந்தது. தலையை மட்டும் மெதுவாய்க் கீழே நீட்டிப் பார்த்தேன்.

மறு நிமிஷம் 'ஐயோ' என்று வாய் தொண்டைக்குள் தானாகக் கதற, கைகள் தாமாக ஊன்ற, கால்கள் பாய, மார்பு படபடக்க எழுந்து உட்கார்ந்தேன்.

அழகாய்ப் படுத்திருந்த வெள்ளைக்காரன் அங்கே இல்லை; அவனுக்குப் பதிலாக தாறுமாறாகவும் கோரமாகவும் வெட்டுண்டது போன்று ஓர் அரை உடல் அங்கே கிடந்தது!

நான் எதற்கும் பயந்ததில்லை ஆனால் இப்போது பயந்துவிட்டேன். உன்னால் பயப்படாமல் இருக்க முடியுமா, கேட்கிறேன். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஓர் ஆளைத் தனியாகப் பார்க்கிறாய்; ஆனால் திடீரென்று அவன் இருக்கும் இடத்தில் பார்வைக்கே பயங்கரமான அரை உடல் கிடந்தால் பயப்படாமல் இருக்க முடியுமா? உன்னால்? கண்கட்டு வித்தை நடக்கும் இடம் அல்ல என்பதையும் மறந்துவிடாதே.

நீ எப்படி பயந்திருப்பாயோ, நானும் பயந்துவிட்டேன். கீழே பார்க்கவும் எனக்குப் பயமாக இருந்தது. சிரித்து பயத்தை விரட்டலாம் என்று நினைத்தால் சிரிப்பும் வாயை இளித்துவிட்டது. ரயிலிலிருந்து இறங்கிவிடலாம் என்றால் அது தலை கிறுகிறுக்கும்படி ஓடிக்கொண்டிருந்தது. அபாயச் சங்கிலியை இழுக்கலாமே என்று நீ சொல்லலாம். ஆனால் அபாய காலத்தில் அந்த நினைப்பே உண்டாவதுதில்லையே!

பயம் ஐந்து நிமிஷங்களைச் சாப்பிட்டபின், என்னைத் தட்டிக்கொடுத்து சமாளித்து கொண்டேன். உயிராசை ஒருபுறம் இழுக்க, பயம் மறுபுறம் இழுக்க, இறுதியில் பயம் சிறிது பின்வாங்கியது. பேய்

பிசாசுகளைப்பற்றி நான் எப்போதும் நம்பியதில்லை; 'எப்போதும்,' என்று சொல்லுவதில் பொய்க்கலப்பு இருக்கிறது; சிறு வயதில் இருட்டில் கூட போகமாட்டேன். விவரம் அறிந்தபின் நான் பேய் பிசாசுகளை நம்பியதில்லை. அவை ரயில் பிரயாணம் செய்ததாய், - அதுவும் மனித நண்பர்களுடன்-நான் கதையில்கூட - படிக்கவில்லை. ஆகவே கீழே கிடப்பவன்,-அல்ல, - கிடப்பது பேயோ பிசாசோ அல்ல.

பின்?

அவன் தன்னைத்தானே வெட்டிக்கொண்டிருப்பானா?

இது பைத்தியக்கார எண்ணம். வெட்டிக்கொள்ளும் போது ஒருத்தன் கூச்சல்கூட போடமாட்டானா? வெள்ளைக்காரனுக்கு ரத்தம் கூட உண்டு; இல்லையா?

என்ன யோசித்தும் எனக்கு சமாதானப்படவில்லை. யோசனையால் அச்சம் மங்கலுற்றுவிட்டது. குனிந்து நன்றாய்ப பார்த்தேன்.

'பாண்ட், கோட்' இல்லாமல் ஒரு ட்ரௌஸர் மட்டும் அணிந்து கொண்டு அந்த உருவம் கிடந்தது. வலது கையும், வலது காலும் இருக்கவேண்டிய இடங்கள் காலி; மார்பின் வலப்பாகம் சரிந்திருந்தது. எல்லாவற்றிலும் கோரம் அந்த உருவத்திற்கு மூக்கே இல்லை!

நான் முதலில் பார்த்த பொம்மை அழகுக்குப் பதிலாகப் பயங்கரமான - அல்ல; அசிங்கம், சே, அசிங்கமான உருவம்...

நினைப்பில் தடுமாறிஎன் கால் ஒன்று கீழே சாய்ந்து சப்தம் எழுந்தது.

'யாரது?' என்றது உருவம், குயிலொத்த குரல்நிர்ப்பந்தத்தால் கீழே இறங்கினேன். உருவம் கண்களையும் திறந்துவிட்டது, வலது கண் இருக்கவேண்டிய ஸ்தானத்திலிருந்து ஒரு பள்ளம் முறைத்தது; அங்கே கருவிழி, ஒன்றுமே இல்லை? மொத்தத்தில் அந்த உருவம், மனிதவுடலில் இடது பாதியாகத் தோன்றியது...

"யார் நீ?" அதுவும் பயந்துள்ளது என்று அதன் குரலும், இடது கண்ணும் சாட்சி சொல்லின.

"நானா?... நான்..." என்று குழறினேன்.

"நீ எப்படி இந்த வண்டியில் வந்தாய்?" அந்த வெள்ளை அரை உடல் தன் இடது கையை ஊன்றி எழுந்திருக்க முயன்றது; முடியாமல், கீழே தொப்பென்று சாய்ந்தது; மீண்டும் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து விட்டது.

"இது ரிஸர்வ் வண்டி என்று உனக்குத் தெரியாதா; கறுப்பு நாயே, உனக்கு புத்தி இல்லையா?"

கடவுளே! உனக்கு (கடவுளுக்கு அல்ல, உனக்கு) இந்தமாதிரி அனுபவம் ஏற்படவே கூடாது. எமனுக்கும் பதில் சொல்லிவிடலாம்; அரை உடலுடன் பேசுவது என்றால்...

"தெரியாமல்..."

“உடம்பு கறுப்பு என்றால் புத்தியுமா கறுப்பு உனக்கு?”

இருமியது; மறுபடி மெத்தைமீது விழுந்து இடது கையால் சரிந்திருந்த மார்பின் வலப்பகத்தைத் தடவிக் கொடுத்தது. அதனுடைய முணுமுணுப்பின் அர்த்தம் நான் நாசமாய்ப் போக வேண்டும் என்பதுதான். நான் ஏன் பேசுகிறேன்?

“ஏய், அந்த பெர்த் மீது, பாட்டிலுக்குப் பக்கத்தில் கிடக்கிறதே சின்ன சீசாவிலிருந்து இரண்டு துளி வாயில் ஊற்று.”

அப்படியே செய்தேன், உலகத்தை ஆட்டும் மகா சக்தியின் கட்டளைக்குப் பணிவது போல்.

சிறிதுநேரம் அந்த உருவம் துடிதுடித்தது. கழுத்து அறுபட்டதும்; கோழி துடிக்குமே, அதுபோல,

கடவுளே, புனாவைக் கொஞ்சம் முன்னாலாவது அனுப்பக்கூடாதா? என்று என் நெஞ்சு துடிதுடித்தது.

கொஞ்ச நேரத்தில் அந்த உருவம் நிதானமுற்றது. இடது விழியையும் வலது பள்ளத்தையும் விழித்த அந்த பார்வை?

மறுபடியும் அது கஷ்டப்பட்டு எழுந்து அமர்ந்தது.

“நீ எப்படி இங்கே வந்தாய்?” அதன் குரலில் அதிகாரமோ ஆத்திரமோ இல்லை; சாதா உணர்ச்சி ஒலித்தது. நான் உண்மையைக் கூறினேன்.

‘அப்படியானால் நீ என்னை உடையுடன் பார்த்திருக்கிறாய்!” நான் ஒப்புக்கொண்டேன்.

“உட்காரேன்.” என்ற குரலில் சாமானியத்தன்மை மட்டும் அல்ல, ஒருவிதப் பணிவும் இருந்தது. உட்கார்ந்தேன்.

“பிராந்தி கொஞ்சம் சாப்பிடுகிறாயா? எடு-”

எடுத்துக்கொடுத்தேன்; நான் சாப்பிடவில்லை. இடது கையில் கிளாஸைப் பிடித்து குடித்துக்கொண்டே அநத அரை உடல் கேட்டது: “என்னை இப்படிப் பார்க்க உனக்குப் பயமாக இல்லையா?”

நான் இப்போது பயப்படவில்லை. இந்த உருவம் பேய்பிசாசு அல்ல என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. சாதாரண மனித ஜன்மம்; ஆனா வெள்ளை பிறப்பு.

“நீ கொடுத்தாயே, சின்ன சீசாவிலிருந்த மருந்து, அது மார் வலிக்கு”

அதற்கு சிகரெட் பற்றவைத்துக் கொடுத்தேன்.

“ஆடை எல்லாம் அணிந்திருந்தபோது நான் எப்படி இருந்தேன்?”

“உம்”, என்ற முனகலில் பொருள்வைத்துப் பதில் சொன்னேன். இப்போது?”

பதிலைவேண்டுகிற கேள்வி அல்ல அது; பதில் அந்த உருவிலேயே இருந்தது, இடது கண்ணில் நீர் பிறந்தது; வலது பள்ளத்தின் அடியில் நீர் ஊற்று இருக்கலாம். தென்படவில்லை. அந்த உருவம் - பாவம். மனிதன் என்று சொல்ல முடியாவிட்டாலும், அரைமனிதன் என்பதால் என்ன நஷ்டம்? அரைமனிதன் வருந்தினான்.

“நான் பிறவிலேயே இப்படி இருந்தேன் என்று நினைக்கிறாயா?”

அவனை அறியவேண்டும் என்று ஆவல் எனக்கும் அதிகமாய் இருந்தது.

“நான் குழந்தையாக இருக்கும்போது ரொம்ப அழகாய் இருந்தேன். என் தாயாரின் குழந்தைகளில் நான்தான் ரொம்ப அழகு என்று பெருமைப்படுவாள். இப்போது அவள் என்னைப்பார்த்தால்... நல்லவேளை அவள் போய்விட்டாள், அவள் ஆன்மா சாந்தி அடைவதாக!”

அரைமனிதன் பெரிய மூச்சு ஒன்றைச் சிறினான்; அதாவது, மூக்கு இருக்கவேண்டிய இடத்திலிருந்த துவாரத்திலிருந்து ‘புஸ்ஸ்’ என்று சத்தம் வந்தது.

‘எததனை பெண்கள் என் காதலைவேண்டி என் பின்னால் அலைந்தார்கள்? எத்தனை பெண்களுடன் நான் காதல் நாடகம் - சட்டத்திற்கு விரோதமாக-நடத்தினேன்! இப்போது மேரிகூட என்னைப் பார்க்கப் பயப்படுவாள்—

‘மேரி யார்?” என்றேன்; என் ஆத்திரம் எனக்கு.

அவனுடைய இடது கண் ஒரு முழு சூரியனைப் போல பிரகாசித்தது.

“மேரி என் கண்மணி என் காதலி. என் உயர்வான பாதி! லண்டனிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் நடன விருந்து நடக்கும்போது அவளைச் சந்தித்தேன். கன்னியர் கும்பலில் அவளிடம் என் மனம் ஏனோ சென்றது. டான்ஸுக்கு அவளை அழைத்தேன்.. அந்த டான்ஸை நினைத்தாலே-ஆஹ! எவ்வளவோ பெண்களுடன் ஆடியிருக்கிறேன்; ஆனால் அவள் எவ்வளவு ஹிதமாக இருந்தாள்! மறுநாள் விருந்தாளியாக அவளால் அழைக்கப்பட்டேன்...

“தனியாகவா இருந்தாள்?”

“இல்லை. தகப்பனாருடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். விருந்தின்போது அவளுடைய தகப்பனாரிடம் என் நிலைமையைச் சொல்லி, அவளை மணக்க விரும்புவதையும் ஜாடையாகச் சொன்னேன், நல்ல மனுஷர், ஒப்புக்கொண்டார். பிறகு அவளிடம் தனிமையில் என் காதலை விவரித்து விவாகத்தைப் பிரேரேபித்தேன்... அப்போது அவளுடைய முகம் எப்படி சிவந்தது! ரோஜா, ரோஜா!”

புனா நெருங்கிக்கொண்டிருந்தது. அரை மனிதனின் காதல் காப்பியத்தைக் கேட்டுக்கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. கதையின் முடிவுக்கு அவனைத் துரத்தினேன்.

'நீ எப்படி இப்படி மாறினாய்?"

அரை மனிதன் பரிதாபமாய்ச் சொன்னான்! "மேரி என்னை இனி திரும்பியும் பார்க்கமாட்டாள். நான் எந்தப் பெண்ணுடனும் டான்ஸ்கூட செய்யமுடியாது! ஐயோ, நான் செத்திருக்கக் கூடாதா?.."

'மனைவியின் காதல் உனக்கு ஆறுதல் அளிக்கும்.."

"யார் கண்டார்? அவளுக்கோ இளம்பருவம் நான்.. என்னை மனிதன் என்று யாரும்கூற முடியாது... எனக்கு கலியாணமாகி மூன்று வருஷங்கள்தான் ஆகின்றன. என்னால் அவளுக்கு இரண்டுமாதங்கூட சுகம் இல்லை. அந்த பாழும் ஜெர்மன் எருமைகள் எதற்காகவோ சண்டை ஆரம்பித்து விட்டார்கள்; அவர்கள் நாசமாய்ப் போக! எனக்கு யுத்தத்தில் சேருவதற்கு இஷ்டமில்லை; ஆனால் சர்க்காரின் கட்டளையை யாரால் மீற முடியும்? ஜெர்மனியனோடு சண்டைபோட்டு உயிர்விட்டாலும் கௌரவமுண்டு. இந்த மஞ்சள் பேய்களுடன், குள்ள ஜப்பானியர்களுடன் சண்டைபோட என்னை அனுப்பிவிட்டார்கள், அஸ்ஸாமில் ஜாப்கள் குண்டுபோட்டார்கள் அல்லவா? அப்போதுதான் எனக்கு உடம்பெல்லாம் காயம் ஒரு கையும், ஒரு காலும் போச்சு ஒரு கண்ணில் கண்ணாடி புகுந்தது; மூக்கு காணாமல் போய்விட்டது. இதோ இந்த மார்பைப்பார், ஒருபக்கம் சரிந்துள்ளதல்லவா? அடிக்கடி சகிக்க முடியாதபடி வலி எடுக்கிறது. அதற்கு மருந்து என் மண்டையைப் பார்..?

பார்த்தேன். ஒட்டு போட்டாற்போலத் தோன்றியது, இரு பிளவாக.

'என் மூளைகூட சரியாக வேலை செய்வதில்லை அதற்காகவும் அடிக்கடி மருந்து சாப்பிடுகிறேன்... இவ்வளவும் போனபிறகு உயிர்மாத்திரம் ஏன் தப்பியதோ தெரியவில்லை. ஆஸ்பத்திரியில் ஒருவருஷம் கிடந்தேன்; என்னைக் கொன்றுவிடும்படி டாக்டர்களைக் கெஞ்சினேன். என் மூளை மிகவும் உயர்ந்ததாம்; கைகால், எதுபோனாலும் அது நாட்டுக்கு உபயோகப்படுமாம். அதற்காக என் உயிரை உடலுடன் ஒட்டிவைத்துவிட்டார்கள். பாவிகள்! ஆனால் மூளை சரியாக இல்லையே!"

"அந்த கண்ராவியைப் பார்க்கிறாயா? இதோ, இந்த கோட்டையும் பான்டையும் எடுத்துப்பார்..."

அந்த இரண்டிற்கும் கீழே கட்டையால் செய்யப்பட்ட ஒரு கை, ஒரு கால் பூட்டுடன்! - ஒரு போலி மூக்கு, மூக்குக்கண்ணாடி, சின்ன மருந்து சீசா.. இவ்வளவையும் தரித்துக்கொண்டால் அவன் முழுமனிதன்போலக் காட்சி அளிப்பான்!

எனக்கு ஒரே திகைப்பு; நீடிக்கவிட அவன் விரும்பவில்லை. போலும்.

"பத்து நிமிஷத்தில் புனா வந்துவிடும். நீ கொஞ்சம் ஜன்னலுக்கு வெளியில் பார்த்துக்கொண்டு இரேன்.

என் தலையை வெளியே அனுப்பினேன். சுமார் பத்து நிமிஷங்கள் நான் உள்ளே பார்க்கவே இல்லை

'சரி" என்றான் அவன். திரும்பினேன். கைகால் மூக்கு எல்லாவற்றையும் கோர்த்துத்தொண்டு, முன் போலவே முழுமையாகத் தோற்றம் அளித்தான் அவன். அந்தப் போலி மூக்குதான் எவ்வளவு அழகாய் பொருந்தியிருந்தது! 'பொம்மைபோல்' அல்ல, பொம்மைதான் பாவம், அவன் உடல் இப்போது கனமாய்த்தான் இருக்கும்!

அவனுடைய இடது கையில் கைத்துப்பாக்கியிலிருந்து; அதை என்னிடம் காட்டிக்கூறினான்; 'சகிக்க முடிந்த வரையில் சகித்துப் பார்ப்பேன்; கடைசியில் இந்த கைத்துப்பாக்கி இருக்கவே இருக்கிறது. மாய்த்துக்கொண்டு விடுவேன்!"

அவனுடைய பேச்சில் வீரத்தன்மை பீறிட்டது.

புனா ஸ்டேஷனில் ரயில் நின்றது. அவன் தொப்பியைத் தலைமீது வைத்துக்கொண்டான். போலியான வலது கரத்தை கால் சட்டையில் புகுத்தினான். இடது கையில் 'வாக்கிங் ஸ்டிக்கை' எடுத்துக்கொண்டு கம்பீரமாக, ஆனால் சற்று சிரமத்துடன் கதவருகில் சென்றான். பக்கத்து வண்டியில் உட்கார்ந்திருந்த நண்பன் கைலாகு கொடுத்து கீழே இறக்க இருவரும் புறப்பட்டனர்.

'என் நண்பனே, நான் வருகிறேன்' என்று என்னிடம் விடை பெற்றுக் கொண்டு 'டக்டக்' என்று அவன் நடந்ததைப் பார்த்ததால், அவன் அரை மனிதன் என்று எவனாலும் கண்டு கொள்ள முடியாது.

அவன் நடந்து செல்வதை பிளந்த வாயுடன் பார்த்துக்கொண்டிருந்தேன். வெள்ளைக்காரர்கள் கெட்டிக்காரர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அரைமனிதனை முழுமனிதனாகத் தோன்றச் செய்யும் சாமர்த்தியமும், அறிவும் உனக்கு உண்டா? வெள்ளைக்காரன், வெள்ளைக்காரன்தான்.

ஆகையால், வெள்ளையரின் ஈடும் இணையும் அற்ற அறிவுக்கு என் வணக்கம் செலுத்துகிறேன்.

முல்லை -12

புத்திர பாக்கியம்

‘தார்க்கோல்’

பிறக்கும்போதே தாயைப் பலிகொள்ளும் நண்டைப்போல், அந்தப் புத்திரன் - சொத்துக்கு உடையவன் - அவதரித்தான்.

பிள்ளை பிறந்த உற்சாகத்தில் காத்த பெருமாள் பிள்ளைக்கு மனைவியின் மரணம்கூட மனசில் தைக்கவில்லை.

பற்றற்றுத் திரிந்த மனம் மீண்டும் லௌகிகத்தில் பசையோடு ஒட்டத் தவிக்கிறது பணம் சேர்க்கும் ஆசை வலுக்கிறது.

ஆனால், குலத்தை விளக்க வந்த அந்தக் குலவிளக்கோ-

தபால்கார நாயுடு நாலணாவைத் தடவிப் பார்த்துக்கொண்டே கீழிறங்கினார். அவருக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. வெற்றுக் கடிதத்துக்கு நாலணாக் காசைக் கூப்பிட்டுக் கொடுத்தானே மனுஷன் என்று ஆச்சரியம் பொங்கிற்று. ‘காசு பணம் பெருத்தவனுக்கு நல்ல காரியமின்னா துட்டு சல்லிக் காசுதான். சூறைகூட எறியலாம்’ என்ற எண்ணம், சத்திரத்து மனிதனை அளந்து பார்த்தது.

கடிதத்தை மூன்றாவது தடவையாகப் படித்தாயிற்று. பிள்ளையார் சுழியிலிருந்து, கீழே ‘மச்சினன்’ செண்பக ராமபிள்ளை கையெழுத்துவரை எழுத்து விடாமல் வாசித்து முடித்தார் காத்த பெருமாள் பிள்ளை. கைகளிரண்டும் சந்தோஷத்தைத் தொட்டு விட்டதுபோல் பூரித்து நடுங்கின. நெஞ்சில் ஒரு புது வெள்ளம் ஊற்றெடுத்துப் பெருகிற்று. தோளில் கிடந்த சிட்டுத் துண்டு பட்டு அங்கவஸ்திரமாக மாறிவிட்டதுபோல நழுவி நழுவி விழுந்தது. காத்தபெருமாள் பிள்ளை கடிதத்தைக் கையில் பிடித்தபடி, சத்திரத்து ஜன்னல் வரியாக, சாலைக் குமாரசாமி கோயில் வர்ணக் கோபுரத்தைப் பார்த்து மெய் மறந்து நின்றார்.

காத்த பெருமாள் பிள்ளையின் சம்சாரம் கோமதி அம்மாளுக்கு மாராந்தையில், நேற்று முன்தினம் ஆண்குழந்தை பிறந்து தாயும் பிள்ளையும் சுகமாக இருக்கிறார்கள் என்ற நல்ல செய்திதான் சற்று முன் வந்திருந்தது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த ஒருவனைக் குடைராட்டில் ஏற்றி குலை தெறித்துப் போகும் வேகத்தில் சுழற்றினால், எப்படியிருக்கும்?

அதுமாதிரி பிள்ளைவாளுக்கு தலை சுற்றிக் கிறுகிறுத்தது. உலகம், அதன் சூது நிறைந்த சலனம், வாழ்க்கை என்று சோடித்துச் சொல்லுகிற செக்காட்டம் எல்லாம் ஒரு உயிருள்ள காடுபோல் அவரைச் சுற்றி நெருங்கி நெருங்கி வந்தன. “பெண் மக்கள் இருவருக்கும் நகை நட்டுக்கு வழிதேடி சேர்க்கிற இடத்தில் சேர்த்து கண் குளிரப் பார்த்தாயிற்று. ஒரு பொறுப்பு இல்லை, ஒரு கவலை கிடையாது. இருக்கிற காரை வீட்டையும், பாட்டப்பத்து களத்தடிக் காணியையும் ‘கண்ணுக்குப் பிறகு பெண் மக்களுக்கு’ என்று எழுதி வைத்துவிட்டு கட்டையைப் போட வேண்டியதுதான்; காத்த பெருமாள் பிள்ளை பரம்பரை அங்கேயே வாழிபாடி கதையை முடித்துவிடும்’ என்றுதான் நேற்றுவரை உறுதியாக நினைத்திருந்தார் பிள்ளை

“ஆறுமாத காலமாக படுத்த படுக்கையாகக் கிடந்த கோமதியம்மாள் இந்தப் பிரசவத்திலும் ஒரு பெண்ணைப் பெற்றுப் போட்டுவிட்டு கண்ணை மூடிவிடுவாள். குழந்தையும் தாயைத் தொடர்ந்து போய்விட்டால் தொல்லையில்லை, சாலைக் குமாரசாமி சன்னிதிக்கு வந்து ‘முருகா’ என்று உட்கார்ந்துவிடலாம். நமக்கு அவன் தான் ஆண் சந்தானம்’

டாக்டர் குஞ்சிதம், ஆரூடம் அக்கினி ஜோசியர் இவர்கள் இருவரும் கொடுத்த தீர்க்க தரிசனத்தின் பிரகாரம் மேற்படி முடிவுக்கு வந்த பிள்ளை, மனச் சஞ்சலத்தால் விரட்டப்பட்டு, பஸ் ஏறி திருநெல்வேலிக்கு வந்து ஒரு வாரம் ஆயிற்று. தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது அவருக்கு என்றுமில்லாதபடி நிதரிசனமாகத் தெரிந்தது.

ஆண் குழந்தை பிறந்திருக்கிறது! -

‘இல்லை’ என்று போனது தெய்வ சங்கற்பத்தால் இத்தனை வருஷங்கள் கழித்து ‘இருக்கிறது’ என்று வீட்டுக்கு வந்திருக்கிறது. பிறந்தது ஆண் என்று காதில் விழுந்தால், யமனை விரட்டியடித்து விட்டுப் பிழைத்துக் கொள்ளுவாள் கோமதி. பாவம், அவள்தான் எப்படித் தவித்தாள்! ‘கொள்ளி வைக்கப் பிள்ளை இல்லாமற் போனால் குலத்துக்கு வசையாச்சே’ என்று அவள் காக்காத விரதம், சுற்றாத கோவில் குளம், போகாத மாதாந்தம் உண்டா? கடைசியாக, குமாரசாமி, கரைக்கோயிலான் கண்ணைத் திறந்து பார்த்திருக்கிறான்!

அவருடைய மனத்திலே,-

பிரசவ அறையில் கிடக்கும் மதலை வளர்ந்து சிலேட்டும் புத்தகமுமாய்ப் பள்ளிக்கூடம் போயிற்று. பத்தாவது தேறி, பட்டணத்துக்கு ரயிலேறுகிறது. படிப்புக்கு ஆயிரம் இரண்டாயிரம் வேண்டுமே! பையன் முகம் சுறுக்கலாமா? உழைப்பு, உழைப்பு, ஓயாத விடிவிளக்கு உழைப்பு, அப்பாட, பையனின் காலேஜ் படிப்பு முடிந்துவிட்டது. போர்டை வீட்டில் மாட்டிவிட்டு, நாலுகைச் சட்டை போட்டுக்கொண்டு கோட்டுக்குப் போகிறான். பிறகு... கல்யாணம்!... கண் குளிர்ந்துவிடும். கோமதிக்குத் தலைநரைத்துவிட்டது. நான்மாத்திரம் என்ன! உழைத்து உழைத்துத் தேய்ந்த ஓடுதான். பரவாயில்லை. இனி நெஞ்சு

வேகும். கொள்ளி வைக்கப் பையன் இருக்கிறான். வசை இல்லை. பேர் சொல்லப் பிள்ளை இருக்கிறான். நெஞ்சு வேகத்தான் வேகும்.. எல்லாவற்றுக்கும் இப்பொழுதே உழைக்க வேண்டும், உழைக்காமல் முடியாது. அதெப்படி முடியும்?...

'பதினைந்துக்கு கீழே ஒரு லக்கம் சொல்லுங்கள்' என்று கேட்டான் கணித சோதிடம் கல்பானந்த யோகி. லோகல் பண்டு சத்திரத்தில் அடுத்த அறைதான் அவனுடைய ஆசிரமம்.

'பதிநாலு' என்று பதில் சொன்னார் பிள்ளை.

யோகியின் முகம் மலர்ந்தது 'பூ ஒன்று சொல்லுங்கள்.

'தும்பைப் பூ'

யோகி கண்ணை மூடிக்கொண்டு கணிக்க ஆரம்பித்தான். உட்குழிந்த அவன் கண்கள் மறைந்து மறுபடியும் தோன்றின.

"மூன்று நாள் ஆயிற்று, உங்களுக்கு யோககாலம் ஆரம்பித்துவிட்டது. இனி மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். புத்திரனால் அதி பிராபல்யம். அதற்குப் பொறுப்பு இருக்கிறது. உழைத்தால் பலனுண்டு. லக்னாதிபதி, வீட்டில் உச்சத்துக்கு வருகிறான். புத்திரனுக்கு விசேஷ யோகம் சம்பவிக்கும். கல்பனை முற்றிற்று' என்ற கையைத் தட்டினான் கல்பானந்த யோகி.

பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த காத்தபெருமாள் பிள்ளை முன்னாலிருந்த வெற்றிலையில் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை வைத்து அழுத்தினார்.

திருநெல்வேலி பஸ் ஸ்டாண்டு என்ற புனித பூமியில், பிரபஞ்சத்து மானிட வர்க்கத்துக்கு ஒரு பொருட்காட்சி வைத்த மாதிரி 'கசா முசா வென்று கும்பல் கூடியிருந்தது. ஆலங்குளத்துக்கு அடுத்த பஸ் ராத்திரி எட்டரை மணிக்கு என்று புழுதி படிந்த போர்டு தெரிவித்தது. சிமிண்ட் பெஞ்சில் துண்டை மடித்துப் போட்டு உட்கார்ந்தார் கா. பெ. பிள்ளை.

பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையில் சுருட்டு வாங்கிக்கொண்டிருந்த 'ஆனை முழுங்கி' ஆவுடை நாயகம் ஒரு புது சகாப்தத்தின் தூதனாக பிள்ளையின் கண்ணில் தோன்றினான். அவர் மூளை விருவிரு வென்று பேய் வேகத்தில் வேலை செய்யத் தொடங்கியது.

'தம்பியோவ்! - சிங்கப்பூர்த் தம்பி, என்ன கூப்பிடுதது கேக்கலியா?' சிங்கப்பூர்த் தம்பி' திரும்பிப் பார்த்தான். 'நீங்களும் ஊருக்குப் புறப்பட்டு வாரீகளா?.. என்ன போங்க? நான் சொன்னதை கொஞ்சங்கூட காதிலேயே வாங்காம போயிட்டீங்க. பொண் மக்களுக்குத்தான் நாலு காசு சேத்துவச்சா வேண்டாமிண்ணா இருக்கும் தேடி வாரலச்சுமியைத் தள்ளுத ஆசாமி ஒங்களைத்தான் பார்த்திருக்கேன்" என்று தன்

மனக்குறையை வெளியிட்ட படி சுருட்டைப் பற்றவைத்தான் ஆவுடை நாயகம்.

லக்ஷம் ரூபாய்வரை ஒரே வாரத்தில் அமுக்கிவிடக் கூடிய ஒரு 'அணுகுண்டு' வழியை, தான் கண்டுபிடித்திருப்பதாக 'ஆனை முழுங்கி' இரண்டு நாட்களுக்கு முன் காத்தபெருமாள் பிள்ளையிடம் ரகசியமாகத் தெரிவித்தான். அப்பொழுது பிள்ளை கொஞ்சமும் ஆவல் காட்டவில்லை. பாரமுகமாக அசட்டை செய்துவிட்டு 'எனக்கென்ன புள்ளையா குட்டியா? இந்த யமகண்ட வழியிலே திரட்டி யாருக்குச் சேத்து வைக்கணும்? வேறே ஆள் பாரு தம்பீ என்று பேச்சை முடித்துவிட்டார். இது நடந்த சமயம் அவருடைய மனத்தில் நிறைந்திருந்த விரக்தி வைராக்யம் எல்லாம் இப்பொழுது கழன்று சத்திரத்துக் குப்பைத் தொட்டியில் விழுந்து விட்டன. இப்பொழுது ஆவுடை நாயகத்தை மறுபடியும் பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்திருப்பது. சத்திரத்து யோகி தெரிவித்த யோகசக்கரம்தான் என்று எண்ணினார். பிள்ளை பிறந்த மறுநாளே, புத்திரன் தகப்பனை லக்ஷாதிபதி ஆக்கப் போகிறானோ என்னவோ யார் கண்டது? பிள்ளைவாளுக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால் ரத்தம் சிலீரென்று துள்ளி அடங்கியது.

'அதெல்லாம் இருக்கட்டும், தம்பீ- சரக்கு எங்கே இருக்கு, கையிலே என்ன வேணும் - இதெல்லாம் தெரிவிக்காமல்... மொட்டையாச் சொன்னே அன்னைக்கு? விவரந் தெரிஞ்சாத்தானே எதிலியும் இறங்கலாம்?"

மீன் தூண்டிலை நாடுகிறது என்று தட்டுப்பட்டதும், ஆவுடை நாயகம் சுருட்டை வீசிவிட்டு 'சவுக்க' உட்கார்ந்தான்.

'சரக்குக்கு மேற்படி பேத்துமாத்துக்கு எல்லாம் நானாச்சு. இன்னைக்கு என்ன. திங்களா? அடுத்த திங்கக் கிழமை, இவ்வளவு நேரம் கணக்கு பைசல். ஒரு ஈங்குருவிக்குத் தெரியாது- உங்க கையிலே எவ்வளவு இருக்கு? எம்புட்டு பெரட்டணும்னு மாத்திரம் சொல்லுங்க.'

பிள்ளை குரலைத் தணித்துக்கொண்டு சொன்னார்:

'சரக்கைக் கண்ணாலே பார்க்காம, தொகையை எண்ணி வைக்க முடியாது. ராவோடு ராவா கிழக்குறிச்சி அய்யர் கிட்டங்கியில் கொண்டு சேர்க்கிற பொறுப்பை நம்மாலே ஏத்துக்கிட முடியாது. டிபார்ட்மெண்டுலே கண்ணிலே எண்ணெய் ஊத்திகிட்டு முழிப்பா இருக்கிறானுக. நாலும் பாத்து இறங்கணும். வசப்பிசகாக போய் மாட்டிக்கிட்டு, 'உடும்பு வேண்டாம் கையை விடு' என்கிற கணக்கில் வந்து சேரக்கூடாது"

"... கொஞ்சம் சந்தேகம் இருந்தாலும் ஒங்ககிட்ட வருவேனா?... ஆள் தெரியாமலா இந்த பதினஞ்சு வருசகாலமா, முக்குளிச்சுக்கிட்டிருக்கேன்- கையிலே, ஒரு மூணு ரூவா என்ன, முப்பது ரூபா வேணுமின்னாலும் இந்த ரத வீதியிலே ஒரு வளையம் வந்தாச் சேராதா? மாராந்தைக் காவன்னா என்கிற விலாசம் லேசுப்பட்டதா என்ன?'

‘ஆலங்குளம், தென்காசி, கடையநல்லூர்’ என்று அலறினான் ஸ்டாண்டுப் பையன்.

‘வண்டி வந்துவிட்டது’ என்றார் பிள்ளை.

‘கீழ்ச்சந்நிதித் தெருவிலேதான் புள்ளிக்காரன் இருக்கான். எதுக்கும் இண்ணைக்கு ராத்திரி பாத்திட்டா நல்லது வேறே எவனாவது தட்டிக்கிட்டு போயிடக்கூடாது, பாருங்க’

‘இல்லை, தம்பி மாராந்தைக்குப் போய் தலையைக் காட்டிவிட்டு, நாளை காலை வண்டியிலே வந்திட்டாப் போச்சு, அங்கே....’

‘இந்தக் காரியத்திலே காலதாமதம் கப்பலைக் கவிழ்த்துவிடும் என்கிறது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல எதுக்கும் ஒரு வார்த்தையைப் போட்டு வச்சிட்டால்...’

‘மாராந்தைக்கு அவசியம் போயாகவேணும் அங்கே நமக்கு பையன் பொறந்திருக்கானாம், இப்பத்தான் காயிதம் வந்தது’ என்று மெல்ல ரசசியத்தை வெளியிட்டார் பிள்ளை.

‘அடடே, இவ்வளவு நேரம் ஒளிச்சு வச்சிட்டீங்களே? ... ஆனாலும் இப்படி வெட்கப்படக்கூடாது நீங்க, பையன் யோக சாதகக் காரன்தான். அப்படிச் சொல்லுங்க, ஒரு யோசனை தோணுது?’

என்ன? என்றார் பிள்ளை.

‘ரெண்டுபேரும் மாராந்தைப் போவோம். கையிலே இருக்கிறதை எங்கிட்டத் தாருங்க. அடுத்த கடைசி வண்டி பத்தரைக்கு இருக்கு - இங்கே வந்திருதேன். ராத்திரியே கண்டு பேசி வைக்கிறேன். கார்த்தாலே நீங்க வந்து கலந்து மேல் காரியம் யோசிக்கலாம். எப்படி?’

பிள்ளை கொஞ்சம் தயங்கிவிட்டு ‘சரி’ என்றார். “நாளைக்கு என்றால் செவ்வாய்க்கிளமை வேறே வருது. நீ சொல்லுறது சரி. சாலைக் குமாரசாமி கோயிலுக்கு எதிர்த்த சத்திரத்திலே, எதுக்கும் ஒரு ரூம் எடுத்துப் போடும். நாளை அங்கேதான் வந்து சேருவேன்” என்று தீர்மானமாகச் சொன்னார் மாராந்தையார்.

எட்டரைமணி ‘ஆலங்குளம்’ பஸ் ஸ்டாண்டை விட்டு நகர்ந்தது. மாராந்தை மாரியம்மன் கீழத்தெரு, பிள்ளை வீட்டு வாசலில், இரவு ஒன்பதரை மணிக்கு வில் வண்டி ஒன்று தயாராக நின்றது. வண்டிக்காரன் பக்கத்துக் கடையில் அவசரம் அவசரமாக விளக்கை ஏற்றிக் கொண்டிருந்தான்.

பிள்ளையும் ஆவுடை நாயகமும் வெளியே வந்தார்கள்.

‘நாளைக் காலையிலே தவறாம புறப்பட்டு வாருங்க. கைவசம் கூட ஒரு நானூறு ஐஞ்னூறு இருக்கட்டும். எலும்புத் துண்டு வீசவேண்டியிருக்கும்.”

பிள்ளை லேசாகச் சிரித்தார்.

‘பையிலே கவனம். ராவேளை பாருங்க’ என்று எச்சரித்தார்.

வண்டிக்காரன் மாட்டைத் தட்டிக்கொடுத்தான். ஆவுடைநாயகம் வண்டிக்குள் ஏறிக்கொண்டான். வண்டி ‘ஜல் ஜல்’ என்ற சதங்கை ஒலியோட யூனியன் லாந்தல் வெளிச்சத்தைத் தாண்டி ஆலங்குளம் சாலைக்குப் போகிற செம்மண் தடத்து இருளில் மறைந்தது.

சற்று நேரம் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு வீட்டுக்குள் நுழைந்தார். “வைத்தியரைக் கூப்பிடப் போனவன் வந்திட்டானா?” என்று மைத்துனரைக் கேட்டார்.

“இல்லை” என்றார் மைத்துனர்.

“சாயங்காலம் நாடி எப்படி இருந்ததாம்.”

“தோஷம் இருக்கும் என்றுதான் சொன்னாரு, ரெண்டுநாள் கழிச்சாத்தான் அக்கா பொழைக்கிறது நெசம் இலண்ணாரு” பிள்ளைக்குத் தலை சுற்றியது. ‘பிரசவ பலஹீனம், வேறு ஒன்று மில்லை’ என்று தான் முதலில் நினைத்தது தவறு என்று தெரிந்தது “ஆறு மாசமாப் படுத்த படுக்கையாக் கிடந்த உடம்பு இம்புட்டாவது பெலம் இருந்ததே? குறையும் சாலைக் குமாரசாமிதான் காப்பாத்தணும். நாம்பளா நெனச்சா ஒண்ணொண்ணை செய்கிறோம்” என்றார்.

“ஆவுடை நாயகம் எங்கே வந்திட்டுப் போறான்?”

“ஆவுடை நாயகமா?.... ஒரு ஐஞ்ஞூறு கைமாத்துக்குக் கேட்டான். ‘அவசர காரியம், நாளைச் சாயங்காலம் வாங்கிக்கிடுங்க’ அப்படியன்னான். குடுத்தனுப்பினேன்.

“ஒங்க கையிலே ஐஞ்ஞூறுதான் இருக்குன்னு சொன்னீகளே” வீட்டிலே இப்பிடி இருக்கிறபோது, கையிலே இருக்கிறதைத் தூக்கிக் குடுத்துட்டா, அவசரத்துக்கு என்ன செய்கிறது? எங்கிட்டயும் காத்துட்டு இல்லை அட, ஒரு லாபத்தைப்போல் நஷ்டமின்னா...

பிள்ளை இருந்த இடத்திலேயே அதிர்ந்தார். மைத்துனர் வார்த்தையை, இருட்டிலே நழுவ விட்டு, விட்டு மெல்ல எழுந்து கூடத்தில் விரித்த ஜமக்காளத்தில் தலையைச் சாய்த்தார்.

நினைவு என்ற புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்பி மொய்க்க ஆரம்பித்தன. படுக்கை கொள்ளாமல் அங்குமிங்கும் புரண்டார்.

வீட்டுக்குள்ளிருந்து, குழந்தை ‘குவாகுவா’ என்று அழுகிற சத்தம் வந்தது. அந்தச் சத்தம், அவர் மனப் புண்களில் மருந்து தடவி வாழைக் குருத்தால் ஒற்றியது போன்ற சுகத்தைக் கொடுத்தது. அதைக் கூர்மையாக செவிகுளிரக் கேட்டபடி படுத்திருந்தார் பிள்ளை. மைத்துனரும் வைத்தியரைக் கூட்டிக்கொண்டு பதினோரு மணிக்கு வந்து சோந்தார். கோமதியம்மாளுக்குப் பிரக்ஞை தப்பிவிட்டது. வைத்தியர் நாடியைச் சோதித்து விட்டு ‘பார்க்கலாம்’ என்றார்.

"குழந்தைக்குப் பாலூட்ட வேறு யாரையாவது ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அவர் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.

பிள்ளைக்குத் தூக்கம் வரவில்லை.

இரவு மூன்று மணியிருக்கும். மைத்துனர் வந்து அழைத்தார். 'அக்கா உங்களைப் பார்க்கணும்மிங்கிறாள்."

கோமதியம்மாள் படுக்கையில் வதங்கிக் கிடந்தாள். சிறிது பிரக்ஞை இருந்தது. சோகம் செறிந்த அவள் முகத்தில் ஒரு புதிய ஒளி ரேகை விட்டிருந்தது.

காத்தபெருமாள் பிள்ளை பக்கத்தில் உட்கார்ந்தார். கோமதியம்மாள் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முனைந்தது அவருக்குப் பொறுக்க முடியவில்லை.

மெல்ல அவள் கைகளை எடுத்துப் பற்றிக்கொண்டு 'கோமதி, உனக்கு என்ன வேணும், சொல்லு' என்றார்.

அவள் பேசாமல் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நாக்கு எழவில்லை அவ்வளவுதான். பிரக்ஞை மறுபடியும் ஒளிந்துகொண்டது.

வீட்டுப் பெண்டுகள் பொருமிக் கண்ணீர் விட்டார்கள். மைத்துனர் வாயில் துண்டைக் கொண்டு மூடியபடி விம்மினார்.

'இங்கே அழக்கிழக் கூடாது யாரும்!" என்று தைரியஞ் சொல்லிவிட்டு கூடத்துக்குப் போனார் பிள்ளை.

கோமதி போகிறாள். இருந்திருந்தால், பையனை வளர்த்துப் பார்ப்பதில் ஒத்தாசையாக இருந்திருப்பாள். ம்.... அது ஒன்றுதான் அவளுக்குக் குறை... வேறு என்ன? அவள் மகராஜி' என்று பற்பல நினைவுகள் அவரைச் சூழ்ந்தன.

விடிந்து, செவ்வாய்க்கிழமை கால் வைக்கிற நேரத்தில், கோமதியம்மாள் புறப்பட்டுப் போய்விட்டாள்.

ஊரார் வந்தார்கள். வீட்டில் ஒரே அழுகையும் அமளியுமாக ஆயிற்று. பிள்ளைக்குக் காரியம் ஓடாமல், அதிர்ச்சியில் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தார்.

'பெண்மக்க'ளுக்குச் சொல்லியனுப்பினார்கள். பாவூரிலிருந்தும் பாளையங்கோட்டையிலிருந்தும் அவர்கள் வந்துதான் 'எடுப்பார்'கள்.

மைத்துனர் செண்பகராம பிள்ளை, பண்ணை வீட்டாரிடம் போய் ஐஞ்ஞூறு ரூபாய் கைமாற்று வாங்கிக் கொண்டு வந்ததாகப் பிள்ளையவர்களிடம் நடுவில் தெரிவித்துக்கொண்டார்.

ஒன்பது மணிக்குத் தந்திச் சேவகன் வந்தான்.. 'உடனே புறப்படவும்' என்று ஆவுடைநாயகம் கொடுத்திருந்தான். "ஹ்ம்... என்று சிரித்தார் பிள்ளை.

பதில் தந்தி கொடுப்பது முடியாதாகையால், நம்பிக்கையான ஒரு ஆளைப்பிடித்து "வீட்டில் துக்கம். கோமதி தவறிப் போனாள். காரியத்தை இப்பொழுதுக்கு நிறுத்தி வைக்கவும்" என்று சூசுகமாக ஒரு குறிப்பைக் கொடுத்தனுப்பினார்.

"மனைவியைப் பறிகொடுத்த மனிதனுக்குக் கவலையைப் பார்த்தீரா?" என்று ஊரார் தமக்குள் 'கசமுச' என்று பேசிக்கொண்டார்கள்.

'எல்லா வாரிசு பிறந்திருக்கிற தெம்புதான்' என்றார் ஒருவர்.

காடேற்று முடிந்தது. பிள்ளையின் அதிர்ச்சியில் பெரும்பகுதி நீங்கிவிட்டது. பழையபடி நான்கு நாட்களுக்கு முன் வேலை செய்ய ஆரம்பித்த யந்திரம் தன் முழு வேகத்துடன் சுழன்றது. குழந்தை- குழந்தை- மகன்- என்ற ஒரே நினைவு அந்த இயந்திரத்தை அவருடைய நெஞ்சு என்ற பழைய கொட்டகையில் வைத்து முடுக்கிப் பெரு முழக்கத்தோடு ஓட்டிற்று. கொட்டகை அதிர்ந்து விழுந்துவிடுமோ என்று பயப்படும் படியாக இருந்தது, அந்த பூத இயந்திரத்தின் அமானுஷ்யத் துடிப்பு.

அவருடைய மூத்த மகள் தன் தம்பியைத் தூக்கி வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் அழுது அழுது வீங்கியிருந்தன. பக்கத்தில் இளையமகள் புட்டிப் பாலைத் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

இரு பெண்மக்கள் மீதும் பிள்ளைக்கு ஒரு வெறுப்பு உண்டாயிற்று. 'இவர்கள் இரண்டுபேரும் வீட்டைவிட்டு நகர்ந்தார்கள் ஆண் குழந்தையும் பிறந்தது' என்ற நினைப்புத்தான் காரணம்.

மைத்துனரைக் கூப்பிட்டார், குழந்தையைக் கவனித்துக்கொள்ளும் படியும், தான் திருநெல்வேலிக்குப் போய்விட்டு 'பதினாறு'க்குள் வந்து விடுவதாகவும் சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

கையில், சொந்த வீட்டை அடமானம் செய்து வாங்கிய ரூபாய் ஆயிரமும் சொச்சமும் இருந்தது.

சத்திரத்து அறைக்கு வந்து சேர்ந்தார்; அங்க ஆவுடைநாயகம் தூங்கிக்கொண்டிருந்தான். 'தம்பி, தம்பி' என்று கதவைத் தட்டினார். அவன் விழித்துக் கொண்டு கதவைத் திறந்தான்.

"வாங்க அண்ணி காலம் ஆகிப்போச்சு போலிருக்கு? ம்... கடைசி காலத்திலே விட்டுட்டுப் போயிட்டாங்க"

"... அவ கதை முடிஞ்சிது, எல்லாம் அவன் பார்த்துக்கிட்டிருக்கான். எதிர்த்தாப்பிலே."

"குழந்தை நல்ல இருக்கில்லா?"

"ஏதோ இருக்கிறான், அவன் ஒருத்தன் பொழைச்சுக் கிடந்தாப்போதும், மத்த எல்லாம் கவிழ்ந்து போனாலுந்தான் என்ன?"

"- நாம் யாருக்கு என்ன அநியாயம் செய்தோம், அப்படி விதிவந்து சூழ ! உங்க தாத்தா காத்தபெருமாள் பிள்ளை இருந்த கியாதிக்கு, அவர்

பேர் சொல்ல ஒங்க குடும்பத்திலே, இப்பத்தான் பொறந்திருக்கிறான். இது தான் தெய்வசங்கல்பம் என்கிறது."

"... மேல வீட்டுப் பாட்டையாவும் அப்படித்தான் சொன்னாரு. 'புள்ளை உங்க தாத்தாவை உரிச்சு வச்சாப் போல இருக்கான். பயதத்துக்களைத் தாண்டி தீர்க்காயுசாக் கிடப்பான்னாரு' என்றார். ஏதோ? நாம் நெனச்சபடியா எல்லாம் நடக்கு?"

"இப்ப பாருங்க, அன்னைக்கு, நான் ஒங்க வீட்டிலிருந்து புறப்படறப்போ, இப்படி நீங்கவரத் தாமசப் படும், இங்கே கொடுத்த அச்சாரம் முங்கிப்போகமின்னு கனவிலேயும் நெனச்சா இருந்தோம்?"

"என்ன தம்பி, விவரமாச் சொல்லு?"

"திங்கக்கிழமை ராத்திரியே புள்ளியைக் கண்டு பேசி ஆயிரத்தை அச்சாரமாகக் குடுத்தேன், 'சி.ஐ.டி. தொந்தரவு பலமாக இருக்கு. நீங்க சரக்கை நாளை ராத்திரிக்குள்ளே 'டெலிவரி' எடுத்துக்கிடணும்' அப்படிண்ணாங்க. நீங்க வருவீக, வந்ததும் தொகையைக் கட்டிப்புட்டு, சரக்கை அய்யர் கிட்டங்கியிலே தள்ளி செக்'கை வாங்கிக்கிடலாமிண்ணு பிளான் போட்டிருந்தேன், காலையிலே ஒங்களைக் காணலை. தந்தியைக் குடுத்தேன். பதில் தெரிஞ்சதும் அப்படியே அசந்து போய்ட்டேன். இதுக்குள்ளே போலீஸ், சி.ஐ.டி. காரனுக்கு உளவுதெரிஞ்சி மும்மரமாக இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். ஒண்ணும் ஓடலை, இங்கே வந்து பேசாமப் படுத்திட்டேன். நீங்க குடுத்த அஞ்னூறு என் கையிலிருந்த அஞ்னூறு ரெண்டும் மண்ணாய்ப் போச்சு.'

பிள்ளை பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார். பணம் பறிபோன அதிர்ச்சி அவர் நெஞ்சை ஒரு குலுக்குக் குலுக்கிற்று.

'ஏன் மண்ணாய்ப் போச்சு என்று வாயைப் பொத்திக்கிட்டு உட்காரணும்? போலீஸிலே எழுதிவைப்போம். ஏமாளிப் பயல்னு நெனச்சாங்களா?"

ஆவுடை நாயகம் சிறிது சிரித்தான். பிள்ளைக்கு கோபம் வந்தது. "நீங்க, காரியத்தினுடைய வகை தொகை தெரியாதமாதிரி பேசுறீக, ஏன் குடுத்தே, எந்த சரக்குக்கு குடுத்தே, 'பெர்மிட்' இருக்கா? இப்படி கேள்வி வளைச்சுகிட்டுவரும்' வீண் தொந்தரவு, அகப்பட்டுக்கிண்டா, அவமானம் வேறே."

'இதெல்லாம் தெரிஞ்சுதான் என்னை இளுத்துகிட்டு வந்தியா?"

"தெரியாமல் என்ன?..... ஒங்க தாமசத்தினாலே காரியம் குட்டிச் சுவராகப் போச்சு, இல்லாட்டா, ஒரு லக்ஷம் அடிச்சிரக்கலாமே! ஆசை இல்லாவிட்டால், தைரியம் வருமா? ஏதோ நம்பிக்கை வச்சுத்தானே, பணத்தைத் தந்தீங்க எங்கிட்ட."

ஆவுடை நாயகத்தை அந்த அறையிலேயே கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொன்றுவிடலாமா என்று ஒரு எண்ணம் தோன்றிற்று

பிள்ளைக்கு. "சீ-கொலைகாரன் மகன் என்றல்லவா தன் குழந்தையைப் பழிப்பார்கள்' என்ற அச்சம், ஆத்திரத்துக்கு அறிவுவிலங்கு பூட்டியது.

"...சரி, ஆவுடைநாயகம், போனதை எண்ணி என்ன செய்ய? இருக்கிறதைப் பார்ப்போம். மேற்கொண்டு ஏதாவது வழியிருக்கா? கிட்டங்கி அய்யருகிட்ட கேட்டா இப்படிச் சொல்ல மாட்டாரா?"

"அவனா? அவன் பெரிய கொள்ளைக்காரனாச்சே அதிலேயும் இந்தத் தடவை ரொம்பக் கள்ளப்பட்டுப் போயிட்டான். இனிமேல் அவனை வழிக்குக்கொண்டுவருகிறது என்றால் அசாத்தியந்தான்!"

"எதுக்கும் ஒரு அஞ்ஞூறு ரூபாயைக் கொண்டு காட்டினால், பய வலையிலே விழுவானா மாட்டானா?"

ஆவுடைநாயகம் நிமிர்ந்து உட்கார்ந்தான். "கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்யணும்! பய, இந்த ஆவுடைநாயகம் கண்ணியிலே விழாம எங்கே போயிடுவான்?... அப்போ, நீங்க ரூபாய் சகிதம் தயாராத் தான் வந்திருக்கியண்ணு சொல்லுங்க"

தான் விதித்த கண்ணியில் ஆவுடை விழுந்துவிட்டது என்று நிச்சயப்படுத்திக் கொண்டார் காவனாபிள்ளை.

'எதுக்கும் தயாராத்தான் இருக்கேன் நீ புறப்பட்டா எனக்கு காரியம் முடியும்ணுதான் தோணுது. அஞ்ஞூறு பாதாளமட்டும் பாயுமே, தம்பீ.

"ம்... அஞ்ஞூறா?.. அய்யனை நீங்க லேசுப்பட்ட ஆளுண்ணு நினைக்காதிங்க! எமன்கிட்ட கருப்பு மார்க்கட் பண்ணினவன் அவன்?

'நம்மகிட்ட பண்ணுகிற மாதிரிதான்"

"ஆயிரத்துக்குக் கொறைஞ்சு அவனை மறுபடியும் நாடமுடியாது. யோகம் இருந்தால் பெரிய ரூபா நாலுக்கு ஒரு தட்டுத்தட்டலாம்.

"சரி, ஆயிரமே வச்சுக்க. இடம் எது?"

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஆவுடைநாயகம் பிள்ளை காதுக்குள் இட ரகசியத்தை உபதேசித்தான்.

"சரி நீ போ. மிச்சத்தைக் கையிலே எடுத்துக்கிட்டு, நான் சரியாக பதினொரு மணிக்கு வாறேன்".

ஆவுடை நாயகம் பணத்தை வாங்கிக்கொண்டு புறப்பட ஆயத்தமானான்.

மறுநாள் காலை பத்து மணி வெயில் சுள்ளென்று அடித்தது. வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்து அறையில் கிடந்தது. பிள்ளை எழுந்து

சோம்பல் முறித்துக்கொண்டு அதை எடுத்தார். அவருடைய முகத்தில் விவரிக்க முடியாத வைராக்கியமும் கொடுமையும் குடி கொண்டிருந்தது. கடிதத்துக்குள் என்ன சேதி இருக்கிறதோ என்ற சோதனையில் மனம் இறங்கியது கைகள் கடிதத்தை உடைக்கத் தயங்கின.

"குட்மார்னிங்' என்று ஒரு ஸல்யூட் அடித்தான் எதிரே நின்ற போலீஸ் ஜவான். அவனை எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது ஒரு துண்டுக் கடிதத்தை நீட்டி விட்டி அவன் போனான்.

கடிதம் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டரிடமிருந்து வந்தது. நெடுநாளாக நடந்துவந்த கூட்டுறவுக் கொள்ளை மார்க்கட் நபர்களைக் கையும் களவுமாய்க் கண்டு பிடிப்பதில் உதவிசெய்ததற்காக சொந்த ஹோதாவில் மிகுந்த நன்றி தெரிவித்திருந்தார். அதோடு கவர்ண்மெண்ட் வெகுமதிக்கும் சிபாரிசு செய்திருப்பதாகக் கண்டிருந்தது.

கடிதத்தைக் கிழித்துக் குப்பைத்தொட்டியில் போட்டார் பிள்ளை. அடுத்த கடிதத்தை உடைத்தார். அதை எழுதியது பிள்ளையின் மூத்த மகள்.

பதினாறு விசேடம் கழிந்ததும் தம்பியைத் தானே எடுத்துக்கொண்டு வளர்க்கத் தீர்மானித்திருப்பதாகவும், அதனால் அவர் தன்னோடு வந்து, வீட்டில் இருக்கவேண்டுமென்றும், தன் மாப்பிள்ளையும் இது விஷயத்தில் மிகுந்த கவலையோடு இருப்பதாகவும் எழுதியிருந்தாள். அதோடு தங்கச்சி சிறியவள் என்பதனால், அவள் பேச்சைக் கேட்டு தம்பியை அவள் வளர்க்கும்படி விடலாகாதென்றும் எழுதியிருந்தாள். கடைசியாக, தம்பி குமாரஸ்வாமிக்கு இப்பொழுது புட்டிப்பால் கரைத்துக் கொடுத்து வருவதாகவும், திருநெல்வேலியிலிருந்து நாலைந்து பால் புட்டிகள் கட்டாயம் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று சொல்லி முடித்திருந்தாள்.

பிள்ளை கடிதத்தை முழுவதும் படித்து நிமர்ந்தார் அவர் நெஞ்சில் ஓடிய பூதாகாரமான இயந்திரச் சுழற்சி ஒரு வலிப்பு வலித்துக் குரூரமாகச் சத்தமிட்டு வேகத்தை நிறுத்தியது. அது இரைந்துகொண்டிருந்த கட்டிடம் நொறுங்கிக் குமைந்தது. என்றாலும் இத்தனைநாள் ஓடியதால் வந்த வேகத்தில், சக்கரம் தலைகிறங்கிச் சுழன்று கொண்டிருந்தது.

பையில் சில்லறையை எண்ணிப் பார்த்தார். சரியாக ஆறணா இருந்தது. இங்கிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு ஓரணா. அங்கிருந்து மாராந்தை அஞ்சனா இதைச் செலவழித்துக்கொண்டு போகப்போகிறது எங்கு? வீடா அது?

அடுத்த அறையில் கல்பானந்த யோகிக்குப் பிறகு, ஹனும ஜோஸ்யர் ஒருவர் இருந்தார். அவரிடம் அஞ்சணாவைத் தட்சிணை வைத்துக் கையை நீட்டினார் காவன்னா பிள்ளை.

"புத்திரன் ஜனனம், வேளை நீசம், அப்பனைத் தெருவிலே நிறுத்தி ஈசவரானாக்கி அழகு பார்க்கும்" என்றார் ஹனும ஜோஸ்யர்.

கைய வெடுக்கென்று பறித்துக் கொண்டு சாலைக் குமாரஸ்வாமி, கோயிலுக்குள் நுழைந்தார் மாராந்தை காத்த பெருமாள் பிள்ளை.

"குமாரசாமி, வந்துவிட்டேன்" என்றார். வேகம் மங்கித் தள்ளாடிய இயந்திரம் நின்றது. நெஞ்சு நொறுங்கி விழுந்து அதை மூடிற்று.

தாயாருக்கு ஈமக்கொள்ளி வைத்த மதலை தகப்பனாருக்கும் 'கொள்ளி' வைத்தது. சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தது பிறகு என்ன செய்யும்?

முல்லை -12

வீணா

லா. ச. ராமாமிர்தம்

வாசற்கதவைத் திறந்து அவள் மகன் உள்ளே நுழைந்து மறுபடியும் கதவைத்தாளிடும் சப்தம் கேட்டது. ஆயினும் அவள் எழவில்லை. அவள் கைகால்களில் உயிரில்லை.

கூடத்துக்கு வந்து சட்டையைக் கழற்றி சுவர் ஆணியில் மாட்டினான். அவன் முகத்திலிருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. உள் உணர்ச்சிகள் முகத்தில் வெளிக்காட்டாவண்ணம், வெகு ஜாக்கிரதையாய் அவைகளை உள்ளுக்கே விரட்டியடித்திருந்தான்.

"அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தாய்விட்டது-". குரலை அமைதியாய் வைத்துக்கொள்வதில் அவன் முழுமுயற்சியும் செலுத்தியிருந்தான்.

'அவரை ஜாக்கிரதையாய் கவனித்துக் கொள்வார்கள் என்றே தோன்றுகிறது. ஏற்பாடெல்லாம் நன்றாயிருக்கிறது. அவரைத் தனியறையில்தான் வைத்திருக்கிறார்கள். வாரத்திற்கொருமுறை பார்க்கும் சீட்டு வாங்கி வந்திருக்கிறேன். நீ வரும் ஞாயிற்றுக் கிழமை போய்ப் பார்க்கலாம். அதற்குள் கொஞ்சம் வேகம் தணிந்தாலும் தணியும். ஒன்றும் கவலை வேண்டாம் என்கிறார்கள். அம்மாதிரி எத்தனை பார்த்திருப்பார்கள் அவர்கள்! அவர்களுக்குத் தெரியாததா என்ன?-

அவன் அவளுக்குத் தைரியம் கூறும்விதம் அவளுக்கே உள்ளூர வியப்பாயிருந்தது. தாயும் அவள் பெற்ற பிள்ளையே ஆயினும் ஒருவரையொருவர் இப்படி ஏமாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இருவருமே யறிவர், தைரியவார்த்தைகள் எவ்வளவு பயனற்றவை என்று, ஆயினும் இம்மாதிரிப் புளுகுகளும், வெறும் வார்த்தைகளின் அர்த்தமற்ற ஆதரவும்தான் உயிர்ச்சுமையின் ஊன்றுகோல்கள். ஒவ்வொரு சமயம் உயிர்ப்பாரத்தடியில் மனம் நசுங்குகையில், இம்மாதிரிப் பொய்கள்தாம் நம்பிக்கையையூட்டி, பாரம்தாங்கும் பலத்தைக் கொடுக்கின்றன!

அவள் பிள்ளை தாழ்வாரத்தின் கைப்பிடிச்சுவரின் மேல் ஏறி உட்கார்ந்திருந்தான். விசாரமும் வயிற்றுப்பிழைப்பின் வேதனையும்,

முகத்தில் வரிகளை உழுது, முன்மண்டையைச் சற்று வழுக்கையடித்திருந்தாலும், மொத்தத்தில் அவன் சற்று அழுத்தமான பேர்வழிதான். அவளுடைய தைரியமே அவன்தான். இருந்தாலும்...

மீண்டும் அவன் பேச்சின் தொனி அவள் காதில் விழுந்தது. "நாம் இரண்டொரு விஷயங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. முதலில் இந்த வீட்டைக் காலிசெய்யவேண்டும்"-

(எத்தனை வருஷங்களாய் இங்கு குடியிருந்திருப்போம் - அவளுக்குச் சரியாய் ஞாபகமில்லை. கலியாணமாகி, புக்ககம் புகுந்ததே இந்த வீட்டில்தான். இப்பொழுது அவள் பிள்ளைக்கு 23, 24 வயதாகிறது (அதற்குள்ளேயே மண்டையில் வழுக்கை தட்டியிருந்தாலும்)- அதற்கு முன்னால் அவள் மாமனார்-அவருக்குமுன் அவர் தகப்பனார் அதற்கும் முன் அவர் தகப்பனார் - இங்கு வாழ்ந்திருக்கிறார்கள்.)

"இன்னும் நமக்குத் தேவையில்லாத சாமான்கள் எவ்வளவோ இருக்கின்றன - அதையெல்லாம் விற்றுவிட வேண்டும்..."

(ஆம், எவ்வளவோ விற்றுவிட்டபோதிலும் இன்னமும் எவ்வளவோ இருக்கின்றன - பரம்பரையாய் வழங்கிவந்த சாமான்கள் - பட்டுப் பீதாம்பரங்கள் - உருமால்கள் - முழு அகலத்திற்கு சரிகைபோட்ட அங்கவஸ்திரங்கள் - ரத்னக் கம்பளங்கள் - பொற்பதக்கங்களை விற்றாய்விட்டது - உக்கிராண உள்ளில் இன்னமும் இரண்டு பெட்டிகள் நிறைய சாமான்கள் திணறிக்கொண்டிருக்கின்றன.)

"அப்புறம் அம்மா-இப்பொழுது நான் சொல்வது கொஞ்சம் சிரமமான காரியந்தான் - எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்"

அட! எவ்வளவு சுலபமாய்ச் சொல்கிறான். அவள் பிள்ளை கெட்டிக்காரன்தான். அழுத்தம்தான்!

சற்றுநேரம் கழித்து அவன் சட்டெனக் கைப்பிடிச் சுவரின் மேல் குந்தி உட்கார்ந்திருந்த நிலைகளைந்து எழுந்தான்.

"நாளைக்காலை ஏலக்காரனை வரச்சொல்லியிருக்கிறேன், சாமான்களைப் பார்வையிட, அதற்குள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து வை-" என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றான்.

அவள் பதிலே பேசவில்லை. உட்கார்ந்த இடத்தைவிட்டு எழவும் இல்லை. அவள் பிள்ளை முன்யோசனையாகவே எல்லாம் தயார் பண்ணிக்கொண்டு வந்துவிட்டான். ஆகையால் அவள் பேச இடமேயில்லை. அப்படியே இருந்தாலும் அவள் என்ன பேசப்போகிறாள்? அவள் பிள்ளை செய்வது சரிதான் என்று அவளுக்கே தெரியும். இருந்தும், இம்மாதிரி, இங்கேயே வளர்ந்து, உடலிலும் உள்ளத்திலும் ஊறிப்போன நினைவுகளையும் ஞாபகங்களையும், கரும்பலகையில் கிறுக்கியதை அழிப்பதுபோல், மறந்து, முற்றிலும் வேறான வாழ்க்கையைப் புதிதாய்த் தொடங்குவது அவ்வளவு சுலபமா? சாத்தியமா? அதுவும் அவள் வயதில்!

அதுவும் என்னென்ன நினைவுகள்! என்னென்ன அனுபவங்கள்! அவைகளைச் சிந்தனையில் பின்னோக்கும்போதுதான் அவைகளின் இன்பதுன்பங்கள், பட்ட காலத்தையும்விடப் பளிச்சென்று தெரிகின்றன. அம்மாதிரிப் பின்னோக்குகையில், காரியங்களின் சரி-தப்புகளைப் பற்றிய சந்தேகங்கள்தாம் அதிகரித்தன. ஓடும் தண்ணீரில் ஜலத்தை மொண்டு அமிழும் குடம்போல், தன்சிந்தனை யோட்டத்தில் அவள் அமிழ்ந்தாள்.

வீட்டுச் சுவர்களிலும், உள்ளும் வெளியும், கொல்லைப்புறத்திலிருக்கும் தோட்டத்து மரங்களிலும் இருள் இறங்கித் தேங்க ஆரம்பித்துவிட்டன.

மாலை இரவின் எல்லையுள் கடக்க ஆரம்பித்துவிட்டது.

2

அவள் புக்ககம் புகுந்தபொழுது வயது எட்டு, பாவாடையும் வெறும் சொக்காயும் அணிந்து வாசலில் 'பாண்டி' விளையாடும் வயதுதான். அந்தக்காலத்தில் வழங்கிய கெட்டி நகைகளை கழுத்துக்கனக்க, சொக்காயின் வெளிப்புறமாய் அணிந்திருந்தும் தாலிச்சரட்டை மாத்திரம் எல்லா நகைகளுடனும் சேரவிட நாணம்! அதைமாத்திரம் சொக்காயின் உள்புறம்விட்டு அணிந்திருந்தது இன்னமும் ஞாபகமிருக்கிறது-

அவள் மாமனார் இதே கூடத்தில் அம்மன் பெட்டிக்கெதிரே உட்கார்ந்திருந்தார். நெற்றியில் விபூதியும் கழுத்தில் ருத்திராக்ஷ கண்டியும் துலங்காது ஒருநாளும் அவரை அவள் பார்த்ததில்லை. அவள் கணவன் அவர் பக்கத்தில் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

'இங்கே வாம்மா, குழந்தை இப்படி உட்கார், பயப்படாதே. நான் உன்னை விழுங்கிவிடமாட்டேன்-எங்கே அம்மன்பேரில் இரண்டுப் பாட்டுப்பாடு கேட்போம்-உனக்குப் பாடவருமோ? எங்கே, உன் கையைக் காண்பி-''

அவள் கையைப்பற்றியபோது அவளுக்கு அந்தச் சின்ன வயதிலும் உள்ளூர பதைப்புத்தான். பெண்களுக்கு அமைவதைவிட சற்றுப் பெரிதாகவே அந்தக் கைகள் அமைந்திருந்தன. வீட்டுக் காரியம் செய்யும் கைகள் அவை. தோசைக்கல், கல்சட்டி வென்னீர் அண்டா இவைகளையெல்லாம் நன்றாய்க் கீறிச்சுரண்டி, பற்றுவிடப் பளிச்சென்று துலக்கும் கைகள், நயவேலைக்குகந்த கைகள் அல்ல அவை. சங்கராந்திக் கோலம்கூட சரியாய் இடத்தெரியாத கைகள், துணியைக் கிழிந்தவிடம் தெரியாமல் தைக்க இயலாத கைகள்-

'சரி சரி-ஏண்டா, இப்பவே உன் ஆம்படையாளுக்கு விரல் கரணைகரணையாய் முற்றின முருங்கைக்காய் மாதிரி யிருக்கிறதே! இது வீணை பிடிக்கும் கையல்ல - எல்லாம் உன்மாதிரி தான்-''

அவள் மாமனார் எப்போதுமே, சிரிக்கப்பேசும் விதமே தனிதான். சிரிப்பு உள்ளூரப் பொங்குகையிலேயே விளையாட்டாவா அல்லது

வினையாய்த்தானா பேசுகிறார் என்று சந்தேகம் உறுத்திக்கொண்டே இருக்கும்.

"சரி, பாடு - தைரியமாய் வாய்விட்டுப்பாடு - நீதான் கறுப்பாயிருக்கையே, உன் நாக்குக்கூட அப்படித்தானா என்று பார்க்கிறேன்-'

அவள் என்ன பாடினாள் என்று இப்பொழுது ஞாபகமில்லை. இத்தனை கேலியாட்டத்தில் சரியாய்ப் பாடவருமோ? மேலும் அவளுக்கு அப்பவே தெரியும், அவள் மாமனார் அக்காலத்து, தலைசிறந்த வித்துவான் என்று. அந்த வயதில் ஒருவிதமான பயிற்சியுமிலாது, ஏதோ வாய்வார்த்தையாய், தன் தாயிடம் அடுப்புக் காரியத்தினிடையில் கற்ற ஒன்றிரண்டு பாட்டை நெட்டுவருவாய் எத்தனை தடவையாயினும் அதே இடத்தில் அதே தப்பைப்பண்ணிக் கொண்டு வெளியே சுக்கக் தெரியுமேயன்றி வேறு ஒன்றுமறியாள். அதைக்கூட இப்பொழுது புதிதாய், அவருக்கெதிரில் பாடுகையில் திடீரென்று பாட்டின் நட்டநடுவில் வார்த்தைகள் மறந்துவிட்டன. வெட்கத்தாலும் பயத்தாலும் அழுகை வந்துவிட்டது. தணல்போல் கணகணக்கும் கண்ணீர் விழியோரத்தில் உறுத்த அனல்பறக்கும் முகத்தைக் கையில் புதைத்துக்கொண்டு விக்கிவிக்கி அழுதது இன்னமும் நினைவிருக்கிறது.

திடீரென்று இனிய இரகசியங்கள் பேசுவதுபோல், அவள் செவியில் இன்பநாதங்கள் புக ஆரம்பித்தன.

கால் தண்டையொலி கேளாதபடி உறி முறுக்கைத்திருட உள் நுழையும் செல்லக்குழந்தையின் திருட்டை, மறைந்து அனுபவிக்கும் தாய்போல், அவருக்கு இன்ப அதிர்ச்சி கண்டது.

நன்கு அஸ்தமித்த பின்னர், ஒன்றும் இரண்டுமாய் முளைக்கும் நக்ஷத்திரங்கள்போல் அவ்வொலித்தெறிப்புக்கள் அவளையுமறியாது, அவள் தலையை நிமிர்த்தின.

அவள் மாமனார் சுவரோரமாய்ச் சாத்தியிருந்த வீணையைக் கையில் தாங்கிக்கொண்டு, ஸ்வரக்கட்டுக்களை மெதுவாய் வருடிக் கொண்டிருந்தார். என்ன ஆச்சரியம்! அவள் பாடின பாட்டை அவர் அப்படியே வாசித்துக்கொண்டிருந்தார். சட்டையுரித்த பாம்புபோல், அவள் பாட்டு புத்தழகுபெற்று, வீணையினின்று புறப்படுவதை அவள், கன்னத்தில் வழிந்த கண்ணீர்காய, பிரமிப்புடன் கவனிப்பதைக் காண அவருக்கு ஆனந்தமாயிருந்தது. கண்ணைச்சிமிட்டிப் புன்னகை புரிந்தார்.

'பலே! அழுதமூஞ்சி சிரிச்சுதா? - கழுதைப்பாலைக் குடிச்சுதா?" அவள் மாமனைக்காட்டிலும் நல்லவருண்டோ என்று அவள் அப்பொழுது கனிந்த மனத்துடன் உருகியது இன்றுபோல் இருக்கிறது.

சின்னக்குழந்தைகளைக் திருப்திசெய்யவோ, சந்தோஷப்படுத்தவோ என்ன வேண்டும்? ஒன்றுமே வேண்டாம்- ஒரு சொல், ஒரு புன்னகை, ஒரு கண் சிமிட்டு - எதேஷ்டம்.

3

அவள் மாமனாரின் உருவம் அவள் கண்முன் வந்துநின்றது. பறங்கிப் பழச்சிவப்பு தலையில் கட்டுக்குடுமி. மூக்கு, கிளிமூக்கு மாதிரி நுனியில் சற்று வளைந்து நுனி கூரிட்டிருக்கும். பிரதி திங்களும் வியாழனும் சனியும், இஞ்சியும் மிளகாய்ப்பழமும் காய்ச்சிய எண்ணெய் ஸ்னானம். இரவு தவறாது பால். மேனி அப்படியே மெருகிட்டிருக்கும். மாதத்திற்கு நாலைந்து கச்சேரிகளுக்குக் குறைவில்லை. வெளியூரிலிருந்தால்தான் அவளுக்குத் தெரியப் போவதில்லை. உள்ளூரிலேயே வாய்த்துவிட்டால், அவர் படுத்தும் பாடு தெரியும். அன்றுமுழுவதும் வீடு அமர்க்களந்தான். சாதாரணமாய் இனிய சுபாவமானாலும் அன்று கொஞ்சம் சிடுசிடு வென்றுதானிருப்பார். காலை மாலை வீணையை எடுத்து வைத்துக்கொண்டு கம்பிகளுக்கு மெழுகைப்போட்டு உருவித்துடைத்து, இடுக்குகளில் துணியைத் திரித்துச் சொருகிக் கொடுத்துத் தும்பு தூசியில்லாது தட்டிக்கொண்டிருப்பார். கச்சேரி மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமென்றால் இரண்டுமணிநேரம் முன்னதாகவே அலங்காரம் பண்ணிக்கொள்ளத் தன்னறைக்குப் போய்விடுவார். அங்கிருந்து கொண்டே, "அதைக் காணோம், இதைக் காணோம், வைத்தது வைத்தவிடத்தில் இந்த வீட்டிலிருக்கிறதில்லை என் அறைக்குள் யார் நுழைகிறது - ஏன் நுழைய வேண்டும்? - வீட்டுக்கு ஒரு பிள்ளை - வயதான பிள்ளை அதுவும் கலியாணமான பிள்ளையாயிருக்கிறதிலேயே இவ்வளவு அல்லோல கல்லோலமாயிருந்தார், இன்னும் நாலுகுழந்தைகள் இந்த வீட்டில் நடமாடுவதாயிருந்தால், இந்த வீட்டில் நான் இருக்கவே லாயக்கில்லை-" என்று எரிந்து விழுந்துகொண்டு வீட்டைத் தலைகுப்புறக் கவிழ்த்துக்கொண்டிருப்பார்.

நடுநடுவே- 'எங்கே அவள்? அடுக்குள்ளை ஒழித்துப் பெருக்கிக்கொண்டிருக்கிறாளா? என்னை அனுப்பிவிட்டு அதைப் பண்ணலாமே! ஏதோ நான் போய்ச் சம்பாதித்துக்கொண்டு வந்துகொட்டினால்தானே, ஒழித்துப்பெருக்க அவளுக்குச் சாமானிருக்கும்?" என்று இரைவார்.

மாமி முன்தானையில் ஈரக்கையைத் துடைத்துக் கொண்டு மாடிக்கு 'லொங்கு லொங்கென்று' ஓடுவது அவளுக்கு வேடிக்கையாயிருக்கும்.

பிறகு மாடியிலிருந்து ஒரு ஊர்கோலம் கிளம்பும். முன்னால் பட்டு உறைபோட்டு மூடிய வீணையை ஒரு சிஷ்யப்பிள்ளைதாங்கிக்கொண்டு ஜாக்கிரதையாக இறங்குவான். அப்படி யிறங்குகையிலேயே, உள்ளிருந்து "அப்பா, ஜாக்கிரதையாய்க் கொண்டுபோ. கீழே போட்டு என் பிழைப்பில் மண்ணைப் போட்டு விடாதே! -" என்று அவர் குரல் அதட்டும்.

அப்புறம் இன்னொரு சிஷ்யன் மற்ற உபகரணங்களுடன் இறங்குவான்.

அவன்பின் அவர், அவர் பின் மாமி, இப்பொழுது நினைத்தால் கூட அவர் மாடியிலிருந்து இறங்குவதை உருவகப்படுத்திக்கொள்ளலாம்.

அவர் மேலிருந்து இழையும் புனுகின் வாசனை குடலைக் குமட்டும். சிகையை உள்ளேவிட்டுக் கட்டிய தலைப்பாகையின் சரிகை பளபளவென்றிருக்கும். கழுத்துவரை பொத்தானிட்டு, முழங்கால்வரைத் தொங்கும் கறுப்பு அல்பாகா மேலங்கி, அதற்குமேல், ஒரு சாணகலச்சரிகையிட்ட பட்டு அங்கவஸ்திரம். அரையில் நன்றாய் பட்டை தீட்டிப் பஞ்சக்கச்சமாய்க் கட்டிய புதுக்கோடி வேஷ்டி. ஒவ்வொரு கச்சேரிக்கும் எப்படித்தான் ஒரு புதுவேஷ்டி இடையில் இலங்குமோ?

பரந்த நெற்றியில், உதிர இட்ட விபூதிமேல் ஜவ்வாதுப்பொட்டு, ஆளையே வண்ணானுக்கு போட்டாற்போல் அவ்வளவு சுத்தமாயிருக்கையிலேயே ஏதோ ஒரு சிறு தூசியை மார்மேலே கண்டு விட்டதாய் நினைத்துக்கொண்டு, அதை நாசூக்காய் இரண்டு விரல்களால் சுண்டிக்கொண்டே கீழிறங்குவார்.

அவர் தோற்றத்தை வியந்தவண்ணம், அவள் மாடிப்படியில் நிற்பாள்.

"என்னடி குட்டி! எப்படியிருக்கிறேன் நான்? நன்றாயிருக்கிறேனா நான்?" என்று சிரித்துக் கேட்டுக்கொண்டு போவார். தன்னை வெறுமெனே சீண்டுவதற்காக அவர் அப்படிக் கேட்கிறார் என்று அவள் முதலில் நினைத்துக்கொண்டிருந்தாள். அப்புறம் ஒருதடவை அவளையுமறியாமல் 'பேஷாயிருக்கேளே!" என்று அவள் சொன்னதும் அவர் முகம் தனியாய் மலர்ந்ததைக் கண்டதும், தன் குழந்தை அபிப்பிராயத்தையும் நிசமாகவே அவர் கோருகிறார் என்று அறிந்தாள். எவ்வளவு பெரியவரானாலும் இந்த அலங்கார விஷயத்தில் மாத்திரம் அவர் சின்னக்குழந்தைதான்.

ஒன்றிரண்டுதடவை அவருடைய கச்சேரிக்கு அவள் போயிருக்கிறாள்.

அந்த வயசில், அவருடைய வாசிப்பைப்பற்றி அவளுக்கு என்ன தெரியும்? (இப்பொழுதுதான் என்ன தெரியும்?) அவள் பாடும் பாட்டுக்களை அவர் வாசித்தால் அதைக் கேட்டு மகிழத் தெரியும். அந்தப் பாட்டுக்களையெல்லாம் வீட்டோடு மட்டும் வைத்துக் கொள்ளலாமே தவிர கச்சேரியில் கொண்டு வரலாமா?

ஆகையால், அவள் நினைவில் அப்பொழுது தங்கியது, அந்தக் கூட்டத்தில் எல்லோரும் கரகோஷம் செய்கையில் தானும் அத்தனை பேருடன் சேர்ந்து காரணம் தெரியாது கைதட்டிச் சிரிப்பதும், அவள் மாமனார் மேலங்கியில் தைத்திருக்கும் பதக்கங்களிலிருந்து காந்தவிளக்கில் தெளிக்கும் தகதகப்புந்தான்.

வாசியாத வேளையிலும் அவர் கை வெறிச்சென்றிருக்காது. தன்னைச் சுற்றியிருக்கும் சாமான்களை ஏதாவது சரிபடுத்திக் கொண்டிருப்பார். வீணையைத் துடைக்க ஒரு துணி. மூக்குத் துடைக்க ஒரு துணி. முகத்தின் வியர்வையைத் துடைக்க ஒரு துணி. பக்கத்தில் கலியாணப் பூசணிக்காயளவு பருமனுக்கு ஒரு வெள்ளிக் கூஜா. அவருக்கே 'மாப்பிள்ளை வித்துவான்' என்று கேலிப் பெயர் உண்டென்று அவளுக்கு அப்புறம் தெரியவந்தது.

கழுத்திலிட்ட பூமாலையைக் கடைசிவரைக் கழற்றமாட்டார். அது சம்பந்தமான ஒரு சிறு சம்பவம் அவளுக்கு இப்பொழுது ஞாபகம் வந்தது. ஒரு சமயம் கச்சேரிமுடிந்து எல்லோரும் சேர்ந்து, வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கையில், அவர் தன்மேலிருந்த மாலையைக் கழற்றி பிள்ளை கையில் கொடுத்து, அவளுக்கு போடச் சொன்னதும், அவர் வெட்கப்பட்டுக்கொண்டு மறுத்ததும் "போட்றா பயலே! உனக்கு அவளை கட்டிக்கொடுக்காதிருந்தால் குழந்தைக்கு நானே போடுவேனடா!" என்று பயமுறுத்தியதும் அவள் கணவன் வேண்டாவிருப்பாய்ச் கசந்துகொண்டு மாலையை அவள் கழுத்தில் போட்டதும் அவள் நாணமுற்றதும்... இந்நாட்களையெல்லாம் மறந்துவிடவேண்டும். கரும்பலகையில் கிறுக்கி அதை யழித்து வேறுவரைவதுபோல், அவ்வளவு சுலபமாய் மறந்துவிட வேண்டும். அவள் பிள்ளையின் 'லேசான' கட்டளை!

4

நாளாக ஆக, அவள் உடல் வாளிப்பு ஆக ஆக, வயது வளரவளர, அவள் 'அரசியலின்' எல்லைகளும் சுருங்க ஆரம்பித்தன.. எப்போதுமே எட்டு வயதுப்பெண்ணாய் இருக்கமுடியுமா?

ஆயினும் அவள் வாழ்க்கையின் இனிப்பு அதனால் மாறவில்லை. இப்பொழுது யோசித்துப் பார்க்கையில் அவளுடைய அந்நாட்கள் ஒரு இதம்போலவேயிருந்ததென்று சொல்லலாம். புக்ககம் வந்த பின் அறியாத வயதில் ஓடியாடித் திரிந்ததெல்லாம் ஒரு ராகத்தின் விஸ்தாரமான ஆலாபனைக்கொப்பிடலாம். பிறகு வயதிற்கும் காலத்திற்கும் அவள் படிந்து நடந்ததை அந்த ராகத்தின் இலக்கணங்களுக்கும் உகந்த தாளவரிசைக்கும் கட்டுப்பட பாட்டிற்கும் ஒப்பிடலாம். வயதின் பொறுப்புகள் அதிகரித்து, நடமாட்டத்தின் இடவசதி குறுகக் குறுக, தாளத்துள் வரவர நெருக்கமாய் விழும் ஸ்வரக்கொத்துப்போல், வாழ்க்கையின் பரபரப்பும், இனிப்பும் சுவைக்கச் சுவைக்க இன்பமாய்த்தானிருந்தது.

ஆயினும் - அல்லது ஆகையால்

முன்மாதிரி நினைத்தவிடத்தில் நினைத்தபடியெல்லாம் போகமுடியாது. மாமியுடன் அரைமுழப்பூவிற்கு ஆகாத்தியம் பண்ணமுடியாது. வலுவில் வந்து நிற்கமுடியாது. மாமனாருடன் முன் மாதிரி பேசிக் கொட்டமடிக்க முடியாது. வீட்டுவேலை ஆளைப் பின்னிவிடும். வித்துவானின் வீடாயிருப்பதால் நாலுபேர் வந்துபோய்க் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் ஆகாரம் தயாரிக்க வேண்டும்.

மாமனார் எவ்வளவு சம்பாதித்தாரோ அதற்கு மேலே செலவழித்தார். காரணம் காரணமில்லாமல், வீட்டில் சமாராதனைகளும், விருந்துகளும், நிலாச்சாப்பாடுகளும் நடக்கும். கூடத்துக்கெதிரில் குலுக்கிக்குலுக்கிக் கொட்டி நிரப்பிய நெல் குறையக் குறைய அவளுக்கு பகீர் பகீர் என்னும்.

(அவள் பிறந்தவிடம் அவ்வளவு வளமில்லை) இங்கோ தெரிந்தவர் தெரியாதவர் எல்லாரும் தின்றுவிட்டுப் போவார்கள்.

நாள்கிழமை வந்தால் வீடு ஒரே கோலாகலம்தான். கிழவர் தனக்கு ஆண்டு நிறைவு தவறாது கொண்டாடிக்கொள்வார். பிறகு அவர் முதல் குழந்தையின் முதல் ஆண்டு நிறைவு... அப்புறம் இரண்டு வருஷங்களுக்கப்பால் இன்னொரு குழந்தை- ஒரு பெண்.

அப்புறம் மூன்று வருஷங்களுக்கப்புறம் ஒரு பையன்.

கிழவர் குழந்தையைக் கையால் தொடக்கூட அஞ்சுவார்.

ரொட்டியின் உள்மாவுபோன்று தொட்டாலே அதுங்கிக்கொண்டு, இன்னமும் மூக்கென்றும் முழியென்றும் தனியாய்ப் பிரியாத உயிருள்ள சதைப்பிண்டத்தைத்தொட நேருகையில் அவர் முகத்தில் சிறு வெறுப்புத்தட்டும்.

'புழுக்கள்-! தொட்டாலே ஒட்டிக்கொள்ளுகிறதுகள்'- என்று கெளரவமாய்ப் பேசிவிட்டு, யாரும் தன்னைப்பார்க்க வில்லை என்று எண்ணிக்கொள்ளும்பொழுது சிசுவின் கன்னத்தை லேசாய் நிமிண்டுவது தனித்தமாஷாயிருக்கும்.

அவள் கணவன்...

அவள் கணவன், அவள் மாமனாரின் பொன்னிறத்தையும் பழிக்கும் தனிச்சிவப்பு. வெயிலில் ஒருமுறை வெளியில்போய் வந்து விடடாரெனில், முகத்தின் சிவப்பு சகிக்க முடியாது. தன் தகப்பனாரைவிட உடல்வளம் சற்றுக் குறைவாய்த்தானிருப்பார். தகப்பனாருக்குள்ள வாக்குச்சாலமும் கிடையாது. பிறக்கும் போதே பேச்சின் பயனின்மையை உணர்ந்தவர்போலும். சுபாவமாகவே அதிகமாய் வார்த்தையாடமாட்டார். எல்லோரும் சத்தம் போட்டு அரட்டையடித்துக்கொண்டிருக்கையில், அவர் மட்டில் தனியாய் உட்கார்ந்துகொண்டு, பேச்சின் வேடிக்கையை, முகத்தில் புன்முறுவலுடன் மௌனமாய் அனுபவித்துக்கொண்டிருப்பார்.

'காலம் முற்றமுற்ற, மற்றவன் கைக்கவளத்தைப் பிடுங்கித் தன்வாயில் போட்டுக்கொள்ளும், இந்தக்கலியில் இந்தப் பிள்ளை என்ன பண்ணப்போகிறது!' என்று அவர் மாமனார் வாய்விட்டு வேடிக்கை கலந்த வினையுடன் கவலைப்படுவார். செல்லப்பிள்ளை. நல்ல பிள்ளை. ஒரே பிள்ளை. நாள்கழித்துத் தவங்கிடந்து பெற்ற ஒரே பிள்ளை.

ஆயினும், அசைவற்ற புனலடியில் புழுங்கும் நீர்ச்சுழல் போன்ற அவள் கணவனின் ஆர்வத்தை அவர் வீணையில் செய்யும் அசுரசாதகத்திலும், தன் தாலியுறவின் அனுபோகத்திலும் அவள் நன்கறிவாள். வெறும் வார்தைகளில் வெளிப்பட்டு வீணாய்ச் செலவாகாத உயர்ந்த சரக்கு அது. இவ்வளவு பளிச் சென்று அவர் புத்திக்குப் படாவிடினும். அவள் புருஷனின் உண்மைச் சத்தை அவள் உள்ளுணர்வு அறியும்.

(தொடர்கதை; முற்றுப்பெறவில்லை)

முல்லை - 12

பரோபகாரம்

வல்லிக்கண்ணன்

பணப் பெட்டி. கணக்கு நோட்டு முதலிய வியாபாரச் சூழல்களில் கிடந்து புழுங்கிய உள்ளம் கொஞ்சம் விடுதலையை விரும்பியது. பெட்டியைப் பூட்டி விட்டு, நோட்டை மூடிவைத்து எழுந்து நின்று சோம்பல் முறித்துக்கொண்டார் சின்ன முதலாளி.

சின்ன முதலாளி என்று மற்றவர்கள் அழைப்பதன் மூலம் முதலாளி மகன் முதலாளி' என்றுதான் அறிமுகம் செய்துகொள்கிறார்கள். கடைப்பொறுப்பிலிருந்து தந்தைக்கு ஓரளவு விடுதலை அளிக்க வந்த புத்திர பாக்கியம் சோமநாதன். உழைக்கச் சோம்பல்தான். என்றாலும் உழைப்பு என்னும் பெயரால் பெட்டியடியையும் கணக்குப் புத்தகத்தையும் கட்டி மாரடிக்க வேண்டியிருந்தது. என்ன செய்வது! 'கூலிக்கு எவனையாவது பிடித்துக் குமாஸ்தாவாகப் போடுவதுதானே. பணம் இல்லையா என்ன!' என்று குமுறும் முதலாளி மனம் அடிக்கடி. 'ஊம். இப்படி வந்து இருந்துவிட்டுப் போறதனாலே செலவுக்குப் பணம் புரளுது' என்று அந்த மனமே சமாதானமும் கூறும்.

மேஜையடியை விட்டு முன்வாசல் பலகைமீது வந்து நின்ற சின்ன முதலாளி, 'டே, போய் ஜில்லுனு ஐஸ்போட்டுக் காபி வாங்கி வாடா!" என்று குரல் கொடுத்தார்.

இந்த விபரீத உத்தரவு அருகிலிருந்த நண்பனுக்கு வியப்பளிக்கவில்லை! இதெல்லாந்தான் அன்றாட வாழ்க்கையின் 'ஹாஸ்யங்கள்' என்பது அவனுக்குத் தெரியும். 'ஏன், சுடச் சுட கூல் டிரிங்க் வேண்டாமா, ஸார்!' என்று கேட்டு வைத்தான் கடையிலிருந்த வேறொருவன்.

"ஓ! பார்த்தாயா, மறந்து போனனேன். போயி வெறும் கூல் டிரிங்க் மட்டும் வாங்கி வா. ஜும் வேண்டாம். சுடச் சுடவும் வேணாம்" என்று இறுதி அறிவிப்பு விடுத்தார் .சோமநாதன், தமது பேச்சுத் திறமையை மெச்சிய புன்னகை தம் முகத்திலே படரும்படியாக.

வீதியில் புரண்ட பார்வை சட்டெனத் தாவியது, நடந்துவந்த பகட்டுடைக்காரி மீது. அவள் அந்தக் கடையை நோக்கித்தான் வந்து

கொண்டிருந்தாள். அவளையே கவனித்த சோமநாதன். தமது இடத்தில் வந்து அமர்ந்தார். யாராவது சாமான் வாங்க வரும் புள்ளியாக இருக்கலாம்!

தனி நடை நடந்துவந்து நின்றாள் அவள். வெயிலில் அடிபட்டு வதங்கிய அழகு மலர் போலச் சோபை குறைந்து தோன்றினாள் அவள்.

'ஓ, இவளா!' என்றது மனம், அறிமுக சம்பிரதாயங்களுக்கு அவசியம் இல்லை என்று காட்டி. அவளை அவருக்குத் தெரியும். அர்ஜுன ரசனை பெற்ற சின்ன முதலாளியைத் தெரியாத பகட்டுக்காரிகள் இருக்க முடியுமா அந்த ஊரிலே?

அவள் உணர்ச்சிக் கொதிப்பை மூலதனமாக்கி, உணர்ச்சிப் பரிவர்த்தனையை வியாபாரமாகக் கையாண்டு வாழ்க்கை நடத்தும் தொழிற்காரி. அவளுக்குப் பகட்டு தேவைதானே? நைஸாக அணி செய்திருந்தாலுங்கூட இயற்கை மெருகு இல்லாத காகிதப் பூப் போல இருந்தாள் அவள். தவம் வேண்டி, கர்ப்பக்கிருக இருளில் பதுங்கியுள்ள சிலையை நோக்கிப்பக்தி பண்ணும் அநாதை மாதிரி, கெஞ்சும் பாவம் தீட்டிச் சின்ன முதலாளியின் முகத்திலே விழி பதித்தாள்.

அவரை அவளுக்குத் தெரியும். விதவிதமலர்களை நாடித்திரிந்த முதலளித் தேனீ அந்த நந்தவனத்திலும் எப்போதாவது பறந்து திரிந்திருக்கலாம் தான்!

என்றாலும் அவளை அவ்வேளையில் அங்கு எதிர்பாராத சின்ன முதலாளி "என்ன- என்ன வேணும்?" என்று விசாரித்தார், சாமான்வாங்க வந்த வாடிக்கைக் காரர்களிடம் பரிமாறும் தொனியில்.

அவள் நின்ற சாயல் கலை எழில் சிந்தியது. ஜரிகை மின்னிய மேலாடைத்தலைப்பைத் தந்த வண்ண விரல்களால் நெருடியபடி, விரலின் நெளிவைக் கவனிக்கும் தாழ்ந்த கண்களை அடிக்கடி அவன் விழிகளில் பதித்துப் பின் மீட்டு, சோகம் பூசிய முகத்தில் சிறு நகை பூக்கச் செய்து நின்றாள் அவள்.

சிறு நேர மௌனந்தான் என்றாலும் வேதனை வளர்ப்பதாக இருந்தது. வீண் பிரச்சினைகளை எழுப்புவதாயும் இருந்தது. அதைக் குலைக்கச் சொல் உதிர்த்தார் மைனர். 'என்ன ஏதாவது சாமான் வாங்க வந்தியா? என்ன வேணும் சொல்லு!"

விழி வண்டுகளை அவர் முகத்தில் சுற்றவிட்டு அவள் சொன்னாள் தீனக் குரலில்: "ஒரு உதவி செய்யணும் அவசரமானது" என்று.

"என்ன?" என்ற திகைப்பு ஒலியாகியது அவரிடத்தில்.

"ஒரு உதவி. ரொம்ப நெருக்கடி. இல்லையென்றால் இங்கே வருவேனா?" அவள் மிதப்பிலே கண் வைத்துத் தூண்டிலை வீசுகின்ற மீன்பிடிப்போன்போல, அவரது முக மாற்றங்களை ஆராய்ந்தபடி திறமையாக விஷயத்தை வெளியிட்டாள்: "ரொம்ப அவசரம். ஆபத்துச் சமயம். நீங்கதான் உதவி செய்யணும்."

மைனருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. "விஷயத்தைச் சொல்லேன்" என்று கனன்றார்.

அவள் குறுநகையுடன் குழறினாள்: "வேறு யாரும் உதவி செய்வாங்க என்று தெரியலே. நீங்கதான்…"

"சரிதாம் புள்ளெ! சீக்கிரம் விஷயத்தைச் சொல்லு. கதை அளப்பானேன்?"

நழுவாத மேலாடையைப் பரபரப்புடன் இழுத்துவிட ஓடிய கை மைனரின் பார்வையைக் கவர்ந்தது. பின் அந்த வனப்புத் தோட்டத்தின்மீது மேய்ந்தது அவர் பார்வை. முகத்தில் பதிந்தது. கரு விழிகளில் என்னவோ காண முயன்றது!

அவள் சொன்னாள்: "அவசரம். எனக்கு ஐம்பது ரூபா வேணும்' எதிரொலி எதுவும் இல்லாததால் தொடர்ந்தாள்: 'எங்க அம்மா இறந்து போனா அவசியம் பணம் வேணுமே. யார் தருவா? அதனாலே உங்ககிட்டே வந்தேன்…"

'நான் மட்டும் பணம் தந்து விடுவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்றார் மைனர்.

'உங்களைப்பற்றி, உங்க உதவியைப்பற்றி, அறியாதவங்க உண்டா' நீங்க தருமராச்சே! அர்ஜுனனில்லையா நீங்கள் என்று சொல்லியிருந்தால் உண்மையாகத் தொனித்திருக்கும்! ஆனால் அவள் புகழ்ச்சி சரியானபடி வேலை செய்தது.

சோமநாதன் பெருமையாகச் சிரித்துக்கொண்டார், தம் நண்பனைப் பார்த்து. தாம் வள்ளல் என்று போற்றப்படுவது மதிப்புக்குரிய விஷயமில்லையா! இருந்தாலும் – "அம்பது ரூபான்னா சும்மாவா! நான் எப்படி புள்ளெ தர முடியும்? என்றது அவர் வாய். விழிக் கோணத்தில் தேங்கிய பார்வையும், மேலாடை நழுவிக் கிடக்க எழில் சிதறும் கோலமுமாய் ஒயிலாக நின்ற அவளை எடை போட்ட மனம் சொன்னது, 'உனக்காக இது கூடச் செய்யலேன்னா, பணம் இருந்துதான் என்ன பிரயோசனமடி குட்டீ!' என்று.

ஆனால் பிகு பண்ணாவிட்டால் மதிப்பு ஏது! அதனால் வார்த்தையாடினார். மேலும் அவளுடன் பேசிச் சிரிப்பதனால் ஒருவித இன்பம் வட்டியாகக் கிடைக்கிறதே!

"இந்தா பாரு! பணம் என்ன, சும்மாக் கிடைக்குதா, என் இஷ்டம்போல் தர? கணக்குக் காட்றது எப்படி? முதலாளியிடம் என்ன சொல்வது?"

வலைவீசும் அவள் கவரும் புன்சிரிப்புச் சிதறி, 'நீங்கள் நினைத்தால்…" என்று இழுத்து முடியாமலே விட்டுவிட்டாள். அதுவும் சாதுரியமாய் இனிதாகவே ஒலித்தது. கெஞ்சினாள். பிறகு கொஞ்சுவதுபோல் குழறினாள். சாகசங்கள் அவளுக்குச் சொல்லி வருவதில்லையே?

சின்ன முதலாளி மனம் இளகியது! 'பரிதாபமாகத் தான் இருக்கு, இந்தா, போ. ஐம்பது இல்லே, முப்பது ரூபாதான் இருக்கு" என்று கூறிப் பணம் எடுத்துக் கொடுத்தார்.

அவள் மகிழ்வுடன் வாங்கிக்கொண்டாள். குமிழ் சிரிப்பும் கும்பிட்கையும் குதிக்கும் எழிலின் துணுக்குகளாக மின்னும் வனப்புடன் அவள் திரும்புவதையே விழுங்கிய சோமநாதன் சொக்கிப் போனார்.

"பார்த்தேளா! சிறு உதவி தான். அவள் உள்ளத்தில் எவ்வளவு களிப்புத் துள்ளுகிறது! பரோபகாரம் மனித இருதயத்தை மலர்விக்கும் பொன்னொளி. எனக்குப் பிறர் துன்பம் இரக்கமும் கண்ணீரும் ஊட்டிவிடும்_" சின்ன முதலாளி அளந்து கொண்டிருந்தார்.

எல்லாம்.ஜம்பப் பேச்சு என்பது அவரது வேலைக்காரர்களுக்குத் தெரியாதா! ஏழை, தொழிலாளி, பிச்சைக்காரிகளுக்குக் கொடுக்க விரைவதில்லை அவர் பரோபகார சிந்தனை. ஆனால் பகட்டுகின்ற பாவையருக்குத் தாராளமாக வழங்கும் வள்ளல் அவர் என்கிற உண்மை ஊரறிந்ததாயிற்றே!

'அது சரி. அவள் உம்மை ஏமாற்றியிருந்தால்? ஆபத்து, அவசரம், அம்மாவின் சாவு என்றதெல்லாம் ஹம்பக் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்று ஆரம்பித்தான் நண்பன்.

"சேச்சே! புளுகி என்ன ஐயா ஆகப்போகுது அவளுக்கு!

"பணம் கிடைக்கிறது. அவள் வேஷம் உம்மிடமிருந்து பணம் கவர்ந்து விடுகிறது. அதுதானே அவள் தொழில்!"

நண்பரின் பேச்சு அவருக்குப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும்? "போய்யா உமக்கு எல்லாம் சந்தேகம்தான். அவள் என்னிடம் ஏமாற்றியிருக்கமாட்டாள்" என்று உறுதியாகச் சொன்னார் மைனர்.

ஓர் ஆத்மாவுக்குத் திருப்தி அளித்து விட்டோம். பணம் பெற்றபோது அவள் முகத்தில் எத்தகைய அழகு மலர்ச்சி! என் உதவி அவள் உள்ளத்திலே விதைத்த அன்பு என்றென்றும் மிளிருமல்லவா! - இப்படி எண்ணி மகிழ்ந்தது அவர் உள்ளம்.

ஆனால், அதே வேளையில் வீட்டில் தாயுடன் அன்றைய 'நாடகம்', அதன் வசூல் இவற்றைப்பற்றிப்பேசிக் கலகலவென நகைத்துக்களிப்புற்ற பாசாங்குக்காரி, "பாவம்! நல்ல பையன்தான்; ஆனால் உலகம் அறியாதவன்" என விமர்சித்துக்கொண்டிருந்தது மைனருக்குத் தெரியாதுதான். "உலகமறிந்து விழிப்புற்றவனாக இருந்தால் நம்மைப் போன்றவங்க பிழைப்பு எப்படி நடப்பதாம்?" என்று தாய் அநுபவம் போதித்ததைச் சின்ன முதலாளி அறிய நியாயமே இல்லை!

இவற்றை அறிந்திருந்தால் தாம் செய்த 'பரோபகாரம்' பற்றித் தாமே பெருமைப் பட்டுக் கொண்டிருப்பது சாத்தியமில்லையே!

முல்லை - 13

ரச விகாரம்

கு. அழகிரிசாமி

1

அது நடந்த மூன்று நாட்களாகிவிட்டன. முதலியாருக்கு அன்றிருந்த கோபம் இன்றில்லைதான். கோபம் அவிந்திருந்தது. ஆனால் தீ அவியாமல், அன்றை விட இன்று தீச் சுள்ளி பறக்க, உள்ளச் சொக்கப்பனையில் தழல் கொழுந்துகளைச் சுழற்றிச் சுழற்றி வீசியது.

"அப்படி அக்கிரமமாக வந்து தொட்ட கையை ஒடித்து நாய்க்குப் போட்டிருக்க வேண்டாம்? படவாப் பயல்!" என்று அன்று குமுறிய மைத்துனர் பாபநாச முதலியாரின் சொற்களும் சங்கரலிங்க முதலியாரின் ஞாபகத்துக்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தன.

'பயலைக் கண்டிச்சுத்தான் இருக்கணும். இப்படி விட்டது தப்பு. இனியும் அவன் மனசு திருந்திச் சும்மா இருப்பானா? போன இடத்திலேயும் நாலு பெரிய மனுஷாள் வீட்டில் நிறை பொலியிலே இந்தக் கழுதை வாய் வைக்காமல் இருக்கப்போகுதா? சும்மா விட்டது தப்புத்தான்.

இந்த முறையிலும் சங்கரலிங்க முதலியார் தம்மைத் தாமே தாக்குப் பிடித்து, 'மன உளைச்சலை எட்டி மிதிக்கப் பார்த்தார். ஆண்மை செயலிழக்கவில்லை. தப்புப் பண்ணிவிட்டோம்' என்ற நினைப்பே அவருக்கு ஆதரவு. ஆனால், அந்த நெஞ்சுத்தீமடியில் சுட்டிய நெருப்பைப்போல நெஞ்சைச் சுட்டு அரித்தது, அதைச் சகிப்பதற்கு, தாம் செய்யத் தவறிய முட்டாள்தனம், அந்த 'முட்டாள்தன'த்துக்கு மைத்துனர் பாபநாச முதலியாருக்கு முன் பெருந்தன்மை யென்று வியாக்கியானம்-அதாவது 'அதிகப்பிரசங்கித்தனம்' செய்து கொண்ட தப்பிதம்-எல்லாவிதத் தவறு தப்பிதங்களும் அவருக்கு இருப்புக் கவசங்களாக, வஜ்ராங்கிகளாக வந்து உதவின. என்ன இருந்தாலும்... 'எதுக்கு நம்ம புத்தி அப்படிப் போச்சு? கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கொலை செய்யக் கூடத் தயாரா இருந்தோம் அப்புறம் அந்தப் பயலையும், அந்தச் சிறுக்கியையும் ('உம். ஜாக்கிரதையாப் பேசுடா சங்கரலிங்க முதலி! என்ன இருந்தாலும் அவள் பெத்த மகள்; சிறுக்கின்னு சொல்லுதையா நீ?" - இப்படியும் தம்மைத் தாம்

அதட்டிக் கொண்டு சிந்தனையைத் ? தொடர்ந்தார்) அந்தக் கழுதையையும் பார்த்த பிறகு அப்படி என்ன எழவுக்குச் சாந்தம் பிறந்தது? பயல், வசிய மை வைத்திருந்து, நம்மைப் பணிய வச்சுட்டானா?

அன்றிருந்த கோபம் இன்றில்லை. ஆனால் கோபம் குறையக் குறையத் தீ வளர்ந்தது; நினைத்துப் பார்க்கப் பார்க்கத் தீ வளர்ந்துகொண்டே வந்தது

இரண்டு வருஷங்களுக்கு முன்பு என்றோ ஒரு நாள் அம்பா சமுத்திரத்தில் ஒரு கல்யாண வீட்டில் வைத்து முதலியார் தியாகராஜனைப் பார்த்தார். கல்யாணத்துக்குப் போய் முகூர்த்தம் முடித்து எழுந்திருப்பதற்கு முன்னமேயே அந்தச் சொற்ப காலத்தில் ஸ்ரீ வைகுண்டம் பக்கத்தில் நாலைந்து ஊர்களிலிருந்து வந்தவர்களின் வாய்மொழியில் தியாகராஜனைப்பற்றிய பாராட்டுகளுக்கும் அவன் சாமாத்தியத்தையும் குணபாவத்தையும் பற்றிய புகழ்ச்சியுரைகளுக்கும் கணக்குக் கிடையாது. முதலியாரே இதைக் கேட்டுக் கேட்டு அசந்து போய்விட்டார். ஒவ்வொருவரும் வந்து, தியாகராஜனைப் பற்றிச் சொல்லும்போது, அவன் முகத்தைச் சற்று ஏறிட்டுப்பார்ப்பார். அப்போது அந்தப் பாராட்டுரைக்கும், முதலியாருடைய கற்பனைக்கும் ஏற்றவாறு அவன் முகம் அவருக்குக் காட்சி யளிக்கும். தியாகராஜன் ஊராகிய முரப்ப நாட்டைச் சேர்ந்த ஒருவர் வந்து, "தியாகராசன் பி.ஏ. தான் படிக்காமல் வந்துட்டான். அதுகூட எம்.ஏ. படிக்கும் போது உடம்புக்குச் சொகமில்லாமே போகப் போய்த்தான். இந்தக் காலத்துப் பயல்களைப் போல் ஒரு பீடி சிகரட்டு, பொடிபோயிலை, வெத்தலை பாக்கு-இப்படி ஏதாவது ஒண்ணுண்ணு அவன் தன் சென்மத்திலே தொட்டறிஞ்சிருக்கமாட்டான்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வரும்போது வழக்கம் போல முதலியார் தியாகராஜனைப் பார்த்தார். அப்போதுதான் ஒருவர் தாம்பூலத் தட்டை எடுத்துத் தியாகராஜனுக்கு முன்பாக நீட்ட அவன் பக்கத்திலே இருந்த பெரியவர்களுக்குக் கொடுக்கும் படி மிகவும் பவ்வியமாய் ஆக்ஞாபித்தான்.

(ஆஹா! பெரிய வீட்டுப் பிள்ளைன்னா இதுதான்! - இது முதலியார்) பக்கத்தில் இருந்தவர்களுக்குத் தாம்பூல சேவையானபின் பழையபடியும் தியாகராஜன் முன் தட்டேந்திய ஆசாமி வரும்போது, இரண்டு விரல்களால் எண்ணி எடுப்பது போல இரண்டே இரண்டு வெற்றிலை, சின்னப் பாக்குத் துண்டு, இவைகளை எடுத்து, பக்கத்திலே சமுக்காளத்தில் வைத்துவிட்டு வழக்கம் போல் உட்கார்ந்துகொண்டான்.

'பாத்திகளா? வெத்திலை எடுத்ததைப் பாத்திகளா இன்னேன்...? என்றார் முரப்பநாட்டு முதலியார்'.

இரண்டு வெத்திலைகளை உபசாரத்துக்கு எடுத்துக்கிட்டது-' என்று பூரிப்போடு சிரித்தார் முதலியார்.

'இதில்லையா பிள்ளைக்கு லெச்சணம்?

சங்கரலிங்க முதலியாருக்குத் தியாகராஜனோடு ஒரு நிமிஷமாவது உட்கார்ந்து பேசவேண்டும் என்ற ஆசை. திருநெல்வேலிச் சீமையில் நம்ம முதலிகள் எந்தக் காலத்திலேயும் அடுத்தவனை இறக்கி வச்சுப் பேசற வலிமை யாச்சே. அப்படியிருக்க இந்த முரப்ப நாட்டுப் பிள்ளையாண்டானைப்பத்தி வந்தவனுலே ஒருத்தனாவது ஒரு சொட்டைச் சொல் சொல்லட்டுமே?' இந்தச் சந்தோஷத்தில் மூழ்கிய முதலியார் கடைசியில் தியாகராஜனோடு கொஞ்சம் உட்கார்ந்து பேசினார். அவனுக்கும் கல்யாணமானதைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பிறகு, குலம் கோத்திர விசாரணை விளக்கிக் கொண்டிருந்தபோது அவன் தம் மனைவியுடைய பாட்டனார் வகையில் ஒட்டிய, தமக்கு மகன் முறையாக உள்ள உறவினனாகப் போய்விடவே, முதலியார் மனம் மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியை உலகத்துக்குப் புலப்படுத்தும் முறையில், "ஐயா, அந்த ரத்தத்திலே ஒட்டின உறவு எங்கே போகும் பாடடன் பூட்டன் காலத்திலே யிருந்து மனுசத்தரம் சம்பாதிச்ச குடும்பத்திலே பிறந்தவக நாமொ.. தம்பியைப் பத்தி நல்லாக் கேள்விப்பட்டுக்கிட்டேன். தம்பி முரப்ப நாட்டுக்குத் திரும்பறப்போ, நம்ம ஊருக்குக் கொஞ்சம் விலகிட்டுப் போகலாமே!" என்று திருநெல்வேலிப் பேட்டைக்கு வந்து போகச் சொன்னார் முதலியார்.

'மன்னிக்கணும். இன்னொரு சமயம் வர்ரேனே!"

'மன்னிக்கணும்' சம்பிரதாய பூர்வமாக ஆங்கிலத்தில் பிரயோகிக்கும் பதம் இது வென்று முதலியாருக்குத் தெரியாது. 'மன்னிக்கணும்' என்ற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் என்னவோ அதை அப்படியே வியாக்கியானம் செய்து, தியாகராஜனுடைய பெருந்தன்மையைப் பாராட்டினார் முதலியார்.

2

பேட்டைக்கு வந்த முதலியாருக்கு, ஒரு யோசனை உதித்தது, 'பண்ணைக் காரியங்களைக் கவனிப்பதற்கு ஆண் வாரிசு இல்லை. வயசு அறுபதை எட்டிப் பிடிக்க இன்னும் கோடி வருசமா இருக்கு அப்படியிருக்கிறப்போ, தியாகராஜனைக் கொண்டு வந்து பண்ணைக்குக் காரியஸ்தனாக்கி விட்டால் என்ன?

இந்த யோசனை கோழிக் கர்ப்பம் போல் மாதம் கழியும் முன்பே பூரண உருப்பெற்று விட்டது. முரப்ப நாட்டுக்கே போய்க் காரியத்தை முடித்து முதலியார் வெற்றிகரமாகத் திரும்பிய இரண்டொரு நாட்களுக்குள்ளாகத் தியாகராஜன் பேட்டை வந்து சேர்ந்தான்.

அவன் வருவதற்கு முன்னாலேயே தம் வீட்டுக்கு எதிர் வரிசையில் நாலைந்து வீடுகள் தள்ளியிருந்த சௌகரியமான வீட்டில் வேண்டிய

தயாரிப்புகளோடு தியாகராஜனைக் கொண்டு போய்க் குடியமர்த்தினார். உடல் அசௌகரியத்தினால் தியாகராஜனுடைய மனைவி அப்போது அவனோடு வரவில்லை யென்ற போதிலும், குடும்பக் காரியங்களுக்கு வேண்டிய பண்ட பாத்திரங்களும் தட்டுமுட்டுச் சாமான்களும் வீட்டை அடைத்துக்கொண்டிருந்தன. மனைவி வரும் வரையில் முதலியார் வீட்டிலேயே சாப்பாடு வைத்துக்கொள்வது என்ற ஏற்பாடு.

3

தியாகராஜன் வந்து இரண்டு வருஷங்களாகப் போகின்றன. துரதிர்ஷ்டவசமாக அவனுடைய மனைவி இன்னும் க்ஷயரோகம் குணமாகாமல் நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் க்ஷயரோக ஆஸ்பத்திரிலேயே இருந்து வந்தாள். மாதத்துக்கு ஒரு தடவை தியாகராஜனிடமிருந்து ஆஸ்பத்திரியில் அவன் மனைவியோடிருக்கும் தாயாருக்குப் பணம் போகும். மாதத்துக்கு இரண்டு தடவைகள் தியாகராஜன் போவான்.

இந்த இரண்டு வருஷங்களிலும் முதலியாரின் நெல் மகசூலின் வரவு முந்திய வருஷங்களைவிட இரட்டிப்பாக இருந்தது. பண்ணையில் ஏற்படும் செலவுகளும் ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்தன. முதலியாருக்கு இப்போது நிம்மதியான வாழ்க்கை. தேவார திருவாசக பாராயணங்களும் தற்கால யுகதர்மமாகிய அரசியல் சர்ச்சைகள் கொஞ்சமும் அதை ஒட்டிச் சுற்று வட்டாரத்தில் அதாவது அரசியல் வட்டாரத்தில் கொடையாளிப்பட்டமும் - இப்படியாகத் தாம் வாழ்வதற்கும், வீட்டில் சுபிக்ஷம் பெருகியதற்கும், தியாகராஜன் தம் வீட்டில் காலெடுத்து வைத்த நேர பலன், அவன் கைராசி, அவனுடைய சாமர்த்தியம் - இவைகள் தாம் காரணங்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு.

ஆம்பளைப் பிள்ளையில்லேன்னு குறைப்பட்டத்துக்குப் பகவான் அனுப்பிவைச்ச ஜேஷ்டபுத்திரன் ராசையா (அதாவது தியாகராஜன்) பார்வதிக்கும் அண்ணன் கிடைச்சான்.

இப்படிப்பட்ட மனத்தீர்மானத்தின் அடிப்படையில் உலக வழக்கத்துக்குப் பொருந்த தியாகராஜனைப் பற்றி ஊராரிடம் புகழ்ந்து 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளாக' முதலியார் காலம் கழிக்கும் சந்தர்ப்பம்.

அன்று இரவு பத்து மணிக்குத்தான் ஒரு ஜோலியாகப் பாளைங்கோட்டைக்குப் போன முதலியார் திரும்பி வந்தார். சமையல்காரன் தன் வீட்டுக்குப்போய்விட்டான். அதனால், முதலியாரின் மகள் பார்வதியே வந்து முதலியார் சாப்பிடுவதற்கு இலை போட்டாள். கூழ்வடகத்தையும், முறுக்கு வற்றலையும் இலையில் வைத்துக்கொண்டே, 'இன்னிக்கு அண்ணாச்சியும் சாப்பிட வரக்காணமே? எங்கே போயிருக்காகளோ?' என்று மனப்பாசம் கட்டிப் பிடித்து ஒலியை நிதானப்படுத்திவிட, மெல்லிய குரலில் சொன்னாள் பார்வதி.

‘என்ன, இன்னுமா சாப்பிடலே? டவுனுக்குப் போன பிள்ளை இன்னும் திரும்பலியா? யாரையும் அனுப்பிப்பார்த்துட்டு வரச் சொல்லக் கூடாதா? மணி பத்தாகியும் சாப்பிட வரலலேன்னா, இப்படிக் கவனிக்காமலா இருக்கிறது? வெளியே யாரும் இருந்தாக் கூப்பிட்டுப் போகச் சொல்லு’ என்று படபடப்பாகச் சொல்லிவிட்டு அரை குறையான மனத்துடன் ஒரு கூழ் வடகத்தை எடுத்துவாயில் போட்டுக்கொண்டார் முதலியார்.

பார்வதி ஆளனுப்பிவிட்டு, உள்ளே வந்து சாதத்தை எடுத்துக்கொண்டு வந்தபோது, முதலியார் சிரித்துக்கொண்டே, ‘எனக்கு முறுக்குவத்தல் எதுக்குவச்சே, பார்வதி? பல் பூராவும் தான் காத்தடிச்சாலும் தலை சுத்தியாடுறது உனக்குத் தெரியுமே?” என்று சொல்லிவிட்டுக் குனிந்து சாதத்தை நெய்யில் குழைத்தார்.

உள்ளே போன பார்வதிக்கு சிரிப்பு வந்தது; லஜ்ஜையும் வந்து விட்டது. கீழுதட்டை இறுக, ஆனால் சுகமாகப் பல் பதியக் கடித்துக் கொண்டு, பக்கத்திலிருந்த தூணில் நாலைந்து தடவை காரணமில்லாமல் தொடர்ந்து தட்டினாள். சபையில் சந்தோஷத்தால் கரகோஷம் செய்யும் தாளகதி அவள் தட்டிலே நிதானித்தது. அப்பாவுக்கும் தியாகராஜனுக்கும் வித்தியாயம் தெரியாமல், தன்னை மறந்த தன் அசட்டுத் தனம் என்ற பேரின்பத்தில் ஆழ்ந்து, வற்றல் குழம்போடு பார்வதி வெளியே வந்தபோது, வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது.

முல்லை - 13

ஜாதக விசேஷம்

கொனஷ்டை

இரண்டாவது வகுப்பில் ரெயில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். முந்தின இரவு முழுவதும் நித்திரை இல்லை. பிரயாணத்தின் முடிவில் ஒரு முக்கியமான சபை சம்பந்தமாக நடக்கப் போகும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்பது எனது கருத்து. ஆகையால், இப்பொழுது பகலிலாவது வண்டியிலேயே சற்று உறங்கி, தேகச் சோர்வை நீக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. சௌகரியமாக ஒரு மூலையில் வீற்றிருக்க இடம் கிடைத்தது. இந்த மட்டும் அதிருஷ்டம் என் பக்கத்தில் இருந்தது. ஆனால் தூக்கத்தில் பிரக்ஞையை இழக்கும் சமயத்தில், ஒரு ஸ்டேஷனில் வண்டி நிற்கவே, அதிகச் சந்தடியுடன் சிலர் என் அறையில் ஏறினார்கள்.

முதலில் கம்பீரமான ஒரு ஸ்திரீ. பிறகு அவளில் பகுதி கம்பீரமுள்ள ஒரு புருஷன். பாங்கான உடுப்பு தலைப் பாகையுடன் அவர் சோபித்தாலும், சுயமாகவே அவளிடத்தில் பொங்கின அதிகார சக்தி அவரிடத்தில் காணப்படவில்லை. அவர்களைப் பின்பற்றி ஏறின குமாஸ்தாவுக்கும், வில்லை போட்ட சேவகனுக்கும் அவளே வேலையிட்டாள். 'அந்தப் பெட்டியை இந்த சீட்டுக்குக் கீழே!" - "படுக்கை மூட்டை இங்கே என்னத்திற்காக, இடத்தை அடைத்துக்கொண்டு?' - "சாய்ந்து கொள்வதற்கா? ஒன்றும் வேண்டாம். வேண்டுமானால் நான் சொல்லமாட்டேனா? எனக்கு வாய் இல்லையா?" - "கூஜாவை என் கையண்டை வைக்க வேண்டாமா? இது கூடச் சொல்லித்தர வேண்டுமா?" - 'எலக்டிரிக் 'பான்' எதற்காக மத்தியைப் பார்த்துச் சுற்றிக் கொண்டிருக்கிறது? என் பக்கமாய் திருப்புங்கள்!' - 'மற்றவர்கள் ஒன்றும் சொல்லமாட்டார்கள். இந்த வெயிலில் நான் என்ன உருகிப் போக வேண்டுமென்றா உங்களுடைய எண்ணம்?" இம்மாதிரி. அநேகம்.

சேவகன் எனக்குச் சமீபத்தில் வந்த ஒரு க்ஷணத்தில், "இவர் யார்?" என்று ஜாடை யாகக் கேட்டேன். கையால் வாயைப் பொத்தினபடியே, "தாசில்தார்வாள்" என்று அவன் ரகசியத்தை வெளியிட்டான். கடைசியில் வண்டி புறப்படப் போகும் சமயத்தில் குமாஸ்தாவும் சேவகனும்

வண்டியை விட்டுக் குதித்துத் தங்களுடைய மூன்றாம் வகுப்பு அறையைப் பிடிப்பதற்கு ஓடினார்கள்.

ஜன்னலால் எட்டிப் பார்த்தேன். அவ்விருவரும் எப்படியோ தாவிப் பிடித்து அறைக்குள் ஏறிக்கொண்டார்கள். என்னுடைய கவலை நீங்கிற்று. அந்த மட்டும் க்ஷேமந்தான். ஆனால் இந்தச் சந்தடியில் என் தூக்கமும் போய்விட்டது. தம்பதிகளின் பேச்சு ரெயில் வண்டியின் ஓசைக்கு மேலிட்டு வந்து என்னுடைய காதைத் துளைத்தது. அடுத்த ஸ்டேஷனில் வண்டி மாற்றலாமா என்று ஆலோசித்தேன்.

வண்டி நிற்கவே, குமாஸ்தா ஆஜாராகிக் கதவண்டை ஒன்றும் சொல்லாமலே நின்றான்; ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அவ்விதம் செய்யும்படி அவருக்கு உத்தரவு போலும்! இப்பொழுது அவருக்குக் கட்டளையிட ஒரு வேலையும் அகப்படவில்லை. அந்த அம்மாள் சுற்று முற்றும் பார்த்தாள். கடைசியாகப் பங்களாவைக் காட்டி, "இதோ பாருங்கள்! நீங்கள் திருப்பிவைத்த 'பான்' வண்டி ஆட்டத்தில் நகர்ந்து மறுபடியும் மத்தியைப் பார்க்கிறது. இதெல்லாம் சரியாக இருக்கிற வண்டியாகப் பார்த்து எங்களை ஏற்றியிருக்கக் கூடாதா?" என்று கேட்டாள். மேலும், 'உங்களுக்காக அக்கறை இருந்தால்தானே? நான் சொல்லி என்ன பிரயோஜனம்? எனக்கு வாய் வலிதான் மிச்சம்' என்று முடித்தாள். பாவம்! அந்தக் குமாஸ்தா பதில் பேசவில்லை. ஆனால் வாயில்லா ஜந்துக்கள் வேதனைப்படும் சமயத்தில் அவற்றின் கண்களில் காணுகிற மாதிரி, மௌனமான துக்கம் அவர் முகத்திலும் தோன்றிற்று. என்னால் இதைப் பொறுக்க முடியவில்லை. அவர் இறங்கும் பொழுது நானும் இறங்கி, அவருடைய மூன்றாம் வகுப்பு அறையில் நானும் ஏறி நுழைந்துகொண்டேன்.

வண்டி புறப்பட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம், டிக்கெட் இன்ஸ்பெக்டர் வந்தார். ஒவ்வொருவரும் டிக்கட்டை நீட்டினோம். 'என்ன ஐயா! இரண்டாம் கிளாசு டிக்கெட்டை வைத்துக்கொண்டு மூன்றாம் கிளாசில் போகிறீர்களே? மற்றவர்கள் செய்யப் பார்க்கிறதற்கு நேர் எதிராக இருக்கிறது!" என்றார். நான் ஏதோ முணுமுணுத்தேன். எனக்கு எதிராக உட்கார்ந்திருந்த சாஸ்திரிகள் ஒருவர் சிரித்தார் 'எல்லாம் ஜாதக விசேஷம்! எப்போ இன்னிக்கு மூன்றாம் கிளாசில் போகக வேண்டுமென்று எழுதிப் போட்டிருக்கிறதோ, அப்போ, அதற்காக முதல் கிளாஸ் டிக்கெட்டை வாங்கினாலும் அதைத் தப்பிக்க முடியுமா?" என்று கேட்டார்.

"என்ன சாஸ்திரிகளே! இன்றைத் தினத்தைச் சேர்ந்த இந்த அற்ப விஷயங்கூடவா, என் ஜாதகத்தில் எழுதியிருக்கும்?" என்று கேட்டேன்.

"சந்தேகமென்ன? ஒன்று விடாமல் எல்லாந்தான் எழுதியிருக்கும் உங்களுக்கு ஒரு திருஷ்டாந்தம் கொடுக்கிறேன், கேளுங்கள், எனக்குக் கொஞ்சம் ஜோசியம் வரும். அது என்னுடைய விருத்தி என்றே சொல்லலாம். (சரி இலவசமாய் இங்கே ஒரு பிரசுரம் கிடைக்கிறது,

சாஸ்திரிகளுக்கு' என்று நினைத்துக்கொண்டேன்) 4 நாளைக்கு முன்பு ஒருவர் என்னிடம் வந்தார். ஜாதகத்தைப் பார்த்தேன். 'ஜாதகத்தில் வாகனாதிபதியாகிய குரு பாக்கியத்தில் இருக்கிறான். உங்களுக்குச் சொந்த வாகனம் இருக்குமே?' என்றேன். 'ஒரு கார் இருக்கிறது எனக்கு' என்று ஒப்புக்கொண்டார். 'ஆனால் சனி கர்ம ஸ்தானத்தில் இருக்கிறான். அவன் பாவி. ஏதாவது வேலையில் உழைக்கச் செய்யும் சுபாவம் அவனுக்கு அவன் இப்போது மூன்று மாசமாகக் கோசாரத்தில் ரொம்பக் கெட்டவன். மோட்டார் கார் ஓட்டுகிற தொழிலைக் கூடக் கொடுப்பான்' என்றேன். 'ரொம்ப சரி, மூன்று மாசமாக நல்ல டிரைவர் அகப்படவில்லை. நானே தான் என் வண்டியை ஓட்ட வேண்டியிருக்கிறது' என்றும் ஒப்புக் கொண்டார். பார்த்தீர்களா? ஜாதகத்தின் பலம் ஒரு அம்சமும் வீண் போகாது. ஒரு கார் வைத்துக் கொள்ளும் அந்தஸ்து இருந்தாலும், வண்டி ஓட்டும் தொழிலிலிருந்து தப்ப முடியவில்லை'

என் சிநேகிதர்களில் பலர், ஏன், சில ஸ்திரீ மணிகள் கூட 'செல்ப்-டிரைவ்' பண்ணுகிற பெருமையுடன் தங்களுடைய வண்டியை ஓட்டுவதைப் பற்றி நினைத்துக் கொண்டேன். சாஸ்திரிகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த குமாஸ்தாவின் முகத்தில் அப்பொழுதுதான் அல்பப் புன்சிரிப்புத் தோன்றி அவர் பேச ஆரம்பித்தார்:

"நானும் ஒரு திருஷ்டாந்தம் கொடுப்பேன். ஏன், இரண்டு திருஷ்டாந்தமென்றே சொல்லலாம். என்னுடைய ஊரில் இரண்டு பையன்கள், சகோதரர்கள், எனக்குத் தெரியும் ஒரு நாள், இந்தச் சாஸ்திரிகள் மாதிரி ஒரு ஜோசிய வித்துவான் ஊருக்கு வந்தார். அவரிடம் அந்தப் பிள்ளைகளின் ஜாதகங்களைத் தகப்பனார் காண்பித்தார்.

"அவர் சொன்னார்: 'மூத்த பையனுடைய ஜாதக விசேஷம் எப்படியென்றால், 'அவன் யத்தினம் பண்ணுகிற காரியம் கைகூடும். ஆனால், அதனால் அவனுக்குத் திருப்தி ஏற்படாது. இளையவனுக்கோ, அவன் எண்ணுகிற காரியம் கைகூடாது. ஆனால், அவன் எண்ணாத காரியங்கள் பலித்துக்கொண்டே இருக்கும். அதனால் அவன் சௌக்கியமாய் வாழ்வான்' என்று.

'சில வருஷங்களுக்குப் பிறகு, இருவரும் சம்பாதித்துப் பிழைக்கவேண்டிய வயசும் நிலைமையும் உண்டாயின. தாலுக்கா குமாஸ்தாவின் வேலை காலியாயிருந்தது. இம்மாதிரி வேலைகளுக்காகப் 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தங்களுடைய பரீக்ஷையை நடத்தினார்கள். இரண்டு பேரும் அதற்குப் போனார்கள். மூத்தவன் இராப்பகலாகப் படித்தான்; ஜயித்தான்; வேலையும் கிடைத்தது. சாதாரணச் சம்பளந்தான். ஆனால் தம்பியையும் காப்பாற்றவேண்டிய கடமை இல்லாதபோனால், தன்னுடைய குடும்பத்தின் வயிறு வளர்ப்பதற்குப் போதும்.

"இளையவனோ, உழைத்துப் படிக்கவில்லை. பரீக்ஷையில் அபஜயம்; வேலைகிடைக்கவில்லை. ஆனால் அவனுக்குக் கவலை இல்லை. தமையன் ஆபீசுக்குப் போயிருக்கும் பொழுது அவனுடைய உடுப்புகளைத்

தானாகவே இரவல் எடுத்துக்கொண்டு சௌடாலாக ஊர் திரிந்துகொண்டிருப்பான்.

'இந்தச் சந்தர்ப்பத்தில் ஊரிலுள்ள பெரிய மிராசுதாரரின் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயித்தார்கள். பிரபலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்யாணத்திற்கு முந்தின நாள் - என்ன காரணமோ தெரியவில்லை, பணத்தகராறு என்று சிலர் சொன்னார்கள்; கல்யாணப் பிள்ளைக்குக் காக்கா வலிப்பு கண்டது என்று சிலருடைய அபிப்பிராயம்-அந்தக் கல்யாணம் நின்றுவிட்டது.

'ஆனால் பந்தல், சாமான்கள், சமையற்காரர், மேளகாரர்-எல்லாம் தயார். அதிதிகளும் அநேகமாய் வந்து விட்டார்கள். இனிமேல் கல்யாணம் நடக்காமற் போனால் பரிகாசத்திற்கு இடமாயிருக்கும். மிராசுதார் நெஞ்சு துணிந்தவர். இரண்டாவது யோசனை செய்யவில்லை. தாலுக்கா குமாஸ்தாவின் தம்பி என்கிற மேன்மையுட்ன் சௌடாலாக ஊரில் திரிந்துகெண்டிருந்த பையன்தான் அச்சமயம் கண்ணில் அகப்பட்டானாகையால் அவனுக்கே தம் மகளை விவாகம் செய்து வைத்தார். இவ்விதம் தமையன் குமாஸ்தாவாயிருக்க தம்பி மிராசுதாரின் மாப்பிள்ளையானான்.

'பிறகு, மிராசுதார் வேலை செய்யத் தொடங்கினார். செல்வாக்குக்காரர்; அஸெம்பிளியில் நாலைந்து மெம்பர்கள் இவர் சொன்னபடியே 'வோட்' செய்வார்கள். ஆகையால் ஒருவரும் இவரை அலக்ஷ்யம் செய்ய முடியாது. சென்னைப் பட்டணத்திற்குப் போனார். பொம்மலாட்டம் செய்வித்தார் சரியான கயிறுகளைப் பிடித்து இழுத்தார். சரியான பொம்மைகள் ஆடின. சரியான இடத்தில் கையெழுத்துப் போடப்பட்டது. இவருடைய மாப்பிள்ளைக்கு முதலடியில் டெபுடி தாசில்தார் வேலை ஆயிற்று.

'பொம்மலாட்டம் நின்று விடவில்லை. ஆறு மாதத்தில் தாசில்தார் வேலைக்குப் பிரமோஷனும் உத்தரவாயிற்று. இதுவரை தம்பியின் ஜாதக விசேஷம் இதற்கு மேல் தமையனுடைய ஜாதக பலனும் சேர்ந்துகொண்டது. தமையன் குமாஸ்தாவாக இருக்கிற தாலூக்காவிற்கே தம்பி தாசில்தாராக மாற்றப்பட்டார். அங்கே மாமனார் வீடாகையால் தம்பிக்கு மிகவும் சௌகரியம். அவர் மனைவிக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் தம்பியின் கீழாகத் தமையன் வேலை செய்ய வேண்டி வந்தது.

'தன்னுடைய புருஷன் தோல்வியடைந்த பரீக்ஷையில் தன்னுடைய மைத்துனன் ஜயித்தான் என்பதைத் தாசில்தாரின் சம்சாரம் மறக்கவுமில்லை, மன்னிக்கவுமில்லை. இது இப்படியிருக்க, தமையனுடைய சம்சாரமோ, ஆதியில் தான் எப்படியும் ஓர் உத்தியோகஸ்தனுடைய பார்யை என்று சற்றுப் பெருமையாகவே இருந்தவள் தன்னுடைய ஓர்ப்படியின் கௌரவத்தைக் கண்டு பொறாமை கொண்டு, தன்னுடைய பர்த்தாவிடம் அவமதிப்பைக் காண்பிக்கிறாள்-'

அச்சமயம், அவருடைய பக்கத்தில், தூக்கத்தினால், உட்கார்ந்தபடியே ஆடிக்கொண்டிருந்த ஸ்திரீயின் கைகள் தளர அவள் மடியிலிருந்த சிறு குழந்தை கீழே நழுவி விழும் க்ஷணத்தில் அவர் அதிவேகமாகக் குழந்தையைப் பிடித்துக் காப்பாற்றினார்.

"குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். இப்பொழுது கீழே விழுந்து மண்டை உடையத் தெரிந்தது!" என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

பதிலுக்கு அவள் சீறினாள்: "எல்லாம் ஜாக்கிரதையாத்தான் பாத்துண்டிருக்கேன். நீங்களுந்தான் செத்தே பாத்துண்டால் என்ன? சாமர்த்தியம் இருந்தால் தம்பி மாதிரி ஒரு தாசில் உத்தியோகமாவது இருக்காதா? அப்போன்னா குழந்தையைப் பார்த்துக்க ஒரு வேலைக்காரி இருப்பா. நானே ராப்பகல் முழித்துண்டு வேலை செய்யவேண்டியிருக்கு. இந்த அழகுக்கு எனக்குப் புத்திமதி வேறே கொடுக்கணுமா?"

நான் திடுக்கிட்டேன். என் மனக்கிளர்ச்சியின் வேகத்தினால் இரண்டாம் வகுப்பில் கண்ட உத்தியோகஸ்தரின் முகம் என் மனக் கண்ணில் தெளிவாகத் தென்பட்டது. சொக்காய் தலைப்பாகைகளின் உதவியில்லாமல் உள்ளது உள்ளபடியே தெரிந்தது. குமாஸ்தாவின் முகத்தை உற்று நோக்கினேன். இருவருடைய முகச்சாயலின் ஒற்றுமையைக் குறித்துச் சந்தேகிக்க இடமில்லை. இவர் இதுவரை வர்ணித்த இருசகோதரர்கள் எவர் என்று நன்றாய் விளங்கிற்று. இந்த அம்மாள் பேசும் பேச்சைக் கேட்ட பிறகு, இவள் இருக்கும் அறையில் இருப்தைக் காட்டிலும், அந்த அம்மாளின் மயூரத்வனி ஒலிக்கும் இரண்டாம் வகுப்புக் கூடத் தேவலை என்று தோன்றிற்று. வண்டி அப்பொழுது நிற்கவே நான் இருக்கும் பக்கத்தின் கதவைத் திறந்து வெளியே இறங்கினேன்.

ஆனால் அந்தப் பக்கம் இல்லை ப்ளாட்பாரம். ஆகையால் நான் பள்ளத்தில் இறங்கி அந்த அறையைத் தேட வேண்டியிருந்தது. இந்தக் கஷ்டத்தில் என் மனத்தடுமாற்றமும் சேர்ந்து கொண்டது. நான் அந்த அறையைக் கண்டுபிடிப்பதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது. இவ்விதம் அவ்விரண்டு தேவிகளுடைய தரிசனமும் இல்லாமல், சிறிது நிமிஷங்களுக்குள் இருப்புப் பாதைகளின் மத்தியில் நின்றேன்.

அடுத்த வண்டி இரவு மூன்று மணிக்குத்தான் என்று ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார். அதற்காகக் காத்திருந்ததால் அன்றிரவும் தூக்கம் கிடையாது. எப்படியாகிலும் சபையில் ஆஜராக முடியாது. திரும்பிப் போவதே நலம். அதற்கு டிக்கெட்டுக்கு மாத்திரந்தான் கையிலிருந்தது காசு போதுமானது அதற்கு அதிகப்படியாகப் பலகாரப் பேச்சுக்குக்கூட இடம் கொடுக்க வில்லை.

ஆகையால், ப்ளாட்பாரத்தில் உலாவிக்கொண்டு, ஆகாரத்திற்குப் பதிலாக ஆழ்ந்த சிந்தனையில் காலத்தைக் கழித்தேன். இரவு எட்டு

மணிக்குத் திரும்பிப் போவதற்குரிய வண்டி கிடைத்தது. காலையில் நான் விடை பெற்றுப் பிரிந்த சிநேகிதனுடைய வீட்டுக்கதவை ராத்திரி பத்து மணிக்குப் பட்டினியின் சோர்வுடன் தட்டினேன்.

'என்னப்பா சமாசாரம்? நீ போனதென்ன, திரும்பி வந்ததென்ன!" என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான். 'எல்லாம் ஜாதக விசேஷம்!' என்று சாஸ்திரிகளின் குரலிலே அவனுக்கு எடுத்துரைத்தேன்.

முல்லை - 13

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மொழிபெயர்ப்புக் கதைகள்

சீர்திருத்தவாதி	-	வி. ஸ. காண்டேகர் தமிழில்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.
இரு முகில்கள்	-	வி. ஸ. காண்டேகர் தமிழில்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மீனாட்சி	-	மெஹதா தமிழில் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.
இதயத் துடிதுடிப்பு	-	எட்கார் அலன்போ தமிழில் : ரகுநாதன்
நொண்டி	-	எலின் வாக்னர்
கறுப்பு ரோஜா	-	விஸ. காண்டேகர் தமிழில் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.

சீர்திருத்தவாதி

வி. ஸ. காண்டேகர் தமிழில் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.

வாலறுந்த நரி பேசுகிறது:

"சகோதர சகோதரிகளே! முன்னால் செய்து விட்டு அப்புறம் பேசுவதே என் கொள்கை. வாலினால்தான் மனிதனைவிடக் குள்ளநரிக்கு மதிப்பு குறைந்துபோயிருக்கிறது. மனிதன் என்றால் என்ன? வால் இல்லாத குரங்கு! தவிரவும், இயற்கையிலே உண்டான ஒவ்வொரு பொருளும் பிராணிகளுக்குக் கட்டயாமாகப் பயன்படுகிறது என்று சொல்ல முடியாது. மனிதர்களுக்குள்ளே ஆணை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் முகத்தில் தாடியும் மீசையும் காடுகளைப்போல இராப்பகலாக வளர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், அவன் அதைச் சுத்தமாக வெட்டி எறிந்து தன்னைச் சீர்திருத்திக்கொண்டிருக்கிறான். ஆகையால் நான் இன்று இந்த நரிக்கூட்டத்தினரை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்: நாம் எல்லோருமாகச் சேர்ந்து வாலறுக்கும் தினம் ஒன்றைக் கொண்டாடவேண்டும். அன்றைய தினம் நம்மில் ஒவ்வொருவரும் வாலை அறுத்து எறியும் சீர்திருத்தத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டும். சகோதரர்களே, அன்பர்களே, புரட்சி உங்களைக் கூப்பிடுகிறது. எழுந்திருங்கள், விழித்துக்கொள்ளங்கள்!"

எல்லா நரிகளும் தம்முடைய கிழத்தலைவரை உற்றுப்பார்த்தன. வாலறுந்த நரி சொல்லியது முற்றும் உண்மையே என்று அவற்றிற்குத் தோன்றியது.

கிழ நரி எழுந்து நின்று, 'இன்று ஒரு மகாவித்துவானுடைய அருமையான பிரசங்கத்தைக் கேட்கும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது. அவர் கூறிய விஷயங்களை நான் என் வால் பூர்வமாக ஆமோதிக்கிறேன்" என்று ஊளையிட்டுப் பேசியது.

"கேளுங்கள், கேளுங்கள்!" என்று இடையிடையே கத்தியது வால் அறுபட்ட நரி.

கிழநரி தொடர்ந்து பேசியது: "வால் அறுந்துபோனபின்பு மீண்டும் அது தேவையாக இருந்தால், மறுபடியும் வாலை முளைக்கச் செய்வதற்கும்

இப்போது சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு விஞ்ஞான நிபுணர் சமீபத்திலேதான் அத்தகைய ஆராய்ச்சியைச் செய்து முடித்து"....

"அந்த விஞ்ஞான நிபுணரின் பெயர் என்ன?" என்று வாலறுந்த நரி அவசர அவசரமாகக் கேட்டது.

கிழ நரி அதன் பேச்சையே கவனிக்காததுபோல மேலே பேசத் தொடங்கியது.

அப்போது வாலறுந்த நரி திடீரென்று எழுந்து நின்று "ஓய் கிழவரே, அந்த ஆராய்ச்சி செய்த விஞ்ஞான நிபுணரின் விலாசந்தான் இப்போது எனக்குத் தேவை" என்று கூவியது.

ஒரேயடியாக எங்கும் பயங்கரமான நரியூளை கிளம்பிவிட்டது. அதைத் கேட்டபின்புதான் வாலறுந்த நரிக்குத் தன் தவறு தெரிந்தது. ஆனால் இனி அதனால் என்ன பிரயோஜனம்? அது சொன்ன புரட்சிக்கு அர்த்தம் என்ன என்பதுதான் எல்லா நரிகளுக்கும் தெரிந்து போயிற்றே!

முல்லை - 6

இரு முகில்கள்

வி. ஸ. காண்டேகர் தமிழில் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.

இரண்டுமே அவசரமாகப் போய்க்கொண்டிருந்தன. மேலே மோதியதும் ஒன்று மற்றொன்றைப் பார்த்தது.

அவை இரு முகில்கள்!

வெண்மேகம் மேன்மேலும் போய்க்கொண்டிருந்தது; கருமுகில் தாழத் தாழ வந்துகொண்டிருந்தது.

வெண்முகில் கருமுகிலை அசட்டையாகப் பார்த்து கணப்பொழுது கழித்து, "எங்கேயடா புறப்பட்டாய்!" என்று கேட்டது.

"மண்ணுலகிற்குப் போகிறேன். நீ எங்கே போகிறாய்?"

"சொர்க்கத்திற்கு?"

வெண்மேகம் ஆகாய விமானத்தைப் போல மேன்மேலும் பறக்கலாயிற்று. கருமுகில் உடைந்த ஆகாய விமானத்தைப்போல விர் என்று கீழே இறங்கலாயிற்று.

வெண்முகில் பெருமிதத்தோடு பின்னாற் திரும்பிப் பார்த்து.

அந்த கருமுகில்தான் எவ்வளவு அழகு! அதிலே பளிச்சென்று ஒளிவீசும் அந்த மின்னல்-அது தெய்வீகக் காட்சி!

வெண்முகில் ஏமாற்றத்தோடு தன்னைப்பார்த்துக் கொண்டது. மின்னலில் லேசான தோற்றங்கூட அதனிடம் தென்படவில்லை.

அது ஆவலோடு மேலே பார்த்தது. விரைவிலேயே தான் விண்ணுலகில் நுழையப்போகும் மகிழ்ச்சியில் கருமுகிலிற்தோன்றிய அந்தத் தெய்வீக ஒளியை அது மறந்துவிட்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அது திரும்பிக் கீழே பார்த்தது.

கருமுகில் எங்குமே தென்படவில்லை. பூமிமட்டும் ஸ்நான அறையிலிருந்து வெளிவரும் இளம் பெண்ணைப் போல தோன்றியது.

மரங்களில் வளைந்த கொடிகள் 'கிசுகிசு' மூட்டிய குழந்தைகளைப் போல நகைத்தன. பறவைகள் மரக்கிளைகளில் உட்கார்ந்து தங்கள் உடலைச் சிலிர்த்துக் கொண்டன.

வெண்முகில் சொர்க்க வாசலுக்கே போய்ச் சேர்ந்தது. தான் உள்ளே சுலபமாகப் போய்விடலாம் என்று அது எண்ணியிருந்தது.

ஆனால் காவலாளி அதை உள்ளே நுழைய விட வில்லை.

'உள்ளே ஒரே ஓர் இடந்தான் காலியாக இருந்தது. இப்பொழுது அது நிரம்பிவிட்டது" என்று அவன் சொன்னான்.

தன் பின்னால் வந்த பல வெண்முகில்களை இந்த வெண்முகில் வழியில் பார்த்திருந்தது. அது நினைவிற்கு வந்ததும், 'எல்லாம் நமக்குப் பின்னால் வந்தனவே தவிர, முன்னால் ஒன்று கூட இல்லையா!' என்று அது நினைத்தது.

வெண்முகிலுக்கு ஒரே திகைப்பாக இருந்தது. "சொர்க்கத்தில் இருந்த அந்த இடம் யாருக்குக் கிடைத்தது" என்று அது கேட்டது.

'ஒரு கருமுகிலுக்கு!' என்று காவலாளி சொன்னான்"

'கருமுகிலுக்கா?'

"ஆம்! வெப்பத்தால் கொதித்த மண்ணுலகைக் குளிர்விப்பதற்காக அது தன் வாழ்க்கையை - தன்னிடமுள்ள அனைத்தையும் - கொடுத்து விட்டது!" என்று ஆகாய வாணி பேசியது.

-வி.ஸ காண்டேகர் எழுதிய 'வெண்முகில்' என்ற நாவலில் வரும் உருவகக் கதை.

முல்லை - 8

மீனாட்சி

மௌஹதா　　　　தமிழில் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.

1

காமனை வென்றவன்

“ஓஹோ! யார், சங்கரனா? என்னை வழியனுப்பவும் என் பிரயாணம் சுகமாக அமைய வேண்டுமென்று சொல்லவும் இன்றைக்கே வந்துவிட்டாயா?” -சங்கரனுடைய நெருங்கிய நண்பன் கோபாலன் அவனை இவ்விதமாக அன்போடு வரவேற்றான்.

“என்ன செய்வது? நாளைக்குச் சரியாக அதே சமயத்துக்கு என் பிரசங்கம் இருக்கிறது; அதனால் இன்றே வரவேண்டியதாயிற்று. மேலும், நாளைக்கு நாம் இவ்வளவு ஒய்வோடு பேசவும் முடியாது.”

பல ஆண்டுகளாகவே சங்கரனுக்கும் கோபாலனுக்கும் இருந்த நட்பு வரவர வளர்ந்து, இப்பொழுது அவர்கள் தம்மை அண்ணன் தம்பிகளாக மதிக்கும் அளவுக்கு வந்திருந்தது. இவ்விரு நண்பர்களின் மன அமைப்பில் பெருத்த வித்தியாசம் இருந்தது. இவர்களுடைய நட்புக்கு எவ்வித இடையூறும் நேராமலிருந்ததற்கு அது ஒருவேளை காரணமாக இருக்கலாம். கோபாலனுக்கு விளையாட்டுப் பந்தயங்களில் ஆசை. டென்னிஸ், கிரிக்கெட், நீச்சு முதலிய விளையாட்டுக்களிலும் தேகப் பயிற்சிகளிலும் அவன் வல்லவன். ஒழுங்கோ சட்டமோ இல்லாமைதான் அவனுடைய ஒழுங்கு சட்டம். அவன் கற்பனை உலகில் உலாவுவான். மனம் போனபடி நடப்பான். நாளையைப்பற்றிக் கவலைப்படுவது அவனுடைய சுபாவமல்ல. அவன் இன்றைக்காக வாழ்ந்தான்-அதில்தான் அவனுக்கு முழுச் சுவையும் இருந்தது. கஸரத் செய்பவர்களிடத்தில் வழக்கமாக உள்ள அழகும் கவர்ச்சியும் அவனிடமும் இருந்தன. கலாசாலையில் படித்ததிலிருந்து இன்றுவரையில் இந்த நாற்பது வயதை அவன் ஒரு வண்டைப்போல ரசிகனாகவே கழித்திருந்தான்; இனி அவனுடைய இந்தச் சுபாவம் மாற வழியில்லை. இதனிடையே அவன் கல்யாணமும் செய்து கொண்டான்! எட்டு ஒன்பது வருஷங்கள் மண வாழ்க்கையையும் அநுபவித்தான். பிறகு மனைவி இறந்துபோனாள்;

குழந்தை குட்டியும் இல்லை. மறுபடி மணம் செய்துகொள்ள அவன் விரும்பவில்லை; அதில் ஏதும் பயன் இருப்பதாகவும் அவனுக்குத் தோன்றவில்லை. பட்டம் பெற்றதும், அவன் ஒரு வியாபாரக் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தான்; இன்றுவரையில் அதே இடத்தில் ஒட்டிக் கொண்டு இருக்கிறான். உலகின் எந்தக் கோடிக்குப் போக நேரிட்டாலும் அவன் சந்தோஷமாகப் போவான்; முகத்தைச் சற்றும் சுளித்துக்கொள்ள மாட்டான். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது அவனுடைய கொள்கை. நாளைக்கே அவன் ஐரோப்பாவுக்குப் புறப்படப் போகிறான். ஐந்தாறு ஆண்டுகள் அங்கே இருப்பான்.

சங்கரனுக்கும் ஏறக்குறைய நாற்பது வயதுதான் இருக்கும் ஆனால் அவன் சுபாவத்துக்கும் கோபாலனுடைய சுபாவத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருந்தது. கோபாலனைப் போலவே சங்கரனும் ஐந்து வயதுவரைக்கும் குழந்தையாகத்தான் இருந்தான்; அதன் பிறகு அவன் ஒரேயடியாகப் பெரியவனாகிவிட்டான். அவனுக்கு விளையாட்டோ, கூஸரத்தோ ஏதும் பிடிக்காது. குழப்பம், கூச்சல், களியாட்டம் என்றாலே தொலைவில் ஓடிவிடுவான். ஒழுங்கு மட்டுமே அவனுடைய வாழ்க்கையில் தனி இடத்தை ஏற்றுக்கொண்டது கோபாலன் தன் கற்பனைக்குச் சீடனாக இருந்தான்; சங்கரன் தன் பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தான். பி.ஏ. பட்டம் பெற்றதும் முதலில் அவன் கலாசாலையில் விரிவுரையாளரானான்; மெல்ல மெல்லப் பேராசிரியரானான். இருபதாவது வயதில் அவன் திருமணம் புரிந்துகொண்டான்; அயினும் அவன் மனைவி ஒரு பெண் குழந்தையை விட்டுப் போய்ச் சேர்ந்தாள். அண்ணனுக்குக் குழந்தை இல்லாததால், சங்கரன் தன் பெண் கலாவை அண்ணியிடம் வளர்க்க ஒப்பித்துவிட்டான். அந்தப் பெண் இப்பொழுது பி.ஏ. வகுப்பில் படிக்கிறாள். ஜனங்கள் அவளைச் சங்கரனுடைய பெண்ணாக நினைப்பதில்லை; அவனுடைய அண்ணன் மகள் என்றே எண்ணுகிறார்கள். அமைதியையும் ஒழுங்கையும் போற்றுபவனாகிய சங்கரன் மறுபடி மணம் செய்துகொள்ளவில்லை. சித்திரங்கள் வரைவது அவனுக்குப் பொழுதுபோக்கு; தனிமையில் நிறையப் படிப்பதில் அவனுக்குக் காதல். இவ்விரண்டிலும் ஈடுபட்டு, அவன் மானிட அன்பையே மறந்துவிட்டான். அவனுடைய உடலழகையும் புலமையையும் கண்டு பல பெண்மணிகள் அவனை நெருங்கினார்கள். அவன் அவர்களோடு உலாவுவான், பேசுவான், சிரிப்பான்; ஆயினும் அவனிடத்தில் விந்தையான நடுநிலைமை ஒன்று இருந்தது. சித்திரகாரனாதலால் அவன் எழிலை ஆராய்ந்து வந்தான். அழகிய பெண்மணிகளோடு பேசுவதனால் அவன் மகிழ்ச்சியடைந்தான்; அமைதியையும் ஆரோக்கியத்தையும் உணர்ந்து வந்தான்.

பேசும் கலையிலும் அவன் நிபுணன். ஒருத்தி சேலையுடுத்திருக்கும் அழகு, இன்னொருத்தியின் புடைவைத் தலைப்பு அலையலையாகக் காற்றில் மிதக்கும் காட்சி, பின்னுமொருத்தி, கிழிந்துபோனாலும் தேவலை என்று எண்ணியவள்போல், அழுத்தி இறுக்கிக் கட்டிய ரவிக்கையின்

விம்மிதம், ஓர் இளம் பெண்ணின் கூந்தல் காற்றோடு போட்டியிட்டு விளையாடும் விந்தை, இன்னொருத்தியின் அழகிய வளைந்த புருவம், இன்னொரு யுவதியின் மதர்த்த கண்கள், தேனைப் பாய்ச்சும் ஒரு மோகினியின் இதழ்கள், அங்கையற்கண்ணி ஒருத்தியின் வனமுலைகள், கண்ணைக் குளிர்வித்து யானைபோல நடக்கும் ஒருத்தியின் நிதம்பங்கள், ரோஜா வதனமுள்ள மற்றொருத்தியின் அழகிய செந்நிறச் சீரடிகள்- இப்படியாகப் பலவித எழில் சிருஷ்டிகளைப்பற்றி மணிக்கணக்காகப் பேசி அவன் தன் நண்பர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதோடு, தானும் அந்த ஆனந்தத்தை அநுபவிப்பான். இப்படியிருந்துங்கூட, அவனுக்குப் பெண்களைப்பற்றி இருவிதமான மாறுபட்ட கொள்கைகள் இருந்தன என்பதைக் கூர்ந்து பார்ப்பவர்கள் அறிய முடியும். சில சமயம் அவன் பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றுவான்; மற்றும் சில சமயம் அவர்களை அரக்கிகள் என்று திட்டுவான். இவ்விரு மாறுபட்ட அலைகளின் காரணமாக, அவனுக்குப் பெண்களிடம் பற்றை விடப் புறக்கணிப்பே மிகுந்து இருப்பதாகத் தோற்றியது. வெவ்வேறு இயல்புள்ள ஆண்களும் பெண்களும் இந்த அசட்டைக்குப் பலவிதமாக அர்த்தம் செய்துகொண்டார்கள்; ஆயினும் இயல்புக்கும் ஒழுங்குக்கும் பழக்கத்துக்கும் அடிமையான சங்கரன் எப்போதுமே அதைப் பொருட்படுத்தவில்லை.

அவ்விரு நண்பர்களும் மணிக்கணக்காகப் பேசினார்கள். சங்கரன் கோபாலனிடம் தனக்கு வேண்டிய புத்தகங்களின் ஜாபிதாவை எழுதிக்கொடுத்து அவற்றை இங்கிலாந்துக்குச் சென்றதும் வாங்கி அனுப்பச் சொன்னான். அவனுக்குச் சில சித்திரங்களின் நகல்களும் வேண்டியிருந்தன; அதையும் விவரித்துச் சொன்னான். கடைசியில் பேச்சு ஒருவாறு முடிந்தது. சங்கரன் திரும்பிப்போகப் புறப்பட்டான்.

புறப்படும்பொழுது சிரித்துக்கொண்டே, "இம்மாதிரியான சமயத்தில் ஒவ்வொருவனும் உன்னிடம், 'உடம்பைப் பார்த்துக்கொள்" என்றுதான் சொல்வான். நான் அதோடு பின்னும் கொஞ்சம் சேர்த்து, 'உடம்போடு மனத்தையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்' என்று சொல்லுகிறேன் என்றான்.

கோபாலன் கலகலவென்று நகைத்து "சரியான பேச்சுத்தான் ! உடலையும் மனத்தையும் குறித்து இதுவரையில் நான் கவலைப்பட்டதே இல்லை; இனிமேலா கவலை கொள்ளப்போகிறேன்? சங்கரா, நான் மனம் போனபடி நடப்பவன்; உடல் என்ன சொல்கிறதோ அதன்படி அதைச் செய்யவிடுவதும், மனம் எங்கெல்லாம் போக விரும்புகிறதோ அங்கெல்லாம் அதைப் போகவிடுவதுமே என் கொள்கைகள். உனக்கும் சொல்லுகிறேன்; நான் இல்லாத சமயத்தில் நீயும் உன் மனத்தையும் உடலையும் கொஞ்சம் கவனித்துக்கொள்!" என்றான்.

சங்கரன் சிறிது அசட்டை கலந்த புன்னகையோடு, "ஹூம்! வயது நாற்பதாகிவிட்டது. இதுவரையில் அவை இரண்டும் என்னை ஏமாற்றியதில்லை" என்றான். சற்றுக் கழித்து மீண்டும், "நீ மனம்

போனபடி நடப்பவன்; நான் அப்படி அல்ல, பழக்கத்தையும் ஒழுங்கையும் போற்றுகிறவன். ஊகும், என்னைப்பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம்'' என்றான்.

நீண்ட பிரிவை நினைந்தோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலே, கோபாலன் தன் இயல்புக்கு மாறாகக் கம்பீரப் பான்மையோடு பேசலானான்: 'எதைக் குறித்துமே நான் கவலைப்படுவதில்லை. ஆனால் உன்னைப்போன்ற சிந்தனை யாளன் இவ்வளவு கர்வத்தோடு பேசுவது அழகாக இல்லை. சங்கரா, காமனுடைய அம்புக்கு இலக்காகாத வரைக்குந்தான் இந்த வீறாப்பெல்லாம் செல்லும்! ஒரு மெல்லியலாளின் கூரிய கடைக்கண் நோக்கை உதவியாகக் கொண்டு, மன்மதன் அம்பை எய்யும் கணத்திலே, உன் வாழ்க்கை முழுவதிலுமுள்ள பழக்கங்களும் ஒழுங்குகளும் சிதைந்துபோகும்; உன் வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடும். காமனை வெல்ல முடியாது என்பது உனக்குத் தெரியாதா?

சிந்தனையிலே ஆழ்ந்த சங்கரன், 'காமனை வெல்ல முடியாது என்பது எனக்கும் தெரியும். ஆனால் அவன் உன்னைப்போல மனம்போனபடி நடப்பவனல்ல என்பதும் தெரியும். காமன் தன் தொழிலில் கெட்டிக்காரனாகத்தான் இருப்பான். எனவே, வெற்றி எளிதாகத் தென்படும் இடத்தில்தான் அவன் தன் அம்பை எய்வான். என்வரைக்கும் அவன் பார்வை எட்டுவது, நடக்கக்கூடிய செயலாக எனக்கு தோன்றவில்லை'' என்றான்.

பிறகு சிறிது நேரம் வரையில் விவாதம் நடந்தது. முடிவில் இரு நண்பர்களும் பிரிந்தனர்.

2

அவனிடம் இருந்தது

தனஞ்சயன் தன் அறையில் தனியே உட்கார்ந்திருந்தான். அண்ணனுடைய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு தனிக் கட்டிடத்தில் அவன் வசித்து வந்தான். அவன் உட்கார்ந்திருந்த தாழ்வாரத்தை உயரமான அடர்ந்த மரங்கள் மதிள் சுவரைப்போல மறைத்திருந்தன. சாலையில் செல்லும் எவனும் அங்கே ஒரு வீடு இருப்பதாகவே எண்ண மாட்டான். தாழ்வாரத்தில் அருகில் புது மாதிரியான ஸ்நான அறை; பின்கட்டில் சமயலறை; விருந்தாளிக்குத் தனி அறை; அதற்குப் பக்கத்தில் சாமான்கள் நிறைந்த அறை; எதிரே பெரிய காலரி. விருந்தாளிகளுள் கோபாலனைப் போன்ற சில நண்பர்கள் எப்போதாவது அவன் வீட்டுக்கு வருவார்கள். சில சமயம் அவன் பெண் கலா அந்த வீட்டை முற்றுகையிடுவாள். அவளோடு தற்காலத்திய இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்த ஒரு சேனை இருக்கும். இளமையின் இந்த எதிர்ப்பைத் தனஞ்சயன் பெருமையும், வருத்தமும், வியப்பும், ஆவலும் கலந்த உணர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருப்பான்; கடைசியில் அவர்கள் செய்துள்ள அமர்க்களத்தைச் சரிப்படுத்தி ஒழுங்காக்கும் வரையில் அவனுக்கு நிம்மதி ஏற்படாது.

முன்கட்டு அறையில்தான் தனஞ்சயனுடைய நடமாட்ட மெல்லாம். அறையின் ஒரு புறமாக, மேலிருந்து இழுத்து மூடும் கதவுள்ள அவனுடைய மேஜை இருந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு நாற்காலியும், எதிரே இரண்டு மூன்று நாற்காலிகளும் இருந்தன. ஒரு மூலையில் விலையுயர்ந்த மரக்கட்டில் இருந்தது. அதனருகில், சுமார் ஐம்பது ரூபாய் பெறுமானமுள்ள சாய்வு நாற்காலி இருந்தது. சில அலமாரிகள், ஒரு புறத்துச் சுவர் முழுவதையும் மறைத்துக் கொண்டு நின்றன. அதுதான் தனஞ்சயனுடைய வாசகசாலை. மற்றொரு மூலையிலும் அதன் பக்கத்துச் சுவர்களிலும் ஓவியங்களும், ஓவியம் வரைவதற்கு வேண்டிய கருவிகளும் இருந்தன. இரண்டு மூன்று சித்திரப் பலகைகள், வர்ணம் பெட்டிகள், தூலிகைகள், 'பிளேட்டு' புதிய கிழிவெற்றுக் காகிதம் முதலியவை ஒழுங்காக வைக்கப் பட்டிருந்தன. ஒரு சிறு மேஜையில் 'மாடலு'க்கு உதவும் ஓவியங்கள் இருந்தன. இவற்றைத் தவிர, 'ரோடீன்' வரைந்த ஓவியங்களின் இரண்டொரு நகல்களும் சில வர்ண ஓவியங்களும் விளங்கின.

தனஞ்சயன் சிந்தனையில் ஆழ்ந்தவனாய், பாதி வரைந்த ஒரு சித்திரத்தின் முன்னால் நின்றிருந்தான். அவன் கடிகாரத்தைப் பார்த்தான்; இரண்டரை மணி. சமையற்காரனைக் கூப்பிட்டுத் தேநீர் தயாரிக்கச் சொன்னான். சிறிது நேரம் யோசித்தான்; பிறகு, 'இல்லை, இன்று ஏனோ படம் எழுத மனம் சரியாக இல்லை. ஊகும்!' என்று முணுமுணுத்தான். மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தான். ஒரு சிகரெட்டை வாயில் பற்றவைத்துக்கொண்டு, காலரியில் சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்தான்.

சிகரெட்டின் புகையைப் பார்த்துக்கொண்டே, சாய்வு நாற்காலியில் படுத்திருந்த அவன், கற்பனையுலகில் பறக்கலானான். கோபாலன் ஐரோப்பாவுக்கு போய் ஐந்து ஆண்டுகள் கடந்துபோயின. அடிக்கடி அவன் கடிதங்கள் வரும். அவற்றில் அநேகமாக ஐரோப்பிய வாழ்க்கையைப்பற்றி ரசமான வர்ணனைகள் இருக்கும். தனஞ்சயன் மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தான். மேலே பத்து நிமிஷங்கள் கூட ஆகவில்லை என்பதைக் கண்டதும் அவன் பெருமூச்சு விட்டான்; அவனுடைய முகத்தில் ஒரு விசித்திரச் சிரிப்புத் தோன்றியது.

'தனஞ்சயா! உனக்கா இந்த நிலைமை வரவேண்டும்! இந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளாக எந்தப் பெண்ணும் உன் அமைதியைக் குலைத்ததில்லை; உன் தினசரி வேலைத் திட்டங்களுக்குத் தடை விளைவித்ததில்லை. உன்னோடு பழகிய பெண்கள்தாம் எப்படிப் பட்டவர்கள்! பெரிய விதூஷிகள் சிலர்; சங்கீதத்தில் தேர்ந்தவர்கள் சிலர்; சித்திரவேலையைப்போல ஓவியம் வரைய வல்லவர்கள் சிலர்; பளிங்குச் சிலைகளைப்போன்ற அழகிகள் சிலர்! ஆம்; இவர்கள் யாவரும் என்னோடு நட்புரிமை கொண்டவர்கள்; சிநேகிதிகள். ஆனால் என் உள்ளத்தில் இவர்களுக்குத் துளியாவது இடம் இருந்ததா? விஷமமுள்ள அந்த அதிகப்பிரசங்கி குஸுமா! குயிலைப்போலக் கூவும் ஸரயூ! ஆழ்ந்த

மதர்த்த கண்களையுடைய அலகா! இப்படி எனக்கு எத்தனையோ தோழிகள். இவர்கள் யாவரும் என் வாழ்க்கைச் சோலையின் முகப்பிலே விளையாடுகின்றனர். என் வாழ்க்கைக் கடலை இவர்களில் ஒருத்தியும் கலக்க முடியவில்லை' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான். திடீரென அவன் சிந்தனை நின்றது. அவனுடைய முகம் மாறியது. அவன் கைகள் நடுங்கின. அவன் கண்கள் மூடின. மூன்று ஆண்டுகளுக்கு முந்திய சம்பவம் அவனுக்கு ஞாபகம் வந்தது.

முழு நிலவு எங்கும் பரந்திருந்தது. விசாலமான அழகிய பங்களா வாசலில் பெண்கள் கும்மியடித்தனர். அக்கம் பக்கத்தில் நாற்காலிகளிலும் ஜமக்காளத்திலுமாக நிறையப் பேர் உட்கார்ந்திருந்தனர். அந்த நாற்காலிகளில் ஒன்றில் தனஞ்சயனும் பக்கத்தில் அவனுடைய நண்பன் ஒருவனும் அமர்ந்திருந்தனர். இடையிடையே சில பெண்களும் இளைஞர்களும் வந்து அவனிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு போனார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் நண்பனும் வீட்டுக்குத் திரும்பிவிட்டான். எழுந்து வேறு இடத்தில் உட்காரச் சோம்பிய தனஞ்சயன் அங்கேயே பாதி இருட்டில் இருந்தான். சில சமயம் தலை தூக்கிக் குதிக்கும் அந்தப் பெண்மணிகளை அவன் ஒரு கணம் கவனித்துப் பார்ப்பான். தன் பெண் கலாவின் அபிநயத்தைச் சற்றுப் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் பார்த்துவிட்டு, அவன் வேறுதிசையில் முகத்தைத் திருப்புவான். கும்மி முடிந்தது; மறுபடியும் மற்றோர் ஆட்டத்துக்கு வேறு பெண்கள் வந்தனர். அதிக குள்ளமும் அதிக உயரமும் இல்லாத, நடுவயதுள்ள பெண்மணி ஒருத்தி அந்த வட்டத்தில் கலந்து கொண்டாள். கும்மி ஆரம்பித்தது. கலா சற்று இளைப்பாறுவதற்காக வேறிடம் சென்றிருந்தாள். கும்மியில் வட்டமிட்ட பெண்களின் அபிநயத்திலோ குரலிலோ ஒன்றும் கவர்ச்சி தென்படாமையால் தனஞ்சயன் வேறு கவனமாக இருந்தான். அதற்குள் அந்தப் புதிய பெண்மணி வந்ததும் அவளை அவன் பார்த்தான்; உடனே அவன் உடலில் மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது. அவனுள்ளே வேற்று நினைவோடு சேர்ந்திருந்த கலைஞனின் அம்சம் மறுபடி விழித்துக் கொண்டது. அந்த வட்டத்தில் அந்தப் பெண் இடையிடையே தெளிவாகத் தென்படுவாள்; பிறகு மெல்ல மெல்ல மறைவாள். சற்று வயதாகியிருந்தும் அவள் மற்றப் பெண்களை ஒளியிழக்கச் செய்துவிட்டாள். பொங்கும் எழில் இல்லாவிட்டாலும், தன் தனி அழகினாலும், வேதனை நிரம்பிய அபிநயத்தினாலும், துன்பம் தேங்கிய கண்களில் வீசிய தழல்களினாலும் அவள் மற்றவர்களைத் தோற்கடித்தாள். அவன் அந்தப் பெண்மணியின் வடிவத்தை உற்றுப் பார்க்க லானான். அந்த விளக்கு வெளிச்சத்தில் அவளுடைய உடலின் உண்மை நிறத்தை அறிவது சிரமமாக இருந்தது. ஆனால் அந்த நிறத்தைச் சிவப்பு என்று சொல்ல முடியாது என்று மட்டும் அவன் அறிந்துகொண்டான். ஓவியத்துக்கும் சிற்பத்துக்கும் வேண்டிய அளவுக்கு, அவள் உயரமாகவும் இல்லை. கவிகள் அடிக்கடி வர்ணிக்கும் யானைமத்தகத்தைப் போன்ற வனமுலைகளும் அவளுக்கு இல்லை.

அப்படியானால் அவளிடம் என்ன இருந்தது? அவன் இருந்த அத்தனை தொலைவிலிருந்து, விளக்கு வெளிச்சத்தில் வட்டமிடும் கொடிபோன்ற அவள் தேகத்தைத் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது இயலாதகாரியம். ஆயினும் கும்மியடித்த அந்தப் பெண்களின் வட்டத்திலே அவளை விட அதிக அழகிகள் இருந்தும், அவளிடம் இருந்தது போன்ற கவர்ச்சி மட்டும் வேறு எவரிடமும் இல்லை என்பதிலே சந்தேகத்துக்கு இடமில்லை. தன்னைப் போலவே மற்ற ஆண்களும் பெண்களுங்கூட இந்த உண்மையை உணர்ந்திருப்பதை அவனுடைய கூரிய பார்வை கண்டுகொண்டது. அந்த உண்மையை அறிந்தபின்பும், தனக்கு ஏன் அவ்வித அதிர்ச்சி ஏற்பட்டது என்பது அவனுக்கு விளங்கவில்லை. சற்று நேரம் இந்தச்சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தான். அதற்குள் இரண்டு மூன்று பாட்டுகள் முடிந்தன. அவன் அவளை புறக்கணிக்க, அவன் பார்வை முன்பின் தெரியாத அந்தப் பெண்ணின் நுட்பமான அபிநயத்தையும் தனிப் பண்புகளையுமே கவனிக்க ஆரம்பித்தது.

பிறகு அந்தப் பெண் வெளியே வந்தாள். தனஞ்சயன் இப்படி எத்தனையோ கும்மியாட்டங்களை பார்த்திருக்கிறான். இனிய குரலில் பாடும் எத்தனையோ ரமணிகளின் பாட்டுகளை அவன் கேட்டிருக்கிறான். ஆனால் இப்படித் திடீரென்று ஒரு பெண் கும்மியடிக்க வந்து பிறகு மறைந்துபோவது அவனுக்குப் புதிதாக தோன்றியது. அற்புதமான அழகு அவன்முன் தென்பட்டு மறைந்தாற்போல் இருந்தது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் மனசில் தோன்றக்கூடிய இனியதும் பயங்கரமான கலவரம், அன்று தனஞ்சயனுடைய உள்ளத்திலும் தோன்றியது. ‘இதற்கு முன்னால் இது நிகழ்ந்ததில்லை. இன்று மட்டும் இப்படி நடப்பானேன்?’ என்பது அவனுக்கு விளங்கவில்லை. கடைசியில் அவனுக்கு முன்பின் பழக்கமில்லாத அந்தப் பெண்ணின்மீது கோபம் வந்தது. அவனுடைய அறிவு அவளுடைய அபிநயத்திலும் உடலழகிலும் இருந்த குற்றங்களை ஆராயத் தொடங்கியது. ஆனால் அவனுடைய உள்ளம் இந்தக் காரியத்தில் அவனோடு ஒத்துழைக்க மறுத்தது.

3
வேதனை

அவன் இம்மாதிரியான அமைதியற்ற மனநிலையில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருக்கையில், அவனுடைய பெண் கலா, முன்பின் அவனுக்குப் பழக்கமில்லாத அந்தப் பெண்மணியையே அழைத்துக்கொண்டு அவனிடம் வந்தாள். அந்தப் பெண்மணியின் கையில் ஒன்றும், கலாவின் கையில் இரண்டுமாகப் பால்நிறைந்த கோப்பைகள் இருந்தன.

கலா தனஞ்சயனை நோக்கி ஒரு கோப்பையை நீட்டியவண்ணம், “சிற்றப்பா, நீங்கள் இவ்வளவு இருட்டில் உட்கார்ந்திருக்கிறீர்களே, இன்றைக்கு உங்களுக்குப் பாலே கிடைத்திருக்காது! நல்ல வேளை, எனக்கு ஞாபகம் வந்தது” என்றாள்.

தன் கூச்சத்தை மறைப்பதற்காக அந்த அறிமுகமில்லாத ஆரணங்கு, 'அவருடைய பெண்ணாக இருக்கும் நீ இவ்வளவு கூடவா ஞாபகத்தோடு செய்யக்கூடாது?'' என்று இடையிலேயே பேசினாள்.

கலாஅருகிலிருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு "சித்தி, நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? இந்த நாற்காலியில் உட்காருங்கள். சிற்றப்பா, உங்களை உட்காரச் சொல்லுவாரென்று எண்ணவேண்டாம்" என்று கூறிவிட்டுத் தனஞ்சயனிடம் "சிற்றப்பா, இதோ உங்களிருவரையும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இவர் என் சிற்றப்பா தனஞ்சயர்; புரொபஸர், ஓவியர். மீனா சித்தி நாட்டியங்களிலும் கும்மியாட்டத்திலும் தேர்ந்தவர்; ஓவியம் எழுதமுயன்று வருகிறார். அவ்வளவுதான், என் வேலை முடிந்துவிட்டது. நான் போகிறேன்'' என்றதும், அங்கிருந்து விர்ரென்று போய்விட்டாள்.

கலா சென்றதும் அவ்விருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தனர். தனஞ்சயனைப்போன்ற பிரசித்தி பெற்ற ஆடவனோடு இவ்வளவு சுலபமாகப் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருந்தும், மீனாட்சிக்கு எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று தோன்றவில்லை. எனவே, பால் குடிப்பதிலேயே அவள் தன் கவனத்தைச் செலுத்தினாள். ஆனால் தனஞ்சயனுக்கு இம்மாதிரி அறிமுகமில்லாத பெண்களோடு பேசிப் பழகுவது புதிதாக இல்லை; ஆயினும் அன்று அவன் நெஞ்சம் ஏனோ திக் திக்கென்று அடித்துக் கொண்டது. அந்தக் கணத்தில் உண்டான தன் பலவீனத்தைக் கண்டு சினங்கொண்ட தனஞ்சயன், பேசும் கருத்தோடு மீனாட்சியைப் பார்த்தான். மீனாட்சியும் அந்தக் கணத்திலேயே அவனைப் பார்த்தாள். அவன் மீண்டும் ஒரு முறை அதே மின்னதிர்ச்சியை உணர்ந்தான். அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. மீனாட்சிக்கும் ஏறக்குறைய அவ்வண்ணமே தூக்கிவாரிப்போட்டது. அவன் கைகள் நடுங்கின. கோப்பையிலிருந்து பால் தளும்பி அவள் சேலையில் சிந்தியது.

அதற்குள் தனஞ்சயன் தன்னைச் சமாளித்துக்கொண்டான். அவன் மீனாட்சியின் கையிலிருந்து கோப்பையையும் தட்டையையும் வாங்கிக் கீழே வைத்துவிட்டு, அவள் கைக் குட்டையை எடுக்குமுன்பே, வெட்டிவேர் அத்தர் மணம் வீசிய தன் பட்டுக் கைக்குட்டையை அவளிடம் கொடுத்தான்.

மீனாட்சி கலவரத்தோடு, "வேண்டாம், வேண்டாம்; இந்த உயர்ந்த கைக்குட்டை கெட்டுப்போகும்' என்றாள். 'பரவாயில்லை' என்று சொல்லியபோது தனஞ்சயன் முகம் சிவந்தது. பெண்களுக்கு மரியாதை செலுத்தும் இந்த எண்ணம் திடீரென்று உதித்ததற்குக் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. உள்ளுக்குள்ளே அவன் மனம் குமுறியது; அவன் தன் உதடுகளை மடித்துக் கொண்டான். கைக்குட்டை விஷயத்தில் அதிகமாக ஏதும் சொல்ல அவளுக்குத் துணிவு இல்லை. அவள் அந்தக் கைக்குட்டையாலேயே தன் சேலையில் சிந்திய பாலைத் துடைத்தாள்; அதே வேகத்தில் தன் கைகளையும் முகத்தையுங்கூடத் துடைத்துக்கொண்டாள். பிறகு கைக்குட்டையைத் திருப்பிக்

கொடுத்துக்கொண்டே, "நிரம்ப வந்தனம். வெட்டிவேர் அத்தர் மிகவும் உயர்ந்ததென்று தெரிகிறது" என்றாள்

தனஞ்சயன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, கைக்குட்டையைத் திரும்பப் பெற்று, "இந்தக் காலத்துக்கு வெட்டி வேரைவிடச் சிறந்த அத்தர் வேறு ஏது?" என்றான். பிறகு சாதாரணமாக விசாரிப்பவன் போல, "நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? இங்கேதானோ? என்று கேட்டான்.

இதனிடையே மீனாட்சி தன் சுய நிலையை எய்தினாள். "ஆமாம், உங்களைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் வெகுநாளாக இருந்தது. ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இன்று நீங்கள் வந்தது நல்லதாயிற்று என் அக்காள் பெண்ணுக்கும் கலாவுக்கும் நெருங்கிய நட்பு உண்டு. அதனால் தான் இன்று எல்லா வேலைகளையும் நான் கலாவிடம் ஒப்பித்திருந்தேன்" என்றாள்.

தனஞ்சயன் தனக்கு இயல்பான பற்றற்ற தன்மையோடு, அமைதியாக, "எனக்கு நாட்டியம் கும்மி எல்லாம் பிடிக்கும். அதனால் உங்கள் பெயரை நான் ஏற்கனவே பல தடவை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனா இதுவரை எங்கும் உங்களைப் பார்க்க முடிந்ததில்லை" என்றான். சிறிது நேரம் கழித்து, "ஓகோ! உங்கள் அக்கா பெண்ணுக்கு கலா தோழியானதால் நீங்கள் அவளுக்குச் சித்தி ஆனீர்களோ? ஹூம்! கலாவுக்கு இம்மாதிரி உறவு முறையை ஜோடிக்கும் கலை நன்றாகத் தெரியும்; வரவர அவள் அதில் தேர்ச்சியும் பெற்றுவருகிறாள். சரி, ஒரு விஷயம் கேட்கிறேன்: நான் சிகரெட் பிடிப்பதில் உங்களுக்கு ஏதும் தடை இல்லையே?" என்றான்.

"எனக்கு ஒரு தடையும் இல்லை" என்று கூறி, அவள் புன்முறுவல் பூத்தாள். அந்த முறுவலிலிருந்த இனிமை அவனைத் திகைக்கச் செய்தது.

தனஞ்சயன் மீனாட்சியை ஒரு பார்வை பார்த்தான். குளிர்காலத்து ரோஜாக் குளுமையில் ஹீனா அத்தரினால் கிடைக்கும் இன்பம் அந்த முறுவலில் அவனுக்குத் தென்பட்டது. அதே சமயத்தில் அவன் பார்வை அவளுடைய கண்களின் மீது விழுந்தது. மிதப்பு, சஞ்சலம், வெறி ஆகியவற்றுக்குப் பதிலாக, விவரிக்க முடியாத துன்பத்தின் ஆழத்தையும் கூட்டில் அடைபட்டு விடுபடத்துடிக்கும் ஜீவனின் தவிப்பையும் அவன் அவற்றில் கண்டான்.

அதற்குள் மீனாட்சி, "எனக்கு ஓவியக்கலையில் பிடிப்பு உண்டு, எப்பொழுதாவது, உங்களுக்கு ஓய்வு இருக்கும் பொழுது, நான் உங்களிடம் வரலாமா? மாணவியாகி உங்களைத் தொந்தரவு படுத்த நான் வரவில்லை; நீங்கள் சித்திரம் வரைவதைப் பார்க்கத்தான் வருவேன்' என்றாள்.

அந்தக் குரலின் இன்னிசை அவனுடைய உள்ளத்தில் ஒரு தனி உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. நிரந்தரமான அமைதியையே வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருந்த அவனுடைய வாழ்க்கையில், அமைதியின்மை ஒரு கடலாகப் பொங்கியது என்றால் அவனுடைய வேதனை எப்படி இருந்திருக்கும் என்று சிந்தித்துப்பாருங்கள் அப்பொழுது அவன் அந்தத் தெளிவற்ற வேதனையைத் தான் உணர்ந்தான்.

சிறிது நேரம் அவன் சற்று அச்சமும் கொண்டான். ஆனால் இம்மாதிரி விஷயங்களில் அவன் பெரிதும் தன்மதிப்பு உள்ளவன். வருஷக்கணக்காக அவன் தன் ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் காத்துவந்தவனாதலால் அவனிடத்தில் எங்கும் காண்பதற்கரிய பற்றற்ற தன்மை இருந்தது. அவன் மிகவும் அமைதியாக, 'கட்டாயம் வாருங்கள்' வந்து ஏதோ கற்றுக்கொண்டு போங்கள். நீங்கள் வர விரும்பபும்போது கலாவிடமாவது வேறு யாரிடமாவது முன்னதாகத் தகவல் அனுப்புங்கள் என்றான்.

"வந்தனம்" என்று சொல்லிக்கொண்டே மீனாட்சி எழுந்தாள். தன் கோப்பையோடு அவனுடைய கோப்பையையும் அவள் எடுத்துக்கொண்டாள். அப்பொழுது அவளுடைய சிறு கைக்குட்டை அங்கே விழுந்துவிட்டது. அவள் அதைக்கவனிக்காமல் தனது இயல்பான புன்முறுவலுடன் அங்கிருந்து நகர்ந்தாள். ஆனால் தனஞ்சயன் அந்தக் கைக்குட்டையைப் பார்த்தான்; தாவி அதை எடுத்தான்; அறிவு அவனைச் செயலுக்குத் தூண்டு முன்பே, அவன் தன் கைக்குள் அந்தக் கைக்குட்டையை இறுக்கி அழுத்தினான். அந்தச் செயலோடுகூடவே அவன் வாயினின்று சினமும் வியப்பும் துயரமும் கலந்து ஓர் ஆனந்தக் குரல் வெளிப்பட்டது.

அவன் மெதுவாக. "மீனாட்சி" ! என்று கூப்பிட்டான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"இதோ உங்கள் கைக்குட்டை விழுந்துவிட்டது" மீனாட்சி இரண்டடி திரும்பி, இரு கோப்பைகளையும் ஒரே கையில் வைத்துக்கொண்டு மற்றொரு கையால் கைக்குட்டையை வாங்கிக்கொண்டாள். பின்பு குறுநகையோடு அவள் போய்விட்டாள்.

தனஞ்சயன் இந்தக் காட்சி முழுவதையும் தன் உள்ளத்தில் திரும்பப் பார்த்துக்கொண்டான். மூன்று வருஷங்களுக்கு முன்னால் அவன் கண்ட காட்சி அது. அவனுடைய அமைதியான வாழ்க்கையில் அன்று முதன் முதலாக மீனாட்சி கலவரமாக வந்து முளைத்தாள். அவன் சற்றுத் தவிப்போடு மறுபடி கைக்கடியாரத்தைப் பார்த்தான். நாலரை அடிக்க இன்னும் சிறிது நேரம் இருந்தது. அவன் ஏமாற்றத்தோடு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அவனுக்குப் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அந்த முதற் சந்திப்புக்குப் பிறகு ஏழெட்டு நாட்கள் வரையில் அவன் மீனாட்சியைப் பார்க்கவில்லை. பின்பு ஒரு நாள் திடீரென்று அவள் அவன் வீட்டுக்கு வந்தாள். ஓவியம் சங்கீதம், இலக்கியம் முதலிய பல விஷயங்களைப்பற்றி அவர்கள் பேசினார்கள். தேநீர் அருந்தினார்கள், ஊர்ப் பேச்சுக்களைக் கொட்டி அளந்தார்கள்.

அதற்குப் பிறகு தனஞ்சயனும் சில சமயம் மீனாட்சியின் வீட்டுக்குப் போவான்; ஆனால் பெரும்பாலும் அவள்தான் அவனிடம் வருவாள்.

4

மாறுதல்

ஆரம்பத்தில் தனஞ்சயன் மற்றப் பெண்களோடு சகஜமாகப் பேசிப் பழகுவதுபோலவே மீனாட்சியிடம் பழக முயன்றான். ஆனால் மீனாட்சியோடு அதிக நேரம் அவன் அப்படிப் பழக முடிய வில்லை. கிண்டலும் பரிகாசமுமாய் பேச்சைத் தொடங்கினாலுங்கூடச் சற்று நேரத்துக்கொல்லாம் அவன் கம்பீரமாகி விடுவான். மெல்ல மெல்ல அவர்கள் பழக்கம் வளர்ந்தது. மீனாட்சி அவனிடமிருந்து ஓவியக் கலையிலும் இலக்கியத்திலும் சிறிது பயிற்சி பெற்றாள். ஆயினும் சில நாட்களுக்குப் பிறகு, அறிவைப் போதிக்கும் எண்ணத்திலிருந்து மாறுபட்ட, வல்லமை வாய்ந்த சிந்தனையொன்று தனஞ்சயனிடத்தில் உதித்தது. மீனாட்சியின் அறிவைவிட, அவளுடைய தேக எழிலைவிட மேலான அவளுடைய ஆத்மாவின் அழகும், அவளுடைய வாழ்க்கையில் அறிய இயலாமலிருந்த ஆழமும் அவன் கவனத்தை மேன்மேலும் கவர்ந்தன. அப்பொழுதும் அவன் மீனாட்சியின் உள்ளத்தை உள்ளூற அவளுக்கு இருக்கும் விருப்பத்தை அறிய முடியவில்லை. அவளுடைய உள்ளத்திலும் தான் நினைப்பதுபோன்ற எண்ணங்களே தோன்றியிருக்கும் என்று அவன் சில சமயம் எண்ணுவான்; உடனே, தான் அப்படி எண்ணியது தவறு என்று உணருவான்.

ஒரு சம்பவம் இப்போது அவன் கண்முன்னால் நின்றது. மீனாட்சி சுமார் இரண்டு மணிநேரமாக அவனோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். சமையற்காரனும் வேலையாட்களும் வராமையால் அன்று மீனாட்சியே தேநீர் தயாரிக்கவேண்டியிருந்தது. இருவரும் தேநீர் அருந்தினார்கள். மீனாட்சி வீட்டுக்குத் திரும்புவதற்கு எழுந்தாள். தனஞ்சயன் வாசல்வரையில் அவளோடு வந்தான். வாசற்படிக்கு வெளியே கால் வைத்ததும், "நான் போய்வருகிறேன்" என்று அவள் சொன்னாள்.

அவன் பதிலுக்கு உணர்ச்சி ததும்பிய குரலில், 'சரி போய் வருகிறீர்களா? மறுபடி எப்போதாவது வாருங்கள், எப்போது வருகிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே கைகுலுக்குவதற்காகத் தன் கையை நீட்டினான்.

மீனாட்சி முதலில் திடுக்கிட்டாள்; பிறகு வேறு புறமாகப் பார்த்துக்கொண்டே தன் கையை நீட்டினாள். அவன், சாதாரணமாகக் கைகுலுக்கும்போது அழுத்துவதைவிடச் சற்றுப் பலமாகவே அவள் கையை அழுத்தினான். அவள் போய்விட்டாள். பெண்களோடு இப்படிக் கைகுலுக்கும் பழக்கம் அவனுக்கு இல்லை. ஆயினும் இந்தத்தடவை அவன் கைகுலுக்கினான். ஏன் அப்படிச் செய்தான்? தனஞ்சயனுடைய உள்ளமும் அறிவும் இந்தக் கடுகை மலையாக்கி, மணிக்கணக்காக அதைப்பற்றிச் சிந்தித்தன. இந்தச் சிறு சம்பவத்தை மறக்க அவன் அடிக்கடி முயன்றான்; அது முடியவில்லை. இதற்குப் பிறகு

இம்மாதிரியான சந்திப்புகளின் முடிவில் அவன் தன் கையை நீட்டுவான்; அவளும் பதிலுக்குக் கை கொடுப்பாள். இதன் பயனாக இருவருக்கும் நெருங்கிய ஸ்பரிசம் ஏற்பட்டது. ஆனால் இம்மாதிரியான தருணங்களில் தனஞ்சயன் மீனாட்சியை நேரே பார்ப்பதில்லை; அவளும் அவனை நேராகப் பார்ப்பதில்லை.

அதற்குப் பிறகு மற்றொரு சம்பவம் நேர்ந்தது. மீனாட்சி வந்தாள்; கால்மணிநேரமே இருந்தாள். அவளுக்கு அவசரமாக எங்கோ போகவேண்டியிருந்தது. இதைத் தவிர, இரண்டொரு மாதங்களுக்குத் தான் வெளியூர் போவதாகவும் அவள் சொன்னாள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அவன் அவளோடு பழகிவருகிறான். இதனிடையே அவன் வெளியூருக்குச் சென்ற நாட்களும் உண்டு; அவளும் வெளியூர் போனது உண்டு. எனவே மீனாட்சி வெளியூருக்குப் போய்வருவது புதுமையான செய்தி அல்ல. அப்படியிருந்தும் இந்தத் தடவை அந்தச் செய்தியைக் கேட்டதும் தன் உடல் நடுங்குவானேன் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

"நீங்கள்-நீங்கள் தேநீர்கூட அருந்தமாட்டீர்களா?" என்று அவன் நடுங்கிய குரலில் கேட்டான்.

"தயாராக இருந்தால், அருந்தாமலென்ன?" ரகசியமான, வேதனை நிரம்பிய, லேசான புன்னகையோடு மீனாட்சி பதில் சொன்னாள். பிறகு, தன் பரபரப்பை மறைத்துத் தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காக, முகத்தில் துளித்த வேர்வையைத் துடைத்துக்கொள்ளும் சாக்கில் தன் கைக்குட்டையை எடுத்தாள். தனஞ்சயனுடைய கண்கள் மீனாட்சியின் அந்தச் சிறு கைக்குட்டையில் சிக்கின. அவன் சிறிதும் சிந்திக்காமலே, 'எனக்கு ஒரு வஸ்து கொடுப்பாயா?" என்று கேட்டுவிட்டான். அந்தக் கேள்வியில் மறைந்திருந்த வேதனையினால் திகைத்துப்போன மீனாட்சி, "என்ன வஸ்து?" என்று கேட்டாள்.

"இந்த - இந்தக் கைக்குட்டை..."

தனஞ்சயனுடைய உள்ளத்தில் துயரம் வளர்ந்தது. இது வரைக்கும் தொலைவில், எதிலும் சாராமல், பெண்களின் உள்ளத்தையும் அழகையும் ஆராய்ந்துவந்த தனஞ்சயனுக்கு இது முன்பின் தெரியாத, பழக்கமில்லாத வழியாக இருத்தது, அவனுக்குச் சற்று வெறுப்பாகவும் இருந்தது. ஆயினும் வேறுவழி இல்லை. அன்று தன் உள்ளத்தின் ஆணையை மீறிச் செல்ல அவனால் அடியோடு முடியவில்லை.

ரகசியமான, வேதனை நிரம்பிய அதே முறுவலோடு மீனாட்சி மறுபடியும் பேசினாள்: "இந்தக் கைக்குட்டையில் பூவேலை செய்து நான் உங்களுக்குத் தருகிறேன்"

இந்தப் பதில் இந்த முறுவல், இதில் மறைந்திருந்த தெளிவற்ற ஆசை நேர்மையையும் அமைதியையும் விரும்பும் தனஞ்சயனைக் கிளறிவிட்டது. அவன் உடல் குலுங்கியது.

"நீங்கள் வேண்டுமென்றே இப்படிச் சொல்லுகிறீர்களா? அல்லது, இம்மாதிரி வழியில் தாங்கள் பழகியதில்லையா?" இப்படிச் சொல்லும்போது அவன் முகத்தில் பொறுத்தற்கரிய துயரம் நிழலிட்டது. அவன் மறுபடியும், "இந்தக் கைக்குட்டை எனக்குத் தேவை. கொடுப்பீர்களா?" என்றான்.

தாழ்வாரத்துக்கும் அறைக்கும் நடுவில் மீனாட்சி நின்றிருந்தாள். புகலுதற்கரிய, வருணிக்க இயலாத நம்பிக்கையும், ஆசையும் உருவெடுத்த பதுமைபோல அவள் ஒரு க ணம் கண்ணிமையால் அவனைப்பார்த்தாள். அவள் கண்களிலிருந்தும், அவளுடைய முழு உடலின் அபிநயங்களிலிருந்தும், அவளுடைய உள்ளத்து உணர்ச்சிகளை அறிய அவன் முயன்றான். ஏமாற்றந்தான் பலன். அவன் வெறிபிடித்தவன் போல நாற்காலியை விட்டு எழுந்து நின்றான். மீனாட்சி அதே முறுவலோடு, "நீங்கள் இந்தக் கைக்குட்டையைப் பறித்துக்கொள்ளப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

தனஞ்சயன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஆவேசமும் அசட்டையும் தென்பட்டன, "நான் எப்பொழுதும் எந்தப் பொருளையும் வலுக்கட்டாயமாக எடுத்துக்கொண்டதில்லை; எடுத்துக்கொள்ளும் எண்ணமும் இல்லை. சொல்லுங்கள், கொடுப்பீர்களா?" என்றான்

அவள் வேறு புறமாகப் பார்த்துக்கொண்டே, "ஓகோ! வெகு நேரமாகிவிட்டதே! பேச்சில் நேரமானதே தெரியவில்லை. சரி, நான் போய்வருகிறேன்" என்றாள்

அவன் ஏதும் சொல்வதற்கு முன்பே, அவனருகில் வந்து அந்தக் கைக்குட்டையை வைத்துவிட்டு, அவள் அவசரமாகப் போய்விட்டாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு தனஞ்சயனுடைய உள்ளம் கலங்கியது. மீனாட்சியைச் சந்திக்க அவனுடைய ஆசையும் ஆத்திரமும் எல்லையற்று வளர்ந்தன; எல்லையையும் கடந்தன.

மூனறாவது சம்பவம்: அன்று மீனாட்சி, குறித்திருந்த சமயத்திற்கு ஒரு மணிநேரங் கழித்து வந்தாள். வந்து தனஞ்செயனுக்கு முன்னால் உட்கார்ந்தாள். இருவர் பேச்சும் எக்கச்சக்கமாகப் போய்விடக் கூடாதென்று இருவரும் ஜாக்கிரதையாக இருந்தனர்.

மிகவும் நேர்மையான சாதாரணப் பேச்சுக்களையே அவர்கள் பேசினர். திடீரென்று தனஞ்சயன், "உங்கள் கைக்குட்டை என்னிடம் இருப்பது நல்லதாயிற்று; இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துப்போயிருக்கும். ஒரு நாளைக்கு நாலைந்துதடவை மீனாட்சியோடு பேசாமல் எனக்குச் சரிப்படாது. இந்தக் கைக்குட்டையோடு நான் பேசிக்கொள்கிறேன்" என்றான்.

கணப்பொழுது மௌனமாக இருந்து, பிறகு அதே முறுவலோடு, "முதல் நம்பர் பைத்தியக்காரத் தனம்", என்றாள் மீனாட்சி.

தனஞ்சயன், அவள் வார்த்தையைக் கேட்டும் கேளாதவன்போல, "ஒரு தடவை உன் கூந்தலிலிருந்து சில பூக்கள் உதிர்ந்து விழுந்தன. அவற்றை நான் ஜாக்கிரதையாக வைத்திருக்கிறேன். அவற்றோடு பேசுவது மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. உன் உள்ளத்தைவிட அவற்றின் உள்ளம் அதிக மென்மையாக இருக்கிறது" என்றான்.

மீண்டும் அதே முறுவலோடு "பைத்தியக்காரத்தனம் நம்பர் இரண்டு" என்றாள் மீனாட்சி.

அவன் தன் காதற் பித்தைக் கண்களால் வெளியிட்டுக்கொண்டே, "நான்தான் பைத்தியமாகி யிருக்கிறேனே. என் பைத்தியக்காரத் தனங்களை எண்ணுவதால் என்ன லாபம்? என் பைத்தியக்காரத் தனங்களை அழிக்கவும், அழிக்க முடியாதபோது மறைக்கவும் நான் எவ்வளவோ முயன்றேன்; இனி முயலும் சக்தி என்னிடம் இல்லை" என்று முடிப்பதற்குள், மீனாட்சி கோபங்கொண்ட முகத்தைக் கவனித்தான். அவன் சற்றுத் திடுக்கிட்டவனாய், "மீனாட்சி, நீ சற்றும் கலங்கவேண்டியதில்லை. முன்பு ஒரு முறை சொன்னதையே இன்று மறுபடி சொல்கிறேன். நான் யாரிடமும் வலுக்கட்டாயமாக எந்தப் பொருளையும் என்றும் வாங்கியதில்லை; வாங்கும் விருப்பமும் எனக்கு இல்லை. வலுக்கட்டாயமாக வாங்கிய பொருளுக்கு, அன்புக்கு, மதிப்பு ஏது?" என்றான்.

அவன் இதைச் சொல்லி நிறுத்தியதும் அவன் முகத்தில் களைப்பின் அடையாளங்கள் தோன்றின. அவன் சோர்ந்துபோய் நாற்காலியில் சாய்ந்தான். கணப்பொழுது இருவரும் மௌனமாக இருந்தனர்.

தனஞ்சயனுடைய சிந்தனை மீண்டும் கலைந்தது. அவன் விழித்துக்கொண்டு மறுபடி கடிகாரத்தைப் பார்த்தான். மணி 4-35. அவன் துணிவை இழக்கலானான். பரபரப்பு அதிகமாயிற்று. அவனுடைய தெளிவான கண்களில் காதற்பித்து நிரம்பியிருந்தது. அவன் கைகள் நடுங்கின. இதற்குள் முன்னால் அறைக் கதவு திறந்தது. மீனாட்சி உள்ளே நுழைந்தாள். தனஞ்சயன் அவளை நம்பிக்கையும் ஏமாற்றமும், இன்பமும் துன்பமும் கலந்த தீவிரப் பார்வையோடு பார்த்துவிட்டுத் தன் இரு கைகளையும் நீட்டினான். பதிலுக்கு மீனாட்சியும் தலைகுனிந்து தன் கரங்களை நீட்டினாள். நான்கு கைகளும் ஒன்றாகச் சேர்ந்தன.

இருவரும் அறைக்குள் வந்து உட்கார்ந்தனர். நாற்காலியில் உட்கார்ந்த பின்னரும், மௌனத்தைக் கலைக்க ஒருவருக்கும் விருப்பமில்லை. தான் மறுபடி ஒன்றரை மாதத்துக்குப் பிறந்த வீட்டுக்குப் போவதாகவும், போவதற்கு முன்பு அவனைப் பார்க்க வந்திருப்பதாகவும் மீனாட்சி சொல்லநினைத்தாள். அவள் பேச முயன்றும் அவள் வாயிலிருந்து வார்த்தை எழவில்லை. அவள் ஏழெட்டு நிமிஷம் நேரங்கடந்து வந்ததற்காகத் தனஞ்சயன் அவளைக் குற்றம் சொல்ல விரும்பினான். அது முடியவில்லை அவள் நாற்காலியின் பிடியில் தன் விரல்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள்; ஆயினும் அவளுடைய மனமும் உடலும்

ஒரு நிலையில் இல்லாமலிருப்பது அந்தத் தாளத்திலிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

தனஞ்சயனுடைய மண்டை நரம்புகள் புடைத்தன.

"மீனாட்சி"......

தனஞ்சயன் மீண்டும் பேச முயன்றான்; பேசி அந்த மௌனத்தைக் கலைக்க விரும்பினான். ஆனால் இதற்குமேல் பேச அவனால் முடியவில்லை. அவன் ஒரு யாசகனைப்போலத் துன்பங் கலந்த ஆத்திரத்தோடு தன் இரு கைகளையும் மீனாட்சியை நோக்கி விரித்தான். அவன் தன் முழு வலிவையும் திரட்டி, மீனாட்சியைக் காதற்கண்களால் இமைக்காமல் பார்க்கலானான்.

மீனாட்சியும் தன் உள்ளத்தில் மூண்ட பெரும் புயலை எதிர்க்கக் கடைசித் தடவையாக முயன்றாள்; ஆனால் அதில் தோல்வியுற்றதும், தன் ஆழ்ந்த கண்களால் தனஞ்சயனுடைய காதற்கண்களிலிருந்து பெருகிய காதல் மதுவைப் பருகலானாள். அவள் தன் இரு கைகளையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டாள்.

இருவருக்கும் இடையே இருந்த தூரம் குறைந்தது. தனஞ்சயன் மீனாட்சியை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தித் தானும் எழுந்தான். ஒரு விநாடி இருவரும் கண்கொட்டாமல் ஒருவரை மற்றவர் பார்த்தனர். பிறகு அவன் அவளை இழுத்துத் தன் தோள்களின் அணைப்பிலே சாய்த்துக்கொண்டான். அவள் முகத்தை மேலே தூக்கினாள். அவன் தன் இதழ்களை அவளுடைய இதழ்களோடு கலக்கக் கீழே குனிந்தான். அவள் தெளிவற்றதும் மதுவைப் பொழிவதுமான குரலில், "பைத்தியக்காரத்தனம் நம்பர்" என்றாள்.

அதற்குள் அவர்களுடைய இதழ்கள் கலந்தன.

மீனாட்சி வந்த பத்து நிமிஷமே ஆகியிருக்கும். தனஞ்சயன் அவளை முத்தமிட்ட வெறியினின்றும், அவளுடைய வேர்வைத் துளிகளைக் கண்டும் அவளுடைய ஸ்பரிசத்தினாலும் உண்டான அபூர்வமான மனமகிழ்ச்சியினின்றும் விடுபடுவதற்குள்ளேயே, தபாற்காரன் ஒரு கடிதத்தைப் பெட்டியில் போட்டு விட்டுப் போனான். தனஞ்சயன் அசட்டையோடு வெளியே சென்று கடிதத்தை எடுத்து வந்தான். கோபாலனுடைய கையெழுத்தை அவன் சட்டென்று அறிந்துகொண்டான். உறையைக் கிழித்து அவன் அந்தக் கடிதத்தைப் படித்தான். அந்தக் கடிதத்தில் கடைசியில் இருந்த இந்த வரிகள் அவன் கவனத்தைக் கவர்ந்தன.

"இங்குள்ள ஆண் பெண்கள் நம் சமூகத்தினரைப்போலப் பரஸ்பரக் கவர்ச்சியையும் வேட்கையையும் அடக்கிவைப்பதில்லை. அவர்கள் வெளிப்படையாகத் தமக்குள் கவர்ச்சியும் வேட்கையும் இருப்பதாக ஒப்புக்கொள்கிறார்கள். வெளியே அவர்களுடைய விளையாடல்களைப் பார்க்கும்போதெல்லாம், அசைக்க முடியாதவனும் வெல்ல

முடியாதவனுமான என் தனஞ்சயனின் ஞாபகம் எனக்கு வருகிறது. உடனே இயல்பாக, "நம் நாட்டுப் பிண அமைதியில் வாழ்வதற்குப் பதிலாகத் தனஞ்சயன் இங்குள்ள வாழ்க்கையை அநுபவித்தால், எப்படி இருப்பான்? அந்த நிலையிலுங்கூட அவன் இவ்வாறே அசையாதவனாகவும் வெல்ல முடியாதவனாகவும் இருக்க முடியுமா? அவனுடைய வாழ்க்கையில் எவ்வித மாறுதலும் உண்டாகாதா?" என்று தோன்றுகிறது"

சற்று நேரத்துக்கு முன்பு தனக்கு இருந்த வெறியையும் தான் உணர்ந்த இன்ப உணர்ச்சிகளையும் உள்ளே அழுத்தமுயன்று கொண்டே, தனஞ்சயன் இந்த வரிகளைப் படித்தான். உடனே அவன் கலகலவென்று நகைத்தான். அவனுடைய அந்த நகைப்பு விநோதமாக இருந்தது; அசட்டையும் துன்பமும் நிரம்பிக் கலக்கத்தை உண்டாக்குவதாக இருந்தது; தெய்வீக ஆனந்தத்திலே மிதப்பதுபோல இருந்தது; கலவரக்கடல் போலக் கபடமற்றதாக இருந்தது.

குஜராத்திக் கதை மொழிபெயர்ப்பு.

முல்லை - 8, 9, 10

இதயத் துடிதுடிப்பு

எட்கார் அலன்போ

தமிழில்: ரகுநாதன்

சத்தியமாய்-நாடி தளர்ந்து, நான் எவ்வளவு நடுநடுங்கி அதிர்ந்து போனேன், அதிர்ந்து போயிருக்கிறேன்! ஆனால் நீங்கள் என்னை பித்துக்குளி என்று சொல்லிவிட முடியுமா? அந்த 'நோய்' என் புலன்களைத் தீட்டிக் கூராக்கியது. அவற்றை அழிக்கவில்லை; மழுக்கவில்லை. ஓசையை உணரும் செவிப்புலன் தான் எவ்வளவு தீக்ஷண்யமாயிருந்தது? மண்ணுலகத்து ஓசைமட்டுமல்ல, வானுலகத்தின் குரலையும் நான் கேட்டேன். நரகலோகத்தின் நாராசக்குரலும் எனக்குக் கேட்டது. பின், எப்படி நான் பைத்தியமாக முடியும்? அந்த முழுக்கதையையும் நான் அமைதியுடனும் அபசுரமின்றியும் உங்களுக்குச் சொல்ல முடிந்தால்-? முடியுமா என்றுதான் பாருங்களேன்!

அந்தத் எண்ணம் என் சித்தத்தில் எப்படி இடம் பெற்றதென்று என்னால் சொல்ல இயலாது. ஆனால், அந்த எண்ணம், மனசில் குடியேறிய நாள் முதலாய், என்னை இரவும் பகலும் வேட்டை தான் ஆடிற்று இவ்வளவுக்கும் காரணமோ, ஒன்றுமில்லை. ஆசை? அதுவுமில்லை. நான் அந்தக் கிழவனை நேசித்தேன். அவன் எனக்கு ஒரு குற்றமும் செய்யவில்லை; மானாபிமானம் தவறிவிடவும் இல்லை. அவனுடைய சொத்துக்கும் நான் ஆசைப்பட்டவன் அல்ல ஆனால், அவனுடைய அந்தக் கண்ணைமட்டும் நினைத்தால்-? அது ஒரு கழுகுக் கண். வெளிறிய நீலத்தின்மேல் பூப்படர்ந்த கண். அந்தக் கண்ணின் பார்வை என் மீது விழும்போதெல்லாம், என் இரத்தம் உள்ளுக்குள்ளேயே உறைவதுபோல் ஜில்லிட்டது. ஆதலால், நாளடைவில், படிப்படியாக நான் அந்தக் கிழவனைத் தீத்துக் கட்டியாவது, அந்தக் கண்ணின் பயங்கரத்திலிருந்து தப்பிவிட நினைத்தேன்; தீர்மானித்தேன்.

விஷயத்துக்கு வாருங்கள். நீங்கள் என்னைப் பைத்தியம் என்று கேலி செய்கிறீர்கள். பைத்தியக்காரனுக்கு சுயாதீனம் உண்டா? நீங்கள் என்னைக் கவனித்திருக்கவேண்டும். எவ்வளவு முன் எச்சரிக்கையோடு, பிரதம ஏற்பாடுகளோடு, சர்வ ஜாக்கிரதையாய் அந்த வேலையில் ஈடுபட்டேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அந்த வேலையில் எப்படி ஈடுபட்டேன் என்பதையும் நிங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

அந்த மனுஷனைக் கொல்லுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னாலிருந்தே, நான் அவனோடு மனம்விட்டு ஒட்டிப் பழகவில்லை. மேலும், ஒவ்வொரு இரவிலும், நடுநிசிக்கு மேல், அவன் வீட்டுக் கதவு நாதாங்கியைத் தள்ளித் திறந்திருக்கிறேன். அப்பா! எவ்வளவு அரவமின்றி! திறந்து முடிந்ததும், என் தலை நுழையும் அளவுக்கு, கதவை மெதுவாகத் தள்ளி, நன்றாக மூடப்பட்டு, ஒளியே சிதறமுடியாத, அந்த இருளடைந்த விளக்கை, உள்ளே வைத்திருக்கிறேன். நான் பயந்து பயந்து திருட்டுத்தனமாய் நுழைவதை நீங்கள் கண்டிருந்தால், சிரியாய்ச் சிரிப்பீர்கள். அந்த விளக்கை, மெதுவாக, மிகவும் மெதுவாக, அந்த மனிதனின் தூக்கம் கலைந்துவிடாதவாறு, மெதுவாக உள்ளே தள்ளினேன். என் முழுத் தலையையும் உள்ளே நீட்டி, படுக்கையில் அவன் படுத்திருப்பதைப் பார்த்து முடிவதற்கே ஒரு மணி நேரம் செல்லும். ஒரு பித்துக்குளி இவ்வளவு புத்திசாலித்தனத்துடன் நடந்துகொள்ள முடியுமா? பிறகு, -என் தலை முழுவதும் உள்ளே நுழைந்தவுடன், அந்த விளக்கைப் பதனமாகத் தூண்டினேன். கதவை மேலும் தள்ளினேன்; கதவின் கீல்கள் கிரீச்சிட்டன. விளக்கை லேசாகத் தூண்டி, ஒரே ஒரு மெல்லிய ஒளிக்கோடு மட்டும் அந்த கழுகுக் கண்ணில் விழும்படி திருப்பினேன். இப்படி ஏழு இரவுகள் ஒவ்வொரு இரவின் நடுநிசியிலும்!- ஆனால் நான் பார்த்த போதெல்லாம் கண் மூடியே இருந்தது. அதனால், காரியத்தை முடிக்க முடியவில்லை. காரணம், என்னைப் பதற அடித்தது அவனல்ல; அவனுடைய அந்தப் பாழாய்ப்போன கண்! ஒவ்வொருநாள் காலையிலும், நான் அவனுடைய அறைக்கு தைரியத்துடன் போனேன். அவனோடு தைரியத்துடன் பேசினேன். உள்ளந்தொடும் குரலில் அவனை அழைத்தேன். இரவை எப்படிக் கழித்தான் என்று கேட்டேன் அதனால், இரவு நடப்பதை அவன் அறிந்து சந்தேகிக்கிறானா என்பதையும் தெரிந்து கொண்டேன்.

எட்டாவது நாள் இரவு, வழக்கத்துக்கும் மேலாக அந்தக் கதவைத் திறப்பதில் முழு விழிப்புடன் நடந்து கொண்டேன். ஒரு கைக்கடியாரத்தின் நிமிஷ முள்ளையும்விட நான் மெதுவாக அசைந்தேன். அந்த இரவு வரையிலும் நான் என்னுடைய புத்திக் கூர்மையையும், என்னுடைய சக்தி மகத்துவத்தையும் உணரவில்லை. வெற்றி உணர்ச்சிகூட என்னில் அதிகம் இல்லை. என்னுடைய ரகசிய செயல்களையும், சிந்தனைகளையும் பற்றி, சொப்பனம்கூட காணாத அந்த மனிதனின் அறையை மெல்ல மெல்ல திறந்து நுழைந்து கொண்டிருந்தேன் என்பதை நினைத்தால் அந்த நினைப்பே என்னை நடுக்கியது. நான் வந்ததை அவன் கேட்டுவிட்டானோ? திடுக்கிட்டதுபோல், திடீரென அவன் படுக்கையை விட்டு எழுந்தான். இப்பொழுது நீங்கள், நான் பின் வாங்கினேன் என்று தானே எண்ணுகிறீர்கள். இல்லை, திருடர் பயத்துக்காக எல்லா ஜன்னல்களும் இறுக மூடிக்கிடந்த படியால், அந்த அறை ஒரே மையிருட்டாயிருந்தது. ஆதலால், அவன் என்னைக் கண்டு கொள்ள முடியாது என்ற தைரியத்துடன் கதவை மெதுவாகத் திறந்துகொண்டே இருந்தேன்.

என் தலை நுழைந்துவிட்டது. நுழைந்தவுடன், விளக்கைத் தூண்ட எண்ணினேன். என்னுடைய பெருவிரல் தவறிப்போய், தகரத்தில் பட்டுக் கிரீச்சிட்டது. அந்தக் கிழவன் துள்ளியெழுந்து உட்கார்ந்து கொண்டு சத்தமிட்டான்; 'யாரங்கே?'

நான் அமைதியுடன் மௌனமானேன். ஒருமணி நேரம் உடம்பை ஒரு சிறிதும் அசைக்காமல் அப்படியே நின்றேன். அவனும் படுக்கையில் மீண்டும் படுத்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு இரவிலும், நான் செய்தது போலவே, மரணபீதியுடன் அவன் அப்படியே உட்கார்ந்து, காது கொடுத்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, சிறு முனகல். அது சாவின் முனகல்தான் என்று எனக்குத் தெரியும். அது வேதனையின், சோகத்தின் முனகலல்ல. அந்தராத்மாவின் பதைப்பில் எழுந்த சிறு சப்தம். அந்த சப்தம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு இரவிலும் நடுநிசியில், லோகமே தூங்கும் அந்த அர்த்த சாமத்தில், என் நெஞ்சைப் பிய்த்துப் பிடுங்கிய பயங்கரம் என் உள்ளத்தின் அடித்தலத்தில் எதிரொலித்து விம்மியதை நானே உணர்ந்திருக்கிறேன். நான் சொல்லுகிறேன், எனக்கு அது தெரியும். அந்த மனிதன் என்ன உணர்கிறான் என்று நான் அறிந்ததேன்; அனுதாபப்பட்டேன். படுக்கையில் புரண்டு படுக்கும்போது சப்தத்தைக் கேட்டதிலிருந்தே, அவன் விழிப்புடன்தான் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். அவன் நெஞ்சாழத்தில் பயமும், பீதியும் பைசாசரூபம் எடுத்திருக்க வேண்டும். காரணமற்ற வெறும் பயம் என்று அவன் சாந்தி செய்யவும் முயன்றிருக்கிறான்; எனினும் முடியவில்லை. "புகைக் கூண்டில் அடிக்கும் காற்றுத்தான்!" "மூஞ்சூறுவா யிருக்கலாம்", "பறந்து மோதிவிழும் வண்டாயிருக்கலாம்" என்றெல்லாம் அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். ஆம். இந்த அனுமானங்களாலேயே, தன்னைச் சாந்தப் படுத்திக் கொள்ள முயன்றிருக்கிறான். எல்லாம் பிரயோஜனமற்று விட்டது. எல்லாம் வீண். மரணம் அவன் முன் கரிய நிழலாய் வளைந்து படர்ந்து கொண்டிருந்தது. அவன் உணர்ந்தாலும் உணராவிட்டாலும், சாவின் பயங்கரம் அவனுடைய உள்ளுணர்வைத் தட்டி உணர்வூட்டி யிருக்கவேண்டும்.

இத்தனை நேரமும் அசைவற்று நின்றபிறகு, அந்த மனிதன் இன்னும் படுக்கவில்லை என்று அறிந்தும், நான் அந்த விளக்கை மெதுவாக, மிகவும் மெதுவாகத் தூண்டத் தீர்மானிதேன். தூண்டினேன். சிலந்தியின் நூலிழைபோல ஒரு சிறு ஒளிரேகை மட்டும் அந்தக் கழுகுக் கண்ணில் விழும் அளவுக்கு விளக்கைப் பயந்து பயந்துப் பதனமாகத் தூண்டினேன்.

அந்தக் கண்! - அது அகலத் திறந்திருந்தது. அதைப் பார்த்ததுமே நான் நடுங்கினேன். அந்தக் கண்ணை நான் தீக்ஷண்ய வக்கிரத்துடன் பார்த்தேன். மங்கிய நீலத்தின் மேல் படர்ந்திருந்த அந்தப் பூ விழுந்த கண் என் எலும்புக் குருத்துக்களைச் சில்லிட்ச் செய்தது. அந்த மனிதனின் உடம்பையோ,

முகத்தையோ என்னால் பார்க்க முடியவில்லை காரணம், அந்த ஒளிக்கீற்று அந்தப் பாழாய்போன கண்மீதே நேராகப் பாய்ந்தது!

'புலனுணர்ச்சிகளின் அதீத தீக்ஷண்யந்தான் பைத்தியம்' என்று நீங்கள் தப்பாக அர்த்தம் செய்து கொள்கிறீர்கள் என்று ஏற்கெனவே நான் சொல்லி யிருக்கிறேனே. இப்போது-பஞ்சில் பொதிந்துவைத்த கைக்கடிகாரத்தின் மங்கிய, ஆனால், படபடக்கும் துடிப்பைப்போல என் காதுகளில் ஒரு சப்தம் கேட்டது. அந்தச் சப்தம் எது என்றும் எனக்குத் தெரியும். அது அந்தக் கிழட்டு மனுஷனின் இருதயத் துடிப்பு. என்னைப் படபடக்கச் செய்தது. படை வீரனின் தைரியத்தைக் கிளப்பிவிடும் பறை யறையைப்போல.

அப்படியும் நான் அசையாது, நிலைகுலையாது நின்றேன். மூச்சுவிட்டதே அபூர்வந்தான். கையிலேந்திய விளக்கும் அசைய வில்லை. எவ்வளவு அமைதியுடன் அந்த ஒளிக்கீற்றை அந்தக் கண்ணின்மீதே பாய்ச்சிக் கொண்டிருக்க முடியும் என்று முயன்றேன். இந்த வேளையில், அந்த இருதயத்துடிப்பின் நாரச ஓசை மேலே மேலே ஆரோஹணித்துக் கொண்டிருந்தது. கணத்துக்குக்கணம் விரைவாகவும், மேலாகவும் அந்தச் சப்தம் எவ்விக் கொண்டிருந்தது. அந்தக் கிழவனின் பீதி உச்சநிலை அடைந்திருக்கவேண்டும். அந்த சப்தம் உயர்ந்தது. விநாடிக்கு விநாடி உயர்ந்தது! நான் சொல்வதைக் கவனிக்கிறீர்களா? நான் பீதியுற்றுப் போயிருக்கிறேன் என்று சொல்லவில்லையா? சுடுகாட்டு அமைதி குடிகொண்ட அந்த வீட்டில், ஓசையற்ற அந்த அர்த்தராத்திரியின் அந்ததாரத்தில், அந்த அபூர்வமான சப்தம் நெஞ்சில் அமுக்க முடியாத பீதியை கிளப்பி என்னைக் கிடுகிடுக்கச் செய்தது. எனினும் நான் அமைதியுடன் அசையாமல் நின்றேன். அந்தத் துடிப்பு உயர்ந்தது. இன்னும் உயர்ந்தது! நான் நினைத்தேன், அந்த இருதயம் அப்படியே வெடித்துப் போகட்டுமே என்று. அந்த சப்தம் இப்போது வளர்ந்து, அயலான் ஒருவன் கூட தீர்க்கமாகக் கேட்கும் அளவுக்கு மேலே எவ்வியது! அந்தக் கிழவனுக்கு காலன் நெருங்கிவிட்டான்! வந்து விட்டான்! ஓ வென்று அலறிக்கொண்டு, நான் விளக்கை முழுதும் தூண்டிவிட்டுக் கொண்டு அறையினுள் பாய்ந்தேன். அவன் நடுநடுங்கிக் கீச்சிட்டான். ஒரு தடவைதான். ஒரே கணத்தில், அவனைக் கட்டிலைவிட்டு இழுத்துப்போட்டு, கனத்த கட்டிலை அவன்மீது தள்ளினேன் அதுவரையிலும் செய்த செயலைக் கவனிக்க, லோசாகச் சிரித்தேன். ஆனாலும் பல நிமிஷங்கள் வரையிலும், அந்த இருதயத்துடிப்பு மங்கலாகக்கூடக் கேட்டது. எனினும் அது என்னை நிலைகுலையச் செய்யவில்லை. சுவரையும் கடந்து அந்த ஓசை செல்லாது. முடிவில், அது நின்றது நின்றே போயிற்று! அந்தக் கிழவன் இறந்துபோனான் நான் கட்டிலை விலக்கி, சவத்தைப் புரட்டினேன். கல்லைப்போல விறைத்துக் கட்டையாயிருந்தது. அந்த நெஞ்சின்மேல் கைவைத்து மூன்று நிமிஷங்களுக்குமேல் பார்த்தேன். துடிப்பே இல்லை. அவன் கல்லாய்ச்

செத்துப்போனான். அவனுடைய கண் இனி என்னை உறுத்தாது; வருத்தாது.

இன்னும் நீங்கள் என்னை ஒரு பைத்தியந்தான் என்று நினைத்தால், அந்தச் சவத்தை மறைப்பதற்கு நான் எடுத்துக்கொண்ட பிரயாசையைத் தெரிந்தாலாவது, உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள். இரவு கடந்து கொண்டிருந்தது. நான் அவசர அவசரமாக, எனினும் சந்தடியின்றி வேலைசெய்தேன். முதலில், அந்தப் பிணத்தைக் கண்டம் கண்டமாக வெட்டினேன். தலைவேறு, கைவேறு, கால்வேறாக.

பிறகு அந்த அறையில் கிடந்த மூன்று பலகைகளை எடுத்து அந்த முண்டத்தை உள்ளே போட்டு மூடினேன். எந்த மனிதக் கண்ணுக்கும், அவனுடைய கண்ணுக்கும் படாதவாறு சர்வ ஜாக்கிரதையாக மூடிப்பொதிந்தேன். கழுவுவதற்கு ஒன்றும் இல்லை. ஒரு கறையாவது, ரத்தத் துணியாவது இல்லை. காரணம், எல்லாம் ஒரு தொட்டியில் கொட்டியிருந்தது. அதையும் நானேதான் செய்தேன்.

இந்த வேலையெல்லாம் முடியும்போது மணி நாலு இருக்கும். எனினும் இருள் இருந்தது. நேரத்தைக் குறிப்பிட்ட மணிச் சத்தம் கேட்டது, தெருவாசற் கதவை யாரோ தட்டும் ஓசையும் கேட்டது. பழுவற்ற இதயத்தோடு கதவைத்திறக்க இறங்கினேன்-நான் எதற்கு அஞ்சவேண்டும்? உள்ளே மூவர் நுழைந்தனர். அவர்களாகவே தாங்கள் போலீஸ் உத்யோகஸ்தர்கள் என்று நிதானமாக அறிமுகப் படுத்திக் கொண்டனர். பக்கத்து வீட்டுக்காரனுக்கு நடுநிசியில் ஏதோ ஓசை கேட்டிருக்கிறது; ஏதோ விபரீதம் நடப்பதாக சம்சயம் எழுந்திருக்கிறது; விஷயம் போலீசுக்கு தாக்கலாயிருக்கிறது; அவர்கள் இடத்தைக் சோதித்துப் பார்க்கவேண்டும் என்று கிளம்பி வந்துவிட்டார்கள்- இவ்வளவுதான்.

நான் சிரித்தேன்-நான் எதற்காகப் பயப்படவேண்டும்? அவர்களை நான் வரவேற்றேன். நான் கண்டகெட்ட சொப்பனத்தால், நானே அப்படிச் சத்தமிட்டதாகச் சொன்னேன். அந்தக் கிழவன் ஊரில் இல்லை என்றும் சொன்னேன். சோதித்துப் பாருங்கள், நன்றாகச் சோதியுங்கள் என்று சொன்னேன். அவர்களை அந்தக் கிழவனுடைய அறைக்கே அழைத்துச் சென்றேன். அவனுடைய பொருள்கள் எல்லாம் அசங்காமல், நலுங்காமல் இருந்ததை யெல்லாம் காண்பித்தேன் என்னுடைய நம்பிக்கையினால் எழுந்த உத்ஸாகத்தோடு, அவர்களுக்கு ஆசனம் கொடுத்து களைப்பாரச் சொன்னேன். நானும் வெற்றிப் பெருமிதத்தின் களிப்போடு, அந்தச்சவம் கிடந்த இடத்திலேயே உட்கார்ந்துகொண்டேன்.

போலீஸார் திருப்தி அடைந்தனர். என் நடவடிக்கையால் அவர்களே திருப்தி அடைந்தனர். நானும் சாவகாசமாய் அமர்ந்தேன். நான் உத்ஸாகத்தோடு பதிலளிக்க அவர்கள் சாதாரண விஷயங்களைப் பற்றியே வம்பளந்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் நானோ, அவர்கள் போய் தொலைந்தால் தேவலலையே என்று எண்ணினேன், நான் பதைபுறுவதாக

உணர்ந்தேன். என் தலை கனத்து வலித்தது காதுக்குள் கிண்ணென்ற மாதிரி இருந்தது. அவர்களே இன்னும் இருந்து பேசினர். காதின் கிண்ணொலி அதிகமாயிருந்தது. அது ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் கேட்டது. என் உணர்ச்சியிலிருந்து தப்புவதற்காக நான் விரைவாகப் பேசினேன். எனினும் அது நிற்கவில்லை தொடர்ந்தது. கடைசியில் அந்தச்சப்தம் என் காதுக்குள்ளாகவே எழும் சத்தமல்ல என்று உணர்ந்தேன்.

நான் பயத்தால் ரொம்பவும் வெளுத்துப் போனேன். ஆனாலும் நான் விரைவாக, உச்சஸ்த்தாய்யில் பேசினேன். எனினும் அந்தச் சத்தமும் உயர்ந்தது. நான் என்ன செய்யட்டும்? அந்த சப்தம் பஞ்சில் பொதிந்து வைத்த கைக்கடியாரத்தைப் போல, மெல்லிய மங்கிய, ஆனால் படபடக்கும், விரைவான துடிப்பு! எனக்கு மூச்சு திணறியது; இன்னும் அந்த உத்தியோகஸ்த்தர்கள் இதைக் கேட்கவில்லை. நான் மிகவும் விரைவாகவும், தீவிரமாகவும் பேசினேன். ஆனால் அந்த ஓசையோ வளர்ந்தது; வளர்ந்து கொண்டே இருந்தது. நான் எழுந்து பேச்சில் அடிபடும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, ரொம்பவும் உச்சக்குரலில் படபடப்புடன் பேசினேன். சத்தம் உயர்ந்து கொண்டே இருந்தது. அவர்கள் ஏன் போகமாட்டேன் என்கிறார்கள். நான் அறையில் குறுக்கும் நெடுக்குமாக, அந்த மனிதர்களின் பேச்சினால் படபடத்தது போல, நடந்தேன். எனினும் சத்தம் வளர்ந்து கொண்டே வந்தது! கடவுளே! நான் என்ன செய்யட்டும்? நான் புகைந்தேன்; அடித்துப் பேசினேன்; சத்தியம் செய்தேன்! நான் இருந்த நாற்காலியைத் தூக்கி, அந்தப் பலகைகளின் மீதே போட்டு அமர்ந்தேன், சத்தம் நிற்கவில்லை; உயர்ந்தது. மேலே, இன்னும் மேலே உயர்ந்தது! இன்னும் அந்தப்படுபாவி மனிதர்கள் நிதானம் குலையாமல் சிரித்துப் பேசினர். அவர்களும் அந்த சத்தத்தைக் கேட்காமலிருக்க முடியுமா? எல்லாம் வல்ல கடவுளே! - இல்லை இல்லை! அவர்கள் கேட்டார்கள்! அவர்கள் சந்தேகித்தார்கள்! அவர்கள் அறிந்து விட்டார்கள்! என்னுடைய பயப்பிராந்தியைக் கண்டு, ஏளனம்தான் செய்கிறார்கள்!- இதை நினைத்தேன், இப்படிச் சிந்தித்தேன்: இந்தப் பதைப்பைவிட, வேறு எந்த எழவுங்கூட நன்றாயிருக்கும்! இந்தப் படபடப்பைவிட வேறு எதையும்கூடத் தாங்கிக்கொள்ளலாம். ஆனால் இந்த மாய்மாலச் சிரிப்பை என்னால் தாங்கமுடியாது! அலறிச் சத்தமிட வேண்டும், இல்லை, சாகவேண்டும என்று உணர்ந்தேன். ஐயோ! மறுபடியும் அதே சப்தம்! எவ்வளவு பெரியதாய்க் கேட்கிறது? மேலே, மேலே, உயருகிறதே!

நான் கூவினேன்: "பாவிகளா?" என்னை சித்திரவதை செய்யாதீர்கள். நான் கொலையை ஒப்புக் கொள்கிறேன். அந்தப் பலகைக்குக் கடியில்! இங்கே! இங்கே! - அது அந்தப்பாவியின் இதயத்தின் பயங்கரத் துடிதுடிப்புத்தான்!"

முல்லை - 9

நொண்டி

எலின் வாக்னர் (தமிழில் : ரகுநாதன்)

'என்னைப் பார்க்க யாரோ வந்ததாகச் சொன்னாயே, யாரது?"

'ஒரு தொழிலாளப் பெண். ஒரு மிஸ். பீட்டர்ஸன்னோ, ஸ்வென் ஸென்னோ - ஏதோ ஒரு பேரு!"

அவசரமாக எழுதிக்கொண்டிருக்கும்போது, இடைவெளித்தட்டில் தன்னைப் பார்க்க யாரேனும் வாசகர் வந்துவிட்டால்கூட, அவர்களை வரவழைத்துப் பேசும் சுபாவம் படைத்தவர் அந்த ஆசிரியர். அவள் உள்ளே வந்தவுடன், ஆசிரியர் தன்னிருப்பிடத்தைவிட்டு எழுந்து, கரம் குலுக்குவதற்காக, அவளிடம் கையை நீட்டினார். 'சாதாரண நாட்டுப் புற மனுஷியோடு, அந்தஸ்தில் உயர்ந்த ஒரு ஆசிரியர் கை குலுக்கவா' என்று அவள் கட்டாயம் பிரமித்திருப்பார் என்று அந்த பத்திரிகாசிரியர் நினைத்தார், நம்பினார்.

அந்த பெண்ணோ முகம் சிவந்தாள்.

'என்னால் கை குலுக்க இயலாது' என்றாள்.

'இயலாதா? உனக்கு நான் என்ன பண்ணிவிட்டேன்' என்று கையை இழுத்துக்கொண்டே கேட்டார், ஆசிரியர்.

"ஏன் என்றால், - நீங்கள் எனக்கு ஒன்றும் செய்துவிடவில்லை- ஆனால்-ஆனால், எனக்கு .. கை இல்லையே!"

உடனே ஆசிரியர் இடத்தைவிட்டு வெளிவந்து, அவளுடைய தோளைப் பற்றினார்: "நீதானா அது? நான் உடனே கவனிக்கவில்லை... வந்து,-உட்காரேன்" என்று சொல்லிக்கொண்டே, அவளைப் பிடித்து, மேஜைக்கருகே கிடந்த நாற்காலியில் அமர்த்தினார். "இப்போது சொல்லு, நீ எதற்காக வந்தாயென்று என்னால் உனக்கு இன்னும் ஏதாவது ஆக வேண்டுமா?"

"இன்னும்" என்ற அந்த வார்த்தையைக் கேட்டவுடன் ஒரு சிறு புன்னகை அவளுடைய உதடுகளில் வளைந்தது; உடனேயே வளைவுமாறி, கசப்புணர்ச்சி வலை விரித்தது. அவரும் அதைப் பார்த்துவிட்டார். கனிந்த,

பணிந்த பார்வையால், அந்தப் புன்னகையை மாய்க்கு முன்பே, அவர் அதைக் கண்டுவிட்டார்.

"இன்னும் ஏதேனுமா? ஆமாம், ஸார், நீங்கள் மனம் வைத்தால் முடியும். எனக்கும் நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்று தழுதழுத்த குரலில் சொன்னாள், அவள்.

அவளுடைய பார்வையிலிருந்து தப்புவதற்காக, ஆசிரியர் எதையும் செய்துவிடச் சித்தமாயிருந்தார். அந்த யுவதியோஅங்க ஊனம் அடைந்து, சரீர வேதனையோடு, வலியைக் கஷ்டத்தோடு தாங்கி வந்திருக்கிறாள். இது அவருக்கு எரிச்சல் மூட்டியது. அவளைப்பற்றி அவர் பத்திரிகையில் சாங்கோபாங்கமாக எழுதியிருந்தது வாஸ்தவந்தான். ஆனால், அது பிறருடைய இதயங்களைக் கவர்வதற்காகவே அன்றி, தன்னுடைய இதய நெகிழ்ச்சிக்காகவோ இளக்கத்திற்காகவோ அல்ல.

அவள் தன் முன் இருப்பதுகூட, அவருக்குப் பிடிக்கவில்லை. "ஏன் தயங்குகிறாய்? என்னுடைய கட்டுரையைப் பார்த்தவுடன், உனக்காக அனுதாபப்பட், நானும் ஒருவன் இருக்கிறேன் என்று உன் மனசில் படவில்லையா?" என்று கேட்டார்.

அவர் ஆச்சரியமுறும்படி அவள் பதில் சொன்னாள்: "நீங்கள் எதையும் மறுத்து எழுதுவதில்லை என்று வெளியில் பேசிக் கொள்கிறார்கள்."

"வாஸ்தவம். தப்பிதமானவற்றைப் பிரசுரித்து விட்டால் தானே, மறுப்போ, திருத்தமோ எழுதவேண்டும். நேற்றைய பத்திரிகையில் உன்னைப்பற்றி நான் எழுதியதை வாபஸ் வாங்கச் செல்லவில்லையே, நீ?" என்று அவள் சொன்ன வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாமல், சிரித்துக் கொண்டே, பிரதாபம் பேசினார் ஆசிரியர்.

"ஆம், அதைத்தான் மறுத்து எழுதவேண்டும்!" என்றாள், அவள். எப்படியோ ஒரு மட்டும் அவள் அதைத் துணிந்து சொல்லிவிட்டாள்.

"ஓ! அப்படியானால், நீ உன்னுடைய வலக்கையை இழக்கவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் ஆசிரியர்.

கட்டுப்போட்டிருந்த தன்னுடைய கையை, போர்வையிலிருந்து வெளி எடுத்து, மேஜையில் அவள் வைத்தாள்: "ஆனால், அந்த விபத்து நீங்கள் எழுதிய மாதிரி நடக்கவில்லை. அதனால்-" என்று வார்த்தையை இழுத்துப் போட்டாள்.

பேசவும் செய்யாமல், பேசினாலும் சரியாகப் பேசாமலிருக்கும் அந்தப் பெண்ணைக் காண அவருக்கு நெஞ்சில் புழுக்கம்தான் அதிகரித்தது. ஆனாலும், அவள் அழுவதைப் பார்த்துவிட்டார்.

அவள் தன்னுடைய இடது கையால், இத்தனை நேரமும் தயாராக வைத்திருந்த அந்தக் கவரை நீட்டினாள். கவரின் மேலுள்ள விலாசம் கண்ணீரால் நனைந்து கரைந்திருந்தது.

"இது எனக்குத்தானே" என்று சொல்லிக்கொண்டே அதைத் திறந்தார். அதனுள் ஒரு டைப் அடித்த கடிதம் இருந்தது:

ஸ்வியா தொழிற்சாலையில் இரண்டுமாதங்களுக்கு முன் நடந்த விபத்தைப்பற்றி, நேற்று வெளிவந்த உங்கள் பத்திரிகையில், பிரசுரமான உங்கள் கட்டுரை, தப்பிதமான தகவல்களின் ஆதாரங்கொண்டதாயிருக்கிறது.

அவர் உடனே நிமிர்ந்து அவளைப் பார்த்தார். அவள் தலை குனிந்திருந்தாள். தொப்பிக்குள் அடங்காமல் வளர்ந்து கழுத்துப் பக்கம் புரளும் அவளுடைய கூந்தல் கற்றைகளைக் கவனித்தவாறே இருந்தாள் அவள்.

அவர் மேலும் படித்தார்:

இந்தத் தப்பிதமான தகவல் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. எனினும், தாங்கள் அதைத் திருத்தம் செய்வீர்கள் என்று நம்புகிறேன். ஒரு புதிய வெட்டு யந்திரத்தைச் சோதித்துக் கொண்டிருக்கும்போதுதான் மிஸ். ஸிக்னே கார்ல்ஸன் படுகாயமடைந்தாள் என்பது உண்மைதான். ஆனால், அந்தச் சம்பவம் ஒரு விபத்துத்தான். யந்திரம் ஓடிக்கொண்டிருக்கும்போது, திடீரென விளக்குகள் அணைந்து விட்டதால், புது யந்திரத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த கார்ல்ஸன் பதறிப்போய் கையை யந்திரத்தில் கொடுத்துவிட்டாள். அந்த விபத்துக்கும், முதலாளிக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. விபத்துக்குப்பின்தான் அவர் அங்கு வந்தார். விபத்தின்போது, நான் மட்டும்தான் அங்கிருந்தேன்.

சட்டப்படி குறிப்பிட்ட காலத்துக்கு மேலாகவே நிர்வாகம் மிஸ் கார்ல்ஸனுக்கு கூலித் தொகையைக் கொடுத்துவருவதோடு முடமானவர்களைப் பராமரிக்கும் ஸ்தாபனத்தில் அவளிருப்பதற்கு வேண்டிய வசதிகளுக்கும் பண உதவிசெய்து வருகிறது. காலக்கிரமத்தில் அவளை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதோடு, பழைய சம்பளத்தையே போட்டுத் தரவும், நிர்வாகம் தயாராயிருக்கிறது. ஆதலின், நிர்வாகத்தைப்பற்றி, பத்திரிகையிலோ, சர்க்காரிலோ அவள் புகார் செய்ய, முகாந்திரம் இல்லை. அதனால், பொது ஜனங்களுக்கு உண்மையை விளக்குவதற்கென்று, தாங்கள் சந்தோகாஸ்பதமான கட்டுரை ஒன்றை எழுதவும் காரணமில்லை. உங்களுடைய கட்டுரையால் பல பேருக்குத் தெரிந்துபோன , முதலாளியின் ஒழுங்கீனத்தைக் குறிக்கும் தப்பிதமான தகவலை முதன்முதலில் மறுப்பதும் மிஸ் கார்ல்ஸனேதான்.

உண்மையுள்ள

கார்ல் ஆண்டர்ஸன், கங்காணி.

ஆசிரியர் கடிதத்தை மடித்து மேஜைமேல் வைத்தார்.

முதலாளியே இந்தக் கதையை கட்டியிருக்கக் கூடுமென்று நினைத்தார், ஆசிரியர். மேலும், இந்த மறுப்பை இத்தனை பவ்யத்தோடு ஏன் எழுதவேண்டும என்று அதிசயித்தார்.

“என்மேல் எதிர் நடவடிக்கை எடுக்க, இந்த சந்தர்ப்பத்தை ஏன் பயன்படுத்தவில்லை? அந்தப் பெண் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அவளுக்குப் பின்புறமாகச் சென்று, அவளுடைய கழுத்தில் முத்தமிட்டதனாலேயே, அந்த விபத்து ஏற்பட்டது என்னும் செய்தி பொய்யாயிருந்தால், மானபங்கம் ஏற்படுத்திய குற்றத்திற்காக, நானல்லவா சிறைசெல்ல வேண்டும்?”—

“மிஸ் கார்ல்ஸன்!” என்று சத்தமிட்டார், ஆசிரியர். அவர் எதிர்பார்த்த போலவே, அவள் குதித்தெழுந்தாள். அந்த விபத்தன்றும் அவள் அப்படித்தானே குதித்திருப்பாள்—

‘உனக்குப் பதிலாக, அந்தக் கங்காணி இதையேன் எழுதவேண்டும்.?”

‘என்னை - அவருக்கு நிச்சயமாயிருக்கிறது, ஸார்....’ என்று தயங்கினாள், அவள்.

“ஓஹோ, அந்த விபத்திற்குப் பிறகு, அவன் அந்தக் கலியாண ஒப்பந்தத்தை முறித்துவிட்டானா?”

‘எல்லாம் இதைப் பொறுத்துத்தான், ஸார். நீங்கள் மட்டும் இதைப் பிரசுரித்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்”

“அப்படியா? ஒப்பந்தத்தை முறிக்காமல் இருப்பதற்கு இது ஒரு நிபந்தனை என்கிறானாக்கும்? அப்படித்தானே. நான் மட்டும் உன் நிலையிலிருந்தால், அவனைப்பற்றி சிறிதும் சஞ்சலப்பட மாட்டேன்”.

“வாஸ்தவம் ஸார். ஆனால், கை முடமான அனாதை ஒருத்தியை அவர் கல்யாணம் செய்துகொள்வார் என்று எதிர்பார்ப்பதே கஷ்டந்தானே” என்றாள் அவள்.

அவர் விரைவாக யோசித்தார். அந்தக் கடிதப்படி, அவளை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டால், நிர்வாகம் அவளுக்கு முழுச் சம்பளமும் கொடுத்தாகவேண்டும். ஆனால், அந்தக் கடிதத்தை வெளியிடாவிட்டால், நிர்வாகம் தன்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்றும் என்பதும் நிச்சயமில்லை. மனுஷத் தன்மைகூடக் காட்டாமல், நிபந்தனைகள் போடுகிறார்களே, அவர்கள். கங்காணியைக்கூட, அவனுக்கு நிச்சயமான பெண்ணை சல்லிக்காசு இன்றி விட்டுவிடுவதாகப் பயமுறுத்தி, அதன் மூலம் ஒரு அண்டப் புளுகுக்கு கதையைச் சிருஷ்டித்து அந்த கங்காணி நிச்சயதார்த்தத்தை முறித்து விடுவேன் என்ற மிரட்டலோடு அந்தப் புளுகு மூட்டையை அவளைக்கொண்டே என்னிடம் அனுப்பி... எல்லாம் ஒரே திருகு தாளங்கள்!

“எல்லாம் எனக்குப் புரிகிறது’ என்று ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பின் அவர் சொன்னார்.

அவளுக்கு அவருடைய வார்த்தை பிடிக்கவில்லை. ஆனால், தான் செய்யக்கூடாததைஅல்லவா, அவர் ‘புரிந்து’ கொள்கிறார்!

"ஸார், ஸார். இந்தச் செய்தியை நல்லபடியாய்ப் பிரசுரிக்கக் கருணை செய்யுங்கள், ஸார்!" என்று தயங்கித் தயங்கிக் கெஞ்சினாள், அவள். பின்னால் அவள் எழுந்து செல்ல நினைத்தாள்; அவர் அவளைப்பிடித்து நாற்காலியில் மீண்டும் அமர்த்தினார்.

"இந்தா பார். நான் இதை இப்படியே பிரசுரிக்கமுடியாது. கூட ஏதேனும் சேர்த்துத்தான் ஆகவேண்டும். இந்த விபரத்தை யெல்லாம், தறிநெசவாளர் சங்கக் காரிய தரிசியான உன் அண்ணனிடமிருந்தே பெற்றதாக, பொது மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும். தெரியுமா, கார்ல்ஸன்? அவனும் அந்தத் தொழிற்சாலையிலேயே வேலைக்கு இருப்பதால், அவன் வேண்டுகோளின்படி அவனைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டேன். ஆனால், இதை வெளியிட்டால், அவன் பெயரையும் சந்திக்கு இழுத்துத்தான் ஆகவேண்டும். ஆதலால், நீ எழுதச்சொல்லும் இந்த மறுப்பு உன்னுடைய குடும்பத்துக்கே நல்லதாகப் படவில்லையே!"

"இல்லையில்லை. அவன் பெயரை நீங்கள் இழுத்துவிடக் கூடாது" என்று திணறினாள், அவள்.

பின்-நானே எல்லாக் கதையையும் என் சுயபுத்தியாலேயே கண்டு பிடித்துவிட்டதாக, நடிக்கச் சொல்லுகிறாயா? அது முற்றும் முடியாத காரியம்",

"ஐயோ!- ஆனால் ஸால், நீங்கள் செல்வாக்கும் பலமும் பெற்றவர்கள். நீங்கள் யாருக்கும்அடிமையில்லை. இந்தப் படிச்செய்தால்கூட, தோஷமில்லையே."

அவர் தலையை அசைத்தார்: "இந்த ஜன்மத்தில் இல்லை!" "ஸார், ஸார்-ஆனால்-ஸிக்னே கார்ல்ஸனுக்கா ஒவ்வொரு இதயமும் ரத்தம் சிந்த வேண்டும் என்று நீங்கள் எழுதக்கூடச் செய்தீர்களே!"

"ஆம். ரத்தம் சிந்தட்டும். எப்படிச் சிந்துவது?"

அந்தப் பெண் வாயே திறக்கவில்லை. வாசலை நோக்கி விரைந்தாள்.

அவளை அவர் ஓடிப் பிடித்துக்கொண்டார். அவளை எட்டிப் பிடித்துக்கொண்டு, "நீ உன்னுடைய காதலனிடம் ஓடிப்போய்விடலாம் என்று பார்க்கிறாயா? முடியவே முடியாது. இதை ஒரு முடிவு செய்தே ஆகவேண்டும். என்றார், தம்முடைய அதிமனுஷ புத்திசாலித்தனத்துடன். அவளுடைய தோள் சிறு பறவையைப்போல ஆசிரியரின் கைகளுக்குள் நடுங்கியது.

"முடிவு செய்ய, இனி நான் எதுவும் சொல்வதற்கில்லை."

"ஆம். "நீ நடந்ததை, உண்மையைச் சொல்ல வேண்டும் சொல்ல முடியும்."

"வாஸ்தவம், ஸார். ஆனால்_"

மீண்டும் அவள் நாற்காலியில் அமர்ந்தாள். அவர் கேள்வி மாரிகளைப் பொழிந்தார். தற்காத்துக் கொள்ளத் திராணியற்ற பேதையர் அவ்வளவு சீக்கிரத்தில் விஷயத்தைத் திரித்துக் கூறாத வண்ணம், அவர் கேள்விகளைப் பொறுக்கி எடுத்து நிதானத்துடன் கேட்டார்.

அவர் நினைத்தபடியே அவளுடைய அண்ணன் சொன்ன தகவல்தான் உண்மை என்று தெரிந்தது.

"இதை வெளியிட்டால்தான் நிர்வாகம் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்ற நிபந்தனையில் பேரில், கங்காணி உன்னை இங்கு அனுப்பினான் என்பதை ஒப்புக்கொள்கிறாயல்லவா?" என்று கேட்டார்.

அந்தப் பெண்ணுக்கு இது ரொம்பவும் சிக்கலான கேள்வி. அதற்குப் பதில் சொல்வது எவ்வளவு அபாயகரமானது என்றும் அவளுக்குத் தெரியும். என்னுடைய பயங்கலந்த கண்களால், ஆசிரியரை கருணைவேண்டினாள், அவள். அவரோ அவளை உத்ஸாகப் படுத்தித் தட்டிக் கொடுத்தார். மேலும், அவளை அவர் தொந்தரவு செய்ய வில்லை. வேண்டிய தெல்லாம் தான் கிடைத்துவிட்டதே.

"எத்தனை புரளி? இது அந்த விபத்தையும் விட அல்லவா, மோசமாயிருக்கிறது! தனி மனிதன் ஒரு பெண்ணை முத்தமிட்டதால் விபத்து ஏற்படுத்தியது குற்றந்தான். எனினும், இதைக்கொண்டு முதலாளித்துவத்தைக் குற்றம் சாட்ட முடியாது. ஆனால், தன்னுடைய அஜாக்கிரதையினாலேயே விபத்து ஏற்பட்டது என்று அவள் ஒப்புக் கொள்ளாத பக்ஷத்தில், தங்கள் வாக்குறுதிகளை உடைத்தெறிவதாகப் பயமுறுத்துவது— அது அதிகாரத்திமிர், ஆணவத்திமிர், பணக்கொழுப்பு! ஆதலால், இனி...முதலாளி, அந்த முதலாளி தொலைந்தான்!" என்று யோசித்தார் ஆசிரியர்.

"நீ எங்கே வசிக்கிறாய்?" என்று அவர் அவளை ஆவலுடன் கேட்டார்.

உடனே அவள் பதில் சொல்லத் துணியவில்லை. தன்னுடைய வரவால் விளைந்த விபரீதங்களை அவள் நினைத்துக்கொண்டிருந்தாள்.

"நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?..... உங்களுக்கு என்மீது கொஞ்சம்கூடக் கருணை கிடையாதா? என்று கேட்டாள், அவள்.

அதற்கு அவரிடம் பதில் இல்லை.

"சரிசரி. உன் அண்ணன் எங்கு இருக்கிறான்?"

"ஏன்?"

"ஏனா? அவனோடு இந்த விஷயத்தை ஆலோசித்தாக வேண்டும்"

"ஐயோ, நீங்கள் என்னதான் செய்யப்போகிறீர்கள்?" "மலையைப் புரட்டுவேன்! ஆமாம், நாம் அந்த முதலாளி மீது போர் தொடுப்போம். அவனுடைய முட்டாள் தனத்துக்காக அவனாகவே பணந்தரும்படி நிர்ப்பந்தப் படுத்துவோம்"

“ஆம் அவர் கொடுக்கவேண்டு மென்பதற்காகத்தானே, இந்தச் செய்தியை நான் வெளியிடச் சொல்லுகிறேன்” அதுவும் வெளியாகிவிட்டது!

“வேறு வழிகளும் உண்டு. அவன் கொடுத்துத்தான் தீரும்படி, நாம் நிர்ப்பந்தப் படுத்தலாம். நீ மட்டும் அவன் மீது கேஸ் போட்டாயானால், அவன் கதி அதோகதிதான்!”

“நானா... என்னால் முடியாதே... முடியவே முடியாது...ஐயோ!”

அவளுக்கோ அந்த ஆசிரியர் இன்னொரு பைத்தியம் என்றுதான் பட்டது.

தன்னுடைய கோட்டைப் போட்டுக் கொள்ளும் போது ஆசிரியருக்கு ஒரே உத்ஸாகம். சீட்டிகூட அடித்தார். காருக்காக, போனில் பேசும் போதுகூட, அவர் குரல் கணீர் என்றிருந்தது.

அவள் அவரை அனாதரவான பார்வையுடன் பார்த்தாள். “அவருக்கென்ன வந்தது? ஒரு முடமான பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கவா எண்ணுகிறார்?” - இதை நினைக்க நினைக்க அவளுடைய முறிந்துபோன கையின் கணுக்கள் விண்ணென்று தெறித்தன.

“இந்த மனிதர்களெல்லாம் ஏனிருக்கிறார்கள்? எல்லாரும் எனக்கு உதவவிரும்புவதாகவே சொல்லுகிறார்கள். முதலாளியோ எத்தனை வாக்குறுதிகளாகப் பொழிந்தார்! ஆண்டெர்ஸன்தான் எவ்வளவு நல்லபடியாய் நடந்துகொண்டார்! என் அண்ணன்கூட, அப்படித்தான்! இந்த மனுஷரும் எனக்காக, எல்லோரும் ரத்தக்கண்ணீர் சிந்தவேண்டும் என்று எழுதினாரே! ஆனால், இப்போதோ, அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் முறைத்துக் கொண்டு, சண்டையிட எண்ணுகிறார்களே! ஐயோ, கடவுளே! அப்படியானால் என்கதி? நான்தானே உண்மையிலேயே கை இழந்தவளானேன்!” என்று நினைத்தாள்.

ஆசிரியர் வந்தார். அவள் கரத்தைப் பற்றிச் சொன்னார்: “இது, ஒரு பெரும்விஷயமாக மாறப்போகிறது. இதற்காக, கண்டனங்கள் கட்டுரைகள், பொதுக் கூட்டங்கள், எல்லாம்! அங்கு நீயும் இருப்பாய். இந்த நகரத்திலுள்ள பாட்டாளி மக்களெல்லாம் உனக்காக, உன் நல உரிமைக்காகப் போராடுவார்கள்!”

“எனக்கு இதெல்லாம் வேண்டவே வேண்டாமே!” என்றாள் அவள்.

மீண்டும் அவளை விபத்துக்குள் ஆக்குவதுபோலிருந்தது. தன்னையே தும்புதும்பாய்க் கிழித்தெறிவதுபோலிருந்தது, அவளுக்கு.

“நீ செய்துதான் ஆகவேண்டும்” என்றார், ஆசிரியர்.

“வேண்டாம்”

‘உனக்கு உதவியே வேண்டாமென்கிறாயா?”

“இந்தமாதிரிவேண்டாம். வேண்டாம், ஸார்”

“இந்தாபார். நானும் உன் அண்ணனும் தீர்மானிக்கிற படிதான் நீ நடக்க வேண்டும்... ஓ! அந்தக் கடிதத்தை மறந்தே விட்டேனே. எனக்குத் தெரியும். நான் வருமட்டும் நீ காத்திருக்கமாட்டாய். ஓடிவிடுவாய். ஆதலால் , நீயும் என்னோடு வந்துதான் திரும்பவேண்டும்” என்று கூறிக்கொண்டே அவளுடைய கரத்தைப் பிடித்தார்.

“அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடுங்கள்” என்று பரிதாபமாகக் கேட்டு, தன்னுடைய நொண்டிக்கையை நீட்டினாள், அவள்.

“முடியாது, மகளே, முடியாது, என்னோடு வா. டாக்ஸியிலே போவோம்’ சரி, உன் அண்ணன் எங்கிருக்கிறான்?”

‘என்னால் சொல்ல...’

“சொல்லித்தானாகவேண்டும், இந்தா அமைதியாயிரு. இந்தப் படபடப்பெல்லாம் சீக்கிரம் போய்விடும். நாங்கள் உனக்கு தைரிய மூட்டுவோம். தொழிலாளிவர்க்கமே உனக்காக உதவிக்கு நிற்பதை நீயே காண்பாய். நான் சொல்வதை நம்பு”

“ஆனால், ஆண்டர்ஸன்? அவர் என்ன சொல்வார்?”

“அவன் முகத்திலேயே நீ விழிக்காமலிருப்பதுதான் நல்லது. அவன் ஒரு வஞ்சகன்; அவனுடைய வஞ்சனைக்குத்தக்க கூலிகிடைக்கத்தான் செய்யும்.... ச்சூ... அழாதே, இவன் இல்லையென்றால், உனக்கு இன்னொரு கணவன்!”

“ஐயோ, அது வேறியா?” என்று கத்திக்கொண்டு, கையைத் திமிறி விடுவித்து ஓட முயன்றாள். ஆனால் முடிய வில்லை. மறு நிமிஷம் அவள் டாக்ஸியில் இருந்தாள்.

‘சரிசரி, அவன் விலாசமென்ன? சொல்லு சீக்கிரம்” என்று ஆசிரியர் படபடத்தார்.

இந்தக் காரியத்தினால், அந்த ஆசிரியர் அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றார். ஸிக்னே கார்ல்ஸனோ-? அவள் வாழ்வு பாழாய்ப்போனதுதான் கண்ட பலன்.

முல்லை - 10

கறுப்பு ரோஜா

வி. ஸ. காண்டேகர் தமிழில் : கா.ஸ்ரீ. ஸ்ரீ.

அவர்கள் இருவரும் இரண்டு ரோஜா மலர்களே! அவர்களின் நிறம்? இளம் மக்களின் உடல் நலத்தைப்பற்றி அவர்களுடைய தாய் தந்தையருக்குக்கூட இல்லாத கவலையை ஏற்றுக்கொள்ளும் எழுத்தாளன் நானல்ல. எனவே, இந்த நவீன காலத்து ரோஜாக்கள் மங்கிய வெண்ணிறமானவை என்று தளுக்காக வர்ணித்து விகாரமாகச் சித்திரிக்க எனக்குத் தெரியாது. இளைஞர்களுடைய உடலழகிலும் இளம்பெண்ணிகளின் மேனிமினுக்கிலும் அக்கறை கொள்வதுபோலவே, அறுபது நாழிகையும் அவர்களுடைய கல்யாணக் கவலையிலேயே மூழ்கிக் கிடக்கும் எழுத்தாளர்களின் கும்பல் ஒன்றும் இருக்கிறது. பெண் குழந்தை தகப்பனைக் கட்டிக்கொள்ளும் பருவத்தை அடைவதற்கு முன்பே, இந்த எழுத்தாளர்கள் அவளைப் பிற மனிதன் கழுத்திலே கட்டிப்போடப் பந்தயக் குதிரைகளைப்போல ஆத்திரத்தோடு விரைந்தோடுவார்கள். இவர்களுடைய கதைகளில் பையன் பெண்ணைத்தான் பார்க்கிறானே! அதுவும் எங்கே? நடுத்தெருவிலும் புகைவண்டியிலும் சோலையிலும் கலாசாலையிலும்! கணப்பொழுது அவர்கள் ஒருவரை மற்றவர் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் தாமதம்; உடனே அவர்களுக்கு ஜன்மத்துக்கும் தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. இந்தத் தொடர்பைக் கலைக்கப் பிரம்மாவின் தாத்தா வந்தாலும் முடியாது! நான் இந்தக் காதற் கூடாரத்தைச் சேர்ந்த எழுத்தாளனாக இருந்திருந்தால், என் ரோஜாக்களின் நிறம் சிவப்பு என்று உடனே சொல்லியிருப்பேன் காதலும் இடையூறும் சிவப்பு நிறம் கொண்டவை. இந்த ரோஜாப்பூக்கள் மஞ்சளாகவும் இல்லை. குக்கிராமத்திலே 'கஸ்டம் ஆபீஸில், உப்பு மூட்டைகளை நிறுப்பவனுக்கும் பொன்னுக்கும் என்ன சம்பந்தம்? தினசரிகளிலே பொன்னின் விலையைப் படிக்கும்போது மட்டுமே அந்தச் சம்பந்தம் ஏற்படலாம்.

இந்த ரோஜா மலர்கள் வெண்மையல்ல, சிவப்பு அல்ல, மஞ்சளும் அல்ல. பின்னே அவை கறுப்போ? ஆம், கறுப்புத்தான் என்று சொல்லாமல் என்ன செய்வது? ஆனால் அவை அட்டைக் கறுப்பல்ல. மாநிறம்! வைரச் சுரங்கத்துடனோ கரிச் சுரங்கத்துடனோ அவற்றிற்கு

எவ்விதத் தொடாபும் இருந்ததில்லை. என்னைப் போன்ற கதாசிரியன் இவ்விரு ரோஜாக்களைப் பிற்காலத்திலே ஒரு கதைக்கு நாயகநாயகிகளாக்கிக் கௌரவிக்கப் போகிறான் என்று அவர்களின் பெற்றோர் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள். அப்படியிருந்தால் அவர்களுடைய கையேடு பேரேடுகளில் சோப்பு பௌடர் வகையில் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செலவழிந்திருக்குமே!

ரோஜாவுக்கு முதல் முதலில் முள் இருந்திராது. கவிகள் யாவரும் தமது உள்ளத்திலே உறுத்திய முள்ளை அதற்கு அர்ப்பணம் செய்யலாயினர். பிறகுதான், 'முள் இல்லாத ரோஜா இல்லை' என்பது புலனாயிற்று. என்னுடைய இந்தக் கறுப்பு ரோஜாக்களுக்கும் முள் இருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்தக் காலத்திலே ரோஜாச் செடியில் வேல முள்ளும் நெருஞ்சி முள்ளும் நாகதாளி முள்ளும் இருப்பதாகச் சில சிறுகதை மன்னர்களின் தாம்பத்திய வாழ்க்கை வர்ணனையிலிருந்து தெரிய வருகிறது. இந்த ரோஜா மலர்கள் மட்டும் அந்த வகையைச் சேர்ந்தவையல்ல. இவற்றின் முள்ளும் ரோஜா முள்தான்!

"பூனைக்குட்டியை மடியில் விட்டுக்கொள்கிறீர்களே. அதன் உடம்புச் சூடு உங்களுக்குப் பிரியமாக இருக்கிறதாக்கும்!" என்று அவள் சொல்வாள்.

"பொன் வைக்கிற இடத்திலே பூவை வைப்பது போல என்பார்களே! ஒரு பொன்மேனி இந்த வீட்டிலே வந்து விளையாடட்டும். உடனே -" என்று அவன் இழுப்பான்.

"சும்மா இருங்கள்!" என்னும் தலைவன், இந்த விவாதக் கூட்டத்தை வெறும் சமிகினையினால் முடித்து வைப்பான்.

பட்டினி கிடப்பது அவளுக்குப் பழக்கமாகிவிட்டது. "ஏன் பட்டினி இருக்கிறாய்?" என்று அவன் கேட்பான்.

"நான் யாருக்காக உபவாசம் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று அவள் பதிலுக்குக் கேட்பாள்.

"யாருக்காக இருக்கிறாய்? பிறருக்காக உபவாசம் கிடக்க நீ காந்தியா என்ன?"

"நான் காந்திதான். சரி, நான் காந்தி; நீங்கள்-"

"நான் யார்? நீலா நாகினியா?"

"சேச்சே ! நுங்கள் வைஸ்ராய்".

அப்பொழுதைய அவளுடைய அபிநயம், குலப்பெண்கள் சினிமாவில் நடிக்கலாமா கூடாதா என்ற சிக்கலைத் தீர்த்து விடுவதாக இருக்கும்.

பிறகு என்ன? அரைக்கணத்திலே காந்தி இர்வின் ஒப்பந்தத்தையும் தோற்கடிக்கும் உடன்படிக்கை ஏற்பட்டுவிடும்.

அவளுக்குத் தூக்கம் சிறிது-கதாநாயகி இப்படி இருப்பது நல்லதல்ல என்பது தெரிகிறது; ஆயினும் உண்மையைச் சொல்லப் போனால் நிறைய - அதிகமாகத்தான் வரும். அவள் ஏழைப் பெற்றோர்களுக்குப் பிறந்தவளாயினும் ஒரே செல்வக் குழந்தையாக வளர்ந்தவள். பிறந்த வீட்டில் அவள் தூக்கத்தைக் கலைப்பவர் யாருமில்லை. மணமான பிறகு மட்டும் என்ன? பிரிவினால் தூக்கம் கலையுமே என்றால், அத்தகைய சந்தர்ப்பமே பெரும்பாலும் நிகழ்ந்ததில்லை. உப்பு இலாக்காவில் குமாஸ்தா என்றால் நாட்டுப்புறத்து வாழ்க்கை. கணவனுக்குச் சாப்பாட்டுக் கஷ்டம் கூடாது என்பதற்காக அவள் பிறந்தகமே போவதில்லை. அவள் மூளையிலே கவிதை சுழலவில்லை; கழுத்திலே மாதர் சங்கத்தில் தலைமைவகித்த மாலை அசையவில்லை; கையிலே பூத் தையல் போடுவதற்குக் கைக்குட்டை இல்லை; கால்களுக்கோ ஊர் சுற்றும் பழக்கமில்லை. பொழுது போக்குவதற்கு அவளுக்குப் பாவம், தூக்கத்தைத் தவிர வேறு வழி ஏது? அவள் பொழுது போக்குக்காகப் பெண்களுக்கென்றே வரும் ஒரு மாதப் பத்திரிகையை அவன் வரவழைத்தான். ஆனால் அவள் அதைப் படிக்கும் போக்கைப் பார்ப்பவர்கள் அது பெண்களுக்காக வரும் பத்திரிகையல்ல என்றே எண்ணுவார்கள்! நடுநடுவே அவன் பிரசித்த நாவல்களுள் ஏதாவதொன்றை வாங்கிவருவான். அந்த நாவலைவிடத் தூக்கந்தான் அவளை மயக்கும். பெரும் புகழினால் கிறுக்குப் பிடித்தலையும் எந்த நாவலாசிரியன் கண்ணிலும் மிளகாய்ப் பொடியைத் தூவும் சாமர்த்தியம் அவள் தூக்கத்துக்கு இருந்தது.

இப்படித் தூங்கியதனால் அவன் அடிக்கடி அவளைப் பரிகாசம் செய்வான். "இரவில் வீட்டில் திருடன் புகுந்தால்கூட உனக்குச் சந்தடியே தெரியாது" என்பான்.

அவள் தற்காப்புக்குரிய கடைசி முயற்சியாக, "அதனால்தானே நீங்கள் எனக்கு நகை செய்து போடுவதில்லை! அப்படித்தானே?" என்பாள்.

"நீ ஏன் இப்படிப்பட்ட கணவனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினாய்?"

"அப்பொழுது நான் தூக்கத்தில் இருந்திருப்பேன்"

இன்னொரு சமயத்திலே அவன், 'உனக்குச் சிறுகுழந்தையைக் கண்டால் ஏன் பிடிக்கிறது என்பது எனக்கு இன்றுதான் தெரிந்தது" என்பான்.

அவள் முகத்தைச் சொடுக்கிக்கொண்டே, "ஏதாவது உங்களுக்குத் தோன்றியதைச் சொல்லிக் கொண்டிருப்பீர்கள். தம்மிடம் இல்லாதபொருளைத்தான் மனிதர்கள் வேண்டுகிறார்கள்" என்பாள்.

"அடி பைத்தியமே! மனத்தத்துவ சாஸ்திரத்தின் வாசனையே உனக்கு அடியோடு இல்லையே?"

“வேண்டாமே; அதனால் அடுப்பு ஒன்றும் புகையாமல் இருக்கப் போவதில்லை”.

“சிறு குழந்தையைக் கண்டால் உனக்குப் பிடிப்பதற்கு முக்கியமான காரணம்-”

“சொல்லுங்கள், உங்கள் புதிய ஆராய்ச்சியையும் தெரிந்துகொள்கிறேன்”

“அதற்கு காரணம்: சிறுகுழந்தை நீண்ட நேரம் தூங்குகிறது என்பதுதான்.”

“பெரியவர்களுக்குத் தூக்கம் வராததனால் அவர்கள் வளவள வென்று பேசிக்கொண்டிருப்பார்கள்.”

இந்த ரோஜாக்களின் முள் இப்படி இருந்தது. அன்புள்ள இந்தத் தம்பதிகளின் பெயரைச் சொல்லாமல் நான் அவர்களை ரோஜா என்று சொல்வானேன் என்று பலர் நினைக்கலாம். நான் சொல்வதற்குக் காரணம் ஒன்று இருக்கின்றது. மனிதர்களுக்கு ஏன் பெயர் வைக்கிறார்கள்? ஒருவர் மற்றவரைத் தெரிந்துகொள்வது சுலபமாக இருக்க வேண்டும் என்றுதானே? அப்படிப் பார்த்தால் இந்த ஜோடியை ரோஜா என்று சொல்வதே பொருத்தமானது. ரோஜாப்பூ என்றால் அவனுக்கு வெகு ஆசை. அப்பொழுது பறித்த ரோஜா மலரின் மோகன மணத்தை உள்ளத்திலே நிரப்பிக்கொண்ட அவன், “இந்த ஒரு கணத்திலே மனிதப் பிறப்பே பயன் பெற்றுவிட்டது” என்பான்.

ஒரு ரோஜா இதழின் பின்னால் கூத்தாடும் மற்றொரு பெரிய ரோஜா இதழைக் கண்டதும், இந்த இதழ்கள் யாவும் சேர்ந்து கும்மியடிப்பதாக அவள் நினைப்பாள். ரோஜாவின் நறுமணமே அவற்றின் கீதமாக அவளுக்குத் தோற்றம்.

அன்றும் அதுதான் நிகழ்ந்தது தலைமைக் குமாஸ்தாவின் மனைவியிடமிருந்து ஒரு பொட்டலத்தையும் பெரிய செய்தியையும் கொண்டுவந்தான் சேவகன். தலைமைக் குமாஸ்தா என்றால் அந்தக் குக்கிராமத்திலே பெரிய மனுஷர். அவர் மனைவி அன்று பிற்பகலில் அவளைப் பார்க்க வருவதாகச் சொல்லியனுப்பினாள். அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்க்கக்கூட அவளுக்கு ஞாபகமில்லை. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் கணவன் வாய் சும்மா இருக்குமா? ‘பகலிலே நீ தாழ்ப்பாளைப் போட்டுக்கொண்டு தூங்கிவிடாதே!” என்றான்.

“ஏன்?”

“நீ கதவை அடைத்துவிட்டுத் தூங்கும்பொழுது அந்த அம்மாள் வந்தால்? உன்னைப் பார்க்காமலே அவள் திரும்பிப் போவாள். பிறகு அது திடுக்கிடும் சம்பவமாகிவிடும்; நாவல்களில் வருவதுபோல!”

கணவனுடைய கருத்து அவளுக்கு விளங்கியது. பகலில் கண்ணசையும்போது கதவைச் சிறிதளவு திறந்து வைக்கவேண்டும் என்று

அவள் தீர்மானித்தாள். ஆனால் பேச்சிலே தோல்வியடையக் கூடாதென்று எண்ணி, "தலைமைக் குமாஸ்தாவின் மனைவி, நாவலில் வரும் திடுக்கிடும் சம்பவத்தைப்போல் நான் எப்படி?" என்றாள்.

"நீயா! நீ வசன கவிதை"

"மட்டாகத்தான் இருக்கிறது பொல்லாத்தனம்!"

அவன் அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான். அதில் என்ன இருந்தது? இரண்டு ரோஜா மலர்கள்! இரண்டும் சமமாக இருக்கக்கூடாதா? ஒன்று பெரியது; பச்சைப்பசேலென்ற இலைகளுக்கு நடுவே ஒய்யாரமாகத் தலைநிமிர்ந்து ஆடியது. மற்றொன்று சிறுத்தது; வாடிப்போனது; இலையற்றது. நல்வினையும் தீவினையும் உருவெடுத்தவைபோல இருந்தன அந்த மலர்கள். இரண்டே பூக்கள்! ஆனால் அந்த ஊரில் ரோஜாவைக் காண்பதே அரிது. அவன் பெரிய ரோஜாப்பூவின் மணத்தை நுகர்ந்த வண்ணம், "எவ்வளவு அழகான பூ!" என்றான்.

அவள் கண்ணும் அந்தப் பூவின் மேல் விழுந்தது.

அந்த மணத்தைப்போன்ற இன்ப வெறியில், "பூஎன்றால் இப்படி இருக்கவேண்டும்! சட்டையில் அணிந்துகொண்டால் வெகு நேர்த்தியாக இருக்கும்" என்று கூறி, அவன் அந்தப் பூவை ஆசையோடு பார்த்தான். அவள் என்ன செய்கிறாள் என்பதையே அவன் கவனிக்கவில்லை. அவளும் மிகுந்த ஆவலோடு அந்த மலரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். எடுத்துக் கட்டிய தன் கூந்தலிலே அந்தப் பூவைச் செருகிக்கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும் என்ற கற்பனையிலே அவள் மனம் ஈடுபட்டது. இருவருடைய பார்வையிலும் ஒரே உணர்ச்சிதான் தென்பட்டது. அந்த மலரை நுகரும் உணர்ச்சி.

பெரிய ரோஜாப்பூவை எடுத்துக்கொண்டு அவன் சமையலறை யிலிருந்து வெளிவந்து, அங்கிருந்து இயல்பாகத் திரும்பி அவளைப் பார்த்தான். அவள் பார்வை விசித்திரமாக இருந்தது; பசியால் வாடும் சிறு குழந்தையின் பார்வையைப் போல இருந்தது. அவன் சடக்கென்று, "இந்தா, இந்தப் பெரிய பூவை நீ எடுத்துக்கொள், எனக்கு எதுக்கு? அந்த மற்றொரு பூவே எனக்குப் போதும்" என்றான்.

ஆபீசுக்குப் புறப்பட அவன் அவசர அவசரமாகக் கோட்டை எடுத்த பொழுது கவனித்தான்: அந்தப் பெரிய ரோஜாப்பூ அதில் செருகியிருந்தது. உள்ளே போய் அவளுக்கு இம்மாதிரியே ஓர் அழகிய பரிசு அளிக்க வேண்டும் என்று நினைத்தான். அதைவிட மற்றொன்று செய்யலாம் என்று தீர்மானித்தான்.

வழியிலே அவனுடைய சைக்கிளின் சக்கரங்கள் இரு ரோஜா மலர்களாக அவனுக்குக் காட்சி யளித்தன!

பகலில் இடைநேரத்தில், ஆபீசிலிருந்த மற்ற குமாஸ்தாக்கள் விரல்களைச் சொடுக்கிக்கொண்டும் கொட்டாவி விட்டுக்கொண்டும் எழுந்தனர். இவன் மட்டும் சிரித்துக்கொண்டே கிளம்பினான். இடையில்

அரைமணி நேரத்தில் இவன் அன்று வீட்டுக்குப் போய்வரக் கிளம்பியதைக் கண்டு இவனைவிட மூன்று மடங்கு சம்பளம் வாங்கும் தலைமைக் குமாஸ்தா பெருமூச்சு விட்டார். அன்று காலையில் அவர் வீட்டுக்கு அதி தேவதையான மகாகாளி விடுத்த துப்பாக்கி வெடிகளின் புகை போல இருந்தது அந்தப் பெருமூச்சு, இந்தக் குண்டுவீச்சு அவர் வீட்டில் நாள் தோறும் நடப்பதுதான். வீடாவது! அது ரணகளந்தான். 'தண்ணீர் வெள்ளத்தைப் போலவே ரத்தவெள்ளத்தின் உற்பத்தி ஸ்தானமும் குறுகலாகத்தான் இருக்கும்!' என்ற விதி இந்த வீட்டு யுத்தத்திலும் அநுபவத்தில் கண்ட விஷயம். அன்று காலையில் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை ஆரம்பமானதற்குக் காரணம் ரோஜா மலர்தான். அந்தக் குக்கிராமத்தில் ரோஜாப்பூ கிடைப்பது மிகவும் அரிது. தலைமைக் குமாஸ்தாவின் பங்களாவிலே மட்டும் அவை பூத்தன. அன்று சுமார் இருபது பூக்கள் பூத்திருந்தன. ஆனால் தலைமைக் குமாஸ்தாவின் மனைவி., அந்தக் குமாஸ்தாவின் மனைவிக்கு அனுப்பிய பொட்டலத்தில் இரண்டு பூக்களே வைத்திருந்தாள். அவற்றில் ஒன்று வாடிய பூ. இதை அவர் பார்த்துவிட்டார். குமாஸ்தாக்களின் வாய்க்குப் பயப்படாத மேலதிகாரி உண்டா? குமாஸ்தாக்களே எப்போதும் அற்பங்கள்! அவர்கள் வாய் கண்டபடி பேசும்! எனவே தலைமைக் குமாஸ்தா தம் மனைவியின்மேல் எரிந்து விழுந்தார்; அவள் அவர்மேல் பாய்ந்தாள்; துப்பாக்கிகள் வெடித்தன; குண்டு வீச்சுகள் நிகழ்ந்தன; கன்னங்கள் சிவந்தன-போரின் முடிவு என்ன? மீதியிருந்த ரோஜாப்பூக்கள் வெந்நீர்த் தவலையில் மிகுந்திருந்த தண்ணீரில் போய் விழுந்தன. இடைநேர விடுமுறையில் அவசரமாக வீட்டுக்குப் போகும் குமாஸ்தாவின் சட்டையிலே ரோஜாப்பூ மிளிர்வதைக் கண்டு, தலைமைக் குமாஸ்தாவுக்கு அந்தத் தவலையில் எறிந்த ரோஜாமலர்களின் ஞாபகம் வந்தது. அவர் தம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

தலைமைக் குமாஸ்தாவின் மனைவி பிற்பகலில் வரப்போவதால், அடியோடு தூங்கக்கூடாது என்று தீர்மானித்து, அவள் வெளிக்கதவை ஒருக்களித்து வைத்துவிட்டு, ஒரு நாவலை எடுத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தாள். நாவலில் கதாநாயகனைப்பற்றிய அழகிய வர்ணனையைப் படித்தபொழுது அவளுக்குத் தன் கணவன் எதிரே நிற்பது போல இருந்தது. 'சட்டையில் பெரிய ரோஜா மலரைக் கண்டதும் அவர் ஆனந்தமாகச் சிரித்திருப்பார்; மாலையில் வீடு வந்ததும் அவர் என்னை அன்போடு பார்ப்பார்; அப்புறம்-

இப்படிக் கற்பனையில் மூழ்கியிருந்தபோது அவள் கண்ணயர்ந்தாள். இனிய கனவு கண்டாளோ என்னவோ, வெகு நேரம் வரையில் அவள் எழுந்திருக்கவே இல்லை; கடைசியில் திடுக்கிட்டு விழித்தாள். பார்த்தால் மணி மூன்றுக்குமேல் ஆகிவிட்டது! 'தலைமைக் குமாஸ்தாவின் மனைவி வந்து திரும்பிப் போயிருப்பாளோ? கதவைத்தான் திறந்து வைத்திருக்கிறேனே!' என்று அவள் யோசித்தாள். பரபரப்போடு எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு, கூந்தலைச் சரிப்படுத்திக்கொள்ள

நிலைக்கண்ணாடியின் முன் வந்து நின்றாள். 'மேலதிகாரியின் மனைவி இன்று தானாகவே நம்மைப் பார்க்க வருகிறாள். அந்த வாடிய சிறு ரோஜாவைச் சூட்டிக்கொண்டால் என்னவோ போலத்தான் இருக்கும். காலையில் ரசியமாக அந்தப் பூவைக் கொண்டுபோய் அவர் கோட்டில் செருகினேனே! அதை நானேகூட வைத்துக்கொண்டிருக்கலாம்' என்று நினைத்தாள். ஆனால் அந்த நினைப்பு ஒரு கணங்கூட நிலைத்திருக்கவில்லை. அந்தச் சிறிய பூவை அவள் தேடினாள். அது எங்கும் அகப்படவில்லை. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மனச்சோர்வுடன், கண்ணாடி முன் நின்று, கூந்தலைப் படிய வைக்கலானாள். திடீரென்று அவள் சோர்வு மறைந்தது!

பிச்சோடாவிலிருந்து அந்தப் பெரிய ரோஜாப்பூவை எடுத்து அவள் உற்றுப் பார்த்தாள். காலையில் கிடைத்த மலரேதான் அது. 'ஆனால் ஆபீசில் அவருடைய சட்டையிலிருந்து என் பிச்சோடாவுக்கு இது எப்படி வந்தது? நம்முடைய தூக்கமோ சொல்லவேண்டியதில்லை அவர் மெதுவாக வந்து, கதவை மெல்லத் திறந்து– சரி, சாயங்காலம் அவரைச் சும்மா விடக்கூடாது!' இப்படி அவள் எண்ணம் ஓடியது.

வெகுநேரம் வரையில் அவள் தனக்குள்ளே சிரித்துக்கொண்டாள். மேலதிகாரியின் மனைவி வந்தபிறகுதான் அவள் சிந்தனை கலைந்தது.

அன்றிரவு மனைவியிடம் தாற்காலிகமாகச் சமாதானம் செய்ய விரும்பிய தலைமைக் குமாஸ்தா இந்தத் தம்பதிகளின் பேச்சை எடுத்தார். "எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறான் அந்த மனுஷன்! இன்று அவன் சட்டையில் அந்தப் பெரிய ரோஜாப்பூ இருந்தது. அந்தப் பூவைப் போலவே அவனும் இருந்தான். நம் குடும்பமுந்தான் இருக்கிறதே, காட்டு முள்ளைப்போல!" என்றார்.

அந்த அம்மாள் விஷப்பார்வையோடு அவரைப் பார்த்துக்கொண்டே, 'உங்களுக்கு எப்போதுமே சொந்த வஸ்து பிடிக்காது; அயலார் பொருள் அழகாக இருக்கும். அவன் சட்டையிலே சின்னப் பூ இருந்திருக்கும். பகலில் நான் அவளைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் பிச்சோடாவில் அந்தப் பெரிய பூ இருந்தது. எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறாள் தெரியுமா அவள்! அவள் கணவன் அவளைப் பூப்போல வைத்துக்கொண்டிருப்பான். நம் குடித்தனமும் இருக்கிறதே, வெறும் காட்டுமுள்போல !' என்றாள்.

தலைமைக் குமாஸ்தாவின் பங்களாவில் காட்டு முள்கள் யாவும் குவிந்து விட்டதனால், அந்த நேரத்திலே அந்தக் கறுப்பு ரோஜாக்கள் இரண்டும் தமது சிறு கூட்டுக்குள்ளே முள்ளின்றி மலர்ந்திருந்தன.

மராட்டியிலிருந்து மொழிபெயர்ப்பு

முல்லை - 13

நாடகங்கள்

இளங்கோ மறந்தது	-	"இலங்கையர்கோன்'
அழிந்த கோயில்	-	எஸ்.டி.சுந்தரம்
1700 ஆண்டுகளுக்கு முன்	-	மு. அரசிளங்கோ

இளங்கோ மறந்தது

"இலங்கையர்கோன்"

இடம் : மரணத்திற்கு அப்பால்.
நடிகர்கள் : கண்ணகி, மாதவி, இளங்கோவடிகள்.

மாதவி : யார் அது, இந்த இருளில்?

கண்ணகி : (நலிந்த குரலில்) நான்_

மாதவி : நான் என்றால்? ஊர் பேர் இல்லையா?

கண்ணகி : காவிரிப்பூம்பட்டினத்துக் கோவலரின் மனைவி கண்ணகி. என்னை இவ்வளவு பயமுறுத்தலுடன் கேட்கும் நீ யார் என்பதை நான் அறியலாமா?

மாதவி : ஓ! நான் அதே கோவலரின் காதலி, கிழத்தி.. மாதவி. என்ன என்னை உனக்குத் தெரியாதா?

கண்ணகி : இல்லை. நான் உன்னை ஒரு பொழுதும் பார்த்ததில்லை. மாதவி, உன்னைக் காணவேண்டும் காணவேண்டும் என்று வெகு நாளாக ஆவல் கொண்டிருந்தேன். பூவுலக வாழ்நாட்களில் அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

மாதவி : என் வீடுதான் எப்பொழுதும் திறந்து கிடந்ததே. நீ ஏன் வரவில்லை? 'பத்தினி' என்ற மமதை உன்னை விடவில்லை போலும். ஆ ! வந்திருந்தாயானால், என் காதலரின் மனைவி என்ற முறையில் உனக்கு எவ்வளவு மரியாதைகள் எல்லாம் செய்திருப்பேன். அது கிடக்க! என்னைக் காணவேண்டும் என்று ஏன் உனக்கு அவ்வளவு ஆவல்? நானும் உன்னைப்போல ஒரு பெண்தானே?

கண்ணகி : கோபப்படாதே, அம்மா! மல்லிகையும் மணமும் போல் நானும் என் நாதரும் நன்றாக இருந்தோம். இளந்தென்றல் வாசனைக்கொள்ளை அள்ளிவரும் நிலவொளி மாடத்திலே... ஆ! அந்த இன்ப நாட்கள்! என்னை அணைத்திருந்த என் நாதரின் கரம் கொஞ்சம் தளருமாயின், நான் எவ்வளவு வேதனைப்படுவேன் (கண்ணீர் வடிக்கிறாள்).

மாதவி : (பொறுமை இழந்து) இது என்ன பெரிய காரியம்? உனக்கு மட்டும் பிரத்தியேகமானதல்லவே? நானுந்தான் அப்படியெல்லாம் அனுபவித்திருக்கிறேன்.

கண்ணகி : இவ்வாறு 'கவவுக்கை ஞெகிழாமல்' என்னைப் பொருந்தியிருந்த என் கணவர் திடீரென்று என்னைப் புறக்கணித்துவிட்டு அகல்வதென்றால், அதற்கு ஒரு காரணம் வேண்டுமே. நீயே அந்தக் காரணமாக இருந்தால்? என்னிடத்தில் இல்லாதது எதையோ அவர் உன்னிடத்தில் கண்டிருக்கவேண்டும். அது என்ன என்று அறிய எனக்கு மிக ஆவலாக இருந்தது. அந்த மகத்தான இன்பத்தில் நான் என்னையே மறந்துபோய் இருந்தேன். அவர் என் அருகில் இல்லாமல் போயே விட்டார் என்பதை முதலில் என்னால் நம்பவே முடியவில்லை.

மாதவி : உன்மேல் பிழை இல்லை. நீ அறியாத பெண். உன் கணவருடைய உள்ளம் கவிஞருடைய உள்ளம் போன்றது. அந்தக் கவிதை உள்ளத்தை உன்னால் திருப்தி செய்ய முடியவில்லை. சதா புதுமையையே தேடி விழைந்து கொண்டிருந்த அவருடைய ஐம்புலன்களும் மனமும், தினமும் நன்றாகவே இருந்த உன்னுடைய பழமையைக் கண்டு சலித்துப் போய்விட்டன. உன்னால் புதுமையை உண்டு பண்ண முடியவில்லை. அழகுணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்த உன் கணவரின் மனம்...

கண்ணகி : மாதவி, இப்படியெல்லாம் பேசாதே, என்னிடத்தில் அழகு இல்லையா? என் உடலிலும் உள்ளத்திலும் பூரித்து நின்ற அழகையும் இளமையையும் அவர் ஒருவருக்குத்தானே உரிமை செய்தேன்? அப்படி உரிமை செய்வதிலே நான் இறந்துபோக வேண்டி நேரிட்டிருந்தாலுங் கூடக் கொஞ்சமும் கலங்கியிருக்க மாட்டேன். என் அழகு அவர் இன்பம்.

மாதவி : உன்னுடைய அழகைப்பற்றிய மமதை இன்னும் உன் மனத்தைவிட்டு அகலவில்லைபோல் இருக்கிறது. ஆமாம், நீ என்னிலும் பார்க்க அழகிற் சிறந்தவளாகத்தான் இருந்தாய்; அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அழகுமட்டும் இருந்தால் போதுமா? தாமரைப்பூ அழகாக இருக்கிறது. ஆனால் அதை எத்தனை நாட்களுக்கு வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கமுடியும்? கையில் எடுத்து மோந்தவுடன் அதன் அழகெல்லாம் எங்கேபோய் விடுகிறது?

கண்ணகி : உன்னிடத்திலே என்ன இருந்தது? நீ என்ன ரம்பை ஊர்வசி அல்லவே; மானிடப் பெண்தானே?

மாதவி : ஆ! என்னிடத்தில் புதுமை இருந்தது. அவர் மனத்தில் நிகழும் மாற்றம் ஒவ்வொன்றையும் அறிந்துகொண்டு அதன்படி நடக்கும் சக்தி எனக்கு இருந்தது. நான் என்றும் புதுப் பெண்ணாகவே இருந்தேன். என் கடைவிழியின் பிறழ்ச்சியிலே, இளநகையின் மோகனத்திலே, சிறுவிரலின் அசைப்பிலே, தேன் குடித்த மந்திபோல்

எந்நேரமும் மயங்கிக் கிடந்தார். இவை மாத்திரம் அல்ல. என் ஆடலும் பாடலும்–

கண்ணகி : போதும் போதும், உன் ஆடலும் பாடலும்! உன்னுடைய ஆடலும் பாடலும் யாருக்கு வேண்டும் ? வாழ்வின் நிலையான ஆடலையும் பாடலையும் தம்முள் உணர்ந்து கொள்ளுவதற்கு மனிதர் செய்யும் மூடத்தனமாக முயற்சி அல்லவா ஆடலும் பாடலும்? இவைகளைக்கண்டு அறிவாளி ஒரு பொழுதும் மயங்கமாட்டான்.

மாதவி : உனக்கே புரியாத விஷயங்களுள் தலையிட்டுக்கொண்டு வீணாக நீ துன்பப்படுகிறாய். பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர் போற்றி வளர்த்து வந்த அருங்கலைகளை, அவைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத நீ எங்ஙனம் இகழ்ந்து பேசலாம்? அது இருக்கட்டும்; உன் அழகைமட்டும் பார்த்துக்கொண்டு ஒருவன் உன்னுடைய ஆசையிலே எத்தனை நாட்களுக்கு வீழ்ந்து கிடப்பான்?

கண்ணகி : உன்னிடத்தில் இல்லாத, குலமகளுக்குரிய அம்சங்கள் என்னிடம் எத்தனையோ இருந்தன. நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு–

மாதவி : பூ! உன் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பைக் கண்டு யார் வியக்கப் போகிறார்கள்? இவையெல்லாம் கையாலாகாத பெண்களின் பழைமையான பலமற்ற ஆயுதங்கள். ஆடவனைத் தம் அறிவினாலும் வல்லமையினாலும் வசியம் செய்யமாட்டாத பேதைப் பெண்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற தம் மேன்மையை காட்டி அவனுடைய இரக்கத்தைப் பெற முயல்கிறார்கள்.

கண்ணகி : மாதவி, நீ குதர்க்கம் செய்கிறாய். உன்னோடு வாயாட என்னால் முடியாது. என்னுடைய பதிபக்தி, என் கற்பு என்னுடைய திறமை இவைகளைப்பற்றி உன்னால் சிறிதளவேனும் உணர்ந்து கொள்ள முடியுமா?

மாதவி : பதிபக்தி, பதிவிரதைத்தன்மை இவையெல்லாம் அடிமைத் தனத்தைக் குறிக்கும் வார்த்தைகள் அல்லாமல் வேறு என்ன? உன் கணவர் செய்ததெல்லாம் சரியென்று அதற்கு எதிர்வார்த்தை பேசாமல் நீ செயலற்று இருந்தாய். உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நீ வல்லவளாக இருந்திருந்தால் உன் கணவர் ஒருபொழுதும் என் வீடே கதி என்று கிடந்திருக்கமாட்டார். உன் வல்லமையின்மைதான் பதிவிரதைத்தனமா?

கண்ணகி : (தன் காதுகளைக் கைகளால் மூடிக்கொண்டு) ஆ! இவை என்ன வார்த்தைகள்! மாதவி, உன் பெண்மை இவ்வளவு தூரத்திற்கு உன்னைவிட்டு அகன்றிருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. என் காதற் கணவரை உன் செயற்கை மாயங்களினால் மயக்கி அவரை ஒட்டாண்டியாகத் துரத்தியதும் அல்லாமல், அவர் சித்தமே என் பேறு என்று வழிபட்டிருந்த என்னையுமா தூற்றுகின்றாய்? ஆம், ஆம், பதிபக்தி, கற்பு முதலியன எல்லாம் உன் செயலில் அர்த்தமற்ற

வார்த்தைகளாகத்தான் ஒலிக்கும். உன்னால் அவைகளை ஒருபொழுதும் உணர்ந்து கொள்ளவே முடியாது.

'நான் என்பதனை மறந்து, தனக்காக அன்றிப் பிறர்க்காக வாழ்வது என்ற தத்துவத்தின் மேன்மையை, அதனால் வரும் உளமகிழ்ச்சியை நீ உணர்ந்துகொள்ளும் வரைக்கும் இவைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளமாட்டாய். தியாகம் என்ற தீயினால் தான் மனிதனுடைய ஆத்மா பரிசுத்தம் அடைகிறது. இன்று பூவுலகத்தில் சென்று பார்த்தால் தெரியும் மனிதர் எல்லாரும் என்னை எப்படித் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள் என்று.

மாதவி : தெரியும், தெரியும், உன் பதிவிரதைத்தன்மையை மெச்சி உன்னைத் தெய்வமாகக் கொண்டாடும் அந்த உலகம், இன்று என்னைத் தெருக் கூத்திலும், நாடக மேடையிலும், சினிமாத் திரையிலும் வைத்து வேசி விபசாரி என்று தூற்றுகிறது. ஆனாவிற்கும் ஆவன்னாவிற்கும் வேறுபாடு தெரியாத அவ்வளவு பாமரனான நடிகன் ஒருவன், நரி சிங்காதனத்தில் ஏறியதுபோல் நாடகமேடையில் ஏறி, 'தாசிகள் நேசம் மோசம்' என்று பாடும்பொழுது என் மனம் எவ்வளவு கொதிக்கிறது! நீ எவ்வளவு பதிவிரதையோ, நானும் அவ்வளவு பதிவிரதை. என் மானிட வாழ்வு முழுதும் ஒரே ஒரு காதலரே என் இருதயத்திலும் உடலிலும் இடம் பெற்றிருந்தார். ஆனால் உன்னைப்போல் நான் அவரைத் தெய்வமாகக் கொண்டாடி அடிமை வாழ்வு வாழவில்லை. எவ்வழியிலும் அவரை எனக்குச் சமமாகவே பாவித்தேன். அந்த ஒரு காரணத்தினால்தான் என் மையலிலே அவரும், அவர் மையலிலே நானும் அவ்வளவு காலம் சொக்கிப் போய் இருந்தோம்.

கண்ணகி : அதுதான் அவர் அப்படித் திடீரென்று உன்னை விட்டு என்னைத் தேடி வந்தாராக்கும்!

மாதவி : ஆம், ஆம். மலடி சந்ததியை விருத்தி செய்வாளென்றா.

கண்ணகி : (திடீரென்று கண்களில் தீப்பொறி சிதற, நெற்றியில் வேர்வை அரும்ப, குறுமூச்செறிந்து, வீராவேசம் கொண்டு) அடி துரோகி, என்ன சொன்னாய்? நானா மலடி? நீதான் என் கணவரின் ரத்தத்தை உறிஞ்சி ஒரு பிள்ளை பெற்றுவிட்டாயாக்கும்! இதோ பார். நீயும் உன் குலமும் உன் ஆடலும் பாடலும் எல்லாம் -

(கண்ணகி சாபம் கூறி முடிப்பதற்குள். இளங்கோவடிகள் எங்கிருந்தோ வந்து தோன்றுகிறார்.)

இளங்கோ : தாயே, மன்னித்தருள்வாய். எவ்வளவோ துயரங்களையும் இன்னல்களையும் சகித்துக்கொண்டே பொறுமையின் சாகரமாகிய உனக்கு இந்த அபலை மாதவி, சிந்தனை இல்லாமல் வீசிய வார்த்தைகளைச் சகித்துக்கொள்ள முடியாதா? உலகம் முழுவதையுமே வாரி அணைத்துக்கொள்ளும் உன் பரந்த

அன்பில் இவளுக்கும் ஒரு துளி கொடுத்து உதவு. சரி, அப்படித்தான். நீங்கள் இருவரும் சகோதரிகள். பூவுலகில் நடந்தது என்னவோ எவராலும் மாற்றியமைக்க முடியாத ஓர் ஊழின் பயன். நாம் எல்லாம் விதியின் வலிய கைகளில் கிடந்து ஆடம் செயலறியாப் பதுமைகள்தாமே!

முல்லை - 7

அழிந்த கோயில்

எஸ். டி. சுந்தரம்

வழிப்போக்கன்:- "எழுநிலை மாடம் மாளிகைச் செல்வமும் விழுந்துயிரில்லா வீண் காடானது! செழித்தழ கோவியம் சேரும் இக்கோயில் அழிந்ததும் ஏனோ? ஆதியம் ஜோதியே!"

என்ன விந்தை! எழிலும் ஏற்றமும் சூழ்ந்து கவியொலி வீசி நிற்கவேண்டிய இப்பெரும் கோயில், உருக்குலைந்து சின்னாபின்ன மாகிச் சீரழிந்து அழிவுற்றிருக்கிறதே! கலையின்பம் அறியாத காதகரின் செயலா..?

மனைவி :

வானவீதியில் வெள்ளிய பேரொளி
வாரிச் சிதறிடும் வைரமாம் தாரகை
மோனப் பாதையில் மூச்சு விடாமல்
மோகனம் காட்டி மூடுது பார்வை

குருடன் : ஐயா! ஏழைகள் - நாதியற்ற பறவைகள். ஏதாவது பிச்சைபோடக் கூடாதா...?

மனைவி : அம்மா! பார்வையில்லாத மனிதர், பசியோடிருக்கிறார்.

ஒரு குரல் : போடா! தடிப்பயலே! ஏதாவது வேலைபார்த்து வயிறு வளர்க்கிறதுதானே ! உடம்பைப் பார் உருளை மாதிரி.

மனைவி : ஐயா ! கொடுக்காவிட்டால் கோபிப்பானேன்?

மறுகுரல் : ஓ.. ஐயாவுக்கு பரிஞ்சு அம்மா பேசுறாங்களா?

குருடன் : தேவி! அவரிடம் பேசாதே! விதியின் எதிரொலி வா...! செல்வோம்...

வேண்டிய மாமழை பொழியும் மேகம்
வேண்டாக் கோபம் கொள்ளுவ தில்லை
மாண்டிடும் மாந்தர் மாயப்பூமியில்
மாசெனும் வலைதனைப் பின்னுதல் வீணே!

ஒரு குரல் : தேவலோடா ஆளு-பெரிய தீர்க்கதரிசிமாதிரி தத்துவ பாட்டாப் பாடித் தள்ளுறாண்டா.... (சிரிக்கிறான்.)

மனைவி : ஒருபிடி அவல் கூடக் கிடைக்க வில்லையே! இந்தப் பாழும் துன்ப வாழ்வில் கண்ட அநுபவம் போதாதா?

குருடன் : துன்பத்தின் எல்லை என்னவென்று தெரியுமா?

மனைவி : இன்பம் என்று நீங்கள் சொல்லலாம்... ஐயோ! இனி இந்தத் துயரத் தீயைச் சகிக்கமுடியாது.

குருடன் : பைத்தியமே! நாம் வளர்த்த வினைப்பயிரில் கதிரை தானே அறுவடை செய்கிறோம். வா....! நமது வாழ்வின் முற்பகுதி அகந்தையும், இன்பமும் பூசப்பட்ட மாளிகையாயிருந்தது. பிற்பகுதி அவலமும், எளிமையும் தோய்ந்த சிறு குடிசையாயிருக்கிறது. வா...! வா..!

"காரிருள் நீங்கக் கதிர் மதிக் கோலங்கள்
காட்டிடும் கருணைப் பொருளே ஈங்கே,

மனைவி : *பேரிருள் நீங்கிப் பொறுமையில் நேயம்*
பூண்டிட மாந்தர் பயில்வதும் என்றோ?

(இடியொலி முழங்குதல்)

மனைவி : இருள் எங்கும் சூழ்கிறது. சீக்கிரம் அந்தப் பாழடைந்த மண்டபத்திற்காவது சென்று ஒதுங்குவோம் வாருங்கள். மழையும் இடியும் கொட்டும்போல் இருக்கிறது.

குருடன் : வினையின் விளையாட்டு, பயங்கர உருவெடுத்துள்ளது ஆனாலும் என்ன! நம்மை அது இதற்குமேல் பயமுறுத்த முடியாது. ஆண்டவா..! செவ்....! பசித்துயரை நீ இன்றிரவு எவ்வாறு சகிப்பாய்

மனைவி : அதைச் சகிக்கவேண்டிய அவசியமில்லையே!

குருடன் : வேறு வழி..!

மனைவி : நமது வாழ்வின் சீர்குலைவுக்கே காரணமாயிருந்த அக்கோயிலின் பாழடைந்த குளத்திலே விழுந்துவிடலாம்.

குருடன் : அது மிகச் சுலபமான காரியம் இந்த முடிவைத் தேடுவோமாயின், நாம் கடந்த இருபது ஆண்டுகளாக இந்தத் துன்பத்தை அநுபவித்து வந்ததின் இலட்சியம் வீணாகிப் போகும். தற்கொலை ! ஆம்! அந்த எண்ணும்போதே அனந்தக் கண்ணீர் பெருகுகின்றது. சில வினாடிகளில் நமதுயிர் தத்தளித்து ஒடுங்கி ஓடிப்போகும். 'மாலை வானத்திலே மருண்டு பறந்து மறையும் கறும் பறவைபோல்' நமது ஜீவனும், சப்தமே போடாமல் எங்கோ ஓடி எல்லையற்ற பெருவெளியில் காற்றோடு கலந்துவிடும். ஆகா...! பின்னர் இன்பதுன்பம் என்ற இரண்டும் நமக்கில்லை. ஆம்..! அதுவே நமது இறுதி இன்பம். ஆனால்...

மனைவி : ஆனால் என்னும் சந்தேகமே வேண்டாம். இனி யோசனைக்கே இடமில்லை-ம்-வாருங்கள். எட்டிய வரையில் யாரையும் காணவில்லை. இதோ மின்னல் ஒளி நமது மரணப்பாதையைத் தெளிவாக்கிச் சிரிக்கிறது.

(இடியொலி)

வழிப்போக்கன் : *'இன்பச் சோலையில் இனிமை மிகுந்தால்*
துன்பச் சேற்றினில் தூய்மையும் விழுமாம்,
அன்புளம் சாகும், ஆறுதல் ஏகும்,
என்பவர் மேலோர் ஏக்கமும் வேண்டாம்"

குருடன் : யாரது? ஆறுதல் கலந்த அமுதமொழிகளை அள்ளித் தெளிக்கிறார்கள்?

மனைவி : ம்-போதும்...! அவற்றை எல்லாம் சிந்திக்க இதுநேரமல்ல வாருங்கள்... வாருங்கள்...! போய்விடுவோம்.

வழிப்போக்கன் : யாரது ஓடுவது? மனித சஞ்சாரமற்ற இவ்விடத்தில் நள்ளிரவில் ஒளிந்து ஓடும் நீங்கள் யார்? நில்லுங்கள்... விடமாட்டேன் நில்லுங்கள்.

மனைவி : ஐயா! எங்களை விட்டுவிடுங்கள்.

குருடன் : எங்களைத் தயவு செய்து தடைசெய்யவேண்டாம்.

வழிப்போக்கன் : பொறுமை கொள்ளுங்கள்.

குருடன் : பொறுமையா? அதன் சிகரத்தில்தான் நாங்கள் உலவி வந்தோம். ஆனால் வறுமைப் புயல் எங்களைத் தள்ளிப் பகடையாடிவிட்டது.

வழிப்போக்கன் : நீங்கள் யார்?

குருடன் : நாங்கள் தள்ளாடும் உயிரற்ற ஜீவன்கள்.

வழிப்போக்கன் : மனமுறிந்து பேசவேண்டாம். நீங்கள் குறை நீங்கலாம். உலகம் மிகப்பெரிது

குருடன் : எங்கள் துயரமும் அமைப்போல்தான். காலம் என்னும் காட்டாற்றில் கண்ணற்ற நானும், என் மனைவியும் விரைவில் மறையவேண்டிய மாயக்குமிழிகள்.

வழிப்போக்கன் : காலவேகம் நிலையற்றது.

"காலமும் காட்சியும் கலைந்திடும் கனவாம்
ஞாலமும் வாழ்வும் நில்லா அலையாம்.
காலையும் மாலையும் காரிருள்போலவும்
வேலை சூழும். உலகியல் மாறும்."

நீங்கள் தற்கொலை செய்துகொண்டு மடியவேண்டாம். நீங்கள் மிகவும் களைத்துக் காணப்படுகிறீர்களே! இதோ! இந்த உணவை முதலில் நீங்கள் உண்ணுங்கள். பிறகு பேசலாம்.

வழிப்போக்கன் : (சிறிது நேரம் சென்றபின்) பசி தீர்ந்ததா? வயிறு நிறைந்ததா?

குருடன் : துடித்த உயிர் தெளிவு பெற்றது சுவாமி!

மனைவி : சுவாமி! பாவ ஜென்மங்களாகிய எம்முன் பரிசுத்த வடிவாய் நிற்கும் தாங்கள் யார்?

வழிப்போக்கன் : நான் யார்? ஒரு நாடோடி! 'அழிந்து சிதைந்து மங்கலமிழந்த பத்தினிபோல்' இடிந்த கோபுரத்தோடு காட்சிதரும் அழிந்த கோயிலின் வரலாற்றை அறிந்து செல்லலாம் என இப்பாழ் மண்டபத்திலே தங்கினேன்.

(இருவரும் பெருமூச்சு விடுகிறார்கள்)

வழிப்போக்கன் : தாங்கள் குமுறுவானேன். இந்தப் பளிங்கு மணிக் கோயில் பாழடைந்த விபரம் உங்களுக்கு தெரியுமா?

மனைவி : சுவாமி! அழிந்த இக்கோயிலின் சரித்திரத்தை அழகான சித்திரங்களாக வரைந்திருக்கிறார்கள்.

வழிப்போக்கன் : அப்படியா! அச்சித்திரங்கள் எங்கமைந்துள்ளன?

மனைவி : அக்கோயிலின் மேற்புறத்துள்ள குகையில்.

வழிப்போக்கன் : சரி அங்கு சென்று அவைகளைக் கண்டுவருகிறேன்.

குருடன் : சுவாமி! வேண்டாம்! அந்தப் பயங்கரக் குகையில் பந்தமின்றி நுழைய முடியாது.

வழிப்போக்கன் : என்னிடம் பந்தமிருக்கிறது. கொளுத்திக் கொள்ளுகிறேன்.

குருடன் : அங்கு பேய்களின் நடமாட்டம் அதிகமாயிருக்கும் சுவாமி! நள்ளிரவு நெருங்கிவிட்டது.

வழிப்போக்கன் : பேய்களா? நடமாடுகின்றனவா?

குருடன் : சுவாமி! போகாதீர்கள். வேண்டாம்... வேண்டாம்... நானே கூறுகிறேன். நில்லுங்கள்.

வழிப்போக்கன் : இல்லை. வருகிறேன். சில வினாடிகள்... ஆகா! அழகின் பூரணத்தில் உதித்த அற்புதச் சித்திரங்கள். யாரது...? இவ்வுருவம் யாருடையது...? சிற்பி செவ்வண்ணன் சிற்பக் கூடமா ஆ...! இதென்ன...!

செல்வி : என்ன செய்கிறீர்கள். இப்படி... தூக்கமின்றியே உடம்பைத் துரும்பாக்கி கொள்ளுகின்றீர்களே! உணவருந்த வாருங்கள்!

சிற்பி : பேசாதே! செல்வி! என் கருத்தைக் கலைக்காதே! உணவு எனக்கு வேண்டாம். நீ போ...

செல்வி : எப்பொழுது பார்த்தாலும் கல்லைக்கட்டி அழுவது என்னதான் இன்பமோ?

சிற்பி : பெண்ணே! பேசி என்பொழுதை விழுங்காதே! எனதன்னை கருணைவாரிதி! கலைவாணியின் உருவை எண்ணப்படி செய்து முடிக்கும் வகை உணவு கொள்ளேன். கலையுள்ளம் அற்றவள் நீ.

செல்வி : ஆமாம்! கலை, வாழ்க்கையின் தற்கொலை! இவ்வளவு கஷ்டப்பட்டு யாருக்காகவோ கலையை வளர்க்கிறீர்கள்.

சிற்பி : என்ன கூறினாய்? பேதையே! யாருக்காகவோ? மனித சமுதாயத்தின் நலத்திற்காக! எனதரும் நாட்டின் உயர்வுக்காக! கலைவாணி என் பொருட்டு உவந்தளித்த சிற்றுளியின் ஆற்றல் உலகம் அறிந்து கொள்வதற்காக! என் வாழ்வின் கனவும் அரசரால் நனவாக்கப்பட்டது.

செல்வி : பளிங்குக் கோயில் கட்ட அரசர் சம்மதித்து விட்டாரா?

சிற்பி : ஆகா! சம்மதமா? நாளையே அஸ்திவார விழா! இரண்டே மாதங்கள். இரண்டாயிரம் ஆட்களை வரவழைத்து விட்டேன். இதோ பார்! என் தாய் கலைவாணியின் திருவுருவம் என்னுடன் கண்திறந்து பேசுகிறாள். அகா! இத் தெய்வச் சிலையை அமைத்து வணங்கவே அந்தப் பளிங்குமணி ஆலயம். அதைக் கட்டி முடித்ததும் என் வாழ்வின் இலட்சியம் முற்றுப் பெறும். அம்மா! கலைவாணி! உலகின்தாயே சாந்தி சூழும் விழிகளினால் எனையாட்கொண்ட அம்மையே! எவ்வாறு வாழ்த்துவேன். ஒளிப்பிழம்பே! அமுத தாரகையே! ஓங்கார ராணியே! அழகுக் கலையே! அற்புத மணியே!

"அமுத மென்மொழி யிதழ்-அம்மா-அம்மா
அமுத மென்மொழி யிதழ்-அம்மா
ஆரண மெல்லாம் ஆய்ந்திடும் தாயே!
பூரணமோங்கிப் பொலியுமென் தாயே!
சிந்தனையெல்லாம் சீர்மையைப்பாட
எந்தனைச் செய்தாய் ஏகாம்பரியே!
வந்தனை கூறி வாழ்த்தினேன் தாயே!
அந்தியின் மாலைச் சுந்தரி நீயே!

சிற்பி : செல்வி ! ஏன் அழுகை?

செல்வி : அழுகையல்ல ! ஆனந்த பாஷ்யம் ! உங்கள் இன்பத்தின் லட்சியத்தை இதுவரை நான் அறியாமல் போய்விட்டேனே!

சிற்பி : இனி என்றுமே இன்பம் நீ பகற்கனவு என்று எள்ளிநகை யாடிய எனது இலட்சியம் இன்பக் காட்சியின் பெட்டகமாகிவிடும். விரைவில் இக்கலைத் தெய்வத்தை பிரதிஷ்டை செய்துவிட்டு நாம் பொதிகைமலைச் சாரலுக்குச் சென்று விடுவோம்.

அரசன் : ஆகா! அழகான ஆலயம்! யாரது? மந்திரி! வாருங்கள்.. என்ன விஷயம்?

மந்திரி : அரசே! ஆலயம் முடிந்துவிட்டது, அதில் தங்கள் உருவம் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும் என்பதே நாட்டின் விருப்பம்.

அரசன் : சிற்பி அரும்பாடுபட்டுச் செதுக்கியுள்ள கலைவாணியின் சிலை...

மந்திரி : கலைமகளுக்குக் கோயிலா? அவசியமில்லை. அது இப்பொழுதிருக்கும் ஆலயத்திலேயே வைக்கப்படலாம். எதிரிநாட்டு வேந்தனுக்குக்கூட கோயில் கட்டப்பட்டுள்ளது. ஆதலின் இக்கோயிலில் நியாயமாக இருக்கவேண்டியது தங்கள் சிலை தான்.

அரசன் : அரசனுக்குக் கோயில் இருப்பதும் நல்லதே! சரி அவ்வாறே செய்துவிடும்.

சிற்பி : என்ன! அரசனது சிலையா எனது பளிங்குக் கோயிலில் இடம்பெறவேண்டும். ஆ! மந்திரி-ஜாக்கிரதை! மண்டையை என் சிற்றுளியால் செதுக்குமுன் ஓடிவிடும். கலைவாணி இருக்கவேண்டிய இடத்தில் காவலன் உருவம்.

மந்திரி : அரச ஆணை இது.

சிற்பி : முடியாது. கலைஞன் விருப்பம் இது.

மந்திரி : சிற்பி! ஜாக்கிரதையாகப் பேசு!

சிற்பி : மந்திரி!

மந்திரி : நான் பார்க்கிறேன்.

சிற்பி : (தனக்குள்) நானும் பாக்கிறேன். (மெதுவாக)இன்றிரவே பிரதிஷ்டைசெய்து விடுகிறேன்.

மந்திரி : ஆ! ...அடே!.. யாரது? அச் சிலையை அகற்றுங்கள் சுக்கு நூறாக உடைத்தெரியுங்கள். உம்... அந்த இடத்திலே இந்த அரச விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்யுங்கள். ஆம் - கர்வங்கொண்டவன் தான்! பைத்தியக்கார சிற்பி! அன்று எனது உருவச் சிலையைச் செதுக்கித் தர மறுத்தான். என்னை அலட்சியம் செய்த அப்பழியை இன்று முடித்துக் கொண்டேன். இனி அவன் அழிவு திண்ணம்.

சிற்பி : ஆ! ... என் கலைவாணியின் சிலை எங்கே? அம்மா! உன் திருமேனி சிதைக்கப்படுவதா? ஆகா..! மந்திரியின் மாயப்பழியா இது. அடா..! மாயப் பைசாசமே! இதுவா உன் செயல்! அகந்தையின் காத்தானே! அரச ஆணையின் உருவில் உனது சேஷ்டையைச் செய்து முடித்தாயா?

வேந்தே! இதற்காகவா முதுகெலும்பு முறிய என்னருமைச் சிலையைச் செய்தேன்? எத்தனை நாட்கள் பட்டினி! எவ்வளவு துயரம்! இரத்தமெல்லாம் ஆவியாக்கினேன். அடா! கலை அறியாத

கசடனே! கல்லுக்கும் சிலைக்குமுள்ள வித்தியாசத்தை நீ என்ன கண்டாய்! உங்கள் பழி முடிந்தது. பிடிவாதம் வென்றது. இதோ கலைஞன் மனம் உடைந்தது. ஏ கோயிலே! என் கலைவாணியில்லாத நீ ஏன் பல்லிளிக்கின்றாய்! இடிந்துபோ அழிந்துபோ! அரசே! பூண்டற்றுப்போ! ஏ நகரே அழிந்து போ!

வழிப்போக்கன் : ஆ...! அம்மா ! சகிக்க முடியவில்லை.

குருடன் : யாரது ? ஏன்..?

வழிப்போக்கன் : ஆம் ! பேய்கள்தான்!

குருடன் : அதுதான் ! சிற்பி செவ்வண்ணனின் ஜீவனின் நிழல்.

வழிப்போக்கன் : பாதகம்! வேந்தனா? அவன் அவனைக் கண்டால்?

குருடன் : என்ன சொன்னீர்கள்?

வழிப்போக்கன் : கலைஞனைத் தன்னகங்காரத்தால் வீழ்த்திய அச்சண்டாளனை...?

குருடன் : இஷ்டப்படி இன்றே தண்டியுங்கள். நானே அந்த அரசன். சிற்பியின் சாபம் பொய்யல்ல! இக்கோயிலை அழித்தவன் நான்தான்.

வழிப்போக்கன் : ஆ! என்ன ! நீயா!

குருடன் : ஆம் சுவாமி!

முல்லை - 7

1700 ஆண்டுகளுக்கு முன்

மு. அரசிளங்கோ

காட்சி — 1

இடம் - அரச அவை

நடிகர்கள் : சேரலாதன் - புலவர்கள்- செங்குட்டுவன் - இளங்கோ.

சேரலாதன் : தண்டமிழ் நாட்டின் தனிச் சிறப்புடைய புலவர் பெருமக்களே! இன்று என் உள்ளக் கருத்தினை எடுத்துச் சொல்லி உங்கள் வாழ்த்துரைகளைப் பெற விருப்புற்றுள்ளேன். நானோ நரைதிரை மூப்பு எய்தி, நாடாளும் உரம் இழந்து நலிவுற்றுள்ளேன். இந் நாளிலே எனது அரச வுரிமையை என் மகனுக்குத் தந்து நான் ஓய்வு பெறலாம் என்ற எண்ணம். உங்கள் கருத்தென்ன?

புலவர் : வேந்தே! கோல்கோணாது செங்கோலோச்சி மலர்தலை உலகினில் மக்கள் இன்புற நீதி வழுவாது நீண்டகாலம் ஆட்சி செலுத்தினீர்! மன்பதையெல்லாம் அறநெறியோங்கி இன்பம் எய்தின. தாங்கள் அரசு துறப்பது எங்களுக்கு வருத்தமெனினும் ஒரு புடை மகிழ்ச்சியே! தங்களைப் போலவே தங்கள் இரு மைந்தர்களும் எல்லாத் திறமைகளும் ஒருங்கே பெற்றுள்ளார்கள். இனியும் சேரன் ஆட்சி சிறந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

மற்றொரு புலவர் : யானொன்று கூற விரும்புகின்றேன். தங்கள் இளைய மைந்தன் இளங்கோ அரச இலக்கணம் யாவும் பெற்றிருக்கிறார். அவரே ஆட்சிக்கு இலக்கானவர்.

இளங்கோ : புலவரே! யாது புகன்றீர்! நீர் சொல்வது சிறிதும் முறைமையன்று. மூத்தோனிருக்க இளையோனுக்கு முடி சூடுவது முறையோ? தமிழ் நாட்டு மன்னர்கள் எக்காலத்திலும் முறை தவறிய துண்டோ? இம்மையில்-உலக வாழ்க்கையில் பற்றற்றவனாகிய எனக்கா இப்பேரரசு!

செல்வத்துட் செல்வம் அருட்செல்வம் அன்றோ? அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள் சேர்ந்த இன்னாவுலகம். நில்லாதனவற்றை நிலையென எண்ணுவது புல்லறிவன்றோ! பற்றினை விடாதவர்கு இடும்பைகள் பற்றுமன்றோ! ஆரா வியற்கை அவா நீப்பின் அந்நிலையே பேராவியற்கை தரும்.

எல்லா அறங்களிலும் துறவறமே சிறந்ததெனக் கொண்டுள்ள எனக்கா இவ்வரசாட்சி வேண்டும்?

(தந்தையை நோக்கி) தந்தையே! தவம், ஞானம், ஒழுக்கம், அவாவறுத்தல் இவைகளையே பேரின்பம் எனக்கொண்டுள்ள என் உள்ளம் எப்படி இவ்வரசுரிமையை ஏற்றுக்கொள்ளும்? வேண்டாம். என் அண்ணா செங்குட்டுவரே இந் நாட்டை ஆள உரியவர்.

(அண்ணாவை நோக்கி) அண்ணா! மன்னிக்கவும் இப்பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள்.

சேரலாதன் : மைந்தா! இளங்கோ! மெச்சினோம். ஆண்டிலே முதிர்ந்தவ னாகிவிடினும் அறிவிலே முதிர்ந்தவனாகிவிட்டாய். வாழ்க்கையில் உழண்டு புறண்டுள்ள என துள்ளம் வாழ்க்கையின் இறுதியில் உனது அறிவு நிறைந்த மொழிகளைக் கேட்டு அமைதியடைகிறது.

புலவர் : அரசே! இன்றுமுதல் இவர் இளங்கோவடிகள் என்று அழைக்கப்படுவார். இவரது அறிவின் விளக்கம் இத்தமிழ் நாடெங்கும் பரவுக! எக்காலத்தும் விளங்குக!

(செங்குட்டுவரை நோக்கி) ஐயனே! இனித் தாங்கள்தான் மன்பதை காக்கும் மன்னன்.

(முடிசூடல்-ஆரவாரம்)

எல்லோரும் : வாழ்க செங்குட்டுவன்! வாழ்க சேரன்! வாழ்க தமிழ்நாடு! வாழ்க இளங்கோ!

காட்சி — 2

இடம் : மலைநாடு. மலைவளங் காணுதல்.

செங்குட்டுவன் : (மக்கள் இட்ட காணிக்கையை ஏற்றுக் கொண்டு) மகிழ்ச்சி! உங்கள் விருப்பம் என்ன?

ஒருவர் : அரசே! வாழ்க நின் கொற்றம்! நாங்கள் கூற வியப்பான ஓர் நிகழ்ச்சியுண்டு: அதோ அக்கான வேங்கையின் கீழோர் காரிகை தான் ஒரு முலை இழந்து தனித்துயரெய்தி வானவர் போற்ற மன்னொடும் கூடி வானகம் பெற்றனள். எந்நாட்டாள் கொல் யார் மகள் கொல்லோ! நிந் நாட்டில் யாங்கள் நினைப்பினும் அறியோம்.

செங்குட் : என்ன இது? என்றுங் காணா நிகழ்ச்சி!

சாத்தனார் : அரசே! நான் அறிவேன். சோழன் மூதூர் பேராச் சிறப்பின் புகார் நகரத்துக் கோவலன் என்பானோர் வணிகன்; அவ்வூர் நாடக மேத்தும் நாடகக் கணிகையொடு ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுற கண்ணகி என்பாள் அவன் மனைவி. அவள் கால் பண்ணமைச் சிலம்பு பகர்தல் வேண்டிப், பாடல்சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ்சீர் மாடமதுரை புகுந்தனன். அது கொண்டு, மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன் பொன்செய் கொல்லன் தன் கைக் காட்டிக் கோப்பெருந் தேவிக் கல்லதை இச் சிலம்பு யாப்புறவில்லை, 'ஈங்கு இருக்க' என்று ஏகி, பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக் கண்டனன் பிறனோர் கள்ளவன் கையென, வினைவிளை காலம் ஆதலின் சினையலர் வேந்தன் தேரானாகிக் கன்றிய காவலர்க்கூய் 'அக் கள்வனைக் கொன்று அச் சிலம்பு கொணர்க ஈங்கென' கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி நிலைக்களங்காணாள் நெடுங்கண்ணீர் உகுத்துப் பத்தினியாகலின் பாண்டியன் கேடுற, முத்தாரமார்பின் முலை முகந்திருகி நிலை கெழு கூடல் நீளெரி ஊட்டிய பலர் புகழ் பத்தினியாகும்.

மதுரை மாதெய்வம் வந்து தோன்றி வாரொலி கூந்தல் நின் மணமகன்றன்னை ஈமாழ் நாளகத்தெல்லை நீங்கி வானோர் தங்கள் வடிவின் அல்லதை ஈனோர் வடிவிற் காண்ட லில்லென மதுரை மூதூர் மாநகர் மன்னன் மாய்ந்தனன். தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடினள் போல் பெருங்கோப்பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்.

தன்னொடு தனிமையிற் செல்லாது நின்னாடு அடைந்தனள்; நங்கை கண்ணகி. ஊழி ஊழி வாழி நின் வலம்படு கொற்றம்!

செங் : செம்மை முறை தவறினன் என்ற சொல் செவிப் படாமுன் உயிர் நீத்தான் பாண்டியன். தீவினையின் காரணமாக வளைந்த மன்னவன் கோல் உடம்பினின்றும் உயிர் நீங்கியதும் நிமிர்ந்தது.

எம்மைப் போன்ற மன்னர்க்கு வாழ்வு எப்பொழுதும் துன்பம் நிறைந்தது.

வானம் பொய்த்து வாரி வளங்குன்றின் மன்னன் குற்றம்.

கொடு விலங்குகளானும், பகைவர்களானும் உயிர்கள் வருத்தமுறின் மன்னன் குற்றம்.

மக்கள் முறை தவறின் மன்னன் குற்றம்.

கள்வர் மிகின்-கொலையுறின் மன்னன் குற்றம்.

குகைகளைக் காத்து கொடுங்கோலுக்கு அஞ்சி மக்கட் கூட்டத்தைப் புரக்கும் நல்ல அரசர் குடியில் உதித்தல் துன்பம் அல்லது இன்பம் எது?

தேவி : பாண்டியன் பத்தினி வானுல கடைந்தனள். வானோர் போற்றுக! மன்னா! நம் நாட்டில் வந்தடைந்து இழந்த கணவனை அடைந்து விண்ணுலகேகிய கண்ணகிக்கு கோவில் கட்டுங்கள். கண்ணகியின் கற்பின் சிறப்பை உலகறியட்டும். “பெண்ணிற் பெருந்தக யாவுள கற்பென்னுந் திண்மை யுண்டாகப் பெறின்”.

செங் : பொருத்தம்! உன் விழைவை நிறைவேற்றுவேன். நீயன்றோ பெண்ணிற் பெருந்தகையள். (புலவர்களைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

புலவர்கள் : அரசே! தேவி சொல்லியது மிகமிக மகிழ்ச்சிக் குரியது. விரைவினில் முடிக்கவேண்டும். பொதியமலையினின்று கற் கொணர்தல் எளிதே! ஆனால், அதிற் பெருமையில்லை. தமிழ் நாட்டு வேந்தர்கள் புலி, கயல், வில் பொறித்த இமயத்தினின்று கற் கொணரவேண்டும்.

செங் : சரியான யோசனை! அப்படியே செய்வோம். (யாவரும் போகிறார்கள்)

காட்சி — 3

இடம் : அவை

நடிகர்கள் : அரசர்-புலவர்-அமைச்சர்-காவலன்-முனிவர்கள்.

காவலன் : வேந்தே! இமயமலைச் சாரலிலிருந்து சில முனிவர்கள் தங்களைக் காணவந்து காத்துக் கொண்டிருக்கின்றனர்.

செங்குட் : வரச்சொல்.

முனிவர்கள் : செங் கொற்றக் குடைச் சேரனே! வாழி! வாழி நின் வளநாடு!

செங் : அமருங்கள். வடநாடு சென்று வருவதாகக் கேள்வியுற்றேன். செய்தி யாதேனும் உளதோ?

முனிவர்கள் : அரசே! அதைச் சொல்லத்தான் நின் அவை புகுந்தோம். ஆரிய அரசர்கள் ஆணவம் கொண்டு ஆர்பாட்டம் செய்கிறார்கள். தென்னாட்டவரை அவர்கள் படுத்தும் பாடு கொஞ்சமல்ல. முன்னாள் தமிழரசர்களால் முறியடிக்கப்பட்தை மறந்து இகழ்ந்துரைக்கின்றனர். அவர்களுள் கனகனென்பானும், விசயனென்பானும் தங்களைத் தாக்கிப் பேசித் தறாக் கொண்டிருக்கிறார்கள்.

புலவர் : அரசே! நெடுநாட்களாகப் போர்த் தொழிலற்றுத் தோள்கள் துடித்துக் கொண்டிருக்கும் உங்கள் படைக்கு இது ஓர் நல்ல செய்தி;

விழுப்புண் படாத நாளெல்லாம் வீணாளென வீரர்கள் வருந்துகின்றனர். வடநாட்டிற்குப் படையெடுத்துப் பன்னாட்களாயின.

செங் : புலவரே! நன்றாகச் சொன்னீர்! அமரகத்து வாள் வீசிப் போர்செய்யும் என் கைகள் வாடியிருக்கின்றன. வாய்ப்பற்று, வடநாடு! ஆம்! தமிழ் நாட்டு முடியுடை வேந்தர் சேர சோழ பாண்டியர் மூவரு;ம் முறை முறையே அந்நாளில் ஆரியரை வென்று இமயத்தில் தங்கள் வெற்றிச் சின்னங்களைப் பொறித்த அந்நாளை நினைத்திடில் என் தோள்கள் துடிக்கின்றன. தமிழ் வேந்தர்களின் திறம் தெரியாத ஆரியரை-அவர்கள் ஆட்சியை ஒழிப்பேன். செங்குட்டுவனை யாரென நினைத்தார்கள். நாளையே படையெடுத்து வெற்றி மாலையுடன் திரும்பேனாகில் “செங்குட்டுவன் புலி நிகர் வேந்தன் என்ற பெயர் ஒழிக! போர்! போர்! ஆகா! ஆகா! போர்! செல்லுங்கள்! கண்ணகியின் சிலைக்குக் கனகவிசயன் தலையிலேற்றிக் கல் கொணர்வோம்.

காட்சி — 4

இடம் : கங்கைக்கரை

பாத்திரங்கள் : செங்குட்டுவன் - வீரர்கள்.

ஒற்றன் : வாழி வேந்தே! வாழி! வடதிரை மன்னவரெல்லாம் தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாமெனக் கனகவிசயன் பெரும் படையொடு நம் பாசறை நோக்கி வருகின்றனர்.

செங் : முரசறையுங்கள்! கூற்றுடன்று மேல்வரினுங்கூடி எதிர் நிற்கும் ஆற்றல்சால் தமிழ்நாட்டு வீரரே! பாயுங்கள்.

(யுத்தம். செங்குட்டுவனுக்கு வெற்றி. கனக விசயர் தப்பி ஓட்டம்)

காட்சி — 5

(வெற்றி பெற்ற செங்குட்டுவன் பாசறையில் நிற்கிறான். படைத்தலைவர் தூரத்தில் யாரோ இருவர் செல்லுவதைக் கண்டுவிடுகிறார்)

படைத்தலைவர் : யாரடா போர்க்களத்தில்? முனிவர்களா? எங்கே ஓடுகிறீர்கள் ! நில்லுங்கள்!

கனகன் : ஐயா ! நாங்கள் முனிவர்கள். எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? நாங்கள் ஏதும் அறியோம்.

படைத்தலைவர் : இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நான் நம்பமுடியாது. வாருங்கள் இப்படி (கொண்டு வந்து செங்குட்டுவன் முன் நிறுத்தி) வேந்தே! இவர்கள் முனிவர்களாம். போர்க்களத்திலிருந்து ஓட்டம் பிடித்தார்கள். பிடித்து வந்தேன்.

செங் : யார் நீங்கள்?

இருவரும்: அரசே! நாங்கள் வேதமோதும் அந்தணர்கள்.

செங் : வேள்வி ! வேதம்! அடிமையில் ஆழ்த்துவதற்கு ஏற்ற அருஞ் சூழ்ச்சி! உண்மையைச் சொல்கிறீர்களா ... உயிர் இழக்கிறீர்களா?

படைத்தலைவர் : ஏன் பேசாமல் நிற்கிறீர்கள்? சொல்லுங்கள். தாடியைப் பிடித்து ஆட்டுகிறார். (தாடி கையோடு வந்துவிடுகிறது) ஆ ! கனகன்! யாரிடம் இந்தச் சூழ்ச்சி!

விசயன் : (தானாகவே தாடியை எடுத்துவிட்டு) அரசே! அபயம் ! எங்களைக் காக்கவேண்டும். ஆணவம் பிடித்துத் தமிழர்களை அல்லற்படுத்தினோம். எங்களை மன்னிக்கவும்.

செங் : உயிர் பிழைத்தீர் ! (படைத்தலைவரை நோக்கி) படைத்தலைவரே! இவ்விருவரையும் சிறை செய்து இவர்கள் தலையில் கண்ணகிச் சிலைக்குக் கல்லேற்றிச் செல்லுங்கள். தமிழ் வீரர்களுக்கு வாகை சூடுங்கள்.

எல்லோரும் : வெற்றி ! வெற்றி ! வாழ்க சேரன் ! வாழ்க தமிழர்!

காட்சி – 6

இடம் : அந்தப்புரம்

பாத்திரங்கள் : அரசி - தோழி

தேவி : உள்ளத்தில் புத்துணர்ச்சி ! என் கணவரை வெற்றி மாலையுடன் காண்பேன்.

(எங்கும் பரபரப்பு - மகிழ்ச்சி)

தோழி : தேவி! ஆரியப் படையை வென்று இமயத்தில் விற்கொடி பொறித்த வெற்றி வேந்தன் தேவியை நாடி வந்துகொண்டிருக்கிறார்.

(தேவி எதிர்கொண்டழைத்து முன் ஓடி செங்குட்டுவனைத் தழுவிக்கொள்கிறாள்)

செங் : தேவி ! வீரத் தமிழரசியாகிய உனை மணந்து, நான் ஆரியப்படையை வென்று, ஆரிய அரசர்களால் காணிகையாகக் கொடுக்கப்பட்ட பொருள்களையுங் கொண்டுவந்துள்ளேன். அதுமாத்திரமல்ல ! நம்மை இகழ்ந்த கனக விசயர்களையும் சிறைசெய்து கொண்டுவந்திருக்கிறேன்.

தேவி : வெற்றிமாலை திகழும் உங்கள் மார்பு எனக்கு எவ்வுலகினுங் காணாத இன்பத்தை தருகிறது. பகைவரை வாளேந்தி வீழ்த்திய உங்கள் கைகள் என்னைப் பற்றியதும் உள்ளம் பூரிக்கிறது.

செங் : ஆம் ! உன் மலரொத்த மேனி என் புண்பட்ட மார்புக்குச் சஞ்சீவிதான் தேவி!

முல்லை - 8, 9

கட்டுரைகள்

இசைக்கலை	-	திரு. வி. க.
மகிழ்ச்சியின் எல்லை	-	பேராசிரியர் மு. வரதராசனார்
சரயு நதிக்கரையில்	-	வித்துவான் விசு. திருநாவுக்கரசு
வாழிய முல்லை!	-	பரலி சு. நெல்லையப்பர்
முல்லை	-	நாரண. துரைக்கண்ணன்
இசை இன்பம்	-	எம்.எம் தண்டபாணி தேசிகர்
சும்மா வராது	-	சுப. நாராயணன்
துடிப்பு	-	மு. வீரபாகு
கலை	-	க. அன்பழகன்
வாழ்க்கையின் இலட்சியம்	-	சி. என். அண்ணாத்துரை
நல் வாழ்வு	-	கி. ஆ. பெ. விசுவநாதம்
தமிழ் மறுமலர்ச்சி	-	நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
இலக்கியப் பண்பு	-	கா. அப்பாதுரைப்பிள்ளை
அவள் வேண்டுகோள்	-	பேராசிரியர் மு. வரதராசனார்
பூச்சூட்டல்	-	வித்துவான் விசு. திருநாவுக்கரசு
நாடகக் கலை	-	சி. ஆர். மயிலேறு
இன்பம்	-	நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
தமிழ்க் கற்பகம்	-	திரு. வி. க
இலக்கிய நோக்கம்	-	டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

(உரையாடல்)		த. பு. நவநீத கிருஷ்ணன்
புத்தக சாலை வேண்டும்	-	கலாநிலையம்
தனித் தமிழ் ஏன்?	-	முருகு
பண்டைத் தமிழ் நாடகம்	-	கா. அப்பாத்துரைப்பிள்ளை
நூற் கல்வி	-	காழி. சிவ. கண்ணுசாமி
பயனிலா வேட்டை	-	டி. எஸ். நடராச பிள்ளை
முளையிலே களை	-	எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை
அறிவாட்சி	-	நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
காதலும் வீரமும்	-	திரு. வி. க
நண்டின் காதல்	-	உடுமலை இராமசாமி
பொல்லாதது பொறாமை	-	'பரணி'
தொண்டு செய்யும் திருக்கூட்டம்	-	கா. ஸ்ரீ. ஸ்ரீ.
பழைய பெயர்	-	இளவழகனார்
தாய்மொழிக்கு முதன்மை	-	முருகு. சுப்பிரமணியன்
மனமும் மணமும்	-	நா. திருஞானசம்பந்தன்
இலக்கிய உணர்ச்சி	-	வித்துவான் விசு. திருநாவுக்கரசு
வந்த வாழ்வு	-	எஸ். டி. சுந்தரம்
இலக்கியத்தைப் பற்றி	-	ரகுநாதன்
இந்தியச் சிற்பங்கள்	-	ரகுநாதன்
கவிதை - வெளிவடிவம்	-	ஆ. முத்துசிவன்
இலக்கியத்தில் ஆபாசம்	-	கு. அழகிரிசாமி
குழந்தை எப்படி பிறக்கிறது?	-	இடைசைப் புலவன்
அறிமுகம்: வி.ஸ. காண்டேகர்	-	கா.ஸ்ரீ.ஸ்ரீ. 412
இன்ப வாழ்க்கை	-	'நல்வழி'
அஜந்தா	-	'ஈழகேசரி'
சோதனைக் காலம்	-	அருணன்

இசைக்கலை

திரு.வி.க.

இக்கால உலகைப் பண்படுத்தப் பலதிற முயற்சிகள் எழுகின்றன. அம் முயற்சிகளுள் இசைக்கலைக்கு ஆக்கந்தேடுவது தலையாயதாயிருத்தல் வேண்டும். இல்லையேல் விளைத்தக்க பயன் விளையாது.

தமிழ் இனிமை; இசையும் இனிமை. இரண்டினினிமையும் ஒன்றுபட்டால் எத்தகைய இன்பம் சுரக்கும்! தமிழிசையின் மாண்பு என்னே! என்னே! தமிழ்த் திருவே திரு.

தமிழிசை தொன்மை வாய்ந்தது; மிகத் தொன்மை வாய்ந்தது. அவ்விசை எந்நாளில் தோன்றியது-வளர்ந்தது-முதிர்ந்தது என்று அறுதியிட்டுக்கூற இயலவில்லை. அது சரித்திரக் காலத்தையும் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்த காலத்தில், தமிழ்நாட்டவர் இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல படக் கிடக்கின்றன. 'தமிழ்நாடே ஓர் இசை நிலையம்' என்று சுருங்கச் சொல்லலாம்.

தமிழ்நாடு கலைக்கூடமாய்ப் பொலிந்த காலமும் உண்டு; இது பண்டைப் பெருமை. தமிழ் நாடு இந்நாளில் உற்றுள்ள நிலையை விவரித்துக் கூற நாவெழவில்லை. பிற்காலத் தமிழ்நாடு பல கலைகளை இழந்தது; இசைக்கலைகளில் பல கூறுகளை இழந்தது; பொல்லாவிலங்குகளையும் வயப்படுத்தவல்ல யாழை இழந்தது. பலப் பல இழவுகளை நினைக்க நினைக்க அழுகை பெருகும். இங்கே அழுகை ஏற்றுக்கு? தமிழ்நாடு தனது பெரும் செல்வங்களை இழந்துவிட்டது. இது பிற்காலத் தமிழ் மக்களின் கவலை ஈனத்தால் விளைந்தது.

ஒவிய உணர்வு பெற்ற இசை ஞானியர்க்கும், அவ்வுணர்வு பெறாத இசைஞர்க்கும் வேற்றுமை உண்டு. அவ்வேற்றுமையை எப்படி உணர்வது? அடைவால் உணரலாம். முன்னவர் உடையின்றி நிர்வாணியாய் ஆடினும் பாடினும் மனிதர் உள்ளத்திலே தீய எண்ணம் ஏழாது; அமைதி இன்பமே நிலவும். பின்னவர் நல்லாடை புனைந்து ஒப்பனை செய்து ஆடினும் பாடினும் தீய எண்ணம் ஆர்க்கும்; அமைதி

தலைகாட்டவும் அஞ்சும். இசையின் நோக்கம் மனிதனிடத்தில் சாந்த சீலத்தை மகிழ்விப்பதாயிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு விருந்தோம்புவதில் பேர் பெற்றது. எவ்வகைத் துறைகளிலும் அது விருந்தோம்பியுள்ளது. கீர்த்தனை விருந்தையும் ஓம்பியது. கீர்த்தனையால் நாட்டுக்கு விளைந்த நலன் சிறிது; தீங்கோ பெரிது. இதனைத் தமிழ் இசைச் சங்கம் உணர்ந்திருக்குமென்று நம்புகிறேன். இசைவழியே தமிழ்ப் பாக்களைப் போதிப்பது மரபு.

இம்மரபு இதுகாலை வீழ்ந்துபட்டு வருகிறது. மரபைக்காக்க வேண்டுவது தமிழ் ஆசிரியன்மார் கடமை. இக்காலத் தமிழ் ஆசிரியன்மார் சிலர் பாக்களைப் பாடி உரை கூற நாணுகின்றனர். சிலர் தமக்கு இசைஞானம் இல்லையே என்று வருந்துகின்றனர். நாணமும் வருத்தமும் மரபை அழிக்குமே! பின்னே கண்ணீர் உகுப்பதால் என்ன பயன்?

தமிழ் வாழ்க! தமிழிசை வெல்க!

முல்லை - 1

மகிழ்ச்சியின் எல்லை

பேராசிரியர் மு. வரதராசனார்

பண்டைக் காலத்தில் மக்கள் எல்லாரும் இன்பமாய் வாழக்காரணமாக இருந்தது மழையே. மழைவளம் சுருங்கின் துன்பம் பெருகுதலும், மழைவளம் பெருகின் இன்பம் பெருகுதலும் அக்காலத்து இயல்பு. அதனாலேயே, திருவள்ளுவர் வான்சிறப்பில் மழையைப் போற்றினார். ஆனால் இக்காலத்தில் மழைவளம் குன்றாது விளைவு பெருகியபோதும் உப்பில்லாக் கஞ்சி உண்டு உயிர்வாழும் வறியவர்கள் மிகுந்துள்ளனர். இதன் காரணம் என்ன? இயற்கை நல்கும் மழைவளத்தினையும் சிலரே பயன்படுத்திக்கொண்டு பலரை வருத்துவதே ஆகும்.

ஒருவர் உற்ற பெருமகிழ்ச்சியைக் கூறவிரும்பும் போது, ‘புதையல் பெற்றதுபோல் மகிழ்ந்தேன்’ என்பது உண்டு. வெள்ளிக்காசும் பொற்காசும் நாடி மக்கள் அலையும் காலம் இது. அந்தக் காசு இல்லையானால் மழையாலும் பயன் காணமுடியாதவாறு உலகம் இப்போது அமைந்துள்ளது. ஆதலின், எதிர்பாராது திடீரெனக் கிடைக்கும் பெருநிதி-புதையல் அளவற்ற மகிழ்ச்சி தருவதாகக் கருதி உவமையாகக் கூறுகின்றனர். பழந்தமிழ்நாட்டில் பண்டமாற்று நிலவியது. அக்காலத்தார் விளைபொருள் வளத்தையே போற்றினர். விளைபொருள் பெருக உதவும் மழைவளமே அவர்கள் போற்றுதலுக்கு உரியதாக இருந்தது. நெடுங்காலம் மழையே இல்லாமல் பஞ்சம் பரவிப் பட்டினி பெருகிய காலத்தில் அவர்கள் வேண்டியதெல்லாம் மழையே. துன்பம் அடியோடு தொலையுமாறு பெய்த பெருமழையைக் கண்டு களித்துக் கூத்தாடுதல் அவர்களுக்கு இயல்பே. அந்த மழையே அவர்களுக்குப் பேரின்பம்.

ஒரு நாடு நெடுங்காலம் மழை இல்லாமல் வாடி வறண்டுபோயிற்று. உழவர்களின் வீடுகளில் கலப்பைகள் எடுப்பார் இல்லாமல் உறங்கிக் கிடந்தன. மழைக்குக் காலமே இல்லாமல், எல்லாம் கோடைக்காலமாகவே மாறிவிட்டது. தரையில் பசுமை என்பதே இல்லாது போய்விட்டது. பெரிய ஏரிகள் வற்றாத நீர் நிலைகளாய்ப் பலகாணி நன்செய் நிலத்திற்குப் பயன்பட்டு வந்திருந்தன. அந்த ஏரிகளும் நீர்வற்றி வறண்டன. அவற்றின் கரைகள் குன்றுகள் போல் காட்சி

அளித்தன. மீனும் பிறவும் தேடிப் பறவைகள் அவற்றிடம் வருதல் ஒழிந்தது. ஏரிகளினுள்ளே கதிரவன் வெம்மை தவிர வேறு ஒன்றும் இல்லையாயிற்று. ஆனால், திடீரென ஒரு நாள் நள்ளிரவில் பெருமழை பொழிந்தது; பொழிந்துவிட்டது. விடியற்காலையில் மக்கள் எழுந்தபோது கண்ட இடமெல்லாம் வெள்ளக் காடாய்க் கண்டனர். ஏரிகள் எல்லாம் நீர் நிறைந்து பொலிவாக விளங்கின. அப்போது அம்மக்கள் உற்ற உவகையினை இவ்வளவு என்று எடுத்து உரைக்க முடியுமோ? மகிழ்ச்சியின் எல்லையில் நின்று இன்பக் கூத்து ஆடியிருப்பார்கள் அல்லரோ?

இந்தப் பெருமகிழ்ச்சி எல்லாரும் நன்கு உணரவல்லது. கபிலர் என்னும் புலவர் இதனை உவமையாக ஒரு பாட்டில் அமைத்தார்.

ஒரு திருமணம் நிறைவேற வேண்டும் என்று நெடுநாளாகப் பெரு முயற்சி செய்யப்பட்டு வந்தது. பல இடர்ப்பாடுகளுக்கும் இடையே விடாமுயற்சி செய்து பெருங்கவலை கொண்டிருந்தவள் ஒருத்தி, அவள் தான் மணமகளுக்கு உயிர்த்துணையாக இருந்து உதவிவந்த தோழி. பல நாள் கொண்ட கவலையெல்லாம் ஒரு நாள் தீர்ந்தது. மணமகன் வீட்டார் பெண்கேட்க வந்தனர்; நாள் குறித்தனர்; திருமண ஏற்பாடு செய்தனர். அப்போது அளவு காணா மகிழ்ச்சி அடைந்தவள் அந்தத் தோழியே. அவள் தன் மகிழ்ச்சியைத் தன்னுள் வைத்திருக்க முடியாமல் பொங்கிக் களித்தாள். மணமகளிடம் சென்றாள். தன் களிப்பை எடுத்துரைத்தாள்:

"தோழி! யான் பெற்ற பெருமகிழ்ச்சியை என்ன என்று சொல்வேன்? நாடெல்லாம் பசுமையற்று வறண்ட அந்தக் காலத்தில், ஏரியெல்லாம் நீரற்றுக் கிடந்த அந்த நாளில், அன்று ஓர் இரவு பெய்த பெருமழை நினைவு இருக்கிறதா? அன்று விடியற்காலையில் நம் ஊரார் எல்லாரும் ஒரே ஆரவாரமாக மகிழ்ந்து துள்ளினார்கள் அல்லரோ? அவர்கள் எல்லோருடைய மன மகிழ்ச்சியும் ஒன்றாகத் திரண்டு என் ஒருமனத்தில் குடிகொண்டது போல் இருக்கின்றது என்றாள்" அந்த பாட்டு:

"நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பை(து) அறு காலை
குன்றுகண் டன்ன கோட்ட யாவையும்
சென்றுசேக் கல்லாப் புள்ள, உள்இல்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந் தற்றே" - அகநானூறு-42

(நாஞ்சில்-கலப்பை, பைது-பசுமை. கோட்ட-கரைஉடையவை, என்றூழ்-சூரியன் வெப்பம்)

முல்லை - 1

சரயு நதிக்கரையில்

வித்துவான் விசு. திருநாவுக்கரசு

பொன் கொழித்துக் காவிரி புனல் பாயும் சோழ நாட்டை நினைத்தால் கலைமாடம் இரண்டு நம் கண்முன் வருகின்றன. ஒன்று இராஜராஜ சோழன் பெரும்புகழ் பரப்பும் பெருங்கலைக் கோயில்; மற்றொன்று தமிழன்னை வீற்றிருக்கும் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்து விழா. தமிழன்பில் முதிர்ந்த திரளான அறிஞர்களின் கூட்டம் செவிக்கும் சிந்தைக்கும் நல்விருந்து. யாண்டும் தமிழ் மணம். இன்ன கூட்டத்திடையே பொன்னுடலம் தாங்கிப் புன்முறுவல் பூத்த இனிய முகத்தினராய்க் கைகூப்பிய தோற்றத்தோடு அதோ வருகிறாரே அவர்தான் உமாமகேசுவரர்.

தஞ்சை ஜில்லாக்காரர்கள்-இல்லை, தமிழ் நாட்டவர் - இந்தப் பெயரை நன்கறிவார்கள். இதற்கவர்கள் கூறும்பொருள்-தமிழாக்கம் என்பதாகும்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்ற எண்ணத்தோடு நெடுநாள் வாழ்ந்து நிலையான தொண்டு செய்ய நினைத்தாரிவர். வாழ்வு எல்லையுடையதாய்த் தொண்டு எல்லையற்றதாய் முடிந்தது. தாசில்தாரின் முதல் மகனாய்ப் பிறந்து தஞ்சை வளநாட்டின் தலைவரான உமாமகேசுவரர் விரும்பினால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராகவோ சென்னை அறநிலையக் கண்காணிப்பாளராகவோ ஆகியிருக்கலாம். தம் சங்கத்து வாயிலாகச் செய்யும் தமிழ்த் தொண்டிற்கு இவை தடையாகும் என்ற எண்ணமே பிறர் விருப்பத்தையும் தகர்த்தது.

தஞ்சைக்கரந்தையில் இரவொரு பொழுது இவர்தம் இல்லத்தில் நானிருந்தேன். காலையில் வந்துசென்ற கட்சிக்காரர், ஒருபெரிய மிராசுதார், வந்து அமர்ந்தார். பொறாமை, பூசல் காரணமாகப் பொய்யான ஒரு வழக்கை அவர் கொண்டுவந்தார். அறமன்றத்தில் வழக்கு நடப்பது போல் இவர் முன்னிலையில் பலவிபரங்கள் கூறப்பட்டன. ஊன்றிக் கேட்டுக்கொண்டிருந்த உமாமகேசுவரர் 'வருந்துகிறேன். நான் இதை ஏற்று

வழக்காட முடியாது'. சுருக்கமாய், ஆனால் பெருமிதமாய்ச் சொன்னார். 'வருந்துகிறேன் வழக்காடமுடியாது.' என்ற சொற்களை வந்தவரோ அருகிருந்த நானோ கற்பனையில்கூட நினைக்கமுடியவில்லை. மிராசுதார் வெளியேறினார். உமாமகேசுவரர் உள்ளத்திலிருந்து வழக்கின் உண்மை வடிவம் வெளியே வந்தது. நூற்றுக்கு நூறு பொய் பேசியும், பேசுவித்தும் இயங்கும் ஒரு தொழிலில் இப்படியும் ஒருவர் இருந்தார் என்பதை நம்புதற்கே நமக்கு மிகுந்த தைரியம் வேண்டும். இதனாலேதான் தஞ்சை நீதிபதிகள் இவரை மிகச்சிறந்த வாய்மையாளர் என நினைத்து மிக மதித்தனர்.

தமிழைத் தூய வடிவத்தில் காண நினைத்த எண்ணம் தனித்தமிழ் இயக்கமாக உருக்கொண்டது. இதை மொழிப்புரட்சி என்றே கூறலாம். இவ்வியக்கம் இவர் சொல்லால், எழுத்தால், முயற்சியால் வீறு பெற்று வளர்வதாயிற்று. இத்துணைத் தனித்தமிழ்ப்பற்றுடைய இவருக்கு ஏனோ உமா மகேசுவரர் என்ற வடமொழிப்பெயர் வழங்குகிறது என நினைத்தேன். பெற்றோரும், உரிமையுடைய பிறருமே பெயரிடுதல் மரபு. பெற்றோரிட்ட பெயராயினும் பிறர் ஏன் இதைச் சிந்திக்கவில்லை என்று நினைத்தபோது தனித்தமிழ்ப் பற்றுடைய இவரை வடமொழிப் பெயரால் அழைப்பது முரண் எனக்கருதி மேதக்க சான்றோராகிய மெய்ஞ்ஞானியார் 'செந்தமிழ்ப்புரலவர்', 'தமிழ வேள்' என்னும் தனித்தமிழ்ப் பெயர்களை ஒன்றுக்கிரண்டாய் வழங்கி வாழ்த்துவாராயினர்.

தமிழ்நாட்டில் ஒலியும் எதிரொலியுமாய்த் தோன்றிய மொழிப்போராட்டத்தில் முன்னின்று தமிழ்க்கொடி ஏந்தி நாடெலாம் தமிழ் முழக்கம் செய்ததையும் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் தமிழாக்கம் பற்றிச்செய்த செயற்கரிய தொண்டுகளையும், ஐயாற்றிலும் கரந்தையிலும் தமிழுக்கு அருங்கல்லூரி கண்ட சால்பினையும் யாரே மறக்கவல்லார்!

கரந்தைக் கல்லூரியைக் கலைக் கழகமாக்க நினைத்து கல்கத்தாவில் ஆசுத்தேசு முகர்ஜி, கவியரசர் இரவீந்திரர் இவர்தம் திருப்பணிகளை நேரிடைக் கண்டு அதைத்தம் பணிக்கு நலனாக்க விரும்பினார். இவ்விருப்பமே 1941ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் இவரை வடநாடு செல்லத்தூண்டியது. கல்கத்தாவிலும் பிற இடங்களிலுமுள்ள தமிழன்பர்கள் இவரை வரவேற்றனர். பிரயாகையிலிருந்து அரித்துவாரம் செல்லும் வழியில் பைசாபாத் என்னும் நகரில் மேத் திங்கள் ஒன்பதாம் நாள் வெப்பு நோயால் பிணிக்கப்பெற்று குறிஷி மருத்துவ விடுதியில் தன்னேரில்லாத் தமிழவேளின் நல்லுயிர் பிரிவதாயிற்று. 'ஊனிலாவி உயிர்க்கும் பொழுதெலாம் உமாமகேசனார் உள்ளம் தமிழொடு ஒன்றி நின்றது' என்று உறுதியாகச் சொல்லலாம். கேட்டார்க்கெல்லாம் இவர் பிரிவு பெருந்துயராயிற்று.

தனித் தமிழின் தூய்மை, இனிமை, வன்மை மிளிரும் கட்டுரை களையும், செல்வம், பதவி, ஆணை இவை தமிழாக்கத்திற்குப் புறம்பாகும்

நிலையில் அஞ்சாது கூறிய வீரவுரைகளையும் இனிக் காண்பதும் கேட்பதும் எந்தநாள்? என நினைத்துத் தமிழ்நாடு ஏங்குகிறது.

பொன்னிறமனைய சிவந்த மேனி; அந்நிறத்தைக் கொண்டு ஒளிகாலும் தலை; நீண்டு படர்ந்த நீறு தோய்ந்த நெற்றி; அருளொழுகு கண்கள்; இளமைதொட்டு எடுக்கப்படாச் சிறு காதணி; கருமையும் ஓரளவு வெண்மையுமாய் மயிரடர்ந்த மீசை; பெருமிதப் பார்வை; ஏறனைய நடை; இனிக்கப் பேசும் கனிந்த சொற்கள்; இவை நினைக்க நீர்மல்கும் என் கண்கள்.

இவர் எண்ணத்தில் நாளும் நின்றவை இரண்டு. அவை தமிழும் சைவமும். இவரை அறியாதன சோம்பலும் பொய்யாமையும்.

இவர் தம் வாழ்வில் உணரக் கிடக்கும் நுட்பங்கள் மிகப் பல. அஞ்சாமை, அடக்கம், அருள், எளிமை, ஊக்கம், விடாமுயற்சி ஆகிய இப்பண்புகள் இவர் தம் வாழ்வின் நாண்மலர்களாகப் பூத்து பெரும் பயன் தந்தன. செய்நன்றி அறிதல், கடனறிந்து ஒழுகல், நலனறிந்து ஈதல் இவர்பால் யான் கண்டன.

தமிழ்த்தாய் தனியரசு செலுத்த வேண்டுமானால் ஜில்லாவுக்கு ஒரு உமாமகேசுவரர் வேண்டும் என்றனர் அருள்கனிந்த ஞானியாரடிகள். அவ்ரையும், அவர் குறித்த ஒருவரையும் காலவெள்ளம் கவர்ந்தது. கொண்டுசென்ற காலம் இவரனைய மெய்வீரரைக் கொண்டுதரும் என்ற எண்ணம் உணர்வுகொள்ளச் செய்கிறது. அயோத்தியிலே சரயு நதிக்கரையிலே தமிழவேளின் பொன்னுடலம் தீக்கிரையாயிற்று. புகழுடம்பில் நிற்கும் தமிழவேளைத் தமிழர் என்றும் மறவார்.

முல்லை - 1

வாழிய முல்லை !

பரலி. சு. நெல்லையப்பர்

தமிழ்நாட்டில், தமிழர் வாழ்வில், தமிழ் இலக்கியத்தில் முல்லை ஓர் உயரிய நிலையை அடைந்திருக்கிறது. சங்க நூல்களில் முல்லையை எங்கும் காணலாம். தேவாரத்தில் முல்லை பெரிதும் படர்ந்திருக்கிறது. சங்க நூல்களில் முல்லைப் பாட்டு என்பதே ஒரு நூலுக்குப் பெயர். தமிழ் நாட்டுநானிலத்தில் ஒரு பகுதிக்கு முல்லை என்று பெயர்.

முல்லையைக் கற்புக்குரிய சின்னமாகப் பழந்தமிழ் மக்கள் கொண்டுள்ளார்கள்.

'அவரோ வாரார், முல்லையும் பூத்தன' என்று ஒரு கற்புடைய மங்கை வேற்றூர் சென்ற கணவன் வராமை நோக்கி, வருந்துகிறாள். இந்த ஓரடியில் எவ்வளவோ ஆழ்ந்த பொருள் அடங்கியிருக்கிறது.

செல்வம் மல்கும் செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும் பீனும் குற்றாலம்

என்பது தேவாரம். செழித்தோங்கி நிற்கும் செண்பகம், வேங்கை மரங்கள்மீது முல்லைக் கொடி ஏறிப்படர்ந்து அரும்புகள் விடும் குற்றாலம் என்று திருக்குற்றாலத்தைத் திருஞானசம்பந்தர் போற்றுகிறார்.

கற்புக்குரிய முல்லையை நமது முற்கால மகளிர் பெரிதும் போற்றி வந்தார்கள். முல்லையங்கோதை நல்லார்களாய் நமது மாதர்கள் விளங்கினார்கள். ஆனால் இன்று முல்லையைப் போற்றுவோர் அருகிவருகின்றனர். மணமும் குணமும் மற்ற கனகாம்பரத்தின்மீது இன்று நாகரிக மகளிரின் காதல் சென்றிருக்கிறது. மணமுள்ள முல்லை, மல்லிகை முதலிய மலர்களுக்கு நோய்க்கிருமிகளை அழிக்கும் குணம் உண்டு. மணமற்ற மலர்களுக்கு அந்தக் குணம் இல்லையென்பதை நமது மாதர்கள் உணரவேண்டும்.

வீடுதோறும் முல்லை வளர்க்கும் வழக்கம் அந்நாளில் இருந்தது. "அல்லியங் கோதை நல்லார் அன்பொடு வளர்த்த முல்லை, மெல்லரும்பு ஈன்ற தென்ன" விழாவும் கொண்டாடினார்கள். இந்த வழக்கத்தைத் தமிழ் மாதர்கள் திரும்பவும் கொள்ளவேண்டும்.

படர்ந்து வளர்ந்து சிறந்து வாழ்வதற்குரிய கொழுகொம்பின்றி வருந்திக்கொண்டிருந்த முல்லையைப்போல், இந்த நாட்டிலே பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் உண்ணச் சோறின்றி உடுத்த துணியின்றி வறுமையிலும் சிறுமையிலும் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். அந்நாளில் முல்லைக்குத் தேரளித்த பாரியைப்போல் இந்நாளில் இந்த நாட்டுச் செல்வர்கள் ஏழைகளுக்குத் தங்கள் பொருளை உதவி அவர்களை ஆதரிக்க வேண்டும். பாரியின் கருணையையும் கொடையையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இன்று தோன்றும் இந்தப் புதிய 'முல்லை'யை ஆதரிக்கும் பாரிகள் பலர் தோன்றுவார்கள் என்பதிலும் இது சிறந்து வளர்ந்து அரும்பீன்று மணம் வீசி நின்று நிலவும் என்பதிலும் ஐயம் இல்லை.

வாழிய முல்லை!

முல்லை - 1

முல்லை

நாரண துரைக்கண்ணன்

கடு மழை பெய்துகொண்டிருக்கிறது. வானம் முழுதும் இருண்டு கிடக்கிறது. செடி கொடி மரங்கள் நிறைந்து, எங்கு பார்த்தாலும் பசுமைக் காட்சியை வழங்கிநிற்கும் முல்லை நிலம், இம்மழையினால் இன்னும் பசுமையாய்த் திகழ்ந்தது. வானத்திலிருந்து பொழியும் மழைத் துளிகள் காட்டாறுகளில் விழுந்து, முத்துக்களாய் மாறிவிடுகின்றனவோ என்று எண்ணும்படியாக முல்லை மலர்கள் முகிழ்த்திருந்தன.

இத்தகைய இயற்கைக் காட்சிகளை அரணாகக் கொண்டு விளங்கிய ஒரு சிற்றூரில் ஆயர் பாடியும் சேரியும் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுக்கு ஒரு பக்கமாகத் தள்ளிப் பெரிய மரங்கள் நெருங்கி அடர்ந்துள்ள ஓரிடத்தில் ஏழு நிலைகளையுடைய மாடமாளிகை யொன்று முல்லைக் கொடிகள் முன்புறம் பந்தரிட்டது போல் பிணைந்து படர்ந்து எழிலுடன் விளங்கிக்கொண்டிருந்தது. அதன்மேல் உப்பரிகையில் படுக்கை யறையில் அழகிய பெண்மணி ஒருத்தி பஞ்சணைமீது படுத்திருந்தாள்.

கணவன் பிரிவை நினைந்து துயரத்தில் தோய்ந்திருந்த அவள், கூடல் வாய்களில் அருவிபோல் ஒழுகும் மழைநீரின் பலவிதமான ஓசைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு, நிமிர்ந்து வெளியே பார்க்கலானாள். ஆகாயத்தில் நடக்கும் அமளி சாளரத்தின் வழியாக அவளுக்குக் கட்புலனாயிற்று. மேகங்கள் வானத்தில் விரைந்து சென்றவாறு மழை பொழிவதையும், இடையிடையே மின்னல் கண்ணைப் பறிப்பதுபோல் மின்னுவதையும் கண்டு அவள் நடுநடுங்கலானாள். வானம் பொழியும் மழை நீர்த்துளிகளுடன் போட்டி போடுவது போல் அவளுடைய நீலோற்பலக் கண்களிலிருந்து நீர் துளித்துளியாய்ச் சிந்தலாயிற்று. இது கரியகூந்தற்சுமையிலிருந்து முல்லை மலர்கள் உதிர்வது போலிருந்தது.

தங்கள் தலைவி காதலன் பிரிவாற்றாது வருந்திவருவதைக் கண்டு மனங்கவன்ற செவிலித்தாயும் தோழிகளும் எவ்வாறு, என்னகூறி அவளைத் தேற்றுவது என்று அறியாமல் திகைத்திருக்கின்றனர்.

அரசமாதேவி தனக்குள் முணுமுணுக்கலானாள்: "கார்காலம் தொடங்குவதற்கு முன் வந்து விடுவதாகச்சொல்லிச் சென்றாரே! இன்னும் வரவில்லையே! ஒருவேளை போர்க்களத்தில் ...." ஒருபுறத்தில் எரிந்து கொண்டிருந்த பாவை விளக்கைத்தூண்டி விட்டிருந்தவாறு இருந்த உயிர்த் தோழி இதைக் கேட்டு, "தலைவர் கூடிய சீக்கிரம் வாகைமாலை சூடிக்கொண்டு வந்து விடுவார், அம்மா! வீர புருஷராகிய அவர் முன் யார் எதிர்த்து நிற்கமுடியும்? பகைவர்களெல்லாம் ஆடிக்காற்றில் பட்ட பஞ்சுபோல் ஆயிருப்பர் என்பதில் சந்தேகமில்லை.... தேவி" என்று நயமாகக் கூறித் தேற்ற முயன்றாள்.

செவிலித்தாய் இதுதான் சமயமென்று அருகு அணைந்து பரிவாக முகத்தைத் தடவிக்கொடுத்தவாறு, 'ஆமாம் குழந்தாய் நாங்கள் நகரத்தின் பக்கத்தில் போய், நாழியில் எடுத்துக்கொண்டு போன வேலையும் அரும்பு அவிழக்கூடிய முல்லை மலரையும் ஓரிடத்தில் தூவி, இறைவனை வணங்கி நற்சொல் ஏதேனும் கேட்கிறதா, என உற்றுக் கேட்டுநின்றோம். பக்கத்திருந்த ஒருமாட்டுக் கொட்டிலில் குளிர் தாங்காது கைகளால் தோள்களை இறுகப் பிணித்திருந்த ஒரு இடைப்பெண் சுற்றிச்சுற்றியும், துள்ளிக்குதித்தும் வரும் கன்றுக் குட்டிகளைப் பார்த்து உங்கள் தாய்மார்கள் இடையர்களுடன் திரும்பிவரும் சமயம்தான். இப்போதே வந்துவிடுவார்கள் என்று கூறிக்கொண்டிருந்தாள். ஆகவே நல்லோர் சொல்லும் இந்நன் மொழி நம் தலைவர் பகைவரை வென்று அவர்கள் தரும் திறைகளைக் கொண்டு கூடிய சீக்கிரம் திரும்பிவருவார் என்பதை முன்கூட்டி அறிவிப்பதாகும். ஆதலால், நீ வீணாக வருந்தி உடம்பைக் கெடுத்துக் கொள்ளாது மனந்தேறி யிருப்பாயாக" என்று கூறினாள்.

அரசமாதேவியின் காதுகளில் இத்தேற்று மொழிகளெல்லாம் சிறிதும் விழவில்லை. அவள் கண்களிலிருந்து பெருகும் நீர் நிற்கவுமில்லை.

2

தலையாலங்கானம் ஓர் அகன்ற நீண்ட காடு. இங்குதான் பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன், சோழன் என்ற இருபெரு வேந்தர்களையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேணமான், பொருநன் ஆகி ஐம்பெரு வேளிர்களையும் படையெடுத்துப்போர் செய்து கொண்டிருந்தான். போர்க்களத்தையடுத்துச் சிறிது பின்தள்ளி ஒரு பாதுகாப்பான இடத்தில் பாண்டியன் பாடிவீடு அமைத்திருந்தான். தானும் தன் படைத் தலைவர்களும் வீரர்களும் தங்கியிருப்பதற்கு அவன் அமைத்திருந்த பாசறைகளே ஒரு சிற்றூர்போல் தோற்றமளித்தன. முள்ளினாலான மதில் அரணுக்குள் படைவீரர்கள் தங்கியுள்ள (பசுமையான இலைகளால் வேயப்பட்ட) கூரை வீடுகளுக்கும், படைத் தலைவர்கள் தங்கியிருந்த (வட்டமாகச் சிறு சிறு கால்கள் நட்டு அவற்றில் கயிறுகளை வலித்துக்கட்டி மேலே படாம் விரிக்கப்பட்ட) கூடாரங்களுக்கும் நடுவே பாண்டியனின் படாம் மாளிகை உயர்ந்து மிக

அழகாக அமைக்கப்பட்டிருந்தது. யவனர்களால் பல வசதிகளுடன் புலிச்சங்கிலி விட்டு மிக அழகாக அமைக்கப்பட்ட அம்மாளிகையைச் சுற்றி நீண்ட குத்துக் கோள்கள் நட்டுப் பல வண்ணத் திரைகளால் உயரமான மதில் வளைக்கப்பட்டிருந்தது. முள் மதில் முற்றத்திலேயே யானைகள் காவல் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், முறையே படைவீரர்களும் படைத் தலைவர்களும் சூழ்ந்து பாதுகாப்பாக இருப்பது போதாதென்று, இங்கும் மன்னன் படாம் மாளிகையைச் சுற்றி மெய்க்காப்பாளர்கள் காவல் காத்திருந்தனர். நாழிகை வட்டில் வைத்து அவ்வப்போது அரசனுக்கு நாழிகை அறிவித்துக் கொண்டிருந்த வர்களுடன், பெரிய திரிகள் போட்டிருப்பதனால் மிகப் பிரகாசமாக எரியும் விளக்குகளுக்கு அடிக்கடி எண்ணெய் ஊற்றிச் சுடரைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்த பணிப் பெண்களும் மார்புக் கச்சத்தில் வாளைச் செருகி யிருந்தனர்.

பள்ளி யறையில் வலிய கயிற்றால் கட்டிய திரைகள் அமைக்கப்பட்ட வெளி அறையில் சட்டை தரித்த ஊமை மிலேச்சர் சிலர் சுற்றிச் சுற்றிக் காவல்புரிந்து கொண்டிருந்தனர். உள்ளறையில் நெடுஞ்செழியன் பள்ளிகொண்டிருந்ததால் அங்கே மணிவிளக்கு ஒன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவன் வலக்கரத்தைப் படுக்கையின் மேல் ஊன்றி இடது கையைத் தலையின்கீழ் வைத்தவாறு, அன்று போர்க்களத்தில் தனக்கு ஏற்பட்ட வெற்றியை நினைத்து ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தான். இச் சந்தோஷ நிலையிலும் அவன் உள்ளம் இடையே ஒருநாள் பகைவர் படையின் எதிர்ப்புக்கு ஆற்றாது தம் படை சிதறியோடியதையும், யானை குதிரைகள் புண்பட்டதையும், செஞ்சோற்றுக் கடன் கழித்து இறந்தொழிந்த வீரர்களையும் நினைந்து வருந்தியது. இன்றுதானே படையை நடத்திச்சென்று, தனது வீர பராக்கிரமத்தைக் காட்டிப் போர் புரிந்து, பகைவர்களைப் படுதோல்வி யடையச் செய்ததை நினைந்து நினைந்து அவன் மனம் பூரித்தது. 'இனி நாம் ஊர் திரும்பலாம்; நாளை மாலை நம் காதலியைக் கண்டு அளவளாவலாம்' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். இம்மன நிறைவுடனேயே, வெற்றி முரசம் முழங்கித் தாலாட்ட அவன் உறங்கிட்டான். வெண்மையான மேகங்கள் வானத்தில் பரந்து செல்கின்றன. எந்தக் கணமும் மழை பெய்யக் கூடும். முல்லைக் காட்டில் மணற்பாங்கான பாதையில் இருபுறங்களிலும் காசாஞ் செடிகள் அடர்ந்திருந்தன. இடையிடையே கொன்றை முதலிய மரங்கள் வளர்ந்திருந்தன. மழையினால் நன்றாய்ச் சிவப்பேறியிருக்கும் செம்மண் பாதை இருமருங்கும் காசாஞ் செடிகளின் நீலமலர்கள் பூத்திருப்பதும், உள்ளங்கைகள்போல் காந்தள் மலர் விரிந்திருப்பதும், தோன்றிப் பூக்கள் இரத்தம்போல் சிவந்திருப்பதும், கொன்றை மலர்கள் பொன்மலர்போல் சொரிந்திருப்பதும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. இவற்றை யடுத்து வரகங்கொல்லைகள் கதிர்சாய்த்திருந்தன. இடை வெளிகளில் வள்ளிக் காய்கள் முற்றிக் கிடந்தன. கலைமான்கள் பெண்மான்களுடன் மகிழ்ச்சியாய்த் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன.

இவ்விதம் இயற்கைத் தேவி ஆட்சி புரிந்துகொண்டிருந்த கானகத்தின் அமைதியை, ஊது கொம்பு ஓசையும் சங்கொலியும் குதிரைகளின் காலடிகளும் கெடுத்துவிடுகின்றன. நெடுஞ்செழியன் தனது படைகளுடன் தலையாலங்கானத்திலிருந்து தன்னூர் திரும்புகிறான். முதலில் குதிரைமீது ஏறிவரும் படை வீரர்கள் சிலர் ஊதுகொம்பு ஊதி வருகின்றனர். அடுத்தபடியாகச் சிலர் சங்குகளை முழங்கிவருகின்ற வர்களுக்குப் பின்னே வெற்றிக் கொடிகளை உயர்த்திவருகின்றனர். கடைசியாகப் பெரும்படை வீரர்கள் சேனாதிபதிகள் புடைசூழ நெடுஞ்செழியன் வாகைமாலை சூடியவாறு தேர்மீது கம்பீரமாக வீற்றுவருகிறான். குதிரைகள் காற்றினும் கடிய வேகத்தில் ஓடுகின்றன. அரசனின் தேரும் மிக வேகமாகச் செலுத்தப்படுகிறது. இவை எல்லாவற்றினும் வேகமாக நெடுஞ்செழியன் மனம் அரசமாதேவியை நோக்கி சென்றது.

அந்திமாலை ஆகாயத்தை அழகு செய்து கொண்டிருந்தது. மழை சிறு தூறலாகத் துளித்துக்கொண்டிருந்தது. அரசமா தேவி இப்போதும் மலரணையில் படுத்துக்கொண்டுதான் இருந்தாள்; அவள் தன் அருகில் காதலன் இருப்பதாக நினைந்து கைகளால் தடவிப் பார்க்கிறாள். அடுத்த கணம் அவளுக்கு ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. அவளுடைய ஏமாற்றம் பெருமூச்சாக வெளிப்படுகிறது. அவள் அடிக்கடி தலையைத் தூக்கி வெளியே நோக்குகிறாள். மீண்டும் படுக்கையில் தொப்பென விழுகிறாள். தலையணையில் முகத்தைப் பொத்திக்கொண்டு குமுறுகிறாள்.

“அம்மா, வாழ்க்கையில் சில சமயங்களில் அரசர் வெளியே பிரிந்து செல்லவேண்டித்தான் இருக்கும், அவர் எப்போதும் நம் பக்கத்தில் இருக்க முடியுமா? சாதாரண மனிதர்களுக்கே வெளியே சென்று பார்க்கக் கூடிய வேலைகள் எத்தனையோ இருக்கின்றன. நம் அரசருக்குள்ள மகத்தான பொறுப்புகள் உனக்குத் தெரியாததா? பகையரசர்களைப் போரினால் முறியடித்துவிட்டு வரச் சென்றவரைக் குறித்த நாளில் வரவில்லையென்று குறை கூறலாமா? அவர் கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். நீ வேண்டுமானால் பாரேன்” என்று செவிலித்தாய் கூறித் தேற்ற முயல்கிறாள்.

இதனால் அரசமாதேவிக்கு ஆறுதல் உண்டாயிற்று போலும்! கழன்றோடும் வளைகளைக் கைகளில் சரியாகத் தள்ளிவிட்டுக் கொள்ளுகிறாள். ஆனால் அடுத்த கணம் கணவன் பிரிவை நினைத்துக்கொண்டு அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இவ்விதம் வருந்துகிறவளை எவ்விதம் தேற்றுவதென்று தெரியாமல் எல்லோரும் திகைக்கின்றனர்.

இச்சமயத்தில் ஊது கொம்பு ஓசையும், சங்கொலியும், குதிரைகளின் காலடிகளும், தேர்ச் சக்கரம் உருளும் சப்தமும் தூரத்தில் கேட்கின்றன. அரசமாதேவி திடுக்கிட்டு எழுந்து, சப்தம் வருந்திசையை நோக்கி உற்றுக்கேட்கிறாள். மேற்குறித்த சப்தங்கள் வரவர மிகச் சமீபமாகக் கேட்கலாயின. கடைசியாக மாளிகை முன் தேர் உருண்டு வந்து நின்ற சப்தமும், குதிரைகள் கனைத்து ஒலித்த ஆரவாரமும் அரசியின் காதுகளை நிரப்புகின்றன.

இதே சமயத்தில், தோழிகள் சிலர் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஓடோடி வந்து, "தேவி, மன்னர் வந்துவிட்டார்; வெற்றிமாலையுடன் வந்திருக்கிறார்" என்று கூறி வணங்கினர்.

"வந்து விட்டாரா? அரசரா?" என்று துடிதுடிப்புடன் கேட்டவாறு அரசமா தேவி படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்தாள். "காஞ்சனை கண்ணாடியைக் கொண்டுவா" என்று கூறியவாறு தன் ஆடையணிகளைச் சீர்திருத்திக்கொண்டு கூந்தலைக் கோதி முடித்து, நெற்றியில் திலகம் சரியாய் இருக்கிறதா என்று பார்த்து ஒப்பனை செய்துகொண்டு, தன் கணவனை எதிர்கொண்டு அழைக்க விரைந்து நடந்தாள். செவிலித்தாயும் உயிர்த்தோழி முதலியவர்களும் அவள் பின்னே ஓடலாயினர்.

முல்லை - 1

இசை இன்பம்

எம் எம். தண்டபாணி தேசிகர்

இசையானது, கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள், முதலான எல்லா உயிர்கட்கும் இன்பத்தைக் கொடுத்துத் தன்பால் வயப்படுத்தும். ஒவ்வொருவரும் பிறப்பிலிருந்து இறப்புவரை இசையோடு இயைந்த வாழ்க்கையிலேதான் வாழ்க்கைத் தோணியை நடத்திச் செல்கிறார்கள். மனிதனின் வாழ்க்யில் இன்பமும் துன்பமும் அடுத்தடுத்து வந்து கொண்டே இருக்கின்றன. ஒருவனுக்குப் பெரிய அரசாங்கப் பதவி கிடைக்கும்போதும், தனக்கு நிறையப் பொருள் வருவாய் அதிகரிக்கும் போதும், தான் கற்ற கல்வியை உலகினர் புகழ்கிறார்கள் என்பதை உணரும்போதும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறான். மகிழ்ச்சியினால் இசையை இசைத்துப் பாடத் தொடங்குகிறான். இன்பத்தின் முடிவு எதுவென்றால் இசைதான் என்று முடிவு கூறலாம். மனம் வருந்தக்கூடிய வகையில் துன்பங்கள் வந்த காலத்திலும் இசையினாலே தன் மனத்தைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

அழுங் குழந்தைகள் தாலாட்டுப் பாட்டைக் கேட்ட பிறகே தூங்குகின்றன. ஏதோ தனக்குத் தெரியாத ஓர் இன்பமானது காதின் வழியே புகுவதனாற்றான் குழந்தைகள் தம்மை மறந்து தூங்குகின்றன.

நாட்டு மக்கள் இசையில்லாமல் நன்மை தீமையான காரியங்களைச் செய்வதே கிடையாது. ஆண் பெண் இருவகையிலும் அவரவர்களுக்கேற்ற விளையாடல்களில் இசை இருந்து வருகிறது. பெண்கள் விளையாடும் போது கொற்றி, பிச்சு, சித்து, சிந்து, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் போன்ற விளையாட்டுக்களில் இசையுடன் கூடிய பாடல்களையும் பாடிக்கொண்டேதான் விளையாடுவார்கள். இன்னும் வேறு வகையான வேலைகளில், சாந்து இடிக்கும்போதும், நாற்றுகளை நடும்போதும், களை எடுக்கும்போதும், காடுகளில் தினைப்புனத்தில் நின்று கிளியோட்டும்போதும் நாட்டுப் பாடல்களை இன்பத்துடன் இயைந்த இசையுடன் பாடிக் களிக்கிறார்கள். ஆண்கள் ஏற்றமிறைக்கும்போதும், ஓடந்தள்ளும்போதும், வயல்களில் வேலை செய்யும்போதும், வண்டியோட்டும்போதும் நாட்டுப் பாடல்களில் இசையை அள்ளி வீசி, துன்பமான வேலையாயிருப்பினும்

இன்பத்துடன் செய்கிறார்கள். வண்டியோட்டுபவன், நல்ல இசைப் பாடல்களைப் பாடினால் வண்டி மாடுகள் இசையில் மயங்கி இசை இன்பத்தை அனுபவித்துக் கொண்டே பல காத தூரம் துன்பமின்றிச் செல்வதை நேரில் காண்கிறோம்.

பாம்பு பிடிப்பவன் மகுடி என்ற இசைக் கருவியினால் சில ஓசைகளை அமைத்து வாசித்தால் இசைக்கு மயங்கிப் பாம்பானது படமெடுத்தாடுவதையும் அவ்வோசைகளில் பெரிய ஓசைகளைக் கேட்கும்போது சிறுவதையும் காண்கிறோம். பாம்புக்குச் சிறிய செவியாயிருப்பதால் சிறிய ஓசையைத்தான் விரும்புகிறது. பெரிய ஓசையைக் கேட்பின் அதற்குச் சினமுண்டாகிறது. அசுணமா என்னும் பறவை இனிய இசையைக் கேட்குங்காலத்தில் மிக மகிழ்ச்சியடையுமாம். அதில்லாமல் வேண்டாத இசையை, அதாவது அபஸ்வரமாகக் கேட்பின் மயக்கமுற்று மூர்ச்சையுற்று விழுந்துவிடுமாம். இப் பறவைக்கு இசையறி பறவை என்றும் ஓர் பெயருண்டாம். வனத்திலுள்ள வேடுவர்கள் இப்பறவையைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றால் யாழ் வாசிப்பார்களாம். யாழின் இசையைக் கேட்டு வேடுவர்களிடம் இப் பறவை அருகே வரும்போது இதைப் பிடித்துக்கொள்வார்களாம். இந் நிகழ்ச்சியைப் பற்றிச் சில சங்க இலக்கிய நூல்களினால் அறியலாம்.

இசை இலக்கணங்களைப் பற்றியும் இசைக்கருவிகளின் இலக்கணங்களைப் பற்றியும் சங்க காலத்திலுள்ளவர்களும் பின்பு உள்ளவர்களும் கூறிய நூல்கள் பலவுள்ளன. இந் நூல்களில், பெரு நாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம் பஞ்ச மரபு, சிலப்பதிகாரம், சிவகசிந்தாமணி, கல்லாடம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலான நூல்களில் பேராசிரியர்கள் இசையின் நுட்பங்களை ஆங்காங்கே ஆண்டுவந்திருக்கிறார்கள். தமிழிலே ஒப்பற்ற பாக்களாகச் சிலப்பதிகாரத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை, என்று சொல்லப்பட்ட வரிப்பாடல்களும், குறவஞ்சி, பள்ளு, சிந்து இவைபோன்ற இசைப்பாக்கள் எல்லாம் அன்றும் இன்றும் என்றும் பெரும் இசையரண்களாகத் திகழ்ந்து சிறப்புடன் இருந்துவருவது மக்கள் செய்த பெரும் பேறாகவே கொள்வோமாக.

முல்லை - 2

சும்மா வராது

சுப. நாராயணன்

"சும்மா இருப்பதே சுகம்" என்பது பொய். சும்மா இருந்து நலமடைந்தவர் யாருமில்லை. உழைக்க உழைக்கத்தான் உயர முடியும்.

எந்தத் தொழிலிலும், எந்த அறிவு முயற்சியிலும் நிறைவான வெற்றிபெற வேண்டுமானால், அறிவின் துணையால், இடையறாமல் உழைத்து, விடாமுயற்சி யோடுமுனைய வேண்டும்.

வெறும் வெளிப் பகட்டினால் மட்டுமே வெற்றி கண்டு விட முடியாது. ஆழமற்ற பகட்டு ஆரவாரம் எந்த நாட்டிலும் எப்பொழுதும் இருக்கவே செய்யும். ஆனால், காலப் போக்கில் உண்மைச் சரக்கின் மதிப்பு வெளிப்பட்டே தீரும். நல்லவர்கள் ஆதரித்தால், இந்த உண்மை மதிப்புச் சடுதியில் வெளிக் கொணரப் பெற்று இதனால் மக்கள் சமுதாயத்துக்குப் பெரு நலம் விளையும். தேடுவாரின்றிப் பல நல்ல முயற்சிகள் அழிந்து போவதுண்டு. செய்ய முடியாததைப் பற்றியும், முன்பே செய்து முடித்திருக்கக் கூடியதைப் பற்றியும் நினைத்துப் பார்ப்பது நல்லதுதான். இனிமேல், விரைந்து செயலாற்றுவதற்கே இந்த நினைப்பு உதவவேண்டும். சும்மா அங்கலாய்ப்பதால் பயனில்லை. உணர்ச்சி பொங்கி அறிவுத் தெளிவைக் கெடுத்து விடும்படி பண்டைப் பெருமை பேசுவது நல்லதல்ல.

உலகத்து மொழிகளில் மிகச் சிறந்தவற்றுள் தமிழும் ஒன்று. இதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், காலப்போக்கில் மாறி மாறி வளர்ந்து வராத மொழி அழிந்து போகும். இன்றும் தமிழ் உயிர்த் துடிப்புடன் இருந்து வருவது, அது மாறி மாறி வளர்ந்து வருகிறதென்பதற்குச் சரியான சான்று. ஒரு மொழி வளர்வது அம் மொழியைப் பேசும் மக்களைப் பொறுத்தது. மக்கள் வளர்ச்சியின்றேல் மொழி வளர்ச்சி இல்லை. மனத்தில் எண்ணற்ற, பலபடித்தான எண்ணப் பதிவுகள் நொடிக்கு நொடி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எண்ணம் தெளிவானவுடன் அது கருத்தாக உருப்பெருகிறது. கருத்துத் தெளிவானவுடன் அது சொல்லாகிறது. சொல் தெளிவானவுடன், அது கருத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் மொழியாகிறது.

மக்கள் மொழியை வளர்ப்பார்கள். பிறகு, மொழி மக்களை வளர்க்கும். இந்த வளர்ச்சி மாறி மாறி ஏற்பட்டு, முன்னேற்றம் இருந்துகொண்டே இருக்கவேண்டும். முன்னேற்றத்திற்கு எல்லையே இல்லை. இச் செய்தி பற்றிப் பலபடித்தான எண்ணக் குழப்பம் இருப்பதினாலேயே தமிழ் மக்களின் வளர்ச்சி தயங்கித் தயங்கிச் செல்கிறது. இதை விரைவு படுத்தலாம். எப்படி?

செய்தித் தாள்களும், நூற்பதிப்பகங்களும், பள்ளி ஆசிரியர்களும் மனம் வைத்தால், மாபெரும் பயனை நொடிப் பொழுதில் கைவரப் பண்ணிவிடலாம். இன்று, மேலே சொன்ன மூன்று துறைகளிலும் திறமையும் தகுதியும் மிக்கவர்கள் வேண்டிய அளவு இருக்கிறார்கள். ஆனால், தகுதியோ, திறமையோ, மனமோ இல்லாதவர்களும் நிறைய இருக்கிறார்கள். நாடாளும் மன்றங்களில் எதிர்க் கட்சி என்று ஒன்று இருக்கும். இவர்கள் அந்த மாதிரி. ஆனால் ஒன்று; எதிர்க்கட்சி அளவு மீறி வலுத்தால், ஆட்சி முறை தலைகுப்புற மாற வேண்டியதுதான். இந்த மாற்றம் மொத்தத்தில் நன்மை விளைவிக்குமானால் குற்றமில்லை. இன்றையத் தமிழின் நிலைமை, தகுதியற்ற காளான்கள் நிரம்பிய எதிர்க் கட்சியால் மிகப் பேரளவில் தீமைக்குள்ளாகிறது.

"... ஏதுமிலார் தமிழினிலே
ஏடெழுதிப் பிழைக்க வந்தார்"

என்று புரட்சிக் கவிஞர் கூறுகிறார்.

ஓவியம், கவிதை, இசை, உரைநடை, கூத்து இவை அனைத்தையும் நன்கு தெரிந்து கொண்ட பிறகே பொறுப்புள்ள ஒருவன் ஆசிரியனாகவோ, எழுத்தாளனாகவோ ஆகவேண்டும். ஆனால் எல்லாரும் எல்லாவற்றையும் தெரிந்துகொண்ட பிறகே எழுதத் தொடங்குவதென்பது நடவாத செயல். இருந்தாலும், ஒரு துறையில் புகுந்து, அதையே தன்னுடைய தொழிலாக ஒருவன் கொண்டு விட்டால், படிப் படியாகவாகிலும் தன்னுடைய தொழில் குறித்த செய்திகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள அவன் முயல வேண்டும். இந்த முயற்சியில் ஒருமித்த ஈடுபாடும், தணியாத ஆர்வமும் அவனுக்கு இருக்க வேண்டும். இந்தமாதிரி முன்னுக்கு வந்து, சிறந்த பணியாற்றுகிற ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் இல்லாவிட்டால், இன்றையத் தமிழ் இவ்வளவுக்கு வளர்ந்திருக்க முடியவே முடியாது,

"யாவும் அறிந்தோம் என்பார் பெரும்பாலோர்
பிழையின்றி எழுதல் இல்லார்."

என்கிறார் கவிஞர் பாரதிதாசன். தொல்லைக்குக் காரணமெல்லாம் இதுதான். செல்வாக்கைக் கொண்டும், நண்பர்களின் உதவியைக் கொண்டும், வெற்றாரவாரமான விளம்பரத்தைக் கொண்டுமே பலர் தமிழ் எழுத்துலகில் வயிறு வளர்த்து வருகிறார்கள். வயிறு தான் வளர்க்கிறார்கள் - வாழவில்லை!

தமிழ்ப் புலவர் கூட்டம் பழைய இலக்கியத்தை வழிபடுவதோடு சரி. உயிரளபெடை, காமக் கற்பனை கடினமான இலக்கணப் புணர்ச்சி இவற்றைக் கடந்து அவர்கள் செல்வது அரிது. இன்றைய மறுமலர்ச்சிக் கூட்டம் (பெரும் பகுதி) முன்னதையும் பின்னதையும் தள்ளி விட்டு, நடுவிலுள்ள காமக் கற்பனை ஒன்றையே நிலைக்களனாகக் கொண்டிருப்பதோடு சரி. இந்த இரண்டு எதிர்ப்போக்குகளையும் சரிப்படுத்தி, நல்ல படியாய்ப் புதுப் புதுத் துறைகளில், புதுப் புதுக் கருத்துக்களைக் கொண்டு கூட்டித் தந்து, ஆக்க வேலை செய்துவருகிற திறமையும் தகுதியும் வாய்ந்த உழைப்பாளிகளின் கையிலேயே தமிழின் எதிர்காலமும், தமிழரின் எதிர்காலமும் இருக்கின்றன.

பெயர் பெற்ற எழுத்தாளர்களில் பெரும்பாலாருக்கு எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை இல்லாமல் எழுத வரவில்லை.

இவர்களுடைய எழுத்தின் கருத்து நயத்தால் இக்குறைபாடுகளை மக்கள் பொருட்படுத்துவதில்லை. இக் குறைபாடுகளோடு, கருத்து முதலிய வேறு எந்த நயமும் இல்லாமலேயே பலர் எழுதித் தள்ளி வருவதுதான் தொல்லை தருகிறது. இந்த இனத்தில் பெயர் பெற்ற கவிஞர்களும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். வெறும் சொல் அடுக்கோ, வெறும் உணர்ச்சிக் குழம்போ, வெறும் விளிக்குறி ஆரவாரமோ, அச்சிட்ட நூலின் வெறும் புற அழகோ நிலையான நன்மை செய்து விட முடியாது.

மு. அருணாசலம் அவர்கள் எழுதியுள்ள இன்றையத் தமிழ் வசன நடை என்ற நூல் இன்றையத் தமிழ் நிலையைச் சரியாய் எடுத்துக் காட்டுகிறது. இதில் மோசமான சில தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும், அடிப்படையில் - மொத்தத்தில் - இது முற்ற முழுக்க உண்மை உரைப்பது. இதைப் பற்றிக் குறை கூறியவர்களில் ஒரு சிலர் தவிர ஏனையர் அனைவரும் தம்முடைய தகுதியின்மையையும் திறமையின்மையையும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அருணாசலம் அவர்கள் தமிழை முறையாய்க் கற்றவர். தொல்காப்பியமும் நன்னூலும் அவருக்கும் தெரியாமலிருக்க முடியாது. தொல்காப்பியத்திலுள்ள சில துறைகளைச் சற்று மாறுதலோடு நன்னூல் பின்பற்றி எழுந்தது என்ற கருத்துப்பட அவர் தம்முடைய நூலில் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். இது சரியல்ல என்று இலக்கிய ஏடு ஒன்றில் அருணாசலம் அவர்களை ஒருவர் கண்டிக்கிறார். நன்னூலும் தொல்காப்பியமும் ஒன்றேதானாம்! இவை இரண்டிற்கும் வேறுபாடில்லையாம்!! இது கண்டனக்காரரின் கூற்று. இந்த அரிய உண்மையை அச்சிட்டு வெளியிட்ட இலக்கிய இதழ் ஆசிரியரின் தமிழறிவும் வியக்கத்தக்கதே. முக்கியமான செய்தியாயிற்றே, இது சரியா, என்று எண்ணிப்பார்க்க அவர் முனையவில்லை. அப்படியானால் செய்தித் தாள்களையும் பிற இதழ்களையும் படிக்கிறவர்களைப் பற்றி அவர் எவ்வளவு மேலோட்டமான மதிப்பு வைத்திருக்கவேண்டும்?

தெரியாமலிருப்பதால் தவறில்லை. தெரிந்து கொள்ள முயலாததில்தான் தவறு இருக்கிறது. அசட்டையாய் வேலை செய்கிற எவனும் அரைக்காசுக்கும் உதவமாட்டான். வருந்தி உழைத்து முயன்றாலல்லது எந்தத் துறையிலும் வெற்றி பெற முடியாது. தகுதி அற்றவர்களை விரட்டுவதற்கு வழி, தகுதி உள்ளவர்கள் பெருவாரியாய்ப் பெருகி, நாடெங்கும் நிறைவதே யாகும். சும்மா வராது!

முல்லை - 2

துடிப்பு

மு. வீரபாகு

என் உள்ளம் ஏனோ? ஏனோ? கள்ளத் துடிப்பாதலால் மெள்ளத்தானே துடிக்கும். கள்ளத் துடிப்பென்றால்? காதல் துடிப்பா? ஆம். காதல் துடிப்புத்தான். சாதல் துடிப்பும்தான். தமிழிலே காதல்; தமிழ் நாட்டிலே காதல்; தமிழ் மக்கள் பேரில் காதல். ஆனால் என் காதலைத் தெரிவிக்க வழியில்லையே? ஊரார் தூற்றலுக்கு அஞ்சவேண்டுமே. எனவேதான் என் காதல் மனசிலே, கனவிலே, உள்ளத்திலே துடித்துக்கொண்டிருக்கிறது. விள்ளமுடியாத நிலையிலிருக்கிறேன்.

தமிழிடத்தில் காதலென்றால், தமிழர்பால் காதலென்றால், ஏன் அதை ஒழிக்கவேண்டும்? களவுக் காதல் தமிழர் மரபென்பதாலா? இல்லை. என் காதலைப் பழித்து அதை யழிக்கப் பலரும் அற்றம் நோக்கியிருப்பதால்தான். இது மறுமலர்ச்சி யுக மாச்சே, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கின்றதே, யார் யாரெல்லாமோ தமிழ் தமிழ் என்று வாய்ப் பறையறைகின்றனரே, தமிழ் மகாகவிகளைப் பற்றியும் மகா மகா உபாத்தியாயர்களைப் பற்றியும் எட்டுத் திக்கும் முரசம் கொட்டுகின்றதே, தமிழ்க் காதலைப் பற்றித் தெரிவிக்க ஏன் தயக்கம்? எழுதுவதெல்லாம் தமிழா? பேசுவதெல்லாம் மொழியா? சீரிய தமிழ் சீரழிகிறது.

பரத்தையும்தான் பரிந்து பேசுவாள். காதலன் மெய்மறந்திருக்கும் வேளையில் அவனுந்தான் நம்பி விடுகிறான். ஆனால் சாந்துணையும் தன்னுயிரைக் கொடுத்தும் தலைவன் நலம்பேணக் காத்திருக்கும் கற்பின் செல்வியின் காதல் அன்றோ உண்மைக் காதல்? இன்று செல்வனாய் இருக்கும் தலைவன் நாளை வறியனானால் உதறித்தள்ளி, அடுத்து வருபவன்மேல் பாசம்கொள்ளும் பரத்தையின் காதல் நிலையாகுமா? காதலால் சாதலே விளையினும் தலைவனைப் பேணி நின்றொழுகும் அருங்குண நங்கையின் காதல் நிலையாகுமா? ஊரார் துடையை நம்பி எத்தனை நாழி உறங்கலாம்? என் காதல், உள்ளத்திலே ஊறி ஓடத்தான் செய்கிறது; கண் வழியே நீராய் வழிகிறது. என் காதல், நாளைக் குருதிப் பெருக்காகவும் ஓடலாம். ஏன்? என் காதல் பொருளுக்கு ஊறு வந்தால் இரத்தம் பெருக்கத் தயார். தமிழ் என் உயிர். அதுவே என் உடல், பொருள், ஆவி எல்லாம். அதுவே என் வாழ்வும் தாழ்வும்.

இப்படி என்போல் காதல் துடிப்பைக் கள்ளத்திலே-உள்ளத்திலே கொண்டு வன்னெஞ்சப் பேதையர் தம் வாய்மொழிக்காற்றாது வருந்தி வாடும் அன்பினர்களே. என் துடிப்பும் உங்கள் துடிப்பும் இன்று வெறும் துடிப்பாக இருக்கலாம். அது உண்மைத் துடிப்பாதலால் துடிப்பு துள்ளலாகி ஒன்றோடொன்று கலந்து, அலையாகி வானளாவும் மலைகளையும் தவிடுபொடியாக்கும் பேரலையாய்ப் பெருந்திரையாய் வெளியே தோன்றும் நாள் வந்துவிட்டது. ஆழ மிகுதியால் வெளியில் தெரியாது நின்ற துடிப்பு, இன்று தலை நீட்டி நிற்கும் சிறு பாறைகளையும் தூறுகளையும் துடைத்தொழித்துப் பொடி பண்ணி மட்டம் தட்டத் திரண்டு விட்டது. ஏ, காதல் உள்ளங்களே, என் உள்ளத் துடிப்புக்கு ஒத்துத் துடிக்கும் அன்புள்ளங்களே, நாம் கலந்துறவாடும் நாள் கிட்டிவிட்டது. ஊராருக்கு அஞ்ச வேண்டாம். நம் உண்மை போற்றப்படும்; நாம் மெச்சப்படுவோம். நாம் தமிழ்க் காதலில்-தமிழர் காதலில் திளைக்கலாம். களவுக் காதல கற்புக் காதலாக, மறக் கற்பாக மாறும் நாள் இதோ!

முல்லை - 2

கலை

க. அன்பழகன்

கலை, நாகரீக முதிர்ச்சியின் விளைவு. நாகரீகம், மனிதத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதன் அறிகுறி. மனிதன், உணவும் உடையும் உறையுளும் தேவை யென்பதை உணர்ந்த காலத்திலே நாகரிகம் வளரத் தொடங்கிற்று. மனிதன் பச்சை மாமிசத்தை உண்டதினின்று, அதைச் சுட்டுத் தின்பதற்குப் பழகியதும், சமைத்துண்ணத் தலைப்பட்டதும்; மர உறியும் தழை உடையும் உடுத்துவதினின்று காருடையும் பஞ்சுடையும் உடுத்தத் தலைப்பட்டதும்; மரக்கிளையிலும் குகையிலும் குந்தியிருந்ததினின்று குடிசையிலும், கூரைக் கட்டிடத்திலும் குடியிருக்கத் தலைப்பட்டதும் நாகரிகத்தின் வளர்ச்சி நெறியாம்.

அது மட்டுமல்ல. கூட கோபுரங்களையும் மாட மாளிகைகளையும், ஊர்களையும், நகரங்களையும், பாக்கங்களையும், பட்டினங்களையும், அரசையும் அமைச்சையும், காவலையும் வரியையும், வாகனத்தையும் வண்டியையும் அமைத்துக்கொண்ட ஒவ்வொன்றும் நாகரிக வளர்ச்சியாகும். இந்நாகரிக வளர்ச்சியே பல்வேறு கலைகளின் அடிப்படையுமாகும். இவ்வடிப்படையினின்றும் கிளர்ந்து எழுந்து பரந்து பொலிகின்ற கலையுணர்வே உணவில் அறுசுவை சேர்ப்பதும், உடுத்தலில் அழகு காண்பதும், உறையுளில் வேலைப்பாடு செய்வதும், கருத்தினைப் பாட்டாக்குவதும், கதையினை இலக்கியமாக்குவதுமாகும். தேவையினைப் பூர்த்தி செய்துகொண்ட மனிதன் அவ்வளவில் நிற்றல் இயலாது. ஆகவேதான் திருப்தி அடைந்த புலன் உணர்விலிருந்து பாட்டு பிறக்கின்றது. சிறு குழந்தைகளுடைய விருப்பம் நிறைவேறிவிட்டால் அந்த எக்களிப்பில் பொருளற்ற பாட்டும் தோன்றும். மாடு மேய்ப்பவன் மாலையிலே வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்தாலும், குடித்தவுடன் 'தன்னான' பாட்டைப் பாடுவதைக் கேட்கிறோம். அதைப் போலத்தான் புலன் உணர்ச்சி இன்ப மெய்தியவுடன் அது பண்ணுடன் கலந்த பாட்டாகிறது; பாவை வடிவச் சித்திரமாகிறது; சிந்தனைக்கு விருந்தளிக்கும் செந்தமிழ்க் காவியமாகிறது; நெஞ்சை யள்ளும் பல்வேறு கலைகளாய்க் கவின்பெற அமைந்துவிடுகிறது. வாழ்க்கை நுகர்ச்சிகளை வகை வகையாய்ப் பிரித்தெடுத்து அவற்றின் முழு அழகு தோன்ற அணிபெறத் தொகுத்தளிப்பது கலை. வாழ்க்கை நுகர்ச்சிகளைப் பூர்த்தி செய்யப்பட்ட இடத்தில் எழுவதே கலை.

முல்லை - 2

வாழ்க்கையின் இலட்சியம்

சி. என். அண்ணாத்துரை

கட்சி பேதமின்றிப் பேசுவது பற்றி எனக்கு மிக மகிழ்ச்சி. ஏன்?

சர்க்கஸில் உயர்ந்த கம்பத்தின் உச்சியில் விசித்திரமான வேலைகளைச் செய்வதைப் பார்ப்பதில் மக்களுக்கு ஆனந்தம். ஆனால் எப்போதும் ஆடி ஆடி ஆயாசமடைந்துள்ள சர்க்கஸ்காரனுக்குச் சிறிது நேரம் வீதியிலும் வெட்ட வெளியிலும் உலவி வருவது மிகப் பேரானந்தம். அது போல் எனக்கு ஒரு கட்சி இருக்கிறது. அதிலே பேசுகிறேன். அது கட்சித் தோழர்களுக்குப் பெருமை, பூரிப்பு; எனக்கும் கூடத்தான். ஆனால் ஏதோ சில சமயங்களில் இது போன்ற பொது வேலைகளில், கட்சி பேதமற்ற கருத்துக்களைப் பற்றிப் பேசுவதுதான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. எதனால் மகிழ்ச்சி? 'கட்சி பேதம்' என்ற இந்தச் சொல் அடிப்படையைக் கொண்டு பார்த்தால் ஓர் அர்த்தமற்ற சொல். எப்படி? கட்சிக்கு ஏற்பக் கருத்துக்கள் கிடையாது. கருத்துக்களுக்குத்தான் கட்சி தேவை. இது முற்றும் பேதமல்ல; வெறும் அபிப்பிராய பேதம். இது பெரிய முரண்பாடல்ல; வீண் மோதுதலுக்கு கருத்துக்களைப் பரஸ்பரம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

வாழ்க்கை; அதில் பல தொல்லைகள்! ஏன்? அதைத் தீர்ப்பது எப்படி என்ற ஏக்கம், ஏன் எப்படி வந்தது?

நாம் வாழ்கிறோம், எதற்கு என்று சிந்தியாது; ஏன் வாழ்கிறோம் என்ற கவலையின்றி. எப்படி வாழ்கிறோம் என்று எண்ணிப் பாராமல் வாழ்கிறோம். ஏனோ வாழ்கிறோம், எதற்கோ வாழ்கிறோம், எப்படியோ வாழ்கிறோம், யாருக்காகவோ வாழ்கிறோம். பிறந்தோம், அதனால் வாழ்கிறோம். சாவதற்கு வாழ்கிறோம். இது வாழ்க்கையா? இல்லை. நாம் கேட்கிறோம் பலர் 'வாழ்வதை விடச் சாவதே மேல்' என்று கூறுவதை! வாழ்வில் இத்தகைய சலிப்பு ஏன்? தொல்லைகள்தான் ஏன்? எப்படி வந்தது; வருகிறது. வராதிருக்க வழியென்ன?

இன்று இந் நாட்டில் வாழ்பவர்களில் பெரும் பகுதியினர் வாழ்க்கையில் சலிப்புள்ளவர்களே. பாட்டாளிகள், பஞ்சாலைத் தொழிலாளிகள், அன்றாடக்கூலிகள், நெசவுக்காரர்கள், நிலத்தில்

உழைக்கும் உழவர்கள் முதலிய எல்லோரும் "வாழ்வதை விடச் சாவதே மேல்' என்கிறார்கள். ஏன்?

ஒரு குமாஸ்தா இரவு ஒன்பது அல்லது பத்து மணிவரை கடையில் உழைத்துவிட்டு வீடு திரும்புகிறார். இல்லக்கிழத்தி, வீட்டில் இல்லாத சாமான்கள் ஏதாவது கொண்டு வந்தாரா என்று கேட்கிறாள்; குழந்தை பட்டுச் சொக்காய் கேட்கிறது; பையன் பள்ளிச் சம்பளத் தேதி கடந்து போனதைக் கவனமூட்டுகிறான். இந்த நிலையில் அவருக்குப் போதிய வருமானம் இல்லை வேண்டியதை வாங்க . அவர் இரவு தலையை முழங்கை மேல் வைத்து அதைக் கண்ணீரால் நனைப்பார். 'சே, வாழ்வதை விடச் சாவதே மேல் என நினைக்கிறார். இது போன்றே வாழ்க்கையின் பல கட்டங்களில் பலர் எண்ணுகின்றனர். சிலர் துணிந்து செயலிலும் காட்டுகின்றனர்.

இந்தச் சலிப்பு 'வாழ்வதை விடச் சாவது மேல்' என்ற எண்ணம், இந்த நாட்டைத் தவிர வேறு எங்கும் இல்லை. மேனாட்டவர்கள் திருப்தியோடு வாழ்கின்றனர்; வாழ்க்கை நடத்துகின்றனர். அவர்கள், ஏன் வாழ்கிறோம் என்பதை அறிந்திருக்கின்றனர். எதற்கு வாழ்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்படி வாழ்கிறோம் - வாழ வேண்டுமென்பதற்குச் சிறந்த இலட்சியமுண்டு. யாருக்காக வாழ்கிறோம் என்பதைத் தெரிந்திருக்கிறார்கள். இங்கு?

சோமசுந்தரம் வாழ்கிறார். நல்ல கனவான்தான்; கவலைக்கு இடமில்லை. அவரைக் கேளுங்கள், "நீ ஏனப்பா வாழ்கிறாய்; என்ன இலட்சியம்?" என்று. அவர் கூறுவார்; "என்னமோ நம்மைப் பற்றிக் கவலையில்லை. அக்கடாண்ணு போயிடலாம். ஆனா நம்ப பெண் கமலா இருக்கிறதே, அதற்கு 12 வயசு ஆகிறது. அதுக்கு எங்காவது நல்ல இடத்திலே ஒரு மூணு முடி போட்டு வைச்சுட்டு, ஏதோ நம்ம பையன் முருகேசனையும் ஒழுங்காப் பண்ணி விட்டா எனக்கு வாழ்றதைப் பத்தி கவலையே இல்லை. பேசாம எப்ப வேணுமானாலும் சாகலாம். நான் கண் மூடறத்துக்குள்ளே நம்ம பசங்க கல்யாணத்தைக் கண்ணாலே பார்த்துடணும்" என்று. இது அவருடைய வாழ்க்கை. அவர் மனைவியைக் கேட்டால் 'என்னமோ அம்மா இப்பல்ல வரவர காலமே கெட்டுப் போறது. எது எப்படியானாலும் நான் அவர் இருக்கும்போதே மஞ்சள் குங்குமத்தோடே போயிட்டேனா ரொம்ப நிம்மதி. இந்த வாழ்வு என்றைக்குத்தான் சதம்?' என்ற முறையிலே மாறும். இது இவருடைய வாழ்க்கையின் லட்சியம்.

சோமசுந்திரத்தின் மகன் முருகேசனைப் பார்த்து "ஏனப்பா, முருகேசா, உனக்கு வாழ்வில் விருப்பமா? எதற்காக நீ வாழ்கிறாய்?" என்று கேளங்கள். அவன் பள்ளியில் ஒரு வகுப்பில் இரண்டு தடவை தேறியிருக்கமாட்டான். 'சே என்ன வாழ்வு. என்னமோ படிக்கவில்லையாம், பாஸ் பண்ணவில்லையாம். குடி முழுகிப் போச்சாம். அப்பப்பா எங்க அப்பன் படுத்தற பாட்டைப் பார்த்தால் எங்காவது

பேசாமல் குளம் குட்டையிலே விழுந்து சாகலாம் போல இருக்கிறது" என்றுதான் கூறுவான். இவன் வாழ்க்கையின் போக்கு இப்படி!

இதுபோலத்தான் இங்கு வாழ்க்கை. அதன் இலட்சியம் ஆளுக்கு ஆள், நேரத்திற்கு நேரம், வேளைக்கு வேளை மாறுகிறது; மாறிக் கொண்டே வருகிறது.

நான் இந்தக் குறிப்பிட்ட இலட்சியங்களுக்காக வாழ்கிறேன். அவர் அந்தக் குறிப்பிட்ட இலட்சியங்களுக்காக வாழ்கிறார் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியவில்லை எவராலும். காரணம்? நாம் ஏன் வாழ்கிறோம்? எதற்கு வாழ்கிறோம்? எப்படி வாழ்கிறோம், யாருக்காக வாழ்கிறோம் என்ற நிர்ணயமில்லை. அது மட்டுமல்ல வேடிக்கை! நாம் "வாழ்க்கை" என்றால் என்ன என்றே நிர்ணயம் செய்யாமல் இருக்கிறோம். 'இதுதான் வாழ்வு. இப்படி வாழ்வதுதான் வாழ்க்கை" என்ற தீர்மானமில்லை நம்மிடம். இது மிக மிக வேடிக்கை. 'வாழ்க்கை' பற்றிச் சரியான விளக்கம் தெரியாமலே, தெரிந்து கொள்ளாமலேயே வாழ்வது தவறு. மேல் நாடுகளில் அவ்விதமில்லை.

நம் நாட்டிலே "வாழ்வு" என்பது பற்றிக் கூறப்படும் விளக்கங்களைக் கேட்டாலே மிக வேடிக்கையாக இருக்கும்.

வேதாந்தி, "வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம் காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று கூறுகிறான்.

சித்தாந்தி, "வாழ்க்கை ஒரு ஆட்டம் ஆடும் வரையில்தான் ஆடும். பின் விழும், பம்பரத்தைக் கயிற்றால் ஆட்டினால் ஆடுகிறது. அது போல் நாமும் வாழ்வில் ஆடுகிறோம். இது திடீரென்று நின்றுவிடும்" என்று சொல்கிறான்.

மிதவாதியோ, "ஆண்டவன் ஆட்டிவைப்பதுபோல் நாம் ஆடுகிறோம்.' என்று விளக்கம் தருவான். தேசியவாதி, 'அன்னியன் நம்மை ஆட்டுகிறான்' என்று புகல்வான். ஆனால் என் போன்ற பகுத்தறிவு வாதிகள், நம்முடைய பழங்கால சமயங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், கோட்பாடுகள் முதலியவைதான் நம்மை, நம் வாழ்வை, வாழ்க்கையின் இலட்சியத்தை, வாழ்க்கை முறையை ஆட்டுகின்றன" என்று கூறுவர்.

"வாழ்க்கை" என்றால் என்ன என்று நிர்ணயிக்கப்படவில்லை. சர்க்கரை இனிக்கும். வேம்பு கசக்கும். மா பிஞ்சில் துவர்க்கும், காயில் சில புளிக்கும், கனியில் இனிக்கும் என்று நிர்ணயித்துக் கூறுகிறோம். அதுபோலவே "வாழ்க்கை' என்றால் என்ன என்று நிர்ணயிக்கப்படவில்லை. நிர்ணயிக்க நம்மிடம் உரைகல்லும் இல்லை. இந்த நிலையில் நாம் இன்று வாழ்கிறோம். 'வாழ்வு' பற்றி நிர்ணயிக்காமல் வாழ்வது முறையா? அது வாழ்க்கையா?

முல்லை - 2

நல்வாழ்வு

கி. ஆ. பெ. விசுவநாதம்

எல்லாச் செல்வங்களும் என்று குறிப்பிடும்போது, உடல் நலச் செல்வமே தலையான செல்வமாக முன்வந்து நிற்கிறது. நோயற்ற வாழ்வுதானே குறைவற்ற செல்வமாகும்? நோயுள்ள வாழ்வும் ஒரு வாழ்வாகுமா?

நல்வாழ்வுக்கு இன்றியமையாதது உடல் நலம் உடம்பைப் பெற்ற மக்கள் அதைப் பாதுகாக்க வேண்டும் என்பது அறிவைப் பெற்ற பயன் ஆகும். "நோய்வராமற் தடுப்பவன் அறிஞன், வந்து தடுப்பவன் மனிதன், வந்தும் தடுக்காதவன் பிணம்" என்பது புதுமொழி. மக்கள் முயன்றால் நோய்வராமல் தடுத்து வாழ முடியும். "உண்ணும் உணவிலும் உடல் உழைப்பிலும் கருத்தைச் செலுத்து" என்ற கட்டளைதான் இதற்கு ஏற்ற வழி.

காலையில் எழுந்திரு! "பனி அதிகமாக இருந்தால் வெளியில் தலையை நீட்டாதே!" என்று புத்திமதி சொல்லும் பெற்றோரைப் பார்த்திருப்பீர்கள். ஏன்? பனி என்றால் பொல்லாததா? அல்லது பயங்கரமானதா? ஒன்றுமில்லை. நன்றாகப் பனியில் திரியலாம். மழையிலும் நனையலாம். கடுங்காற்றிலும் அடிபடலாம். ஆனால், ஒன்று; நீங்கள் வெயிலிலும் காய்ந்திருக்க வேண்டும்.

நாள்தோறும் ஒரு மணி நேரம் வெயிலைத் தாங்கும் உடம்பு, காற்று, பனி, மழைகளையும் ஒரு மணிநேரம் தாங்கும். வெயில் படாத குழந்தைகளின் உடம்பில் மழைத் துளியும் பனித் துளியும் பட்டால் உடல் பருவம் சிறு பருவத்திலேயே இடிந்து, குட்டிச் சுவராகி, பிறகு மண்ணாகி, மறைவாகிப் போய்விடுகிறது.

நாள்தோறும் வெயிலிற் காயும் மக்களின் உடலைக் காற்றும் மழையும் கடும்பனியும் எவ்வாறு வளர்த்து வருகின்றன என்ற உண்மையைக் கிராமங்களில் பார்க்கலாம். வெயிலிற் காய்ந்து, மண் வெட்டி, நிலம் திருத்தி வாழும் ஆண்கள், பிரசவித்த பிறகு மழையில் நனைந்து சேற்றில் இறங்கி நாத்து நடும் பெண்கள், ஆடையும், அரை ஞாணுமின்றி

ஓடியாடிக் குதித்து விளையாடும் குழந்தைகளின் இனிய காட்சிகள் நமக்கு உடல் நலச் செல்வத்தை உணர்த்தும்.

உடல் நலம் எப்படிக் கெடுகிறது? வெயில், மழை, பனி, காற்று ஆகிய நான்கும் உடலுக்கு உறுதி செய்யும் இயற்கைச் செல்வங்கள். இவற்றுள் ஒன்றை விலக்கி மூன்றை மட்டும் ஏற்றால் உடல் நலம் கெடாமல் என்ன செய்யும்? மனிதன் செய்கின்ற மலை போன்ற இத்தவறுதலை விலங்குகளும் செய்வதில்லை. பறவைகளும் செய்வதில்லை.

எதை வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் பயப்படாமல் உண்ணுங்கள், ஒரு தீங்கும் நேரிடாது. ஆனால் ஒன்று; உண்பது செரிக்கும்படி உழைத்திருக்க வேண்டும். உழைக்காமல் உணவு மட்டும் கொள்வது தவறு.

பெருமைக்கு வண்டி ஏறுவதையும், புகழுக்குக் கூலியைக் கூப்பிடுவதையும் ஒழிக்க வேண்டும்.

உன் வேலையை நீயே செய்வதின் மூலம் உடம்பின் எந்தெந்த உறுப்புகளுக்கு வலி ஏற்படுகிறதோ, அந்தந்த உறுப்புகள் பலவீனமாக இருப்பதாக உணர்! அந்தந்த உறுப்புகள் திரும்பவும் பலம் அடைய அந்தந்த வேலைகளைத் திரும்பத் திரும்பச் செய்! இந்த உடற்பயிற்சி மூலம் உன் உடல் உறுதியாகிவிடும்.

முல்லை - 2

தமிழ் மறுமலர்ச்சி

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

சுமார் ஐந்நூறாண்டுகளுக்கு முன், மேனாட்டில் நெடிய இடை இருளில் வளர்ந்து அடர்ந்த மடமைக் களைகளால் மாந்தர் உணர்வுப் பயிர் மடங்கி அழியும் நிலையிலிருந்தது. அந்நீண்ட இருள் நீங்கித் தெருட்சி பிறக்க எழுந்த அறிவுச் சுடரை அந் நாட்டார் தங்கலையின் “மறு பிறப்பு' (Renaissance) எனப் பெயரிட்டார். அப்பெயர் அவர்கள் கலையுலகத்தை அறவே மறந்தபின் புதிதாய்த் தோன்றிய ஒரு நிலையைக் காட்டும். புதியதெல்லாம் நல்லதென்று கூறுதல் பொருந்தாது; நன்மைதருந் தொன்மைகளைத் தொலைப்பதுவும் அறிவாக்க நெறி ஆகாது. அன்றியும் பழமையொடு தொடர்பற்ற முழுப்புதுமை, பழவிழுப்பம், குடியுரிமை, அறிவு நெறி, கலை இயல்பு, அறிவுணர்ச்சி அனைத்தினையும் வேரறுத்து அறியாத புது வாழ்வில் ஆழ்த்திவிடும். அதனியல்பு நாளடைவில் நம்மைப் பிணித்துத் தன்வயமாய்த் திருப்பிவிடும்.

உலகியலில் பழையன வெல்லாம் தீதாகமாட்டா; அதுவேபோல் புதியன வெல்லாம் நன்றும் ஆகமாட்டா. தொன்மையில் நாமறிந்த நன்மைகளை அடிப்படுத்தி, நடுவு நிலையறிவால் நாளும் நல்ல புது முறைகள்ள ஆராய்ந்தெடுத்துத் துறைதோறும் கொடுத்து வாழ்வை வளப்படுத்த முயல்வது நம் கடனாகும். அம்முறையில், தீதகற்றி நன்றாகும் பழமையின்மேல் அடிகோலி நல்ல புது அணி மலரவும், நாகரிக வாழ்வு உயரவும் நாடுவதே அறிவறமும் அறநெறியும் ஆகும். இதில் ஐயமில்லை.

சென்ற சில நூற்றாண்டுகளாய் மட்டற்ற நெட்டுறக்கமாகிய மயக்கத்தினால் நாம் நமக்குரிய மாண்புகளையும் மரபுகளையும் அறவே மறந்து, பிற மதங்களிலும் வழக்கங்களிலும் அலைப்புண்டு தாழ்ந்து வாழ்ந்து வருகிறோம். இந்நிலையினின்று நாம் இன்று விழித்தெழுந்து தமிழ்க்குரிய கலை தழையும்படி நம் வாழ்வைப் புதுக்க முயல்கிறோம். இம்முயற்சியின் பயனாய் ஏற்பட்ட இயக்கத்தையே 'மறுமலர்ச்சி' என வழங்குகிறோம்.

மறுபிறப்பில் கலை இயல்பு இறந்ததினும் புதிதாகப் பிறந்த நிலை சிறந்திடலாம்; அன்றி மிக இழிந்தநிலை எய்துவதும் கூடுமன்றே. புதிய

நிலை எதுவாயினும், பின்னது முன்னதின் வேறாதல் ஒருதலை. தன்மையில் இரண்டும் ஒன்றெனல் தவறாகும். இவற்றிடை விடாத் தொடர்பின்மையால் பின்னிலை முன்னதன் விளையுளாகாது.

மறுமலர்ச்சியில், மலர்தரு மரத்தியல் மாறாது. என்றும் நின்றுவளரும் தருவில் பருவந்தோறும் புதுமலர் தோன்றும். பூப் புதிது எனினும், பூக்கும் தருவியல் வேறன்று; பருவமலர் தருவது அதன் இயல்பு. பூத்த மலர் பிஞ்சாகிக், காயாகிக், கனி பழமாய், இனம் பெருக்கும் விதை ஈனல் அதன் நிலைத்த பயனாகும்.

இனி, ஒருமுறை பூத்தபின், உரனழிந்து இறந்தொழியும் செடியுமுண்டு. அதன் விதையாலெழும் பூண்டு, தாய்ச்செடியின் வேறாய் இனம் வளர்க்கும் விதையாகும். இவ்வகுப்பின் புது விதைகள், இன விருத்தியில் மறுபிறப்பும், தன்மையினில் தாய்ச் செடியின் வேறான தனியியல்பும் உடையனவாம்.

மேனாட்டுப் புத்தறிவுக் கலைத்தோற்றம், மறு பிறப்பு வகையாகும். கிரேக்க மொழி வாழ்விழந்து, அதில் வளர்ந்த அறிவுமலர்க் கலைகளனைத்தும் மாண்டன. அதன்பிறகு மனவுலகில் மறைந்து துறைந்த அதன் விதையைக் கண்டெடுத்த நல்லறிஞர், தம் உணர்வு மழை ஈரத்தில் மேற்புலத்து விதைக்கலானார். அதனால் பகுத்தறிவின் முளை கிளைத்துத் தளிர்த்த கலைவாழ்வின் புதுப்பிறப்பை அந்நாட்டார் அடையலானார். ஆனாலும், அது பண்டைக் கிரேக்கர் கொண்ட வகையன்று; முழுதும் அதன் பழ நீர்மை மேனாட்டுப் புதுக்கலைகள் அடையவில்லை. இனவகையில் பழ நிலையைப் புத்தறிவும் ஓரளவில் ஒத்தாலும், இடையடர்ந்த மடக்களைகள் ஊழ்த்து அவற்றின் இயலூறி வலுத்த புலத்து உதித்த புதுக்கலைமுளைகள் ஆழ்ந்தழுகும் பழங்களையின் இயல்கலந்து ஒரு புதுவகையாய் வளரக் காண்போம்.

வாழ்விழந்த கிரேக்க ஆரிய எபிரேயம் போலாது, 'என்று முள தென் தமிழ்' தன் மக்கள் உணர்வு மழை, உரனொளியின் குறைவாலே, மயங்கி வாடிச் சாம்பிற் றல்லால் உயிரிழந்து சாகவில்லை. ஆதலினால், தற்காலப் புதுவுணர்வின் துளியாலும், புத்தறிவின் ஒளியாலும் மாயாத தமிழ் தளிர்த்து மீண்டும் மலர் அரும்புகிறது. அதனாலேயே, நாமதனைப் புதிய பிறப்பென்னாமல், மறுமலர்ச்சி எனப் பொருந்தப் பேசுகிறோம். இம் மறுமலர்கள் நறுமணமுற்று எழில் ஒளிரச் செய முயல்வோர் இவ்வுண்மை மறவாமல் கருத வேண்டும்.

தூரொடு கற்பகத் தமிழ்த்தரு வழித்துப் பிறகலைப் பரல்களை வித்துவோரும், அதன் ஆணி வேரறுத்து இனஞ் சேராப் பிறகலை வித்துக்களை ஒட்டுவோரும், தமிழ் மண மறுமலர் கமழ்தலை விழைவோரல்லர். வேரொடு தூறும் தமிழாய்த் தழைய தம்முரனுரமிட்டு உணர்வு நீர் பாய்ச்சி வளர்க்கப் பூக்கும் மறுமலர்களில் மட்டும் தமிழின் புது மணமும் அதியழகும், மதுரமிகு கனி வகையும் கொள்ளக் கூடும்.

இனி தமிழ் மறுமலர்ச்சி வளம்பட வளர்க்கும் வழி சிலவற்றையும் ஆராய்வோம். நிலைப்பொருள் எதற்கும் நிலம், நீர், உரம் இவை மூன்றும் தேவை. தருக்களின் வளமை (இயல்பு), தழை-மலர்-பழத்தியல் இம்மூன்றின் வளத்தைப் பொருத்ததாம். தமிழ்த்தருவும் அதை வளர்ப்போர் ஆர்வம்-உணர்வு-உரன் எனு மூன்றின் வளத்தொடு தூய்மையால் வளர்ச்சியும், அவற்றின் குறைவால் தளர்ச்சியும் வாய்க்கப் பெறும். தமிழரின் குன்றாத ஆர்வத்தால் அவர் கலை, மொழி நின்று நிலவும்; உணர்வின் பெருக்கால் ஓங்கி வளரும்; உரன் தரும் ஒளியால் நறுமலரும் தீங்கனியும் நனி நல்கும். தமிழ் மறுமலர்ச்சிக்கு இம்மூன்றும் இன்றியமையாதவை. இவற்றில் ஒன்று குன்றினும் நன்றாகாது. குன்றா உள்ளமும், குறையா உணர்வும், பொன்றா உரனும் என்றும் வேண்டும்.

இன்னும், யாண்டும் எஞ்ஞான்றும் துறைதோறும் பொய் கொன்று மெய்பேணல் தமிழ் மறுமலர்ச்சிக்கு மிகவும் வேண்டும். பொய் வளி தீண்டில் தமிழில் கலையும் புலனும் எய்த்து மடியும். பொய் வகையுள் தெய்வப் பெயரால் வைகி வருபவை அளவிறந்தன; அறக் கழிவுடையன. அதனால் அவற்றை இரக்கமின்றி அகற்றுதல் அறனாம். வழுவும் பொய்யும் தழுவா வாய்மையை வளர்ப்பது தமிழர் முதற் கடன்.

பிற கலை மொழிகளைத் தமிழ்ப் பகையென்று தள்ளுதல் வேண்டா. அவற்றைச் சீரணவுணவாக வேண்டுமளவு கொள்ளுதல் அறிவறமாகும். புல்லுருவிபோல் அவை ஒட்டி வளருமேல், உய்யும் தமிழ்க்கலை நையுமென்பதில் ஐயமில்லை.

முல்லை - 3

இலக்கியப் பண்பு

காா. அப்பாத்துரைப் பிள்ளை

இலக்கியம் என்பது உண்மையில் என்றும் மாறாத விழுமிய பயனுடைய நூல்களின் தொகுதியை மட்டுமே குறிக்கும். ஆயினும் விரிந்துபட்ட வழக்காற்றில் அது எல்லாவகை நூல்களின் தொகுதியையும் குறிக்கிறது. இலக்கியம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லும் (Literature) இதுபோலவே இரு வகையில் வழங்குகிறது. இவ்விரு வேறுவகைகளையும் பிரித்துணரவே பிரஞ்சு நாட்டறிஞர் உயர் இலக்கியத்தை நல் இலக்கியம் (Belles Letters) என்று தனிப்படக் குறிக்கின்றனர்.

'நல் இலக்கியம்' என்பது அன்றன்று மட்டும் பயன் படுபவையான எழுத்துப் போக்குவரத்து, கணக்கு, அரிச்சுவடி, எண்சுவடி, பள்ளிப் புத்தகங்கள், செய்தித் தாள்கள் ஆகியவற்றை உட்படுத்தாது. அது மட்டுமன்று, கணக்கு, அறிவியல், கலையியல் முதலிய நூல்களும் இலக்கண நூல்களும்கூட நல் இலக்கியத்துக்குப் புறம்பானவை என்பது பலருக்கு வியப்பாயிருக்கக்கூடும். ஏனெனில் அவற்றுள் பல என்றும் பயனுடையவை. ஆயினும் அவை அறிவு ஒன்றுக்கே உணவு தருபவை. ஆதலால் அறிவு வேறுபடும் இடங்களில் அவை பயன் தரமாட்டா; அறிவு வளர்ச்சி யடைந்தபின் பழமை பட்டுப்போகும். மொழிக்கு மொழி அவற்றை மொழிபெயர்க்கவும் கூடும். நல் இலக்கியமோ எத்தனை அறிவு வேறுபாட்டினிடையிலும் ஒளிபெறும். எத்தனை அறிவு வளர்ச்சியடைந்த போதும் சுவை குன்றாது. மொழிக்கு மொழி தூண்டுதலாயிருந்து புது உருவம் பெறுமேயன்றி மொழிபெயர்க்கப் படமாட்டாது.

இலக்கியத்தின் இம்மாறாப் புதுமைக்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று அது அறிவுக்கு மட்டும் உணவாயிராமல் உணர்வுக்கும் அழகார்வத்துக்கும் உணவாகின்றது என்பது. பல பொருட்கும் ஒளி யேற்றியும் குறைவுபடாத ஒளிபோன்றது அது. இன்னொரு காரணம், அது மனித வாழ்க்கையுடனும் அதனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் மொழியுடனும் பிணைந்து நிற்பது. அறிவியல் நூல்களும் மொழி

பெயர்ப்புகளும் அறிவுத் திறத்தில் நின்று மொழியிலுள்ள சொற்களின் அகராதிப் பொருளை மட்டுமே அறிந்து வழங்க வல்லவை. இலக்கியமோ சொற்களுக்கு அகர வரிசைகளில் காணமுடியாதவையான மரபுகள், குறிப்புப் பொருள்கள் (தொனி அர்த்தங்கள்), தூண்டுதல் பொருள்கள் (Associations), உணர்ச்சி அலை எழுச்சிகள், ஓசை நயங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்துவது. மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்கள், ஆழ்ந்தகன்று மறைந்தியங்கும் அவாக்கள், அறிவுக்கும் உணர்வுக்கும் எட்டா உள்ளூறை உணர்வுகள் ஆகியவற்றை இலக்கியக் கலைஞனைப்போல் வேறு எவரும் - வேறு எக்கலைஞரும்கூடக் கையாள முடியாதென்பது திண்ணம்.

இதனால்தான் ஒரு நாட்டுக்கு இலக்கியத்தைப் போல் அழியாப் பெருமை தருவது வேறு எதுவுமில்லை என்று கருதப்படுகிறது. இறந்துபோன கிரேக்க, ஐஸ்லாந்து நாகரிகங்கள் இன்று அவற்றின் இலக்கியத்தால் மட்டும் உலகத்தினர் நினைவில் இடம்பெற்றுள்ளன. உண்மையில் மாசு மறுவற்ற இலக்கிய உயர்வு ஒரு நாட்டை அழியா நாடாக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படியானால் கிரேக்க முதலிய நாகரிகங்கள் அழிந்துபட்டது எதனால் என்று கேட்கலாம். இதற்கு இரண்டே காரணங்கள் கூறத்தகும். ஒன்று அவற்றில் கலந்திருந்த மாசு. இன்னொன்று இதனிலும் அடிப்படையான ஒரு காரணம். கிரேக்க நாகரிகமும் இறந்துபட்ட பிற நாகரிகங்களும் தாமாகத் தம் நிலத்தில் வளர்ந்தவை அல்ல. பிற நாகரிகங்களினின்று கிளைத்து வளர்ந்தன.. உள்ளூர வேரற்ற அவ்வொட்டுவளர்ச்சி ஒட்டிய பண்பின் உறுதி குலைந்தவுடன் குலைவுற்றது.

தமிழ் மொழியும் இலக்கியமும் பல வகையில் வெளியிலிருந்து ஏற்பட்ட தாக்குதல்களினால் சீரழிவுற்றும் உள்ளூர உயிர்ப் பண்பு உடையதாயிருப்பதனால் மட்டுமே அழிவுக்கிடம்தராமல் உயிர்ப்பு உரங்கொண்டு போராட வல்லதாயிருக்கிறது. தமிழிலக்கியம் தமிழ் மொழியின் மலர்ச்சி; தமிழ் மொழி, தமிழ் வாழ்வு தமிழ்ப்பண்பு ஆகியவற்றின் மலர்ச்சி; தமிழ் வாழ்வும் பண்பும் தமிழர் வாழ்வின் மலர்ச்சி. தமிழர் வாழுமளவும் அவை வாழும். தமிழ் மொழியும் இலக்கியமும் மீண்டும் தளிர்த்தோங்கும்; வளங்கெடாது.

உண்மைத் தமிழ்ப் புத்திலக்கியம் ஏற்படவேண்டின்-உண்மைத் தமிழ்க் கலைநூல்களும் அறிவியல் நூல்களும் (மொழிபெயர்ப்பின்றித் தமிழ் மொழியிலேயே) எழவேண்டுமானால், தமிழ்ப் பண்பும் மரபும் பிழையாத உயிருடைய இலக்கிய உணர்வு எழ வேண்டும்.

முல்லை - 3

அவள் வேண்டுகோள்

பேராசிரியர் மு. வரதராசனார்

இல்வாழ்க்கை என்றால் கணவனும் மனைவியும் வாழ்ந்து வயிறு வளர்த்தல் மட்டும் அன்று. வயிற்றுப் போராட்டமே மக்களினத்தை அலைத்துவரும் இந்நாளில் இல்வாழ்க்கை இவ்வளவுதான் என்று தோன்றுகின்றது. ஆனால், பண்டைத் தமிழ்நாட்டில் வயிற்றுப் போராட்டம் இவ்வளவு கொடுமையாக இல்லாத நாளில் இல்வாழ்க்கையின் நோக்கம் சிறந்ததாக இருந்தது. பிறர்க்கு உதவியாக வாழ்ந்து குடும்பம் நடத்துவதே இல்வாழ்க்கையாகப் பழந்தமிழர் எண்ணினர். ஆகையால் இந்த நோக்கம் அறிந்த குடும்பத் தலைவர் பொருள்தேடிக் குவித்து விருந்தினரை ஓம்புவதைக் கடமையாகக் கொண்டனர்.

"இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

எனத் திருவள்ளுவர் இந்தக் கடமையை தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வாறு விருந்தோம்பும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருள் ஒரு குடும்பத்தில் குறைந்துவிட்டது. ஆகையால், பொருள் தேட வேண்டும் என்று துணிந்தான் குடும்பத் தலைவன். அக்காலத்தில், பொருள்தேட முனைந்தவர், தமிழ் நாட்டைவிட்டு வடநாட்டுக்குச் சென்று வாணிகம் முதலியன நடத்திப் பொருள் திரட்டிய பிறகு தம் ஊருக்குத் திரும்பி வருவது வழக்கம். செல்வம் வேண்டுமானால் கடல் கடந்து சென்றும் சேர்க்கவேண்டும் என்ற கருத்து 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழியாக ஏற்பட்டது இந்த வழக்கத்தால்தான்.

இந்தக் குடும்பத் தலைவன் கடல் கடந்து போக எண்ணவில்லை. மலைகடந்து பாலைவனத்தின் வழியாகப் போகத் துணிந்தான். அந்தக் கொடிய வழியில் உள்ள இடர் எல்லாம் அவனுக்குத் தெரிந்தனவே. அந்த வழியில் தான் மட்டுமே செல்லத் துணிந்தான். மெல்லியளாகிய தன் மனைவியை அந்தக் கொடிய வழியில் அழைத்துப்போக அவனுக்கு மனமில்லை; அதைப் பற்றி எண்ணவும் அஞ்சினான். எப்படியாவது அவள் தன்னுடன் வராமல் தடுக்கவேண்டும் என்று முயன்றான்.

அவளிடம் சென்று அந்தப் பாலைவழியின் கொடுமையை எடுத்துரைத்தான்.

"அந்தக் கொடிய வழியில் மறவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொலை என்பது ஒரு விளையாட்டு. கொலைக்கு அஞ்சாத அவர்கள், வழிப்போக்கருக்கு என்ன துன்பமும் செய்வார்கள். அவர்கள் மனம் போலவே அந்த நிலமும் வறண்டு தீய்ந்து போயிருக்கின்றது. அவர்கள் நெஞ்சில் ஈரமில்லாதது போலவே அந்த நிலத்தில் நீரும் இல்லை. மழை யில்லாமையே காரணம். மழையில்லாமையால் மான்களுக்கும் உணவு அற்றுப் போய்விட்டது. அந்த மான்கள் வேறொன்றும் கிடைக்காமையால் மரல் பழத்தைத் தின்று உயிருடன் இருக்கின்றன. அந்த அளவிலாவது உயிர் தாங்க மக்களுக்கு இடமுண்டா என்றால் அதுதான் இல்லை. அவர்கள் ஆறலைகள் வரின் அம்புக்கு இலக்காக வேண்டியுள்ளது. மரண வேதனைபட்டு வாடும் நிலையிலும் புலர்ந்து வறண்ட நாவிற்கு நீர் கிடைப்பதில்லை. தண்ணீர் பெறாமல் தடுமாறும் துயரம் பொறுத்ததற்கு அரியது! அந்தத் துயரத்தை ஒருவாறு போக்குவது ஒன்று உண்டென்றால், அதுதான் துன்பத்தால் விடும் கண்ணீர்! அந்தக் கண்ணீரே வறட்சியான நாவை நனைக்கும். இத்தகைய காட்டு வழியில் உன்னைப் போன்ற மெல்லியல் வரலாகாது"

மறையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்(கு) அருஞ்சுரத்(து) ஆரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்(று) அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் காடு -

என்றான்.

இதைக் கேட்ட தலைவி வாழ்வின் உரிமையும் கடமையும் நன்கு உணர்ந்தவள்; இன்பம் துன்பம் என்பவற்றின் உண்மை இயல்புகளைத் தெளிய அறிந்தவள்; புறத்தே உள்ள பொருள்களைவிட அகத்தே உணரும் உணர்வு நிலைகளே இன்பதுன்பங்களுக்கும் காரணம் என்பதை விளங்கக் கண்டவள். அந்தப் பாலை வழியும், அதன் வறண்ட நிலையும், வழிப்போக்கர் படும் அல்லலும் அவளுக்குத் துன்பமாகத் தோன்றவில்லை. கணவனைக் கொடிய வழியில் அனுப்பிவிட்டுத் தான் மட்டும் இனிய வீட்டிலிருந்து வாழும் வாழ்வே அவளுக்குத் துன்பமாகத் தெரிந்தது.

"அன்ப! என் மன நிலை அறியாமல் என்னென்னவோ சொன்னீர்! பல்லாண்டு என்னோடு பழகியும் நீர் இவ்வாறு கூறுவது தகுமோ? வாழ்க்கையில் எது நீங்கினும் நீங்குக. எனக்கும் உமக்கும் இடையே உள்ள அன்பு மட்டும் நீங்குதலாகாது. அந்த அன்பு கெடுமாறு சூழவேண்டா. அந்தப் பாலை வழியில் நேரும் துன்பத்திற்கு யான் துணையாக வரல்வேண்டும்; அதுவே யான் விரும்பும் இன்பம்" என்று தன் கணவனிடம் கூறினாள்.

என்நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்நீர அல்ல நெடுந்தகாய்! எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அது அல்லது
இன்பமும் உண்டோ எமக்கு

(கலித்தொகை 6)

இந்த வேண்டுகோள் அவன் முயற்சிக்கு முட்டுக் கட்டையானது.

முல்லை - 3

பூச்சூட்டல்

வித்துவான் விசு. திருநாவுக்கரசு

நீலவானம். அதை நிமிர்ந்து முத்தமிட நினைக்கும் மலைத்தொடர்கள். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பசுமை. அதன் அருகே கான்யாறு ஓடுகிறது. அம்மலைச்சாரலை அடுத்து எளிமைக்கு எடுத்துக்காட்டாய், பூஞ்சோலையைத் தனக்கு அரணாய்க்கொண்ட ஒரு சிறு குடில். அக்குடிலில் பண்பட்ட உள்ளத்தினராகிய முனிவர் ஒருவர் தம்மொரு மகளுடன் வாழ்கிறார். அமைதி விரும்பும் அவருள்ளத்திற்கு அவர் வாழ்விடமும், சூழலும் உதவியாயின. காற்றையும் நீரையும் பருகி, கனியையும் கிழங்கையும் உண்டு, உள்ளும் புறமும் ஒளிபெற்ற சான்றோரிவர்.

இம்முனிவர்க்கு ஒரே மகள். அவள் ஆடவரில் தன் தந்தையையும், பெண்டிர்களில் தன் தாயையுமன்றிப் பிறரை அறியாதவள். 'அம்மா, விரிசிகை' என்று தந்தை எழுப்ப மலர் பொழுதில் எழுந்து, சுனை நீராடி, குறிஞ்சிமலர் சூடி, கனியும் கிழங்கும் உண்டு வளர்ந்த சிறுபெண் விரிசிகை. அன்றலர்ந்த மலர். இளமை கொழிக்கும் பருவம். தந்தையையன்றி ஆடவனொருவனை அறியாத உள்ளம்.

கிளியொடு பேசுவாள்; மயிலொடு ஆடி மானைத் தொடர்வாள்; சோர்வு நீங்கச் சுனை ஆடுவாள்; அசோக மரத்தில் கட்டிய ஊஞ்சலிலிருந்து மலைவளம் பாடுவாள். இதுவே அவளுக்குப் பொழுது போக்காய் இன்பமான விளையாட்டாய் அமைந்தது.

தந்தையும் மகளும் வாழ்ந்த தனி இடத்தில் இப்பொழுது ஆடவரும் மகளிருமாய்ப் பலர் நடமாடுகின்றனர். என்ன காரணமோ? ஆம், வேந்தர் உதயணர் அரசி வாசவதத்தையோடு இங்கு வந்துள்ளார். தம் கண்ணினும் இனிய நண்பன் யூகியைப் பிறிந்த துன்பத்தை மறக்க அவர் உள்ளத்தில் இன்பம் சேர்க்க அமைச்சர் செய்த முயற்சி இது.

உதயணனும் வாசவதத்தையும் சுனையில் நீராடினாற் போன்ற தண்மையும் இன்பமும் அச்சோலையுட் புகுந்தபோது பெற்றனர். அவர்கள் பின்னே வருகிறாள் காஞ்சனை. இவள்தான் வாசவதத்தையின் உயிர்த்தோழி. இருவரும் குன்றின் பாங்கர் அமர்ந்தனர். சில பேசினர்.

அப்பொழுது காஞ்சனை வாசவதத்தையோடு ஏதோ கண்ணாற் பேசினாள். வாசவதத்தை மலைவளம் காண விரும்புவதாக உதயணனிடம் விடைபெற்றது அதன் விளைவுபோலும். அவர்கள் பிரிகின்றனர். யூகியைப்பற்றி நினைவோட வேந்தர் உதயணர் சிலையாய் அசையாதிருக்கிறார். அவ்வழியே வந்த விரிசிகை இதைக் காணுகிறாள். அவர் வடிவம் அவள் உள்ளத்தில் இன்ப உருக்கொண்டது.

'இவர் யார்? தந்தை பிறந்த இனத்தில் ஆ! இப்படியும்.. அழகுண்டோ? இவரோடு நான் .. எப்படி... பேச்சுத் தொடங்கலாம்...' இது விரிசிகையின் உள்ளம். எங்கோ அவள் உள்ளத்தின் ஆழத்திலிருந்த பருவ எண்ணம் அரும்பீன்றது. 'இதோ'.. என்று மெல்ல அடிமேல் அடிவைத்து அதைவிட்டுச் செல்லுகிறாள். குறிஞ்சி, முல்லை, குருக்கத்தி, நாகம், நந்தியாவர்த்தம் முதலிய மலர்களைப் பறித்துக்கொண்டு உதயணனிடம் வருகிறாள். பேதை விரிசிகை பேசுதற்குக் காரணம் கண்டுவிட்டாள். 'ஐய, இந்த மலர்களைப் பிணையல்களாகத் தொடுத்துத் தந்தால் யானும் என் பாவையும் அணிந்துகொள்வோம்'. என்று மலர்களை நீட்டினாள்.

விரிசிகையின் பேரழகும் தேன்மொழியும் 'வனமகளோ' என்று எண்ணச் செய்தன. உள்ளம் தெளிந்து முனிவர் மகள் என்று உறுதி செய்தான் உதயணன். 'ஓ' அழகான மலர்!' என்று தன் மேலாடையை விரித்து வாங்குதற்கு நீட்டினான். விரிசிகை அந்த நீல நிற ஆடையில் வண்ணமலர்களைச் சொரிந்தாள்.

மாலை தொடுப்பதில் மன்னன் - மன்னன்தான்! எந்த மலரை எதை அடுத்துவைத்தால் வனப்பாகுமோ அதை அறிந்து மாலை தொடுத்தான். மலராய்ந்து தொடுத்தான். அவளுக்கென்றும் அவள் பாவைக்கென்றும் சொல்லிக்கொடுத்தான். பெற்ற விரிசிகை தன் கூந்தலில் அணிந்து கொள்ள அறியாளாய் வருந்த நின்றாள். அவள் கள்ளமற்ற உள்ளத்தை உதயணன் நொடிப்பொழுதில் அறிந்தான். 'இங்கே வா' என்று அழைத்தான். அருகே இருக்க நீல நாகம் படம் விரித்தாற்போல, அவள் கூந்தலில் ஒப்பனை செய்தான். அதற்கேற்ப அவள் காதணியைச் செம்மைப்படுத்தினான். 'மெல்லச் செல்க' என்று விடுத்தான். இவை யனைத்தும் விரிசிகை உள்ளத்தில் இன்பம் தேக்கின. 'என்ன அழகான மாலை தொடுத்தான்! அதைவிட என்ன அழகாகச் சூட்டினான்.' 'இங்கே வா' 'மெல்லச் செல்' இச் சொற்களில்தான் எத்தனை இனிமை! இந்தச் சிந்தனையோடு செல்லுகிறாள் விரிசிகை. அவள் பின்னழகு வெள்ளம் பருகுகிறான் உதயணன்.

பூங்கொடி ஒன்று நடைபெற்று வருவதுபோல மலரும் தளிரும் ஏந்தி அதோ வருகிறாள் வாசவதத்தை. அவள் வந்த வழியே விரிசிகையைக் காலம் இழுத்துச் சென்றது.

விரிசிகையின் பொன்னொளி அவள் கண்ணிற்பட்டது. தன்னையும் வெல்லும் இயற்கை அழகு, அவளிடமிருப்பதை அறிந்தாள். அதை மிகைப்படுத்தியது மலர் சூட்டிய செயற்கை அழகு. சிந்தித்தாள்.

இங்ஙனம் புனைவதிலும், ஒப்பனை செய்வதிலும் வல்லவர் உதயணரே என்று நினைத்தபோது அவள் நெஞ்சு புண்ணாயிற்று. நெஞ்சில் வந்து பின்னும் இந்த நிகழ்ச்சி வருத்த கையிலிருந்த மலரையும், தளிரையும் வீசி எறிந்தாள். தளிரும் மலரும் உதிர்ந்த கோடைகாலத்து வெறுங் கொடிபோலானாள் வாசவதத்தை.

ஆமாம்.... அந்தக் கவிஞனுக்கு என்ன பரிசு கொடுத்தீர்கள்...

ஏன்? அப்படி அதை நினைவில் வைத்துக் கேட்கிறாய். நீங்கள் சொல்லுங்கள்.... பிறகு காரணத்தைக் கூறுகிறேன்.

பொன்னாடையும் நூறுபொன்னும் கொடுக்கப்பட்டது. காரணத்தைச் சொல்.

உங்களைப் 'பெருமகன் மார்பில் பிரியாது உறையுமோர் திருமகள் உளள்' என்றபோது எனக்கு வருத்தமாகவும் அத்தனை பெரிய சபையில் கேட்க நாணமாகவும் மிருந்தது.

ஓ! அதையா சொல்லுகிறாய். காத்தற் கடவுளாகிய திருமாலை அரசர்களாகக் கூறுவது வெறுங்கவி மரபு என்று நகையாடவேண்டிய திருக்க நினைத்து நீ ஏன் வருந்துகிறாய் என்று தேற்றத் தெளிந்தாள் அன்று வாசவதத்தை. உதயணண் மார்பில் திருமகள் இருக்கிறாள் என்பதைக் கேட்கப் பொறாத உள்ளம் இந்நிகழ்ச்சி கண்டு எப்படிப் பொறுக்கும்.

காஞ்சனை மூலமாய் இதை உதயணன் அறிந்தான். ஓடோடிவந்தான். இனிய கூறி அணிகளைத் திருத்தினான். 'நீ இங்ஙனம் சினந்தால் அதுவே என் உயிருக்கு இறுதியாகும்' என்று அச்சுறுத்தினான். எல்லாம் வீணாயின. இந்தச் சமயத்தில் தம்முள் போர் தொடுத்த குரங்குகளில் ஒன்று அஞ்சி ஓடி அவர்கள் முன் குதித்தது. இன்னது செய்வதென்றறியாத வாசவதத்தை ஓடி உதயணன் மலர்க்கரத்தைப் பற்றினாள்.

ஊடல் கூடலாயிற்று!

முல்லை - 3

நாடகக் கலை

சி.ஆர். மயிலேறு

நாடகத் தமிழை எடுத்துக் கொள்வோம். இதைப் பற்றிக் கூறியிருப்பவைகளைக் கூர்ந்து பார்த்தால் வியப்பாயிருக்கிறது. அவ்வளவு நுணுக்கங்களும் பாகுபாடுகளும் நாம் காண்கிறோம். நாடக முறையில் என்னென்ன செய்ய முடியுமோ-கூடுமோ அவைகளனைத்தையும் கூறியிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஒன்றையும் ஆசிரியர்களின் கற்பனா சக்திக்கோ-சொந்த முயற்சிக்கோ விடவில்லை. கதைப்போக்கு-கதை முடிவு-நடிகர்கள்-நடை-படிப்பினை-மெய்ப்பாடுகள் முற்றிலும் வகுக்கப்பட்டிருந்தன. ஆசிரியன் அவைகளிலிருந்து தனக்கு வேண்டியவற்றை எடுத்துப் பொறுக்கி சம்பிரதாயப்படி எழுத வேண்டியதுதான் பாக்கி. மிகவும் வியக்கத் தக்க முறையில் அவன் வேலை எளிதாக்கப்பட்டிருந்தது. நாடகத் துறையில் எவ்விதப் புதுமுயற்சி செய்தாலும் அதற்கெல்லாம் இலக்கணம் நம் பழைய நாடகவியல் நூற்களில் இருக்கிறது. மேலை நாட்டு இலக்கியங்களில் தற்காலத்தில் ஒற்றை யங்க நாடகங்களென்று மிகவும் வெளி மதிப்புப் பெற்றிருக்கின்றன. தற்கால அவசர நாகரிகத்திற் கேற்ற அவசரமாக மகிழ்விக்க ஏற்ற நாடக முறை. அதற்கு ஏற்றதாகப் பெயரும் "அங்கம்" என்று கொடுத்திருந்தார்கள். அதைப் பற்றிய முழு விபரங்களையும் கூறும் பொழுது,

"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொள மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தாற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள் பாத்திரமா வயங்குறு வதுவே
யங்கமென்ன வறிதல் வேண்டும்"

இப்பொழுது அவர்களின் நாடகத்தைப் பற்றிய சில முக்கியமான இலக்கணங்களைக் கவனிப்போம். நாடகமென்றால் முதலில் கதை நினைவிற்கு வருகிறது, கதையின்றி நாடகமேது? ஆங்கிலத்தில் இதற்குத் தான் Plot என்று சொல்லுவார்கள். இந்த நாடகக் கதையை மூன்று பிரிவாகப் பிரித்திருந்தார்கள். பொய்யுரை-மெய்யுரை-புனைந்துரை.

பொய்யுரை என்றால் ஆசிரியன் தானாகவே புதிதாக ஒரு கதை உண்டாக்கி (அது உலகத்தில் முன் ஒருவராலும் எழுதியிருக்கக் கூடாது- நிகழ்ந்திருக்கவுங் கூடாது) அதை உண்மைபோற் காண்பிப்பது. இவ்வளவு எளிதாகக் கூறிவிட்டாலும் எவ்வளவு கடினம் இப்படிச் செய்வது. இதைத்தான் Original Plot என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். உலகம் புகழும் ஆங்கில நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) இந்த வம்புக்குப் போகவே இல்லை. சொந்தக்கதையாய் ஒன்று கூடச் செய்யவே இல்லை! மெய்யுரை என்பது உலகத்தில் உண்மையாய் நடந்திருப்பதை எல்லோரும் அறிந்ததைத் தெளிவாய் எடுத்துரைப்பது. அதாவது வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து நாடகப் படுத்துவது. இதை Historical Plot என்று கூறுவார்கள். புனைந்துரை என்றால் உலகத்தில் நடந்ததையோ-அல்லது நடந்ததாகக் கேட்டதையோ ஆதாரமாக வைத்துக்கொண்டு, அதனொடு சிறிது ஆசிரியன் தன் சொந்தச் சரக்கையும் சேர்த்து எழுதுவது. அப்படி ஏதாவது இருந்தால்,

"உள்ளோன் றலைவனா வுள்ள துரைத்தலு
மில்லோன் றலைவனா வில்ல திசைத்தலு
முள்ளோன் தலைவனா வில்ல துரைத்தலு
மில்லோன் தலைவனாயுள்ள தியம்பலும்
பெருமைசால் யோனிப் பெயரினவாகும்"

இதனுடள் தற்கால 'Realistic Drama', 'Fantasy' எல்லாம் அடங்கியிருக்கின்றன என்பதைக் காணலாம்.

நாடகத்திற்குள் நாடகம் "Play Within Play" என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்களே, Hamlet-இல் முக்கிய பகுதி; அதுவும் முற்காலத்திலே யோசிக்கப்பட்டிருக்கிறது; பெயர் உள் நாடகம் என்றார்கள். உள் நாடகம் பத்து அங்கம் கொண்ட பெரிய நாடகங்களுக்கு 'மா நாடகம்' என்றார்கள்; மார்லோவின் 'டாம்பூர்லேன்' என்ற நாடகம் பத்து அங்கம் கொண்ட ஒரு மா நாடகமாகும். மூன்று நாடகம் ஒன்றன்பின் ஒன்றாய் ஒரு கதையை விளக்கினால் அதற்குப் பெயர் 'முந் நாடகம்' என்றார்கள். ஆங்கிலத்தில் 'Trilogy' என்று சொல்லுவார்கள். இதற்கு எடுத்துக்காட்டு ஷேக்ஸ்பியர் எழுதிய இரண்டாம் ஹென்றி பற்றிய நாடகங்கள். இவைகளுக்கு இலக்கணம் நம் நாட்டிலேயே பழைய காலத்தில் வகுத்திருந்தார்கள். நாடக முடிவு இருவகை. இன்பியல் (Comedy) துன்பியல் (Tragedy) சாதாரண மாய் துன்பியல் நாடகங்கள் எழுதப்படவில்லை யென்றாலும் அவைகளையும் யோசித்து வைத்திருந்தார்களென்று தெரிகிறதல்லவா? சிலப்திகாரத்தின் முடிவு இந்த இறுதியை யன்றோ நிரூபிக்கின்றது. மேலும் விருத்திகள் நான்கெனவும், கூற்றுவகைகளும் நான்கென்றும், கூத்து எழுவகையென்றும், ஒன்றையும் பாக்கிவிடாமல் சொல்லியிருந்தார்கள்.

திரைப்பட (சினிமா) போட்டியால் இப்பொழுது வரவர நாடகங்கள் எழுதப்படுவதோ - நடிக்கப்படுவதோ அரிதாய் விட்டது. இந்நிலையில் வானொலி (ரேடியோ) வந்தது நாடகத்திற்கு மிகவும் உதவியா யிருக்கிறது. பெரிய நாடகங்களும், சிறிய நாடகங்களும் நல்ல முறைகளில் எழுதப்பட்டு நன்றாக நடிக்கப்படுகின்றன. மக்களும் இவைகளை நுகர்ந்து பாராட்டுகிறார்கள். எழுத்தாளர்களும் புதுப்புதுக் கற்பனைகளை உண்டாக்கிக் கொடுக்கிறார்கள். ஆகவே, நாடகத்திற்கு ஓர் எதிர்பாராத விதத்தில் உதவி கிடைத்திருக்கிறது. இந்த உதவியை நல்வழிகளில் பயன்படுத்தினால் நாடகக் கலையும் நன்றாகச் சிறந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

நாடகம் நுகர்வோர் தம்முள் ஆங்காங்கே அவைகளை அமைத்துக் கொண்டு நல்ல இலக்கியச் சுவையுள்ள நாடகங்களைத் தயாரித்து நடித்துக் காட்டுதலும் அவசியம். இயற்றப்படும் நாடகங்கள் தற்கால சமூகத்திற்கும் மக்கள் மனப்பான்மைக்கும் தகுந்தவாறு, நடிகர்கள்-உரையாடல்-கதை முதலியவைகளை அமைத்து எழுதப்படவேண்டும். வேறு இலக்கியங்களிலிருந்து எண்ணங்களை எடுத்தால் அவைகளை நம்முடைய சமுதாயத்திற்கும், வழக்கங்களுக்கும் தகுந்தமாதிரியாக மாற்றி அமைத்து எழுதவேண்டும்.

மக்களின் விருப்பு - வெறுப்புத்தான் இப்பொழுது கவனிக்கப்படவேண்டும். மீண்டும் நம் நாடகமானது தனது பழைய நிலையை - புது முறைகளை அடையுமாறு முயற்சிப்போமாக!

முல்லை - 3

இன்பம்

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

இன்பம் உவகையின் வேறுபட்டது. புற நிகழ்ச்சி தரும் பொறியுணர்வால் உள்ளத்தெழும் மகிழ்ச்சியே உவகை யெனப்படும்.

உவகையின் மிகுதியே களிப்பு. இவற்றிற்குப் புறநிகழ்வும் பொறியுணர்வும் இன்றியமையாதன. இவை போலன்றிப் புறநிகழ்வும் பொறியுணர்வும் வேண்டாது உள்ளத்தே ஊறிச் சுவைதரும் உணர்வே இன்பமாகும். உவகையும் மகிழ்ச்சியும் ஒரு பொருள் குறிக்கும் இரு சொற்கள். உவகையூட்டும் புறப்பொருள் மறைவாலும் அதை நுகரும் பொறிநிலையின் புலனுணர்வுகளின் குறைவாலும், மகிழ்ச்சியின் நேர்மை மாறுபடும்; இன்பமானது, உயிரின் இயலாய் அறிவின் தூய்மையில் விளைவதாகலின், ஓய்வு ஒழிவின்றி என்றும் ஒன்றுபோல் நின்று வளரும்.

புலனுணர்வால் புதிது புதிதாய் மாறும் மகிழ்ச்சி மனத்தில் நிலையாது. கணந்தோறு மாறும் உணர்வில் உண்டாகும் உவகையானது, நிலவொளி போலக் குறைந்தும் வளர்ந்தும் அறவே மறைந்தும், ஒரு நிலையின்றி பலபட மாறும். அன்றியும் தனக்குரியதின்றி, ஞாயிறு கொடுக்கக் கொண்டொளிரும் திங்கள் ஒளிபோல, பொறித்துணையால் புலத்துறும் புறநிகழ்வு, உள்ளத்தில் விளைக்கும் உணர்வே மகிழ்வின் விதையாம். இரவி ஒளி போல, ஒருவர் ஆன்ற அறிவிற் றோன்றும் இன்பம் குன்றாமல் என்றும் நின்று திகழும், சிறிதிலகி பிறகு விலகும் திங்களொளியால் உலகிருள் பெருகி விரியும்; அதுபோல மகிழ்வு நிலை மாறி அகம்புகு துன்பம் மிகுவது இயல்பாகும்.

மகிழ்வு அகந்தளிராகும்; இன்பம் மன மணக்கும் வாடா மலராகும். மகிழ்வு அளவிறந்து மிகுந்த உணர்வின் வெறியே களிப்பாகும். அறிவடங்கி அறிவுணர் வொடுங்கிப் பொறிப் புலனால் விளையும் வெளியே களி வளர்க்கும் நறவு ஆகும்.

“தீதொரீஇ நன்றின்பாலுய்ப்பதறிவு” அது மக்களின் சிறப்பியல்பு. விருப்பூட்டும் உணர்வு வழி யொழுகி உவகைபெறும் இயல்பு, விளங்குறு மாந்தர்க்கும், வேறு ஏனைய உயிர்கட்கும் ஒத்த பொது உடைமை.

அறிவையும் தூய உணர்வையும் அயர்த்தவர் களிப்பு, கயவருக்கன்றி, உயரும் உயிர்வேண்டா அது, உள்ளழிவின் விளைவு.

மக்கட் பண்பாகும் ஒழுக்கத்தின் ஊன்று கோலாய் நன்று தீதுணர்த்தும் அறிவினை மாய்த்து அறம் வளர் உணர்வையும் ஒய்த்து வளரும் களிமயக்கம். "ஈன்றாள் முகத்தேயு மின்னாதால்", அதனைச் சான்றோர் வெறுப்பது வியப்பில்லை. களியே, "மெய்யறியாமை" என்றும் நாணழிக்கும் பேணாப்பெருங்குற்றம் என்றும் இறவா அறக்குறள் கூறுதலானும் களியின் இளிவு தரப்படும். மகிழ்வினும் இழிந்த களிப்பை இன்பமென்பர் கயவர்.

இனி வீடு பேறுதவும் நிலைப் பயனை 'ஆநந்தம்' என்பர் வட நூலார். ஆனால், அவர் கருதும் 'ஆநந்தம்' தமிழர் விழையும் இன்பமாகாது என்பது, அவற்றின் இயல் வேறுபாட்டை ஆய்வார்க்குத் தெளிவாகும்.

உவகை-உவர்ப்பு என்ற இரண்டாலும் துன்பம் ஏற்படுமாதலின் அவ்விரண்டு மில்லா நடுநிலையே 'ஆநந்தம்' என்பார் இயல் நூலார். அறிவுணர்வு அழிந்தவை அறவே இறந்த மனவெறு நிலையை 'ஆநந்தம்' என்பது அவர் கொள்கை. முதலும் முடிவும் இன்றி அறிவினியல்பாகி மக்கள் உளத்து என்றும் வளரும் உணர்வை இன்பம் என்பது தமிழ் மரபு.

'ஆநந்தம்' வெறுநிலை; இன்பம் உள்ளூறும் நிலையுணர்வு. இன்மை உண்மைகளின் தன்மையைத் தெளியாமல் இவ்விருவர் கொள்கையும் ஒன்றெனல் அறிவுக்கு ஒவ்வாத் தவறாகும்.

முல்லை - 4

தமிழ்க் கற்பகம்

திரு. வி. க.

'திருமகள் உள்ள இடத்தில் கலைமகள் இரான்; இவள் உள்ள இடத்தில் அவள் இரான்' என்ற மொழி எப்படியோ பிறந்தது. அம்மொழியைப் பொய்ப்படுத்தியவர் கா. ரா. நமசிவாய முதலியார். முதலியார் நூலாசிரியர். போதகாசிரியர்; அவர்தம் நூலும் போதனையும் பாலர் வகுப்பு முதல் பி.ஏ. வகுப்புவரை படிப்படியே பயன்பட்டன. இக்காலத் தமிழ் நடைக்குத் தந்தையாராகிய ஆறுமுக நாவலர்க்குப்பின் அந்நடையை வளர்த்தவர் நமசிவாய முதலியார்.

முதலியார் ஐரோப்பிய முறையில் உடை அணிவார். காரணங் கேட்டால் அவர் 'இவ்வுடையில் பண்டிதற்கு மயக்கமுண்டு; மதிப்பும் உண்டு. அம் மயக்கையும் மதிப்பையும் போக்க வேண்டியப் பண்டிதரினத்தைச் சேர்ந்த யான் இவ்வுடை அணிகிறேன். உங்களைப் போன்ற பண்டிதர் ஒருவர் ஐரேர்ப்பிய உடை அணிகிறாரெனில் அவ்வுடையிலுள்ள மயக்கமும் மதிப்பும் பண்டித உலகினின்றும் ஒழியுமல்லவோ?' என்று வேடிக்கையாக விளம்புவர்.

வெஸ்லி கல்லூரித் தலைமையாசிரியர் பதவியை யான் பெற முயன்றவர் சிலர். அவருள் நமசிவாய முதலியாரும் ஒருவர். பாடபுத்தகங்கள் எழுதித் தம்மைப்போலப் பொருளீட்டுமாறு அடிக்கடி என்னை முதலியார் தூண்டுவார். அத்தூண்டுதலுக்கு யான் எளிமை யாவதில்லை. பின்னே அவர் வலியுறுத்தத் தொடங்கினார். வலியுறுத்தல் எனது நிலையைச் சிறிது குலைத்தது. எளிமை வாழ்க்கைக்கென்று என்னைப் பிறப்பித்த இயற்கை அன்னை பொருள் முயற்சியில் என்னைத் தலைப்படவிடுவளோ? அவள் என்னைத் தடுத்தாட்கொண்டாள். எப்படி? சுய ஆட்சிக் கிளர்ச்சியிலே என்னைப் புகச் செய்தாள். யான் அரசியல் உலகில் புகந்ததை நமசிவாய முதலியார் விரும்பவில்லை.

பிரஸிடென்ஸி கல்லூரியினின்றுஞ் சாமிநாத ஐயர் விலகியபோது, யான் 'தேசபக்தன்' ஆசிரியனாயிருந்தேன். அவ்விடத்தில் என்னைச் சேர்க்கச் சிலர் முயன்றனர். அவர்தம் முயற்சியைக் கேள்வியுற்ற நமசிவாய முதலியார் என்னை நெருக்கினர். 'யான் ஒரு கல்லூரியில்

போதகாசிரியனாயிருந்தே பத்திரிகாசிரியனாக வந்துள்ளேன். மீண்டும் யான் பழைய வேலைக்கு ஏன் போதல் வேண்டும்? தேச சேவையே எனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது' என்றும் மறுத்தேன். இது பல திறப்பணிகளில் மூழ்கிய என் மனத்துள் எங்கேயோ ஒரு மூலையிற் போய்ப் படிந்தது. பல ஆண்டு கடந்து பிரஸிடென்ஸி கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் மணிமேகலை என்ற பொருள்பற்றி யான் பேசியபோது தலைமை தாங்கிய நமசிவாய முதலியார் பழைய நிகழ்ச்சியை நினைவூட்டி வருந்தினார். அவர்க்குத் தமிழ்ப் போதகாசிரியர், வேலையே சிறப்பாகத் தோன்றியது.

ஆண்டுதோறும் தைத்திங்களிலே பொங்கல் விழாவிலே தமிழ்த் திருநாள் ஆங்காங்கே இந்நாளில் கொண்டாடப் படுகிறது. இக்கொண்டாட்டத்தை முதல்முதல் தொடங்கியவர் கா.ரா. நமசிவாய முதலியாரே யாவர். பின்னாளிலே அக்கொண்டாட்டம் என்னையும் வயப்படுத்தியது. தமிழ்த் திருநாள் கொண்டாட்டத்தைக் குறித்து நாங்கள் கட்டிய கோட்டை பெரிது. எல்லாம் மானதமாய்ப் போயின.

வேலைக்கென்று தம்மிடம் எவர் வ்ரினும் அவர்க்கு முகமலர்ச்சியுடன் நமசிவாய முதலியார் ஆதரவு நல்குவார்; அவர் பொருட்டுச் சென்னையை வலம் வந்தவண்ணமிருப்பார். பெட்ரோல் செலவுமீது முதலியார் கருத்துப்படிவதில்லை. ஒருநாள் யானும் வேறு சிலரும் நமசிவாய முதலியாரின் 'கடலக'த்தில் பேசிக் கொண்டிருந்தோம் அவ்வேளையில் 'தொல்லையில் புரண்டு புரண்டு மனமுடைந்த முதல் வகுப்பில் தேறிய ஒரு வித்துவானைக் 'கடலக'ங்கண்டது. வித்துவான் வாழ்வு இரங்கத்தக்கதாயிருந்தது. 'உமக்கு வேலை கிடைக்கும் வரை இவ்வகத்தில் நீர் இருக்கலாம்' என்றார் முதலியார். 'ஊரில் தாய் தந்தையர் இருக்கின்றார்' என்றார் வித்துவான். 'அவர்க்கு மாதந்தோறும் எவ்வளவு தேவையாயிருக்கும்' என்று முதலியார் இரக்கங்கேட்டது. 'பதினைந்து ரூபா செலவாகும்' என்ற பதில் ஏழ்மையிலிருந்து பிறந்தது. அத்தொகை திங்கள்தோறும் முதலியாரால் அனுப்பட்டுவந்தது. நமசிவாய முதலியாரை ஒரு *தமிழ்க் கற்பகம்* என்று கூறுவது பொருந்தும்.

முல்லை - 4

இலக்கிய நோக்கம்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
த.பு. நவநீத கிருஷ்ணன்

அ.சி. : நண்பர் நவநீதகிருஷ்ணன், வாருங்கள். வணக்கம்.

த.பு.ந. : டாக்டர் செட்டியார், வணக்கம்.

அ.சி. : பொதுவாக உங்களை வெளியில் அதிகமாய்க் காணுவதில்லை. நூல்களைப் படிப்பதிலேயே உங்கள் மகிழ்ச்சி முழுவதையும் அடைந்து விடுகிறீர்கள் போலும்!

த.பு.ந. : ஆம். நல்ல இலக்கிய நூல்களைப் படிப்பதால் நான் இன்பம் பெறுகிறேன். தமிழ் மறுமலர்ச்சியின் விளைவாய் இக்காலத்தில் பலவகை வெளியீடுகள்தான் மலிந்துள்ளனவே.

அ.சி. : உண்மையே. ஆனால், அவற்றில் பல அறிவு புகட்டும் படியாய் இலவே. விகடத் துணுக்குகள், வேடிக்கைக் கதைகள் இன்னோரன்னவையே நிறைந்துள்ளன. அவற்றால் யாது பயன்? அந்த அளவில் நில்லாது அறிவைப் புகட்டும் நோக்கம் தலையாயதாய் இருப்பதாலேயே, தமிழ் இலக்கியம் விரைவாய் முன்னேறாமலுள்ளது என்ற கருத்தையும் பரப்பும் வகையில் அவை இருக்கின்றன. அக்கருத்தைப் பலர் வெளிப்படக் கூறுவதையும் நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

த.பு.ந : அக்கருத்து சரிதான் எனவே எனக்குத் தோன்றுகிறது, பெரும்பாலோர் அறிவை நாடிப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதில்லை; பொழுது போக்காய்ப் படிப்பவர்களே. அந்நோக்கமுடையோர் மகிழ்ச்சியையே விரும்புவார். அறிவு, நீதி என்று அடித்துச் சொல்லும் நூல்கள் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அப்படி நினைப்பது நியாயந்தானே?

அ.சி. : மகிழ்ச்சி விரும்பத் தக்கதே. மனக்கசப்போடு இலக்கியம் கற்றல் வீணே. ஆனால், போதனையே வேண்டாம் என நீங்கள் கூறமாட்டீர்களே?

தபுந. : அப்படி நான் சொல்ல மாட்டேன். அறிவே வேண்டாமென்று விலக்கினதுதான் நல்ல இலக்கியமாகும் என நான் கூறவில்லை. நான் படிக்கும் நூல் எனக்குச் சலிப்புத்தரக் கூடாது என்றே நான் சொல்லுகிறேன்.

அ.சி. : இலக்கியத்தால் முக்கியமாய்ப் பெற வேண்டுவனவற்றில் மகிழ்ச்சியும் ஒன்றாகும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மகிழ்ச்சியினிடையே போதனையும் கூறப்பட்டால் நீங்கள் தடை செய்ய மாட்டீர்களே?

தபுந. : மாட்டேன். மகிழ்ச்சியுடன் அறிவும் கிடைத்தால் நல்லது தானே. போதனை முக்கியம், நீதி புகட்டுவதே முதல் நோக்கம் ஆதலால், சுவையில்லாதபடியும் அறிவு புகட்டும் நூல்களே சிறந்த இலக்கியங்களாகும் என்ற கருத்தையே நான் எதிர்க்கிறேன்.

அ.சி. : சுவை தராதவை வேண்டத்தக்கவை அல்லதாம். நீங்கள் சிலப்பதிகாரம் கற்றிருக்கிறீர்கள். அதன் ஆசிரியர் அக்காவியத்தை எழுதும்போதே சில குறிக்கோள்கள் வைத்துக் கொண்டு எழுதினார் என்பதை அறிவீர்கள். "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உறுத்து வந்தூட்டுமென்பதும்" ஆகியவற்றை விளக்கிக் காட்டச் சிலப்பதிகாரம் எனும் 'பாட்டுடைச் செய்யுளை நாட்டுதும் யாம்' என்று இளங்கோவடிகள் கூறியிருப்பதை அறிவீர்கள். இந்நீதியினை உரைக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்டதால் சிலப்பதிகாரம் மகிழ்ச்சியளிக்கவில்லை, அது நல்ல இலக்கியமன்று என்று கூறத்தக்கதா?

தபுந. : சிலப்பதிகார வகுப்பில் அந் நூலைக் கற்றேன். முதலாவதாக அப்படிப் பள்ளிப் பாட முறையில் அறிவுறுத்தும்படியாயிருப் பதுதான் இலக்கியத்தின் சிறப்பு என்ற கருத்து எனக்குப் பிடிக்க வில்லை. நாமாகவே படித்து மகிழக்கூடிய நூல்களே சிறந்தவை என்பது என் முடிவு. சுப்பிரமணிய பாரதி அதை "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்றார். அப்படி அந்நூல் உணர்ச்சி ஊட்டி உள்ளங் கவர் வண்ணமா யிருப்பதாலேயே சிறந்த இலக்கியமாகுமே யல்லாது பலவகை நீதிகளை அறிவுறுத்தும்படியாய் இருத்தலைப் பொறுத்து மேன்மையடைந்ததாகாது.

அ.சி. : நவநீதகிருஷ்ணன் அவர்களே, சிலப்பதிகாரம் நீதிகளை எடுத்துரைப்பதாய் இருந்தும் நல்ல இலக்கியமாகும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வதால், இலக்கியங்கள் நீதி புகட்டக் கூடாது என்று வாதாடமாட்டீர்கள் என நினைக்கிறேன். முற்காலத்தில் எல்லாம், நேரே நீதியைப் புகட்டினால் மக்கள் உட்கொள்வதில்லை. அதனாலேதான் புலவர்கள் சில நீதிகளைச் சிற்சில கதை வகையால் விளக்கினார்கள்.

த.பு.ந. : நான் முன்பே கூறினபடி அறிவு விளக்கத்தை நான் அடியோடு வெறுக்கவில்லை. இலக்கியத்தின் முக்கிய நாட்டம், அழகுணர்ச்சி யூட்டி மொழிச் சுவை தரும்படியிருத்தலே. அழகையும் சுவையையும் புறக்கணித்துவிட்டு எவ்வளவு சலிப்புத் தருவதாயினும், அறிவுறுத்தலையே முக்கியமாய்க் கொண்டது இலக்கியமன்று. சமயம், தத்துவம், சரித்திரம், பொருளியல், விஞ்ஞானம் முதலான கலை நூல்களினின்று அறிவைப் பெறலாம். அவற்றின் நோக்கம் அறிவுறுத்தல் என்றிருப்பது தக்கது. இலக்கியத்தின் குறிக்கோள் சுவை பொழிந்து மகிழ்வித்தல் என்பதாகவே இருத்தல் வேண்டும் என்பது என் வாதம்.

அ.சி. : நானும் ஒப்புக் கொள்கிறேன் அறிவினைப் பலதிறச் சாத்திரங்கள் புகட்டுதல் கூடுமென்பதை. ஆனால், சாத்திரங்கள் கற்றுத்தேர்ந்த வல்லோர்க்கே மேலும் புகட்டும். நல்ல படிப்புப் பெறாத மக்களுக்குச் சாத்திரங்களாற் பயன் விளையும் என எதிர்ப்பார்த்தல் தக்கதாகாது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். சிவஞான சித்தியார் ஆகிய சாத்திரம் "எத் தெய்வம் கொண்டீர். அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் வந்திடுவார்" எனக் கூறுகிறது. திருமூலர் இயற்றிய திருமந்திரம், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனப் பேசுகிறது. கடவுள் யாவர்க்கும் முடிவில் ஒருவரே என்ற இக்கருத்தை ஒருவர் கதையினாற் காட்டலாம்; ஒருவர் நாடகத்தாற் காட்டலாம்; ஒருவர் புதினத்தாற் காட்டலாம். அவ்வாறு காட்டுவதில் வெற்றி பெறுகிறவரே சிறந்த இலக்கியம் தந்தவர் என மதிக்கப்படுவார்.

த.பு.ந : அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அறிவு என்ற நல்மருந்து கசக்கும், ஆகையால் அதை இலக்கியச் சுவை என்ற தேனில் கலந்து தரவேண்டும் என்பது ஏமாற்றாகும் எனவே நான் கூறுவேன். இலக்கியச் சுவையைச் சிறப்பாக்கும் முறையில் அறிவுப் பொருளை இணைத்தலே ஏற்றதாகும் என நான் எண்ணுகிறேன்.

அ.சி. : ஆனால், பாமர மக்களுக்கு அப்படித்தானே செய்ய வேண்டியிருக்கிறது.

த.பு.ந. : பண்டை இலக்கியங்கள் இருக்கட்டும். சுப்பிரமணிய பாரதியாரின் ஆக்கங்களைக் கருதுவோம். 'பாஞ்சாலி சபதம்' என்ற செய்யுட் கதை எவ்வளவு அழகுடன் விளங்குகிறது. அதைப் படிக்கும் போது மெய்மறந்த உணர்ச்சி உண்டாகிறது. அதனாலே அது நல்ல இலக்கியமாகும்.

அ.சி. : ஆயினும், அவர் பாடிய குயில் பாட்டில் ஏதோ ஓர் அறிவுரை மறைபொருளாய் வைக்கப்பட்டிருக்கிறது. தானே பெரியவன் என செருக்கத்திருக்கும் மனிதனுக்கு உவமையாகக் கூறப்படும் காளை ஒரு விலங்குதானே எனக் குயில் காளையைப் பார்த்துக் கூறுவதைப் போல வைத்திருக்கிறார் பாரதியார்.

தபுந. : ஆனால், அவர் 'காதல் போயின் சாதல்' என்ற பல்லவியை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி நீதி கூறல் பொருத்தமாயில்லை எனவே நான் கூறுவேன். உங்கள் கருத்தென்ன?

அ.சி. : நண்பர் நவநீத கிருஷ்ணன், பாரதியார் வாழ்ந்த காலத்தில் உண்மைக் காதலைச் சுட்டெரிக்கும் மக்கள் பலர் இருந்தனர். சங்க காலத்திலேயே பெருமைப்படுத்தி உரைக்கப்பட்ட அன்புக் காதல் - ஐந்திணைக் காதல்-தீயதென இவர் காலத்தில் மதிக்கப்படுவதாயிற்று. அது கண்டு பொறாதவராய் "பெண் விடுதலை" என்ற தலைப்பிலேயே பாடியுள்ளார். அப்படி நேராகப் பாடுவது ஏற்காது என்று போலும் குயில் என்ற உருவகக் காவியத்திலும் அடிக்கடி குயில் அவ்வாறு கூறுவது போல எழுதியுள்ளார். மேலும் சாதிச் சண்டை கூடாது என்பதை அழகாகப் பாரதியார் விளக்கி யிருப்பதைக் கண்டிருப்பீர்கள்.

வெள்ளை நிறத் தொரு பூனை-எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்ற திப் பூனை-அவை
பேருக்கொரு நிறமாகும்
சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி-வெள்ளைப்
பாலினிற மொரு குட்டி.

எந்த நிறமாயிருந்தாலும் அவையெல்லாம் பூனைக் குட்டிகள்தாமே என்பது போல் வைத்துச் சாதிபேத உணர்ச்சியைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் அல்லவா?

தபுந. : டாக்டர் செட்டியார் அவர்களே, அப்பாட்டில் கூறப்பட்ட கருத்து புதிதல்ல, அதிற் சொல்லப்படும் உவமையழகே அதை இலக்கியமாக்குவது.

அ.சி. : இனிமையைக் கருதி மாத்திரந்தானா அதைப் படிப்பீர்கள்?

தபுந. : இப் பாட்டின் போக்கு எழுப்பும் உணர்ச்சியே எனக்கு முக்கியம். இன்னும் பாரதியாரின் உரைநடை யழகைப் பாருங்கள். எவ்வளவு தெளிவாயிருக்கிறது! தடங்கலின்றிப் படித்துக் கொண்டே போகலாம். அதிலடங்கின அறிவுரையைவிட நடையின் சரளமே சிறந்தது.

அ.சி. : பாரதியின் உரை நடை, இலக்கியச் சிறப்புக் கொண்டது அன்றா என்பதைப் பற்றி நாம் இப்பொழுது வாதிக்கவில்லை. ஆனால், அவரது நடையின் தெளிவுக்கும் அழகுக்கும் அடிப்படையானது அறிவே என நினைக்கிறேன். அறிவுரைகள்

பகட்டாய்க் காணப்படவில்லை. ஆதலால், அவை ஆங்கு இல எனக் கூறலாகாது. அறிவுகூறும் உண்மை நோக்கமில்லாவிடின் நடையின் சிறப்புக்குன்றும். அந்நடை உயிரற்றிருக்கும். இன்று நம்மிடை அறிவு புகட்டும் நோக்கங்கொண்டும் சுவைமலிந்துள்ள இலக்கிய நூல்கள் பல உலவவில்லையா? அறிவு புகட்டும் முகத்தான் அழகற்றனவாய் அவை ஆகவில்லையே! மகிழ்நன், மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இன்னோரன்னவர் அறிவுறுத்தலையே முக்கிய நோக்கமாய்க் கொண்டு எழுதி வெளியிட்டுள்ள பல நூல்கள் உரை நடையழகிற் சிறந்திருக்க வில்லையா?

த.ப.ந. : ஆம். நினைத்துப் பார்த்தால், நீங்கள் கூறுவதில் உண்மை தெளிவாகிறது. அதைப் பற்றி நான் இதுவரை அவ்வளவு ஆழ்ந்து சிந்திக்கவில்லை. மகிழ்ச்சியிலேயே மயங்கிவிட்டேன். ஓவியமொன்றின் எழில் கண்டு மகிழ்கிறோம். சுவர் வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும் என்பதை மறந்துவிட்டு ஓவிய வடிவமே முக்கியம் எனச் சொல்லுவதைப் போலிருப்பது என் வாதம் என்பதை உணர்கிறேன். அறிவின் வேர் இன்றி இலக்கியம் எழுதல் இயலாது என இப்போது காண்கிறேன்.

அ.சி. : அப்படி வாருங்கள் வழிக்கு. உங்களைப் போன்றார் சிலர் “அறிவு பெரிதன்று, மகிழ்ச்சியே இலக்கியத்தின் முக்கிய நோக்கமாகும்” எனக் கூறி வந்ததால்தான் இக்காலத்தில் வெளியீடுகள் பல, கொச்சையையும் வெறுமையும் மட்டுமே நீட்டிக் கொண்டு இலக்கியமென்று விளம்பரம் செய்துகொண்டு மலிகின்றன.

த.பு.ந. : இருக்கலாம். ஆனால் கதைகள், முக்கியமாக, இன்று சிறந்துள்ள சிறு கதைகள், மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சரித்திரம். போன்ற வாழ்க்கை வரலாறுகள் சுவை மிக்க கட்டுரைகள், இன்னோரன்னவையும் வெளிவரவில்லையா? அறிவு கூறும் நோக்கம் வெளிப்படாமலேயே அவை சிறந்த இலக்கியங்களாயில்லையா? நல்ல கட்டுரைகள், சிறந்த சிறு கதைகள் முதலானவை அடங்கின திங்கள் வார வெளியீடுகளும் வழங்குகின்றனவே.

அ.சி. : நீங்கள் கூறுவது சரியே, ஆனால் ஊன்றிப்பாருங்கள். அவை யாவினும் அறிவு அடிப்படையாய் இருத்தலைக் காண்பீர்கள். அறிவு, நீதி என்று இடித்து இடித்து இயம்பாவிடினும் அவற்றில் ஆழ்ந்த உண்மைகள் உள. ஆதலால், நல்லறிவை அடிப்படையாய்க் கொள்ளாத எதுவும் சிறந்த இலக்கியமாய் மலர்தல் இயலாது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

தபுந. : ஒப்புக்கொள்கிறேன். மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டல், இயல்பான பான்மைகளைச் சித்தரித்தல் முதலானவையும் அறிவிலடங்கினவே என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அ.சி. : மக்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிதலாற் பயனுண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். இலக்கியத்தின் நோக்கம் அறிவு புகட்டுவதா இன்பம் நல்குவதா என்பதைப் பற்றி வாதித்த நாம், இலக்கியம் இன்பம் தருவதோடு நில்லாது அறிவினையும் புகட்டவேண்டும் என்ற முடிவிற்கு வந்தோம். அறிவும் இன்பமும் அழகுற இயைந்ததாய் இலக்கியம் இருக்க வேண்டும் என்ற முடிவினைப் பெற்றோம்.

முல்லை - 4

புத்தகசாலை வேண்டும்

'கலாநிலையம்'

புத்தகம் பயிலா வீட்டில் பொலிவில்லை; பயனுமில்லை; சிறியதோ பெரியதோ ஒரு புத்தக சாலை (Library) வைத்துச் சேமியாதார் மனையின் கண் வேறென்ன இருப்பினும் அதற்கு மாண்பில்லை. பிள்ளைகள் நடமாடாத வீடுபோலவே புத்தகம் நடமாடாத வீடும், கல்லும் மண்ணும் மரமும் நிறைந்திருப்பனவே யன்றிச் சொல்லும் எண்ணும் அறமும் அற்ற, வெற்றிடங்களே யாகின்றன. "வாய்விட்டு ஒரு போதும் சிரித்திராத ஒருவனை நம்ப வேண்டாம்" என்றார் ஆங்கிலப் பேராசிரியர் கார்லைல். இசையின் இனிமைக்கு ஈடுபடாதவன் சதி செய்யும் வஞ்சகக் கள்வனே" என்று வைகிறார் ஷேக்ஸ்பியர். இவ்விருவரளவு கடுஞ் சொற்கள் கையாளும் உரிமையேனும், விருப்பமேனும் நமக்கு இல்லையெனினும் புத்தகத்தை யொட்டி ஒன்று கூறுவோம். யாதேனும் ஒரு புத்தகத்தைச் சில நேரமேனும் படிக்காமல் ஒருநாள் கழிவதில்லை எனும் வழக்கங் கொண்ட, வாழ்க்கையுடைய ஒருவனை, எதற்கும் நம்பலாம். எவரையும் சதி செய்யான். கள்வனாகான்.

உணவின்றி உடல் வளராதென்று நமக்குத் தெரியும். மிருகங்களுக்கும் தெரியும். உள்ளமும், அதற்குரிய உணவின்றி வளராதென்று நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? யாக்கைக்கு நெல்லும் நீரும் எவ்வளவு அவசியமோ அதைவிடப் பதின் மடங்கு அவசியமாயிற்றே மனிதர்க்குப் புத்தகங்கள்? நாடோறும் புத்தகத்தைப் பார்த்து நல்லமுது அருந்தாதவன் வாழ்க்கை, இத்தனைப் பசி, தாகம், விருப்பு, வெறுப்பு எனத் திரியும் ஒருவன் வாழ்க்கையே யன்றி, பெறுதற்கரிய மனித வாழ்க்கையின் பயனை, அவன் எள்ளளவும் எய்தியுள்ளான் என்பது பொருந்தாக் கூற்று. (முற்றுங் சுற்ற முனிவர்களை நாம் இங்குக் குறிக்கவில்லை) புத்தகக் கல்வி இலரேனும் பரம்பரை மாண்பினாலும் இயற்கையாய் பிறவியோடியன்ற தூய்மையாலும், 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று கொண்டாடும்படி சிலர் இருக்கின்றனர் என்பதும் நாமறியாததல்ல. அன்னவரைப் பற்றியும் நாம் சொல்ல முன் வரவில்லை.

இவ்விரு திறத்தாரும் அல்லாத ஏனையோர் புத்தகத்தைப் புறக்கணிப்பவராயின் அவர் வாழ்க்கைப் பயனை அறவே இழந்தவர்.

அவர்களால் எவ்விதப் பயனுமடைய முடியாது. அப்படி யெண்ணுவதும் வெறும் பாத்திரத்தை வாய் வைத்துச் சுவைப்பதைப் போலாகும். அவர்களை எதற்கும் எதிர்பார்ப்பதில் பயனில்லை. அவர்களை எதற்கும் நம்பலாகாது.

காகிதத்தைக் கரியாக்கிக் கற்றையாய்க் கட்டிவிட்டால் அதற்குப் புத்தகம் என்ற பெருமை அந்த அளவிலேயே வந்துவிட்டதென்று எண்ண வேண்டாம். அச்சு யந்திரம் வந்தாலும் வந்தது. குப்பைக் காகிதத்திற்குக் குறைவில்லை. முன்னாள் புலவர்களின் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுகின்றனவும் அவைகளை ஆராய்ந்து விளக்குகின்றனவும் தவிரத் தமிழ் வரையிலே மற்றப் புத்தகங்களில் நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பது விற்பதற்கு எழுதினவைகளேயன்றி வாசிப்பதற்கல்ல. ஆயின், அவை குப்பை மேட்டிற்கல்லவா போதல் வேண்டும் என வினவுவீர்கள். ஆம், பள்ளிக் கூடங்களில் பாடமாக வைக்கின்றனர். இப்போதைய முறையில், மேல் எழுந்தவாறு படிப்பதற்கென்றே பட்டங்கட்டிச் (Non-detailed Study) சில புத்தகங்கள் வேண்டியிருக்கின்றனவே. அதற்கு ஒன்றுமே படித்திராதவர் எழுதுகின்ற புத்தகங்கள்தானே ஏற்றவை. அல்லாது, பண்டிதர்கள் சிலர், புத்தகங்கள் எழுதுகின்ற காலையிலும் இந்நாள் பாவம் பள்ளிக்கூடப் பிள்ளைகளை நினைத்து நினைத்து நாவூற எழுதுகின்றார்களாதலால் அவர்களும் “மேல் எழுந்தவாறே” எழுத வேண்டியிருக்கிறது. அக்காலம் பண்டிதர்கள், வள்ளல்களை அடுத்துப் பிழைத்தார்கள். இக்காலம் பிள்ளைகளை அடுத்துப் பிழைக்கிறார்கள். இவர்கள் இயற்றுவது புத்தகமில்லை; கடன்பத்திரம்.

மற்றும், நாவல்கள் என்று காணக் கரிக்கும் காகிதக் கற்றைகள். ஒரு நலமும் ஒரு சுவையும் ஒரு பயனுமில்லாத் தன்மையில், தற்காலம் வெளிவரும் ஆங்கில நாவல்களுக்கும் தமிழ் நாவல்களுக்கும் பெரியதொரு பேதமில்லை. தமிழ் நாவல்களில் இலக்கணம் படுகின்றபாடு ஆங்கில நாவல்களில் படாமல் தப்பிவிடுகின்றது. ஆங்கிலத்திலே ஸ்காட், எலியட், மெரிடித் போன்ற மேதாவிகள் இலக்கிய மரபிலே எழுதிய நாவல்களின் காலம் கழிந்து போய்விட்டது. அவைகளைத் திரும்பிப் பார்ப்பார் இல்லை. இலக்கிய மரபில் எழுதிய நாவல்கள் தமிழிலும் ஒன்றிரண்டு தேடினால் கிடைக்கலாம். இவைகளைப் பற்றிப் பழிகூறார். மற்றும், “சுவறு” என்றும் “கார்த்தான்” என்றும் கேழ்ப்பேன்” என்றும் “இன்னாள்” என்றும், வல்லினம் நினைத்த இடத்தில் மிகுந்தும் மிகாமலும் பிழையாக எழுதுபவர் நூலிற்குள் எத்தனை பிழை செய்வர்? இவை புத்தகங்கள் அல்ல. வைக்கோற்புரி. தொழில் சம்பந்தமாக இருக்கும் சட்டம், வைத்தியம் பற்றிய புத்தகங்களும் புத்தகங்களாகா! தச்சனுக்கு உளியைப் போலும், இடையனுக்குக் கைக்கயிறு போலும், தையற்காரனுக்கு ஊசியைப்போலும் அவை தொழிலிற்கு உரிய கருவிகள். இவைகளும் புத்தகங்களல்ல. உளியும் ஊசியும், தினசரி செய்திப்பத்திரிகைகள் புத்தகங்கள் என்ற பேர் எடுக்கவில்லை யாதலால் அவைகளைப்பற்றி நாம் இங்கு பேச வேண்டியதில்லை. “செய்திப்

பத்திரிகைகளைப் படித்துக் கழிக்கின்ற நேரத்தை மெல்ல, மெல்ல உத்தம நூல்களைப் படிப்பதற்கு மாற்றிக் கொள்வீர்களானால்" என்று அறுபது வருடங்கட்கு முன் எமர்ஸன் என்னும் பெரியார் தொடங்கிய வாக்கியத்தை "இதைச் சொல்ல யார் துணிவார்" என அஞ்சி முடிக்காது விடுகின்றார் என்றபின், இந்நாள் அதனை எடுத்திங்கு எழுதியதுடன் எம் கடமை முடிகின்றது.

புத்தகங்களென்று யாவரும் வைத்தற்குரியன புலமைசான்ற பெரியோர் ஆக்கிய நூல்களே. வள்ளுவர், இளங்கோ போன்ற எண்ணிறந்தோரும் நம் உறவைத் தேடியலைகின்றனர். மெய்கண்ட மேன்மையர் இவர்களை விட்டு விட்டுச் சும்மாத் திரிவதென்ன சூழ்ச்சியோ? ஒன்றிரண்டு ரூபாய்க்கு இப்பெருந்த தொகையாளர் இன்றைக்கும் நம்மோடு உடன் வாழக் காத்திருக்கின்றனரே! நமக்கு ஒழிந்த நேரம் பார்த்திருந்து உரையாடவும் காத்திருப்பர். எம்மொழிப் புலவர்களேனும் அவர்தம் நூல்கள் வீட்டில் இருந்தாலுமே மங்களமாயிற்றே! உண்மையை நோக்கின் இந்த நூல்களைப் பலர் படிக்கப்படாதென்ற காரணத்தால் விலக்கி வைத்தவரல்லர். வீட்டில் அவை வந்து சேருமாயின் ஒரு நாளளல்லாமற் போனாலும் ஒருநாள் படிக்க முயலாது போகார். படிக்க முடியாமற் போனாலும் பத்து தரம் எடுத்தெடுத்து வைத்துவிட்டு, பின்னொரு தரமேனும் புரிந்து கொள்வதற்கு வேண்டிய முயற்சி செய்வர். ஆதலால் யாவரும் அந்தக்காலம் தம்மால் படிக்க இயலாதேனும் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கட்டும். அவைகளின் பேரைச் சொல்லியேனும் பழகிய வண்ணமாய் அவர்களின் வழிமொழி வளரட்டும். இதனால் விளையும் பயன் இவ்வளவென்று சொல்லி முடியாது.

நண்பர்காள்! உங்கள் இல்லத்தில் புத்தகசாலை யொன்று வைக்கத் தொடங்குங்கள். பண்டை நாள் இலக்கியங்களும் அவ்விலக்கியங்களைத் தழுவியும் ஆராய்ந்து விளக்கியும் இக்கால அறிஞர் எழுதுகின்ற நூல்கள் யாவும் உங்கள் வீடெங்குமிருக்கட்டும். ஆங்கில மறிந்த தமிழர்கள் இருமொழி நூல்களையுந் சேகரிக்க வேண்டியவர்கள். ஆங்கிலம் பயிலாத தமிழர் முன்னுரைத்த வகையைச் சார்ந்த தமிழ் நூல்களை இன்று தொட்டுச் சேருங்கள். இது நம் முதற் கடமை!

முல்லை - 4

தனித்தமிழ் ஏன்?

முருகு

1

வளருகின்ற தமிழுக்கு இந்த வரம்பெல்லாம் ஏன்? கட்டுப்பாடோ, சட்டதிட்டமோ, வளர்ச்சிக்கு மாறாகத் தளர்ச்சியைத்தானே தரும்? அப்படியிருக்கத் 'தனித் தமிழ்' ஏன்?

இந்தப் பெருங்கேள்வி அடிக்கடி கேட்கப்பட்டு வந்தது; ஆனால் இப்பொழுது கேள்வி தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது - விளக்கம் மக்களுக்குத் தெரிந்துவிட்ட காரணத்தால்!

தமிழைக் காக்கும் நோக்கத்தோடு இவ்வெண்ணம் தொடங்கியது. நாடோறும் கலந்து பெருகிய ஆயிரக்கணக்கான பிறமொழிச் சொற்கள் இந்த எண்ணம் தோன்றியவுடன் திக்குமுக்காடின. முன்பு "நமதே தமிழ் மொழி" என்று குடிபுகுந்து கூத்திட்ட அவை அஞ்சிச் சிறிது சிறிதாக ஒதுங்கும் நிலை ஏற்பட்டது. கலக்கும் தொகையும் வரவரக் குறைந்தது.

தனித் தமிழ் என்பதெல்லாம் நான்கைந்து பேர் கூப்பாடு என்று பேசிய 'சிருஷ்டி கர்த்தாக்கள்' உண்டு. 'நடக்கக் கூடிய காரியமா சார்? காப்பிக்கு என்ன சார் தமிழ்?' என்று கேலி பண்ணிய 'பத்திரிகாசிரியர்களும்' இருக்கின்றனர். 'தமிழ், நாலைந்து பேருக்கு மட்டும் புரிய வேண்டும் என்ற நினைப்புடன்தான் இந்தப் பண்டிதர்கள் வறட்டுத்தனமாய்க் கத்துகிறார்கள்-தமிழைக் 'கடபுடா'த் தமிழாக்க, சங்கத் தமிழாக்கப் 'பிரயாசை' எடுக்கிறார்கள்' என்றனர்.

தனித் தமிழ், பட்ட தொல்லையும் அடைந்த கேலியும் மானக் கேடும் அளவு கடந்தன. தெருவெல்லாம் கேலி செய்தனர். அந்நிலையிலும் இந்த எழுச்சி வெற்றியடையும் என்று கருதியவரும் உளர். அச்சிலரின் உளவலிமை போற்றத்தக்கதே! அன்றே கேலிபண்ணிய அவர்களை நையாண்டி செய்து "நாளை வெற்றி எமக்கு" என்று கூவியது. "வருஷத்திற்கு" ஆண்டாம்? 'விவாகம்' திருமணமாம்? என்ன இருந்தாலும் பேச்சிலே வருமா? எழுத்திலேதான் வருமா? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான்" என்றனர் நாவலாசிரியர்கள்.

"குழந்தை பெரியதாகப் பெரியதாகச் சட்டையும் பெரியதாக்க வேண்டுமே! சின்னச் சட்டையையே அப்பொழுதும் போட்டுக் கொள்ளலாமா" என்றனர். ஆமாம், பெரிய சட்டைதான் வேண்டும். அதற்காகத் துணி கடன் வாங்க வேண்டுமென்று கட்டாயமா? துணி இல்லையென்றாலும் நூலுமா இல்லை? நூலில்லையென்றாலும் பஞ்சுக்குமா பஞ்சம்? அறிவாளிகள், 'வளர்ச்சிக்கு கலப்பு இன்றியமையாதது' என்பதை ஒப்பவே மாட்டார்கள் தமிழைப் பொறுத்தவரையில்!

2

தமிழ் மொழி பல மொழிகட்குத் தாய்மொழி - கடன் கொடுத்த மொழி! அது கடன் வாங்கும் நிலை ஏற்படுமா? உலக இயற்கை தான் அப்படி உண்டா?

புதுக் கருத்துக்களை விளக்கும் சொற்கள் எந்த மொழியிலும் கருத்துக்கு முன்னரேயே உண்டாக்கப்பட்டு இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. அது போலத்தான் தமிழும் இருந்தது. புதுச் சொற்களை மிக எளிதாக உண்டாக்கி விடலாம்; அவை அக்கருத்தைக் குறிப்பவை என்று வரையறை செய்யலாம். பிறமொழி வந்துதான் இதைச் செய்ய வேண்டுமென்று கட்டாயம் இல்லை.

இது 'கடபுடா' எண்ணமா? புரியாத் தமிழைப் பரப்புகிறதா? இல்லவே இல்லை. 'ஸ்ருங்காரம்' புரியுமானால் 'வரையறை' ஏன் புரியாது? 'ஜபர்தஸ்து' புரியும்போது 'தாளாண்மை' ஏன் புரியவில்லை. எல்லாம் ஏமாற்றும் பொய்யுமே அன்றி வேறில்லை. அல்லாமலும் தமிழ் மகன் பேசுவது - படியாத மக்கள் பேசுவது தனித் தமிழ்தான் என்பதையும், அதுதான் உயிருள்ள தமிழ் என்பதையும், அதுதான் திருந்திய முறையில் இலக்கியங்களில் காணப்படுகிற தென்பதையும் நாம் மறக்கக் கூடாது.

தனித் தமிழில் எளிய நடை இல்லையா? முடியாதா? நன்கு முடியும். விளங்கும் முறையில், பிறமொழிப் படையெடுப்பின்றி எதையும் எழுதமுடியும் என்று சில எழுத்தாளர்கள் காட்டி வருகின்றனர். எதிர்த்தோருலகம் இக்குறிக்கோளை நோக்கித்தான் பயணம் செய்யவேண்டும் என்னும் நிலை ஏற்பட்டுவிட்டது.

'பள்ளிப் பாடங்களுக்கு-அதாவது அறிவியல் நூல்களுக்கு மொழிபெயர்ப்பு தனித் தமிழில் முடியவில்லை; வடமொழியை வைத்துக் கொள்வோம்" என்ற மானமற்ற பேச்சு நம் காதில் விழுந்தது. ஆம். முடியாதுதான். தமிழரல்லாதவருக்குத் தமிழ்ச் சொல் இருப்பது எப்படித் தெரியும்? இல்லையென்றால் புதுச்சொல்லை ஆக்கத்தான் தெரியுமா? தமிழே தெரியாதபோது எதுதான் தெரியும்?

வழக்கில் வந்துவிட்ட பிறமொழிச் சொற்களை வைத்துக் கொள்வோமே - இது ஒரு கூற்று. ஆம்; வைத்துக்கொள்ளலாம்தான்.

அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்கள் முன்பே இருந்திருந்தால்-அல்லது-புதுச்சொற்கள் அமைக்க வழியிருந்தால்? இந்த இரண்டு நிலையிலும் வழக்கில் வந்தவற்றிற்கும் இடமில்லை.

புதுச் சொற்கள் வழக்கில் வருமா? முயற்சி வீண்தானா? அப்படியில்லை-அவை வழக்கில் வந்தன; வந்துகொண்டிருக்கின்றன. 'திருமண அழைப்பு' இக்கேள்விக்கு முழு விடை தெரிவிக்கும்.

பழந்தமிழ்ச் சொற்கள் இன்று புரியவில்லை என்பதற்காக அவற்றை ஒதுக்கி விடலாமா? அவை இயற்கையிலே புரியாமலிருக்கவா ஏற்படுத்தப் பட்டன? அப்படியொருபோதும் இருக்கமுடியாது. அப்படி இல்லை என்றால் அவை ஏன் புரியவில்லை?

அதற்கும் இந்தப் பிறமொழிப் படையெடுப்புத்தான் காரணம் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. பிறமொழியைப் புகுத்துவோர் கையில் அறிவுலகம் அடைபட்டிருந்த காலம் அது. அதனால் அப்படி முடிந்தது. பிறமொழிச் சொற்கள் கூட இரண்டு மூன்று ஆண்டுகள் வழக்கிலிருந்தால் புரியும்போது பழந்தமிழ்ச் சொல்லும் அவ்வாறு வழக்கில் கொண்டுவரப்பட்டால் என் புரியாது? சிறிது சிறிதாக இம் முயற்சியும் நடைபெறவேண்டும். அப்போதுதான் நல்ல சொல்வளம் ஏற்படும்.

அயல் மொழிச் சொற்கள் நடைமுறையில் குறிக்கும் கருத்தைத் தனித் தமிழ்ச் சொல் குறிக்கவில்லை-நேரான பொருள் விளக்கம் இல்லை யென்று குறை சொல்லப்படுகிறது. இக்குறை நீடிக்க முடியாது. நடைமுறையில் தனித்தமிழ் வந்துவிட்டால் அப்புறம்?

கடுந்தமிழும் இல்லை; அழகிய குளிர்ந்த தனித்தமிழ் பரவிவிடுகிறது, நான்கைந்து பேரின் எழுச்சியாக இப்போது இல்லை-ஏனென்றால் தமிழர்கள் தமிழைப் படிக்கத் தொடங்கிவிட்ட காரணத்தால்! படிக்காத வரையில் ஏமாற்றலாம்; படித்த பிறகும் என்றால் குருதி துடிக்கும்; பகையை மடிக்கும் என்பதை மறக்கவேண்டாம்.

இனி 'ஏன்' என்று யாரும் கேளார். எப்படி யிருக்கவேண்டும்? அமைக்கும் வழியென்ன? என்பவைகளே கேள்விகளாக அமையும். அவற்றிற்கு ஆவன செய்ய அறிஞர் குழாம் உண்டு.

முடிவாக-

விழுங்க வந்த பாம்பை மடித்தோம்-அதன் உடலைக் கடித்தோம் - குருதியைக் குடித்தோம் - சாவினின்றும் நம் உயிரைப் பிடித்தோம். இனி அச்சமில்லை.

தனித் தமிழ் ஏன்? இனித் 'தமிழ் வாழ்க!' என்பதுதான் தமிழர் சங்கநாதம்.

முல்லை - 4, 6

பண்டைத் தமிழ் நாடகம்

கா. அப்பாத்துரைப் பிள்ளை

நாடகம் என்ற சொல்லைக் கேட்டவுடனே பலர் இன்றைய தமிழ்நாட்டு மேடைகளில் காணப்படும் நடிப்பும் உணர்ச்சியும் அற்ற பாட்டையும், திரைப்பகட்டிடையே ஒளிந்து அபிநயிக்கும் உயிருள்ள பொம்மைக் கூத்தையுமே எண்ணுவர். ஆனால் இதில் இடைப் பண்பு, இலக்கியப் பண்பு, கலைப்பண்பு மிகவும் அரிது என்பது கூறாமலே விளங்கும்.

வடமொழியிலும் ஆங்கிலம், டேனிஷ் முதலிய புதிய மேனாட்டு மொழிகளிலும் பண்டை மேனாட்டு மொழியாகிய கிரேக்க மொழியிலும் பலவகை நாடகக் காவியங்கள் உள்ளன. அவை காலத்தின் போக்கை ஒட்டி மாறி வளர்ந்து இப்போது சமூக நாடகங்களாயும் (Social Plays) நினைவாற்றலைத் தூண்டும் நாடகங்களாகவும் (Prollem plays) இயங்குகின்றன. தமிழில் இத்துறையில் முழுப்பஞ்சமே காண்கிறோம். அண்மையில் திரு. சுந்தரம் பிள்ளையும் ஓரளவு திரு. சம்பந்த முதலியாரும் சில நாடகங்கள் இவ்வெளிநாட்டு நாடகங்களைப் பின்பற்றி எழுதியுள்ளனர்.

ஆனால் தமிழ் நாட்கம் என்பது இருந்ததில்லையா? அது இருபதாம் நூற்றாண்டின் புதுப்பிறவியா?

தமிழில் இலக்கியத்தின் மூன்று கூறுகளான இயல், இசை, நாடகம் ஆகியவற்றுள் மூன்றில் ஒருகூறு தனிப்பட நாடகம் எனப் பகுக்கப்பட்டது. உலகின் எம்மொழியிலும் இசையும் நாடகமும் இயலுடன் ஒப்பத் தனிப்பகுதியாய்ச் சிறப்புறவில்லையாதலால் தமிழில் சுவை பண்பிலும் செறிவிலும் விரிவிலும் முதன்மையுடையனவையா யிருந்தன என்று தெள்ளுறத் தெரிதலாகும்.

சிலப்பதிகாரத்தின் மூலமும் அதன் உரைமூலமும் கொண்டு விரிந்தகன்ற நாடக இலக்கிய இலக்கண நூற் பரப்புகள் தமிழகத்திலிருந்தன என்று உணரலாம்.

இந்நாடகம் எங்குப் போயிற்று? நாட்டுப்படலம், நகரப் படலம், உயர்வு நவிற்சி ஆகிய கிளிப்பிள்ளை வருணனைகள் நிறைந்த

காவியங்களும் ஊசற்கதைகளும் மொழிபெயர்ப்புக்களுமே பெருமையுடையவை என்று நினைத்த இடைக்காலத் தமிழர் அவற்றைப் பேணாது விட்டிருக்க வேண்டும். ஆயினும் அவர்கள் கைவிட அதனை அவர்களை அவற்றைக் கைவிடச்செய்த ஞானாசிரியராம் வடமொழி வாணர் பேணி வளர்த்தது ஒரு வியப்பே! ஆயிரம் ஆண்டுக்குமேல் வடமொழியில் வளர்ச்சி பெற்றோங்கிய இந்நாடகத்தை மட்டும் மொழி பெயர்ப்பிலே கருத்துச் செலுத்திய தமிழரும் பிறரும் மொழி பெயர்க்கக்கூட முயலாதிருந்தது வியப்பினும் வியப்பே!

நமக்கு இன்றுள்ள சிலப்பதிகாரம் பண்டைத் தமிழ் நாடக நிலைக்கு ஒரு நிழற்படமாயியங்குகிறது. அதனின்று அதன் போக்கை ஒருவாறு அறியலாம்.

நாடகம் என்பது உரையாடல் வடிவிலுள்ள கதை எனக் கருதப்படுகிறது. ஆனால் கதை பொதிந்தும் பொதியாமலும், உரையாடல் பெற்றும் பெறாமலும், இசைகூட உடனாகவும் இல்லாமலும் நாடகம் நடைபெறக் கூடும். தொடக்கத்தில் அது நடனம் அல்லது கூத்து வடிவிலிருந்து பின் இசையுடன் சேர்ந்தும் கதை தழுவியும் வந்தது. கூத்து நிலையிலும் இடைக்கூத்து நிலையிலும் முதலில் ஒரே நடிகரும் பின் இரு நடிகரும் பல நடிகரும் ஏற்பட்டனர்.

சிலப்பதிகாரம் ஒரே நடிகரால் நடிப்புடன் கூறப்படும் கதை. இதன் ஒவ்வொரு காதையும் இன்றைய நாடகங்களில் நடிகர் தமக்குத் தாமே உள்ள நிகழ்ச்சிகளை வெளியிட்டுரைப்பதுபோல் தனிக்காட்சி. அக்கால நாடக மேடைமுன் மறைப்புத் திரையும் உடையதாயினும் காட்சிகளுக்கிடையே மாற்றம் உடையதன்று. எனவே, நாடகத்தின் மொழி கேள்வி மூலமும் அபிநய மூலமும் காட்சிகளையும் கதையுறுப்பினர் உளப் பண்பினையும் (பாவம்) காட்டும் தன்மை வாய்ந்தது. இக்கருத்துடன் சிலப்பதிகாரத்தை வாசித்தால் அதில் வரும் உவமைகள் பெரும்பாலும் கட்புலன்முன் உருவங்களைத் தீட்டும் தன்மையும் அபிநயத்துக்கொத்த தன்மையும் உடையவையாயிருப்பது காணலாம். மலையாளத்தில் இம்முறை நாடகம் இன்றும் நடைபெறுகிறது.

இந்நாடகமே பிற்காலத்தில் குறவஞ்சி, பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களுக்கும், ஊசற்பாட்டு, ஏசற்பாட்டு, ஏற்றப்பாட்டு முதலிய நாட்டுமக்கள் பாட்டுகளுக்கும் தாயகமாயிருந்தது. அது முழு வளர்ச்சி பெறவோ இலக்கிய வளம் பெறவோ செய்யாதது பிற்காலத் தமிழ்ப்புலவர் தவறான போக்கினாலேயே என்னலாம்.

இப்பழைய நாடகமுறை நடைபெறும் பழந்தமிழ் நாடாகிய மலையாள நாட்டில்கூட இது 'புதுமைக்காரர்களா'ல் தெரிந்தோ தெரியாமலோ ஏளனம் செய்யப்படுகிறது. தற்காலப் பகட்டு நீக்கி உண்மைக் கலைப்பண்புக் கண்கொண்டு பார்ப்பவர்க்கு அதன் சீர்மையும் நம் வெள்ளைமையும் புலனாகும். மேல் நாட்டிலும் புதுமைப்

போக்குடைய இப்ஸன் நாடகங்கள் காலத்துக்கு உகந்தவையாயினும் கலைப்பண்பு, விரிவு, அழகு முதலியவற்றில் ஷேக்ஸ்பியர், ஸாபாக்ளிஸ் ஆகியவர் நாடகங்களே சிறப்புடையவை எனக் கொள்ளப்படுகின்றன. தமிழ்க் கலைஞரும் கலைப்பண்பு அடிப்படையில் காணில் சிலப்பதிகாரம் ஓர் உயர் நாடகக்கலைக் கருவூலமா யிருத்தல் காணப்படும்.

முல்லை - 5

நூற்கல்வி

காழி. சிவ. கண்ணுசாமி

பள்ளியிற் பயில்வதே கல்வியென்று இக்காலை கொள்ளப்படுகிறது. ஆனால் உண்மையாகவோ அறியாமையகற்றி யறிவை வளர்க்கும் எவ்வொன்றும் கல்வியே யாகும். பன்றிகட்கும் ஆடுகட்கும் கல்வி பயிற்றுவது என்பது பிரெஞ்சுக்காரர் தம் வழக்காற்றில் காணப்படுதொன்றாகும். எனவே கல்வி யெனப்படுவது பள்ளியிற் கற்பிக்கப்படுவதிலும் நூல்களிற் காணப்படுவதிலுமே அடங்குவதாகாது. என்னை? பயன்றருங்கல்வியாக நூல்களிலிருந்து பெறற்பாலது சாலச் சிறியதாகலின்.

ஏதோ குறிப்பிட்ட சில, பல கோடுகளை யிழுக்கவும் புள்ளிகளை வைக்கவுந் தெரியாததனாலேயோ, அன்றிப் பிறர் அவ்வாறு இழுத்தோ வைத்தோ எழுதிய ஒன்று எதைக் குறிக்கின்றது என்று அறிய முடியாததனாலேயோ ஒருவனை அறிவிலாதவன் என்று கூறவொண்ணாது. ஏரைப் பிடித்துச் சீரைத் தேடிக் கண்கூடாகப் பெற்ற வொருவன் ஏ, ர், என்னும் இரண்டு எழுத்துக்களைச் சேர்த்தெழுதிய ஒரு சொல் எதைக் குறிக்கின்றது என்று படித்து அறிந்துகொள்ள முடியாதவனாயிருத்தல் கூடும். மகனெனப் பிறந்த ஒவ்வொருவனும் முதற்கண் அறியற்பாலது அவன் தன் வாழ்க்கைத் தொழில் யாதென்பதேயாம். அரசன் முதல் ஆண்டி ஈறாகவுள்ள ஒவ்வொருவனும் இதை முதலிற் குறிக்கொண்டு அறிந்து வரையறுத்துக் கோடல் வேண்டும். புதியதோர் வீட்டைக் கட்டியானொருவன் அவ்வீடு இடிந்து வீழக் காணுங்கால், வீட்டைக் கட்டிய கொத்தன் 'தேர்ந்ததோர் வான நூலறிஞன்' என்று பிறன் சொல்லக் கேட்டு நெஞ்சடங்குவதும் கருதற்பாலதோ? அது ஒரு நாடு எய்தும் இன்னல்களெல்லாம் அந்நாட்டின் சீரிய சொல்லாளர்களும் வீரப் பணியாளர்களும் இயற்றிய நாட்டுத் தொண்டின்..... அல்லவா ஒக்கும்? ஈண்டு நூலறிவு பயன் பட்டவாற்றைக் காண்கிலம்.

இதனானே நூற்கல்வி முற்றும் இகழ்ந்து ஒதுக்கப்படுவதொன்று என்று கருதல் வேண்டாம். அறிவை வளர்க்க வல்லது நூற்கல்வி

யொன்றேதான் என்று கருதல் தவறு என்பதே ஈண்டு எடுத்துக் கூறப்பட்டதாகும்.

வாழ்க்கை நிலையின் பல படிகளிலுமுள்ள ஒவ்வொருவரும் பெரிதும் முயன்று நூற்களைக் கற்றல் நேரிதே. கைத் தொழிற்கும் வாணிகத்திற்கும் நூற்கல்வி இன்றியமையாது வேண்டப் படுவதாகும். நடுத்தரமான வாழ்க்கை நிலையைப் பெற்றவர்களோ கல்வி யறிவற்றிருப்ப தென்பது பெரும் வெட்கக் கேடாகும். இவன் யாவருங் குறிக்கொண்டு காத்து விலக்க வேண்டிய பகுதி யொன்றுண்டு. அஃதென்னெனின் தன்னாற்றலும் கல்வியறிவின் பெருக்கமும் மிகுந்து விட்டமையான் வயிற்றுப் பிழைப்புக்கான வாழ்க்கைத் தொழிலைப் பின்னும் மேற்கொண்டு நடத்தி வருதல் இகழ்ச்சிக்குரியதாகும் என்று கருதி அதை யொதுக்கிவிடாமையே யாகும்.

இஃதொன்றைத் தவிர்த்து மற்றெவ் வழியிலும் நூற் கல்வி பெரிதும் போற்றத் தக்கதும் ஒவ்வொரு தொழிலுக்கும் பெரிதும் இன்றியமையாது வேண்டப்படுவதும் ஆகும். பிழையறப் படித்தலும், தெளிவாகவும் மணி மணியாகவும் எழுதலும், கணக்குப் போடுதலும் எத்தொழிற்கும் எஞ்ஞான்றும் யாவர்க்கும் உரிய கல்விப் பொருள்களாம். அவற்றிற் படித்தலும் எழுதலும் சிறு பிள்ளைகளும் எளிதிற் கற்கக் கூடியன. கணக்கோ அத்துணை யெளிதிற் கைவரப்பாலதொன்றன்று; ஆயினும் அது கருதி ஒதுக்கற்பாலதும் அன்று. கற்கும் மொழியின் இலக்கணத்தையறிதற்குக் கூடக் கணக்கியலறிவு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். முறையுறக் கற்பின் கணக்கு..... பேரறிவு வேண்டியதில்லை. கற்றதனால் அது அறிவைக் கலக்குவதென்பது மில்லை. நாளும் பயன்படுவது; எனவே யாரும் பரிந்து கற்கற்பாலது அது.

முல்லை - 5

பயனிலா வேட்டை

டி.எஸ். நடராச பிள்ளை

காலை முதல் பசும்புல் தரை பல தேடித்திரிந்து இளைப்புற்ற மான் ஒன்று, ஞாயிறு குடதிசைச் சாய்ந்தபோது அசோகவனம் என்னும் கானகத்தை அடைந்தது. அவ்வடவியின் கண் மோனகம் என்னும் சிற்றாறு ஒன்று உண்டு. அது நாரையுங் குருகும் நல்லிடங்கொண்ட மலையிடைத்தோன்றி, புள்ளும் மாவும் பள்ளிகொள்ளும் மலையில் தோய்ந்து, தழையும் மலருந் தன்னகத்து ஏந்திப் பரல்களினின்மீது பம்பிப் புரளும். தெளிந்த நீர் துயல்வரும் அவ்வாற்றில் அம்புலியும் புனலாடுவான் இழிந்து, அதன் மெல்லிய திரைகளில் ஊசலாடிக் களித்தான். அவன் உடலின் நீத்த மாசு எனப் பால்புரை நுரை கரையில் ததும்பிற்று. மானும் நீரினைப் பரிந்துண்டு நிழல் அடர்ந்த புதர் ஒன்றில் படுத்து உறங்கியது.

கதிரவன் குணதிசை மலை வந்தடைந்து, கன இருள் அகற்றிப் பனியினைச் சீக்குங்காலை சேய்மைக்கண் ஓர் ஒலி பிறந்தது. பாறைக்குப் பாறை தாவித்தாவி எதிரொலி தந்து மலைக்கணவாய் எங்கும் நிறைந்த அவ்வரவம், நாய்களின் குலைப்பு ஓசையும், துளைக்கருவிகளின் இன்னோசையும், நாயைப் பின்தொடர்ந்து வந்த குதிரை வீரர் குரல் ஒலியுங் கலந்ததொரு பெருமுழக்கின் சிறு பகுதியெனக் கொள்ளக் கிடந்தது.

இயற்கையில் அழிக்குந்தன்மை வாய்ந்தவன் மனிதன். பிள்ளைப் பருவத்தில் தும்பியையும், வண்டையும் பிடித்து வதைக்கின்றான். இளமையிலும் முதுமையிலும் வயல் வழிச் செல்லின், கதிர்களையுருவி யழிக்கிறான். பாதையை விடுத்து வயலின்மேற் குறுக்கிற்சென்று அப்பயிரைச் சிதைக்கிறான். கையிற் கோல்கொண்டு வழி நடப்பின் நெறி இருமருங்கும் உள்ள புல் பூண்டு செடிகளைக் கழித்தொடிக்கிறான். மறுகில் திரியும் நாயையும் பூனையையும் கற்கொண்டு எறிந்து காலையொடிக்கிறான். இவை யாவும் அவ்வகைச் செயல்களால் தனக்கொரு பயனுங் கருதாமல் செய்யுந் தொழில்களாம். இனி, தன்னை நம்பித் தன்கைத் தழைகொண்டு உண்டு, தம்மைப் புரந்தளிக்கும் உயர்ந்தவன் எனக் கொண்டு தமது நன்றியைக் காட்டி, அவன் உடலைத் தமது நாவால்

நீவும் ஆவையும் ஞாயிறையுங் கரந்த கத்தியால் தனது ஊனை வளர்க்கும் பொருட்டு வெட்டிடுவான் மானுடனே.

மான் வேட்டை இவ்விருகை வினையின்பாலும் படும். அன்றியும், ஓடும் உழைகளை உழுவை எனத் துரத்துவதில் அவனுக்கொரு உள்ளக் கிளர்ச்சியும் உளது. பரிமா இவர்ந்த வீரர் பலர்கூடி ஒருவரையொருவர் முந்திச்சென்று கலைமானை வழிமறித்துக் கொல்வதில் வன்மையும் பெருமையும் அடங்கியுள்ளன. உண்பதற்கும், மான்றசை உயர்ந்ததாய்க் கொள்ளப்படும்.

நெருங்கிவரும் ஒலியின் பெருக்கத்தை உணர்ந்த கலைமானும் தன் படுக்கையை விட்டெழுந்து, முடைவீசுங்காற்றை முகர்ந்து நின்றது. 'வருகின்ற படை என்னை நாடியோ? மனிதருக்கும் பிறவுயிர்களுக்கும் யாதொரு தீங்கும் இழையாத என்னை அவர்கள் தேடிவரக் காரணம் என்ன?' என எண்ணியது. மனிதன் தனக்கு நேரப்போவதை முன்னறிய அவாவுகின்றான். காலத்தால் விளையப் போவதைக் கருணை நிறை இயற்கையார் அருள்கொண்டு மறைக்கிறார். அங்ஙனமிருந்தும் அறியாமையால் அவன் பலவித சூழ்ச்சிகளைச் செய்து மறை பொருள்கள் அனைத்தையுங் காணவிழைகிறான். அவைகளின் உண்மையை அறியில் ஆவும், ஆடும் களித்துண்ணுமோ உலகில்? மானிடன்தான் தன்னை மறந்து உலவுவனோ?

எழுந்து நின்ற கலையுந்தன்மீது இருந்த பனி நீரை உதிர்த்துக் காதுகளை நெறித்துக் கண்களில் மருட்சியும் அச்சமும் புலப்பட, உடல் சிறிது நடுங்கச் சித்திரத்தில் தீட்டத்தக்க நிலையிலிருந்தது. விசைகொடு முந்திய நாய் ஒன்றைச் சேணிடைக்கண்டவுடன் கணவாயில் தாவியோடிற்று. வீரரும் சருகு அலம்பும் ஒலி செவியுணர்ந்து, மான்தான் எனக் கடிது மேவினார். மானைக் கண்ட நாய்கள் வாயாரக் குரைத்தன. அவைகளின் களி கொண்ட குரலைக்கேட்டு,

"வால்சுருண்டு, நுனி வாய்தளர்ந்து, தட
மார்பகன்று, இடை சிறுத்து, வெந்
மேலுயர்ந்து, அணி சிரம்பருத்து, நெடு
வீர வாளெயி றுஇலங்கிட,
நாலுகின்ற மணி யாரமென்றுநடு
நாநிமிர்ந்து, மிளி தாழவே,
காலுயர்ந்து, உகிர் விளர்த்து, மொய்த்துவரு
கரிய நாய்கள்சத கோடியே"

மார்பு அகன்று வலி கொண்டிருக்கவும், காதுகள் கவிந்து தொங்கவும், மெல்லிய வேகங்கொண்ட கால்கள் தளராது வளரவும் பெற்ற செஞ்சுணங்கனும் வெண்சுணங்கனும் எண்ணிலாதன சேர்ந்தன. ஒன்றற்கொன்று பெரிதுஞ் சிறிதுமாய் அடுக்கிய குரலொலி கொண்டு குரைத்த வோதை மணியோசையெனப் பள்ளத்தாக்குகளில் எங்கும் பரந்து நிறைந்தது. குன்றும் மலையுங் குரலொலியை நீடித்து எதிரொலி தந்தன.

வேட்டை வீரரும் பெருங்குரல் பாய்ச்சி நாய்களை முன்னேவிக் குரகதங்களைத் தூண்டினார். அரவத்தால் வெருவிக் கடலொலி கரப்ப வானை மறைத்தன. அவ்வடவியில் இருந்த பறவையெல்லாம். மானைப் பின்தொடர்ந்த மனிதரும் ஞாளிகளும் நொடியில் அசோகவனம் விட்டு நீங்கவே கானகமும் முன்போல் அமைதியுற்றது. மானோ தன் மெல்லிய கால்களை நீட்டி வேறு வரையை நாடி யோடிற்று. வேட்டை வீரரும் விலங்குகளும் அவ்வெற்பினை அடைந்தபோது ஞாயிறும் நடந்து நடுவானில் உயர் நிலையை யெய்தினான். வெப்பத்தாலும், ஓடிய விரைவினாலும் இளைத்த குதிரைகள் சில, மனிதனைச் சுமக்கலாற்றாது ஏய்த்த பரிகள் பல, மானைமறிக்க இயலாதென நினைந்து பின் தங்கிய வீரரும் பலரே. ஆதலின், அம்மலையிடைக் குழுமிய குதிரை வீரரும் சிலரேயாயினர். தொடர்ந்து வந்தவர் தொகுதி குறைந்து அரவமும் அடங்கவே, மானும் சற்றே இளைப்பாறித் தன்னைச் சூழ்ந்த சூழலை உற்று நோக்கியிருந்தது. புகலிடம் உண்டோ புல்வாய் தனக்கும்? முழைகளிற் செல்லும் விலங்கு அல்லாமையால், மலையையும், கணவாய்களையும் சுற்றுமுற்றுப் பாரையும் மருண்டு மருண்டு நோக்கி நலங்கிளர் கொழுநிழற்கொண்டு வானோச்சு மரங்களடர்ந்த வண்ணக்கரையே உய்வதற்கேற்ற புகலிடமென்று உறுதி கொண்டோடியது. விரிந்த இலஞ்சியருகில் அது வந்தபோது, அதனை விடாது பின்தொடர்ந்து வந்த வீரனும் ஒருவனே. தமியனாய் நின்ற அவனும், ஊக்கம் குன்றாதவனாய்ப் பரியுடன் பேசியும், நாயுடன் நவின்றும், மான் புகுந்து சென்ற இடங்களிலெல்லாம் சிக்கென எய்தித் துரத்தினான். அச்சமயம் அவனுடன் நின்ற நாய்களும் இரண்டேயாம். அவை சிறிதும் பின்வாங்காது மானைத் தொடர்ந்தன. நெடுவழி ஏகியும், நீர்நிலை நீந்தியும் களைத்துத் தளர் நடையுற்ற கலையோ, மலைகளை விரைவிற் கடக்க வலியற்று, உடல் நுரைப்ப, வீங்கிய பெருமூச்சு எறிந்தெறிந்து நடுக்குற்றது.

இதனை நான்கு கோல் அளவில் தொடர்ந்த நாய்களும் அவ்வாறே தளர்ந்து சென்றன. இவ்விடையுள அளவை விட்டு மானும் முந்திப் படர்ந்திலது; நாய்களும் விஞ்சி..... வட்டமிட்டுக் கூவிக் களித்தது. உலகினியற்கை என்னே! என்னே!! உயிருக்குப் பிழைத்தோடும் இம்மானின் மனநிலை யென்ன? கண்கொண்ட காட்சியெனக் களிக்கும் கழுகின் நிலையென்ன? மணவறை பிணவறையாய் மாற, மகனைத் துறந்த மாதா அழ, மணாளனையிழந்த மனைவி அரற்ற, மகளின் நிலைமைகண்ட மாதர் ஏங்க, அயலகத்துப் பிள்ளைப் பேற்றின் பெருவிழா விளக்கும் முழவொலி கேட்டதிலையோ நாம்! மனிதன், மணியின் நாவெனத் துன்பத்தினின்றும் இன்பத்திற்கும், இன்பத்தினின்று துன்பத்திற்கும் ஆட்டப் படுகிறான். ஆதலாலன்றோ நாம் பிறந்தவுடன் இவ்விழிந்த உலகிற் பிறந்தோமே என்று வாய்விட்டுப் புலம்புகின்றோம்.

வேட்டை வீரனும், மானின் நிலைமை கண்ட வேட்டைக்கு முடிவு வந்தது என்று எண்ணி நான்கு புறமும் உற்று நோக்கினான். அவனுக்கருகே

செங்குத்தான குன்று ஒன்று இருந்தது. அதனைக் கடப்பது அரிதாகையால் மான் தன்னை எதிர்க்குமிடம் அதுதான் என்று உன்னித் தோழர்க்குக் காண்பிக்க அதன் கலைகளை எண்ணினான். மனிதன் என்று நினைக்கப் பிறவுமொன்று நினைக்குமன்றோ? உருவிய கத்தியுடன் வீரன் நெருங்கியதும், இருண்ட கணவாய் ஒன்றின் வழியே மான் குதித்தோடிக் கண்ணுக்குப் புலப்படாவண்ணம் கரந்தொடுங்கிற்று. நடுங்கா நாய்களும் அக்கணவாயில் நுழைந்து குரைக்க அவைகளுடன் கூடி மலைகளும் குரைத்தன. நாய்களுக்கு உதவியாய் வீரனும் அக்கணவாயில் நுழைந்தோட, அவ்வமயம் கால் இடறிக் கண்ணியமான அவன் குதிரை விழுந்துவிட்டது. கடிவாளத்தை இழுத்தும், காலால் குத்தியும் பரப்புற்ற வீரன், அதை முன்னடத்தச் செய்த செயல்கள் எல்லாம் வீணாயின. விறைத்த கால்களும், நெறித்த பார்வையும், நீர்வடிந்த கண்களும் அது உயிர்துறந்ததை விளக்கின. அதன் முடிவைக்கண்ட...... அரத் துரத்தியதற்காகத் துயர்கூர்ந்து.

'அரபிநின் றுனைநர னரிதிற் பெற்றநாள்
புரவி யுன்னைப் பெருமலைக் கழுகுகள்
கொத்திடு மென்று சித்த மறிந்திலென்!
உன்னுயிர்க் கிறுதி யுஞற்றிய விப்பகல்
பெருமை யற்றே பெருமிடி யடைக!
பயனிலா வேட்டை பாழா குகவே"

என்று புலம்பினான்.

முல்லை - 5

முளையிலே களை

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை

தமிழ்த் தாய்மாருக்குப் பிறந்து நாள்தொறும் உற்றார் உறவினருடன் தமிழே பேசிவரும் தமிழ் மக்களும் ஏனைய மக்களும் தமிழ்த்தாயைப் போற்றாது அனைவருக்கும் பொதுவான வடமொழியைத் தம் மொழியாக எண்ணி அதனையே மேன்மைப்படுத்தல், பெற்ற தாயைப் புறக்கணித்து எழில்நல முற்ற இளமதித் தையலாரை வணங்குவது போலாம். போற்றாவிடினும் போகட்டும். இழிவு கூறினுங் கூறட்டும். தாயைக் கொலை செய்யுமாறு சூழ்ச்சி செய்தல் முற்றிலுந் தகாத செயலன்றோ. கம்பர் காலந்தொட்டு இதிகாச புராண சமய நூல்களில் வடமொழிச் சொற்களும் பாவினங்களும் பல்லாயிரக் கணக்காகத் தமிழ் ஏடுகளிற் புகுந்து தனித்தமிழின் சீரைக் குலைக்க வாரம்பித்தன. இக்காலத்தில் சிறார்களுக்கென் றெழுதப்படும் வாசகப் பாடப் புத்தகங்களில் வடமொழிச் சொற்கள் நிறைந்துள. அன்றியும் வடமொழிச் சொற்கள் வடமொழி யொலி விளங்குமாறு எழுதப்பட்டுள்ளன. ‘கிருஷ்ணன்’ என்னும் எடுத்துக்காட்டு, ஒரு பானைச் சோற்றில் ஒரு சோறெடுத்துப் பதம் பார்ப்பதை யொக்கும். தமிழ்ச் சொற்களிருக்கும் பொழுது அவற்றை வழங்காமல் வேறு சொற்களை வழங்கி அவற்றிற்கு உரை யெழுதுமுறை என்னென்று கூறுவோம். சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த நாட்டு மொழிகளை ஆராய்ச்சி செய்யுஞ் சங்கம், சில அறிவியல் நூல்களை மொழி பெயர்த்து வருவதில் ஆங்கில மொழிகளை வடமொழிகளாக்கி அவற்றின் பொருளை வடமொழி கலந்த தமிழ்ச் சொற்களால் விளக்குகின்றனர். இவ்விடையூறுறாமல் ஆங்கிலச் சொற்களை தமிழெழுத்துக்களா லெழுதி அவற்றின் பொருளைத் தனித் தமிழ்ச் சொற்களால் விளக்குவது எளிதன்றோ. இஃதன்றித் தனித் தமிழறியா பேதையர்கள் செய்துவரு முறையினால் தமிழ்ச் சொற்கள் குறைந்து மறைந்து போமன்றோ? பிள்ளைகளும் பெரியோர்களும் நாளடைவில் வடமொழிகளைத்தான் தமிழ்ச் சொற்களென்று துணிந்து கூற நேரிடும். வடமொழியாளர்கள் தமிழே வடமொழியின் தோன்றலென்று கூறவும் துணிவர். இப்பெருங்கேட்டை முளையிலேயே அழிப்பது எளிது. முற்றவிட்டால் பெரும்பாடாகும். இதனைத் தமிழ் மக்கள் சிறிது

ஊன்றிப்பார்த்து விளையப்புகுங் கேட்டைத் தக்க வழிகளில் முறையிட்டுத் தடுப்பது நலமாகும்.

'இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து'

என்ற திருக்குறள் உண்மை கருத்தக்கது.

முல்லை - 5

அறிவாட்சி

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.

மக்கள் நாகரிக வரலாற்றைக் கால இயல்பாலும்-கலை நிலையாலும் நான்கு கூறு படுத்தலாம். கதைப் பருவம், கவிதைப் பருவம், ஆட்சிப் பருவம், தாழ்ச்சிப் பருவம் என்று அப்பகுதிகளுக்குப் பெயர் தருவது பிழையாகாது. மக்களைப் போலவே மக்கள் வகுப்புத் தொகுதிகளும், முறையே பிள்ளைப் பருவம், வளர் பருவம், ஆட்சிப் பருவம், தளர் பருவங்கள் எய்துவது இயல்பு. சமுதாயப் பிள்ளைப் பருவத்தைப் பேதைமையும், வளரும் இளம் பருவத்தை உணர்வும், ஆட்சிப் பருவத்தை அறிவும், தாழ்ச்சிப் பருவத்தை ஏலாத்தளர்வு-அல்லது-கையறவும் உரிமை கொள்ளும். பேதைமையால் கதையும், உணர்ச்சி வளத்தால் பாட்டும், ஆள்வனைத் திறத்தால் ஆராய்ச்சியும், தாழும் தளர்வால் பழம் பெருமைப் பேச்சும் முறையே வீறு கொள்ளும்.

தற்காலத் தமிழ்ச் சமுதாயம் முதல் இரு பருவங் கழிந்து மூன்றாம் பருவம் எய்திய குறியே மறுமலர்ச்சி இயக்கமாகும்.

கதையும், கவிதையும் மக்கள் மனதை ஆண்ட காலம் மாண்டது. ஆள்வினைப் பருவம் அடைந்த புதிய தமிழகத்தில் அவை இனித் தனியாளும் அரசுரிமை தாங்க மாட்டா; அறிவுக்கு முடிசூடி அதன் ஆட்சிக்குத் துணைசெய்யும் முறையில் ஓரளவு மாட்சி, அவை அடையக்கூடும்.

வெறுங் கதைக்கும், அறங்கருதாவறிய மொழி செறி கவிக்கும் வருங்காலத் தமிழுலகில் வாழ்வில்லை. வினைக்கும், வேளைக்கும் விலைவைக்கும் மேல்புலத்தார், பல்லாண்டாய் மில்டனையும், தெனிசனையும் விட்டொழித்து, வாழ்வு அறத்தை வலியுறுத்தவல்ல உரை நாடகமும், சொல் ஒளியில் அறம் சுடரும் செய்யுள்களும் பெருக்குவதில் தருக்குற நாம் காணுகின்றோம்.

தற்காலத் தமிழகத்தும், வெள்ளமாய்ப் பிள்ளையவர்கள் பல்லாயிரம் கவிதை ஏட்டைக்கூட்டி, பொல்லாத கள்ளி அடர் நிலங்களெலாம் புனித மிகு தலங்களெனச் சிறு பணத்துச் சந்தை தொறும் புகழ்ந்து பாடி வாரிவிட்ட பாட்டுப் பூரியிலே பங்கெடுத்துப் படிப்பவரைப் பார்ப்பதரிது.

ஆனால், பாரதியார் பா அமுதைப் பருகி மகிழாத உணர்விலியைத் தமிழ் நாட்டிலே தேடவேண்டும்.

ஆராயின், அறிவே உயிர்ப் பண்பு. அதுவே ஒழுக்கத்திற்கு உயிர் ஆகும். உணர்வு, அதற்கு உடலும் உடையுமாய் அணிசெய்து துணை நிற்பதே. தனியாட்சி உணர்வினுக்கு இனி வராது. உரனை மணக்கும் உணர்வு நிகழும் நெடுங்கால அறிவரசில் அமைச்சுரிமை கொள்ளக் கூடும்.

அறிவு, மக்கள் ஒழுக்கத்தின் விதையும், விளையுளும் ஆகும்மூ மக்கட் பண்பாம் ஒழுக்கத்தின் மலர் அறிவும், அதன் மணம் உணர்வும் எனக் கொள்ளின் அது ஒருவகையில் பொருத்தமாகும். எனில், மணம் மோப்பவர்க்கு மட்டும் இதழ் உதவும். மணமற்ற மலரும் நாளடைவில் பழமாய், விதை முதலாய் பயன் தரும் இயல் உடையது. இண மலரைப் புணராத மணம் எதுவும் விதை கனிகள் உதவமாட்டா. ஆகையினால், ஆள்வினைக்கும், அறவொழுக்க ஆட்சிக்கும், அறிவே உறுதுணையாம். "வினையே ஆடவர்க்கு உயிரே", "ஒழுக்கம் ஒன்றே மக்கட் பண்பு" இவை பண்டைச் சான்றோர் கண்ட உண்மை; அவர் கொண்டு கையாண்ட மரபு. இவ்விரண்டுக்கும் முதலும், துணையும், முடிவும் ஆகும் அறிவாட்சி நெறி நிற்பதே ஆக்கம் தரும்; அதுவே நீக்கமற ஊக்கும் தமிழர் தமக்கு அறமும் புகழும் ஆகும்.

முல்லை - 6

காதலும் வீரமும்

திரு.வி.க.

காதலைத் தொடர்ந்து வருவது வீரம். காதலுக்கும் வீரத்திற்கும் தொடர்பு உண்டு. காதல் திகழும் இடத்தில் வீரம் செறியும். வீரம் செறியும் இடத்தில் காதல் திகழும், அஃது இல்லாத இடத்தில் இஃது இராது; இஃதில்லாத இடத்தில் அஃது இராது. காதல் அகம்; வீரம் புறம். அக நூல்கள் காதலையும், புற நூல்கள் வீரத்தையும் விளம்புதல் உங்கட்குத் தெரியும். காதல் காதலர் வழி இயங்குவதுபோல, வீரம் வீரர் வழி இயங்கும். இதுபற்றியே வீரர் வழிபாடு உலகெங்கும் நடைபெறுவதாயிற்று. பண்டை நாளில் வீரர் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் அவர்தம் புகழ் பொறிக்கப்பெற்ற ஒருகல் நாட்டப்படும். அது 'வீரக்கல்' என்றும், 'நடுகல்' என்றும் போற்றப்படும். அக்கல் முன்னே பலவித வந்தனை வழிபாடுகள் நடைபெறும்.

வீரத்திற்கு மூலம் ஈரம். கோபமன்று; வன்மமன்று. ஈரத் தினின்றும் எழுவது வீரம். கோபத்தினின்றும், வன்மத்தினின்றும் எழுவது வீரமாகாது. அது வெறி. இந்நாளில் அன்பற்ற கோபத்தினின்றும், வன்மத்தினின்றும் எழுவது வீரம் என்று கருதப்படுகிறது. இதனால் அறப்போர் குலைந்து மறப்போர் தலையெடுக்கலாயிற்று. கோழைகள் வீரர்களாகக் கருதப்படுகிறார்கள். முன்னாளில் போருக்கென்று ஓரிடம் குறிக்கப்படும். அவ்விடத்திலுள்ள ஆக்கள், அறவோர், பெண் மக்கள், நோயாளர், மக்கட் பேறில்லாதவர் முதலோர் அப்புறப் படுத்தப்பட்ட பின்னரே போர் துவங்கப்படும், நிராயுதபாணிகள் மீது எக்காரணம் பற்றியும் அம்புகள் சொரியப்படமாட்டா. இக்காலப்போர் முறைகளைப் பேசவும் வேண்டுமோ? பேசவும் நா எழவில்லை. ஆடு மாடுகள், அறவோர், பெண் மணிகள், குழந்தைகள், நோயாளர், நிரபராதிகள், நிராயுதபாணிகள் முதலோர் மீது குண்டுகள் பொழியப்படுகின்றன! கொடுமை! கொடுமை! அறம் எங்கே போயிற்றோ? அன்பு எங்கே போயிற்றோ? இக்கொடிய மறப்போர் புரிவோர் வீரராவரோ?

காதலும் வீரமும் தொடர்புடையனவாதலின், அதற்கு ஏதேனும் இடர் நேர்வதாயின், இது வாளா இராது; வீறுடன் எழும். வீர எழுச்சிக்கு அடிப்படை காதலே; சீற்றமன்று; இகலன்று. வீரர் நெஞ்சில் சீற்றமில்லை;

இகலில்லை. அங்கிருப்பது காதல். இத்தகைய வீரர் உள்ளம் இயற்கைக் கோயிலாகுமன்றோ?

காதலுக்கும் வீரத்திற்கும் உள்ள தொடர்பை நன்கு விளக்கவல்ல எடுத்துக்காட்டுகள் பல உண்டு, விரிவஞ்சி இரண்டொன்றைக் குறித்துச் செல்கிறேன்.

ஒரு களிறும் ஒரு பிடியும் காட்டின் வழியே போய்க் கொண்டிருந்தன. இவ்வேளையில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டது. பிடி, களிற்றின் பக்கலில் நெருங்கிற்று. களிறும் பிடியும் காதலால் பிணிக்கப்பட்டவை. காதல் நடுக்கங்கண்டு வீரம் வாளா கிடக்குமா? வீரம் களிற்றினிடம் எழும்பிற்று. காதலினின்றும் எழும் வீரத்தின் முன்னே எவர் நிற்றல் முடியும்? உலக முழுவதும் ஒருங்கு திரண்டு எதிர்த்தாலும் காதல் வீரத்தைச் சாய்த்தல் இயலாது. களிற்றின் வீரம் பிடிக்கு என்ன உணர்த்திற்று? 'காதலே, அஞ்சற்க. உன் காதலே எனது வீரம். என்னுயிர் நீ. என்னுயிர் போம்வரை உன்னைக் காப்பேன்' என்பதை உணர்த்திற்று. காதல் வீரம் சிங்கத்தை நடுக்குறச் செய்தது. சிங்கத்துக்கு யானை அஞ்சி ஓடுவது இயற்கை. ஆனால், காதல் வீரம் இயற்கையையும் மாற்றியது. அது யானையைச் சிங்கமாக்கியது; சிங்கத்தை நரியாக்கியது. காதல் வீரம் எங்கே எழுந்தது, உயர்திணை உயிரினிடத்திலா? அஃறிணை உயிரினிடத்திலா? எளியதினிடத்திலா? வலியதினிடத்திலா? காதல் வீரத்தின் எழுச்சியை அஃறிணை உயிரினிடத்தில்-எளியதினிடத்தில் ஏற்றி, உலகுக்கு அவ் வீரத்தின் வெற்றியை அறிவுறுத்திய பெருமை யாருடையது? திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளையும் எதிர்த்த அஞ்சா நெஞ்சமுடைய வீரர் நக்கீரருடையது.

"நனந்தலைக் கானத் தாளியஞ்சி
இனந்தலைக் தரூஉம் எறுழ்கிளர் முன்பின்
விரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின் ஏமுறத் தழுவக்
கடுஞ் சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல்"

இஃது அகநானூற்றிற் போந்த நக்கீரர் காதல் மொழி-வீரமொழி.

ஒரு களிறு, காதல் காரணமாக ஒரு சிங்கத்தை நடுக்குறச் செய்தது; உயிரைப் பொருளாக மதியாது தன்னினும் வல்ல சிங்கத்தை எதிர்க்கலாயிற்று. மனைவி மாட்டுள்ள காதல் என்னே! பெண்ணுலகைக் காக்க ஆணுலகங் கடமைப் பட்டதை உன்னுக. மனைவிக்கு ஆபத்து நேருங்கால் தன்னுயிரைக் காக்க ஓடுவோன் கணவனாகான்; உயிர் நாயகனாகான்; காதல் கொழுநனாகான். அவன் வீரமகனல்லன்; பேடி; கோழை.

இக்கால ஆண்மகன் ஒருவனும் பெண்மகள் ஒருத்தியும் காதல் என்னும் பெயரால் பதிவுமணஞ் செய்துகொண்டனர். அவன் எம்.ஏ.

அவள் பி.ஏ. இவர் அடிக்கடி காடுகளிற் போந்து சுற்றிவருவது வழக்கம். ஒரு நாள் காட்டில் மரத்தடியில் தூர்த்தன் ஒருவன் பி.ஏ. பெண்ணைக் காணலானான். அவனது உள்ளக் குறிப்பை உணர்ந்த பெண்மணி பக்கத்திருந்த நாயகனுக்கு ஆங்கிலத்தில் அதைத் தெரிவித்தாள். தெரிவித்ததும் தன் உயிரைக் காக்கவேண்டிய எம்.ஏ. 'ஆண்' ஓட்டமாக ஓடினான். இஃது ஐந்துநதிபாயும் அழகிய ஒரு நாட்டில் ஓரிடத்தில் நடந்தது. நிகழ்ச்சியை முற்றுங் கூற விரும்புகிறேனில்லை. ஓடிய ஆள் தன் மனைவியைக் காதலித்தவனா? காமமுற்றவனா? என்பதொன்றே ஈண்டுக் கருதற்பாலது. அவன் மனைவியைக் காதலித்தவனல்லன்; காமுற்றவனே. காதல் தன்னுயிரை விடுத்து ஓடச்செய்யுமா? ஓடச் செய்வது காமம். காதல் வீரத்தையன்றோ எழுப்பும்? நக்கீரர் காலக் காட்சிக்கும், இக்காலக் காட்சிக்கும் எவ்வளது வேற்றுமை?

காதலின் தொடர்ச்சி வீரம். வீரத்தின் அடிப்படை காதல்.

முல்லை - 6

நண்டின் காதல்

உடுமலை இராமசாமி

அவளும் சிரித்தாள், அவனும் சிரித்தான். அவள் சிரித்த சிரிப்பிலே அவனுக்கு இன்பம் பொங்கியது. அவன் சிரித்த சிரிப்பிலே அவளுக்கு வெட்கம் வெளிக்கிளம்பி வந்தது. கொடிபோல் துவண்டு அவள் அவன் மார்பிலே சாய்ந்தாள்; தன் முகத்தை அந்தப் படர்ந்த மார்பிலே மறைத்துக் கொண்டாள்.

இதென்ன நாடகம்? அந்தச் சிரிப்பின் மறைபொருள் என்ன? என்ற கேள்விகள் எழலாம்.

அதோ அங்கே பாருங்கள்; வயல் ஓரத்திலே-அந்த நாவல் மரத்தடியிலே இரண்டு நண்டுகள்-ஆம்! ஆணும் பெண்ணும் தான்! அந்தப் பெண் நண்டு வாய் அங்காத்து ஆர்வமுடன் எழும்பி நிற்கிறது, முத்தத்தை எதிர்பார்க்கும் இளங் காதலியைப் போல. ஆனால், அந்த ஆண் நண்டு முத்தமா தருகிறது? அதுவும் எழும்பி நிற்கிறது. தன் அணைப்புக் கைகளாம் கொடுக்குகளைத் தூக்கிக் கொண்டு தான் இருக்கிறது. ஆனால் அந்தக் கைகளின் இடையே அது என்ன கருப்பு உருவம்? வண்டா? நீலக்கல்லா? இல்லை-இல்லை. பழுத்துக் கனிந்து சுவை சொட்டும் நாவற்கனி. அந்தக் கனியை ஆண் நண்டு உண்ணப்போகிறதா? காணோமே! உண்ணும் முறையில் அதன் வாய் திறந்திருக்கவில்லையே.

பச்சைப் பசுந்த தலைக் குழந்தைக்கு வெண்ணிலவினைப் பராக்குக்காட்டி "இந்தா! ஒரு வாய். இது மாத்திரம். ஆ! வாயைத் திற. இந்தா இந்தப் பாற் சோறு. எவ்வளவு இனிமையாக இருக்கிறது பார்" என்று சொல்லிக்கொண்டே, பாற் சோற்றைக் குழந்தைக்கு ஊட்டுகிறாள். அப்போது அந்தத் தாயின் இதழ்கள் அன்பு முத்தம் அளிப்பது போன்றல்லவா குவிந்திருக்கும்.

இதைப் போலத்தான் குவிந்து காணப்பட்டது அந்த ஆண் நண்டின் வாய்.

அப்படியானால் அது யாருக்கு உணவு ஊட்டுகிறது. குழந்தைக்கா? அண்மையிலே குஞ்சுகளைக் காணோமே! அதன் அண்மையில் -

கையணைக்கும் தொலைவிலே இருப்பது அந்தப் பெண்நண்டு ஒன்றுதானே! ஆமாம். அந்தப் பெண் நண்டிற்கு - தன் காதல் செல்வத்திற்குத் தான் அந்த அமுதக் கனியை ஊட்டுகிறது. வெறுங்கனியையா? அத்துடன், தன் உள்ளத்திலே - தன் உணர்ச்சியிலே ஊறிய காதலமுதம் என்ற தேனுடன் கலந்துதான் அந்தக் கனியை ஊட்டுகிறது. அந்த இளம் பாவை நண்டோ வெறிபிடித்தது போன்றா, அந்தக் கனியை வெடுக்கு வெடுக்கெனக் கடித்துக் கடித்து விழுங்குகிறது. அதன் முகத்திலே வெறித்தோற்றம் இருக்கிறதா? இல்லை. அதற்குப் பதிலாகக் காதலமுதம் ஒளி விடுகிறது. இன்பமும், மகிழ்ச்சியும், வெட்கமும் கூத்தாடுகின்றன. அந்தக் கனியைக் கண்ணால் பார்த்துக் கொண்டா இருக்கிறது அது. காணோம். அதன் காதற் கண்களிரண்டும் தன் துணைவனின் காதல் முகத்திலே - அன்பு சொட்டும் அழகிலே படிந்திருக்கின்றன.

புதிய பல் முளைத்த பசும் குழந்தை முதன் முதலாகக் கற்கண்டைச் சுவைப்பது போல், அப் பெண் அலவனும் அந்தக் காதற் கனியை கொஞ்சங் கொஞ்சமாகச் சுவைத்துச் சுவைத்து - இனிமையை நுகர்ந்து நுகர்ந்து விழுங்காமல் விழுங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் காட்சிதான் தலைப்பில் குறிப்பிட்ட மனிதக் காதலர்களைச் சிரிக்கச் செய்தது-அணைத்துக்கொள்ளச் செய்தது.

அவர்கள் யார்? அவர்களும் புதுக்காதல் இணைகள் தானே! ஆனால் சற்று முன்வரை அந்த நண்டுகளின் காதல் முறைக்கும்-இந்த மனிதக் காதலரின் போக்குக்கும் முரணான மாறுபாடு இருந்தது.

அவன் 'கண்ணே' என்றான்.

அவள் 'ஊ-ஊம்-தொடாதே' என்று ஒதுங்கிப் போனாள். 'மலரே' என்று கெஞ்சினான் அவன்.

'பிறமலர் நுகர்ந்த வண்டுக்கு இங்கே இடமில்லை' என்று கடிந்தாள் அவள்; செந்தாமரை முகத்திலே கோப அனல் காட்டி.

கூடலில் இன்பம் பெருக்கும் ஊடலா இது?

நெடுநாட்கள் சென்றுவிட்டன தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று. அவன் வரவை எதிர்பார்த்து-எதிர்பார்த்துக் கண்பூத்து மனம் நொந்து தவித்தாள் அந்தத் தலைவி. தோழிகளைப் போக்கினாள் தன் காதலனைப் பற்றி ஒற்றுக் கண்டுவர. கிடைத்த செய்தி அத் தலைவியைத் துடுக்குறச் செய்தது. மனமோ பற்றி எரிந்தது. நெஞ்சமே வெடித்துவிடும் போல் துக்கம் பீறிக் கொண்டு வந்தது. ஏன்? தன்னை விட்டு நீங்கிச் சென்ற அந்தக் காதலன் என்ன செய்தான். இந் நெடு நாட்களை எங்கே கழித்தான். என்னை மறக்கக் காரணம் என்ன? பன்மலரின் தேனை யுண்டு மகிழும் ஆண் வண்டினத்தைச் சார்ந்தவனல்லவா என் தலைவன். ஆம்! விலைமகள் ஆடலிலே திளைத்துக் கிடந்தான் போலும் இத்துணை நாள். இதை

எண்ணினால்-கேட்டால் ஏன் அந்தத் தலைவியின் நெஞ்சம் குமுறாது. ஏன் வெளிக்கிளம்பி வராது துக்கம்.

பொங்கிய இந்த உள்ளத்துடன் மாலையிலே-குளிர்தரும் பூஞ்சோலையிலே அவள் அமர்ந்திருந்தாள். வந்தான் காதலன், கள்வனைப்போல அடிமேல் அடிவைத்து. அந்தக் காதல் உள்ளம் இந்தக் கள்ள நடையை உணராதா என்ன?

அவன் நெருங்குவதன்முன் துள்ளி எழுந்து ஒதுங்கினாள். சீரிய சிங்கம் போற் தோற்றமளித்தாள், ஆர்வமுடன் வந்த அந்தக் காதற் கள்வனுக்கு. திடுக்குற்றுத் திகைத்து நின்றான் அவன். காரணத்தையும் உணர்ந்து கொண்டான்.

பெண் மனம் பேதை மனந்தானே! கெஞ்சினால்-கைபட்டால் இளகிவிடும் என்று அவன் மனப்பால் குடித்தான்.

பெண்ணினமோ எந்த மனப் புண்ணையும் பொறுக்கும். ஆனால், "சக்களத்தி" தோன்றுவதைக் கண்டு பொறுக்காது. இந்தக் குற்றத்தை மன்னிக்கவும் அவளது தனி ஆட்சி மனம் இடந்தராது.

இதனால்தான் அவர்களுக்குள்ளே சொற்போர். காதலன் கெஞ்சினான். கொஞ்சினான். ஊ கூம்... அவளோ விட்டுக் கொடுக்கவில்லை. தான் ஆண்மகனல்லவா என்ற செருக்கு அவன் மனத்தைக் கவ்விக் கொண்டது. 'சே! இவள் கிடக்கிறாள்' என்று தூண்டுகோலிட்டது, அந்தச் செருக்கு. அவளுடைய விடாப்பிடி தளரவில்லை. வென்றது அவனின் செருக்கு. அவளை ஒருமுறை விரைத்துப் பார்த்தான். இவன் சரக்கு அங்கே விலை போனதாகக் காணோம். மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து நடந்தான் விரைப்பாக நான்கைந்தடிகள்.

ஆனால், நாவல் மரத்தடியிலே இவன் பார்வை சென்றதும் பேயைக் கண்டவன்போல் திகைத்து நின்றான். அவளும் இவன் திகைப்பைக் கண்டாள். அவன் பார்வை சென்ற வழியில் தன் பார்வையையும் செலுத்தினாள். அவளும் கண்டாள் நண்டின் காதல் நாடகத்தை. அவன் மனத்திலே ஊசிகொண்டு குத்தியது போலிருந்தது. அவள் மனமோ இளகியது. இவர்களுடைய காதலின் தன்மையை-மதிப்பைக் கண்டு சிரிப்பது போன்றிருந்தது, நண்டினக் காதல்.

தலைவனின் வீராப்பு சொல்லாமல் ஓட்டம் எடுத்தது. தவறு தன் பக்கம் என்று உணர்ந்தான். தலை திரும்பிப் பார்த்தான் தன் காதலியை. அவளும் தலை குனிந்து மெல்ல ஒரு புன்னகை அம்பை அவன் மீது ஏவினாள். போன மச்சான் திரும்பி அடியெடுத்து வைத்தான், புன் முறுவலுடன் நெருங்கி மெல்ல அவள் தோளைத் தழுவினான்.

'எங்கே உன் வீராப்பு?' என்று கேட்பது போலிருந்தது அவள் சிரித்த சிரிப்பு.

'உன் சக்தி வன் சக்தி, நீ என் சக்தி. நான் உன் அன்பிற்கு அடிமை' என்று விடை அளிப்பது போன்றிருந்தது, அவன் சிரித்த எதிர்ச் சிரிப்பு.

இருவர் பார்வையும் மீண்டும் அந்த நண்டினக் காதலர்கள் மீது பாய்ந்தன.

முறுவல்-மகிழ்ச்சி-இன்பம்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

மக்கள் காதல் தடுமாறும் காதல்-பொறாமைக் காதல் இந்தக் குறையைச் சுட்டிக் காட்டுகின்றனர், முது நாட்டமிழ்ப் பேரறிவாளர்; இந்த 'நண்டின் காதல்' நாடகத்தின் வாயிலாக.

"சேய்கண் டனையன் சென்றாங்கு
ஓர் அலவன் சீர் பெடையின்
வாய்கண் டனையதோர் நாவற்கனி
நனி நல்கக் கண்டு
பேய்கண் டனைய தொன்றாது
நின்றான்"

முல்லை - 6

பொல்லாதது பொறாமை

'பரணி'

உடலைக் கெடுத்து அழிப்பவை கெட்ட நோய்கள்; அங்ஙனமே மனதைக் கெடுத்துப் பாழ்படுத்துவன கெட்ட எண்ணங்கள். மனிதரது குணத்திற்கும் மனதிற்கும் சிறப்புப் பொருத்த முண்டு. குணத்திற்குத் தக்கவாறே மனமும், மனதை யொத்தே குணமும் அமையும். ஆதலால் தான் மக்கள் நல்வாழ்வு நடத்தி, நற்பேறு எய்தவேண்டி, பெரியார்கள் குணங்களை இருவகையாகப் பிரித்திருக்கின்றனர். நல்ல குணம், தீய குணம் என்பவையே அவை.

செடியை வளர்ப்பது தண்ணீர்; அதுபோலவே மனிதரை நன்னெறித் துறையில் அழைத்துச் சென்று, உண்மையானவர்களாக வளர்ப்பவை நற் குணங்கள். செடிகளை அழிப்பவை நச்சுப் பூச்சிகள் அல்லவா? அதுபோலவே தீய குணங்கள் தீய வழிகளில் திரியச் செய்கின்றன.

இத்தகைய தீப் பண்புகளுள் பொறாமையும் ஒன்று. பொறாமை மிகக் கொடிய நோய்தான்; மிகப் பொல்லாதது. அது மனிதரது இன்பத்தை-அழகைக் கெடுத்து, துக்கத்தைக் கொடுக்கின்றது. பொறாமையால் கெட்ட பேர்கள் எண்ணிலர்; கேடடைந்த குடும்பங்களும் எண்ணிலாதன.

பலர் இதை ஒருவர் மனத்தினின்றும் எழும் சக்தியாகக் கருதுகின்றனர். ஆனால், இது பல காதலர்களின் இன்ப வாழ்வை-நல் வாழ்வைக் கெடுத்து வருகின்றது. மனிதனுக்கு முக்கியமாக இருக்க வேண்டிய மகிழ்ச்சியை அறவே அறுத்து விடுகின்றது. எல்லை இல்லாத் துக்கத்தில் ஆழ்த்துகின்றது.

இந்தக் குணம் பெரும்பாலோரிடம் எங்கேயோ ஒளிந்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்பொழுது திடீரென்று குதித்தெழுந்து, வெளிக் கிளம்பி, தன் குறும்பு வேலையைத் தொடங்குகின்றது. பலரது மன வேதனைகளுக்கும், கவலைகளுக்கும், மனச் சோர்வுக்கும் காரணமாக விருப்பது பொறாமை.

பொறாமை கொண்டவன் பொறுமையை இழக்கிறான். தன்னிடமில்லாத வொன்று பிறரிடமிருப்பது கண்டு வயிற்றெரிச்சல்

கொள்வதற்கே பொறாமை என்று பெயர். பிறரிடத்து உள்ளத்தைப் பெற வேண்டுமென்ற 'ஆசை' என்றது ஓர் முட்டை. பின்னர் ஆசைப்பட்ட பொருள் தன் கைக்கு வந்து சேராத காலையில் அந்த முட்டையினின்றும் பொறாமை என்ற 'கொடிய குஞ்சு' தோன்றுகின்றது. அது வளர்ந்து இன்னாச் சொல் என்ற 'குறும்பு' ஆரம்பிக்கின்றது. ஆதலால்தான் செந்நாப் புலவரும்.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொன்னான்கும்
இழுக்கா வியன்ற தறம்"

என்று கூறிச் சென்றார்.

பொறாமை கொண்டவன் பேய் பிடித்தவனுக்கு ஒப்பானவன். பொறாமை மிகுந்தவன் மற்றொருவரது சொத்துக்காகப் பொறாமைப்பட்டு, அதை அடைய வேண்டி சொத்துக் குரியவனைக் கொலைசெய்தாவது, தன்னுடைய 'மனக் கோட்டையை' நிலைநாட்டிக் கொள்ள முயல்கிறான்.

பொறாமைக்கு வித்து தன்னல உணர்ச்சியே. தன்னலப் பற்று அற்றவனிடம் பொறாமைப் பேய் தாண்டவம் ஆடுவதில்லை. காதலர் இருவரில் ஒருவர் மற்றொருவர் மீது பொறாமை கொள்வராகில் இருவருக்கும் உள்ள பொறுப்புத் தன்மை அற்றுப்போய், அன்பு விளக்கு அணைந்து ஐயம் என்னும் காரிருள் அவர்களைக் கவ்விக் கொள்கின்றது. பிறகு அவர்களுக்கு இன்ப வாழ்வு ஏது?

பொறாமை கொண்டவன் அறிவையும் இழக்கிறான். அவன் நியாய அநியாயம் சிறிதும் பாரான். பொய் சொல்ல அஞ்சான். தான் சொல்வதே நியாயமெனச் சாதிப்பான். இவ்வளவு ஊறுசெய்யும் இந்தப் பொல்லாத பொறாமையின்றும் விடுபட மக்கள் முயற்சிசெய்ய வேண்டுவது இன்றியமையாத தொன்றாகும்.

முல்லை - 6

தொண்டு செய்யும் திருக்கூட்டம்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

அப்படிப் பார்க்கப்போனால் இந்த உலகமே தொண்டு செய்யும் நிலையுந்தான். இந்த உலகம் எதற்காக இருக்கிறது? தொண்டுக்காக. உலகத்தில் பிராணிகள் எதற்கு வாழ்கின்றன? தொண்டு செய்வதற்காக. பிராணிகள் இல்லாவிட்டாலும் உலகம் இருக்கும்: ஆனால் தொண்டு இல்லாவிட்டால் பிராணிகள் ஒருவேளை இருந்தாலும்கூட உலகம் இராது.

இதோ இந்த மின்சார விளக்கின் வெளிச்சத்திலே நான் எழுதுகிறேன். எனக்குத் தெரியாத எத்தனையோ பேர் சேர்ந்த ஒரு சமூகத்தின் தொண்டினால் இந்த வெளிச்சம் எனக்குக் கிடைக்கிறது. இதே மின்சார விளக்கு, திடீரென்று அணைந்து போகிறது. எங்கும் ஒரே இருட்டு! ரிப்பேர் முடிந்து மறுபடி வெளிச்சம் வர இன்னும் ஒரு மணிநேரம் பிடிக்கும். அதுவரையில் என் மனைவி விளக்கைக் கொண்டு வருகிறாள். என் கை எனக்காக இந்தக் கட்டுரையை எழுதுகிறது. இப்படியாக எனக்குச் சமூகம் தொண்டு செய்கிறது; குடும்பம் தொண்டு செய்கிறது; எனக்கு நானே தொண்டு செய்கிறேன்.

எனக்கு நானே தொண்டு செய்வது எனக்கு மிகவும் நன்றாகப் புரிகிறது. அதைப் பற்றி கேள்வி கேட்கும்போது, "ஆம், உனக்கு நீ தொண்டு செய்கிறாய்" என்ற பதிலும் என்னுள்ளிருந்து கிடைக்கிறது. குடும்பத் தொண்டும் புரிகிறது. பிரம்மச்சாரியாக இருந்தால் ஒரு குடும்பத்துக்குத் தொண்டு செய்யலாம்; மணம் செய்து கொண்டாலோ பல குடும்பங்களுக்குச் சேவை புரியலாம். "நான் குடும்பத்துக்குத் தொண்டு செய்கிறேனா?' என்று கேட்கும்போது, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் 'கட்டாயம் உன் தொண்டு இல்லாவிட்டால் எங்கள் கதி என்ன?" என்கிறார். ஆனால் நான் சமூகத்துக்கு ஊழியம் செய்கிறேனா என்பது எனக்குத் தெரியவில்லை. "சமூகத்துக்கு நான் ஏதாவது தொண்டு செய்திருக்கிறேனா?' என்று நடுத்தெருவில் நின்றுகொண்டு நான் கேட்கிறேன். தெருவில் எத்தனையோ பேர் குறுக்கும் நெடுக்கும் போகிறார்கள், வருகிறார்கள்; வண்டிகளில் அமர்ந்து ஓடுகிறார்கள். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்து வேடிக்கை பார்ப்பவர்கள்

சிலரும் இல்லாமலில்லை. ஆனால் என் கேள்விக்குப் பதில் என்ன? நான் கேள்வியை விடவில்லை, கேட்டுக்கொண்டே இருக்கிறேன்.

ஒரு பெரியவர், எங்கோ அவசரமாய்ப் போனவர், என் கேள்வியைக் கேட்டதும் சடக்கென்று, பிரேக் போட்ட வண்டிபோல நிற்கிறார். "ஐயா, சமூகத்துக்காக நீங்கள் ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை. அப்படிச் செய்திருந்தால் இத்தனை பேரிலே யாராவது ஒருவர் உமக்குப் பதில் சொல்லியிருப்பார்" என்கிறார்.

"அதுதான் நீங்கள் பதில் சொல்லுகிறீர்களே!"

அவர் ஒரு கணம் திகைத்து நிற்கிறார்; உடனே சமாளித்துக் கொண்டு, "உங்களுக்கு மூளை இருக்கிறது!" என்கிறார்.

"மூளை யாருக்கு இல்லை? இதோ போகிற இத்தனை பேருக்கும் இருக்கிறது".

'அதைப் பற்றியெல்லாம் நான் சொல்லத் தயாராக இல்லை. நான் உங்களைக் கேட்பது ஒரே கேள்வி: சமூகத்துக்குத் தொண்டு செய்ய உங்களுக்கு விருப்பமா?"

"கேட்பானேன்? சமூகம் எனக்குத் தொண்டு செய்யும்போது- செய்வதை நேரில் காணும்போது, நான் மட்டும் எப்படி அதற்குத் தொண்டு செய்யாமல் இருக்க முடியும்? நான் ஏற்கனவே அப்படி ஏதோ செய்துகொண்டிருப்பதாகத்தான் நினைக்கிறேன்.'

"அதுதான் தப்பு, சமூகத்தொண்டு செய்யவேண்டுமானால் அதற்குச் சில நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஒன்றில் நீங்கள் சேரவேண்டும் . சமூக சேவை என்றால் அதில் எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. நீங்கள் எந்த விதமான ஊழியம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை முதலிலேயே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இதோ எங்கள் நிலையமே ஒன்று இருக்கிறது. அதில் வேண்டுமானாலும் நீங்கள் சேரலாம். நான்தான் அதன் காரியதரிசி.' அட! ஒரு சமூக ஸ்தாபனத்தின் காரியதரிசியா இவ்வளவு நேரம் என்னோடு பேசிக்கொண்டிருக்கிறார்! எளிதாகக் கிடைக்கும் சந்தர்ப்பமா இது?

"சரி; உங்கள் நிலையத்தில் கட்டாயம் சேருகிறேன். அதில் எந்தவிதமான தொண்டு நடக்கிறது?" என்றேன்.

காரியதரிசி விளக்கெண்ணெய் குடித்தவர்போல முகத்தைக் கடுத்துக் கொள்கிறார். பிறகு, என்னை எப்படியாவது கடைத்தேற்ற வேண்டும் என்ற பெருநோக்கத்தோடு என் அறியாமைக்கு இரங்கியவராய், 'உங்கள் பேச்சு எனக்கு அடியோடு பிடிக்கவில்லை. முதலில் 'நம்முடைய நிலையம்' என்று நீங்கள் சொல்ல வேண்டும். என்ன தொண்டு நடக்கிறதென்பதை விவரித்துச் சொல்ல முடியாது. தொண்டு என்பது ஓர் ஆள் அல்ல. கோபுரம் அல்ல; மிட்டாய்க் கடை அல்ல, உங்களுக்கு வர்ணித்துச் சொல்வதற்கு! நம் நிலையத்தில் சேர்ந்து நீங்கள் ஊழியம் செய்துகொண்டே இருந்தால், போகப்போக உங்களுக்கே அந்த உருவற்ற

பொருள் உருவாகும்; அதன் சுவை தெரியும். இவ்வளவுதான் உங்களுக்கு நான் சொல்ல முடியும். அதுவும் இந்த நடுத்தெருவிலே இதைவிட அதிகமாச் சொல்லவே கூடாது" என்கிறார்.

நான் மறுநாள் அந்த நிலையத்துக்குப் போகிறேன். அதன் தொண்டர்களில் ஒருவனாகச் சேருகிறேன். காரியதரிசி மிகவும் நல்லவரென்று தெரிகிறது. அவர் எல்லா வேலைகளையும் தாமே கவனிக்கிறார். தமது அறையிலுள்ள மேஜை நாற்காலிகளைத் தாமே துடைத்து, இடம் மாற்றி வைத்துக்கொள்கிறார். வேலைக்காரர்களை அடிக்கடி கூப்பிட்டுத தொந்தரவுபடுத்துவதில்லை. ஒவ்வொரு பகுதிக்கும் தாமே நேரில் போய் வேலைகளை ஒழுங்குபடுத்துகிறார். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தனி அதிகாரி. அவரிடம் எத்தனையோ வேலையாட்கள், காரியதரிசி இந்த அதிகாரிகளிடம் அன்போடு பழகுகிறார். ஒவ்வொரு வேலையாளையும் தம்பி போலப் பாவித்து நடத்துகிறார். ஒரு நாளைக்கு நிலையத்துக் கட்டடம் முழுவதையும் குறைந்தது ஐம்பது தடவையாவது அவர் சுற்றி வராமல் இருக்கமாட்டார். தெருக்களில் வேலையாட்களைத் தனியே சந்தித்தால் அவர்களுடைய நலங்களைக் கேட்பார். அவர்கள் வேலைசெய்யும் பகுதியின் அதிகாரியைப் பற்றித் துருவித் துருவித் தகவல்கள் கேட்பார்; வேலை விவரங்களையும் விசாரித்துத் தெரிந்து கொள்வார். அதிகாரிகளைச் சந்திக்கும்போதும் இப்படித் தான் ஆட்களைப் பற்றிக் கேட்பார்.

அதிகாரிகளோ தங்களைக் குட்டி அரசர்களாக மதித்து வந்தார்கள். அந்த அந்தப் பகுதிக்குள்ளே அவர்கள் இட்டது சட்டம். குறித்த வேளையில்தான் அவர்கள் வந்து வேலை செய்யவேண்டும் என்பதில்லை. ஒருவர் காலை ஐந்து மணிக்கே வந்து எட்டு மணிக்குப் போய் விடுவார்; பிறகு அன்று முழுவதும் தலைகாட்டமாட்டார். இன்னொருவர் பத்தரை மணிக்கு, எதிரே வரும் ஆட்களையெல்லாம் மிரட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டமாய் வருவார். "ஏய்! மேஜையைத் துடைத்தால் இப்படியா காகிதங்களையெல்லாம் மாற்றிவைக்கிறது? நீ ஒன்றுக்கும் லாயக்கில்லை. அந்த மின்சார விசிறியைப் போடுவதற்கென்ன? மரம்போல் நிற்கிறாயே!" என்று வேலைக்காரப் பையனை மிரட்டுவார். பிறகு குமாஸ்தா வருவார், காகிதக் கட்டுகளில் கையெழுத்து வாங்க. "ஓய்? இந்த நிலையத்தில் நீங்கள் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்கிறீர்கள்?" என்ற கேள்வி பாயும். 'பன்னிரண்டு வருஷமாக' என்ற அடக்கமாகப் பதில் வரும். 'ராமராயர் கம்பெனிக்கு உங்களை எத்தனை கோணி மூட்டைகளுக்கு எழுதச் சொன்னேன்?"

"இருநூறு."

'போமையா போம்! எழுநூறு என்று சொன்னேன். உங்களுக்குக் காது மந்தமென்றால் என்னை மறுபடி கேட்பதற்கென்ன?

"மீதி ஐந்நூறு இன்று வாங்கிக்கொண்டு வரட்டுமா?"

“சே! எவ்வளவு சொன்னாலும் உங்களுக்குப் புரிகிறதில்லை. அந்த படுபாவி நேற்று விலையை உயர்த்திவிட்டான். நீங்கள் போய் என்னத்தை வாங்கிவருவது? பெரிய அசகாயசூரன் போலத்தான் பேச்செல்லாம். இங்கே வேலையில் ஒன்றையும் காணோம்-சரி. உள்ளே போய்க் கன்னியப்பனைக் கூப்பிடுங்கள்.”

கன்னியப்பன் வேலையாட்களின் தலைவன். ஏழாவது வயதில் இந்த நிலையத்துக்கு வந்தவன். இங்கே வேலை செய்து இப்போது தலை நரைத்துப் போனவன். ‘இவர் எம்மாம் மட்டும்! அட, இவரெ போல எத்தினியோ அதிகாரிங்களே நானு கண்ணுலெ வெரலெ விட்டு ஆட்டிருக்கேன். இது நேத்துப் பொறந்த பிள்ளே!” என்று பேசுவான். அவன் குழைந்துகொண்டே வந்து, “என்னாங்க!” என்றான்.

“இதோ பார், எத்தனை பழகியும் உனக்குச் சிறிதும் மரியாதையே தெரியவில்லை. ஆட்களை அடக்கி வேலையை நடத்திப்போகலாம் உனக்குத் திறமை இல்லை. ஏதோ உன் ஆயுளை இங்கே கழித்து விட்டாய்; உன்னைப் போகச் சொல்லவும் எனக்கு மனமில்லை. வரவர வேலையாட்களின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. தடியெடுத்தவனெல்லாம் வேட்டைக்காரனாக இருக்கிறான். வேலையை ஒழுங்காகச் செய்வதில்லை; ஏதாவது கேட்டால், ‘அங்கே அந்தச் சம்பளம் கொடுக்கறாங்க’, ‘அவுங்க பண்டு கொடுக்கிறாங்க’. ‘அங்கே எத்தினி நாளு லீவு கிடைக்குது!” என்று ஷறாப் பேசுகிறார்கள். எல்லாம் நீ கொடுக்கும் இடந்தான் - ஓ! ஷண்முக முதலியாரா? வாங்க, வாங்க! - சரி, நீ போய் நான் சொன்ன வேலைகளைப் பார்.”

ஐந்து நிமிஷங்களுக்கு அப்புறம் அந்த அதிகாரியை நாம் காணமுடியாது, மறுநாள் மறுபடி எப்பொழுது வருவாரோ! காரியதரிசி ஏதாவது கேட்டால், நிலையத்தின் வேலையாக வெளியே போயிருந்ததாகச் சொல்லுவார்.

வேறோர் அதிகாரி, பெரும்பாலும் மாலையில் வேலைக்கு வருவார். அவருடைய இரவுச் சாப்பாடு நிலையத்தின் கணக்கில்தான். இரவு பத்து மணிவரையில் இருந்துவிட்டு வீட்டுக்குப் போவார்.

வேலையாட்கள் குறித்த நேரத்தில் வேலை செய்வார்கள். அதற்கு முன்பும் பின்பும் எப்போது கூப்பிட்டாலும் வருவார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசக்கூட ஓய்வு இராது; ஓய்வு இருந்தாலும் பேச மாட்டார்கள். அதைவிட, கொஞ்ச நேரம் வெளியே சென்று சுருட்டுக் குடிப்பதோ, காபி அருந்துவதோ அவர்களுக்கு லாபகரமாகத் தோன்றும். ‘நமக்குக் கஷ்டமோ சுகமோ, இன்னொருவனுடைய பங்கு எதற்கு?’ என்ற மனப்பான்மையே பெரும்பாலும் உடையவர்கள். செத்துப் போனவன்போலப் படுத்திருந்தவனை மோந்து பார்த்துக் கரடி அவனை விட்டுப்போனதாகக் கதையில் தான் படிக்கலாம். இங்கே உயிரே போய் நீட்டிக்கிடந்தாலும், எந்தக் கரடியும் எட்டிக்கூடப் பார்க்காது. அவன் அவன் வேலை அவன் அவனுக்கு! செடிகளும் மரங்களும் ஒன்றோடு

ஒன்று இழைந்து வளருவது இந்த உலகத்துக்குப் புறம்பேதான். இங்கே செடி, மரம், கவிதை - ஏதும் உதவாது. இது கடுமையான வாழ்க்கை; கற்பனைக்கு இங்கே இடம் இல்லை. எவனாவது மற்றொருவனுடன் கொஞ்சம் இழைந்தால், அவனுக்கு இவன் குழி தோண்டுகிறான் என்று அர்த்தம். நான் சொல்லப்போவது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம்; ஆயினும் இது உண்மை. ஒரு நாளைக்கு வேலைகள் அதிகமாக வந்து விட்டன என்று வைத்துக்கொள்ளுங்கள். அன்று பல பேர்களுக்கு அடிக்கடி கக்கூசுக்குப் போகவேண்டிய வேலைகளும் வந்துவிடும். மணிக்கணக்காக அங்கே உட்கார்ந்திருப்பவர்களும் இருப்பார்கள். வேலை செய்வதற்கென்றே சிலர் உண்டு; அவர்கள்தாம் உள்ளே ஓய்வு ஒழிச்சலின்றி மடிவார்கள். அவர்களுக்கு வெளியுலகமே தெரியாது! இந்த நிலையம் தெரியும்; தங்கள் வீட்டைப் பற்றிச் சிறிதளவு தெரியும். ஏன், இந்த நிலையத்திற்கு உள்ளேகூடப் பிற பகுதிகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்த ஆசாமிகள்தாம் கன்னியப்பனுக்குப் பிரியமானவர்கள்; உயிர்போன்றவர்கள். இவர்களைப் பின்னும் கசக்கி வேலை வாங்கி அவன் தன் பிரியத்தை வெளியிடுவான்.

காரியதரிசிக்கு ஊரிலுள்ள பெரிய மனிதர்களைத் தெரியும். கார் நம்பர்கள் தெரியும். அவர்களுடைய பணத்தை நிலையத்துக்குக் கொண்டு சேர்க்கத் தெரியும். அதிகாரிகளுக்கு அந்தப் பெரிய மனிதர்களுக்குச் சலாம் போடத் தெரியும். தமக்குக் கமிஷன் கொடுக்கவல்ல வியாபாரிகளைத் தெரியும். நிலையத்துக்கு வேலை கொடுக்கும் வாடிக்கைக்காரர்களைத் தெரியும்; வீட்டுக்கு வேண்டிய கறிகாய்கள், நெய், தயிர் பழம் முதலியவை கொண்டு வரும் வேலையாட்களைத் தெரியும். வேலையாட்களுக்கு வேலை தெரியும்; வீட்டிலே போட்டதை ருசி பார்க்காமலே சாப்பிடத் தெரியும்; மறுநாள் சோற்றுக்கு வழி இல்லை என்றால் முணுமுணுக்கத் தெரியும்; காரசாரமாக மேலதிகாரிகளுக்கு விண்ணப்பங்கள் எழுதத் தெரிந்த சில வெளி மனிதர்களைத் தெரியும்.

நான் இப்பொழுது இந்த நிலையத்தின் தொண்டன். இந்த நிலையத்துக்கு ஒரு தனி அடையாளம் உண்டு. அதை என் சட்டையில் மாட்டிக்கொண்டுதான் நான் வெளியே போக வேண்டும். வழியில் என்னைப் பார்க்கிறவர்கள் நமக்குள்ளே, ‘அவர் எந்த நிலையத்தைச் சேர்ந்தவர்?’ என்று கேட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் கேள்வி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. என்னை அவர்கள் சமூகத்தொண்டன் என்று ஏற்றுக்கொண்டதற்கு இது அறிகுறி. தனியே நான் என்ன செய்தாலும் அது வெறும் தொண்டாக இருக்கலாம்; இதுதான் சமூகத் தொண்டு. தனியே இருந்தபொழுது நான் செய்த வேலைகள் எனக்குத் தெரிந்தன. இப்போது நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை. இருந்தாலும் இதுதான் சமூகத் தொண்டு. ‘நான் சமூகத் தொண்டு செய்கிறேனா?” என்று இப்பொழுது நான் கேள்வி கேட்கத் தேவையே இல்லை. “அதோ ஒரு தொண்டர் போகிறார்.” என்று மக்கள் சொல்கிறார்கள்.

இந்த நிலையத்தில் நான் நான்கு வருஷங்களாக வேலை செய்கிறேன். என் மூளை நாளுக்கு நாள் மழுங்குகிறது. புதிதாக எந்த வேலையும் கற்றுக்கொள்ளவில்லை. தெரிந்த வேலையிலும் வேகம் குறைகிறது. அதிகாரிகள் மூளைதான் என் மூளை. அவர்கள் சொல்வதைத்தான் நான் செய்யவேண்டும். நானாக ஏதாவது செய்தாலும். அது அவர்களுக்குப் பிடித்திருக் கவேண்டும்? அவர்களுக்குப் பிடிக்காவிட்டால், பிடிக்கும்படியாக மறுபடி அந்த வேலையை மாற்றவேண்டும். இந்த வேலை எனக்குப் பிடிக்கவில்லை; ஏனெனில் என்னிடம் இன்னும் கொஞ்சம் மூளை இருக்கிறது. எனவே வேறொரு நிலையத்துக்குப் போகிறேன்.

நான் எங்கே போனாலும் இந்த அவதி என்னோடு கூடவே வருகிறது. அந்த நிலையத்திலும் இதே கதை. மறுபடி வேறுநிலையம். இப்படி ஏழு நிலையங்களில் மாறி மாறி ஏழு பிறப்பிலும் தெரிந்து கொள்ள முடியாத விஷயமாகிய 'தொண்டு' என்ற விஷயத்தை நான் ஓரளவு அறிந்து கொள்கிறேன். இப்பொழுதும் நான் 'தொண்டன்' தான்.

'அப்படியானால் தொண்டு என்பது என்ன? நீங்கள் எந்த வகையான தொண்டு செய்கிறீர்கள்? என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

தொண்டு என்பது ஒரு பெரிய ரகசியம். அது ஓர் ஆள் அல்ல, கோபுரம் அல்ல, மிட்டாய்க்கடை அல்ல, உங்களுக்கு வர்ணித்துச் சொல்வதற்கு! அதிலும், நடுத்தெருவிலே நான் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லக்கூடாது. தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அக்கறை இருந்தால். நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள்? தொண்டு செய்யும் எங்கள் நிலையத்துக்கு வராதீர்கள்.

"வீட்டுக்கு எப்பொழுது வரலாம்?" என்று கேட்கிறீர்களா?

அது எப்படி சொல்ல முடியும். நான் ஒரு தொண்டன்; தொண்டு செய்யும் ஒரு நிலையத்தில் இருக்கிறேன். நிலையத்தின் மூளைதான் என் மூளை, நிலையம் எப்பொழுது கூப்பிட்டாலும் எதைச் செய்யச் சொன்னாலும் - அது எனக்குத் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி; எனக்குச் சொந்த வேலைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நான் தயாராகக் காத்திருக்க வேண்டும். எனவே, உங்களுக்கு என்ன பதில் சொல்வது? உங்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ செய்யுங்கள். இதோ, ஓர் ஆள் வருகிறான், எங்கள் நிலையத்திலிருந்து உங்களோடு அப்புறம் பேசுகிறேன்.

முல்லை - 7

பழைய பெயர்

இளவழகனார்

உணர்ச்சியை எழுப்பும் கருவிகள், பல உண்டு, அவை, வீணரை மாணவராக்கும். வெற்றுத் தசையுடலைக் கொற்றச் செயலுடலாக்கி நிமிர்த்தும். இருள் பரவிய நெஞ்சத்தை ஒளிவிரவிய உள்ளமாக்கி உயர்த்தும், உணர்ச்சிக் கருவிகள், மக்களுக்கு வாழ்வு பெருக்கும் மின்பொறிகள்!

அவற்றில், சில நிலையற்றன; சில, சிலகாலம் நின்று பின் மறைவன; சில, நெடுங்காலம் நிலவிப் பேரூற்றாய்ப் பெரும்பயன் கொழிப்பன. பெயர்கள் என்னும் உணர்ச்சிக் கருவிகள், இத்தகைய அழியாப் பேரூற்றுகள்! சில பழம் பெயர்களால் வாழ்க்கையில் உண்டாகும் புத்துணர்ச்சி ஓர் எதிரற்ற பெருவெள்ளமே! இந் நாட்டின் பழைய பெயரொன்று நினைக்குந்தோறும் புத்துணர்ச்சி பெருக்குகின்றது!

இந்நாடு தமிழ்நாடு; தமிழ்மொழி வழங்கும் நாடு; தமிழ் மொழியைத் தாய்மொழியாக உடைய நாடு; தமிழர்வாழும் நாடு; தமிழர், தொழில் புரிந்து, உதவிசெய்து, வாணிகம் நிகழ்த்தி, அரசு இயற்றி, கலைகள் அறிந்து உணர்வு தெளிந்து, அருளில் உலவும் நாடு; தமிழர் இருப்பிடம்; தமிழர் இயற்கை இல்லம். இதன் பழைமை காலங்காணாதது; இதன் நாகரிகம் உலகங்காணாதது; இதன் எல்லை நாற்புறங் கடல். தன் பெயர், பழம்பெயர், தமிழ்ப் பெயர் நாவலந்தீவு. பின்பு எத்தனையோ பெயராக மாறி இன்று வழங்கும் பெயர் புதுப் பெயர், அயற் பெயர், கொச்சைப் பெயர் 'இந்தியா'

தமிழன் தனது நாட்டின் பழைய பெயரை மறந்தான்; இழந்தான்; நிலைகுலைந்தான். எல்லை சுருங்கி. ஆற்றல் ஒருங்கி, வலிமை அடங்கி, உணர்வு மயங்கித் தனது பழம்பெரு நாட்டின் ஒரு சிறு மூலையில், நிலக்குப் பொறையாய் இடந்தெரியாமல் ஒடுங்கிக் கிடக்கின்றான், யார் இவனை இப்படி நசுக்கிப் போட்டது! உலகம் சொல்லும் 'காலம்' என்று; வரலாறு சொல்லும் முதலில் ஆரியம், பின்பு பலவும் என்று; சமயம் சொல்லும் 'வினை' என்று; கல்வி சொல்லும் 'அறியாமை' என்று;

பொதுமை சொல்லும் ‘உட் பிளவு’ என்று அனைத்தினும் உண்மை உண்டு. ஆயினும், முயற்சியின்முன், உணர்ச்சியின்முன் இவை அத்தனையும் பொருளல்ல.

‘நாவலந் தீவு’ என்னும் பழைய பெயர் தக்க உணர்ச்சிப் பொறி! அதன் தமிழ் அமிழ்த எழில்; இறவாத் திரு! அப் புணைபிடித்துக் கிடக்கின்றான் தமிழன். அமர வகையுண்டு; கடக்க நெறியுண்டு; கரையேற முறையுண்டு. பின் என்னவேண்டும்? முயற்சிவேண்டும்; அதற்கு, உணர்ச்சிவேண்டும்.

“நாவலந் தீவு’ என்னும் பழம் பெயர், அதன் தமிழ் எழில், தமிழற்கு ஊக்கம் ஊட்டுகிறது. சங்க நூல்களாகிய பழைய கருவூலம் அனைத்தும் வழங்க ஆயத்தமாய் உள்ளது; தமிழகத்தின் இயல்பாகிய வீரப்பெருந்தன்மை வானமாய் விரிந்து இடங்கொடுக்கின்றது. அவ்வானத்தில் அறிவு, உணர்வு, அருள் என்னும் முக்சுடரும் ஒளி உமிழ்ந்து விளக்கங் காட்டுகின்றது. தமிழுள்ளமே! விழித்துக்கொள், எழுந்து நில், உணர்ந்து பார், முயன்று வெல், விளங்கி வாழ்!

> “அறனிழுக்காது அல்லவை நீக்கி, மறனிழுக்கா
> மானம் உடையது அரசு”

என்னும் மணிக்குறளை மறவாதே! அறனிழுக்காது உன்வரையில் ஒழுங்காயிருக்கும் வீரமட்டும் போதாது. உன்னை எதிர்த்துக் கீழறுக்கும் அயல் வல்லமைகளாகிய அல்லவையும் நீக்கி மானமாய் இருக்கமுயல்! உய்யலாம்.

நாவலந் தண்பொழில் மன்னர்[1] ஏவல் கேட்பப் பார் அரசாண்ட பாண்டியன் மரபினை நீ! அருந்தமிழ் ஆற்றல் அறியாது[2] விருந்தின் மன்னரால்[3] இந்நாட்டுக்கு இடையிடையே நேர்ந்த உட்குழப்பமுழுதும் ஒருங்கு நீக்கி, இமிழ் கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய,[4] குமரியொடு வட இமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரன்[5] வழியினை நீ! நாற்புறமுங் கடல் சூழ்ந்து மாபெருந் தீவாய் விளங்கிய மிகப் பழைய காலத்திலேயே, இந்நாடு முழுதும் நறும் பூமலிந்து தீந்தனிபயந்த நாவல் மரங்கள் பொழில் பொழிலாய் ஓங்கி எழிலோடிய[6] இயற்கையில் இன்பங்கொண்டு, ‘நாவலந் தீவு’ எனத் தமிழாற் பெயரழைத்து மகிழ்ந்த நெடும் பழைய நிலையினை நீ! நாவலாற் பெயர் பெற்ற தமிழுலகத்தின்[7] இப் பெயர்ச் சிறப்பினை நீடு நினைந்து, அதன் தலைநகரமாகிய பூம்புகார்க்கும் இப்பெயரே பெயராக முதன் முதல் வழங்கச் செய்த[8] செந்தமிழ் ஊக்கம் பொங்கக் கொழிந்த சோழன் நெறியினை நீ!

அன்றியும், இவ் வகன்பெருந் தீவினைச் சூழ்ந்து ‘அந்தரத் தீவுகள்’ என[9] விளங்கிய பன்னூற்றுக் கணக்கான[10] சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய தீவு பலவினும் சென்றேறி அங்குத் தங்கள் புலிக் கொடி மீன்கொடி நின்று சால்புறக் கண்ட[11] பேர் எழுச்சியினை நீ! இவ்வாறு, முதுபொழில் மண்டிலத்[12] தோன்றல் நீ!

தமிழுள்ளமே! இந்நாள் நினது நிலையை எண்ணிப் பார், எண்ணிப் பார்! அறத்தொடு பொருந்திய மறத்துறையே[13] இனி நின்முன் நிற்பது ! வீறி எழு ! எழு!

முல்லை - 7

---

1. (சிலப்.173) "மன்னர்-மற்றுள்ள குறுநில மன்னர்" என்பது அரும்பத உரை. இதனால், அக்காலத்தில், நாவலந் தீவு முழுவதும் சேர சோழ பாண்டியரல்லாதார் குறுநில மன்னரே என்பது பெறப்படும்.
2. சிலப். 26:161
3. சிலப். 26:160
4. சிலப். 25:165.
5. சிலப். 29: உரைப்பாட்டு.
6. "பூமலி நாவற் பொழிலகத்து" (புறப்-வெ. 226)
   "தீங் கனி நாவல் ஓங்கும் இத் தீவினுக்கு" (மணி 15:20)
7. பெரும்பாண் 465. நச். உரை.
8. மணிமே. பதிகம் 28-30
9. மணிமே 25: 224
10. மணிமே. 6: 165-6
11. பாரதியார் பாடல்
12. மதுரைக் காஞ்சி 190
13. சிலப். வஞ்சிக் காண்டக் கட்டுரை, 10-11.

தாய்மொழிக்கு முதன்மை

முருகு. சுப்பிரமணியன்

"நடுத்தரப் பள்ளிகளில் பள்ளிக்கூடம் அமைந்திருக்கும் நாட்டு மொழி முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் இருக்க வேண்டுமென்று" சென்னை அரசியலார் உத்தரவிட்டிருக்கிறார்கள். இச்செய்தி தமிழ் மக்களின் காதுகளில் இன்பத்தேன் பாய்ச்சும் என்பதில் ஐயமென்ன? பலர் 'இது கனவோ, நனவோ' என்று ஐயுறும் வகையில் இந்தப் பெரும் மாறுதல் நடைமுறைக்கு வருகிறதென்றாலும் மிகையில்லை. ஆங்கிலேயர் ஆளுகையில் தாய்மொழிக்கு முதன்மை ஏற்படும் என்று பலர் எதிர்பார்க்கக் கூட இல்லை. 'அது எப்படி முடியும்?" என்று எதிர்ப்புச் செய்தோர் பலராவர். இந்நிலையில் தமிழகத்தை உய்விக்கும் முறையில் தமிழுக்கு முதன்மைதரக் கல்வி மந்திரியார் செய்துள்ள இவ்வேற்பாடு நமக்கு அளவுகடந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழ் இரண்டாவது மொழி என்பது பெருத்த அவமானம்; நாம் பிறருக்கு அடிமை என்பதை முரசறையும் நிலையாக அது விளங்கிற்று. இரண்டாவது மொழியானாலும் கட்டாயமுண்டா என்றால் இல்லை; விரும்பினால் வடமொழி முதலிய வேறு மொழிகளும் படிக்கலாம். இப்படியிருந்த ஒரு ஏற்பாட்டினால்தான் தமிழகத்தில் தமிழ்த் தெரியாத பல அறிவாளிகள் (?) தலைவர்களாகவும் விற்பன்னர்களாகவும் வருவதற்கு முடிந்தது. இப்பொழுது கல்வி மந்திரியார் செய்துள்ள ஏற்பாடு தாய்மொழிக்கிருந்த அவமானத்தைப் போக்குவதோடு எல்லோரும் பயிலவேண்டுமென்ற கட்டாய நிலையையும் தாய்மொழிக்கு அளிக்கிறது. இனி, தாய் மொழியில் தக்க புலமையின்றி அறிவாளிகள் வெளிவருவது முடியாதல்லவா?

தாய்மொழியில் முப்பத்தைந்து வாங்கினால் போதும், ஆங்கிலத்தில் நாற்பது வாங்கவேண்டும். இவ்வாறு உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வுச்சட்டம் இதுவரை சொல்லி வந்தது. அப்படித் தாய்மொழியில் குறைந்த மதிப்புப் போதுமென்று கல்வித் துறையாரே சொல்லிவிட்டால் மாணவர்கள் தாய்மொழியை எப்படி விரும்பிக் கற்பார்கள்? இதனாலும் தாய்மொழியறிவு மாணவர்களுக்குச் சரிவர வரவில்லை. இந்தச் சட்டமும்

இப்புதிய ஏற்பாட்டினால் நிலை குலைந்துவிடும். தாய்மொழி முதல்மொழியாதலால் அதில் அதிக மதிப்பு வாங்கவேண்டும் என்று சட்டம் ஏற்படுவது இயற்கைதானே!

பள்ளியில் பாடங்களைத் தமிழில் போதிக்க வேண்டுமென்ற சட்டம் வந்தபோதே ஆங்கிலத்தின் ஆட்சி ஆடத் தொடங்கியது என்றாலும், முதன் மொழி என்ற வகையில் சட்டதிட்டங்கள் ஆங்கிலத்தில்தான் இருந்தன. ஆங்கிலம் வகித்து வந்த இடத்தின் மதிப்பும் சிறிதும் குறையவில்லை. இப்புதிய ஏற்பாடோ பள்ளிகளின் ஆட்சியையே ஆங்கில மொழியின் பிடியிலிருந்து தளர்த்தி விடுகிறது. இனி, தாய்மொழியே பள்ளிகளில் அரசாட்சி செலுத்தும்!

தமிழ் ஆசிரியர்கள் என்றால் கேலிசெய்வார்கள் யாரும். அப்படியொரு நிலை பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. பள்ளிக் கூடங்கள் தமிழாசிரியர்களை அவ்வளவு கேவலமாக நடத்தின. பள்ளிக்கூடத்தில் குறைந்த சம்பளம் அவர்களுக்குத் தான்; அந்தஸ்திலோ அவர்கள் கடைசிவரிசைதான். அடிமை மொழியைப் போதித்தவர்களல்லவா? இப்புதிய ஏற்பாடு தமிழாசிரியர்களின் வாழ்வுக்கே மறுமலர்ச்சியைத் தருகிறது. இனி அவர்கட்குத் தான் முதலிடம் - இனி அவர்களும் தலைமை ஆசிரியராகலாம் ஏன்? அவர்களே தலைமை ஆசிரியராக வரவேண்டுமென்ற நிலைமையும் ஏற்படும்.

கல்வி மந்திரியார் வாழ்நாளெல்லாம் கல்வித்துறையிலே பாடுபட்டவர். தன் அனுபவங்களால் விரைந்து பெருமாறுதல்களைச் செய்து வருகிறார். அவர் செய்துவரும் மாறுதல்கள் இப்பொழுது செல்லும் வழியிலேயே போய்க்கொண்டிருக்குமானால் 'முன்னேற்றத் தமிழகம்' விரைவில் தோன்றிவிடுமென்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. கல்வி மந்திரிகளாயிருந்தவர்கள் பலர். தமிழன்னைக்கு (அன்னையாக்காமல்) வேலைக்காரியாக இந்தியைக் கட்டாயம்செய்தவர்களும் உண்டு. அப்படியெல்லாமின்றித் தமிழ்த்தாயை அரியணையில் ஏற்றித் தலைவணங்குகிறார் கல்வி மந்திரியார். அவர் பல்லாண்டு வாழ்க!

முல்லை - 7

மனமும் மணமும்

நா. திருஞானசம்பந்தன்

ஓர்நாள். பகல், நண்பகல். நிலம், முல்லை நிலம். நிலத்திலே சிறுகுடில். இல்லிலே மிக மகிழ்வோடு கூடிக் குலாவி இருந்தார்கள் தலைவன் தலைவியர். தலைவியை விட்டுப் பிரிந்து பொருள்தேடச் செல்லக் கருதியிருந்தான் தலைவன்.

இதையறிந்த தலைவியோ 'தாங்கள் பொருள் தேடச் சென்றுவிட்டால் யான் மட்டும் இங்ஙன் எவ்வாறிருப்பது' என்று ஏங்கினாள்.

'வருந்தாதே! கார்காலம் தோன்றியவுடன் வந்துவிடுகின்றேன். சின்னாள் எனக்காகப் பொறுத்திரு. பொருள் தேடி வரச்செல்ல வேண்டியதோ மிக முக்கியமாக அவசியமாக இருக்கிறது. ஆகவே, நான் மீண்டு மொருமுறை வருந்தாதே என்று கேட்டுக்கொள்கின்றேன். நான் போய் வருகிறேன்' என்று ஆறுதலுரை சிலபல இயம்பிச் சென்றான்; தேரிலே பாகனொடு.

கார் காலமோ வந்துவிட்டது. சின்னாட் சென்றபின். தலைவி 'தன் உயிர் நாயகன் பொருள்தேடச் சென்றாரே. இன்னும் வரவில்லையே. அவர் சென்ற வழியில் என்ன நிகழ்ந்தவோ என்னவோ' என்று கலங்கி வருந்திக் கொண்டிருந்தாள்.

அத்தொடு மட்டுமல்ல; 'தலைவர் வருகிறார், வந்துவிட்டார்' என்று கதவைத் திறந்தாள். எட்டியும் பார்த்தாள். வரவில்லை, ஏமாந்தாள். தாளும் மனமும் புறம்பாகச் சென்றாள், கதவைச் சாற்றிக் கொண்டு. சிறிது நேரம் இல்லினுள் இருந்துவிட்டுப் பிரிவு பொருளாய், 'வருவார் தலைவர்' எனத் திறந்தாள், கதவை. காணாமல், 'வாரார் என் உயிரனையர்' எனச் சாற்றினாள்; கதவு தேய்ந்த போம் படியாக.

பெண்களுக்கு வருத்தத்தைச் செய்யும் கார்காலம் முதிர்ந்துவிட்டது. தலைவியும் மிக வாடினாள். 'சரி, இனி என் செய்வது' என்று கருதித், தலைவன் சென்ற திசையை நோக்கிக் கண்ணாடிக் கன்னத்திலே கையை வைத்து, ஒரு பகுதிக் கதவிலே சாய்ந்துகொண்டு சோர்ந்து நின்றாள்; 'எப்போ வருவாரோ என்றன் கணவர்' என்ற ஏக்கத்தோடு.

தலைவன் கருதிச் சென்ற காரியமோ பழமாக முடிந்துவிட்டது. ஆனால், கார்காலம் தோன்றியோ வறிது நேரம் ஆய்விட்டது.

'தலைவி வருந்துவாளோ! நான் சொல்லி வந்த காலமோ வந்து விட்டதே? என் செய்வது' என்று தன்னுள்ளே கருதினான்.

கூப்பிட்டான், மாவின் மனம் தெரிந்து தான் பணிக்காமலே ஓடும் படி செய்யும் திறமையுடையவன்-இன்ன இன்ன இடத்திற்கு இன்னின்னவாறு ஓட்டவேண்டும் என்ற பகுத்தறிவுடையவன்-உணர்ச்சியும், உறுதியும் எந்த முடிவில் இருக்கின்றனவோ தலைவனுக்கு, அவ்வகை முடிவு அறிந்து மா பூட்டிய தேரை ஓட்டும் இயல்புடையவன்-மாவின் இலக்கணத்தை மாண்புடன் கற்றவன் ஆய வல்லவனை.

தலைவியிடத்திலே கூறிவிட்டு வந்தேன், 'பொருள் தேடச் சென்று, கார்காலத்திலே வந்துவிடுகின்றேன். ஆகவே, கலங்காதே!' என்று.

'கார்காலமோ தோற்றிச் சிலபல நாளிகைகளாகின்றன. நாம் வந்த திசை நோக்கி வருந்திக்கொண்டிருப்பாள் அவள். வருந்துவதோடன்றி வேறு என்னென்ன வெல்லாம் செய்யக் கருதினாளோ தெரியவில்லை. கற்பாகிய அடைப்புக் கருவியினை மனத்தகத்தே சேர்த்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருப்பாள். என்னைக் கண்டால் முழுக் கவலையும் நீங்கிவிடும் அவளுக்கு. ஆகவே, நீ தேரிலே என்னை விரைவிலே செலுத்திக் கொண்டு சேர்ப்பாய்' என்று தலைவியின் மனத்தை அறிந்த தலைமகன் தலைவியுடன் மணத்தை நடத்தவேண்டித் 'தேரைச் செலுத்து விரைவிலே' என்று பாகனிடம் கூறுகின்றான்.

'ஐந்திணை ஐம்பது' அகப்பொருள் பற்றிப்பேசுவது. அதிலுள்ள ஒவ்வொரு பாட்டுக்களும் ஒவ்வொரு பெரும் ஓவியங்களாகச் சித்தரிக்க தக்கன. அதிலொன்று இது.

'நூல் நவின்ற பாக! தேர் நொவ்விதாச் சென்றீக;
தேன் நவின்ற கானத்து எழில்நோக்கித் - தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுள்மிசைக் கையூன்றி
நிற்பாள் நிலையுணர்கம் யாம்"

முல்லை - 7

இலக்கிய உணர்ச்சி

வித்துவான் விசு. திருநாவுக்கரசு

இன்பக்கலை என்னும் பேரால் பாராட்டிக் கூறப்படுவன இலக்கியம், ஓவியம், இன்பம், இசை என்னுமிவைகளாகும். இலக்கியம் தமிழர்களுக்கு ஒரு புதிய கலையல்ல. வேற்று மொழியாளர்களுக்குப் புதியதாகத் தோன்றும் இலக்கியம் தமிழர்களுக்கு மிகமிகப் பழையது. தமிழர் இலக்கியத்தை வளர்த்ததுபோல் வேறுயாரும் வளர்த்ததில்லை. தமிழர் பிற்காலத்தில் அதனை வளர்க்காமல் விட்டதுபோல் வேறுயாரும் வளர்க்காமலும் விட்டதில்லை. இலக்கிய உணர்ச்சி அவர்கள் இரத்தத்தோடு ஒன்றுபட்டிருந்தது. அதனை எடுத்துக்காட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளே முன்னிற்கின்றன. இன்பதுன்பங்களில் - ஏன்? செயல்களிலெல்லாம் இந்த உணர்ச்சி பரவியிருந்தது. செத்தால் பாட்டு (ஒப்பாரி). கல்யாணப்பெண் நலுங்கு பாடுகிறாள். குழந்தை தூங்கத் தாய் “ஆராரோ ஆரிரரோ’ என்று தாலாட்டுகிறாள். ஏற்றப் பாட்டும், வண்டிக்காரன் தெம்மாங்கும் எதனைக் காட்டுகின்றன? இலக்கிய உணர்ச்சியை அல்லவா? சுருங்கக் கூறின் பெயரளவில் உரைநடை என்னும் உரையாசிரியர்கள் கூற்றை விலக்கிப்பார்த்தால் எல்லாம் பாட்டாக இருக்கக் காணலாம்.

இலக்கியம் பலவகைப்படும். சமய இலக்கியம், வாழ்க்கை இலக்கியம் எனப்பலபடக் கூறலாம். இவ்விருபதாம் நூற்றாண்டின் சுவை யுணர்ச்சிக்கு ஏற்ப நாம் மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். சில ருசிபார்க்க வேண்டியன; இன்னும் சில விழுங்கிவிட வேண்டியன. மிக மிகச் சில மென்று சுவைத்து இன்புற வேண்டியன. இம்மூன்றினுள்ளும் இறுதிக் கருத்தை ஒட்டியனவற்றை ஓரளவு பார்ப்போம்.

ஒரு நாட்டின் பெருமை அந்த நாட்டிலே பிறந்த பெரியோர்களைப் பொறுத்துத்தானிருக்கிறது. மேனாட்டுக்ககாரர் ஒருவர் ‘இந்தியா தேசம் எங்கள் கையிலிருந்து நழுவினும் நழுவிவிடலாம்; ஆனால் எங்கள் உயிர்நாடியான ஷேக்ஸ்பியரை இழந்துவிட முடியாது’ என்று கூறினார். இதில் எவ்வளவு உண்மை யிருக்கிறது பாருங்கள். இதைப்போல காலச் சுழற்சியில் ஒரு பெரியவர் ஒரு நாட்டிலே தோன்ற அவர் கருவியாக பல நல்லறிவாளர் தோன்றுவாராயினர். வள்ளுவரும் அவர் வழிவந்த

நல்லறிவாளரும் இதற்கொரு சான்றாவர். இலக்கிய ஆசிரியர்கள் சாகா வரம், அமரத்வம் பெற்றவர்கள் என்பது மிகச் சிறந்த ஒரு கருத்துத் தான். இதையறிந்தே, சிவப்பிரகாசர் 'மலரவன் வண்டிமிழோர்க்கு ஒவ்வான்' என்றனர். உண்மைதான். கம்பன் என்றொரு மானிடன் பிறந்து வளர்ந்து கவிமாடம் கண்டு காவியப் பொழிலகத்தே கற்பனைத்தேர் ஊர்ந்து மறைந்து கழிந்தநாட்கள் பலவாயினவே!

இயன்ற அளவு சிலவற்றையேனும் சுவையுணர்ச்சியோடு அநுபவிக்கத் தெரியவேண்டும். அந்த உணர்ச்சிதான் மனித உணர்ச்சி. அது இல்லாதவர்களை விலங்குணர்ச்சியுடையவர் என்கிறார் திருவள்ளுவர். அதுமட்டுமல்ல. அவர்கள், இருந்தாலென்ன இறந்தாலென்ன என்கிறார்.

தமிழர்கள் நான்கு நிலங்களில் வாழ்ந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இவையல்லாத மற்றொன்று பாலை, முல்லையும், குறிஞ்சியும் தம்முட் கலந்ததே பாலை என்பது. இதிலிருந்து பாலை என்பது முன்னவைகளைப்போல தனித்த ஒரு நிலமல்ல என்பது பெறப்படும். எனவே பாலையை நீக்கிப்பார்த்தால் நான்கு நிலங்களிருக்கின்றன. இந்த நான்கு நிலங்களிலும் வாழ்ந்த காரணத்தால்தான், உலகுக்கு நானிலம் என்னும் பெயர் வருவதாயிற்று. முதலில் குறிஞ்சி நிலத்துக்காட்சி யொன்றைக் காண்போம். குறிஞ்சி நிலம் - மலையும் மலைசார்ந்த இடமுமாகும். அங்கே தலைவி தோழியோடு தினைப்புனம் காவல் புரிந்து கொண்டிருக்கிறாள். தலைவனுக்கும் தலைவிக்கும் முன்னே பழக்க மிருக்கிறது. 'வாளிபாய்ந்தொருமான் வந்ததுண்டோ' என்று கூறிக்கொண்டு தலைவன் வருகிறான்.

'அம்பு முகம் கிழித்த வெம்புண்வாய
கலைமான் போந்தன உளவோ
மடமா நோக்கின் மரீஇயன படர்ந்தே'

ஒரு அழகார்ந்த கலைமான், அம்பினாலே தோல் கிழிக்கப் பட்டு குருதிவழிய விரைந்தோடிவரும் அந்தமான் வேலைப்பழிக்கும்' உங்கள் விழி கண்டு அஞ்சியோடியதோ? என்று கூறுவதன் மூலம் அவர் இருவரிடைப்பேச ஒரு வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ளுகிறான். அவன் உள்ளார்ந்த எண்ணத்தை நன்கறிந்த தோழி பலவாறு எண்ணத்தலைப்பட்டாள்.

'ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருபவன் இவனும் அல்லன்
நாந்தங் கண்ணி இவளொடு இவனிடைக்
கலந்த உள்ளமொடு கருதியது பிரிதே
நம்முன் நாணுனர் போன்று தம்முண்
மதுமறைத் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே!"

தினைப்புனம் காப்பவள் இந்தத் தலைவியுமல்ல. மானைத் தேடிவருகின்ற அளவுக்குக் காரியத்தில் கண்ணானவன் இவனுமல்ல. இருவரும் நினைப்பதும் மகிழ்வதும் வேறொன்று பற்றித்தான். இந்த அளவில் கருத்து ரசமில்லை. இருவரும் பேசிக்கொள்கிறார்களாம். ஆனால் நம்மைப் போல வாயாலில்லையாம். கண்ணால் பேசுகின்றனராம். காணும் விழிகள். பருகி உரையாடும் கண்கள்.

முல்லை - 8

வந்த வாழ்வு

எஸ்.டி. சுந்தரம்

ஒரு பைத்தியக்காரன். மதுபானம் செய்தவன். இயற்கையிலேயே கோபக்காரன். அவன் ஒரு அறைக்குள் நுழைகிறான். அங்கு ஒரு பெரிய சாராயப் பானையைக் காணுகிறான். மற்றொரு பக்கத்தில் நுரை தள்ளும் கள்நிறைந்த குடத்தையும் பார்க்கிறான். ஏற்கனவே இருந்த போதை குறைந்து போயிற்றென்று நினைக்கிறான். அக்குறைவுக்கு ஈடுகட்ட கள்ளையும் மற்றதையும் கைசோர மொண்டு உட்கொண்ட வண்ணம் தள்ளாடுகிறான். கண்ணிருண்டு விடுகிறது. சுருத்தும் கட்டையாகிறது. உணர்ச்சி வற்றிய உடலில் மனிதப் பண்பு அணுவேனும் இல்லை. தெளிவு என்ற சொல் உலகில் பிறந்ததே தவறு என்று கூறுவதுபோல் சுருண்டாடி மருண்டு திகைக்கின்றான்.

உலகம் புரண்டு சுற்றுகிறது. உருண்ட அவன் செவ்விழிகள் சொக்கிமூடத் தவித்தன. தூங்குவதும் தவறு என்ற கொள்கையுடையான்போல் கண்களைக் கசக்கிக் கொள்கிறான். அருகிருந்த தண்ணீரை வாயில் ஊற்றி விழுங்குவதற்குப் பதிலாக, தலைமீது கவிழ்த்து முடியை நனைத்துக்கொள்ளுகிறான். உடன் தென்றலும் வீசுகிறது. செத்துப்போன அவன் உள்ளத்திற்குள் வெளியிலிருந்து ஏதோ ஒரு மனித சக்தி புகுந்து ஓலமிடத் தொடங்குகிறது. ‘போதும் இனி குடிக்காதே” என்று அறிவாணையைப் பிறப்பிக்கின்றது. அந்த மூன்று வார்த்தைகளை எழுப்பி விட்ட அந்த சக்தியின் மீது அப்பேயனுக்கு அடங்காத கோபவெள்ளம் எழுகிறது. கரைமீறிப் புரண்டு ஓடுகின்றது. ‘சேச்சே! எனக்கா புத்தி சொல்லுதே’ என்று அவனது கறுத்துப்போன பல்வரிசையை அழுத்தி நெறிக்கின்றான். காட்டில் மேயும் பெரிய விஷத்தேளைக் கல்லால் நொறுக்குவது போல் ஒரு பயங்கர சப்தம் கேட்கிறது.

அந்தக் கொடிய குரூரமான கோபத்தைச் செயலாக்கி வெளியேற்றாவிட்டால் அது அவளைக் கொன்று விடும் போன்ற உணர்ச்சி. குடிகாரன் நெஞ்சத்தில் கோபம் குமுறியெழுந்தால் அதற்குமாற்று அவன் செய்யும் அரக்க விளையாட்டுத்தானே? சுற்று முற்றும் பார்க்கிறான். ஒரு பலகைமீது இருந்த பளபளக்கும்

இரும்பின்மீது அவன் நாட்டம் நிலைக்கின்றது. அது நேர்த்தியாகத் தீட்டப்பட்ட ஒரு வாட்டமான முடிவழிக்கும் கத்தி! மின்னித் தூங்கும் அக்கருவிக்கு வேலைதர எண்ணிவிட்டான்1 அதற்குப் பசி யற்றபோதே தகாத உணவை யூட்டக் கருதிவிட்டான்!

ஓநாய்க் கண்களால் ஒருகணம் துளவினான். ஒரு தொட்டிலில் ஓராண்டு நிறைந்த பச்சைக் குழந்தை மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சிசுவின் ஜீவகளையான சுந்தர வடிவம் இவனது காதலுக்குரிய இருட்டைக்கண்டு ஏளனம் செய்கிறது என்ற கற்பனையையும் உற்பத்தி செய்து கொண்டான். ஜீவனுள்ள மிருகத்துக்கு வரும் கோபம், மற்றுமொரு உயிருள்ள பிராணியைத் தாக்கினால் தான் ஆறுதல்பெறும், என்ற மனப்பண்பை மனனம் செய்த மகா அறிஞன்போல் உறக்கத்தில் மூழ்கியிருந்த அக்குழந்தையை வெறிக்கப் பார்த்து நின்றான்-பால் மணம் மாறாத சிறு உதடுகள்-எடுத்ததுமே வாடிப்போகும் இளந்தளிர் மேனி. ஈக்களும் கொசுக்களும் வட்டமிட்டு மொய்த்ததால் குழந்தை புரண்டு படுத்தது. வெறி நாயின் எதிரில் கொஞ்சம் ஒட்டி ஊசலாடும் உயிரோடு நழுவப் பார்க்கும் மூஞ்சுறு எலியின் நிலையிலே அக்குழந்தை புரண்டது- கொண்டாட்டம் குடியனுக்கு.

பாதகன்! பலங்கொண்டமட்டும் தொட்டிலை ஆட்டுகிறான்! எதிலாவது மோதி உயிர்ச்சேதம் ஏற்பட்டால் என்னசெய்வது? முழு விழிப்புடன் குழந்தை அலறத்தொடங்குகிறது! இவனது உபசரணைக்கு ஏற்ற மரியாதை தரவில்லையென்று சிசுவின்மீது சீற்றம் மூளுகிறது. குழந்தையின் அழுகை இவன் கோபத்தை உரமிட்டு வளர்த்துவிட்டன.

சிரித்தான்-கத்தியை விரித்தான். இவ்வாறு நினைத்தான்...இந்தக் கத்தியால் மாவுபோன்ற குழந்தையின் வயிறு, மார்பு, கை, கால்கள், கன்னம், தலை இங்கெல்லாம் சித்திரக் கோலத்தைக் கீறி அதில் வரும் இரத்தத்தை அனுதாபத்தோடு துடைத்துத் தனது மனித இரக்கத்தைத் தாராளமாகக் காட்ட வேண்டுமெனத் துடித்தான்.

இந்தக் குடிலனைப் போன்றுதான் மனித சமூதாயத்தைச் சித்திரவதை செய்யும் பிற்போக்குச் சக்திகளும் ஆங்காங்கு தலைவிரித்தாடுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனி சமூக இனத்திலும் ஏன் ஒவ்வொரு வீட்டிலும் இந்த போதைக்காரனைப் போன்று, பிற்போக்கு விஷயத்தை வயிறுநிரம்பக் குடித்துக் கூத்தாடும் கும்பல்கள் இன்றுவரை அழியாமல் அழிநடனம் புரிவதையே காணுகின்றோம்-சமுதாயக் குழந்தை எப்படியும் காப்பாற்றப்படத்தான் வேண்டும். பிற்போக்கின் மயக்கம் பிடித்த குடிகார வெறியனை அடக்கிவிரட்ட இனிய சொல்லால் முடியாது. இதோபதேசத்தால் இயலாது. இதிகாச விளக்கவுரையைப் பாராயணம் செய்வதற்குள் குழந்தைக் கொலை இரத்தத்தில் பிணமாகித் தவழ்ந்து நீந்தச் செய்துவிடுவான்.

ஒரு முரட்டு ஆள் தேவை; கொலையாளியின் மண்டையைத் தாக்கியோ அல்லது கட்டி வெளியில் உருட்டவோ. அதே போல்

சமுதாயக் குழந்தையைப் பழம் போதையுடன், கீறல் செய்யவிரும்பிய பிற்போக்கும், யதேச்சாதி காரமும், மதவெறியும் கொண்ட மண்டையர்களை அறிவில் தாக்கித் திருத்த பல துணிவான பிறவிகள் தேவையை யெண்ணி நாடு தவித்து நின்றகாலம். நாட்டின் தவிப்பை மக்களிடம் சொல்வது யார்?

அந்தத் துணிவான தூயவாணியின் அலையை வானளாவ ஒலிபரப்பிப் புதிய வீரம் பொங்கச் செய்யத்தான் தனது மனிதப் பிறவி என்று எண்ணினார் மகாகவி பாரதியார். கோழைகள் தனது இலட்சியப் பாதையில் மறைந்துவந்து பின்னால் தொட்டுச் சீண்டுவார்களே என்ற அச்சத்தை முதலில் ஓட்டிவிட்டார்.

தான் ஒரு விடுதலையான பிறவி என்பதைத்தானே உறுதி செய்துகொண்டார். வேறொருவன் தனக்கு விடுதலை ஜோசியத்தைப் பார்த்து தட்சிணை பெறவேண்டுமென்று நினைக்கவில்லை. அவர் சிந்தனைக்குஅவர்தான் மகா சக்ரவர்த்தி-மற்றவரும் அவரவருள்ளத்துக்கு மனனாதி மன்னர்கள் தான். இவ்வாறு தோன்றிய விடுதலை எண்ணமுள்ள அரசர்கள் அனைவருமே ஒன்று கூடுகையில் வேற்றுமைக்கு இடமிருக்காது. சம பலமுள்ளவர்கள் தமக்குள் விரோதித்துக் கொள்ளார்கள். எங்கும் இடையற்ற கட்டுப்பாடு நிலவும்-எண்ணியது விளங்கும்-என்ற உயர்ந்த தத்துவத்தின் வரிவடிவந்தான் அவர் தீட்டிய கவிதைகள். நொந்து அழுகிய புழுக்குட்டையாயிருந்தது சமூகம். அதன் விஷக்காற்றை யெரிக்கும் வீரச் சூரியனாய் விளங்கினார். அவரது கவிதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்ச்சிக்கோளம். அதன் வைத்யத்திலே குளிர்காய்ச்சல் நீங்கிய நாடு வாழ்க.... வந்த வாழ்வைக் காப்போம்....!

முல்லை - 8

இலக்கியத்தைப் பற்றி

ரகுநாதன்

பிறந்த கதை

மனிதன் எப்படி இயற்கையோடு ஒட்டிவாழக் கற்றுக் கொண்டான்? இயற்கைக்கு அவன் பணிந்து செல்கிறானா, இல்லை-அதை வெல்லுகிறானா? பரம்பொருள் என்னும் ஒன்றுதான் இவனைக் கற்பித்ததா, இவன்தான் பரம்பொருளைக் கற்பித்தானா? என்றெல்லாம் பல கேள்விகள். இவையெல்லாம் என்றும் விடியாதவை. இந்தக் கேள்விகளெல்லாம் மனிதவர்க்கம் பூண்டற்றுப் போனாலன்றி மறையாத புதிர்கள். எனினும் இவைபோன்ற கேள்விகளுக்கெல்லாம் தத்துவதரிசிகளும், வியாக்கியான கர்த்தர்களும், இலக்கிய பிர்மாக்களும் விடையளிக்க முயன்றார்கள்; முயன்றும் வருகிறார்கள். இந்தக் கேள்விகளெல்லாம் கணத்துக்குக் கணம் மாறும் வெறும் ஷேர் மார்க்கட் நிலவரக் குழப்பங்கள் போலல்ல; மனித அறிவுக்கு உணவும், ஊக்கமும் அளிக்கும் அழியாத உண்மைகள் அல்லது ஊகங்கள். மேலும் இந்த ஊகங்களும் உண்மைகளுமே மனிதனின் சிந்தனைக் குகையில் புடமிட்ட சூரணங்கள் தான். மனிதனின் சிந்தனாசக்தி நித்யமானது. எந்தக் துர்வாசராலும், மக்கிமடிந்து போகும்படி சபிக்கமுடியாதது. மனிதனுடைய உயர்வே, 'மனிதன் சிந்தனைசெய்யும் பிராணி' என்பதைப் பொறுத்துதான். மனிதன் சென்றதைச் சிந்திக்கிறான்; செல்பவற்றைச் சிந்திக்கிறான்; செல்லப்போகிறவற்றையும் சிந்தித்துப் பார்க்கிறான். இந்தச் சிந்தனையில் எழுந்த எண்ணங்களைப் பிறருக்கும் எடுத்துக் கூறவேண்டும் என்ற ஆசை அவனைப் பிடித்து உந்துகிறது. இப்படி நெஞ்சில் இடம்பெற்று, சிந்தனை என்ற வாலைக்குழாயின் மூலமாய் வடித்தெடுத்த மதுச் சரக்குத் தான், கலைகள்.

'மனிதன் சிந்திக்கிறான்; சிந்திப்பதைப் பிறருக்கும் எடுத்துக்கூற விரும்புகிறான்; சமயங்களில் செயல் வடிவாக்கவும் முனைகிறான்' என்ற அடிப்படையில் எழுந்தவைதான் இன்றைய மனுஷ சமுதாயத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி, கலைகள், இலக்கியங்கள் எல்லாம். இந்த நோக்கிலே, அதாவது சிந்தனை என்ற பாதையிலிருந்து விலகாமல்

ஒட்டிச்சென்றோமானால், 'கனவு' என்ற ஒரு நிலை இருப்பது தென்படும். கனவு என்றவுடன் ராத்தூக்கக் கலக்கத்தில் காணும் சொப்பனவஸ்தையைப்பற்றிப் பேச்சில்லை. 'கனவு' என்ற பதத்திற்கு 'நனவு அல்லாதது' என்ற எதிர்மறைப் பொருள்கொண்டு பார்த்தால், 'நடக்கக் கூடிய,' 'நடக்கக் கூடாத,' எனினும் 'நடக்காத' ஒன்றைப்பற்றி மனிதன் சிந்தனை செய்வதுதான் கனவு என்று கொள்ளலாம். ஆதி மனுஷன் முதல் இன்றைய மனிதன் வரை எல்லாரும் சிந்திக்கிறார்கள்; கனவு காண்கிறார்கள். நாம் இப்படி வாழவேண்டும், இப்படியெல்லாம் வாழ்ந்தால் நன்றாயிருக்கும் என்றெல்லாம் கனவு காண்கிறான். இந்தக் கனவுகளின் உறுத்தலால் விளைந்தவைதான் இன்றைய விஞ்ஞானமும், இலக்கியமும். விஞ்ஞானம் என்பது மனிதக் கனவுகளைக் செயல்முறையில் சோதித்ததின் விளைவாக எழுந்த திட்டவட்டமான உண்மைகளின் மேல் எழுந்த ஒரு சாஸ்திரம்; இயற்கையின் நுட்பதிடபங்களை மனிதன் கண்ட அளவுக்கு எடுத்துக் கூறுவதே பௌதிகம் ஆனால் இலக்கியம் அப்படியல்ல. இறுதி கண்ட முடிவுதான் அதற்கு அஸ்திவாரமாயிருக்க வேண்டியதில்லை. கனவு நிலையேபோதும்.

தரையில் நடந்த மனிதன் பறக்கும் பறவையைப் பார்த்தான்; தானும் பறக்க எண்ணினான். நீந்தும் மீனைப்பார்த்தான்; தானும் நீந்த எண்ணினான். அடைய முடியாத இந்த ஆசைகள் அவன் மனத்திலே பரம்பரை பரம்பரையாய் எதிரொலித்து வந்திருக்கின்றன. பறக்க முடியாத மனிதன்தான் பறக்கும் மந்திர ஜமுக்காளத்தையும், புஷ்ப விமானத்தையும் கற்பித்திருக்கிறான்; நோய்களைக் குணப்படுத்த முடியாதவனுக்குத்தான் சஞ்சீவி பர்வதத்தைப் பற்றிக் கனவு காணமுடியும்; எதிரியை எந்த விதத்தில் கொல்லுவது என்று திகைப்பவனுக்குத்தான் சக்கராயுதத்தைப் பற்றிய நினைவு எழும். வானத்தில் பட்டம் வளைந்து நிமிர்ந்து நீந்தும்போது, பட்டத்தைப் பறக்கவிடும் பையனுடைய மனமும் எப்படிப் பட்டத்தின் அசைவோடு நீந்திக் கொண்டிருக்குமோ, அந்த மாதிரியே இந்த சிருஷ்டிகளும் தன்னுடைய ஆசைகளை மனிதன் இப்படிப்பட்ட கனவுக் கோட்டைகளின்மேல் நிறுத்திவைத்தான். அதன் விளைவே பண்டை இலக்கியம்; 'மித்தால்ஜி' என்று கூறப்படும் இதிகாசக் கதைகள். இவைகள் கனவுகள்தான்; எனினும் இவற்றால் பயனில்லை என்று ஒதுக்கிவிடமுடியாது. பண்டை மனிதனின் அபிலாஷைகளும் ஆசாபாசங்களும் எந்த நிலையில் இருந்தன என்பதை இக்கதைகள் காட்டும். வாழையடி வாழையாக வரும் தன் வம்சத்தில் யாரேனும் தன் ஆசையை, பிரத்தியட்சப் பிரமாணமாக்கி விடுவான் என்ற ஆர்வமும், நம்பிகையும் அவனுக்கிருந்திருக்கவேண்டும். இலக்கிய வளர்ச்சியே இந்தக் கனவுகளின் அடிப்படையிலேதான் ஆரம்பமாயிற்று. இந்தக் கனவுகளை வெளியிட பாஷை ஒரு கருவியாக அமைந்தது. பாஷையின் அடிப்படையாக எழுந்த இந்தக் கனவுகளே இலக்கியம். இலக்கியம் பிறந்த கதை இது.

'இலக்கியம் என்றால் என்ன?" என்ற கேள்வியை இந்த அடிப்படையில் எழுப்பலாம்: எழுப்பாமலிப்பதே நல்லது. ஏனெனில், காரணகாரியத் தொடர்பைக்கொண்டு ஒரு பரந்த விஷயத்திற்கு இலக்கணம் வகுத்துவிட முடியும் என்று எண்ணுவதைப்போல முட்டாள்தனம் வேறு கிடையாது. எனினும் இந்தப் புத்திசாலித்தனமான முட்டாள்தனத்தை உலகில் எல்லோருமே செய்து வந்திருக்கிறார்கள். அவர்களை வாழ்த்த வேண்டும்; குற்றம் சொல்லமுடியாது. காரணம், அவர்கள் மனசில் பட்டதைச் சொல்லியிருக்கிறார்கள். கடவுள், இலக்கியம் இரண்டும் அவ்வளவு விசாலமானது; பரந்தது; அனாதியான தத்துவம். இந்தத் தத்துவங்களைப் பற்றிய விசாரணையிலிறங்குவதும் அவசியம். ஆனால் அவற்றை 'ஈரிரண்டு நாலு, நாலிரண்டு எட்டு' என்ற கணித வாய்ப்பாட்டைப்போல் வகுத்துக் கூறிவிடமுடியாது. எனினும் திருப்தி தரும் பதிலளிக்க முயலலாம். பரிபூரணத்துவம் என்ற அர்த்தத்தை எந்த விளக்க வியாக்கியானமும் எய்திவிடமுடியாது. 'ஒவ்வொரு விஷயத்திலும் எந்தக் காலத்திலும் ஓரளவு உண்மை கண்டுபிடிக்கப்படாமலே மிஞ்சி நிற்கிறது' என்று ஒரு பிரஞ்சு ஆசிரியன் கூறுகிறான். இதுதான் உண்மை. அணுதத்துவம் நாளுக்கு நாள் விருத்தி எய்தி வருவதையும் நாம் பார்த்து வருகிறோம். விஞ்ஞானம் வளர்க்கிறது. ஆனால் அணு குண்டுதான் இந்தத் தத்துவத்தின் சிகரக் கும்பம் என்று சொல்லிவிடமுடியுமா? அது போலத்தான் இலக்கிய வளர்ச்சியும்.

ஆதலால் இலக்கியத்தைப் பற்றியும் நாம் திருப்தியான பதில் அளித்துவிடமுடியாது. காரணம் சூத்திர வகுப்பே இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்து அமைவதுதான், செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டு வீட்டைக் கட்டமுடியுமே ஒழிய, இஞ்சினீயரின் பிளானைக்கொண்டு வீடு கட்டிவிடமுடியாது. எனினும் இன்று நம் கண் முன்னே பல நூல்கள் படிப்பதற்கு இருக்கின்றன. ஆதலால் இலக்கியத்தில் இன்றைய வரையிலும் நாம் கண்டுள்ள உயர்வு வீழ்ச்சிகளை வைத்துத்தான் இலக்கணம் சொல்லமுடியும். இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணமேயன்றி இலக்கணத்துக்குத் தக்க இலக்கியம் அல்ல. இலக்கணம் என்பது ஒரு செருப்பு. பாதம் வளர வளர அதுவும் வளரவேண்டும். மாற்றப்படவேண்டும். ஆனால், அது வளராமல் காலைக் கடித்ததென்றால், அதைக் கழற்றி எறிந்து விடுவதே மேல். எனினும் காலுக்குத் தக்க செருப்பு வேண்டும் என்பதையும் மறந்து விடக்கூடாது.

எந்தக் கலையும் மனிதனுடைய சிந்தனையில் பிறந்து 'கண்மூக்கு' உள்ள ஒரு உருவ அமைப்பு பெற்றதோடு, உயிரும் பெய்யப் பெற்றதுதான் என்றே சொல்லவேண்டும். அதாவது இதய அனுபவத்தின்வெளியீடு. மனித சிந்தனைவழியாகப் பிறவாதது கலையல்ல. உணர்ச்சிக் குழப்பங்கள், உணர்ச்சிக் கலப்புக்களின் வார்ப்பு, அமைப்பு, விஸ்தீரணம் இவையெல்லாம் கர்த்தாவின் மனோபாவத்துக்கு விட்டுவிட

வேண்டியவை. விடாவிடில் அந்தச் சுதந்திரத்தை அவர்கள் தாமாகவே தட்டிப் பறித்துக்கொள்வார்கள். ஆனால் கட்டுக்கோப்புக்கு ஒரு உருவம் வேண்டும் என்பதையும் எந்தக் கலைஞனும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அரங்கின்றி வட்டாடிவிட முடியாது. இந்தக் கட்டுக் கோப்பு இப்படித்தானிருக்கவேண்டும் என்று வாதாடுவதும் கூடாது. எனினும் பல கட்டுக் கோப்புக்கள் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன; சில தனித்தும் நிற்கின்றன.

இலக்கணம் ஒரு வேலி, சட்டம். மனிதன் எப்படி நியாய ஸ்தாபனத்துக்காக இல்லாவிடினும் சமாதான ஸ்தாபனத்துக்காகக் கோர்ட்டை ஏற்படுத்திக் கொண்டானோ, அது மாதிரிதான் இலக்கியத்துக்கும் கூண்டு வகுத்துக் கொண்டார்கள். இலக்கியக் கனவுகளும் அபிலாஷைகளும் விருத்தி அடைந்து, இலக்கியம் வளரவளரப் புதுப்புதுச் சட்டங்களும் சட்ட விஸ்தீரணமும் நெளிவு சுளிவுகளும் தானாகவே அமைந்து விடுகின்றன: ஆதலால் என்றைக்கும் இலக்கண விசாரம் அதிகம் தேவையில்லை; அதைப் பற்றி சர்ச்சைசெய்வது வெறும் கிளியந்தட்டு விவகாரம்.

சாகாவரம்

இலக்கிய வரம்பைப் பொறுத்தவரையிலும் எல்லாமே கலைஞனின் மனோபாவத்துக்கு விட்டுவிட வேண்டியதுதான். இலக்கியத்தின் உயிர் நிலையைப் பற்றித்தான் நாம் பேசமுடியும். ஜீவநாடியின் துடிப்பு கலைஞனுடைய சிருஷ்டி வல்லமையைப் பொறுத்தது. அந்தத் துடிப்பின் பிரதிபலிப்பினால்தான் இலக்கிய ஆசிரியனுக்குப் பெயர் கிடைக்கிறது. உலக இலக்கியத்தில் இப்படிப் பெயர் பெற்றவர் பலர். உலக மகா சிருஷ்டி கர்த்தாக்களின் நூல்களை நாம் நேரடியாகவும் மொழிபெயர்ப்பு மூலமாகவும் படித்திருக்கிறோம். ஷேக்ஸ்பியர், கம்பன், மில்டன் முதலியோரெல்லாம் மனித உள்ளத்தின் ஆழத்தில் மனித சமுதாயம் சிந்திக்க ஆரம்பித்த காலத்திலிருந்து சிக்கல் அவிழாமல் கிடக்கும் எண்ணங்களின் குணபாவத்தைத்தான் தங்கள் நூல்களில் வடித்திருக்கிறார்கள். ஆனால் அவைகளெல்லாம் பரிசோதனைகள்; மிஞ்சியவை அதன் மூலம் கிடைக்கும் அனுமானங்கள்தான். அவை அனுமானங்கள் என்று கூறினால், வருத்தமடைவோர் உண்டு. இருந்தாலும் அவை வெறும் பரிசோதனைகளிலிருந்து எழுந்த அனுமானங்கள்தான். உலக இலக்கியங்களின் சிரஞ்சீவித்துவமே எந்தவிதமான காலதேச வர்த்தமானத்தாலும் சிதைவுபட்டு விடாத மனுஷ குணங்களை அடிப்படையாகக் கொண்ட வற்றைப் பொறுத்ததுதான். உலக மகா சிருஷ்டிகர்த்தர்கள் இதைத்தான் செய்திருக்கிறார்கள்.

மேலும் மனித சமுதாயம் என்றைக்கும் எட்ட முடியாத அதீத குணபாவங்களை லக்ஷிய வடிவங்களாகிய பாத்திர சிருஷ்டியில் தேக்கிவிடுகிறார்கள். இந்த லக்ஷிய வடிவம் ஒரு ராமனாகவோ,

புருட்டஸாகவோ இருக்கலாம். அவர்களை நாம் சாதாரண மனித வர்க்கத்தோடு ஒப்பிடமுடியாது; ஒப்பிடக்கூடாது. ஆனால், அந்த லக்ஷிய வடிவங்களை ஆராய்ந்து பார்த்தால் அவை மனிதன் அடைய விரும்பும் நித்ய ஆசைகளின் 'கல்யாண ரூபமாகத்தான் தோன்றும். அவர்கள் மனிதர்களாக உலவுவதில்லை. என்னும் மனிதன் என்ற பிராணி அவர்களைத் தன் வர்க்கத்தோடு சேர்க்க எண்ணுகிறது. மிஞ்சிக் கேட்டால், அது 'அதி மனுஷ தத்துவம்' என்கிறான். காரணம் தானும் அந்தத் தத்துவத்தை அடைய வேண்டும் என்ற அழியாத ஆசைதான். அந்த ஆசை நித்யமானது. ஆதலின் கற்பனையில் வடித்த அந்த லக்ஷிய வடிவங்களும் சாகாவரம் பெற்றுவிடுகின்றன. அந்த லக்ஷிய வடிவங்களை, 'நாலுபேர் சுமக்கும் இந்த மூட்டை'யை நிறுக்கும் படிக்கல்லாலேயே நிறுக்க முயன்று பின்னடைகிறார்கள். அப்போதுதான் "ராமனாம், லக்ஷ்மணனாம்! எல்லாம் பொய்!" என்று சீறுகிறார்கள். பொய்தான். பாத்திர வகுப்பு பொய்யாயிருக்கலாம். ஆனால் அது மனுஷ உள்ளத்தின் நித்யக் கனவுகளை உருவாக்கிய உண்மையான குண சிருஷ்டி என்பதையாவது உணர்ந்து கொள்ளவேண்டும். இது உலக மகா இலக்கியங்களுக் கெல்லாம் அடிப்படையானது. காரணம் மனுஷ குணங்களின் அடிப்படையான தன்மை ஒன்றுதான். உலக இலக்கியங்களின் பாத்திரங்களும் கருத்துக்களும் எட்டாப் பழமாகவும் இறக்காத தேனாகவும் இருக்கும்வரையிலும் தான் அவைகளின் வாழ்வும் கிராக்கியும் நிலைத்திருக்கும்.

கிழக்கும் மேற்கும்

எனினும் இந்த இலக்கியங்களில் வரும் லக்ஷிய பாத்திரங்கள் நடையுடைபாவனைகளால் வேறாகத் தோன்றலாம். 'கல்ச்சர்' (culture) என்று சொல்லப்படும் பண்பை ஒட்டிவரும் குணங்களை மட்டும் நாம் உணரமுடிவதில்லை. காரணம் பண்புடைமை என்பது ஒவ்வொரு நாட்டிற்கும் தனி. எவ்வளவு பரந்த நோக்கில் பார்த்தாலும் மேல்நாட்டுக் கலாசாரமும் நம் நாட்டுக் கலாசாரமும் ஒட்டவே ஒட்டாது. கவிதை எல்லாம் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்தவைகளாக இருப்பதால்தான் மேல்நாட்டுக் கவிகள் பலரை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. எத்தனை சூட்டும், கோட்டும் போட்டுக் கொண்டாலுங்கூட மேல்நாட்டுக் கலாசாரம் நமக்குப் புரியாது. ஆங்கிலப் பெண்களோடு கைகோத்துக் கொண்டு எத்தனை ஆட்டம் போட்டாலும் ஆங்கில நடனமும், சங்கீதமும் நம் இதயத்தைத் தொட்டுவிடாது; காட்டுமிராண்டித் தனமாய்த் தான் தோன்றும். அதுபோலத்தான் பெவர் நிக்கல்ஸுக்கு மட்டுமல்ல, ஆங்கிலேயர் அனைவருக்கும். நமது சங்கீதம் கசாப்புக் கடையில் கொலைபண்ணும் ஆடுகளின் பரிதாபக் குரலாகவே தோன்றும். இதனால், மேல்நாட்டு இலக்கியத்தை முற்றும் புரிந்துகொண்டோம் என்று சொல்வது அபத்தம். இரண்டு கலாசாரமும் அடிப்படையிலேயே வேறுபட்டது.

இலக்கியத்தில் இந்த வேற்றுமை நிறைய இருப்பதைக் காணலாம். மேல் நாட்டில் இலக்கியத்தை 'துன்பியல்' 'இன்பியல்' என்று பாகுபடுத்தியிருக்கிறார்கள். சோகமுடிவைக் கொண்டது துன்பியல். 'சுபம்' என்று தீர்க்க மங்களமாகக் கோடிட்டு முடிப்பது இன்பியல். இந்தத் துவைத நிலையானது 'எப்போதும் முடிவிலே இன்பம்' என்ற கீழ் நாட்டுத் தத்துவ தரிசனத்தின் அடிப்படையில் எழுந்தது என்றே கொள்ளலாம். 'மேல் நாட்டார் வாழ்க்கையை அதன் ஸ்தூல வடிவில் மட்டுமே பார்க்கிறார்கள். ஆனால் நம் நாட்டார் வாழ்க்கையை வாழ்க்கையாக மட்டும் பார்ப்பதில்லை, வேறு எதனோடோ ஒட்டியும் பார்க்கிறார்கள்' என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். இந்தக் கூற்றிலும் உண்மை இருக்கிறது. நம் நாட்டில் எந்தக் கதையை எடுத்தாலும் 'சுபம் சுபம், சுபம்' என்று கோடு கிழித்துக் காட்டுவது சம்பிரதாயமாய்விட்டது. காரணம் மகா காவியங்களில் வரும் லக்ஷிய வடிவங்கள் தரும வடிவங்களாக சித்திரித்துவிட்டால், மக்கள் மனத்தில் தரும ஜயத்தைப் பற்றி அவ நம்பிக்கை விழுந்துவிடக் கூடாதே என்ற விசாரந்தான் காரணமாயிருந்திருக்கவேண்டும். எத்தனை கோரங்கள் நேர்ந்தும், காவிய நாயகனே உயிரை இழந்துவிட்டாலும் பரமசிவனையோ, சஞ்சீவி பர்வதத்தையோ வரவழைத்து, கதையைக் கொட்டு மேளத்துடன் வாழி பாடி முடிப்பது நம் நாட்டு வழக்கமாய் இருந்து வந்தருக்கிறது. ஆதலின் மேல் நாட்டுக் காவிய லக்ஷணங்களை வைத்துக் கொண்டு நம் நாட்டுக் காவிய லக்ஷியங்களை அளவிடக்கூடாது. அது கஜக்கோலைக் கொண்டு, தச்சு முழத்தை முழம்போடும் வித்தையாகத்தான் இருக்கும் எனினும் அடிப்படையான இலக்கியப் பண்புகளை மேல்நாட்டார் எப்படிக் கையாண்டு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வது நலம். ஒற்றுமை வேற்றுமை கண்டுகொள்வது விமர்சன வரம்புக்கு மீறியதல்ல. முழம்போட்டுப் பார்ப்பதுதான் தப்பு.

தமிழ்க் காவிய லக்ஷணங்களை விமர்சன ரீதியில் சீர்தூக்கி எடைபோட்டுப் பார்ப்பதற்குத் தமிழனுடைய துலைக்கோல் சரியில்லை என்றே சொல்லலாம். நம் ஊர் தராசும் படியும் இல்லையென்பதற்காக மேல்நாட்டு பாலென்ஸைக் கொண்டு பவுண்டு கணக்குப்பார்க்க முடியாது. இலக்கிய விவகாரம் அவ்வளவு சுளுவில் நிறைபோடக்கூடிய வஸ்துஅல்ல; ஆசிரியனின் மதிப்பையும் வெள்ளி நாணயத்தை ஸ்டர்லிங் கணக்கில் பதிவு செய்யும் பொருளாதாரத் தகிடுதத்தம் போலவும் அளவிட்டுவிடமுடியாது. இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலம் கற்ற தமிழர் சிலர் முயல்கிறார்கள். அது தப்பு.

முல்லை - 9

இந்தியச் சிற்பங்கள்

ரகுநாதன்

விருதுநகர்-தென்காசி மார்க்கத்தில் ரயிலில் சென்ற என் நண்பர் ஒருவர், "ரயிலில் ஆயிரம் தடவை போயிருக்கிறாயே, ஸ்ரீ வில்லிபுத்தூர் கோபுரம் உனக்கு எதை ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது? நல்ல வாட்ட சாட்டமாக, சுண்டிவிட்ட பிரம்பு மாதிரி துவளும், பதினாறு வயசு ஐயங்கார் குட்டி மாதிரிதான் இருக்கிறது. கோபுரத்தைக்கூட, 'கூடப்படுத்துக் கொள்' என்று சொல்லும்படியாக, 'ஸெக்ஸ்' பாவத்தை நன்றாக உபயோகித்துக் கட்டப்பட்ட விவகாரம்-" என்று எழுதினார்.

கோயில் கோபுரம் இளங்குமரி போல் தோன்றக் காரணமென்ன? 'கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ' திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?" என்று துடிதுடித்த இளங்குமரி கோதையின் வனப்பையெல்லாம் உருவகப் படுத்திக் கட்டிவிட்டானா, அந்தச் சிற்பி? இருக்கலாம். இல்லையெனில், நண்பருக்கு கோபுரத்தின் கம்பீரமும், நெளிவு சுழிவுகளிலுள்ள துவட்சியும் 'ஐயங்கார் குட்டியை' ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டியதில்லையே. சிற்பி கோபுரத்தை இந்த விதமாகத்தான் கற்பித்திருக்க வேண்டும்; கோதை நாச்சியாருக்குக் கோயில் கட்டும் பணிகொண்ட சிற்பியின் தியானம் இந்த ரீதியில்தான் தடம் வகுத்திருக்கும். இல்லை யென்றாலும், தமிழ்ப் பண்பு படைத்த கண்களுக்கு சுண்ணமும் சுதையும் மறைந்து, அதில் பொதிந்து கிடக்கும் உருவகந்தான் கண்ணில் படும்.

இந்தியக் கலைச் செல்வங்கள் எல்லாம் ஆத்மாநு பூதியின் உருவகத் தோற்றங்களேதான். இந்தியக் கலைஞனுக்கு ஒரு பொருள் கண்ணில் மட்டும் படவில்லை; மனசிலும் படுகிறது. அதேபோல, அவனுடைய கலைகளும் மனசில் கருக்கொண்டவற்றையே சித்திரிக்கின்றன. இதயப்பண்பும், இந்திய நாகரிகமும், கலாசாரமும், சமயக் கோட்பாடுகளும், அவனுடைய சிருஷ்டிகளில் உருவகங்களாய் வடிவாகின்றன. நதி கங்கா தேவியாகத் தெரியும்; வானவில் இந்திரதனுஸாகத் தோன்றும். கூனற்பிறை வரவே, சிவன் திருக் கோலமாகத்தான் தெளியமுடியும். இந்தியனுடைய தெய்வ நம்பிக்கை உரம் ஏறியது; வைரம் பாய்ந்தது. சமயக் கோட்பாடுகளுடன் கலையை

ஒன்றை வைத்துப் பார்க்கும் பண்பு கீழ்த்திசை நாகரிகத்தில்தான் இருக்கிறது. இந்திய உணர்ச்சியில் இது அசைக்கமுடியாத பண்பு. அதனால்தான் இந்திய மண்ணில் எங்கு பார்த்தாலும் கலையம்சம் பொருந்திய கோயில்களும் ஸ்தூபங்களும் சிலைகளும் மண்டபங்களும் நிறைந்திருக்கின்றன. திரு. டி.கே.சி சொல்வதுபோல், "தம்முடைய கருத்துக்கள் காற்றோடு கலந்து போய்விடக் கூடாதே என்று அவைகளைக் கல்லிலும் செம்பிலும் பொதிந்து பொதிந்து வைத்திருக்கிறார்கள், நம் கலைஞர்கள்." 'வன்கொண்டல் விட்டு மதிமுட்டுகின்ற' கோபுரங்களெல்லாம், விண்காட்டும் விரல்களாக நிமிர்ந்து நிற்கின்றன.

மேல்திசைக் கலைப் பண்புக்கும், கீழ்த்திசைப் பண்புக்கும் இதில்தான் அடிப்படையான வேற்றுமை. மேல்திசைச் சிற்பங்களான கிரேக்கச் சிற்பங்களில் வரும் தெய்வ வடிவங்கள் கூட, மனித உருவில்தான் இருக்கின்றன. நல்ல கட்டு மஸ்தான திமிறிய உடல் கட்டும், உருண்டு திரளும் தசைக் கோளங்களும் கொண்டு புறத் தோற்றமும், வீர அழகும் பொருந்திய உருவங்களைத்தான் அவர்கள் சமைத்திருக்கிறார்கள். பாத்திரங்களின் குணலக்ஷணத்தையும் உருவகப்படுத்தி வடிக்க அவர்களுக்குத் தெரியாது. அதாவது, அவர்களுடைய சிற்பங்கள் எல்லாம் பிரகிருதி நிலைக்குமேல் உயராதது. இயற்கையின் வெறும் நகல்கள்; மேல் நாட்டுக் கலைகள் இயற்கையை அப்படியே ஈயடிச்சான் காப்பி பண்ணுவதுதான். நம் நாடு அப்படியல்ல. நம்மவருக்கோ கடற்கரை ஈர மணலில் வளை தேடித்திரியும் நண்டு வகுத்த கோடுகளும், பரமபதம் காட்டும் பஞ்சாட்சரக் கோலமாகவே மனசில் படும். சுருக்கமாக, மேல் நாட்டார் தங்கள் சிற்பங்களை இயற்கைக்கு விரோதமின்றி நகல் செய்து, உயிரை மட்டும் பெய்கிறார்கள்; நம்மவர்களோ, உயிரைப் பெய்வதோடு மட்டுமின்றி, அதில் இதயத்தையும் படைப்பதற்காக, இயற்கையைத் தம்முடைய தாக்குகிறார்கள். அதாவது, புறத்தோற்றத்தின் அமைப்பை அப்படியே மேல் நாட்டார் சமைக்கிறார்கள்; கீழ் நாட்டார் அகத் தோற்றத்தின் பாவத்தைத் தெரிவிக்க, உறுப்பமைப்புக்களில் அதீதத்தன்மை கொடுத்து, இதயப் பண்பை வலியுறுத்துகிறார்கள்.

இந்தியச் சிற்பம் அரசபரம்பரையோடும், சமயவளர்ச்சி யோடும் ஒட்டி வளர்ந்துவந்திருக்கிறது. மன்னர்களும் சமயங்களும் மறைந்து அழிந்து போனாலும், அவர்கள் விட்டுச் சென்ற எச்சத்தால் காணப்படும் கலைச் செல்வங்களாக இன்றைய சிற்பங்கள் நிலைநிற்கின்றன. காந்தாரத்திலுள்ள பௌத்த ஆலயங்கள், அசோகர் காலத்துக்கு முன்னதும் பின்னதுமான மகதச் சிற்பம், குஷாணர் காலத்திய அமராவதி, மத்துரா சிற்பம், விக்கிரமாதித்தன் காலத்து சாஞ்சி ஸ்தூபம், குப்த சகாப்தத்து அஜந்தா குகைக் கோயில்கள், சாளுக்கியர் காலத்து விருபாக்ஷர் ஆலயம், ராஷ்டிரகூட காலத்துதித்த எலிபெண்டா குகைக் கோயில், எல்லோராவில் ஒரே கல்லில் சமைத்த கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் மைசூரை ஆண்ட ஹோய்சால மன்னர்கள் கட்டிய சோம நாதபுரம், ஹலிபீடு

சிற்பங்கள், இலங்கையிலுள்ள அநுராதபுரத்து பௌத்த சிற்பங்கள், கடல் கடந்து சென்று சாவகத்திலும் சுமத்ராவிலும் பல்லவச் சிற்பங்களை ஒத்துநிறுவிய சிற்பக் கோயில்கள், தமிழ் நாட்டை ஆண்ட சோழ பாண்டியர் காலத்து எழுந்த தஞ்சை, சிதம்பரச் சிற்பங்கள், பதினேழாம் நூற்றாண்டு நாயக்கர் காலத்து எழுந்த மதுரை, தென்பாண்டிச் சிற்பங்கள் - இவை யெல்லாம் இந்தியர்களுடைய கலைச் செல்வத்தையும், சிற்பத் திறனையும், நுணுக்க உத்திகளையுமே காட்டுகின்றன. இந்தியச் சிற்பங்களைப் பற்றி எழுதுபவர்கள் இவையெல்லாவற்றையும் விவரமாக ஆராய்ந்து, ரசனையும் விமர்சனமும் கூடிய முறையில் எழுதவேண்டும். தமிழன் சிற்பத்திலே சிறந்து விளங்கியவன். பாதத்தில் கேந்திரத்தலத்தை வைத்து, ஆடியபாதனான நடராஜ விக்கிரகத்தைச் செய்த சிற்பத்திறன் தமிழனையே சாரும். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று பாடச்செய்த பெருமை தமிழ்ச் சிற்பிக்குத்தான். நமக்கோ கனக விசயர் தலையிலே கண்ணகிக்குக் கல் கொண்டு வந்த பெருமைபேசி வர்க்க உணர்ச்சியை வளர்க்கத் தெரியும். எனினும், அந்தக் கல்லில் வடித்த சிற்பத்திறனின் பெருமையைப் பற்றிப் பேசமாட்டோம்; பேசத் தெரியாது. இந்தியச் சிற்பங்களைப் பற்றித் தமிழில் விரிவான நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. சிற்ப ரசனையிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்ட சிலர் மட்டும் அவ்வப்போது தனிப் பிண்டமான சிற்பங்களைப் பற்றியும், குறிப்பிட்ட இடத்துச் சிற்பத்தைப் பற்றியும் ஆடிக்கொன்றும், அமாவாசைக் கொன்றும் எழுதுகிறார்கள். இது போதாது. உலகத்துச்சிற்பங்களில் மேன்மையும், நுணுக்கமும் பிரமாண்ட மானதுமான சிற்பங்கள் இந்தியாவிலேதான் காணப்படுகின்றன. எனினும் இந்திய பாஷைகளில் சிற்பங்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் அரிதாய் இருக்கின்றன. தமிழில் நல்ல சிற்ப நூல் இல்லை. கொஞ்ச காலத்துக்கு முன் திரு. க. நவரத்தினம் என்ற யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் தென் இந்தியச் சிற்ப வடிவங்களைக் குறித்து, ஆகம சமயக் கோட்பாடுகளோடு ஒட்டிப் பார்த்து ஒருநூல் வெளியிட்டார். ஆர்வத்தில் வெளிவந்த ஒரு முயற்சி.

இந்தியச் சிற்ப வடிவங்களைப் பற்றிய ரசனை, குணதோஷங்கள், தத்துவங்கள் குறித்து, ஆங்கிலத்தில் பல நூல்கள் வந்திருக்கின்றன. அவைகளை எழுதியவர்களில், தத்துவார்த்த நிபுணரான டாக்டர் ஆனந்த குமாரசாமி பெருமைக்கு உரியவர். நல்ல விவரங்கள் கொடுத்துள்ள பெர்கூஸனும், ஹாவெலும் குறிப்பிடத் தகுந்தவர்கள். தமிழில் நல்லபடியான சிற்ப நூல் வெளிவரவில்லையே என்ற வருத்தம் எனக்கு உண்டு. சமீபத்தில் வெளி வந்த ஒரு நூலைப் பார்த்தபின் வருத்தம் மட்டுமில்லை; அனுதாபமும் சேர்ந்து விட்டது.

புத்தக நிலைய வெளியீடாக, சமீபத்தில் வந்த 'இந்தியச் சிற்பங்கள்' என்ற ஒரு நூலைக் கண்டேன்; படித்தேன். எழுதியவர் ஸ்ரீமதி உருக்குமிணி. இவர் புதிதாகத் தமிழ் எழுத்துலகத்தில் பிரவேசம் செய்திருக்கும் ஆங்கிலம் கற்ற பெண்மணி. வார்தா-கஸ்தூரிபாவிலிருந்து,

வாஸெலெவ்ஸ்காவின் காதல்வரை, மனுஷனும் சூழ்நிலையிலிருந்து, மாமல்ல புரச் சிற்பம் வரைத் துணிந்து எழுத மொழிபெயர்க்க வந்திருப்பவர். இவருடைய இந்திய சிற்பங்களைப் பார்த்த பின் இவருடைய துணிவு அறிவுச் செழிப்பினால் பிறந்ததல்ல, அதற்கு எதிர்மாறான தன்மையிலிருந்து பிறந்ததோ என்ற எண்ணம் உண்டாகிறது.

ஆரம்பத்தில் வேண்டாத வேதாந்த விசாரத்தின் சப்புத்தட்டும் பீடிகை. அதன்பின் கரடுமுரடான தமிழில், விஷயத்தெளிவின்றி பாரதப் பண்புகளைப் பற்றிய கட்டுரை. பிறகு, மாமல்லபுரம், தஞ்சைக் கோயில், எல்லாரோ, அஜந்தா, தாஜ்மஹால் என்பவைகளைப் பற்றி, கொத்துவேலை விவரணங்கள், பரம்பரைக் கதைகள் சிற்ப வளர்ச்சியோடு சம்பந்தப்படாத சரித்திரக் குறிப்புக்கள் முதலியவைகளைக் கொண்டு, பக்கத்தை நிரப்பும் முயற்சியாக எழுதித் தள்ளியிருக்கிறார் ஸ்ரீமதி உருக்குமணி அம்மையார். இந்தியச் சிற்பங்களைப் பற்றி எழுத வந்த இவர், ஈழத்துச் சிற்பங்களுக்குக்கூட, பாகிஸ்தான் கொடுத்து விட்டார். தஞ்சாவூருக்குத் தெற்கே காலடி எடுத்து வைக்கவே கூசிவிட்டாரோ என்னவோ?

இந்தியச் சிற்பங்கள் என்பன எவையெல்லாம் உள்ளடக்கும் என்பதை முன்னமேயே எழுதியுள்ளேன். இவருக்கு இந்த நான்கினையும் தவிர்த்து, பிற முக்கியமாகப் படவில்லை போலும். மேலும், தாஜ்மஹாலை இந்தியச் சிற்பங்களோடு சேர்த்து எண்ணுவது, இந்தியப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பற்றிய தெளிவின்மையேயாகும். இந்தியச் சிற்பத்துக்கு தாஜ்மஹாலை உதாரணம் காட்டமுடியாது; இந்தியச் சிற்பங்களுக்கும் முகலாயரின் சித்திரப் பண்புக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை உண்டு.

மொஹலாயரின் கட்டிட நிர்மாணவேலைத் திறனுக்குச் சிறந்த உதாரணம் தாஜ்மஹால். அதைவிட ஷாஜஹானின் காதலுக்கு, சிறந்த சின்னம், அது. உலகில் எங்குமே இம்மாதிரி காதல் சின்னத்தைக் காண முடியாது. பொன்னும், மணியும், மின்னும், வெயிலும் கொண்டு சமைத்து 'என் கொண்டியற்றி, எனத் தெரிகிலாத' மாடமாய் தாஜ்மஹால் விளங்கலாம்; எனினும் அது இந்தியச் சிற்பத்துக்கு எடுத்துக்காட்டல்ல. நல்லவேளையாக மாம்பலம் செமண்ட் கட்டிட நாகரிகத்தையும் பண்ருட்டிப் பொம்மைகளையும் இந்தியச் சிற்பங்களோடு வைத்து எண்ணாதவரையிலும் க்ஷேமந்தானே.

தாஜ்மஹாலையும், அஜந்தாவையும் பற்றி எழுதும்போது, இவர் நம்மை மாடம்மாடமாக, குகை குகையாக இழுத்துச் சென்று, சிற்பங்களைத் காட்டுவதாக, பாவனை பண்ணுகிறார். சிற்பத் திறனைப் பற்றி எழுதும் போதெல்லாம், 'ஆஹா ஒஹோ' என்று அண்ணாந்து கைவிரிக்கும் வாய்ப்பந்தலாகப் படுகிறதே ஒழிய, தானுணர்ந்தவற்றையோ பிறர் உணர்ந்தவற்றையோ எடுத்துக் கூறுவதாக இல்லை. கதைப் பகுதிகளை வேண்டாத இடங்களில் புகுத்தியும் புகுத்திய இடங்களில் சவ்வுமிட்டாய்த்தனம் பண்ணியும் பக்கத்தை நிரப்பப் பாடுபட்டிருக்கிறார்.

உதராணமாக, தஞ்சாவூர்க் கோயிலைப் பற்றி வெறும் கர்ணபரம்பரைக் கதைத் தொகுப்பாக இருக்கிறதே ஒழிய, சோழகாலச் சிற்ப முறையை உணர்ந்து கொள்ளும் முறையில்லை. அதேபோல, எல்லோரா சிற்பங்களைப் பற்றிய ஆரம்பத்தில் சிற்பவளர்ச்சிக்குச் சம்பந்தப்படாத சரித்திர விளக்கங்கள் இருக்கின்றன.

நூலின் ஆரம்பத்தில், இந்திய சிற்பத்தில் கிரேக்கச் சிற்பமும் ஓரளவு கலக்கலாயிற்று என்கிறார். இது தப்பான விவரம். காந்தாரச் சிற்பமுறையிலுள்ள உறுப்பமைப்புக்களால் இந்த சந்தேகம் எழுந்ததுண்டு. காந்தார நாட்டுக் கோயில் மடங்களைக் கட்டுவதற்கு முன்னமேயே இந்தியச் சிற்பம் இதயப் பண்பினால் உயர்ந்திருந்தது. இதைப்பற்றி ஆனந்த குமாரசாமியும், ஹெரெஸும் தீர்க்கமான முடிவு சொல்லியிருக்கிறார்கள். காந்தார பாணி மனுஷனுடைய உடலழகை மட்டும் காட்டவில்லை; அக அழகையும் காட்டுகிறது. அக அழகைப் பற்றிய இந்தப் பண்பு கிரேக்கச் சிற்பத்தில் எக்காலத்தும் இருந்ததில்லை என்கிறார் ஹெரஸ். முடிவு கண்ட உண்மைகளைத் தெரியாது பழங் கதையைக் கொள்வதில் பயனில்லை.

இப்படியெல்லம் பஞ்சதந்திரம் நடத்தி வாசகர்களைக் கரடு முரடான தமிழைக் கொண்டு பயமுறுத்தப் பார்க்கிறார், ஆசிரியர். விஷயம் தெரிந்ததுபோல் காட்டிக்கொண்டு, 'மூங்கையான் பேசலுற்றான் என்ன, மொழியலுற்று' தமிழில் தலை தூக்கி வரும் குற்ற பரம்பரையில் இந்நூலும் ஒரு வாரிசு.

ஸ்ரீமதி உருக்குமணியின் இந்தப் பொறுக்குமணியைக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக்குவதாக ஒரு ஊர்க்குருவி சொல்லிற்று. ஊருக்கு இழைத்த பிள்ளையார் கோயில் ஆண்டிகளா, இந்த அப்பாவி மாணவர்கள்?

முல்லை - 10

கவிதை – வெளிவடிவம்

ஆ. முத்துசிவன், பி.ஏ. (ஆனர்ஸ்)

பேசாமல், மனத்தில் ஏதேனும் உதயமானால், எல்லாரும் பேசி வருகிற வசன நடையில் எழுதினால் போதாதோ, அதை ஏன் இயற்கைக்கு விரோதமான ஓர் நடையில், அதாவது சந்தப்போக்கோடு கூடிய கவிதை நடையில் எழுத வேண்டும் என்று யாரேனும் கேட்டால் அதற்கு என்ன சமாதானம் சொல்வது? கேள்வி வேண்டாத கேள்விதான். ஆனாலும் கேட்கப்பட்டதாக வைத்துக் கொண்டால் அதற்கு என்ன விடை கூறலாம்?

ஒரு தாயையும் தகப்பனையும் எடுத்துக் கொள்வோம். அருமையான ஆண் குழந்தை ஒன்று அவர்களுக்குக் கிடைக்கிறது. அன்பு ததும்பத் தங்கள் குழந்தையைக் கொஞ்சும்போது, தாயானாலும், தந்தையானாலும் குழந்தையை அன்பு மேலீட்டால் மார்போடு வைத்து அணைக்கிற அணைப்பில் சமயங்களில் குடித்தபாலையும் கக்கிவிடும்படி அணைக்கிறார்கள். தூக்கித் தூக்கிப் போடுகிறார்கள். கன்னத்தைக் கிள்ளுகிறார்கள். குழந்தையின் கைகளைப் பற்றி அதன் கைகளைக் கொண்டே அதன் கன்னத்தில் அறையச் செய்கின்றார்கள் உருட்டுகிறார்கள். புரட்டுகிறார்கள். வெடிக்க வெடிக்க வயிறு வலிக்குமபடி சிரிப்பு மூட்டுகிறார்கள். குழந்தையைப் படாத பாடெல்லாம் படுத்துகிறார்கள். இது அன்பு செய்கிற முறை.

குழந்தைகளைப் பெற்றவரும் பிரியமுள்ளவர்களும் அழைப்பதை எடுத்துக்கொள்வோம். ஆண் குழந்தையை ‘அம்மா’ என்றும் ‘அடி’ என்றும் அழைக்கின்றார்கள். பெண் குழந்தையை ‘அடா’ என்றும் ‘அப்பா’ என்றும் அழைக்கிறார்கள். அவ்வளவு தானா?இல்லை. அருமையான குழந்தையைப் பெயரிட்டு அழைப்பதை விட்டு விட்டு ‘கண்ணே’ ‘முத்தே’ என்றெல்லாம் அழைக்கின்றார்கள். ‘வெட்டிப்போட்ட மருதங் கொப்பிலே தொத்திவந்த கிளியோ’ சொண்டோ, கொழுந்தோ, சோற்றுக்கு ஊற்றும் நெய்த் துளியோ’ என்றெல்லாம் பாராட்டுகிறார்கள்.

அருமையான பசுமாட்டை அழைக்கும்போது, ‘மாடே வா’ என்றழைப்பதில்லை. ‘அம்மா, வாடா’ என்று அழைக்கின்றோம்.

நம்முடைய அன்புக்குரிய நாய்க் குட்டி நம்மீது விழுந்து பொய்க் கடி கடித்து விளையாடும்பொழுது, 'என்னடா? படவா' என்று தட்டிக் கொடுக்கிறோம். இல்லையா?

இப்பொழுது மேலே கூறிய அனைத்தையும் வைத்துக்கொண்டு விஷயத்துக்கு வரலாம்.

அன்பு மிக மிக மிருதுவான ஒரு பண்பு. அதை வெளிக்காட்டும் போது மிருதுத் தன்மைக்கு நேர் முரணான இம்சைத் தன்மை கலந்த நிலையில் அதனை வெளியிடுகின்றோம். இன்னும் அபரி மிதமான அன்பு பாசம் இவற்றின் காரணமாக ஆண்பாலைப் பெண் பாலாக மாற்றுகின்றோம். பெண்பாலை ஆண்பாலாக மாற்றகின்றோம். அஃறிணையை உயர்திணையாக மாற்றுகின்றோம். உயர்திணையை அஃறிணையாக மாற்றுகின்றோம்.

அத்தனையிலும் முரண் தன்மையைக் காணுகின்றோம் மன மானது இப்படியான முரண் தன்மையில் நின்றுகொண்டே தன்னை வசீகரித்த பொருளை அனுபவிக்கின்றது. அப்படி அனுபவிக்கும்போது தான் அதற்கும் ஒன்றை அனுபவித்த சுகம் தென்படுகின்றது. இதனை நான் கட்டாய விதியாக வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் சர்வ சாதாரணமான ஓர் இயற்கை என்பதாக மட்டிலும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த முரண் தன்மையைத் தான் பாஷையிலும் நாம் புகுத்துகின்றோம். ஏதோ ஓர் அனுபவம் நமது உள்ளத்தைக் கவருகின்றது. அதை வெளியிடும்பொழுது இயற்கையான பேச்சு நடையைவிட்டுவிட்டு அதற்கு நேர்மாறான செய்யுள் நடையைக் கையாளுகிறோம்.

'அதெல்லாம் இருக்கட்டும், எல்லாருமா அந்த நடையைக் கையாளுகிறார்கள்?' என்று ஸ்ரீமான் கிரிட்டிக் கேட்கலாம். இல்லைதான். உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே.

எல்லோராலும் அந்த நடையைக் கையாளமுடியாது. ஏனென்றால் அதற்கு அதிகப்படியான உணர்ச்சி வேண்டும். நல்ல பாஷையின் மூலம் வெளியிடவேண்டும் என்ற ஆத்திரம் வேண்டும். நவயுவன் வெளியே புறப்படும்பொழுது தன்னை அலங்காரம் செய்வதில் எத்தனை ஆத்திரம் காட்டுகின்றான்? ஏன் அப்படி? தன்னை எந்த யுவதி கண்டாலும் மயங்கவேண்டும் என்ற ஆசையினால், அவனுக்கிருக்கிற ஆத்திரம் போன்று, அத்தனை தூரம் சொல்லுவதை நல்ல பாஷையில் சொல்லவேண்டும் என்ற ஆத்திரம் வேண்டும். ஆகவே கவிதை வடிவில் ஒன்றைச் சொல்லவேண்டும் என்றால் உணர்ச்சியும் அதிகம் வேண்டும். நல்ல பாஷையில் சொல்லவேண்டும் என்ற ஆத்திரமும் அதிகம் வேண்டும். சிலரிடத்தில் அவர்களை அறியாமலே இந்த இரண்டு அருமைகளும் அமைந்து கிடக்கின்றன. ஆகவே அவர்களால் கவிதை வடிவில் தெரிவித்துவிட முடிகிறது. ஆனாலும் அடிப்படைக் காரணம் என்னவென்றால் மேலே கூறிய இயல்பான முரண் தன்மைதான். இனி

இதனோடு தொடர்ந்த இன்னொரு விஷயத்தையும் கவனிப்போம். சந்தப் போக்கோடு கூடிய நடை கவிதை நடை. அதற்கு ஏன் அறிவு உலகம் மதிப்புக் கொடுத்து வருகின்றது? ஏதோ சில காரணங்களினால் தான்.

எப்பொழுதும் எல்லோராலும் செய்யக்கூடிய சர்வ சாதரணமான காரியத்திற்கு மதிப்பு உண்டா என்றால், கிடையாது. அசாதாரணமான ஒன்றைத்தான் நாம் மதிப்போம். பாராட்டுவோம். பரிசுகளெல்லாம் வழங்கி மகிழ்வோம். கவிதை நடை எல்லோராலும் கையாளக்கூடிய ஓர் சாதாரண நடை அல்ல. ஓரளவு அசாதாரணமானதுதான். ஆகையினாலே அதற்கு மதிப்பு அவ்வளவுதானா? இல்லை. இன்னும் எத்தனையோ காரணங்கள் உண்டு.

வெறும் பொட்டலிலே நின்று கொண்டு ஒருவன் தனது டென்னிஸ் மட்டையை வீசி 'டிரைவும்' 'ஸ்பின்னும்' 'ட்விஸ்டும்' அடித்தால், 'இதுதான் எங்க பாட்டிகூட அடிப்பாளே; டென்னிஸ் கோர்ட்டுக்குள்ளே உம்ம கைவரிசையைக் காட்டும். அப்போதான் உம்முடைய சாயம் வெளுக்கும்' என்று நாம் இலேசாகச் சொல்லிவிடுவோம். 40x80 அளவுக்குள் நின்று பிள்ளையாண்டான் திறம்படத் தனது கைவரிசையைக் காட்டும்பொழுது கரகோஷம் செய்கின்றோம். அதேமாதிரித்தான் கவிதை நடையிலும் ஏதோ குறிப்பிட்ட அளவு இருக்கின்றது. அந்த அளவின் வரம்புக்குள்ளே நின்றுகொண்டு நீங்களும் நானும் பழகிய வார்த்தைகளை வைத்து அபார வேலைகள் செய்கின்றான் கவிஞன். பார்த்து அதிசயப்படுகின்றோம். கவிதை! கவிதை! என்றெல்லாம் கத்துகின்றோம். ஏனென்றால் அப்படியெல்லாம் நம்மைச் செய்யும்படி தூண்டும். அணுவாக இருக்கும். ஆனால் அண்டமாக விரியும். இடியாக இடிக்கும். மடிக்குள் அடங்கும் காற்றாக உலவும். கனலாக வெதுப்பும். நீளும். நிமிரும். குறுகும் குழையும். என்னவெல்லாமோ செய்யும். 'என்னடா அதிசயம்! இந்தக் குறிப்பிட்ட வரம்புக்குள்ளே என்னென்ன சாகசங்களெல்லாம்' என்று வியப்போம். அவ்வாறு நாம் வியப்பதற்குக் காரணம் குறிப்பிட்ட வரம்புக்குள்ளே நின்று கொண்டு வார்த்தைகளை வைத்து அபாரவேலைகள் செய்வதனால் தான்.

இன்னும் ஒரு காரணம். நேற்றுவரைக்கும் நம் ஊர்க்காரராகவும் நமது அண்டை வீட்டுக்காரராகவும் இருக்கின்றார் ஒருவர். அவரை ஆயிரந்தடவை சந்திப்போம். ஆனாலும் அவரை விசேஷமாகக் கூர்ந்துபார்க்கப் போவதில்லை. அதே மனிதர் மந்திரியாகவோ கவர்னராகவோ ஆகி நம் ஊருக்கு வருவதென்றால் அப்பொழுது அவரைப் பார்க்காமல் இருக்கவேமாட்டோம். பார்க்கும்படி நம்மைத் தூண்டுவது வேறொன்றும் இல்லை. அவருடைய புது ஸ்தானந்தான். இம்மாதிரித்தான் கவிதையிலும். கவிதையிலே காணுகின்ற வார்த்தைகளில் அநேகம் நாம் கையாண்ட சரக்குத்தான். கவிதைக்குள்ளே அவைகள் சஞ்சாரம் செய்யும்போது அவைகளுடைய ஸ்தானமே மாறிவிடுகின்றது. ஓசை வளமும் சந்த நலனும் அவைகளின்மீது ஒருவிதமான மெருகை ஊட்டிவிடுகின்றன. பார்த்து அப்படியே மயங்கி விடுகின்றோம்.

குற்றாலக் குறவஞ்சியில் ஒரு பாட்டு.

"சின்னம்மாவுக்கு வளையல் வேணுமாம்' என்று வழக்கம்போல் வந்து பஞ்சரிக்கிறாள் தோழி.

பெரியம்மாவுக்கு இந்த நச்சரிப்பைத் தாங்க முடியவில்லை.

"என்னடி உங்களுக்கும் வேறு வேலை இல்லையா? பெட்டியிலே வளையல் இருக்க இருக்க உங்களுக்கு கண் அடையாதா?" என்று சீறி விழுகிறாள் தாய்.

தோழி என்ன செய்வாள்? "என்னை ஏன் கோபிக்கணும்? சின்னம்மாவைக் கேளுங்கள். போடுகிற வளையலெல்லாம் பெரிசாகவே இருக்கிறதாம்" என்று குறிப்பாகச் சொல்கிறாள் தோழி.

"அப்படி என்ன மெலிவு வந்துவிட்டதாம்" என்று சொல்லிக் கொண்டே மகளைக் காண மாடிப் படி ஏறுகிறாள் தாய்.

மேலே சென்றவுடன் தாய்க்கு விஷயமெல்லாம் புரிந்துவிடுகிறது. "அம்மா. உன்னைப் பெற்ற பாவத்துக்கு நல்ல வேலை கிடைத்ததடி. தினம் குற்றால நாதருக்கு பவனி வர வேலை. உனக்கு அவனைப் பார்த்து மயங்க வேலை. மன்மதனுக்கும் உன்னை அம்பெய்யவேலை. உனக்கும் மாற்றி மாற்றி வளையல் போட வேலை. உனக்கு வளையல் எடுத்தெடுத்துக் கொடுப்பதுதான் எனக்கும் வேலையாய்ப் போய்விட்டது" என்று சலித்துக் கொள்கிறாள்.

"திரை வேலை சுற்றிய குற்றால நாதர் தினம்பவனி
வரவேலை, நீயும் மயல்தான் கொளவேலை; மாரன் அம்பு
பொர வேலை; நீ வளை போட்டிட வேலை; புதிய வளை
தரவேலை ஆச்சுது, மகளே, உனைப்பெற்றதால் எனக்கே."

வேலை என்ற வார்த்தை நாம் பழகிய வார்த்தை, இப்பாடலின் மூலம் அதற்குத் தனியான சிறப்பு வாய்த்துவிடுகின்றது. இப்படித்தான் பல வார்த்தைகளுக்கும் கவிதைக்குள்ளே சஞ்சரிப்பதனாலே அவைகளுக்குத் தனிச் சிறப்பு.

இன்னும் ஒரு காரணமும் உண்டு நாகர்கோவில் பக்கமுள்ள ஆரல் வாய்மொழி என்ற ஊரில், ஒவ்வொரு வீட்டுக் கூரையிலும், எங்கெல்லாம் ஓடு அடுக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம், ஒரு வரிசைக்கும் அடுத்த வரிசைக்கும் இடையிலே காரைப் பூச்சு காணப்படும். எல்லா ஊர்களிலும் செய்யாத தனிமுறை இங்குமட்டிலும் எதற்கு என்று கேட்கலாம். இங்கு அடிக்கிற காற்று உடுமலைப்பேட்டைக் காற்றையெல்லாம் தோற்கடித்துவிடும். அத்தனை விசையாக அடிக்கும். ஏனெனில் மலை இடுக்கில் ஊர் அமைந்திருக்கிறது. அதனாலேதான் இடுக்கு வழியாக வீசும் கணவாய்க் காற்று அதி விசையாக வீசும். காற்று கூரையைப் பிய்த்து எறிந்துவிடக்கூடாது என்பதற்காக இந்தத் தற்காப்பு. காரைப் பூச்சுக்கும் கவிதைக்கும் என்ன சம்பந்தம் என்று வாசகர்கள் யோசனை

செய்யலாம். கவிதையிலும் வார்த்தைகளை யாப்பின் நெருக்கடிக்கு உள்ளாக்குகிறோம். நெருக்கடிக்கு உள்ளாக்குவதனாலே நெருக்கடியைத் தாண்டி வார்த்தைகள் வெளிவரும்போது புது வேகத்துடனேயே வெளிவரும். அந்த வேகத்தைச் சுவைக்கும்பொழுது அலாதியான சுகம் தென்படும்.

மேலும், ஒன்று கவிதை வடிவத்திலே இருக்குமானால் ஏதாவது ஒரு ராகத்தில் தோய்த்து அதனைப் பாடுவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். இராகத்தின் காரணமாகக் கவிதையில் ஈடுபாடு கவிதை காரணமாக இராகத்தில் ஈடுபாடு. ஒன்று மற்றொன்றில் ஈடுபடும்படி செய்வதனாலே இரண்டினிடத்தும் நமக்கு ஈடுபாடு ஏற்படுகின்றது.

பெரும் பணத்தைக் கொண்டுபோவதற்கு கரன்ஸி நோட்டு எத்தனை வசதியாயிருக்கின்றதோ அத்தனை வசதியைக் கவிதை வடிவம் நமக்குச் செய்து தருகின்றது. எட்டு பக்கம் வசனத்தை ஒருவனிடம் கொடுத்து மனப்பாடம் செய்யச் சொன்னால் எத்தனையோ தினங்களாகும் மனப் பாடம் செய்வதற்கு. ஆனால் அதே அளவு விஷயம் பாட்டு வடிவில் இருக்குமானால் வெகு எளிதில் மனப்பாடம் செய்துவிடலாம். நினைத்த நேரமெல்லம் இசைத் தட்டுகளை வைத்து மகிழுவதுபோல் கவிதைகளையும் பாடிப்பாடி மகிழலாம்.

இவ்வாறு பல சுகங்கள் கவிதை வடிவத்தின் மூலம் நமக்குக் கிடைப்பதனாலேதான் கவிதை வடிவத்தை இன்றுவரை நாம் பாராட்டிக் கொண்டிருக்கிறோம்.

முல்லை - 11

இலக்கியத்தில் ஆபாசம்

கு. அழகிரிசாமி

சமூகத்திலே இரண்டு அதிசயங்களை அல்லது உண்மைகளைப் பார்க்கிறோம் ஒன்று: மனிதனுக்கு, தன்னைத் தவிர்த்து மற்ற எல்லோருடைய ஒழுக்கமும் கெட்டுவிடக்கூடாதே என்பதில் கவலை ஜாஸ்தி. இரண்டு: (அதாவது முதல் உண்மையில் சம்பந்தம் கொண்ட இரண்டாவது உண்மை) ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நிச்சயமாகப் பொய் சொல்லுகிறான்; வெட்கப்படாமலும் பயப்படாமலும், தான் பொய் சொல்லுவதாகத் தன்னோடு பேசும் இரண்டாம் மனிதனுக்கும் உலகத்துக்கும் தெரிந்திருந்தும் தயங்காமல் பொய் சொல்லுகிறான். இப்படிப் பொய் சொல்லுவது சமூகத்தில் ஒரு கும்பல் அல்ல; சமூகத்தில் உள்ள நூற்றுக்கு நூறுபேரும்தான்.

எப்படி?

நிர்வாணமான ஓர் அழகிய சிலை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அதை முதல்முதலாக ஒரு பத்துப் பேர் போய்ப் பார்க்கிறார்கள். அந்தப் பத்துப்பேரில் ஒவ்வொருவரும் தனக்குத்தானே அந்த சிலையின் கலையழகையோ அல்லது நிர்வாணத்தன்மையையோ ரசித்துக்கொண்டாலும், அந்த ஒவ்வொருவனும் மற்ற ஒன்பது பேரைப் பார்த்து, அந்தச் சிலை நிர்வாணமாயிருப்பதைக் கண்டித்துப்பேசி, சமூகத்தின் ஒழுக்கத்துக்கு அந்தச் சிலை மிகவும் ஆபத்தாக இருப்பதாகக் கூறத்தவறமாட்டான். எல்லோரும் பொய் சொல்லுவதில் - பொய்தான் சொல்லுவதாக மற்ற எல்லோரும் தெரிந்துகொண்ட நிலையிலும் கூட-தயங்காமலிருப்பது பரம்பரையாக மனிதர்களிடத்தில் நிலைத்திருக்கும் ஒரு குணமாகிவிட்டது. காரணம் மனிதன் பரம்பரை வழக்கத்துக்கும், நீதிவாக்கிய நூல்களுக்கும் பயந்து நடந்து வந்திருக்கிறான். மேற்சொன்ன குணம் மனித சமுதாயத்தில் வளர்ச்சி பெற்றதன் விளைவாகத்தான், அநேகமாக ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் மக்களின் ஒழுக்கப் பாதுகாப்பை உத்தேசித்து, ஆபாசமாயிருப்பதாகச் சொல்லி பல இலக்கியங்களுக்குத் தடை போட்டிருக்கிறது-அதாவது அழித்திருக்கிறது. சில இலக்கியங்களை மூக்கிழந்து சூர்ப்பணகைகளாக அங்கஹீனம் செய்து உலகிலே அலைய வைத்திருக்கிறது. பல சித்திரங்களைக் கூட

ஆபாசம் என்று சொல்லி மேல்நாடுகளில் அழித்திருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக நம் நாட்டுச் சித்திரங்களுக்கும், சிற்பங்களுக்கும் இந்தக் கதி நேரவில்லை.

ஆபாசம் என்பது எது? ஆபாசம் என்று சொல்லப்படும் இலக்கியங்களில் உள்ள ஆபாசம் என்ன? இந்த ஆபாசத்துக்கும் சமூக ஒழுக்கத்துக்கும் உள்ள சம்பந்தம் என்ன? உண்மையில் சம்பந்தந்தான் உண்டா? என்பவைகளைப்பற்றி செய்யும் ஆராய்ச்சி சமுத்திரமாக விரிந்து சமுத்திரத்தில் கிளம்புவது போலவே, இந்த ஆராய்ச்சியிலும் வாதப்பிரதிவாதப் புயல்களும், அலைமோதல்களும், தடபுடா முழக்கங்களும் கிளம்பும் என்பது உண்மையென்றாலும் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் பூர்வாங்க பீடிகையாகச் சுருக்கமாகக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியமாகிறது.

நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் எல்லைக்குள்ளேயே நின்று, ஆபாசம் என்றால் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒரு விஷயம் தனக்குத்தானே நல்லதாகவோ ஆபாசமாகவோ இருப்பதைப்பற்றிச் சமூகத்துக்குக் கவலையில்லை. அதன் பாதிப்பு சமூகத்தில் நல்லதைச் செய்யுமா கெட்டதைச் செய்யுமா என்பதைக் கவனித்தே இன்னது நல்லது, இன்னது ஆபாசம் என்று உலகம் தீர்மானிக்கிறது. இலக்கியத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் ஆபாசத்தையே நாம் விஷயமாக எடுத்துக்கொண்டிருப்பதால், இங்கே ஆபாசம் ஆண் பெண் என்ற இருபாலாருக்கும் இடையில் காதலால் அல்லது காமத்தால் நிகழும் அதிரகசியமான நடவடிக்கையை வெளிப்படையாகச் சொல்லுவது என்றுதான் பொருள். இப்படி வெளிப்படையாகச் சொல்லுவது பிரத்தியக்ஷத்தில் நாகரிகமான காரியமில்லை என்று சொல்லுவதைப்பற்றி இங்கே பேச்சு இல்லை. இலக்கியங்களில் அப்படி ரகசியமான விஷயங்களைச் சொல்லக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் அவைகளை வெளிப்படையாகச் சொல்லுவதால் அந்த இலக்கியங்களை வாசிப்பவர்களின் மனம் திரிந்து ஒழுக்கம் கெட்டுவிடும் என்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை?

இலக்கியத்தில், ஆண் பெண் சம்பந்தத்தைப் பச்சையாகச் சொல்லப்பட்டிருப்பதன் லட்சியம், காம உணர்ச்சி ஊட்டுவதற்கே அல்ல என்பதை மறுக்கவே முடியாது. (இங்கே ஒரு விஷயம்: காம உணர்ச்சி ஊட்டுவதற்கென்றே விற்பனையை மனசில் கொண்டு ஆவலைத் தூண்டிவிடும் கதைகளையும், நாவல்களையும் எழுதி வெளியிட்டு அவை வெளிவந்த அதே பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் தங்கள் சொந்தக் கம்பெனிகளிலேயே தயார் செய்யப்பட்ட ஸ்திரீ வசிய கவசங்கள், ஆண் பெண் ரப்பர் கருவிகள், தாதுபுஷ்டிலேகியம் முதலியவைகளை விளம்பரம் செய்து தொழில் நடத்துகிறார்கள் சிலர். அந்தக் கதைகளையும் நாவல்களையும்பற்றி இங்கே நான் குறிப்பிட வில்லை.)

தமிழ் இலக்கியம் சம்பந்தப்பட்டமட்டில், காதல், தூது, உலா, மடல் முதலிய பிரபந்தங்களில் முக்கியமாக காதல் சம்பந்தப்பட்ட விஷயங்கள்

எல்லாமே ஒளிவுமறைவின்றி அநேகமாகக் கூறப்படும். இவை தவிர, காவியங்களிலும், கோவை முதலிய மற்ற பிரபந்தங்களிலும் ஓரளவுக்காவது காதல் சம்பந்தமான ரகசியங்கள்-இப்போது ஆபாசம் என்று பெயர்சூட்டி அழைக்கப்படும் விஷயங்கள் - கூறப்படும். இந்தப் பிரபந்தங்கள், மக்களுக்குக் காம உணர்ச்சி ஊட்டவே எழுதப்பட்டவை என்பதற்கு ஒரு சிறு சான்றுகூட காட்டமுடியாது. ஒரு சிலரைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்ட சில தனிப்பாடல்கள் ஆபாசமானவை யென்றாலும், அவை அந்தத் தலைவர்களைப் புகழுவதற்காகத்தான் பாடப்பட்டனவே ஒழிய, அவர்களுக்குக் கெட்ட உணர்ச்சியூட்டுவதற்காக அல்ல. அப்படிச் சில பாட்டுத் தலைவர்களும், அந்தப் பாடல்களை வாசிப்பவர்களும் ஒழுக்கம் கெட்டுப் போகிறார்கள் அல்லது போய்விட்டார்கள் என்றால் அது குருவி உட்காரப் பனம்பழம் விழுந்தமாதிரிதான். ஏற்கெனவே முதிர்ந்து கனிந்துள்ள அவர்களுடைய மனப்பக்குவம் என்ற விஷப்பழம் இப்படி இலக்கியங்களின் மோதலில் உதிர்ந்தால், அந்தக் கெட்ட மனப்பக்குவத்துக்கு இலக்கியத்தையே குற்றம் காட்டுவது நேர்மையல்ல. மேற்படி பாட்டுடைத்தலைவர்களும், வாசகர்களும் அந்த இலக்கியங்களைப் படிக்குமுன்னர் பீஷ்மரின் அவதாரங்களாக பிரமசரியவிரதம் காத்து நின்றார்கள் என்பதுதான் என்ன நிச்சயம்?

தவிரவும் இலக்கியத்திலே உண்மையாகவே ஆபாசம் இருக்கிறதென்றே வைத்துக்கொள்ளுவோம். 'இந்த ஆபாசத்தினால்தான் உலகத்தில் ஒழுக்கம் கெட்டுவிடும். மற்றப்படி உலகமெல்லாம் பரிசுத்தக் கோவிலாகவே இருக்கிறது' என்று சொல்லி முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்க முடியாது.

நமது கல்யாணங்கள், நமது மக்களின் வசவு திட்டுகள், நமது புராணக் கதைகள், நமது சினிமா நாடகங்கள், நமது கோவில்கள்-அங்கேயுள்ள சிற்பங்கள், பள்ளியறை, நேரப்போக்குக்காக நமது பெரிய மனிதர்கள் பேசிக் கொள்ளும் பேச்சுக்கள் முத்லியவைகளிலிருந்து தெரிந்துகொள்ளாத ஆபாச விஷயங்களை நம் மக்கள் இலக்கியத்தில் தெரிந்துகொள்ளப் போவதில்லை. சிறுபான்மையராக ஒன்றும் தெரியாத அப்பாவிகள் என்று ஒரு சிலர் இருப்பது சகஜம். அப்படி இருப்பது சமூகத்துக்கு ஒருவேளை நல்லதுதான் என்றாலும் அவர்களுக்கு நல்லதுதான் என்பது சந்தேகமே! அவர்களுக்கு, அவர்கள் படித்தவர்களாயிருந்தால் மேற்சொன்ன இலக்கியங்கள்தான் 'கண்களைத் திறந்துவிடும்' ஆசான்களாக உதவுகின்றன என்பதைப் பிரத்யக்ஷ அனுபவங்களிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும், உதாரணங்கள் காட்டமுடியும். படியாதவர்களுக்கோ மேற்சொன்னபடி சிற்பங்கள், சினிமா நாடகங்கள், வசவு திட்டுகள் முதலியவைதான் காமசாஸ்திர ஆசான்கள். இதற்காக வசவுதிட்டுகளை ஆதரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் மற்றவைகளை?

மேற்சொன்ன பிரபந்தங்களில் காம உணர்ச்சியின் கிரியாம்சைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றித் தெரியாதவர்கள்

சிறுபான்மையோராக இருந்தாலும், எல்லோருக்குமே காம உணர்ச்சியென்பது புத்தகத்திலிருந்து குடியேறிய விஷயமல்ல என்பது உண்மை. குழந்தை வாயில் விரலைவிட்டுச் சுவைப்பதே குழந்தையின் காம உணர்ச்சியென்று கூறுகிற அறிஞர்கள் உண்டு. ஆகவே, விரலைச் சுவைப்பதிலிருந்து முத்தமிடுவது, குழந்தைகளைப் பெறுவதுவரை-காம உணர்ச்சியின் அனுபவத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை-மனிதர்கள் தெரிந்திருக்கும்போது, இலக்கியம் போய்தானா காம உணர்ச்சியை சொல்லிக்கொடுக்க வேண்டும்? மதன சாஸ்திரங்களைப் பிரமாதமாக ஆராய்ந்து எழுதியிருக்கும் மேல் நாட்டு அறிஞர்கள் எல்லாம் சமூக அமைப்பின் சீர்கேட்டில்தான் சமூகத்தின் ஒழுக்கம் பாழாகிறதென்று சான்றுகளோடு எழுதியிருக்கிறார்கள். பலவந்தமாகச் சுமத்தப்படும் பிரமசரியம், ஏகபத்தினி விரதம், விவாகரத்தை அனுமதியாத அல்லது குறைகளோடு அனுமதிக்கும் தன்மை, பொருளாதாரச் சீர்கேடுகள், இயற்கையாகவே தனிப்பட்ட சிலருக்குள்ள சில விசித்திரமான உணர்ச்சிகள் இவைகளைத்தான் ஒழுக்கக்கேட்டுக்குக் காரணகர்த்தாக் களாக்குகிறார்கள். இப்படிப்பட்ட பிரமாதமான சக்திகள் மோதும்போது இலக்கியங்களில் துண்டுதுணுக்குகளாகக் காணப்படும் சில விஷயங்களா விஷயத்தைக் குட்டிச் சுவராக்கிவிடப்போகின்றன? பெருநோய் பிடித்தவனுக்கு அரிசிரங்கு வந்தால்தான் ஆபாசமும் ஆபத்தும் என்று சொல்லுவது எவ்வளவு உண்மை?

இங்கே இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது; அதாவது நாம் கண்டிக்கும் விபசாரத்தையே சில சீர்திருத்தங்களுடன் ஆதரிப்பவர்களும், விபசாரம் இல்லாவிட்டால் சமூகத்தில் விபசாரத்தில் ஈடுபடாதவர்கள் ஒழுக்கத்துடன் வாழமுடியாமல் போய்விடும் என்றும், சமூகத்தின் ஒழுக்கத்துக்கு அதாவது சிலர் கற்பரசிகளாகவும், சிலர் கற்பரசிகளைத் தொடாதவர்களாகவும் இருக்க விபசாரம்தான் துணைசெய்கிறது என்று வாதிக்கிற அறிஞர் கூட்டம் மிகப்பெரிய அளவில் இருக்கிறது. விபசாரத்தை ஒழிக்க வேண்டுமென்றால், சமூகத்தின் அடிப்படையையே மாற்றிவிட வேண்டு மென்று அந்தக் கூட்டம் கூறுகிறது. அவர்கள் சொல்லுவது தப்பென்றோ சரியென்றோ வைத்துக்கொண்டாலும், ஒரு உண்மை மட்டும் புலனாகிறது. அதாவது சமூகத்தின் ஒழுக்கம் என்பது என்ன? சமூகத்தின் ஒழுக்கம் எப்படிப் பாதுகாக்கப்படவேண்டும்? என்ற விஷயங்கள் இன்னும் சர்ச்சையில்தான் இருந்துகொண்டிருக்கின்றனவே ஒழிய திட்டமான ஒருமுடிவை எட்டவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நாம் முன்கூட்டியே நம் இலக்கியங்களை ஆபாசம் என்று வீண் குற்றம் சாட்டியதோடு நில்லாமல் அவைகளை இருக்கும் இடம் தெரியாமல், அரசாங்கமும், மெஜாரிடியாக இருக்கும் வேஷக்காரக்கும்பலும், நாமுமாகச் சேர்ந்து பண்ணியது மிகவும் விசித்திரமாகவும், விபரீதமாகவும் இருக்கிறது. அறிஞர் பெர்னார்ட் ஷா சொல்லுகிறார்:

“..... சமூக நலனுக்குப் புறம்பான ஒழுக்கத்தை அரசாங்க அதிகாரி தண்டிப்பது அவன் கடமையாக இருக்கிறது. எல்லா ஒழுக்கங்களிலும்

கலைஞனுடைய ஒழுக்கம்தான் (அதாவது கலைஞனுடைய எழுத்துக்களில் கூறப்படும் ஒழுக்க சம்பந்தமானவை -கு.அ) அதிவேகமாகத் தொத்திப் பரவக்கூடியது. ஆகவே, இந்தக் கடமையை அரசாங்க அதிகாரிகள் எப்படி நிறைவேற்றுகிறார்கள்?... தொழில் சம்பந்தமான விஷயங்களில் தொழிற்சாலைச் சட்டங்களை ஏற்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு இன்ஸ்பெக்டர்களை அனுப்பியும், தொழிற்சாலை முதலாளியை இன்னதுதான் செய்யவேண்டும், இன்னது செய்யக்கூடாது என்றும் கட்டுப்பாடு செய்கிறார்கள். இந்த நிபந்தனைகளின்படி தொழில் நடத்தினால் கட்டுபடியாகாது என்று தெரிந்தால் முதலாளி தம் யோக்யதாம்சக் குறைவுக்கேற்ற வேறொரு தொழிலை நடத்தவேண்டியதுதான். சுருங்கச் சொன்னால் தொழிற்சாலை முதலாளி பார்லிமெண்ட் சட்டத்தின்மூலம் நல்லொழுக்கத்தில் நிறுத்தப்படுகிறார். இதேமாதிரி கலைஞனுக்கும் ஒழுக்கம் கற்பிக்கமுடியுமா?

"நம் அனுபவமற்ற, அறிவாகாரமில்லாத மக்களும், அவர்கள் வோட்டின்மூலம் அரசாங்கப் பிரதிநிதிகளாக வந்தவர்களும் இந்தக் கஷ்டமான காரியத்தை மிகவும் இலேசாகச் செய்துவிடுகிறார்கள்! எப்படி? கலாசிருஷ்டிகளை (புத்தகங்கள், சித்திரங்கள் முதலியன) புரட்டிப்பார்க்க வேண்டியது. அவைகள் வகைத்தப்பாக இருந்தால் போலீஸ் டிபார்ட்மெண்டை உதவிக்கு அழைக்க வேண்டியது. மாஜிஸ்திரேட் அந்தக் கலாசிருஷ்டிகளை எரிக்கவேண்டுமானாலும் எரித்துவிடலாம். இந்த முறையில், வேசிகளைப் பாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்ட அநேக நூல்களும், வரையப்பட்ட அநேக சித்திரங்களும் நாசமாக்கப்பட்டன; சில இதிகாசங்களுக்கும் இந்தக் கதிநேர்ந்தது. சில சந்தர்ப்பங்களில் புத்தக ஆசிரியர்களே எரிக்கப்பட்டிருக்கிறார்கள்".

இவ்வளவு என்று மாதச்சம்பளம் வாங்கிக்கொண்டு கலைஞானம் இல்லாதிருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு, இலக்கியங்களையும் அடக்குமுறைசெய்யும் அதிகாரம் கிடைத்திருப்பதை பெர்னார்ட் ஷா பலமாகக் கண்டிக்கிறார்.

இப்படி இலக்கியங்கள் தோன்றியபின் சமூகத்தில் விபசாரமோ மற்றும் ஒழுக்கக்கேட்டின் வேறு நிகழ்ச்சிகளோ நடப்பது அதிகமாகிவிட்டது என்பதற்குப் புள்ளி விபர உருவில் சான்று இருப்பதாகவும் தெரியவில்லை. ஒரு மேல்நாட்டு அறிஞர் சொன்னது போல், பழங்காலத்தைவிட இப்போது கெட்ட ஒழுக்கங்கள் அதிகமாகிவிடவுமில்லை, குறைந்துவிடவும் இல்லை. கெட்ட ஒழுக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணம் சமூக அமைப்பும் அதன் வளர்ச்சியுமே ஒழிய, இலக்கியங்கள் அல்ல என்பதை மறுபடியும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர் சொன்ன சொல் மேல்நாடு, கீழ்நாடு எல்லாவற்றிற்குமே பொருந்தும். முன்னால் - அதாவது இந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னால் இந்தியாவில் கற்பு நெறி வழுவாமல் எல்லா ஆணும்பெண்ணும் இருந்திருந்தால், கற்பை வற்புறுத்தும் நூல்கள் கணக்கில்லாமல் தோன்றியிருக்கவும் வேண்டாம்;

கற்பரசிகள் அதாவது பதிவிரதைகள் என்று சாவித்திரி, நளாயினி முதலிய குறிப்பிட்ட ஏழு நபர்களை மாத்திரம் சொல்லிவந்திருக்கவும் வேண்டாம். இப்படிச் சொல்லிவந்தது பொய்யான விஷயம்தான் என்றும், 'ஆபாச' இலக்கியங்கள் தோன்றாத அந்த நாளிலும் எல்லாப் பெண்களும் எல்லா ஆண்களும் ஒழுக்கமாக இருந்ததில்லை என்பதற்கு இந்த பரம்பரைக்கூற்று ஒரு நல்ல சாட்சி.

காதல், தூது, கோவை, உலா, மடல் முதலிய பிரபந்தங்களின் ஆபத்தில்லாத் தன்மையைக் கவனிக்கவேண்டும். காதல் சம்பந்தப் பட்ட விவகாரங்களை அரைகுறையாகவும், ஒளித்தும் மறைத்தும் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற ரீதியில் சொல்லுவதும் எழுதுவதும்தான் காம உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதன் மூலம் கெட்ட விளைவுகளுக்குக் காரணமாகவும் இருக்கமுடியுமே ஒழிய, சாஸ்திரோக்தமாகவும், விஷயத்தைத் தெரிவிக்கும் முறையில் கலைப்பண்போடு உண்மைகளை, காதலின் ரகசிய அம்சங்களை எழுதுவது கெட்ட உணர்ச்சிகளைப் பூதாகாரமாகப் படமெடுத்து ஆடச்செய்துவிடாது என்பது அறிஞர்களின், சமூக நலனையும் மனித உணர்ச்சிகளையும் அனுதாபத்தோடு கவனித்துக் கருத்துக்களைப் பொறுப்போடும் நாணயத்தோடும் வெளியிடும் அறிஞர்களின் கூற்று. ஆனால் இன்று ஆபாசமில்லாதவை என்று கூறப்பட்டு பகிரங்கமாக வெளியில் உலவும் இலக்கியங்கள்தான் மேற்சொன்னவாறு மக்களிடையே ஆவலைக் கிளப்பிவிடும் தோரணையில் இருக்கின்றன.

பழைய பிரபந்தங்கள் சில கெட்ட நோக்கத்தோடு எழுதப்பட்டிருந்தாலும், (அப்படி ஏதாவது எழுதப்பட்டிருந்தால்) நல்ல பிரபந்தங்களைப் படித்துக் கெட்டுப்போனாலும் அவை விதிவிலக்குகளாகவே இருக்கமுடியும். இயற்கையில் எல்லாவற்றுக்கும் இருப்பதுபோல விதிவிலக்குகள் இலக்கிய சம்பந்தமாகவும் இருப்பது எதிர்பார்க்கப்படவேண்டியதே. கிணறு தோண்டினால் அதில் சிலர் தவறிவிழுந்து செத்துப்போக வேண்டியிருக்குமே என்பதற்காக, குடிதண்ணீருக்குக் கிணறு வெட்டாமல் இருக்கமுடியாது. பிள்ளையார் செய்யக்கொடுத்து களிமண்ணைக் குரங்காகக் செய்துகொண்டால், தனிப்பட்டவர்கள்தான் அந்தக் காரியத்துக்குப் பொறுப்பாக முடியுமே தவிர களிமண் என்ன பாவம் செய்யும்?

மேற்கண்ட பிரபந்தங்களால் ஏற்படும் நன்மை என்ன?

இலக்கியம் என்ற அம்சத்தில் அவைகள் நல்ல நூல்களாக இருப்பது முதல் நன்மை. மனிதவர்க்கத்தின் செயல்களால் நிகழும் எல்லாக் கிரியைகளையும் பற்றி மக்களுக்குப் போதிக்கின்றன. மனிதனாக உலகில் வாழ இச்சிக்கும் எவனுக்கும், அந்தப் பிரபந்தங்களில் காணும் விஷயங்கள் தெரிந்திருக்கவேண்டும் என்பதை மறுக்க முடியாது. பலருக்காக இல்லாவிட்டாலும் சிலருக்காவது அந்தப் பிரபந்தங்கள் ஆசாரியர்களாக இருக்கின்றன. சரீர மர்ம சாஸ்திரங்களை மாணவர்களுக்கு

இளம்பிராயத்திலேயே தக்க முறையில் போதித்துவிட்டால் ஒழுக்கக்கேடுகளைப் பெரும்பாலும் தவிர்த்துவிடலாம் என்ற கருத்து நாளுக்குநாள் உரம் பெற்று வருகிறது. இயற்கை ரகசியங்களை இலக்கியத்தில் படிப்பதன் மூலம் இளைஞர்கள் மனம் பாழ்படும் என்பது அபத்தம்; அதற்குப் பதிலாக அவர்கள் சரீர மர்ம சாஸ்திர ஞானத்தையும், சரீரமர்ம நிகழ்ச்சிகளைப்பற்றிய சுகாதாரத்தையும் நன்கு உணர்ந்துகொள்ள வழி ஏற்படுகிறது. அதனால், தாம்பத்ய வாழ்வில் காமசாஸ்திர ஞானமின்மையால் ஏற்படும் ஆபாசமான விகாரங்களையும் பூசல்களையும் தீராக்குரோதங்களையும் வீண்பயங்களையும் போக்கிவிடமுடியும். நல்ல இலக்கியங்களில் இப்படி விஷயங்கள் கூறப்பட்டால், கீழ்த்தரமான பாணியில் எழுதப்படும் புஸ்தகங்களின் மதிப்பைக் குறைத்துவிட முடிகிறது என்று சரீர மர்ம சாஸ்திரத்தைத் தத்துவரீதியில் ஆராய்ந்துள்ள பிரபல நிபுணர் ஹேவ்லாக் எல்லிஸ் கூறுகிறார். "சித்திரத்தில் நிர்வாணத்தைப் பார்த்துப் பழகிக்கொண்டவன், பிரத்யக்ஷத்தில் பார்க்கும் நிர்வாணக் கோலத்தை சித்திரத்தைப் பார்ப்பதைப்போலவே பார்க்கமுடியும்" என்பது ஹூலர் என்ற அறிஞனின் வாசகம்.

தமிழில் எத்தனையோ புத்தகங்கள் ஆபாசமானவையென்று ஒதுக்கப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவை விறலி விடுதூது, கூளப்ப நாயக்கன் காதல், வருண குலாதித்தன் மடல், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிசிந்து முதலியன. பிற்காலத்தில் இவை பல திருத்தங்களோடும், சில கத்தரிப்புக்களோடும் அச்சிடப்பட்டன. இலக்கியம் கற்பவர்கள் படிக்க வேண்டாதவை என்று 'பெரியவர்கள்' கட்டளையிட்டு ஒதுக்கிய இப்படிப்பட்ட புத்தகங்கள் நாளாவட்டத்தில் இருக்குமிடம் தெரியாமல் மனித வர்க்கத்தைவிட்டு ஒதுங்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. அந்தப் புத்தகங்களை நல்ல முறையில் முழு உருவில் அச்சிடுவது பெரிய விஷயமல்ல; இவைகளை ஆபாசமானவை என்று சொல்லும் தப்பான மனோபாவத்தைக் கொன்றுவிட வேண்டியதுதான் முக்கியம்.

விறலிவிடுதூதை எடுத்துக்கொள்ளுவோம். இதைப்போல சாதுரியத்தோடும், கற்பனைச் செறிவோடும், ஹாஸ்ய உணர்ச்சியைப் பிரமாதமாகக் கிளப்பும் முறையிலும் எழுதப்பட்ட நூல்கள் மிகக்குறைவு. ஆகவே, தமிழ் பாஷை 'பழகு தமிழ்' ஆனதற்குக் காரணகர்த்தாக்கள் மேற்காட்டிய பிரபந்தங்கள்தாம். பாஷையும் மனிதனும் நெருங்கிக் குலவும் முறையில் எழுதப்பட்ட நூல்கள் அவை. அவைகளைப்போல வேறு எத்தனையோ தூதுகள், சிந்துகள் முதலியன அபரிமிதமாக எழுதப்பெற்று, சமூகத்தின் கட்டுப்பாட்டினால் இருண்ட மூலைகளிலும் கூரை இறைவாரங்களிலும் அஞ்ஞாதவாசம் செய்தும் கரையானோடு மல்லாடிக்கொண்டும் ஜீவமரணப் போராட்டத்தில் அவதிப்படுகின்றன.

மேற்சொன்ன தப்பான மனோபாவம் நாட்டில் நிலவுவதன் காரணமாக இலக்கியங்கள் மட்டுமல்லாமல், நூற்றுக் கணக்கான நாட்டிய

பதங்களும் இருப்பதா சாவதா என்றிருக்கின்றன. ராகங்களின் உயிரான இடங்களெல்லாம் அர்த்தபாவத்தில் இழைந்து பரிபூரணமாகப் பேசுவதும் கொஞ்சுவதும் நாட்டிய பதங்களில்தான். தியாகப் பிரும்மம், முத்துசாமி தீக்ஷிதர் போன்ற தமிழ்நாட்டின் சங்கீத வல்லுநர்கள் தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் முறையே நிகரில்லாத கீர்த்தனைகளை இயற்றி இருப்பதைப்போலத் தமிழில் பாடிய மற்ற சாகித்ய கர்த்தர்கள் பதங்களைத்தான் பிரமாதமாக அமைத்துப் பாடியிருக்கிறார்கள். தமிழ்ப்பதங்களில் இருப்பதைப்போல சங்கீத சுகம் அவ்வளவு பரிபூரணமாகத் தமிழ்க் கீர்த்தனங்களில் இல்லை யென்று சங்கீதத் தேர்ச்சிபெற்ற பலரும் கூறுவதோடு, அனுபவத்தில் அறிவதும் அதுவேயாகத்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட இலக்கிய நூல்களும், பத சாஹித்யங்களும் இந்த நிலையில் இருந்துவந்தால் இந்த தலைமுறையோடு இலக்கியத்திலும், சங்கீதத்திலும் ஒவ்வொரு முக்கியமான பகுதி நிச்சயம் அழுகி விழுந்துவிடும். இதுதான் அவைகளின் ஆயுளின் கடைசித்தலைமுறை. அவைகளை இந்தத் தலைறையைச் சேர்ந்த நாம் பாதுகாக்கத் தவறினால் அவைகளுக்கு ஆபத்து என்பதை எல்லோரும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

முல்லை - 12

குழந்தை எப்படிப் பிறக்கிறது?

இடைசைப் புலவன்
(கு. அழகிரிசாமி)

உலகத்திலுள்ள எல்லாக் கலைகளிலும் மனிதனோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது பிரஜோற்பத்திக் கலைதான். மன்மதக்கலையின் குழந்தை பிறக்கச் செய்யும் இந்தப் பிரஜோற்பத்திக் கலை, சொல்லித் தெரிவதில்லை யென்றாலும், சொல்லித் தெரியவேண்டிய அவசியத்தை இன்னும் இழந்துவிடவில்லை. சாதாரண மனிதனுக்கு இந்தக் கலை கைவரப்பெற்றதாக வெளிக்குத் தோன்றினாலும், இதில் அவன் 'கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகத்தளவு' தான். கல்லாதது உலகத்தளவாக இராவிட்டால், ஆண்-பெண் சம்பந்தத்தில் விலங்கு, பறவை முதலிய வர்க்கங்களில் தோன்றாத அபூர்வமாகக் கூட எதிர்பார்க்க முடியாத கோளாறுகள், விகாரங்கள், விபரீதங்கள் ஏற்பட்டு மனிதவர்க்கத்தை, மனிதவர்க்கம் தோன்றி பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் கழித்தும் இன்னும் பாதித்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்ட அதிமுக்கியமான கலையைப்பற்றி விளக்க உரைகளையெல்லாம் வேண்டாம் என்று புறக்கணிப்பது மனித வர்க்கத்தையே புறக்கணிப்பதுதான்.

அக்கினி சாட்சியாகக் கல்யாணம் செய்தாலும், செய்யாவிட்டாலும் ஆணும் பெண்ணும் காம உணர்ச்சியைப் பொறுத்தமட்டிலும் கணவனும் மனைவியுமாகத்தான் இருக்கிறார்கள். கல்யாணம் பண்ணிக் கொண்டவர்களுக்கும், பண்ணிக்கொள்ளாதவர்களுக்குமே காம உணர்ச்சி ஒரு பொதுச்சொத்து. சித்தஸ்வாதீனம் அற்றிருந்தாலொழிய, பெண்ணை அடையவேண்டும் என்று ஆணுக்கும், ஆணை அடையவேண்டும் என்று பெண்ணுக்கும் ஏற்படும் முழுமுதல் உணர்ச்சி. இந்த உணர்ச்சியின் உன்மத்தத்தாலேயே சித்த ஸ்வாதீனம் இழந்துவிடுபவரும் உண்டு. இந்த உணர்ச்சி இப்படி நேரடியாக நல்ல முறையிலும் சங்கடமான முறையிலும் உலகத்துக்குத் தன் குணத்தைக் காட்டிக்கொண்டேயிருக்கும். இது நேரடியாக வெளிப்பட்டாலும், மறைமுகமாக வேறுவிதமான செயல்களின் மூலமாக வெளிப்பட்டாலும் ஒன்றுதான். இப்படி ஆண் என்றால் பெண்ணைத் தேடும் ஆணாகவும், பெண் என்றால் ஆணைத் தேடும் பெண்ணாகவும் இருக்கும்போது இவர்களுடைய சம்பந்தத்தைப்பற்றி எழுதுவதிலோ தெரிந்துகொள்ளுவதிலோ

வெட்கமோ, கோபமோ கொள்ளுவது முதல் தரமான நடிப்பாகவும் அல்லது பைத்தியக் காரத்தனமாகவும்தான் இருக்க முடியும்.

மேல்நாட்டவர்கள் எல்லாவற்றிலும்போலவே, இந்தப் பிரஜோற்பத்திக் கலையின் விரிவான, விளக்கமான ஆராய்ச்சியிலும் நம்மை விட எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள். நம் நாட்டிலும் இந்த விஷயத்தைப்பற்றிய நூல்கள் இல்லாமலில்லை. கொக்கோகன், வாத்ஸாயனன், அதிவீரராமன் முதலியோர் முறைப்படி காம சாஸ்திரத்தை எழுதியே வைத்திருக்கிறார்கள். ஆனால் சிலர் இந்த நூல்களைத் தொடாமல் திருநீலகண்ட வைராக்கியம்கொண்டு தங்களையே ஏமாற்றி வருகிறார்கள்.

'பெண்ணைப் புணருவதற்கும், குழந்தையைப் பெறுவதற்கும் வாத்தியார் வந்தா கற்றுக்கொடுக்க வேண்டும்? இந்த சர்வஜன ரகசிய பாண்டியத்தைத் தவிர வேறு என்ன பாண்டித்யம் இந்தக் கலையில் உண்டு?' என்ற கேள்விதான் இன்றைய பரிசுத்தவான்களின் சவால். 'வேறென்ன, பாண்டித்தியம் உண்டு?' என்று கேட்க மனிதனுக்கு யோக்கியதை கிடைத்துவிட்டதென்றால் காம உணர்ச்சிக்கு வாய்க்கால் வெட்டித் திருப்பிவிடுவதில் உலகத்துக்கு இந்தச் சங்கடம் ஏன்? சரியற்ற வாய்க்காலிலும், கிடங்கு மேட்டிலும் அந்த உணர்ச்சி வெள்ளம் பாய்ந்து ஏன் இப்படி சேறும் சகதியும் ஆகவேண்டும்? வண்ணானுடைய முயற்சியால் தூய்மைப்படுத்தப்பட்ட வெள்ளைச் சட்டையையும், ஒரு குடம் தண்ணீரால் கழுவிவிடப்பெற்ற மாமிச உடலையும் விட்டுவிட்டு மனித இதயங்களைத் திறந்து பார்த்தால் அங்கே ஊர்க் கக்கூஸைப் போல துர்நாற்றம் வீசுவது ஏன்?

இந்த ஆபாசம் ஒருபுறமிருக்கட்டும். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை வாய்த்தும் கூட, முக்கால்வாசிக் குடும்பங்களில் காலமெல்லாம் புருஷன் பெண்டாட்டி பிணக்கு நேர்ந்து குடும்பங்கள் பல வழிகளிலும் நாசமடைவது காமசாஸ்திர ஞான சூன்யத்தினால்தான் என்பது தைரியமாகச் சொல்லவேண்டிய உண்மை. அந்தக் குடும்பங்களில் பிறக்கும் சந்ததிகள் கூன், குருடு, நொண்டி, செவிடு, புத்திபேதலிப்பு, மூடத்தனம், அற்பாயுசு, ஒழுங்கீனம் முதலியவைகளுக்கெல்லாம் தாயும் தந்தையுமாக இருக்கிறார்கள்.

இரண்டொரு பிரபலமானவர்கள், மகாத்மாக்கள் ஆடிக்கு ஒரு தடவை, அமாவாசைக்கு ஒரு தடவையாகக் காம அனுஷ்டான முறையைப்பற்றி இரண்டொரு வார்த்தையாவது சொல்லாமல் போகவில்லை. ஆனால், அவர்கள் கூறிய வழியில் காம உணர்ச்சியை கிரியாம்சைக்கு ரேஷன் முறையில் கொண்டுவருவதில் உள்ள கஷ்டத்தைப் பார்த்தால், காம உணர்ச்சியையே உள்ளடக்கிவிடுவது கஷ்டமில்லை என்று கருதும்படியாக இருக்கிறது.

இந்த பிரஜோற்பத்திக் கலையைப்பற்றிச் சாஸ்திரோக்தமாக ஆராய்ந்துள்ள அநேக மேதாவிகள் 'பெரிய மனிதர்களின்' வாய்ச்

சொல்லுக்குப் பயந்து, இந்தக் கலையாராய்ச்சியைப்பற்றித் துணிகரமாக எழுதாமலிருக்கலாம். ஆனால் அவர்கள் தயக்கத்தைக் கண்டு மற்றவர்களும் பேசாமல் இருக்கிறார்களா?

மேதாவிகள் தயங்கினால் என்ன ஆகும்? அறிவாளிகள் அடியெடுத்துவைக்கப் பயப்படும் இடத்தில் முட்டாள்கள் தாராளமாகப் போய் உலாவிவிட்டு வருகிறார்கள் என்ற ஆங்கிலப் பழமொழிக்கிலக்காகவே காரியம் நடக்கிறது. மக்களின் காம உணர்ச்சி படமெடுத்தாட மகுடி ஊதும் முறையில் சாஸ்திர ஆராய்ச்சியில்லாமல் விளக்கவேண்டிய விஷயங்கள் அரை குறையாக விடப்படுகின்றன. சிலர், உயிரின் ஆணி வேர் ஓடியிருக்கும் இந்தக் கலையைப்பற்றித் தப்பான உபதேசங்களையும் செய்து தொலைத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுஜனங்களுக்கு ஏமாந்த சோணகிரிப் பட்டம் சூட்டி, புத்தக விற்பனையின் மூலம் லக்ஷக்கணக்கான பணத்தைக் கொள்ளை அடித்துவிட்டார்கள்.

சமீபத்தில் ஒரு புதுவகையைச் சேர்ந்த தமிழ்ப் புத்தகத்தைப் பார்த்தேன். புத்தகத்தின் பெயர் 'குழந்தை எப்படிப் பிறக்கிறது' (ஆசிரியர் திரு. பொ திரிகூடசுந்தரம் பிள்ளை).

புத்தகத்தில் குழந்தை எப்படிப் பிறக்கிறது என்பதைச் சொல்ல வந்திருக்கிறார் ஆசிரியர். இது வாலிப வயதினருக்கோ அல்லது பிள்ளைப்பேறு வேண்டி அரசையும் வேம்பையும் வலம்வந்து, அந்த உபாயமும் பலியாமல் ராமேஸ்வர யாத்திரைக்குக் கிளம்பும் தம்பதிகளுக்காகவோ எழுதப்படவில்லை என்பதை ஆசிரியரின் முன்னுரையிலிருந்து கண்டுகொள்ளலாம். "அன்பார்ந்த குழந்தைகளே! உங்களுக்கு இந்தப் புஸ்தகத்தைச் சந்தோஷத்துடன் அளிக்கிறேன்" என்று தொடங்குகிறது ஆசிரியரின் முன்னுரை. ஆசிரியரின் குழந்தை அவரிடம் பல கேள்விகள் கேட்குமாம்; அதற்கு அவர் பதில் சொல்லுவாராம். அப்படித் தம் குழந்தை - அதாவது பத்துவயதான பெண்குழந்தை - ஒரு நாள் ஆசிரியரிடம் வந்து, 'அப்பா! தங்கச்சி அம்மா வயிற்றிலிருந்து எப்படி வந்தாள்?' என்ற ஒரு கேள்வியைத்தானே கேட்க ஆசிரியரும் குழந்தை பிறப்பதைப்பற்றி விவரமாகச் சொன்னாராம். ஆசிரியர் கூற்றிலிருந்து, ஆசிரியரிடம் உண்மையாகவே அவருடைய வீட்டில் வைத்து இந்த கேள்விகளையெல்லாம் கேட்க ஆசிரியர் பதில் சொல்லிக் கொண்டே வந்தார் என்று தெரிகிறது. ஆனால், புத்தகத்தைப் படித்தால், இப்படிக் கேள்விகளையும் ஒரு பெண் குழந்தை தன் தகப்பனாரிடம் கேட்குமா? தகப்பனாரும் இப்படிக் கேள்விகளுக்கு இந்த விதமாகப் பதில் சொல்லுவாரா என்று எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. ஆண், பெண் குறிபற்றிய விளக்கங்கள், சுக்கில சுரோணித சங்கமம், கோழிமேல் சேவல் ஏறுவது, பசுவின் மேல் காளை காலெடுத்துப் போடுவது முதலியவைகளைப்பற்றி ஒரு தகப்பனால் தாம் பெற்ற மகளிடத்தில் எப்படிச் சொல்லிவிட்டார் என்று நினைத்தால் விபரீதமான காட்சிகள் தான் மனசில் படிகின்றன. பகுத்தறிவு எவ்வளவுதான் முற்றினாலும் -

மனைவியோடு தனியறையில் பேசும் யோக்கியதை உள்ள விஷயங்களைத் தான் பெற்ற மகளிடத்தில் பேசத் துணிவு பிறப்பது தான் எப்படி என்ற திகைப்பிலிருந்து மீளக் கஷ்டமாகவே இருந்தது. அப்படிச் சொல்லத்தான் தெய்வாதீனமாகத் துணிவு கிடைத்ததே. அந்தத் துணிவே துணையாகக் கொண்டு ஆசிரியர் தம் காரியத்தையாவது சரிவரச் சாதித்திருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை.

முதலில்:-

பெட்டைக் கோழியின் வாலுக்கு அடியில் உள்ள சிறு துவாரத்தில் சேவற்கோழி தன் துவாரத்தை ஒட்ட சேவலின் தாது கோழியின் வயிற்றில் புகுந்து கருத்தரிக்கிறது என்று கூறிவிட்டு ஆசிரியர் மேலே சொல்லியிருப்பதாவது:

"பாப்பா :- சேவற்கோழிக்கும் பெட்டைக் கோழிக்கும் வாலுக்கடியில் சிறு துவாரங்கள் இருப்பதாகச் சொன்னாயே, அது மாதிரி காளைமாட்டுக்கும் பசுமாட்டுக்கும் இருக்கிறதோ அப்பா!" என்று மகள் தகப்பனாரைக் கேட்கிறாளாம். மகளுக்குப் பத்து வயது. பத்துவயதுப் பெண்ணுக்குக் காளைமாட்டுக்கும் பசுமாட்டுக்கும் துவாரம் இருப்பது தெரியாமல் போய்விடாது. குழந்தைக்கு வயதும் ஆய்விட்டது ஒன்று; அடுத்தபடி யானை பார்க்க வெள்ளெழுத்தும் வந்திருக்காது.

ஆசிரியர் மேற்படி கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்:

அப்பா:- அம்மா! பசுமாட்டின் வாலினடியில் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. ஒன்று, சாணமிடுந் துவாரம். மற்றொன்றின் வழியாகத்தான் மூத்திரம் பெய்யும் . ஆனால் அந்தத் துவாரத்தின் அருகிலேயே வேறு ஒரு துவாரம் உண்டு. காளை மாட்டின் வாலடியில் சாணத்துவாரந்தான் உண்டு. ஆனால் அடிவயிற்றில் பின் கால்களின் பக்கத்தில் ஒரு சிறு குழாய் இருக்கிறது. காளை மாடு பசுமாட்டின் மேலே காலைப்போடும்போது, இந்தக் குழாய் பசுமாட்டின் மூத்திரத் துவாரத்தின் பக்கத்திலுள்ள துவாரத்தில் புகுந்துவிடும். அப்பொழுது காளைமாட்டின் அடிவயிற்றில் தொங்கும் பீஜங்களிலிருந்து ஆண் தாதுவானது அந்தக் குழாய் வழியாகப் பசுவின் உடம்பில் சென்று அங்குள்ள சிறு முட்டையுடன் சேர்ந்துவிடும்.

இப்படியாக மாட்டினத்தின் "அனுபோக வகை" கூறியிருக்கிறார். ஆனால் பத்து வயதுப் பெண்ணுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்குமே இங்கு ஒரு சந்தேகம் எழுகிறது. பசுவுக்குத் துவாரங்கள் இரண்டுதான் என்று கூறிய ஆசிரியர் குழாய்புகுந்து வரும் துவாரம் ஒன்று தனியாக இருப்பதைப்போலவும் அது பசுமாட்டின் மூத்திரத் துவாரத்தின் பக்கத்திலுள்ளதாகச் சொல்லியிருப்பதால் மேற்படி துவாரமானது மூத்திரத்துவாரத்தைவிட்டு விலகி அதையடுத்து மேலாகவோ கீழாகவோ, பக்கவாட்டிலோ இருப்பதாக அல்லவா கருதத் தோன்றுகிறது. இதேமாதிரி 36ம் பக்கத்திலும் 'அம்மாவினுடைய மூத்திரத்துவாரத்துக்கு அருகே யுள்ள துவாரத்தில்' என்று கூறி அம்மாவுக்கும் அபானத்

துவாரத்தை நீக்கி வேறு இரண்டு துவாரங்கள் பக்கம்பக்கமாக வெளிப்படையாகத் துண்டுபட்டுத்தெரியும் முறையில் இருப்பதைப்போலக் குறிப்பிடுகிறார். இந்தப் புதிய துவாரத்தை ஆசிரியர் எப்படி சிருஷ்டித்துவிட்டாரரோ? பெரியவர்களுக்கே சந்தேகம் பிடித்து தடுமாறும் போது பத்து வயது 'பாப்பா' இந்தப் புதிய துவாரம் எங்கேயப்பா இருக்கிறது? என்று எப்படி கேட்காமல் இருந்துவிட்டாள்? பசுவைப்பற்றித்தான் ஒருவேளை தெரிந்திராவிட்டாலும், மனிதப் பெண்களுக்கு எப்படி அமைந்திருக்கிறது என்பதை, தான் ஒரு பெண்ணாக இருந்தும் தெரிந்திராமல் இருக்க முடியுமா?

மாட்டினத்தின் புணர்ச்சித்தொழிலை ஆசிரியர் சவிஸ்தாரமாக விளக்கிவிட்டு, மனித வர்க்கத்துக்கு வரும்போது கீழ்க்கண்டவாறு தம் மகளுக்கு விளக்குகிறார்.

அப்பாவின் ஆண்தாது அம்மாவின் முட்டைப் பையிலிருந்து வரும் சிறு முட்டையுடன் கலக்கும்விதம்:

"ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்வதற்கு அம்மாவும் அப்பாவும் ஒருவரைப் பார்த்து ஒருவர் படுத்துக்கொண்டால் போதுமானது." என்று ஓரிடத்திலும், "அம்மாவும் அப்பாவும் நேருக்குநேராகப் படுத்து அப்பாவின் ஆண்தாது அம்மாவின் உள்ளே போகும்பொழுது ..." என்று பிறிதோரிடத்திலும் கூறியிருக்கிறார். மாட்டினத்தின் புணர்ச்சியைப்பற்றி அவ்வளவு விவரமாகச் சொல்லக்கேட்ட பாப்பா, மனிதப்புணர்ச்சியைப்பற்றி மேற்கொண்டு கேள்வி கேட்காமல் இருப்பது எப்படி? பாப்பா அப்படியே விஷயத்தை உணர்ந்ததாக அர்த்தமா?

வயதுவந்த ஆண்மக்களில் பலருக்குமே கலவி செய்யும்போது அமரும் கரணமுறையும், அது சம்பந்தமான அநேக விவரங்களும் தெரியாதிருந்து கல்யாணத்துக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்பாக ஆணுக்கு நண்பர்களும், பெண்ணுக்குச் சிறிய தாயார் முதலியவர்களாலும் எல்லா விஷயங்களுமே சொல்லப்படுவது நம் நாட்டில் சகஜம். புத்தகங்களிலும் கலவிக்குரிய கரணங்களைப் பற்பல ஆசிரியர்கள் எத்தனையோ ஆசிரியர்கள் விவரமாக விளக்கியிருந்தாலும், மேலும்மேலும் அது சம்பந்தமாக அனுபவமற்ற ஆண்பெண்களுக்கு சந்தேகங்களைப் பிறரிடம் கேட்பதும் நடைமுறை விஷயம். அப்படியிருக்க, ஆணும் பெண்ணும் பக்கம்பக்கமாகப் படுத்துக்கொண்டால் போதும் என்று ஆசிரியர் நிறுத்திவிட்டார். என்னதான் இருந்தாலும் பெற்ற மகளிடத்தில் தகப்பனால் இதைச் சொல்லுவதுதான் எப்படி என்று கேட்டால் அது நியாயம்தான். அப்படியானால் ஆசிரியர் இந்தப் புத்தகத்தை தந்தை மகள் வினாவிடையாக எழுதுவானேன் என்ற கேள்வியே எழுகிறது.

கடைசியில் கோழியினம் பிரஜாவிருத்தியில் ஒழுங்கு தவறி நடப்பதாகவும், அறிவின்மைதான் அதற்குக் காரணம் என்றும் எழுதிவிட்டு

மனிதர்கள் குழந்தைகள் பெறவேண்டுமென்று ஆசை கொண்டு அதற்கான அறிவை உபயோகித்து நல்ல குழந்தைகளைப் பெறுகிறார்கள் என்று ஆசிரியர் எழுதியிருப்பது தப்பு. பறவைகளையும் மிருகங்களையும் போல இயற்கையமைப்பை அனுசரித்து மனிதன் பிரஜாவிருத்தி சம்பந்தமாக, 99 சதவீதம் பறவை, விலங்கினங்களில் அசம்பாவிதங்கள் நேராமல், மனித இனத்துக்குப் பெரும்பாலும் அசம்பாவிதங்கள் காமக்குரூர விகாரங்களும் நேர்ந்துகொண்டே இருக்கின்றன. காம சாஸ்திரத்தைப் பற்றித் தெளிவாய் ஒன்றும் தெரியாமல், தனது மூளைக்குத் தட்டிய யோசனைப்படியும், இயற்கைக்கு மாறாகச் செய்யவேண்டும் என்ற குரங்குக் குறும்புத்தனப்படியும் காம விகாரங்களும், அதமப்புணர்ச்சிகளும் உண்டாகின்றன.

ஆசிரியர் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, மேலும் சந்தேகங்கள் ஏற்பட்டால் குழந்தை தம்மை வந்து கேட்கலாம் என்று கூறி விட்டு ஒருவகையாகப் புத்தகத்தை முடிக்கிறார்.

குழந்தை பிறக்கும்விதம் எப்படி என்பது எல்லோருக்கும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஆசிரியர் புத்தகம் எழுதியிருந்தாலும் இந்த விரசமான முறையில் தகப்பனும் மகளும் காமசாஸ்திர சர்ச்சைசெய்வதாக எழுதியிருப்பது மிகவும் ரசாபாசமாயிருக்கிறது. பாடப்புத்தகங்களைப்போல குறிப்பிட்ட வயதுள்ளவர்களுக்குக் குறிப்பிட்ட முறையில் காமசாஸ்திரம் விளக்க நூல்கள் எழுதி வெளியிடவேண்டுமே ஒழிய 'பெண்தானே!' என்று அபேதமாகக் கருதி, துணிவும்கொண்டு, எந்தப் புத்திசாலியும் கொக்கோகப் பிரசாரத்தைத் தொடங்கிவிடக்கூடாது என்பதே என்னைப் போன்றவர்களின் தாழ்மையான வேண்டுகோள்.

முல்லை - 12

அறிமுகம்: வி.ஸ. காண்டேகர்

கா.ஸ்ரீ.ஸ்ரீ.

பிரசித்த மகாராஷ்டிர நாடக ஆசிரியரான கோல்ஹட்கர் இவரிடத்திலே அன்பு கொண்டு, இவரை இலக்கிய உலகிலே புகுத்தினார். "இவன் என் ஸ்வீகாரப் பிள்ளை" என்று அவர் சொல்லுவது வழக்கம். ஆண்டுதோறும் சில நாட்களாவது இவ்விருவரும் ஒன்றுகூடித் தம் இன்ப துன்பங்களைப் பற்றிப் பேசியும் இலக்கிய விவாதம் செய்தும் பொழுது போக்குவார்கள். இவருக்குக் கல்யாணம் செய்வித்தவரும் அவரே. பழைய "மனு" இப்பொழுது "உஷா" ஆனாள்.

"நான் என் மனைவியை அவளுடைய மோகனக் கண்களுக்காகவே தேர்ந்தெடுத்தேன்" என்று சொல்லும் போது, காண்டேகரின் கண்களில் இன்றும் பெருமிதமும் ஆனந்தமும் மிளிர்வதைக் காணலாம். விவாகம் ஆனபின்பு தம்பதிகள் குடித்தனம் செய்வதைப் பார்ப்பதற்காக அந்த நாடக ஆசிரியர் இவர்கள் வீட்டுக்கு வந்து சிலநாள் தங்கி, மகிழ்ச்சியும் அன்பும் கொண்டு திரும்பினார்.

மற்றொரு நாடக ஆசிரியரான கட்கரியும் இவரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். இவரை அழைத்துக்கொண்டு அவர் ஒரு முறை 'கந்தர்வ நாடக மண்டலி'க்குப் போனார். கட்கரியோடு ஒரு புதிய வாலிபனைக் கண்ட பாலகந்தர்வன் அவனைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பினார். கட்கரி இவர் பெயர் ஊர் எதையும் சொல்லாமலே, "கோல்ஹட்கரின் சிம்மாசனத்துக்கு வாரிசு இவன்!" என்று மட்டுமே பதில் சொன்னார். கட்கரியோடு இவர் நீண்ட காலம் பழக முடியவில்லை. காலன் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். கட்கரியைப் பற்றித் தாம் அறிந்ததை இவர் தமது "எரி நட்சத்திரம்" என்ற நாவலில் ஒரு நிகழ்ச்சியினிடையே எழுதியிருக்கிறார்.

வி.ஸ. காண்டேகருக்கு இப்பொழுது வயது 49. இவருடைய தகப்பனார் ஸாங்க்லி ஸம்ஸ்தானத்தில் முனிசீப்பாக இருந்தவர். காண்டேகரின் சிறு பருவம் அங்கேதான் கழிந்தது. சிறுவயதில் இவருக்குப் படிப்பை விட விளையாட்டும் கூத்துப் பார்ப்பதும், கிருஷ்ணா நதியில் நீச்சலடிப்பதும், பள்ளிக்கூடம் விட்டதும் கிரிக்கெட் விளையாடுவதும், விடுமுறை நாட்களில் தம் வீட்டிலோ தம் பால்ய

நண்பன் (இப்பொழுது புரொபஸர்) ராம்பாவூவின் வீட்டிலோ. பையன்களைக் கூட்டி நாடகம் நடிப்பதும் மிகவும் பிடிக்கும். அப்பொழுது அர்ஜுனன் முதல் கைகேயி வரையில் பல பாத்திரங்களாக இவர் நடித்திருக்கிறார். மிஞ்சியிருக்கும் நேரத்திலே இவர் நிறையப் படிப்பார். ஆயிரக்கணக்கான பக்கங்கள் உள்ள நாவல்களை ஒரே இரவில் படித்து முடிப்பார்.

தாயைவிடத் தந்தையிடம் இவருக்கு பற்று அதிகம். இவருடைய பதின்மூன்றாவது வயதிலேயே தகப்பனார் பாரிச வாயுவினால் இறந்தார். குடும்ப நண்பர்கள் பலர் இவருக்கு உதவினர். டாக்டர் தேவ் செய்த உதவி குறிப்பிடத்தக்கது. மெட்ரிக்கில் இவர் எட்டாவது மாணவராகத் தேர்ச்சி பெற்றார்; பர்க்குஸன் காலேஜில் சேர்ந்தார். முதல் உபகாரச் சம்பளம் கிடைத்திருந்தும், காலேஜ் செலவைச் சரிக்கட்ட இரண்டொரு டியூஷன்கள் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

இதனிடையே இவருடைய மாமா இறந்த தந்தி வந்தது. இவர் ஸாங்கிலிக்கு வரும் போது, கொங்கணத்து ஜமீன்தாரான இவருடைய சிற்றப்பா இவரை ஸ்வீகாரம் செய்துகொள்ளப் போவதாகச் செய்தி வந்தது. இந்த ஸ்வீகாரச் சடங்கும் பிறகு முடிந்தது. இதனால் இவர் எதிர்பார்த்த பயன் ஏதும் கிடைக்கவில்லை. ஸ்வீகாரத் தந்தையின் இயல்பும் இவர் இயல்பும் வெவ்வேறாக இருந்தமையால் அடிக்கடி சச்சரவுகள் நேரும். இவர் மன அமைதி கெட்டுப்போயிற்று. அந்த ஊருக்கே சொந்தமான மலேரியாவும் இவரைப் பிடித்துக் கொண்டது.

வக்கீலாகும் வாய்ப்பு இருந்தும் சமூகத் தொண்டிலே இவர் ஈடுபட விரும்பினார். சிரோடேயைப் போன்ற ஒரு பட்டிக்காட்டில் ஆங்கிலப் பள்ளியை ஆரம்பிக்கும் பொறுப்பை இவர் ஏற்றுக்கொண்டார். மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில், சிறந்த நண்பர்களின் உதவிகொண்டு, அறிவைப் போதிக்கும் இந்தத் தூய தொண்டை இவர் தொடங்கினார். தலைமை உபாத்தியாயரான இவர், பல இடையூறுகளையும் எதிர்ப்புகளையும் சமாளித்துத் தீரத்துடன் செயலாற்றினார். மாணவர்களுக்கு நண்பராக இவர் பழகினார்.

1925-லிருந்துதான் இவர் மும்முரமாக எழுத ஆரம்பித்தார். பிறகு பத்து வருஷங்களுக்கெல்லாம் சினிமாப் படங்களுக்குத் கதை எழுதலானார். இவர் எழுதிய நிழல் (சாயா) என்னும் திரைக்கதைக்கு, ‘கோஹர் மெட்டல்’ கிடைத்தது. சினிமா வேலைகளாலும் எழுத்து வேலைகளாலும் பள்ளிக்கூடத்தைக் கவனிக்க முடியாமல், ராஜீனாமாச் செய்து கோல்ஹாபூருக்கு வந்து தங்கினார்.

பல வருஷங்களுக்கு முன்பு இரண்டு முறை பாம்பு கடித்து இவர் பிழைத்ததே புனர் ஜன்மமாயிற்று. பிறகு எத்தனையோ டாக்டர்கள் பல வைத்தியங்கள் செய்தும் இவர் உடம்பில் ஊறிய விஷம் இன்னும் நோய்களுக்குக் காரணமாகவே இருக்கிறது. இவருக்குத் தலைவலியாவது இல்லாத நாளே கிடையாது. இந்த உடல்நிலையிலும் இவர் இதுவரையில்

இருநூற்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளும், பல சிறு கட்டுரைகளும், ஒரு டஜனுக்கு மேற்பட்ட நாவல்களும், நாலைந்து கட்டுரைத் தொகுதிகளும், ஏழெட்டுத் திரைக் கதைகளும் எழுதியிருக்கிறார். பல இலக்கிய மகாநாடுகளுக்குத் தலைமை வகித்துத் தம் இலக்கியக் கொள்கைகளையும் கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார். சிறு கட்டுரை என்பது இவர் இலக்கியத்தில் தோற்றுவித்த புதுத் துறை.

இந்த ஆண்டில் பரோடா ஸம்ஸ்தானம் இவரைக் கௌரவித்தது. என். ஆர். பாடக், கே. பி. குல்கர்ணி, ஆர். எஸ். ஜோக், எஸ்டி. பேண்ட்ஸே ஆகிய பேராசிரியர்களோடு இவர் ஐவராக நின்றார்.

முல்லை - 13

இன்ப வாழ்க்கை

'நல்வழி'

உலகில் மிக அழகிய பொருள்களில் ஒன்று ஆரோக்கியமும் சந்தோஷமும் கிடைக்கப்பெற்ற ஒரு குழந்தை. அதற்குத் தேவையானவை எல்லாம் கிடைத்தும், சுற்றுப்புறங்கள் ஏற்றவையாயும் இருந்தால், அது உண்மையில் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படும். ஆனால் அநேகருக்கு வாழ்க்கை கஷ்டமாகவும் இன்பமற்றதாகவும் காணப்படுகிறது. இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று ஆரோக்கியமில்லாமையே. இவ்விஷயத்தை ஆராயப் புகின், உடலின் நிலை மாத்திரமல்லாது, மனநிலையுங்கூடச் சாந்தியை நிலவச் செய்து வாழ்க்கையைச் சரியான முறையில் நடத்த ஏதுவாகிறது உண்மையில் ஒரு மனிதனின் ஆரோக்கியத்திற்கும் அவன் மன நிலைக்கும் உள்ள தொடர்பை எவ்வளவு வற்புறுத்தினாலும் மிகையாகாது.

தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஜனங்கள் எவ்விதக் கஷ்டத்தையும் பெரும் வேதனையையும் அநுபவிப்பார்கள். எவ்வித மருந்தை உட்கொள்ளவும் கடினமான சத்திர வைத்தியத்திற்கும் சம்மதிப்பார்கள்.

பண்டைக் காலத்தவர்கள், மனம் உடலின் நிலையைப் பாதிப்பதை அறிந்திருந்தார்கள். புத்திமானாகிய சாலோமோன் சொல்லுவதைக் கேளுங்கள்: "தூர தேசத்திலிருந்து வரும் நற்செய்தி நாவறட்சியடைந்த வர்களுக்குக் குளிர்ந்த ஜலம் போன்றது." 'சந்தோஷமுள்ள இருதயம் நல்ல மருந்து; மனக்கிலேசம் எலும்புகளை உலர்த்தும்." வைத்தியர்களும் நர்ஸுகளும் நடந்துகொள்ளும் நல்ல முறையால் நோயாளிகளுக்கு அநுகூலம் ஏற்படும். பழுதான மன நிலைகளாவன: துக்கம், தனிமை, பொருளீட்டும் துறையில் அல்லது விவாகசம்பந்த முறையில் தோல்வி, துர்ச் செய்தி, மனக் கவலை, தளர்வு, இவைகளெல்லாம் பலவீனம், தொத்து நோய்களுக்கு ஆளாதல், நீரிழிவு போன்ற நோய்களுக்கு இடமளித்திருக்கின்றன.

நம் எண்ணங்களுடனும் செய்கைகளுடனும் ஓரளவு உணர்ச்சி கலந்து நிற்கும். நமக்கு விருப்பமானவர்களுடன் அல்லது நாம் விரும்பும்

இடங்களில் இருக்கும்போது நமது உடலிலும் நல்ல உணர்ச்சிகள் உண்டாகின்றன. அநேகர் சந்தோஷத்துடன் இருப்பதால் வரும் நன்மையைப்பற்றி உணர்ந்திருப்பதாக அறியக் கிடக்கிறது. அநேக வாழ்த்துக்கள் சிநேகிதர்களைச் சந்தோஷமாக வைத்திருக்கவேண்டும் என்ற நமது விருப்பத்தைக் காட்டுகின்றன.

அதிருஷ்டமும் சௌக்கியமும் சந்தோஷமும் பெற நமக்குள்ள விருப்பத்தை நம் வீடுகளுடையவும் குழந்தைகளுடையவும் பெயர்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஜனங்கள் தங்களையோ தங்கள் சிநேகிதரையோ மகிழச் செய்வதற்குக் கையாளும் முறைகளாவன:

1. உற்சாகமுள்ள சொற்களாலும் முகக் குறியாலும் ஊக்கமூட்டுதலும் கடிதப் போக்குவரத்தும்.
2. அழகான பொருள்களையும் ஆட்களையும் பார்த்தல்.
3. பலவித ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளுதல்.
4. எல்லாவித விளையாட்டுகள் மூலமும் தேகப் பயிற்சி செய்தல்.
5. செல்வம் ஈட்டலும் மதிப்பின் சின்னங்களைத் தேடலும்.
6. குடும்பத்தோடு அளவளாவுதல்.
7. ஏற்ற தொழிலைச் செய்தல்.
8. இலக்கியங்களையும் கலைகளையும் கற்றல்.
9. சமூக வாழ்க்கையில் ஈடுபடுதல்.
10. சமய வாழ்க்கையில் ஈடுபடுதல்.

சந்தோஷமாயிருக்க விரும்பி வாஞ்சைப்பட்டுக்கொண்டு இருந்தும், அநேகர் சந்தோஷமற்றவர்களாக இருப்பது விசனிக்கத் தக்கது. பார்க்கப் புகின், துக்கம் உண்மையில் மனநோயே. பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டிய சரியான பைத்தியரோகிகளைவிட அதிக மனோவியாகுலத்தை உண்டாக்கும் சிறிய மூளைக் கோளாறுகள் உண்டு. பின் கூறியவை பல முறையும் தேக அசௌக்கியங்கள் போல் காணப்படும். அவைகளின் உண்மையான தன்மையைப் பெரும்பான்மையாய்க் கண்டு பிடிக்காததால், போதிய சிகிச்சை செய்யப்படுவதில்லை. வெளித் தோற்றங்கள் பல விதமாய்க் காணப்படும். நோய் மனப்பான்மை, எளிதில் கோபம் மூளல், வாழ்க்கையில் வெறுப்பு, மனம் ஒரு வழியில் நில்லாமை, ஞாபகமறதி, தூக்கமின்மை, வியாகுலம், அளவுக்கு மிஞ்சின அல்லது காரணமில்லாத பயம், கிலேசம். இந்நிலைமைகளை மனத்தத்துவ சாஸ்திரப்படி ஆராய்ந்து சிகிச்சை செய்யவேண்டும். அவை ஏற்படும் போதெல்லாம் தற்கால முறைப்படி சுகப்படுத்தப் பட வேண்டும். மருந்துகள் பயன்படா.

ஜனங்கள் மூளைக் கோளாறுகளுக்கு ஆளாவதற்கு மனத்தத்துவ சாஸ்திரத்தின் படி நான்கு காரணங்கள் உண்டு.

1. சிறு பிராயத்தில் சரியான முறையில் பழக்கம் பெறாதிருத்தல். சிறு பிராயத்து அநுபவம் முழு ஜீவியகாலத்தையும் பாதிக்கும்.
2. வாழ்க்கையில் கஷ்டமான நிலைமைகள் ஏற்படுதல். சகல வித நெருக்கடிகள். அவைகளில் சில வறுமை, பொருத்தமில்லாத கணவன் அல்லது மனைவி, நம்பிமோசம் போவது.
3. வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றி அறியாமையும் சந்தோஷ வாழ்க்கையைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் கொண்டிருப்பதும்.
4. தம்மை வாழ்க்கைக்குச் சரிப்படுத்திக்கொள்ளும் முறையைப்பற்றி அறியாமை.

வாழ்க்கைக்கு ஏற்றபடி நம்மைச் சரிப்படுத்திக்கொள்வது லகுவாகவோ கடினமாகவோ இருக்கலாம். ஆனால் நாம் வளர வளர விஷயங்களை உணர்ந்து, அதற்கேற்றபடி நம்மைச் சரிப்படுத்திக்கொண்டு திறமையையும் சந்தோஷத்தையும் ஈட்டிக்கொள்ள வேண்டும்.

சந்தோஷமாய் வாழ்வதற்குத் தேக ஆரேக்கியம் மிக அவசியமானது. மன,ஆரோக்கியம் அதிலும் அவசியம் ஏனெனில் மனத்தின் ஆட்சி உடலின் மேலும் செல்லும். அநேக சுகவீனங்களுக்கு மனமே காரணம். சிறு பிராயத்தில் சரியான பழக்கம் பெறாதிருத்தல், வாழ்க்கையின் நோக்கத்தை அறியாமலும் அதன் பிரமாணங்களின்படி ஒழுகாமலும் விடுவதால் இவை ஏற்படுகின்றன. மனத்தின் ஆரோக்கியத்திற்கு அதிகக் கவனம் செலுத்தினால் நாட்டிலுள்ள பெரும்பான்மையான திறமைக்குறைவையும் துக்கத்தையும் குற்றத்தையும் அநீதியையும் விலக்கலாம். வாழ்க்கையில் வெற்றி பெறாதவர்கள், குற்றவாளிகள், பாதகர் என்று சொல்லப்படுவோரில் அநேகர் உண்மையில் மூளைக் கோளாறு உடையவர்களாகையால் நிந்தனை, தண்டனை, பச்சாத்தாபத்திற்குப் பதிலாகத் தக்க முறையில் சிகிச்சை செய்யப்பட வேண்டும். திட சரீரத்திற்குச் சுத்த மனம் இன்றியமையாதது.

முல்லை - 13

அஜந்தா

'ஈழகேசரி'

பாரத நாட்டின் சிற்பக்கலைக்குச் சிகரமாக விலங்குவது தாஜ்மஹால். உள்ளத்தில் எழுந்த காதல் உணர்ச்சியானது சிற்பமாக உருப்பெற்று உலகத்தையே பரவசப்படுத்துகின்றது.

தாஜ்மஹால் சிற்பக் கலையின் சிகரமாக விளங்குவதாயின் அஜந்தா பாரதநாட்டின் சிறந்த ஓவியக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

18 ஆம் ஆண்டு தொடக்கமாக அஜந்தா குகைக்கோயிற் சித்திரங்கள் உலகின் கவனத்தைக் கவர்ந்து வருகின்றன. ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் அநேகர் இக் குகைக்கோவிலைப் பிரதி வருடமும் தரிசிக்கின்றனர்.

"இந்தியாவின் சிறந்த ஓவியக் களஞ்சியமாகக் கொள்ளப்படும் புத்தக் கோயில்களாகிய அஜந்தா குகைகளில் புத்த சந்நியாசிகளாகிய வித்தர்களால் பதிக்கப்பெற்ற ஓவியங்கள் இன்றும் உலகத்தின் புகழைப் பெறாநிற்கின்றன" என்று யாழ்ப்பாணம் க. நவரத்தினம் அவர்கள் தமது தென்னிந்தியச் சிற்பவடிவங்கள் என்ற நூலில் கூறுகின்றார். இஃதே தமிழில் வெளிவந்த முதற் சிற்பநூலாகும். அவர் மேலும் கூறுவதாவது; 'அஜந்தா என்னும் குகைக் கோயில்களுள் இற்றை ஞான்று காணப்படும் ஓவியங்களைக் கி.பி. மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளிலிருந்த பௌத்த சமயத் துறவிகள் தாம் பேரின்ப அநுபவ நிலையைப் பெறுதற்கிசைந்த சாதனமாகவே தீட்டிப் போவராயினர். அஜந்தா குகைகளுக்குள் காணப்படும் ஓவியங்களுக்கு அடுத்தபடியில் வைத்து மதிக்கப்படத் தகுந்த ஓவியங்கள் சிகிரிய என்னும் மலைக்குகையில் காணப்படுவனவாம்.'

அமைப்பு

"கால கணிதப்படி அஜந்தா குகைகளை நான்கு வகுப்பாகப் பிரித்துக்கொள்ளலாம்' என்று ஸ்ரீமதி ஆர். எஸ். உருக்குமணி இந்தியச் சிற்பங்கள் என்ற தமது நூலில் கூறுகின்றார். சமீபத்தில் வெளிவந்த இந்நூலைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கருதுகின்றனர். அம்மையார்

மேலும் தெரிவிப்பதாவது: "குகைகளின் அமைப்பு, கட்டிடங்களின் வேலைப்பாடு, ஓவியங்களின் வர்ண அமைப்பு முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராயுங்கால் வில் வளைவான மலைப் பக்கத்தினின்று குகைகளை மேற்பக்கமாகவும் கீழ்ப்பக்கமாகவும் குடைந்து கொண்டு போயிருக்கவேண்டும் என்று துணியலாம்.

'திருவாளர் டே என்பார் தாம் எழுதியுள்ள நூலில் அஜந்தா ஓவியங்களைப் பற்றிக் கூறும் பொழுது, 'இக் குகைக் கோயில்களிலுள்ள ஓவியங்கள் யாவும் பெற்றுள்ள மாண்பும் திண்மையும் எத்தன்மையவென இவற்றைக் கண்ணாரக் கண்டவரே உணர்வர்; பிறர் உணரார். இந்த ஓவியங்களின் எளிய ஆக்கமும், இவற்றுள் மறைந்து விளங்கும் சித்திரகாரரின் சமயப் பற்றும் இடந்தோறும் திகழ்வதைக் காணலாம்' என்கின்றார்.

'இவ்வாறு அங்கே காணப்படுகின்ற ஓவியங்கள் பண்டொருகாலத்தில் கண்கவரும் வண்ணப் பொலிவோடு விளங்கிய வெகு மாட்சிமையான சித்திரங்களின் சிதைந்து பாழான எளிய காட்சிகளாகவே இருக்கின்றன. ஈங்குள்ள சித்திரங்கள் அனைத்தும் கலைந்து மங்கி மறைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. கீழ்நாட்டு ஓவியக் கலையை எல்லாம் விரிவாக விளக்கிக் காட்டுவதற்காக முன் ஒரு காலத்தில் தேர்ந்த சித்திரக்காரர்கள் எழுதியிருந்த படங்களில் கரியேறித் தெளிவற்றுச் சிதறிக் கிடக்கின்றன சித்திரத் துணுக்குகளையே இக் குகைக் கோயில்களில் காண்கின்றோம். பதினாறு குகைகளில் வெகு அழகான சித்திரங்கள் சற்றும் பொலிவு குன்றாமல் இருக்கின்றன. ஏறக்குறைய எல்லாக் குகைக் கோயில்களிலும் வெகு அழகான படங்கள் அமைந்திருந்தன என்பதைக் காட்டும் சின்னங்களாய் விளங்குகின்றன" என்று 1877 ஆம் ஆண்டில் விரிவாக வர்ணிக்கின்ற ஒரு வரலாறு கூறுகின்றது.

ஜாதகக் கதைகள்

பதினேழாவது குகையில் அறுபது நிகழ்ச்சிகளைக் குறிக்கும் படங்கள் காணப்படுகின்றன. இப்படங்கள் அறிவிக்கும் பொருள்கள் அனைத்தும் பௌத்தமதத்தைச் சார்ந்தவை. இவை பெரும்பாலும் புத்தரைப் பற்றிய கதைகளும் அவரது முற்பிறப்புக் களைப்பற்றிக் கூறும் ஜாதகக் கதைகளுமாம். இந்தக் குகைகளின் முகட்டில் நீர்க்கொடிகளும், மலர்களும், பறவைகளும், வட்டவடிவமான அழகிய சித்திரங்களுமாக அமைந்துள்ளன. தூண்களில் தனி மனிதரின் உருவங்களும், மிருகங்களின் வடிவங்களும் வெகு அழகாகத் துலங்குகின்றன. புத்தரின் சரித்திரங்களைக் காட்டும் படங்கள் காவியக் கவியின் விரிந்த பாடல்களைப் போலத் தொடராகச் சுவரெங்கும் வெகு அழகாகப் பரவிக் கிடக்கின்றன.

'புத்தரை வணங்கும் காட்சி, மஹா ஹம்ஸ ஜாதகக் கதை, விஜய குமாரன் இலங்கைக்கு வந்து சேர்தல், புத்தர் துறவியாகிப் பிச்சை எடுத்தல், சாமரம் ஏந்திய இளநங்கை, தன்னை ஆடை அணிகளால்

அலங்கரித்துக்கொள்ளும் இளவரசி, கந்தர்வர்கள், யானைகளைப் பிடித்தல், வேட்டையாடுதல், அரசர் குலத்தைச் சார்ந்த காதலர்கள்- இவை அனைத்தையும் பதிமோவது குகையுள் காணலாம். 'எல்லாம் கஷ்டமாயிற்று' என்று கூறுகின்ற ஒரு தூதன், ஓர் அடிமைப் பெண்ணைத் தண்டித்தல், சாளுக்கிய மன்னர் குலத்தைச் சார்ந்த இரண்டாம் புளகேசன் பாரசீகத் தானாபதிகளை வரவேற்கும் சித்திரம் முதலியவை இரண்டாவது குகையில் காணப்படுகின்றன. மரணம் அடைகின்ற இளவரசியின் படம் பதினாறாவது குகையில் காணப்படுகின்றது. புத்தரின் பிறப்பு முதலிய கதைகள் யாவும் 1,2 வது குகைகளிலே அழகிய சித்திரங்களாக விளங்குகின்றன. ஆறு கொம்புகளை உடைய யானையின் கதையை விளக்கும் படங்கள் 10,17 வது குகைகளில் காணப்படுகின்றன.

பெரும் பயன்

அஜந்தா, சிகிரிய முதலிய இடங்களில் காணப்படும் ஓவியங்கள் இக்காலத்து இந்திய நடிகர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன என ஸ்ரீ நவரத்தினம் அவர்கள் கூறுகின்றார். அப்பகுதியை இங்கே காண்க:

"இக்காலத்தில் இந்திய நாட்டின் சிறந்த நடிகர்களென உலகத்தாரால் புகழப்படும் ஸ்ரீமான் உதயசங்கர், ஸ்ரீமான் நடராஜ வாசி, ஸ்ரீருக்குமிணி தேவி, ஸ்ரீமதி ராகினி தேவி, ஸ்ரீமதி மேனகா முதலானோர் தங்கள் நடனத்திற்கு வேண்டிய உடைகள், ஆபரணங்கள்,அபிநயங்கள் என்ற இவற்றின் இலக்கணங்கள் பலவற்றை அஜந்தா, சீகிரியக் குகைகளில் காணப்படும் ஓவியங்களிலிருந்தும், தென்னிந்தியா, பொரபதூர் முதலான இடங்களில் காணப்படும் சிற்ப உருவங்களிலிருந்துமே, பெரும்பாலும் அறிந்து மேற்கொண்டு விளங்குகின்றார்கள். இவர்களது செயல்கள் நாட்டியக் கலைக்கும் சிற்ப ஓவியக்கலைகளுக்கும் இருக்கும் தொடர்பை நன்கு புலப்படுத்துவனவாகும் நாட்டியக் கலையினிடமிருந்தே சிற்பக்கலை பல சிறந்த இயல்புகளைப் பெற்றிருக்கின்றது. சிற்பப் பொருள்களின் சிறப்புக்களை நன்கு அநுபவிக்க விரும்பும் ஒருவருக்கு நாட்டியக்கலையின் இலக்கணமும் சிறிதளவாயினும் தெரிந்திருத்தல் வேண்டும். பரத நாட்டிய (சாத்திர) த்திற்கு உதாரணங்களாக இன்று நாட்டின் கண் இருப்பன, ஆலயங்களில் காணப்படும் சிற்ப உருவங்களும், அஜந்தா, சிற்றன்ன வாசல், சிகிரிய முதலிய இடங்களில் காணப்படும் ஓவியங்களும், சிதம்பரக் கோபுர வாயிலில் காணப்படும் பரதநாட்டிய சிற்ப உருவங்களுமேயாம்"

அஜந்தா ஒரு குக்கிராமம், இது ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள ஔரங்கபாத் நகரத்துக்கு அருகில் உள்ளது. நிஜாம் சம்ஸ்தானத்தின் வட கோடியில் பரத்பூர்(பரதபுரி) என்றொரு சிறு கிராமம் உள்ளது இதற்குத் தென்மேற்கில் நான்கு மைல் தூரத்திற்கப்பால் அஜந்தா என்னும் குன்றுகள் இருக்கின்றன.

முல்லை - 13

சோதனைக் காலம்

அருணன்

இன்று தமிழ்ப் பட உலகிலே பெருத்ததொரு சோதனை ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு இடையிலே வந்த படங்களனைத்தும் மகா மட்டமாகவே இருக்கின்றன. இந்த நிலையிலேயே இன்னும் சில காலம் போய்க் கொண்டிருந்தால், படத்தொழிலே அஸ்தமித்துவிடும் என்று கூடச் சொல்லலாம்.

ஆனால், நாளைக்கு ஒரு பட ஸ்தாபனமும், வீதிக்கு ஒரு போர்டுக்கும் குறைவில்லை. தினம் தினம் புது டைரக்டர்கள், நடிகைகள், ஸ்டுடியோக்கள். இவைகளையெல்லாம் பார்க்கும் யாராவது, இவைகலெளல்வாம் படக்கலையின் வளர்ச்சி தானே என்று கேட்கலாம்? அது தானே...?

பட ஸ்தாபனங்கள்

கலையின் வளர்ச்சிக்காகவோ, அல்லது தொழிலாகப் பாவித்துப் பெருத்த வாபத்தை ஒழுங்கு நியதியுடன் சம்பாதித்துவிடலாமென்றோ சிலர் ஆரம்பிப்பதாகத் தெரியவில்லை. கலையின் பெயரால் கையில் உள்ள ரூபாய் ஆயிரம் இரண்டாயிரத்தை வைத்துக்கொண்டு, உபயோகமற்ற ஊதாரிகளின் பேச்சை நம்பி, போர்டு ஒன்றைத் தொங்கவிட்டுப் படாடோபமாக ஆரம்ப விழா நடத்திக் கன்னி வேட்டை ஆடுகின்றனர் சிலர். டாக்ஸிக்கு வருவாய் தந்து, குடியிலும் கூத்தியிலும் இறங்கிக் கலையைக் குட்டிச்சுவரடிக்கும் முதல்தரக் கும்பல் இது.

கையில் பணம் அதிகமிருந்தும், அதைச் சிறந்த வருவாய் உள்ள தொழிலென்று நம்பிப் பெரும் பணம் போட்டு, ஆடைகளாலும், கையில் வைத்திருக்கும் சிகரெட்டப்பா நெருப்புப் பெட்டியின் மூலம் பிரபல டைரெக்டர், கலைஞர்களாகப் பாவனை செய்துகொண்டு படங்களைக் குட்டிச்சுவரடித்துவரும் ஒரு சாராரின் நயவஞ்சகப் பேச்சை நம்பிப் பெரும்பாலோர் பணத்தை இழந்து பரிதவிக்கின்றனர். இவர்கள் மற்றொரு சாரார்.

பட ஸ்தாபனங்களை ஆரம்பித்துத் தாம் எடுக்கும் கதையிலே காதல் கட்டம் வருமுன், படத்தில் நடிக்கும் நடிகையிடம் காதல் பிறந்துவிடும் சில

முதலாளிகளுக்கு. முதலாளிகளுக்குப் பிறக்காவிட்டாலும் முன் சொல்லப்பட்ட ஊதாரிகள் காதலை உற்பத்தி செய்து முதலாளியை மயக்கிப் படத்தைக் குட்டிச்சுவரடித்துப் பணத்தையும் பறித்துவிடுவார்கள். இவையே பெரும்பாலானவை.

இந்த விதமாக அடிப்படையிலேயே அரித்துவிட்டால் கலை உருப்படுவது எப்படி? சரி, அப்படியே அடிப்படையைச் சீர்படுத்திக்கொண்டுவிட்டதாக வைத்துக்கொள்வோம்.

பட ஸ்தாபனம் அரம்பமாகும். முதலில் டைரெக்டரை ஏற்பாடு செய்துகொள்ளுவார்கள். சிலர் நடிகர் நடிகைகளின் தேர்தலை முடித்துக்கொண்டு டைரெக்டரை ஏற்பாடு செய்யும் வழக்கமும் உண்டு. நடிகர் நடிகைத் தேர்தல் அரம்பமாகும். பல ஆண் பெண் நடிகர்கள் பல ரகப்பட்ட நபர்களின் சிபாரிசுகளின் மூலம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பட ஸ்தாபனங்களுக்கு வந்து போவார்கள். பெரும்பாலான பெண்களுக்கு லகுவில் சந்தர்ப்பம் கிடைத்துவிடும். சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும், உண்டாக்கிக்கொண்டு விடுவார்கள். ஆனால், ஆண்களுக்கு அவ்வளவு லகுவில் கிடைத்துவிடாது. சிறந்த நடிப்புத் திறமையோ, பெருத்த சிபாரிசுடன் கூடிய சுமாராக நடிக்கும் சக்தியோ இருந்தால்தான் ஆண்கள் நடிப்புத் துறையில் பிரவேசிக்க முடியும்.

படத்தொழிலிலே, உதாரணமாகப் பாருங்கள், முன்பின் நடித்திராத, முகவசீகரத்திற்கும், உடல் கட்டுக்கும், கண்ணழகிற்கும் சேர்க்கப்பட்ட பல பெண்கள், இன்று ஒரு படத்தில் நடிக்கும் முன்னதாகவே பிரபலத் தமிழ் நாட்டு நக்ஷத்திரமென்று பட்டம் சூட்டப்பட்டுவிடுகிறார்கள். பின் ஏன் அவர்கள் நடிக்கப்போகிறார்கள்?

பாதிப் படம் வரையில் ஏதோ முயன்று ஓரளவு நடித்து வந்த அவர்கள், அதற்குமேல் தங்களைப் பிரபல நக்ஷத்திரமென்று பலர் கூறுவதையும் எழுதுவதையும் பார்த்து, அவர்கள் தங்களுக்குப் போதிய திறமை இல்லாவிட்டாலும், திறமைசாலிகள் போல் பாவனை செய்துகொண்டு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் கலைஞர்கள் கட்டுப்பாட்டிற்கு உட்படாமலும் தான்தோன்றித்தனமாகத் திரிகின்றனர். புது முகங்கள்தாம் இப்படி.

முன்னே பெயர் பெற்ற நக்ஷத்திரங்கள்...? கலைக்கோட்டைக்குள்ளே நுழைந்தவுடன் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும்; நமக்குக் கொடுத்த பகுதிகளைச் சரிவரத் திருப்திகரமாக நடித்துப் படஉலகிலே என்றும் அழியாப் புகழை எய்த வேண்டும என்ற எண்ணம் இருந்தால்தானே! நடிப்பு உலகிலே சகலமும் கரை கண்டவர்களாக எண்ணிக்கொண்டு படப்பிடிப்பு நடக்கும் குறித்த காலத்திலே சரிவரப் போகாமலும், பாதிப் படம் வரையில் ஒழுங்காகப் போய்ப் பின்பகுதிகளிலே படத்தின் வளர்ச்சிக்கு இடைஞ்சல் செய்தும் வந்தால் படக்கலை உருப்படுவது எப்படி?

நன்றாக நடிக்கட்டும். அதன் மூலம் பிரபல நக்ஷத்திரமாக ஆகட்டும். ஆனால், நக்ஷத்திரமாக்கியதும், பெருத்த கௌரவத்தையும் என்றுமே கனவுகூடக் கண்டிருக்க முடியாத அளவு அபரிமிதமான வருவாயையும் தேடித் தந்தது அந்தக் கலைதானே? அந்தக் கலைக்குச் செய்ந்நன்றி மறவாமல், நன்றி செலுத்தும் முறையிலாவது கௌரவம் கொடுத்து அதன் வளர்ச்சிக்கு உண்மையாகவே பாடுபட வேண்டாமா?

சற்று ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள்!

முல்லை - 13

பிற...

முல்லை கூறுகிறது (தொகுப்புரைகள்)

குலமுறை

ஊர்ப்பேச்சு

பெரிய வியாபாரிகளே!

என்றொரு சொல்லினைக் கேட்டேன்!

முல்லை கூறுகிறது

தொகுப்புரைகள்

இது 'முல்லை'யின் முதல் முறுவல். தமிழ் மக்களின் புகழ் கொழிக்கும் பொங்கல் நாளில் வருகிறது. 'முல்லை'யின் மணம் தமிழின்பமே. தமிழின்பமே 'முல்லை'யின் குறிக்கோள் 'முல்லை'யில் சிறப்பாக நம் கவியரசர் அவர்களின் கவிதைகளும், அவர்களைப் பற்றிய கருத்துரைகளும் மகிழ்ந்து மலர்ந்து மணம் தரும். தமிழ் நாட்டின் தனிப்பெருங் கவியரசர் பாரதிதாசன் அவர்களின் கருத்தில் அரும்பி, அறிஞர்களின் அருந்துணையால் முகிழ்த்து, என் செயலால் மலர்ந்தது இந்த 'முல்லை'! தமிழ்ப் பெருமக்கள் முயற்சிக்குத் துணைபுரிவார்களாக. 'முல்லை'யின் ஆதரவாளர் - அன்பர்கட்கு, வணக்கம்-நன்றி. தமிழ் ஆக்கம் ஒன்றே 'முல்லை'யின் நோக்கம். அரசியற் சூழ்ச்சி, சமயவாதம் இவற்றிற்கு இடம் இல்லை. இயன்றவரை தமிழையே கையாளுவது. பொருட்செறிவும் கருத்து நயமும் இருப்பின், பிற சொற்களில் பகைமை இல்லை. எண்ணத்தில், கருத்தில், சொல்லில், செயலில் தமிழாட்சி நிலைபெறக் காணவேண்டும். கட்டுரைகள் தந்த அறிஞர்கட்கு எம் நன்றி. மிகக் குறுகிய கால அளவிற்குள் கொண்டுவரப் பெற்றது இந்த முல்லை. அடுத்த மலர் இதனினும் நறுமணத்தைத் தரும் என்பதைச் சொல்ல வேண்டுமா?

இந்த மலர் உருப்பெற்று வெளிவரப் பெரிதும் துணையாயிருந்த இருவரும் நண்பர்களான முருகு - சுப்பிரமணியம், கண - இராமநாதன் இருவருக்கும் நன்றி!

ப. முத்தையா
தொகுப்பாசிரியர்

முல்லை - 1

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

-பாரதிதாசன்

முதல் 'முல்லை'யைக் கண்ட பலரில், சில முதுமையாளர் பெயரைக் கண்ட புதுமையாளர்கட்கும், புதுமையாளர் பெயர்களைக் கண்ட பழமையாளர்கட்கும் ஐயம் தோன்றியுள்ளது. இது இயல்பு! யாருக்கும் எவ்வித ஐயப்பாடும் தேவையில்லை; நுகர்வோருக்கெல்லாம் 'முல்லை' மணம் தரும்.

இதில் இணைக்கப்பட்டிருக்கும் 'வாழ்க்கையின் இலட்சியம்' நண்பர் அண்ணாத்துரை அவர்களின் சேலம் சொற்பொழிவு. இனித் தொடர்ந்து வரும்.

மூன்றாவது முல்லையிலிருந்து, புதுமைப்பித்தன் அவர்களின் இலக்கிய ஆராய்ச்சியும், திரு வி. க. தமிழ்த்தேனும் பிறவும் தொடர்ந்து வரும்.

வணக்கம்

ப. முத்தையா

முல்லை - 2

இந்த வெளியீட்டில் நம் கவியரசரின் புதிய கவிதை, நமது அருமைப் பாரதியாரின் 'மறுமலர்ச்சி', பேராசிரியரின் 'அவள் வேண்டுகோள்', பன்மொழிப்புலவர் அப்பாத்துரையாரின் 'இலக்கியப் பண்பு', நமது புலவர்மணி திருநாவுக்கரசரின் 'பூச்சுட்டல்', மறுமலர்ச்சி மதிப்புரையாளர் புதுமைப்பித்தனின் 'இலக்கிய மரபு', மயிலேறு அவர்களின் 'நாடகக் கலை', இளம்புலவர் அறிவழகனின் 'பூக்காரி' இவை அத்தனையும் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் ஆழ்ந்து படித்து இன்புறத்தக்கன.

'வாழ்க்கையின் இலட்சியம்' அடுத்த வெளியீட்டில் வரும்.

அனைவருக்கும் நன்றி! வணக்கம்.

ப. முத்தையா
தொகுப்பாளர்

முல்லை - 3

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

புரட்சிக் கவிஞர்.

இன்றைய நிலையில், நாம் எண்ணிபடி பல புதிய அமைப்புக்களைச் செய்வதற்கு இயலவில்லை. எனினும், அடுத்தடுத்து, எண்ணியாங்கு நிறைவேற்ற முயற்சிப்போம்.

மூன்றாவது வெளியீட்டில், கவியரசரின் 'அவள் இல்லை'யில் பதின் மூன்றாவது வரி 'பகற் பணியும் சாயவில்லை', முப்பத்தோராவது வரி 'அன்றழைத்துச் சென்றாள்'

*23-2-1946*இல் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து டாக்டர் அ.சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும், திரு.த.பு. நவநீதகிருஷ்ணன் அவர்களும் வாதித்தது. நிலையத்தார் அனுமதியோடு வெளியிடப்பட்டது.

தொகுப்பாளர்

முல்லை - 4

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

இந்த வெளியீட்டில் பல ருசிகரமான கட்டுரைகள் - கவிதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

அடுத்த வெளியீட்டிலிருந்து 'இலக்கியக் கார்ட்டூன்' மற்றும் தொடர் கதைகள் - சிறு கதைகள் சிறந்த முறையில் வெளிவரும்.

இதில் இணைக்கப்பட்டிருக்கும் 'சீர்திருத்தவாதி' என்ற கதை 'அரும்பு' என்ற கலைமகள் வெளியீட்டிலிருந்து எடுக்கப்பெற்றது. நன்றி!

வணக்கம்

ப. முத்தையா

முல்லை - 6

சிரிக்கும் முல்லை

இது எட்டாவது முல்லை.

இலக்கிய வனத்தில் முல்லை புதுக்கொடி வீசி, இரண்டு மாதம் ஆகிறது. வளர்ந்து வரும் முல்லையின் இந்தப் பருவ மாற்றத்தை, புது மலர்ச்சியை,

கலைஞர்கள் ஆதரிக்கின்றனர்.
ரசிகர்கள் வரவேற்கின்றனர்,
அறிஞர்கள் பாராட்டுகின்றனர்,

முகை அவிழ்கிறது; முல்லை சிரிக்கின்றது.

ப. முத்தையா

முல்லை - 8

கொழுந்தோடிப் பாயும் முல்லை

இது ஒன்பதாவது முல்லை.

முல்லை மீண்டும் புதுக்கொடி வீசுகிறது; மலர்ச்சி பெறுகிறது. இன்பம் பயக்கும் வினையான இந்தப் பருவ மாற்றத்தையும் வாசகர்கள் வரவேற்கவேண்டும்.

சென்ற முல்லையில் வந்த கிரஹணம் சில வாசகர்களின் மனத்தையே கிரஹணம் பிடித்துவிட்டது. அவ்வாசகரின் குற்றச் சாட்டுக்குப் பதிலாக, 'வக்காலத்து' பேசுகிறது, புதுமைப் பித்தனின் கட்டுரைப் பகுதி. நான்கு வருஷங்களுக்கு முன்னால், தம் கதைகளைப் பற்றி, இதுபோன்ற குற்றச்சாட்டு பெற்ற நண்பர் புதுமைப் பித்தனின் தீர்க்கமான முடிவு வாசகர்களைத் திருப்திப் படுத்தும் என நம்புகிறேன்.

உண்மை எப்போதும் கசப்பும் கூர்மையும் பொருந்தியதாகத்தான் இருக்கும். இன்றைய சமுதாயத்தின் பச்சை உண்மைகளை, கசப்பை ஏற்கத் திராணியற்றவருக்குத்தான் கிரஹணம் பற்றும். சீறியாற்றவேண்டியவற்றை, திரையிட்டு மூடுவதால் சீர்திருத்திவிட முடியாது. வாழ்க்கையில் எல்லோருமே பரமஹம்சர்களாக இருக்கமுடியாது; பக்கிரிசாமிகளும் இருந்துதான் தீருவார்கள்.

இதை நேயர்கள் உணரவேண்டும். 'கருவைத் தடைசெய்யலாம்; கருத்தைத் தடை செய்யமுடியாது.'

இந்த முல்லையில் சிறந்த அம்சம் கவிஞர் அழகிரிசாமியின் பாடல், பாட்டுவேதாந்தமல்ல; வெள்ளை உண்மை. எங்கோ இருட்டிலிருந்து வந்து, இருட்டில் மறையும் மனுஷ இதயத்தின் ஏக்கந்தான் அந்தப் பாட்டு. பொருள் கசந்திருக்கலாம். மனுஷ இதயத்தை அணுகுண்டு வெல்லும் இந்தச் சமுதாயத்தில், தைத்த நாக்கைச் சப்புக்கொட்டத்தான் முடியும். அதனால்தான், லோகாயதத்தைப் பற்றிப்பிடித்து வந்த மேல்நாட்டாரும், இதயப் பண்பையும், தேட்டத்தையும் பற்றி எழுத ஆரம்பித்துவிட்டனர். இன்று பிரபலராய் விளங்கும் மேல்நாட்டுக் கவியான லூயி மக்னிஸ் (Louis Macneice) யுத்தகாலத்தில் எழுதிய 'பிறப்பதற்கு முன் பிரார்த்தனை' (Prayer before Birth) என்ற அருமையான கவிதை அவர்களின் மனப்பக்குவத்தையும், கசப்பையுமே காட்டுகிறது. அதுபோலவே, நண்பர் அழகிரிசாமியின் பாடலும் லக்ஷ்யம் என்ற சொப்பன உலகத்தில் ஏமாந்த ஒரு இதயத்தைக் காட்டுகிறது.

மற்றும், பயங்கரக் கதைகள் எழுதிப் பெயர்பெற்ற அலன் போவின் 'துடிதுடிப்பு', புதுமைப்பித்தனின் 'விபரீத ஆசை' இரண்டும் இம்மலருக்கு வலுவூட்டுகின்றன.

சென்ற முல்லையின் '1700 ஆண்டுகளுக்கு முன்'னின் விட்டகுறை இத்துடன் முடிகிறது. மீனாட்சி - அவள் இன்னும் உங்களைத் தொடருவாள்.

இனிவரும் முல்லை

இனிவரும் முல்லை நேயர்களின் கழுத்தில் கைகொடுத்து, அவர்களைப் புறநானூற்றுக் காலத்துக்கோ, கடல்கொண்ட கபாடபுரத்தின் கோட்டை வாசலுக்கோ தள்ளிப்போக விரும்பவில்லை; அதேபோல, பழமையை மறந்து, தங்களோடுதான் தமிழிலக்கியமே மலர்ந்திருக்கிறது என்று நினைக்கும் சொப்பனவாதிகளின் மரபு வழுவிய தடத்துக்கும் அழைத்துச் செல்லாது.

'மூத்தகுடியாள் காலத்திலே' என்று பழம்பெருமை சாற்றும் மாஜிப் பெருங்காய டப்பாக்களின் குடுகுடுப்பைக்கும், இலக்கிய விமரிசனம் என்ற பேரில் சவ்வு மிட்டாய்த்தனம் பண்ணும் சரடுகளுக்கும் இடமில்லை.

இனிவரும் முல்லையில் புதுமைக்கு இடமுண்டு; பொருளுக்கு இடமுண்டு. பொறி கனலும் நெற்றிக்கண் பூத்தாலும் குறிதவறாது. நிர்த்தாரணமாகச் சொல்லும் கருத்துக்கு இடமுண்டு. சிந்தனையைத் தூண்டும், வேலை வாங்கும் கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் கவிதைக்கும் இடமுண்டு.

நேர்மைக்கு எங்களிடம் இடமுண்டு, தமிழர்
நெஞ்சில் முல்லைக்கு இடம் வேண்டும்,
இதுவே என் ஆசை; கனவு.

கனவு நினைவாக, வாசகர்களும், இலக்கிய பிர்மாக்களும் முன்வரவேண்டும்.

"அடர்ந்து படர்ந்த: குவிமுலையாள் தந்த
ஆசை இன்னம்
படர்ந்து படர்ந்து கொழுந்தோடிப் பாயுது என்
மனப்பந்தலிலே"

என்று பாடிய பண்டைப் புலவனின் கருத்துப்போல், முல்லையும் உங்கள் மனப்பந்தலில் கொழுந்தோடிப் பாயவேண்டும்.

ரகுநாதன்
பதிப்பாசிரியர்

முல்லை - 9

பத்திரிகை உலகில் முல்லை அசுர வேகத்தில் முன்னேறப் போவது என் மனக் கண்ணில் படுகிறது. *-எழுத்தாளர்*

முல்லை இதழை ரசித்தேன் அருமை. இனி ரசனைக்கு விருந்து அதிகம் கிடைக்கும் என அறி மகிழ்வு.

பத்திரிகாசிரியர்

'இலக்கியத்தைப் பற்றி'ய குணதோஷ விமரிசனம் உண்மையை அப்படியே எடைபோட்டுக் காட்டிவிட்டது; ரொம்பத் துல்யம்.

வாசகர்

இவை சென்ற முல்லைக்குக் கிடைத்த பாராட்டு. அனுப்பியவருக்கு எம் நன்றி.

இது பத்தாவது முல்லை.

'நாணல்' அடக்கமாக இருந்து, அருமையான கவிதை புனைபவர்; 'எது வாழ்க்கை'யில் அவர் தீக்குள் விரலை வைத்தும் நந்தலாலனைத் தீண்டும் இன்பம் காணுகிறார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைக் கட்டுரை மிகவும் தீர்க்கமான, துணிவான ஆராய்ச்சி. சென்னை அ. இ. ரே. நிலையத்தில் ஒலிபரப்பப் பெற்றது. அச்சிட அனுமதித்த நிலையத்தாருக்கு நன்றி.

எலின் வாக்னர் ஜீவியவந்தரான ஸ்வீடன் தேசத்துக் கதாசிரியர். வாழ்க்கைச் சம்பவங்களின் உண்மையைப் படம் பிடிப்பதில் நிபுணர். முல்லையிலுள்ள அவர் கதையில் எளியவரின் பேரால், வலியவர்கள், சீர்திருத்தக் காக்கைகள் எப்படி ஐந்தாம் படை புரிகின்றன என்பது விளங்கும்.

"குற்ற பரம்பரை" விமரிசனக் கட்டுரை.

'உள்ளத்திலே கருவங்கொண்ட போதினில் ஓங்கி யடிப்பதுவும், நெஞ்சில் கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு காறி உமிழ்வதுமே' எங்கள் விமர்சனம்.

தீமையை வேரறுப்போம் நிசத்
திறமையைக் கார் விளைப்போம்.

இது எங்கள் லட்சியம். லட்சியம் நிறைவேற, எங்களிடம் நெறியுண்டு; குறியுண்டு; குலசக்தி வெறியுண்டு.

ரகுநாதன்

முல்லை - 10

புத்தாண்டில்

நமஸ்காரம்.

தமிழர் உள்ளத்தில் முல்லை தளிர்க்கரம் நீட்டித் தாவிப் படர ஆரம்பித்து ஓராண்டு காலம் ஆகிறது. புத்தாண்டில் முல்லை புது மலர்ச்சி பெற்று மணவெறி கமழ வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

ஆளும் கொழுநர் வரவு பார்த்து அவர் தம் வரவு காணாமல் தவிக்கும் இதயத்தைப்போல், முல்லையின் வரவு நோக்கி வாசகர்கள் தவித்ததெலாம் எங்களுக்குத் தெரியும். தாமதத்தின் காரணத்தை முல்லையின் பெருவளர்ச்சியும் கலையழகும்தானே அறிவிக்கும். முல்லையின் இந்த மாற்றம் எங்கள் ஆசையின் முதல்படி. முல்லை மென்மேலும் முன்னேறி, தனித்து தலை தூக்கித் தமிழர் மனத்தில் தனியரசு செலுத்த வேண்டுமென்பதே எங்கள் ஆசை; கனவு.

எவை கருத்துக்களை அமுக்காமல், திரையிட்டு மூடாமல், நெஞ்சுக்கு நீதியாய் தோளுக்கு வாளாய் நிமிர்ந்து நிற்கிறதோ, எவை காற்றிலேறி விண்ணையும் சாடும் கற்பனை வளமும் சிந்தனைச் செறிவும் பெற்றிருக்கிறதோ, எவை கீறல் விழுந்த இசைத்தட்டைப் போல் பழைய நொடிப் பாதையிலே சுற்றிச் சுற்றி வந்து செக்கடி மாட்டுத்தனம் பண்ணாமல், சிந்தனைக்கு வளமும் அறிவுக்கு உணர்வும் ஊட்டி, தமிழுக்கு வலிமை சேர்க்கிறதோ

அவை, புத்தாண்டு முல்லையில் இடம்பெற்று, கதையுருவிலும், கவியுருவிலும், கட்டுரை உருவிலும் வெளிவந்து, தமிழ் உள்ளங்களுக்கு ஊட்டமளிக்கும்; வற்ற வளஞ்சுரந்து தமிழை வளர்க்கும். ஊருக்கு நல்லது சொல்லும்; உண்மை தெரிந்துரைக்கும்.

முல்லையின் பருவ மாற்றத்தின் தன்மையைக் கண்டு சிலர் சினந்து சீறலாம்; நடுக்குறலாம். அதைப் பற்றி முல்லை அஞ்சவில்லை. அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டுமாற மனஉறுதி எங்களுக்கு மட்டுமில்லை; எங்கள் எழுதுகோலுக்கும் உண்டு.

தூயவை துணிந்த பின்பு பழிவந்து தொடர்வதில்லை.

ரகுநாதன்

முல்லை - 11

இலக்கிய யாத்திரையில்

நமஸ்காரம்.

'முல்லை ஒரு அழகான வெளியீடு, புத்தகம் முழுவதும் புதுமணம் வீசிப் பொலிந்து விளங்குகின்றது. தங்கள் முயற்சி மேன்மேலும் சிறப்புறுவதாக' என்று கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை நம்மைப் பாராட்டியுள்ளார்கள். அவர்களுக்கும், முல்லையைப் பாராட்டிய அன்பர்களுக்கும் எம் நன்றி.

இலக்கிய யாத்திரா மார்க்கத்தில் அசுர வேகத்தில் முன்னேறிச் செல்வதற்கு முல்லை இலக்கிய கர்த்தர்களுக்கும், வாசகர்களுக்கும் உதவுகிறது.

நீச்சலடிக்கக்கூடத் திராணியற்ற கோழை மனப்பட்டவர்களுக்கு இடையில் துணிவென்னும் தூண்டாமணி விளக்கம் தாங்கி, இலக்கியத்தரங்கத்தில் முங்கி முக்குளித்துத் தரை தொட்டு, எண்ணத் தரளங்களை வாரிக் கொணர்ந்து, வைய நெடுவீதியெலாம் இறைக்கும் துணிவும், ஆற்றலும் படைத்தது எங்கள் முல்லை.

நெஞ்சில் நிலைகுலையாத துணிச்சல், உழைப்பிலே நேர்மை, உள்ளத்திலே ஆர்வம் இவை எங்களுக்கு இருக்கு மட்டும் முல்லை தமிழர்களின் நெஞ்சில் தனி மணம் பரப்பி, துருப் பிடித்த நெஞ்சத்துத் தூசுதட்டி, தூபமிட்டு, சலிப்பினால் தோய்ந்த இதயங்களுக்குக் காயகல்பம் செய்து, தமிழ் இலக்கிய கர்த்தர்களுக்கும், புதுமை விரும்பும் வாசகர்களுக்கும் அழியாத ஆசையையும் தளராத நம்பிக்கையையும் ஊட்டி, தமிழை வளர்க்கும்.

முல்லை தமிழிலக்கிய முன்னேற்றத்துக்கு ஒரு சுபசூசகம். இலக்கியத்தில் புதுமையும், தனிமையும் உண்டாக்க விரும்புபவர்களுக்கு ஒரு நற்சகுனம், நம்பிக்கை.

ரகுநாதன்

முல்லை - 11

வரவேற்கிறோம்

'முல்லை' ஜனவரியில் புத்தழகும், சிறப்பும் பெற்று வெளிவரும். பக்கங்கள் கூடும்; படங்கள் சேரும். அளவிலும், உருவிலும், அம்சங்களிலும் முல்லை புது வளர்ச்சி பெற்று வெளிவரும்.

ஆதலின்,

கருத்துச் செறிவும், கற்பனை வளமும் கொண்டு, பழைய நொடிப் பாதையிலிருந்து விலகி புதுவழி காணும் கதைகள், இலக்கியக் கட்டுரைகள், விமர்சனங்கள், ஓசை நயமும், கருத்தாழமும் ஒருங்கே செறிந்த கவிதைகள்,

கலை யம்சமும் தெளிவும் கொண்ட புகைப்படங்கள் இவைகளை வரவேற்கிறோம்.

பிரசுரமாகும் எல்லாவற்றிற்கும் உரிய சன்மானம் உண்டு.

புகைப்படம் அனுப்புபவர் மட்டும் விவரங்களையும், நிபந்தனைகளையும் எங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

முல்லை - 10

குலமுறை

புதுமைப்பித்தன்

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி.' மணிக்கொடிப் பத்திரிகையும் சீதக்காதி பரம்பரைதான். 'மணிக்கொடி' பத்திரிகை நமக்குத் தந்த மணிதான் புதுமைப்பித்தன். தமிழ்ச் சிறுகதை உலகிலே புதுமையையும், தனிமையையும் உண்டாக்கி, உலக இலக்கியங்களோடு வைத்து எண்ணத்தக்க கதைகளை எழுதியவர். புதுமைப்பித்தன் கதைகள், காஞ்சனை, ஆறு கதைகள் முதலிய நூல்களின் அசிரியர். தினசரிப் பத்திரிகைகளில் பலகாலம் உழைத்தவர். இன்று இவர் திரைக் கதைகள் எழுதுகிறார்.

'தார்க்கோல்'

இது ஒரு சிறந்த எழுத்தாளரின் அவதார மகிமைகளில் ஒன்று. இவருடைய ஏனைய அவதார சிருஷ்டிகளை வாசகர்கள் அறிந்திருக்கலாம். 'தாக்கீது' இந்தத் தார்க்கோலுடைய புதுச்சோதனை முறை. இலக்கிய விமர்சனம் செய்யும்போது SPCA-த் தனம் கூடாது என்பதற்குத் தார்க்கோலின் வீறாப்பே பதில் சொல்லும்.

லா. ச. ராமாமிர்தம்

இன்றைய சிறுகதை உலகின் முன்னணியில் நிற்பவர். முதன்முதலில் ஆங்கிலத்திலேதான் எழுதிவந்தார். இப்போது நல்ல தமிழிலேயே எழுதுகிறார். கதைகள் எழுதியே தனக்கு ஒரு இடம் ஸ்தாபிக்கவேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவர். சுமார் முப்பது கதைகளே எழுதியிருக்கிறார். அத்தனையும் ரசிக்கத் தக்கவை. இலக்கியம் இவரது தொழிலல்ல. இவருடைய கதைகள் புத்தக வடிவில் வரவிருக்கின்றது.

ஆ. முத்துசிவன்

இவர் ஆங்கிலங்கற்ற தமிழ் ஆசிரியர். திருநெல்வேலி இந்து கல்லூரியில் உபாத்திமைத் தொழில் புரிபவர். மேல் காற்றைத் தென்றலாகத் திரிக்கும் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டிருப்பவர். 'அசோகவனம்' என்று கட்டுரைத் தொகுதியில் ஆசிரியர். எழுதுவதை உபதொழிலாகக் கொண்டவர்; பிரசங்கியும் கூட.

ரகுநாதன்

இந்த வம்புக்கெல்லாம் மூல காரணர். பலபேருடைய விருப்பு வெறுப்புக்குள்ளாகும் கதைகளை எழுதுபவர். 'துணிஞ்சகட்டை'. தன்மீது வசைமாரி பொழியும் புண்ணியாத்மாக்களை சாக்கிய நாயனார்களாகக் கருதும் பக்குவம் பெற்றவர்.

க.கணபதி

இளம் எழுத்தாளர். முன்னேறக்கூடியவர் என்னும் நம்பிக்கையை ஊட்டுபவர். சட்டம் படித்து, பட்டம் பெற்றவர். எனினும், தொழிலில் இறங்காதவர். எழுதுவது இவரது தொழிலல்ல.

2

கு. அழகிரிசாமி

கடிகை முத்துப் புலவனும் பாரதியும் உதித்த கரிசல் மண்ணில் உதித்தவர். நல்ல கதைகள் எழுதித் தமிழுக்கும் தனக்கும் பெருமை தேடி வருகிறார். கவிகளும், கட்டுரைகளும் எழுதுவார். 'இரவில்' - என்ற இவருடைய கதைத் தொகுதி வெளிவரவிருக்கின்றது. எழுதுவது இவர் தொழில். 'சக்தி'யில் இருக்கிறார்.

எம்.வி. வெங்கட்ராம்

மணிக்கொடி வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். கதைகளும், கவிகளும் தீட்டுபவர். 'நித்யகன்னி' என்ற நவீனத்தின் ஆசிரியர். நூல் விற்பனை இவர் தொழில்; நூல் எழுதுவது இவர் பொழுதுபோக்கு.

இடைசைப் புலவன்

தென்பாண்டிச் சீமையைச் சேர்ந்த கோயில்பட்டி நகரத்திலுள்ள இடைசெவல் என்னும் இடைசைத் தலத்து இலக்கண விளக்க சுந்தரப் புலவர் மரபிலுதித்தவர். கவி எழுதுவதில் வல்லுநர். காளமேகம், தத்துவப் பிரகாசன், ஆண்டான் கவிராயர் முதலியவர் வழி வந்த கவிதாச பண்டிதன்.

திருச்சிற்றம்பலக் கவிராயர்

வேணுவனம் ஸ்ரீலஸ்ரீ முத்துத் தம்பிரான் அடிவழிப் பிறந்தவர். இலக்கியத் துறையில் புகுந்து கலக்கும் மேதைகளைக் கரைவிரட்ட உதவும் சாட்டை இவரது பாடல்கள். இவரியற்றிய நெல்லை கலம்பகம் பழநிச்சாமி பாவலனாரின் விளக்க வியாக்கியான உரைகளுடன் வெளிவரக் காத்திருக்கின்றது.

முல்லை - 11, 12

வம்பிலும் வதந்தியிலும் மனிதனுக்கு என்னவோ அபார மோகம். இந்த ரகசியத்தை அறிந்தவர்களில் முதல் ஸ்தானம் வகிப்பவன் தற்காலத்துப் பத்திரிக்கைக்காரன்.

தி. ஜ. ர.

ஊர்ப் பேச்சு

அம்பலவாணன்

1

ஒரு பதிப்பாசிரியரைப் பிரதானமாகக் கொண்டு ஆரம்பித்த புதிய பிரசுர கம்பெனிக்கு 95 ஆயிரம் ரூபாய் நஷ்டமாம். பிறகு எல்லாம் கலைக்கப் பட்டு விட்டதாம்.

2

பிரபல வாரப்பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருப்பவர் ஒரு மாதப் பத்திரிகைக்குப் புனை பெயரில், மாறுபட்ட கொள்கையில், தொடர்கதை ஒன்று எழுதி வருகிறாராம்.

3

சர் பட்டம் பெற்ற அறிஞர் ஒருவரால் பழந்தமிழ் இலக்கிய நூல் ஒன்றிற்கு உரை எழுதி வெளிவந்ததாம். ஆனால் அந்த 'உரை' அவரால் எழுதப்படவில்லையாம். ஓர் இளந்தமிழ் வித்துவானைக் கொண்டு எழுதப்பட்டதாம்!

4

பிரபல வாரப்பத்திரிகை ஆசிரியரின் சொந்தப் பத்திரிகையாம் ஒரு 'மாதம் இருமுறைப்' பத்திரிகை.

5

நாவல் போட்டி, சிறுகதைப் போட்டி என்று நடப்பதில் ஜட்ஜ்களாக நியமிக்கப்படுகிறார்களே; வருகிற ஆயிரக்கணக்கான கதைகளையும் நாவல்களையும் பொறுமையாக இருந்து படிக்க அவர்களுக்கு ஓய்வே

இல்லையாம்; படிப்பதும் இல்லையாம். அந்தப் பத்திரிகை ஆபீஸ்களில் உள்ள உதவி ஆசிரியர்களைக் கொண்டே சிலவற்றைப் படித்துப் பார்க்கச் செய்து, சம்பிரதாயத்திற்காக ஜட்ஜ்கள் கூட்டம் போட்டு இதில் ஒருவர் இன்னொருருக்கு விட்டுக் கொடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்துவிடுவார்களாம்.

6

ஒரு பிரபல வாரப் பத்திரிகைக்கு ஓர் எழுத்தாளர் கதை எழுதி அனுப்பிக்கொண்டே இருந்தாராம். அது திரும்பி வந்துகொண்டே இருந்ததாம். பிறகு அந்தப் பத்திரிகைக்கு அவரும் ஓர் உதவி ஆசிரியராம்.

முல்லை - 13

பெரிய வியாபாரிகளே!

முல்லை விளம்பர இலாகா பிரசுரம்–

உங்களுடைய சரக்குகள் உண்மையிலே விற்பனையாக வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அப்படியானால் ஏராளமான பிரதிகள் விற்கும் பத்திரிகைகளிலே விளம்பரம் செய்வதால் பயனில்லை. பிரசித்தமான பத்திரிகைகளிலே கதை, கட்டுரை, செய்திகளைப் படிப்பதோடு நிறுத்திக்கொண்டு, பக்கம் பக்கமாக உள்ள விளம்பரங்களை வாசகர்கள் கவனியாமலே இருந்துவிடுகிறார்கள். மேலும் இந்த விளம்பரங்கள் கதைகளைப் படிப்பதற்கு இடையூறாகவும் இருக்கின்றன. எனவே உங்கள் விளம்பரங்களைப் பத்திரிகை வாசகர்கள் படிக்கவேண்டுமென்று நீங்கள் கருதினால், அதற்கு இரண்டு வழிகளே உண்டு.

முதலாவது: பக்கம் பக்கமாக விளம்பரங்களை அடைக்கும் பத்திரிகைகளிலே நீங்கள் விளம்பரம் கொடுக்கக்கூடாது. நல்ல விஷயங்களையே நோக்கமாகக் கொண்டும், குறிப்பிட்ட அளவுமட்டுமே விளம்பரங்களை ஏற்றுக்கொண்டும் வெளிவரும் பத்திரிகைகளே விளம்பரங்களுக்குத் தகுதியானவை. உதாரணமாக, 40 பக்கங்களுக்கு நல்ல விஷயங்கள் கொண்ட ஒரு பத்திரிகையிலே 6 முதல் 8 பக்கங்கள் வரையில் விளம்பரங்கள் இருந்தால், அவைகளைப் படிப்பதற்கு வாசகர்களுக்கு ருசி உண்டாகும்.

இரண்டாவது: உங்கள் விளம்பரங்களை எழுதும் மாதிரியும் முக்கியமானது. நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களைக் கண்ணியமான முறையிலே, ‘இன்ன இடத்திலே இந்தப் பொருள் கிடைக்கும், இன்ன விதத்திலே இது உபயோகமானது’ முதலிய தகவல்களைத் தெரிவித்தால், வேண்டியவர்கள் தாமாகவே அவற்றை வாங்கிக்கொள்வார்கள். ஆகவே பெரிய வியாபாரிகளே, சிறு பத்திரிகைகளில் சரியான விஷய அமைப்புடன் நீங்கள் விளம்பரங்கள் செய்வதால் உங்கள் வியாபாரம் நிச்சயமாக வளரும்.

முல்லை - 13

'ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறைதான் கவிஞன் பிறக்கிறானாம்!' ஆனால், தமிழன்னையின் புத்திர பாக்கியத்துக்குக் குறைச்சலே இல்லை. எத்தனை எத்தனை கவிப் புதல்வர்கள்! அவள் காலடியில் அர்ச்சிக்கப்படும் மலர்கள் எத்தனை எத்தனை? ரோஜாவும் தாமரையும் மட்டுந்தானா?.....

என்றொரு சொல்லினைக் கேட்டேன்

புதுக் கவிதை

திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்
அஹஹகும் பிட்றேன் அல்லாருக்கும்

பாரதிதாசன் (குயிலில்)

மடநோக்கு!

கண்டான் மாதவன் இரண்டு கண்கள் !
ரயிலில் மெயிலில் ராத்திரி வண்டியில்
இஞ்சினின் முன்னால் இருட்டை விரட்டும்
தன்னுடைக் கண்களைத் தாக்குதல் போலத்
தகதகவென்று தன்னையே பார்த்தன !
கண்கள் கூசினான் !

-நாமக்கல் கவிஞர் (அவளும் அவனும்)

பாம்பு கடித்து மகனை இழந்த தாயின் புலம்பல்

அன்பாக அரவிட்ட சிறு முத்த மதனால்
ஆவிக்கும் இடையூறு உண்டாமோ ஐயா !

தேவி (ஆசிய ஜோதி)

ஐயப்பாடு

காட்டுக் குரங்கே இறந்த தாலோ - அங்கு
கவிஞன் என்பானும் பிறந்து விட்டான்?

கவி கம்பதாசன்

ஆவேசம் !


கொடுத்து வரும் அதிர்ச்சியிலே உலகே வந்து
குறுக்கிடினும் தூள் ! தூள் ! தூள் !!! ரத்தத்தூள் தான்!

சுரதா (சுப்புரத்தின தாசன்)


எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் இடமுண்டோ?
'டிக்கட் இல்லை
புக்டு அல்ரெடி!'

'இளவல்' (கிராம ஊழியன்)


முல்லை - 11



(இடமிருந்து வலம்) பாரதிதாசன், முல்லை முத்தையா,
அ. திருநாவுக்கரசு ('முல்லை'யைத் தொடங்கப் பொருளுதவி செய்தவர்), மன்னர் மன்னன் (பாரதிதாசனின் மகன்)
1944இல் முல்லை பதிப்பகத்திற்கு வந்தபொழுது எடுக்கப்பட்ட படம்.



‘முல்லை’ முதல் இதழின் முகப்பு அட்டை



முல்லை முத்தையா

('முல்லை' வெளியான காலத்தில் எடுக்கப்பட்ட படம்)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

—பாரதிதாசன்

முல்லை

முதல் வெளியீடு

ஆதரவாளர்:

கவியரசர் பாரதிதாசன் அவர்கள்

★

— விலை அணா நான்கு —

★

59, பிராட்வே-சென்னை

'முல்லை' முதல் இதழின் முதல் பக்கம்



புதுமைப்பித்தன்



ரகுநாதன்

1940களில் தமிழ் இலக்கியச் சூழலில் அழுத்தமாகத் தடம் பதித்த முல்லை மாத இதழின் களஞ்சியம் இது. முல்லை முத்தையாவால் தொடங்கப்பட்ட இந்த இதழ் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை முன்னிறுத்தி, அவருடைய கவிதைகளையும் அவரைப் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டது. பின்பு ரகுநாதனை ஆசிரியராகக் கொண்டு, புது வீச்சோடு முல்லை மணம் பரப்பியது. புதுமைப்பித்தனின் எழுத்துகளை ஏறத்தாழ எல்லா இதழ்களிலும் வெளியிட்ட பெருமை முல்லைக்கு உண்டு. அண்ணா, திரு. வி. க., கு. அழகிரிசாமி, லா. ச.ரா., மு. வ., கா. அப்பாத்துரை முதலானோரும் முல்லையில் பங்காற்றியிருக்கின்றனர்.

பல அரிய செய்திகளைத் தொகுத்து, இலக்கிய வரலாற்று நோக்கில் ஆ. இரா. வேங்கடாசலபதி ஓர் ஆய்வு முன்னுரை வழங்கியிருக்கிறார்.

முல்லை
பதிப்பகம்